
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
பூர்ண சந்திரோதயம்
4
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பூர்ண சந்த்ரோதயம்

நான்காம் பாகம்

வடுவூர்

கே. துரைசாமி அய்யங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்

244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,

மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2004

© பதிப்பாளர்

**விலை: ரூ. 130.00**

**மொத்த பக்கங்கள் 2+330=332**

Laser Typeset by: Keerthana Laser, Madurai

Printed at: Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

# பூர்ணசந்திரோதயம்

*3ம் பாகம் தொடர்ச்சி....*

லீலாவதி, "என்னிடம் நீர் என்ன விதமான உதவியை எதிர்பார்க்கிறீர்? அதை முதலிலேயே சொல்லிவிடுகிறதுதானே! மனசில் ஏதோ ஒரு கருத்தை வைத்துக்கொண்டு வளைத்து வளைத்து இவ்வளவு நேரம் ஏன்பேசவேண்டும்?" என்று கடுகடுப்பாக மொழிந்தாள்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன், "ஏனம்மா! என்னைக் கண்ட முதல் இப்படிக் கோபமாகப் பேசுகிறீர்கள்? நான் என்ன புலியா கரடியா? உங்களை எடுத்து விழுங்கிவிட வந்திருக்கிறேன் என்று நினைத்து இப்படி ஆத்திரப்படு கிறீர்களா? அப்படி நீங்கள் பயப்படத் தேவையில்லை. நான் உங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யக் கூடியவனல்ல. பிறர் உங்களுக்கு எப்படிப் பட்ட கெடுதல் நினைப்பதாக இருந்தாலும், நான் என்னுடைய உயிரைக் கொடுத்தாகிலும், அப்படிப்பட்ட தீங்கு உங்களுக்கு நேராமல் காப்பாற்றக் கூடியவன் என்பதை நீங்கள் உறுதியாக எண்ணிக்கொள்ளலாம். உங்களுடைய புருஷருக்கும் எனக்கும் நெடு நாளைய சிநேகமல்லவா! அவருக்கு நான் செய்துள்ள உபகாரங்கள் கணக்கில் அடங்குமா! அவராயிருந்தால், நான் வந்ததற்கு அவர் எனக்கு எத்தனையோ உபசாரம் செய்து என்னை மரியாதைப்படுத்தி இருப்பார். அவர் என்னிடம் வைத்திருந்த மதிப்பு எவ்வளவு என்பது உங்களுக்கு நேரில் தெரிந்திருந்தும், முன்பின் அறியாதவர்கள்போல நீங்கள் என்னிடம் கிடுகிடுவென்று பேசுகிறீர்கள். நீங்கள் அப்படிப் பேசினாலும், எனக்கு உங்கள்மேல் கொஞ்சமும் வருத்தம் உண்டாகவில்லை. போனதுபோகட்டும்; எனக்கு நேரமாகிறது; நான் வந்த கருத்தை வெளியிட்டு விடுகிறேன். அது உங்களுடைய மனசுக்குப்

பிடித்தாலும் சரி; பிடிக்காவிட்டாலும் சரி; அந்தக் காரியத்தை நீங்கள் எனக்குச் செய்து கொடுத்தே தீரவேண்டும். அந்த உதவி உங்களால் ஆகக்கூடியதே ஆகையால், நீங்கள் அதை அவசியம் முடித்துக் கொடுத்தே தீரவேண்டும். உங்கள் புருஷரைக் காப்பாற்றுவதற்காக அன்றையதினம் நாம் எல்லோரும் கூடி இளவரசரைப் பிடித்துக்கொண்டு வந்து கடிதம் எழுதி வாங்கிக் கொண்டவிஷயம் உங்களுக்கு நினைவிருக்கலாம். அன்றைய தினம் முக்கியமாக நானும் என்னுடைய ஆட்களும் சேர்ந்து அவரைப் பிடித்துக் கொண்டு வராவிட்டால், நீங்கள் பார்சீ ஜாதிப் பெண்போல வேஷம் போட்டு அவரிடம் கடிதம் வாங்க முடிந்திருக்காது. உங்களுடைய புருஷர் நிஜமாகவே கொலைக் குற்றம் செய்தார் என்பது இந்த நாடெங்கும் நிச்சயமாகத் தெரிந்த விஷயம். வேறே யாராவது இப்படிப்பட்ட பெரிய குற்றம் செய்திருந்தால், அவருக்கு மரணதண்டனை கிடைப்பது நிச்சயம். இவருக்கும் மரண தண்டனை அவசியம் கிடைக்கும் என்றுதான் ஜனங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நீங்கள் இளவரசரிடம் எழுதி வாங்கிக்கொண்டு வந்த கடிதத்தை உபயோகப்படுத்தி, அவருடைய உயிரைக் காப்பாற்றினீர்கள் என்பது என்னைத் தவிர வேறே யாருக்கும் தெரியாது. நீங்கள் உதவி செய்திராவிட்டால், ஏழு வருஷக் கடின காவலோடு அவர் தப்பித்துக் கொண்டிருக்க மாட்டார் என்பது நிச்சயம். இந்த விஷயத்தில் எனக்கு மாத்திரம் கொஞ்சம் விசனந்தான். இவ்வளவுதூரம் கடிதம் எழுதி வாங்கிய நீங்கள், அதைச் சரியானபடி உபயோகித்து, உங்களுடைய புருஷர் எவ்வித தண்டனையும் அடையாமல் முழுதும் தப்பித்துக் கொண்டு உடனே வீட்டுக்கு வரும்படி செய்திருக்கலாம். இந்த விஷயத்தில் இளவரசர் உங்களை ஏமாற்றி விட்டார் என்றே நான் எண்ணுகிறேன். நீங்கள் இளவரசரிடத்தில் கண்டித்துப் பேசி இந்தக் காரியத்தை அவர் பூர்த்தியாக நிறைவேற்றிக் கொடுக்கும்படி செய்திருக்க

வேண்டும். போனது போகட்டும்; நீங்கள் இப்போது என் பொருட்டு ஒரு காரியம் செய்தால், அதுவே போதுமானது. அந்தக் கடித சம்பந்தமாக சமீபகாலத்தில் நீங்கள் இளவரசரைப் பார்த்து அவரிடத்தில் அன்னியோன்னியமான பழக்கம் செய்து கொண்டிருப்பீர்கள் என்பது நிச்சயம். அவரும் உங்களிடம் அதிகமான பிரியம் வைக்கக்கூடிய சுபாவமுடைய மனிதரே ஆகையால், நீங்கள் எனக்காக ஒருதரம் போய் இளவரசரைப் பார்க்க வேண்டும். என் பேரில் போலீசார் பல குற்றங்களின் சம்பந்தமாக வாரண்டு பிறப்பித்திருக்கிறார்கள். நான் அவர்களுடைய கண்ணில் படாமல் ஒளிந்து திரிந்து கொண்டிருக்கிறேன். இனி போலீசார் தொடராதபடி என்மேல் யாதொரு குற்றமும் இல்லையென்று அவர்கள் தஸ்தாவேஜுகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இளவரசர் மனசு வைத்தால் இந்தக் காரியம் ஒரு பெரிதல்ல; வெகு சுலபத்தில் முடிந்து போம். நான் இதுவரையில் செய்த குற்றங்கள் எல்லாம் ஒரு க்ஷணத்தில் நிவர்த்தியாகிவிடும். பிறகு, நான் போலீசாருக்குப் பயப்படாமல் சுயேச்சையாக வெளியில் வரலாம். நீங்கள் உங்கள் புருஷருக்குச் செய்ததுபோல, எனக்கும் இந்த உதவியைச் செய்து வைக்கவேண்டும். இது உங்களுக்கு ஒரு பிரயாசையான காரியமல்ல. உங்களுடைய வாய் வார்த்தையில் எல்லாம் அடங்கி இருக்கிறது. நீங்கள் சொன்னால், இளவரசர் அதைமீறி நடக்கக்கூடியவரல்ல. அவருக்கும் இது ஒரு பொருட்டல்ல ஆகையால், இந்த உதவியை நீங்கள் எனக்குச் செய்தே தீரவேண்டும்'' என்று நயந்து வற்புறுத்திக் கூறினான்.

அதைக்கேட்ட லீலாவதி முற்றிலும் திகைப்பும் கலக்கமும் அடைந்து, தான் அவனுக்கு என்னவிதமான மறுமொழி சொல்வது என்பதை அறியாதவளாய்ச் சிறிதுநேரம் சஞ்சலம் அடைந்திருந்தபின் அவனை நோக்கி, ''ஐயா! நீர் பிரஸ்தாபிப்பது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. நானாவது உம்மைப்பற்றி இளவரசரிடம் சிபாரிசு செய்கிறதாவது. அது ஒருநாளும்

முடியாத காரியம். என்னுடைய புருஷர் செய்த உபத்திரவத்துக்குக் கட்டுப்பட்டு நான் பார்சீஜாதிப் பெண்ணாக வேஷம்போட்டு அந்தக் கடிதத்தை எழுதி வாங்கினேனே ஒழிய நான் என் மனப்பூர்வமாக இணங்கி அந்தக் காரியத்தில் இறங்கவில்லை. அன்னிய புருஷரான இளவரசரிடத்தில் பெண்பிள்ளையான நான் போய் எந்த உதவியையும் கேட்பது அடுக்குமா? நான் அந்தக் கடிதத்தை வாங்கினேனே ஒழிய, நான் மறுபடி அவரிடம் நேரில் போகவும் இல்லை; அந்தக் கடிதத்தை உபயோகப்படுத்தவும் இல்லை. நான் என் பெரிய தகப்பனாரை இளவரசரிடம் அனுப்பி என் புருஷருக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அவர் எவ்வித உதவியும் செய்யத் தம்மால் இயலாது என்று கண்டிப்பாகச் சொல்லி மறுத்து விட்டார். அதன்பிறகு நாங்கள் வக்கீல் வைத்து வாதாடி அவருக்குச் சொற்பமான தண்டனை ஏற்படும்படி செய்தோம். அவ்வளவுதான் வரலாறு. எனக்கும் இளவரசருக்கும் அதன் பிறகு பழக்கம் ஏற்படவே இல்லை. இனி அவருடைய முகத்தில் விழிக்க எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை ஆகையால், நீர் கோரும் விஷயத்தில் என்னால் எவ்வித உதவியும் செய்ய முடியாது ஆகையால், நீர் போகலாம்'' என்றாள்.

கட்டாரித்தேவன் அவள் சொன்ன வரலாற்றைச் சிறிதும் நம்பாதவன்போலக் குறும்பாகப் பேசத் தொடங்கி, ''என்ன அம்மா! இப்படிப் பேசுகிறீர்கள்? இளவரசர் வசமாக எழுதிக் கொடுத்திருந்த அந்தக் கடிதத்தை நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லையென்றால் யார்தான் நம்புவார்கள்? இது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்னும் கதைபோல் இருக்கிறது. அப்படியே நீங்கள் அந்தக் கடிதத்தை உபயோகப்படுத்திக் கொள்ள வில்லையென்றே வைத்துக்கொள்வோம். அப்படி இருந்தாலும், உங்கள் பெரிய தகப்பனாருக்கும் இளவரசருக்கும் அந்தரங்கமான சிநேகமுண்டு என்பது எனக்குத் தெரியாதா? இவர் சொன்னால் அவர் அதைமீறி நடப்பாரா? ஒரு நாளும்

நடக்கமாட்டார் ஆகையால், நீங்கள் சொல்வதை நான் ஒருநாளும் நம்பமுடியாது. எனக்கு எவ்வித உதவியும் செய்ய உங்களுக்கு இஷ்டமில்லை என்றே நான் எண்ணிக் கொள்ள வேண்டும். எப்படியாவது எனக்கு நீங்கள் இந்த உதவியைச் செய்து வைக்காவிட்டால் நான் உங்களை இலேசில் விடப் போகிறவனல்ல. நீங்களே நேரில் இளவரசரிடம் போய் இதை முடித்தாலும் சரி அல்லது, உங்களுடைய பெரிய தகப்பனாரைக் கொண்டு இதை முடித்தாலும் சரி, இரண்டு வகையில் எப்படியாவது காரியத்தை முடித்துக்கொடுக்கவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. நீங்கள்அப்படிச்செய்யத் தவறினால் அதன்பிறகு நான் என்ன செய்வேன் என்பதை இப்போது வெளியிட எனக்கு இஷ்டமில்லை'' என்றான்.

அவனது பயமுறுத்தலான சொற்களைக் கேட்ட லீலாவதி, ''ஐயா! நீர் கோரும் காரியம் என்னால் ஆகக்கூடியதல்ல. என் உயிர் போவதானாலும் நான் இனி இளவரசருடைய முகத்தில் விழிக்க மாட்டேன். உம்மைப்பற்றி நான் என் பெரிய தகப்பனாரிடம் சொன்னால் அவர் உமக்கு ஒருநாளும் உதவிசெய்ய எண்ணமாட்டார் ஆகையால், நீர் என்னைவிட்டு இந்த விஷயத்தை வேறே யார்மூலமாவது முடித்துக்கொள்ளும். நீர் வீணாக பயமுறுத்திப் பேசுவதில் உபயோகமில்லை. நான் இப்போது என் பெரிய தகப்பனாருடைய சவரக்ஷணையில் இருக்கிறேன் என்பது உமக்குத் தெரியும் ஆகையால், நீர் பயமுறுத்தி ஒன்றையும் செய்ய முடியாது என்பது நினைவில் இருக்கட்டும்'' என்று முறுக்காகப் பேசினாள்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன் புரளியாகப் பேசத் தொடங்கி, ''ஓகோ! இப்படிப் பேசினால் நான் உங்களைச் சும்மா விட்டுவிடுவேன் என்ற எண்ணமோ! அது ஒரு நாளும் பலியாதம்மா! வெந்நீர் அண்டாவுக்குள் நீங்கள் வைத்துக் கொன்ற மனிதர் யார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்; அவருடைய பிள்ளை தம்முடைய தகப்பனாரைக் காணோம்

என்று தேடியலைந்து துக்க சாகரத்தில் ஆழ்ந்துகிடக்கிறார். நீங்கள்தான் அவரைக் கொன்று பங்களாவின் பின்புறத்தில் புதைத்திருக்கிறீர்கள் என்று நான் அவருக்கு ஒரு மொட்டைக் கடிதம் எழுதிப்போட்டு அந்த விஷயத்தில் நானும் சாட்சி சொல்வேனானால், உங்களுடைய மானமும் போய்விடும்; பிராணனும் போய்விடும். அதுவும் அல்லாமல், நீங்கள் பார்சீஜாதிப் பெண்போல வேஷம்போட்டு இளவரசரை ஏமாற்றிய விஷயத்தையும் ஊரெல்லோரும் அறியும்படி பகிரங்கப்படுத்தி விடுவேன். இதெல்லாம் உங்களுக்குச் சம்மதமானால், நீங்கள் எனக்கு எவ்வித உதவியும் செய்ய வேண்டியதில்லை. நான் உடனே செலவு பெற்றுக்கொண்டு வெளியில்போய் விடுகிறேன்'' என்றான்.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட லீலாவதியினது உடம்பு அச்சத்தினால் கிடுகிடென்று ஆடியது. மூளை குழம்பியது; அறிவு தளர்ந்தது. தான்அந்த முரட்டு மனிதனைப் பகைத்துக் கொண்டால், அவன் சொன்னபடியே செய்யத் தகுந்தவன் என்பதும் தெரிந்தது. அவன் பொருட்டு தான் இளவரசரைப் பார்ப்பதும் தனது பெரிய தந்தையிடம் சிபாரிசு செய்வதும் அவளுக்குச் சம்மதப்படவில்லை ஆகையால், அவள் அவனை எப்படி சமாதானப்படுத்தலாம் என்று சிந்தனை செய்து கொண்டிருக்க அப்போது ஒரு வேலைக்காரி கதவண்டை வந்துநின்று, ''அம்மா! வாசலில் யாரோ ஓர் உத்தியோகஸ்தர் வந்திருக்கிறார். அவர் போலீஸ் இன்ஸ்பெக்டராம்! உங்களிடம் அவசரமாகப் பேசவேண்டுமாம்; வெளியில் காத்திருக்கிறார்'' என்றாள்.

சிறிதும் எதிர்பாராத அந்த விபரீதச் செய்தியைக்கேட்ட லீலாவதி, கட்டாரித்தேவன் ஆகிய இருவரும் திடுக்கிட்டு நடுநடுங்கினர். தன்னிடம் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு என்ன அலுவல் இருக்கப் போகிறது என்ற ஐயமும் அச்சமும் தோன்றி லீலாவதியின் மனதைக் கலக்கின. அவர் ஒருவேளை கட்டாரித்

தேவன் தங்களது மாளிகைக்குள் வந்ததைக் கவனித்திருந்து, அவனைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து வந்திருப்பாரோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. அப்படியிருந்தாலும், இல்லா விட்டாலும் தன்னை மிரட்டிய அந்த முரட்டுத் திருடனைப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் காட்டிக்கொடுத்து விடலாமா என்ற எண்ணமும் தோன்றியது. ஆனாலும், தான் அப்படிச் செய்வதனால் தனக்குக் கெடுதல் உண்டாகும் என்ற யோசனையும் தோன்றியது. எப்படியென்றால், தான் அவனைக் காட்டிக் கொடுத்தால் அவன் உடனே தங்களது ரகசியங்களை எல்லாம் வெளியிட்டு விடுவான் என்றும், அதனால் தனக்குப் பெருத்த தீங்கும் அவமானமும் நேரும் என்றும் அவள் எண்ணினவளாய் அங்கே வந்த வேலைக் காரியைப் பார்த்து, ''அடி! நீ போய் இன்ஸ்பெக்டரை உள்ளே அழைத்துக் கொண்டுவந்து கூடத்தில் போடப்பட்டிக்கும் நாற்காலியின்மேல் உட்கார வை. நான் இதோ வந்து அவரைப் பார்க்கிறேன்'' என்று கூறி வேலைக்காரியை அனுப்பிவிட்டு தனக்கு எதிரில் நடு நடுங்கி நின்ற கட்டாரித்தேவனைப் பார்த்து, ''ஐயா! எங்களுடைய ரகசியங்களை எல்லாம் வெளியிட்டு எனக்குத் தீங்கு செய்வதாகச் சொன்னீரே. அப்படிச் செய்ய நினைக்கும் உம்மை இப்போது நான் இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஒப்புவித்து விடுவது நியாயமல்லவா. அப்படியிருந்தாலும், நீர் எங்களுக்குப் பலவகையில் உதவி செய்தவர் என்பதைக் கருதி நான் அப்படிச் செய்ய நினைக்கவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் நீர் இங்கே வந்ததைக் கவனித்து உம்மைப் பிடித்துக் கொள்ளும் பொருட்டு தொடர்ந்து வந்திருப்பார் என்று நினைக்கிறேன். அவரோடு இன்னும் பல ஜெவான்களும் வந்திருக்கலாம். நான் உடனே போய் அவரைப் பார்க்கிறேன். அவர் உம்மைப் பிடித்துக்கொண்டு போக வந்திருப்பதாகச் சொன்னால், நீர் வரவே இல்லையென்று நான் உறுதியாகச் சொல்லி அவரை அனுப்பிவிடுகிறேன். நான் சொல்வதை அவர் ஒப்புக்

கொள்ளாமல் வீடு முழுவதையும் சோதித்துப் பார்த்தாலும் பார்ப்பார் ஆகையால், நீர் இப்படியே பின்பக்கமாகப் போவீரானால் தோட்டம் இருக்கிறது. அதற்குள் புகுந்து மதிலின் மேலேறி அப்பால் குதித்து ஓடிப்போய் விடும்; கொஞ்சமும் இவ்விடத்தில் தாமதிக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுக் கூடத்தை நோக்கி நடந்துவந்தாள். போலீஸ் அதிகாரிகளைக் கண்டால், எவ்விதக் குற்றமும் செய்யாதவருக்குக்கூட ஒருவித அச்சமும் கலக்கமும் உண்டாவது இயற்கையென்றால், பலவிதத் தவறுகள் செய்தவளான லீலாவதியினது மனம் எப்பாடு பட்டிருக்கும் என்பதைச் சொல்வது மிகையாகும். ஆனாலும், அவள் தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்த கூடத்தை அடைந்து நாணத்தோடு ஒரு பக்கமாக ஒதுங்கிநின்று, ''ஐயா! நீங்கள் என்னிடத்தில் பேச விரும்புகி றீர்களா? அல்லது, என் பெரிய தகப்பனாரிடத்தில் பேச விரும்புகிறீர்களா? நீங்கள் மாரியம்மன் கோவிலுக்கு வந்து என் வீட்டுக்காரரைப் பிடித்துக்கொண்டு போய் அநியாயமான தண்டனைக்கு ஆளாக்கினீர்கள். இப்போது மறுபடியும் என்ன கருத்தோடு இங்கே வந்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை'' என்றாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் நிரம்பவும் மரியாதையாகவும் விநயமாகவும் பேசத்தொடங்கி, ''அம்மா! நான் உங்கள் பெரிய தகப்பனாரிடத்தில் பேச வரவில்லை. உங்களிடத்தில் ஒரு சிறிய விஷயத்தைப் பற்றிப் பேசிவிட்டுப் போகவே வந்தேன். ஆனால், இப்போது நான் வந்தது உங்களுக்காவது வேறே எவருக்காவது எவ்விதக் கெடுதலையும் உத்தேசித்து வந்ததல்ல. உங்கள் புருஷருக்குத் தண்டனை ஏற்பட்டதைப் பற்றி உங்களுக்குப் போலீசார் மேல் அளவற்ற கோபமும் அருவருப்பும் உண்டாவது இயற்கைதான். ஆனால், அந்த விஷயத்தில் உண்மை இன்னது என்பதைக் கவனித்துப்

பார்ப்பவர்கள் எங்கள்மேல் குறை கூறவே மாட்டார்கள். அவர் செய்தது பெரிய கொலைக்குற்றம். அதை யாரும் மறைக்க முடியாது. அதுவுமன்றி, அவர் மாரியம்மன் கோவிலில் ஒளிந்துகொண்டிருக்கிறார் என்று ஓர் அநாமதேயக் கடிதம் நியாயாதிபதிக்கு வந்து சேர்ந்தது. அவர் அதை எங்களுக்கு அனுப்பி உங்கள் புருஷரைப் பிடித்துக்கொண்டு வரக் கட்டளையிட்டார். அதைச் செய்ய நாங்கள் எப்படி மறுக்கிறது? எங்களுடைய கடமையை நாங்கள் செய்யாவிட்டால் எங்களுடைய உத்தியோகம் போய்விடும். நாங்கள் என்ன செய்கிறது! அந்த விஷயத்தில் நீங்கள் எங்கள்மேல் குறை கூறுவதற்குக் கொஞ்சமும் ஏதுவில்லை. ஆனாலும், உங்கள் புருஷருக்குத் தண்டனை ஏற்பட்டதைப் பற்றி நீங்கள் நிரம்பவும் விசனமடைந்து கலங்கி இருக்கும் இந்தச் சமயத்தில், நான் உங்களிடம் பேச வருவது என்மேல் பிசகுதான். ஆகையால், நான் உங்களிடம் அதிகமாகப் பேசப்போகிறதில்லை. அரைக்கால் நாழிகை சாவகாசத்துக்குள் சங்கதியைச் சொல்லி விடுகிறேன். மன்னிக்கவேண்டும்'' என்று பீடிகை போட்டுப் பேசினார்.

அவர் நிரம்பவும் நயமாகவும் பணிவாகவும் பேசியதைக் கண்டு ஒருவாறு தெளிவடைந்த லீலாவதி, ''உங்கள் மேல் நாங்கள் வருத்தப்படுவதில் பயனென்ன? எங்கள் தலைவிதியை நோக வேண்டுமேயன்றி மற்றவரை நோவது முட்டாள்தனம். போனது போகட்டும். நீங்கள் இப்போது வந்த காரியத்தைச் சொல்லுங்கள்'' என்றாள்.

உடனே இன்ஸ்பெக்டர் நயமாகப் பேசத் தொடங்கி, ''வேறொன்றுமில்லை. சில மாசங்களுக்கு முன் நம்முடைய பவானியம்மாள்புரம் ஜெமீந்தார் ராமலிங்கம்பிள்ளை திடீரென்று காணாமல் போய்விட்டார் என்ற விஷயம் உங்களுக்கும் எட்டி இருக்கலாம் என்று நினைக்கிறேன். அவர் இன்ன இடத்துக்குப் போனார் என்பதாவது, அவர்

உயிரோடிருக்கிறாரா, அல்லது இறந்து போய்விட்டாரா என்பதாவது இதுவரையில் யாருக்கும் தெரியவில்லை. அந்த ஜெமீந்தாருக்கு ஒரு பிள்ளை இருக்கிறார். அவர் தம்முடைய தகப்பனார் திடீரென்று ஆச்சரியகரமாகவும் பூடகமாகவும் மறைந்துபோய் விட்டதைப் பற்றிக் கரைகடந்த விசனமடைந்து, தமது தகப்பனாரை இந்த உலகம் முழுதிலும் தேடிப்பார்த்து விட்டார். அவருடைய துயரம் இன்னமும் மாறாமலேயே இருந்து வருகிறது. ஒரு மாசத்துக்குமுன் அவர் என்னிடம் வந்து தம்முடைய தகப்பனார் திடீரென்று காணாமல் போன வகையையும், அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பதையும் கண்டுபிடிக்கும்படி நிரம்பவும் கேட்டுக் கொண்டார். அது முதல் நான் இதே வேலையாக இரவு பகல் அலைந்து திரிந்து எத்தனையோ பாடுபட்டுப் பார்த்துவிட்டேன். என்னுடைய முயற்சிகள் பலிக்கவே இல்லை. காணாமல் போன ஜெமீந்தாரைப் பற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லை. ஆனால், இன்று காலையில் ஒரு புலம் அகப்பட்டது. அதை வைத்துக்கொண்டு உண்மையைக் கண்டுபிடிக்கலாம் என்ற ஓர் எண்ணம் உண்டாயிற்று'' என்றார்.

தன்னால் வெந்நீர் அண்டாவுக்குள் வைத்துக் கொல்லப் பட்ட ஜெமீந்தாரைப் பற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பேசுவார் என்று லீலாவதி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆதலால், அவள் திடுக்கிட்டு திகில் கொண்டு பிரமித்துத் தனது முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள். தான் உடனே அவருக்கு மறுமொழி சொல்லாதிருப்பதைப் பற்றி அவர் தன்மீது ஏதேனும் சந்தேகம் கொள்ளப் போகிறாரோ என்ற நினைவினால் அவள் இரண்டொரு தரம் நினைத்துக் கொண்டாள். இருந்தாலும், அவர் தன்னைக் கபடமாகப் பார்க்கவில்லை என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. ஆகையால், தான் துணிந்து பேசலாம் என்ற தீர்மானத்தோடு அவள் அவரைப் பார்த்து, ''ஆம் ஐயா! நீங்கள் குறித்துப் பேசும் விஷயத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகிறது? பவானியம்மாள்புரம்

ஜெமீந்தாரை எனக்குத் தெரியவே தெரியாது. அவர் சில மாச காலமாகக் காணாமல் போய்விட்டார் என்பதை நான் இப்போது தான் நீங்கள் சொன்னதிலிருந்து தெரிந்துகொண்டேன்'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் ''அந்த ஜெமீந்தார் காணாமல் போனதற்கும் உங்களுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இருக்குமென்று நான் எண்ணவில்லை. ஆனால் உங்கள் புருஷருக்கும் அதுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்ற ஒரு சந்தேகம் உண்டாயிற்று. வேறொன்றுமில்லை'' என்றார்.

அதைக்கேட்ட லீலாவதி நிரம்பவும் ஆத்திரமாகப் பேசத் தொடங்கி, ''ஆகா! இன்னும் நீங்கள் என் புருஷரை விட்டபாடு இல்லையா? அவரைக் குடும்பத்திலிருந்து பிரித்து ஏழுவருஷக் கடினக் காவல் தண்டனை செய்து வைத்ததோடு உங்கள் மனம் திருப்தி அடையவில்லையா? யாரோ ஒரு ஜெமீந்தார் காணாமல் போய்விட்டால் அதற்கும் என் புருஷருக்கும் என்ன சம்பந்தம்? அவரென்ன பேயா பிசாசா? மனிதரை எல்லாம் அப்படியே விழுங்கி விடுகிறவரா? நீங்கள் சொல்வது மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதுபோல இருக்கிறதே அன்றி வேறல்ல''என்று கடுகடுத்த முகத்தோடு மொழிந்தாள்.

இன்ஸ்பெக்டர் முன்னிலும் அதிக நயமாகப் பேசத் தொடங்கி, ''அம்மா! நான் சங்கதி முழுவதையும் சொல்லுமுன் நீங்கள் கோபித்துக் கொள்வது சரியல்ல. உங்கள் புருஷர் விஷயத்தில் நான் அப்படிப்பட்ட குற்றமொன்றும் சுமத்த வரவில்லை. நான் என்னுடைய கருத்தை முற்றிலும் வெளியிடுகிறேன். அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்பீர்களானால், நீங்கள் இப்படிக் கோபித்துக் கொள்ளவே மாட்டீர்கள். அதாவது, உங்களுடைய புருஷரைச் சிறைபடுத்திய அன்றையதினம் விடியற்காலையில் ஓர் அநாமதேயக் கடிதம் நியாயாதிபதிக்கு எழுதப்பட்டு, அது அவரால் என்னிடம்

அனுப்பட்டதென்ற செய்தியை நான் சற்றுமுன் சொன்னேன் அல்லவா? அந்தக் கடிதம் இதோ என் வசத்தில் இருக்கிறது. இதை வாங்கி படித்துப் பாருங்கள்'' என்று கூறியவண்ணம் தமது சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

லீலாவதி, நிரம்பவும் கலக்கமும் கிலியும் அடைந்தவளாய் மெல்ல நடந்து வந்து அந்தக் கடிதத்தை வாங்கினாள். அப்போது அவளது கை வெடவெடவென்று நடுங்கியது. முகம் மாறுபட்டது. அவள்அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிப்பவள் போலப் பாசாங்கு செய்தாள். அது தன்னால் எழுதப்பட்டு தோட்டக்காரன் மூலமாகத் தஞ்சைக்கு அனுப்பப்பட்ட மொட்டைக் கடிதம் என்பது சந்தேகமறத் தெரிந்தது. ஆனாலும், அவள் அப்போதே முதன் முதலாக அதைப் பார்த்துப் படிப்பவள்போல அளவற்ற வியப்பும் பிரமிப்பும் தோற்றுவித்தவளாய் அதை இரண்டு தரம் படித்தாள். உடனே இன்ஸ்பெக்டர், ''பார்த்தீர்களா கடிதத்தை? அதன் எழுத்தைப் பார்த்தால் யாரோ ஒரு பெண்பிள்ளையின் எழுத்தைப் போல இருக்கவில்லையா?'' என்று கூறியவண்ணம் கடிதத்தைத் தமது கையில் வாங்கிக் கொண்டார்.

லீலாவதி, ''ஆம்; அப்படித்தான் இருக்கிறது. இப்போதுதான் எனக்கு இன்னொரு விஷயம் தெரிகிறது. என் புருஷர் வேறே யாரோ ஒரு ஸ்திரீயினிடத்தில் சிநேகமாக இருந்திருக்கிறார் என்றும், அந்த ஸ்திரீயே ஏதோ முகாந்திரத்தினால் இப்படி எழுதி அவரைக் காட்டிக்கொடுத்திருக்க வேண்டும் என்றும் நான் நினைக்கிறேன். ஆனால், இந்த விஷயத்துக்கும் பவானியம்பாள் புரத்து ஜெமீந்தார் காணாமல் போன விஷயத்துக்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்கு இன்னமும் விளங்கவில்லையே'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''அதை நானே விளங்க வைக்கிறேன். இந்த பவானியம்பாள்புரம் ஜெமீந்தார் காணாமல்போன விஷயத்தில் தக்க விசாரணை செய்து, அவரைக் கண்டுபிடிக்கும்படி

அவருடைய குமாரரான நீலமேகம்பிள்ளை என்னைக் கேட்டுக் கொண்ட தினம் முதல், இரண்டு மூன்றுநாளைக் கொருதரம் அவர் என்னுடைய ஜாகைக்கு வந்து, ஏதாவது தகவல் கிடைத்ததா என்று விசாரித்து விட்டுப் போவது வழக்கம். அதுபோல, அவர் இன்றையதினம் காலையில் என் வீட்டுக்கு வந்திருந்தார். இதற்குமுன் அவர் வந்தால், நான் வெளித் திண்ணையில் அவரை உட்காரவைத்துக் கொண்டு பேசி அனுப்பிவிடுவது வழக்கம். இன்றையதினம் நான் வீட்டுக்கு உட்புறத்தில் என்னுடைய அறைக்குள் மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்து ஓர் அவசரமான கடிதம் எழுதிக்கொண்டிருந்த காலத்தில் அவர் வந்தார் ஆகையால், அவரை உள்ளேயே வரவழைத்து மேஜைக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு நாற்காலியில் உட்கார வைத்து அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். என் உத்தியோகத்துக்குச் சம்பந்தப்பட்ட ஏராளமானகடிதங்களும், வேறு பல தஸ்தாவேஜுகளும் எனக்கு எதிரிலிருந்த மேஜையின்மேல் சிதறிக்கிடந்தன. இந்த அநாமதேயக் கடிதமும் அந்த மேஜையின்மேல் பிரிந்து கிடந்தது. இந்தக் கடிதத்தின் எழுத்து அவருடைய திருஷ்டியில் தற்செயலாகப்பட்டது. உடனே அவர் திடுக்கிட்டுத் தம்மை மறந்து இந்தக் கடிதத்தைச் சடக்கென்று எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு இதன் எழுத்தை உற்று உற்றுப் பார்த்தார். 'ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?' என்றும், 'எங்கள் அதிகார தோரணையில் எங்களிடம் இருக்கும் ரகசியமான தஸ்தா வேஜுகளை அனுமதி இல்லாமல் இப்படி எடுத்துப் பார்க்கலாமா?' என்றும் நான் கேட்டேன். அவர் என்னிடம் நயந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டதன்றி, இந்தக் கடிதத்தை எழுதிய பெண்பிள்ளை யார் என்பதைக் கண்டுபிடித்தால், அவள் மூலமாகத் தமது தகப்பனாரைப் பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னார். எப்படி என்றால், அவர் சில தினங்களுக்கு முன் அவருடைய தகப்பனாரின் கைப்பெட்டியை உடைத்துப் பார்த்தாராம். அதற்குள் சில கடிதங்கள் இருந்து

அவரிடம் அகப்பட்டனவாம். அவைகளெல்லாம் ஒரு பெண் பிள்ளையின் கையால் எழுதப்பட்டவைபோல அழகாயும் குண்டுகுண்டான எழுத்துக்களுடையனவாயும் இருக்கின்றன வாம். ஆனால், அந்தக் கடிதங்களில், எழுதியவருடைய பெயராவது, இருப்பிடமாவது, தேதியாவது காணப்பட வில்லையாம். அவைகளை யார் எவ்விடத்திலிருந்து எப்போது எழுதினாள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். அந்தக் கடிதத்தில் அடங்கிய விஷயமெல்லாம் காதல் சம்பந்தமாக இருக்கிறதாம். அவருடைய தகப்பனாரான ஜெமீந்தாருக்கும், அந்தக் கடிதங்களை எழுதிய பெண்ணுக்கும் திருட்டுத்தனமான நட்பும், சந்திப்பும் இருந்தனவென்பது நன்றாக வெளியாகிறதாம். அந்தப் பெண்ணுக்குச் சொந்தப் புருஷன் ஒருவன் இருக்கிறான் என்பதும், அவனுக்குத் தெரியாதபடி ரகசியத்தில் அந்தப் பெண்ணும் ஜெமீந்தாரும் ஒருவரையொருவர் சந்தித்து வந்தார்கள் என்பதும் தெரிகிறதாம். கடைசியாக அந்த ஜெமீந்தார் அந்தப்பெண்ணை ரகசியமாகப் பார்க்கப்போன இடத்தில் ஒருவேளை அவளுடைய புருஷன் அவர்களுடைய திருட்டு நட்பைக் கண்டுபிடித்து, அந்தக் கோபத்தினால் ஜெமீந்தாருடைய உயிருக்கு ஹானி தேடியிருப்பானோ என்ற சந்தேகம் ஜெமீந்தாருடைய பிள்ளையின் மனசில் உண்டாகிக் கொண்டிருந்ததாம். அதை என்னிடம் தெரிவிக்கவே அவர் முக்கியமாக இன்று காலையில் என்னிடம் வந்தாராம். வந்த இடத்தில், இந்தக் கடிதத்தின் எழுத்து அவருடைய திருஷ்டியில் பட்டதாம். அந்தக் கடிதங்களின் எழுத்தும், இந்தக் கடிதத்தின் எழுத்தும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவாம். அந்தக் கடிதங்களை எழுதிய பெண்ணே இந்தக் கடிதத்தையும் எழுதியிருக்கிறாள் என்று நிச்சயமாகச் சொல்லலாம் ஆகையால், நானும் அவரும் இதைப்பற்றி யோசனை செய்ததில் முக்கியமான ஒரு சம்சயம் தோன்றியது. என்னவென்றால், அந்த ஜெமீந்தாரிடத்தில் கள்ள நட்புக் கொண்டிருந்த பெண் உங்கள் புருஷருக்கும்

தெரிந்தவளாகவோ, அல்லது, உங்கள் புருஷரிடத்திலும் கள்ள நட்புடையவளாகவோ இருந்திருக்க வேண்டும் என்றும், அவள் உங்கள் புருஷரின் மேல் ஏதோ காரணத்தினால் பகைமையும் ஆத்திரமும் கொண்டு, பழிதீர்த்துக் கொள்வதற்காக இந்தக் கடிதத்தை எழுதி நியாயாதிபதிக்கு அனுப்பி, உங்கள் புருஷரைக் காட்டிக் கொடுத்திருக்கிறாள் என்றும், அந்த மனுஷி இன்னாள் என்பது ஒரு வேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்றும் நாங்கள் ஒருவித முடிவு செய்து கொண்டோம். ஆகையால், இதைப்பற்றி உங்களிடம் நேரில் வந்து விசாரித்து விட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தேன். அந்த ஜெமீந்தாருடைய பிள்ளை உங்கள் பேரில் சந்தேகப்பட்டார். ஆனால், என் மனசில் அப்படிப்பட்ட சந்தேகம் உண்டாகவில்லை. உங்கள் புருஷருடைய கொலைக்குற்ற விசாரணை நடந்த காலத்தில், அவரைத் தப்ப வைப்பதற்காக நீங்களும் உங்கள் பெரிய தகப்பனாரும் எத்தனையோ பாடுகள் பட்டதையும் அடிக்கடி நீங்கள் சிறைச் சாலைக்கு வந்து அவரிடம் நடந்துகொண்ட மாதிரியையும், அவரை மாரியம்மன் கோவிலில் நாங்கள் சிறைப்படுத்திய காலத்தில் நீங்கள் நடந்துகொண்ட மாதிரியையும் நான் எண்ணிப் பார்த்ததில், அவரை நீங்களே காட்டிக் கொடுத்திருப்பீர்கள் என்று சந்தேகிக்க என் மனம் இடம் கொடுக்கவே இல்லை. அந்த ஜெமீந்தாருடைய புத்திரர் இந்தக் கடிதத்தைக் கண்ட முதல், இதை எழுதிய பெண் யார் என்பதை உடனே கண்டுபிடித்து அவள் மூலமாகத் தம்முடைய தகப்பனார் மறைந்துபோன வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்று நிரம்பவும் ஆவல் கொண்டு துடித்துக் கொண்டிருக்கிறார். அவரும் இதோ வெளியில் வந்து வண்டியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார் ஆகையால், இந்த விஷயத்தில் உங்களுக்குத் தெரிந்த தகவல் ஏதாவது இருந்தால், தயை செய்து அதை எங்களுக்குத் தெரிவிப்பீர்களானால் அது எங்களுக்கு நிரம்பவும் அனுகூலமாகவும், நிகரற்ற பேருதவியாகவும்

இருக்கும். இந்த உதவியை நாங்கள் ஒருநாளும் மறக்க மாட்டோம்'' என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட லீலாவதி பெருத்த திகிலும் கலவரமும் அடைந்தவளானாள். பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரைத் தான் கொன்றுவிட்டதாகத் தன்மீது குற்றம் ஏற்பட்டு விடுமோ என்ற பெருத்த கிலி அவளது மனதில் உண்டாகிவிட்டது. அதுவுமன்றி, தனது புருஷனைப் பற்றி நியாயாதிபதிக்கு அநாமதேயக் கடிதம் எழுதி அவரைக் காட்டிக் கொடுத்து தண்டனைக்கு ஆளாக்கியதும் வெளிப்பட்டுப் போகுமோ என்ற எண்ணமும் தோன்றியது. அந்தக் கடிதங்களின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்னைச் சிறைப்படுத்தித் தன்மீது கொலைக்குற்றம் சுமத்தினால், தான் அதிலிருந்து தப்பி வெளிவருவது நிரம்பவும் கடினமாகவும் இருக்கும் என்ற நினைவும் உண்டாயிற்று. இன்ஸ்பெக்டர் ஒருவேளை தன்னைப் பிடித்துக்கொண்டு போகும் கருத்தோடு வந்து முதலில் தனது வாக்குமூலத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று அவ்வாறு பாசாங்கு செய்கிறாரோ என்ற யோசனையும் தோன்றியது. அவர் தன்னைக் கைதியாக்கிய பின் கட்டாரித்தேவன் போலீஸ் தொந்தரவி லிருந்து தான் தப்பித்துக்கொள்ள அதுதான் சரியான சந்தர்ப்பம் என்று நினைத்து, தன்னை அவர்கள் இனி தொடராமல் விட்டு விடுவதாக எழுதிக்கொடுத்தால், தான் பவானியம்பாள்புரம் ஜெமீந்தாருடைய கொலையை வெளிப்படுத்துவதாக ஒப்புக் கொண்டு, அவருடைய பிணத்தை வெந்நீர் அண்டாவிலிருந்து எடுத்ததையும், தோட்டத்தில் புதைத்ததையும், மற்ற விவரங்களையும் வெளியிட்டு விடுவானாகில், தான் தப்பமுடியாது என்ற நிச்சயமும் ஏற்பட்டது. ஆகையால், தான் மறுபடியும் கட்டாரித்தேவனைக் கண்டு அவனுடன் பேசி, அவன் கேட்டுக்கொண்டபடி அவனுக்கு உதவி செய்வதாக வாக்களித்து வைக்க நேரும்

என்றும் அவள் நினைத்தாள். ஆனால், தான் தனது கையெழுத்தை வேறாக மாற்றியே, எல்லாக் கடிதங்களையும் எழுதியிருப்பதால், தான் ஒருவாறு வாதாடலாம் என்ற துணிவும் உண்டாயிற்று. அப்படியிருந்தாலும், தான் எப்படி யாவது தந்திரம்செய்து இன்ஸ்பெக்டரிடத்திலிருந்த தனது அநாமதேயக் கடிதத்தை வாங்கிக் கிழித்தெறிந்து விட வேண்டுமென்ற யோசனையும் தோன்றியது ஆகையால், அவள் தனது சங்கடங்களையும் குழப்பத்தையும் ஒருவாறு அடக்கிக் கொண்டவளாய் அவரை நோக்கி நிரம்பவும் துக்ககரமாகவும் அனுதாபத்தோடும் பேசத்தொடங்கி, ''ஐயா! நீங்கள் சொல்லும் வரலாறு நிரம்பவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. என்னுடைய புருஷர் மாரியம்மன் கோவிலில் இருக்கிறார் என்பதை எப்படியோ நீங்களே தெரிந்து கொண்டுவந்து அவரைப் பிடித்துக் கொண்டு போனீர்கள் என்று நான் இதுவரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் சற்றுமுன் ஒரு தடவையும், இப்போது ஒரு தடவையும் சொன்னதைக் கேட்டபிறகுதான், ஏதோ ஓர் அநாமதேயக் கடிதம் எழுதப்பட்டு அதன் பலனாக என் புருஷர் பிடிபட்டார் என்ற விவரம் எனக்குத் தெரிகிறது. என் புருஷர் வேறுபல ஸ்திரீகளி னிடத்தில் அந்தரங்கமான சிநேகம் வைத்துக்கொண்டி ருக்கிறாரென்று நான் சந்தேகப்படும்படி அவர் பல தடவைகளில் நடந்து கொண்டிருக்கிறார். ஆனால், அவர் என்னிடம் நேரில் சொன்ன உறுதியை நான் இதுவரையில் நம்பி அவர் சுத்தமான மனிதர் என்று நினைத்திருந்தேன். இப்போது நீங்கள் சொன்னதைக் கேட்டபிறகு நான் அவர் மேல் கொண்ட சந்தேகம் உண்மையானது என்றே நினைக்க வேண்டி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நீங்கள் அந்த அநாமதேயக் கடிதத்தை இரண்டொரு நாளைக்கு என்னிடம் கொடுத்து வையுங்கள். நான் அதைப் பார்த்து அது யாரால் எழுதப்பட்டது என்பதைக் கண்டுபிடித்து முடிவை அதி சீக்கிரத்தில் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்'' என்றாள்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர், ''இது நிரம்பவும் முக்கியமான கடிதம். ஆதலால், இதை நான் வேறே யாரிடத்திலும் கொடுக்கக் கூடாதானாலும், உங்களிடம் கொடுக்க அவநம்பிக்கை கொள்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. இதோ நான் காட்டுகிறேன். நீங்கள் இதன் எழுத்தை மறுபடியும் பார்த்துக்கொள்ளலாம். உங்களுக்கு உண்மை தெரியக்கூடுமானால், இதைப் பார்த்தவுடனே நீங்கள் இதை இன்னார் எழுதியது என்று சொல்லி விடுவீர்கள். அப்படி இல்லாவிட்டாலும், இப்போது பார்த்தால் இது ஞாபகத்தில் நின்று விடும். பிறகு இதைப் போன்ற எழுத்து உங்களுடைய கண்ணில் படுமானால், இந்த ஞாபகம் உடனே உண்டாகி விடும் ஆகையால், நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறியவண்ணம் தமது கையிலிருந்த கடிதத்தை எடுத்துக்காட்ட லீலாவதி மெதுவாக அவருக்கு அருகில் சென்று, கடிதத்தின் எழுத்தை வியப்போடும் ஆவலோடும் கவனிப்பவள் போல உற்று நோக்கி, ''இந்த எழுத்து அடிக்கடி நான் பார்த்த எழுத்தாக அல்லவா இருக்கிறது! ஆம், ஆம். இந்த எழுத்துள்ள கடிதம் அடிக்கடி என் புருஷருக்கு வந்ததுபோல ஒருவித ஞாபகம் உண்டாகிறது. இருந்தாலும், இன்னாருடைய எழுத்து என்பது தெரியவில்லை. உங்களுக்குப் பிரியமானால் நான் ஓர் உதவி செய்யத் தடை இல்லை. மாரியம்மன் கோவிலில் நாங்கள் இருந்த காலத்தில் எங்களிடம் சில வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் மூலமாகவே அவருக்குக் கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. இந்தக் கடிதத்தை அவர்களிடம் காட்டினால், அவர்கள் எழுத்தைப் பார்த்தவுடனே நிஜத்தைச் சொல்லி விடுவார்கள் ஆகையால், நான் இன்றைய தினமே அவர்களை வரவழைத்து உண்மையை அறிந்து வைக்கிறேன். இந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்து வையுங்கள்'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் நிரம்பவும் சந்தோஷம் அடைந்தவராய்க் காணப்பட்டு, ''சரி; உங்களுக்கு நாங்கள் அவ்வளவு சிரமம்

கொடுப்பது சரியல்ல. நாங்களே இப்போது மாரியம்மன் கோவிலுக்குப் போக உத்தேசித்திருக்கிறோம். உங்களிடத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் இன்னார் என்பதை நாங்கள் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகையால், நாங்களே அவர்களிடத்தில் இதைக் காட்டி உண்மையைத் தெரிந்து கொள்ளுகிறோம்; அவர்கள் மூலமாகவும் உண்மையை அறிந்து கொள்ள முடியாவிட்டால், அதன்பிறகு நாங்கள் நேராக இந்த ஊர்ப் பெரிய சிறைச் சாலைக்குப்போய் உங்களுடைய புருஷரையே பார்க்கப் போகிறோம்; பார்த்து அவரிடத்திலேயே இந்த அநாமதேயக் கடிதத்தைக் காட்டி இதை எழுதியது யாரென்று கேட்டால், அவர் உடனே உண்மையைச் சொல்லிவிடுவார். ஏனென்றால், இதை எழுதிய பெண்ணே அவரைக் காட்டிக்கொடுத்து அவர் தண்டனையடையும்படி செய்து வைத்தவள் என்ற சங்கதி அவருக்குத் தெரியுமானால், தாம் எப்படியும் அவளுக்குக் கெடுதல் செய்ய வேண்டும் என்ற நினைவினால், அவர் உண்மையை உடனே சொல்லிவிடுவார். இந்தப் பெண் யாரென்பதைக் கண்டுபிடிப்பது இனி சுலபமான காரியம் என்றே நினைக்கிறேன். நான் உங்களுக்கு அதிகத் தொந்தரவு கொடுத்துவிட்டேன். உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். இனி நீங்கள் போய் உங்களுடைய அலுவலைக் கவனிக்கலாம்'' என்று கூறியவண்ணம் தமது கையிலிருந்த அநாமதேயக் கடிதத்தை மடித்து சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு எழுந்து அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார்.

அவரிடத்திலிருந்து தான் அந்த விபரீதமான கடிதத்தைப் பெற முடியாமல் போய்விட்டதே என்ற கவலையும் ஏக்கமும் திகிலும்கொண்ட லீலாவதி சகிக்க இயலாத துக்கமும் கலக்கமும் அடைந்து தான் என்ன செய்வது என்பதை அறியாதவளாய் அப்படியே மரம்போல நின்றுவிட்டாள். இன்ஸ்பெக்டர் மாரியம்மன் கோவிலுக்குப் போய்த்

தோட்டக்காரனையும் அவனது மனைவியையும் பிடித்து மிரட்டி உண்மையை வெகு சுலபத்தில் கண்டுபிடித்து விடுவார் என்ற பெரும் பயம் உண்டாகிவிட்டது. அதுவுமன்றி, இன்ஸ்பெக்டர் அந்த அநாமதேயக் கடிதத்தைத் தனது புருஷருக்குக் காட்டுவாரானால், அவர் உடனே தான்தான் அந்தக் கடிதத்தை எழுதி அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தவள் என்பதை உடனே உணர்ந்து, அந்த ஆத்திரத்தில் பவானியம்பாள் புரம் ஜெமீந்தாரை தான் அண்டாவில் வைத்துக் கொன்ற விவரத்தை வெளியிட்டு விடுவாரோ என்ற பெருந்திகிலும் கலவரமும் தோன்றி அவளது மனதை உழக்கிக் குடலைக் கலக்கின. அந்த மகாவிபரீதமான அபாய வேளையில் தான் என்னவிதமான தந்திரம் செய்வது என்பதை அறியாமல் அவள் இரண்டொரு நிமிஷநேரம் பதைபதைத்து அவ்விடத்திலேயே நின்றாள். தேகம் பதறியது. மனம் சோர்ந்து தத்தளித்தது. தான் தனது புருஷனைச் சிறைச்சாலைக்கு அனுப்பியபிறகு எவ்விதத் துன்பமும் இன்றி சௌக்கியமாக இருக்கலாம் என்று நினைத்ததற்கு மாறாக பெருந்தீங்கு தனக்கு நேரப் போவதைப் பற்றி அவள் எண்ணாததெல்லாம் எண்ணிக் கலங்கினாள். தான் தனது கணவனைக் காட்டிக்கொடுத்த பாவமே தன்னைத் தொடர்ந்து அவ்வாறு பழிக்குப் பழி வாங்குகிறதோ என்ற எண்ணமும் தோன்றியது. கடிதங்களிலிருந்து தனது இரகசியமெல்லாம் வெளிப்பட்டுப் போகுமானால், அதனால் தான் தண்டனை அடையாவிட்டாலும், அதிலிருந்து ஏற்படும் மானக்கேடும், அபகீர்த்தியும் தலைகுனிவும் என்றென்றைக்கும் அழியாதனவாக இருக்கும் என்றும், தான் அதன்பிறகு உயிரை வைத்துக்கொண்டு வெளியில் வரவாவது, மனிதர் முகத்தில் விழிக்கவாவது முடியாமல் போய்விடும் என்றும் அவள் நிச்சயமாக நம்பினாள். தான் தனது பெரிய தந்தையின் சொல்லைக்கேட்டு, மகா புனிதவதியான ஷண்முகவடிவைக் கெடுக்க முயல்வதைக் கண்டு பொறாமல், தெய்வமே தன்மீது பழிவாங்க நினைக்கிறதோ என்ற யோசனை தோன்றி அவளது

மனதைக் கலக்கியது. அந்த மடக்கொடியைத் தான் வெல்வெட்டு மாடத்தில் தனிமையில் விடுத்து வந்து அதிகநேரமாய் விட்டது ஆகையால், அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வாளோ என்றும் அவள் எண்ணினாள். மகா துன்பகரமான தனது மன நிலைமையில் தான் அவளிடம் சம்பாஷித்து அவளது மனதைத் தனது பெரிய தந்தையின் துர்நினைவிற்கு இணங்க மாற்றுவது சிறிதும் முடியாததாகத் தோன்றியது. அவளது மனதை மாற்றாமல் தான் சும்மா இருந்து விட்டதைப் பற்றித் தனது பெரிய தந்தை தன் மீது கோபம் கொள்வாரோ என்ற அச்சமும் கவலையும் தோன்றி ஒருபுறத்தில் வருத்தத் தொடங்கின. ஆனால், தான் தனது பெரிய தந்தையினிடம் ஏதேனும் ஒரு பொய்யைச் சொல்லி ஏமாற்றி விடலாம் என்ற யோசனையும் தோன்றியது. அப்போது தான் எவ்விதமான தந்திரம் செய்து போலீஸ் இன்ஸ்பெக்டரிட மிருக்கும் அநாமதேயக் கடிதத்தை அபகரிப்பது என்ற சிந்தனையே அப்போது அவளது மனதைக் கவர்ந்து கொண்டது. கட்டாரித்தேவன் தனக்குப் பகைவனாகத் திரும்பாமல் தான் அவனிடம் நட்பாக நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் உண்டாயிற்று ஆகையால், அவள் உடனே ஒருவிதமான தீர்மானம் செய்துகொண்டாள். தான் இன்ஸ்பெக்டரோடு பேசியது கால்நாழிகை சாவகாசத்திற்கு அதிகம் இராது ஆகையால், அதற்குள் கட்டாரித் தேவன் தோட்டத்தைவிட்டுப் போயிருக்கமாட்டான் என்ற நினைவு உண்டானது. ஆகையால், தான் உடனே ஓடித் தான் அவனை விட்டுவந்த இடத்திலிருந்து பார்த்துக்கொண்டே தோட்டத்திற்கு ஓடி அதற்குள்ளும் அதன் வெளியிலும் தேடிப்பார்த்து அவனைக் கண்டுபிடித்து மறுபடி அவனுடன் தந்திரமாகப் பேசி, அவன் கேட்டுக்கொண்டபடி தான் இளவரசரிடம் சிபாரிசு செய்து அவனுக்கு மன்னிப்பு வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்து, அவனைத் தூண்டி, இன்ஸ்பெக்டரிடமிருக்கும் அநாமதேயக் கடிதத்தையும்

பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரின் புத்திரரான நீலமேகம் பிள்ளையினிடமுள்ள கடிதங்களையும் அபகரித்து வரச்செய்ய வேண்டும் என்ற முடிவும் செய்து கொண்டாள். இன்ஸ்பெக்டர் அவனைப் பிடிக்கும்பொருட்டு தேடிக் கொண்டு வந்ததாகவும், தான் அவருக்குத் தக்க சமாதானம் சொல்லி அனுப்பி விட்டதாகவும் அவனிடம் சொன்னால், அவன் தன்னிடம் நன்றி விசுவாசமுள்ளவனாக இருப்பானென்ற தீர்மானமும் அவள் செய்து கொண்டவளாய், அவ்விடத்தை விட்டு விரைவாக அப்பால் போய்த் தானும் கட்டாரித்தேவனும் பேசிக் கொண்டிருந்த விடுதியை அடைந்து, அவன் அவ்விடத்தில் இருக்கிறானா என்று நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்; அவன் காணப்படவில்லை. அவன் அவ்விடத்தில் இருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியில் துரிதமாக நடந்து சென்று இரண்டொரு விநாடி நேரத்தில் தோட்டத்தை அடைந்து, அதற்குள் புகுந்து தேடிப்பார்க்க லானாள். அவன் எங்கும் காணப்படவில்லை. அது விநோதமான மரஞ் செடி கொடிகள் நிறைந்த விஸ்தாரமான அழகிய உத்யானவனம் ஆதலால், முதன் முதலாக அவ்விடத்திற்கு வந்த கட்டாரித்தேவன் அங்குள்ள வேடிக்கைகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை கொண்டு, அதற்குள் புகுந்து எவ்விடத்திலாவது காணப்படுவானோ என்ற யோசனை தோன்றியது. ஆகையால், லீலாவதி அந்த உத்யான வனத்திற்குள் நுழைந்து ஓரிடம் விடாமல் தேடிப்பார்த்து அதற்கப்பாலும் சென்று மதிலையடைந்து ஓரிடத்தில் அதன் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கற்குவியலின் மேல் ஏறி நின்று அப்புறத்தில் தனது பார்வையைச் செலுத்தினாள். மதிலின் அப்புறத்தில் அலங்கமும் அகழியும் தென்பட்டனவேயன்றி மனிதர் எவரும் காணப்படவில்லை. கட்டாரித்தேவன் இன்ஸ்பெக்டருக்குப் பயந்து ஓட்டமும் நடையுமாகத் தமது மாளிகையைவிட்டு வெளிப்பட்டு அப்பால் போய் விட்டான் என்ற நிச்சயம் ஏற்பட்டது. அதற்குமேல் தான் என்ன

செய்வது என்ற கேள்வி அவளது மனதில் எழுந்தது. கட்டாரித்தேவன் எங்கே இருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியாது ஆகையால், தான் அவனை மறுபடியும் எப்படி சந்திப்பது என்று அவள் நிரம்பவும் ஆழ்ந்து சிந்தனை செய்தாள். எவ்விதமான மார்க்கமும் தோன்றவில்லை. ஆகையால், அவள் அதற்குமேல் அவ்விடத்தில் நிற்க மனமற்றவளாய் உத்யானவனத்தை விட்டு அடிமேலடி வைத்து நடந்தவளாய் மாளிகையின் உட்புறத்திற்கு வந்து சேர்ந்தாள்.

## 33 - வது அதிகாரம்

## சதிவெல்லுமோ விதிவெல்லுமோ

அன்றைய தினம் மாலை ஏழு மணி சமயமாயிற்று. மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்குள் வழக்கப்படி ஏராளமான தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மாரியம்மன் கோவிலுக்குப் போய்விட்டு வருவதாகச் சொல்லி அன்றையதினம் காலையில் தமது மாளிகையைவிட்டுப் புறப்பட்டுப்போன மருங்காபுரி ஜெமீந்தார் வெண்ணாற்றங் கரையின்மேலிருந்த தமக்குச் சொந்தமான இன்னொரு பங்களாவிற்குப் போய்த் தமது போஜனம் முதலியவற்றை முடித்துக்கொண்டு அவ்விடத்திலேயே சௌக்கியமாகப் படுத்துப் பகல் முழுதும் தூங்கிவிட்டு மாலையில் எழுந்து நல்லவாசனைத் திரவியங்களும் பன்னீரும் கலந்த ஜலத்தில் நெடுநேரம் ஆழ்ந்திருந்து நீராடி விலையுயர்ந்த பட்டாடை களையும், வைர ஆபரணங்களையும் அணிந்து மாதுரியமான போஜனமுண்டு, வாசனைத் தாம்பூலம் அத்தர் ஜவ்வாது முதலியவை தரித்து இருபத்தைந்து வயதே அடைந்த அதிகோலாகல யௌவனப் புருஷராய் மாறி ரதிதேவியின் மாளிகையை நாடிச்செல்ல் ஆயத்தப்படும் மன்மதனோ எனக் கண்டோர் ஐயுறும்படி ஆடம்பராசாரியராய் வெளிப்பட்டு

தமக்காக நிறுத்தப்பட்டிருந்த நேர்த்தியான ஸாரட்டில் அமர்ந்து தஞ்சையை நோக்கி பவனி புறப்பட்டார். வெளிப் பார்வைக்கு நிரம்பவும் ஜெகஜ்ஜோதியாக அலங்கரிக்கப்பட்டிருந்த அவரது கிழட்டு உடம்பு மாத்திரம் வண்டியில் இருந்ததேயன்றி, அவரது மனமெல்லாம் தனது மாளிகையில் இருந்த பூங்கோதையான ஷண்முகவடிவின்மீது சென்று லயித்துப் போயிருந்தது. தாம் பிறந்த முதல் அப்படிப்பட்ட நிகரற்ற அழகும் கலியாண குணங்களும் நிறைந்த உத்தம ஜாதி ஸ்திரீயைப் பார்த்ததே இல்லை என்ற உறுதி அவரது மனதில் ஏற்பட்டிருந்தது. தாம் அதுவரையில் பார்த்த ஸ்திரீகளுள் பூர்ணசந்திரோதயம் ஒருத்தியே சகலமான அம்சங்களிலும் ஷண்முகவடிவிற்குச் சமமாகச் சொல்லக் கூடியவளாகத் தோன்றினாலும், அந்த இரண்டு பெண்களுக்குள்ளும் முக்கியமான ஒரு வித்தியாசம் இருந்தது நன்றாக விளங்கியது. பூர்ணசந்திரோதயம் ஆழ்ந்த கபடமும், வாக்குவாதம் செய்வதில் எவரையும் வெல்லக்கூடிய திறமையும், ஆண்மையும், துணிவும் வாய்ந்தவளாகத் தோன்றினாள். ஷண்முகவடிவோ நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற குணங்களே வடிவெடுத்தது போலவும், கபடம் என்பதே கலவாத சுத்தமான மனதும், அடங்கிய சொல்லும் மிருதுத்வமும் நிறைந்தவளாகவும் தோன்றினாள். பூர்ணசந்திரோதயத்தின் எண்ணங்கள், வார்த்தைகள், செய்கைகள் ஆகிய யாவும் தந்திரத்தையும் யுக்தியையும் வெளிப்படுத்தின. ஷண்முகவடிவினது நினைவுகளும், சொற்களும், காரியங்களும் பரிசுத்தத்தையும் நீதிநெறி வழுவாத மன உறுதியையும் எளிதில் புலப்படுத்தின. இருவரும் அன்னிய புருஷருடைய துர்ப் போதனைக்கு இணங்காத திடமனதுடைய ஸ்திரீகளாகத் தோன்றினாலும், பூர்ணசந்திரோதயம் லௌகீகமான மனப் பான்மை உடையவளாகவும், ஷண்முகவடிவு தெய்வீக குண முடையவளாகவும் தோன்றினர். பூர்ணசந்திரோதயத்தின் ஜாஜ்வல்யமான வடிவத்தை மனிதர் மனதால் பாவிக்கும் போதே, அவரது மனோ மெய்களெல்லாம் காமவிகாரத்தினால்

நெக்குவிட்டுத்தளர்ந்து நிலைகுலைந்து சின்னாபின்னப்பட்டுப் போவது நிச்சயம். ஷண்முகவடிவை மனதால் நினைக்கும் போதே அவளிடத்தில் ஒருவித மேலான பக்தியும், மரியாதையும் அவளை சரஸ்வதி லக்ஷ்மி முதலிய தெய்வங்களை வைத்து வணங்குவது போல வழிபட்டுப் பூஜித்து வாயார ஸ்தோத்திரம் செய்தாலும், அத்தனைக்கும் அவள் அருகமானவள் என்ற எண்ணமும் உதிக்கும். பூர்ணசந்திரோதயம் ராஜஸகுணம் நிறைந்தவளாகக் காணப்பட்டாள். ஷண்முகவடிவோ சாத்வீக குணமே வடிவெடுத்தவள் போல இருந்தாள். எத்தகைய மேம்பாடும் புத்தி விசேஷமும் அதிகாரமும் வாய்ந்த புருஷரானாலும் பூர்ணசந்திரோதயத்தண்டை நெருங்கிப் பழகுவார்களானால், தமக்குத்தாமே சிறுமையடைந்து குன்றிப்போய்த் தம்மிலும் அவளே மேம்பட்டவள் என்றும், அவள் எஜமானியாக இருந்து தம்மை அதிகாரம் செய்யத் தகுந்தவள் என்றும், அவரது மனதில் ஒருவித எண்ணமும் கிலேசமும் தோன்றி அவரைக் குன்றச் செய்யும். ஆனால், ஷண்முகவடிவினிடம் பழகும்போது அப்படிப்பட்ட கிலேசமாவது அச்சமாவது உண்டாகாமல், அவளுக்கு அற்ப கெடுதலும் நேராமல் காப்பாற்ற வேண்டுமென்ற அனுதாபமும், பார்க்கப் பார்க்க அதிகரிக்கும் மதிப்பும், அவளைச் சதா சர்வதாகாலமும் புகழ்ந்தாலும் தெவிட்டாத ஆர்வமும் மனப்பாசமும் பெருக்கெடுத்தன. ஆகவே மருங்காபுரி ஜெமீந்தாரினது மனம் பூர்ணசந்திரோதயத்தை நாடியதை விடப் பதினாயிரமடங்கு அதிக உரமாக ஷண்முகவடிவை நாடியது. தாமும் இளவரசரும் மற்றும் நால்வரும் சேர்ந்து பூர்ணசந்திரோயத்தை வெல்வதற்காகப் பந்தயம் வைத்ததில், அவள் தமக்கு வாய்க்காமல் போனது தெய்வச் செயலாகத்தான் இருக்க வேண்டுமென்று ஜெமீந்தார் நினைத்தார். அவளைக் காட்டிலும் ஷண்முகவடிவு சகலமான அம்சங்களிலும் சம்பூர்ண சிருஷ்டியாக அமைந்தவள் ஆதலால், அவளைக் கொணர்ந்து தமக்குச் சேர்த்து வைத்துவிட வேண்டுமென்ற கருத்தோடுதான்

கடவுள் அவ்வாறு சூழ்ச்சி செய்திருக்கிறார் என்ற உறுதியான எண்ணம் கிழவரது மனதில் தோன்றியது. பூர்ணசந்திரோதயம் தமக்குக் கிடைத்திருப்பாளானால், அவள் அடங்காப்பிடாரியாக தம்மைக் கட்டி மேய்த்து சூத்திரப்பாவைபோல ஆட்டிவைத்து விடுவாள் என்ற பெரும் பீதியும் ஷண்முகவடிவோ சகல விதத்திலும் தமக்கு அடங்கிப் பணிவாக நடந்து சகல விஷயங்களிலும் மனதிற்கு ஒத்தபடி ஒழுகுவாள் என்ற நினைவும் தோன்றின. ஆகையால், தாம் எப்பாடு பட்டாகிலும் ஷண்முகவடிவைத் தமக்கு உரியவள் ஆக்கி, எப்போதும் அவளைத் தம்மோடு கூடவே வைத்துக்கொள்ள வேண்டு மென்ற உறுதியான தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. அவளது மனம் முழுதும் வேறொரு யௌவனப் புருஷன் மீது சென்று லயித்திருப்பது பற்றி அவளைத் தாம் சாதாரண வழியில் வசப்படுத்தி அவளது பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியாது ஆகையால், தாம் தந்திரமும் பலாத்காரமும் செய்தே அவளை வசப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அன்றைய இரவு கழிவதற்குள் தாம் எப்படியும் அவளைத் தமது மனைவியாக்கிவிட வேண்டு மென்ற மூர்த்தண்ணியமான பிடிவாதத்தோடு அவர் தமது மாளிகைக்கு வந்து சேர்ந்து, நேராக வெல்வெட்டு மாடத்திற்குப் போகாமல், சந்தடி இன்றி உள்ளே நுழைந்து ஷண்முக வடிவுக்குத் தெரியாத ஓர் அறைக்குப் போய் அவ்விடத்திலிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு ஒரு வேலைக்காரியை அழைத்து லீலாவதியும் ஷண்முகவடிவும் எங்கே இருக்கிறார்கள் என்றும் என்ன செய்து கொண்டிருக்கி றார்கள் என்றும் வினவினார். லீலாவதியும் ஷண்முகவடிவும் தங்களுடைய இராப்போஜனத்தை முடித்துக்கொண்டு அப்போதுதான் வெல்வெட்டு மாடத்துக்கு போனதாகவும், ஷண்முகவடிவு அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாகவும் வேலைக்காரி மறுமொழி கூறினாள். தாம் வந்து அழைப்பதாக ஷண்முகவடிவுக்குத் தெரியாமல் வேறே யாரோ அழைப்ப

தாகச் சொல்லி லீலாவதியை உடனே அழைத்துக் கொண்டு வரும்படி ஜெமீந்தார் அந்த வேலைக்காரி யிடம் சொல்லி அனுப்ப, அவள் மேலே போய் லீலாவதியிடம் அவ்வாறே தெரிவித்தாள். லீலாவதி தான் கீழேபோய், வந்திருப்பது யாரென்று அறிந்துகொண்டு இரண்டொரு நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுவதாக ஷண்முகவடிவினிடத்தில் சொல்லிவிட்டு உடனே கீழே இறங்கித் தனது பெரிய தகப்பனார் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அன்றைய பகலுக்குள் லீலாவதி நிரம்பவும் பாடுபட்டுப் பலவகையான தந்திரங்களைச் செய்து ஷண்முகவடிவின் மனதைக் கலைத்துத் தமது இஷ்டத்துக்குத் தகுந்தபடி மாற்றி வைத்திருப்பாள் என்று நிரம்பவும் உறுதியாக மருங்காபுரி ஜெமீந்தார் நம்பி வந்தார். ஆகையால், லீலாவதியைக் கண்டவுடன் மிகுந்த ஆவலோடும் புன்முறுவலோடும் அவளது முகத்தை உற்று நோக்கினார். அவளது முகம் சந்தோஷமற்றதாயும், வாட்டமடைந்து கவலை கொண்டு சுருங்கியதாயும் இருக்கக் காணவே, மருங்காபுரி ஜெமீந்தார் ஆவலோடு அவளை நோக்கி, ''லீலாவதி! என்ன சமாசாரம்? காரியம் காயா பழமா? ஏன் உன்னுடைய முகம் நிரம்பவும் விசனமாக இருக்கிறதே? நான் இல்லாத காலத்தில் இங்கே ஏதாவது விசேஷம் நடந்ததா? பெண் எப்படி இருக்கிறாள்?'' என்று வினவினார்.

அதைக் கேட்ட லீலாவதி அன்றையதினம் பகலில் கட்டாரித் தேவனும் இன்ஸ்பெக்டரும் வந்து தன்னோடு பேசிய விவரத்தை அவரிடம் சொல்லாமல் மறைத்துவிட வேண்டுமென்று முன்னரே தனக்குள் தீர்மானம் செய்து கொண்டிருந்தவள் ஆதலால், அவரைப் பார்த்து, ''நீங்கள் இன்று காலையில் போனது முதல் நான் இந்தப் பெண்ணோடு கூடவே இருந்து நிரம்பவும் தந்திரமாகவும் சமயோசிதமாகவும் பேசி, அவளுடைய மனசையும் ஆசையையும் உங்கள் மேல் திருப்ப வேண்டுமென்ற கருத்தோடு பலவகையில் முயற்சி

செய்தேன். எதுவும் பலிக்கவில்லை. அவளுடைய மனசு அம்மணிபாயி குறிப்பிட்ட பையன் மேலேயே போய் லயித்துப் போயிருக்கிறது. தான் அவனை இழந்து விடும்படி நேர்ந்ததைப் பற்றிய நினைவே நினைவாகக் கொண்டு அவள் சதாகாலமும் அதே விசனத்தில் ஆழ்ந்திருக்கிறாள். அதுவுமல்லாமல் தன்னுடைய அக்காளான கமலம் எப்போது வருவாள் என்றும், இன்றைய தினம் அவளை நீங்கள் அழைத்து வருவீர்களென்றும், இவ்வளவு நேரமாக நீங்கள் திரும்பி வராத காரணமென்ன என்றும், அவள் என்னிடம் அடிக்கடி கேட்டுக்கொண்டே இருக்கிறாள். அவள் மகா சுத்தமான மனமுடைய உத்தம ஜாதி ஸ்திரீ. சிற்றின்ப சுகமென்றால் என்னவென்பதே அவளுக்குத் தெரிந்திருக்காது என்று நான் நினைக்கிறேன். இந்த நிலைமையில் அவளிடம் இந்த விஷயத்தை எப்படி வெளியிடுகிறது என்பதே எனக்குத் தெரியவில்லை. நானும் சூட்சுமமான சில சொற்களை அடிக்கடி உபயோகித்தும் பார்த்தேன். அந்த வார்த்தைகளைக் காதால் கேட்பதும் அவளுக்கு அருவருப்பாக இருக்கிறது. அந்த வார்த்தைகளை அவள் கவனிப்பதும் இல்லை; அவைகளுக்கு மறுமொழி சொல்வதும் இல்லை. இப்படிப்பட்ட மனநிலைமையிலுள்ள பெண்ணை நீங்கள் இப்போது வசப்படுத்துவது முடியாது. பலவந்தம் செய்து வசப்படுத்தினாலும், அதில் உங்கள் மனசுக்கு அதிக சந்தோஷமும் சுகமும் ஏற்படுமென்று நான் நினைக்கவும் இல்லை'' என்றாள்.

அவ்வாறு அவள் மறுமொழி சொல்வாளென்று ஜெமீந்தார் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆகையால், அவள்மீது கோபமும் அருவருப்பும் அடைந்து, ''என்ன லீலாவதி! இவ்வளவுதானா உன்னுடைய சாமர்த்தியம்; நீ இப்படி மோசம் செய்வாயென்பது முன்னமே தெரியாமல் போய்விட்டது; தெரிந்திருந்தால், நான் வேறே ஏற்பாடுகள் செய்து இந்நேரம் அவளுடைய மனசைத்

திருப்பி இருப்பேன். அநாவசியமாக ஒரு பகல் முழுதும் வீணாகப் போய்விட்டது. சரி; போனது போகட்டும், இப்போது நீ ஒரு காரியம் செய். இவ்விடத்தை விட்டு நீ நேராக அவளிடம் போய் மாரியம்மன் கோவிலிலிருந்து ஓர் ஆள் செய்தி கொண்டு வந்திருப்பதாகச் சொல். என்ன செய்தி என்றால், நான் இன்று காலையில் மாரியம்மன் கோவிலுக்குப் போகப் புறப்பட்ட காலத்தில் இளவரசர் அவசர காரியமாகத் தன்னைக் கூப்பிட்டு அனுப்பியதாகவும், நான் நேரில் அரண்மனைக்குப் போய் அவ்விடத்தில் நடத்தப்பட்ட ஒரு விருந்தில் சம்பந்தப் பட்டிருந்து பிற்பகல் மூன்று மணிக்கே இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மாரியம்மன் கோவிலுக்குப் போக நேர்ந்ததாகவும் போனவுடனே இவள் வந்திருக்கிறாள் என்ற செய்தியைக் கமலத்தினிடம் சொன்னதாகவும், அதைக் கேட்ட கமலம் கரை கடந்த சந்தோஷமும் பூரிப்பும் அடைந்ததன்றி, உடனே புறப்பட்டு வந்து இவளைப் பார்க்கப் பிரியப்பட்டதாகவும், அப்போது சாயுங்கால வேளை ஆகையால், இன்னமும் கொஞ்ச நேரமிருந்து இராத்திரிப் போஜனத்தை முடித்துக்கொண்டு போகலாம் என்று உன் அண்ணி சொன்னதாகவும், நான் அங்கேயே உன் அண்ணிக்குத் துணையாக இருப்பதாகவும், கமலம் மாத்திரம் வேலைக்காரர்களை அழைத்துக் கொண்டு ஒருபெட்டி வண்டியில் வந்து கொண்டிருக்கிறாள் என்றும், அவள் இன்னம் ஒரு நாழிகை நேரத்தில் இங்கே வந்து சேர்ந்து விடுவாள் என்றும் இப்போது வந்துள்ள ஆள் செய்தி கொண்டு வந்திருப்பதாகச் சொல். இந்த வரலாற்றைக் கேட்டவுடனே, அவள் தன்னுடைய அக்காளைதான் வெகு சீக்கிரத்தில் பார்க்கப் போவதாக எண்ணி நிரம்பவும் ஆனந்தமும் குதூகலமும் அடைந்து, அவளுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்தி ருப்பாள். நீயும் அவளோடு கூடவே இரு; இன்னும் ஒரு நாழிகை நேரத்தில் நான் இன்னொரு வேலைக்காரியை உங்களிடம் அனுப்புகிறேன். அவள் தடதடவென்று ஓடிவந்து உங்களைப் பார்த்து, ''கமலத்தம்மாள் வந்துவிட்டார்கள்'' என்று

குதூகலமாகவும் ஆவலோடும் சொல்லும்படி செய்கிறேன். ''கமலத்தம்மாள் இங்கேயே வருகிறார்களா, கீழேயே எங்களை அழைத்து வரச் சொன்னார்களா?'' என்று நீ அவளிடம் கேள். கமலம் வீட்டுக்குள்ளிருக்கும் அவளுடைய சயன அறைக்குப் போயிருப்பதாகவும் உங்கள் இருவரையும் பின்பக்கமாக அவ்விடத்துக்கே வந்துவிடச் சொன்னதாகவும் வேலைக்காரி சொல்லிவிட்டுக் கீழே இறங்கி வந்துவிடுவாள். நீ உடனே ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு பின்புறமாக ரதிகேளி விலாசத்துக்குள் அவளை அழைத்துக்கொண்டு போய், எப்படியாவது தந்திரம் செய்து அங்கேயுள்ள விசைவைத்த நாற்காலி ஒன்றன் மேல் அவள் உட்கார்ந்து கொள்ளும்படி செய்தால் அவளை உடனே அந்த நாற்காலியின் விசைகள் இறுகப் பிடித்துக்கொள்ளும். அதன்பிறகு நீ அங்கே இருக்க வேண்டியதில்லை. உடனே நீ கதவை மூடிக்கொண்டு வெளியில் ஓடிவந்துவிடு. அதற்குள் நான் சந்தடி செய்யாமல் வெல்வெட்டு மாடத்துக்கு வந்து,மறைவாக இருக்கிறேன். நீ வெளியில் வந்தபிறகு இரண்டொரு நாழிகை நேரம் நாம் அவளை அந்த நாற்காலியிலேயே இருக்கவிட்டு வைப்போம். அவளுடைய உடம்பின் முறுக்கும் திமிரும் தளர்ந்து போகும். பெருத்த திகிலும் கவலையும் உண்டாகிவிடும். எப்படியாவது அதிலிருந்து விடுவித்துக் கொண்டால் அதுவே போதுமென்று ஆகிவிடும். பிறகு நான்போனால், அவள் அதிகமாக சிரமம் கொடுக்காமல் சுலபத்தில் வழிக்கு வருவாள். உடனே அவளை நான் விடுவித்து என் பிரியப்படி நடத்திக் கொள்கிறேன். நான் சொல்லுகிறது தெரிகிறதா? அப்படியே செய்வாயா? இந்தக் காரியம் உனக்கு ஒரு பெரிதல்ல; சுலபத்தில் செய்யக் கூடியதே. எப்படியும் நீ இந்தக் காரியத்தைச் செய்தே தீரவேண்டும். இன்றைய தினம் இராத்திரிக்குள் நான் அவளை என்னுடைய சம்சாரமாக்கியே தீரவேண்டும்'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினார்.

அதைக்கேட்ட லீலாவதி, "ஐயோ பாவம்! மணிப்புறாவைப் போல எவ்வளவோ மிருதுவாகவும் சொகுசாகவும் இருக்கும் அந்தப் பெண்ணை அப்படிப்பட்ட மகா கொடுமையான நாற்காலியிலா மாட்டச் சொல்லுகிறீர்கள்! அதை நினைக்கும் போதே எனக்குக் குலை நடுக்கம் உண்டாகிறதே! என்ன செய்வேன்! இந்த ராத்திரிக்குள் அவளை வசப்படுத்தியே தீரவேண்டுமா? இன்னம் இரண்டொருநாள் பொறுக்கக் கூடாதா? அதற்குள் அவளை சந்தோஷப்படுத்தி நயமாகவே அவளுடைய மனசைத் திருப்பிப் பார்க்கலாமே! இதெல்லாம் தானாகக் கனிந்து வருவதே சுகமென்பது உங்களுக்குத் தெரியாததல்ல. நீங்கள் இன்றைய தினமே இதை முடிக்க எண்ணுவது தடியாலடித்துக் கனியவைப்பதுபோல ஆகுமே அன்றி வேறல்ல" என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் நிரம்பவும் கோபங்கொண்டு கடுகடுத்த முகத்தோடு பேசத் தொடங்கி, "எனக்குத் தெரியாத புத்திமதியை நீ சொல்லுகிறாய் போலிருக்கிறது. உன்னைப் போல எனக்கு மூன்று மடங்கு வயசாகிவிட்டது. இந்தப் பெண்ணைப் போலவும் உன்னைப் போலவும் லக்ஷோபலக்ஷம் பெண்களை நான் பார்த்தாய் விட்டது. எத்தனையோ தினுசான மனப் போக்குள்ளவர்கள் என் வசத்தில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குணங்களையும், மனக் கோணல்களையும் நான் எத்தனையோ விதத்தில் திருத்திச் சரிப்படுத்தி இருக்கிறேன். ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும் என்றும், பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்றும், ஜனங்கள் பழமொழி சொல்வார்கள். அதுபோல, நயத்தில் வெல்லக் கூடியவளும் இருக்கிறாள். பயத்தில் வெல்லக் கூடியவளும் இருக்கிறாள். நாம் எல்லோரையும் தானாகக் கனியும்படி செய்துதான் அடைய வேண்டும் என்பது என்ன கட்டாயமோ தெரிய வில்லை. இன்றையதினம் நாம் இவளைக் கட்டாயப்படுத்துவதில்

உண்மையான சுகம் இருக்காது என்பது நிஜந்தான். ஆனாலும், நாம் இன்றையதினம் பலாத்காரம் செய்து விட்டால், அவளுடைய கற்பு குலைந்துபோகும்; நாணம் விலகிப் போகும். தான் இனி தப்ப வழியில்லையென்றும், தன்னுடைய பரிசுத்தம் எப்படியும் கெட்டுப்போய் விட்டது ஆகையால், தான் இனி பதிவிரதைத்தனம் கொண்டாடுவதில் உபயோக மில்லை என்றும் அவள் உணர்ந்து சிலதினங்களில் படிப்படியாக ஒழுங்குக்கு வந்துவிடுவாள். சில தினங்கள் வரையிலே தான் இந்த உபத்திரவமெல்லாம் இருக்கும். அதன்பிறகு இவள் நாய்போலப் படிமானத்துக்கு வந்து விடுவாள். அதன்பிறகு நாம் தடியாலடித்துக் கனிய வைக்க வேண்டிய அவசியமே இல்லை. அவளே தானாகவே கனிந்து நம்முடைய பிரியப்படி நடந்து கொள்வாள். இப்படிப்பட்ட பிடிவாத குணமுடையவர்களை வசப்படுத்த பலாத்காரத்துக்கு மிஞ்சிய மருந்தே கிடையாது. இவளுடைய மனப்போக்கைப் பார்த்தால், இவளை நாம் ஆயிரங்காலம் வைத்திருந்து கனகாபிஷேகம் செய்து இவளைப் புகழ்ந்து பூஜித்தாலும் இவள் என் விஷயத்தில் தானாகக் கனிந்து வரவே மாட்டாள். இவளைப் பலாத்காரத்தினால் வென்றால் வெல்லலாம். இல்லையானால் பேசாமல் வெளியில் அனுப்பி விடுவதுதான் உசிதமான காரியம். நீ உலக அனுபவமில்லாத சிறிய பெண். அதுவுமில்லாமல் உன்னைப் போன்ற குடும்ப ஸ்திரீகளுக்கு இந்த விஷயத்தின் சூட்சுமம் கொஞ்சமும் தெரிய நியாயமில்லை. நான் பதினைந்து வயசு முதல் இந்த விஷயத்திலேயே கிடந்து உழன்று பழமும் தின்று கொட்டை யும் போட்டவன் ஆகையால், நீ எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல், என் யோசனைப்படி நடந்து கொள். சீக்கிரமாகப் போ. இவள் சந்தேகிக்காதபடி நீ தந்திரம் செய்து இவளை என்னுடைய ரதிகேளி விலாசத்துக்குள் அழைத்துக் கொண்டுபோய் எப்படியாவது தந்திரம் செய்து அந்த விசை நாற்காலியில் மாட்ட வைத்துவிடு. போ'' என்று நயமாகவும் அழுத்தமாகவும் கூறினார்.

அவரது சொற்களைக்கேட்ட லீலாவதி அதற்கு மேலும் தான் மறுத்துப் பேசுவது சரியல்லவென்று எண்ணங்கொண்டு, ''சரி; உங்களுடைய இஷ்டப்படியே செய்கிறேன். ஆனால், நீங்கள் ஒரு காரியம் மாத்திரம் செய்யவேண்டும். இவளை அந்தக் கொடிய நாற்காலியில் அதிக நேரம் வைத்திருந்தால், இவள் அதன் சங்கடத்தைப் பொறுக்கமாட்டாமல் இறந்து போனாலும் போய்விடுவாள் ஆகையால், நான் அவளை அதில் மாட்ட வைத்து விட்டு வந்தவுடனே நீங்கள் போய் சீக்கிரமாக இவளை அதிலிருந்து விடுவிக்க வேண்டும். இவளுக்குக் கொஞ்சம் சூடு காட்டினால், அதுவே போதுமானது'' என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், ''சரி; அப்படியே செய்யலாம். நீ சீக்கிரம்போய் உன் வேலையைப் பார்'' என்றார்.

உடனே லீலாவதி அவ்விடத்தை விட்டு வெளியில் வந்து மேன்மாடப் படிகளில் ஏறி வெல்வெட்டு மாடத்திற்கு வந்து சேர்ந்து ஷண்முகவடிவு உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்தாள். நிரம்பவும் மிருதுத்தன்மையும், பரிசுத்தமும் நிறைந்தவளாக இருந்த அந்த வடிவழகியைத் தான் வஞ்சித்து, அவளைப் பெருந் துன்பத்தில் மாட்டிவிட வேண்டியிருக்கிறதே என்ற இரக்கமும் துயரமும் சங்கடமும் எழுந்து லீலாவதியினது மனதை வருத்தியது. ஆனாலும், தான் தனது பெரிய தகப்பனாரினது ஆதரவை இழந்துவிட்டால் தனக்கு வேறு புகலிடம் இல்லை என்ற எண்ணம் உண்டானது ஆகையால், அவள் தனது இயற்கையான தயாளச் சிந்தனையை அடக்கிக்கொண்டு, ஜெமீந்தார் சொன்னபடி செய்யத் தீர்மானித்துக் கொண்டவளாய் நிரம்பவும் குதூகலமும் மகிழ்ச்சியும் தோற்றுவித்து, ''ஷண்முக வடிவூ! காலையிலே திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போன என் தமயனார் இதுவரையில் வராத காரணம் இப்போது தான் தெரிகிறது. மாரியம்மன் கோவிலிலிருந்து ஓர் ஆள் வந்திருக்கிறான். இன்றைய தினம் இந்த ஊர் அரண்மனையில் இளவரசர் முக்கியமான சில பெரிய மனிதர்களுக்கெல்லாம்

விருந்து அளித்தாராம். இளவரசருக்கும் என் தமயனாருக்கும் நிரம்பவும் அன்னியோன்னியமான சிநேகம் உண்டு. அவர் இவரை அழைத்துக்கொண்டு வரும்படி ஓர் ஆளிடம் கடிதம் கொடுத்து அனுப்பினாராம்; இவர் காலையில் புறப்பட்டு வண்டியில் ஏறிக்கொண்டு கொஞ்சதூரம் போன சமயத்தில் எதிரில் வந்த அந்த ஆள் இவரைக் கண்டுபிடித்து கடிதத்தைக் கொடுத்தானாம். கடிதத்தின் விஷயத்தை அறிந்து கொண்ட வுடனே இவர் இளவரசருடைய பிரியத்துக்கு விரோதமாக நடந்துகொள்வது உசிதமல்லவென்று நினைத்து நேராக அரண்மனைக்குப் போனாராம். போய், வண்டியை மாத்திரம் சாமான்களோடு மாரியம்மன் கோவிலுக்கு அனுப்பி விட்டுத் தாம் பிற்பகலில் வந்து சேருவதாகச் செய்தி சொல்லி அனுப்பினாராம். வண்டி அப்படியே முன்னால் போய்விட்ட தாம். அவர் மாத்திரம் அரண்மனையில் இருந்தாராம். இளவரசர் அவரைச் சாயுங்காலம் வரையில் விடவில்லையாம்; அதற்கு மேல் அவர் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு விளக்கு வைக்கும்போதுதான் மாரியம்மன் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தாராம். போனவுடனே அவர் நீ வந்திருக்கிறாய் என்ற சங்கதியைத்தான் முதன் முதலில் கமலத்தினிடம் சொன்னாராம். அந்தச் சங்கதியைக் கேட்டவுடனே கமலம் அடக்கமுடியாத சந்தோஷத்தினால் அப்படியே துள்ளிக் குதித்தாளாம்; நிரம்பவும் ஆனந்தமும், குதூகலமும் அடைந்து உன் க்ஷேமத்தைப் பற்றிப் பல தடவைகளில் விசாரித்ததன்றி, உங்கள் அத்தையை நீ தனியாக விட்டு வந்த காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்றும், உன்னைப் பார்க்க வேண்டுமென்றும் அளவற்ற ஆவல் கொண்டு துடித்தாளாம். உன்னை அங்கேயே அழைத்துக்கொண்டு வரக்கூடாதா என்று சொல்லி, தன்னை அனுப்பும்படி கேட்டுக் கொண்டாளாம். என் தமயனாரும் அண்ணியும் அவளைச் சாந்தப்படுத்தி இரண்டொரு நாழிகையில் இராத்திரி போஜனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டுப் போகலாம் என்று சொல்லி கமலத்தை

நிறுத்திவிட்டு இந்த ஆளை முன்னால் அனுப்பி வைத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு நாழிகை சாவகாசத்தில் கமலம் வந்துவிடுவாள். ஆனால், என் தமயனார், அண்ணிக்குத் துணையாக அங்கேயே இருந்து காலையிலேதான் வருவாராம். கமலம் புறப்பட்டு இந்நேரம் பாதிவழி தூரத்துக்கு மேல் வந்திருப்பாள். ஆய்விட்டது. இன்னும் ஒரு நாழிகைக்குள்ளாகவே அவள் இங்கே வந்து சேர்ந்துவிடுவாள்'' என்று கரைகடந்த மகிழ்ச்சியோடு கூறினாள்.

அவள் கூறிய வரலாறு முழுதும் உண்மையென்றே நம்பின நிஷ்கபடியான ஷண்முகவடிவு அதிசீக்கிரத்தில் தானும் தனது அக்காளும் சந்தித்துப் பேசப்போகிறோம் என்ற நினைவினால் அபரிமிதமான மன வெழுச்சியும், கட்டுக் கடங்காப் பூரிப்பும் மனதில் அடங்கா ஆவலும் அடைந்தவளாய், ''இங்கே இருந்து மாரியம்மன் கோவில் என்ற ஊர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?'' என்று வினவினாள்.

அதைக்கேட்ட லீலாவதி, ''அதிக தூரமில்லை; மூன்று மயில் தூரம் தான்'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''அப்படியானால் அங்கே இருந்து புறப்பட்டு இங்கே வந்துசேர இரண்டு மணி சாவகாசமாவது பிடிக்காதா?'' என்றாள்.

லீலாவதி, ''எதற்காக அவ்வளவு நேரம்? இரண்டு நாழிகை கூடப் பிடிக்காது?'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு சந்தோஷப்பெருக்கைத் தாங்க மாட்டாமலும், அதற்குமேல் என்ன பேசுவதென்பதை உணராமலும் சிறிது நேரம் மௌனம் சாதித்திருந்தாள். அவ்வாறு கால்நாழிகை நேரம் கழிந்தது. அதன்பிறகு ஷண்முகவடிவு லீலாவதியை நோக்கி, ''ஏனம்மா! உங்கள் தமயனார் இந்த ஊர் அரண்மனையில் ஏதோ விருந்துக்காகப் போனார்கள் என்று சொன்னீர்களே; அரண்மனையில் இன்றையதினம் என்ன விசேஷம்?'' என்றாள்.

உடனே லீலாவதி சந்தோஷமாகப் பேசத் தொடங்கி, ''இந்த ஊர் அரண்மனையில் விசேஷத்துக்கு என்ன குறை? இந்த ஊர்ப் பெரிய அரசர் நிரம்பவும் வயதான கிழவர். அவர் ராஜ்ஜிய விஷயங்களிலேயே தலையிடுவதில்லை. அவருடைய மூத்த குமாரர்தான் இளவரசர். அவர்தான் மகாராஜாவின் சர்வ அதிகாரங்களையும் வகித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் நிரம்பவும் குதூகல புருஷர். அவர் எப்போதும் கோலாகலமாகவும் உல்லாசமாகவுமே இருப்பார். அவருக்குப் பணத்துக்குக் குறைவா, சாமான்களுக்குக் குறைவா? ஜனங்கள் நெற்றி வேர்வை ஜலத்தில் விழ உழைத்துப் பாடுபட்டுத் தேடும் பொருள்களுக்கெல்லாம் இவர்தான் பாத்யஸ்தர். அவைகளை யெல்லாம் நினைத்தபடி விரயம் செய்ய அவருக்குச் சுயேச்சையான அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கையில் விருந்துக்கென்ன குறைவு? இந்த அரண்மனையில் நித்திய கலியாணமாகத்தான் இருக்கும். அதுவுமன்றி அவர் எப்போதும் ஸ்திரீலோலராகவே இருந்து வருபவர். இந்த ஆகாசத்திலுள்ள நட்சத்திரங்கள் எத்தனை என்று நாம் ஒரு வேளை கணக்கிட முடிந்தாலும் முடியும். இந்த இளவரசருடைய ஆசைநாயகிகள் எத்தனைபேர் என்பதைக் கணக்கிடவே முடியாது. இப்போது சமீபகாலத்தில் இந்த ஊரில் பூர்ணசந்திரோதயம் என்று ஒரு பெண் எங்கே இருந்தோ வந்து சேர்ந்தாள். அவள் ஏதோ ஒரு தேசத்து மகாராஜாவினுடைய அபிமான புத்திரியென்று சொல்லிக் கொண்டு நிரம்பவும் ஆடம்பரம் செய்து ஆண்வாடையே தன்மேல் வீசக்கூடாதென்று தடபுடல் செய்துக்கொண்டிருந்தாள். ஆனால், அவள் நிரம்பவும் அற்புதமான அழகு வாய்ந்தவளாம். பார்ப்பதற்குத் தத்ரூபம் அப்ஸரஸ்திரீ போலவே இருப்பாளாம்; வாய்ப் பேச்சிலோ மகா சாமர்த்திய சாலியாம். எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும் அவளுடன் பேசி வெல்ல முடியாதாம். புருஷர்களை மயக்கும் ஸாகஸங்களுக்கெல்லாம் அவளை உற்பத்தி ஸ்தானமாகச் சொல்லலாம். அவள் சில மாசகாலமாக இந்த ஊரில் அழகான

ஒரு மாளிகையில் வந்திருந்துகொண்டு சகலரும் தன்னைப் பார்க்கும்படி மேன்மாடத்திலிருந்து பஞ்சவர்ணக் கிளிகளை வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவுவதும், சாயுங்கால வேளைகளில் வம்புலாஞ் சோலையில் உலாவப் போய் ஊர் முழுதும் சுற்றி வருவதுமாய் நிரம்பவும் ஆடம்பரமாக இருந்து வந்தாளாம். இந்த ஊரிலுள்ள இளவரசர் முதல் சகலமான பெரிய மனிதர்களும் அவளைக் கண்டு மதிமயங்கி அதே பைத்தியமாக அலைந்து திரிந்தார்களாம். இளவரசரும் இன்னும் நாலைந்து மனிதரும் சேர்ந்து அவளை வெல்வதாகப் பந்தயம் ஏற்படுத்திக் கொண்டு ஒவ்வொருவராக அவளிடம் போய்ப் பலவகையில் தந்திரம் செய்து லக்ஷக்கணக்கில் அவளுக்குப் பொருள் கொடுப்பதாகச் சொல்லி அவளுடைய மனசைக் கலைக்கப் பார்த்தார்களாம். அவள் யாருக்கும் இணங்காமல் எல்லோரையும் அவமானப்படுத்தி அனுப்பி விட்டாளாம். ஆனால், அதன்பிறகு அவள் தான் சொந்தமாக வைத்திருந்த மாளிகையை விட்டு, அரண்மனையில் ஏழாவது உப்பரிகையில் ராஜஸ்திரீகள் வசிக்கும் இடத்திற்குப் போய் அவ்விடத்திலேயே இருந்து வருகிறாளாம். இளவரசர் அவளைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதாக ஊரில் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்களாம். அவளை சந்தோஷப் படுத்தவேண்டுமென்று இளவரசர் பலவகையில் பணத்தை வாரி வாரி இறைத்து விருந்துகளும், வேடிக்கைகளும், பாட்டுக் கச்சேரிகளும் நடத்தி வருகிறாராம். அவள் யாரோ ஒரு தாசியின் மகளாகத்தான் இருக்க வேண்டும் என்று ஜனங்கள் அனுமானிக்கிறார்கள். அவள் நிரம்பவும் சாமர்த்தியம் செய்து இளவரசருடைய மனசை மயக்கி மோகிக்கச் செய்து விட்டாள். அவர் அவளைக் கலியாணமே செய்து கொள்வார் போலிருக்கிறது. இப்போதே அவர்கள் இருவரும் புருஷன் பெண்சாதி போல இருந்து வருகிறார்கள் என்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவள் சம்பந்தமாகத்தான் இன்றையதினம் ஏதாவது விருந்து நடத்தப்பட்டிருக்க வேண்டும்'' என்றாள்.

அந்த வரலாற்றைக்கேட்ட மகா பரிசுத்த மனதையுடைய ஷண்முகவடிவு, ''என்ன ஆச்சரியம்! அப்படியும் ஒரு பெண் பிள்ளை நடந்து கொள்வாளா! அவள்தான் தாசி என்கிறீர்கள். அவள் தன் ஜாதித் தொழிலுக்குத் தகுந்தபடி நடந்துகொள்வது இயற்கை. ஆனாலும் இந்த ஊரிலுள்ள இளவரசரும் மற்ற பெரிய மனிதரும் அவள் விஷயத்தில் பந்தயம் வைத்ததும், அவளை இளவரசர் அழைத்துக் கொண்டு போய் ஏழாவது உப்பரிகையில் வைத்து இருப்பதும், கலியாணம் செய்து கொள்ள உத்தேசிப்பதும் நிரம்பவும் கேவலமான காரியமாகவும் காதால் கேட்பதற்கே, அசங்கியமான சங்கதியாகவும் இருக்கிறதே. இந்த வரலாற்றை என் காதால் நான் கேட்கும்படி நேர்ந்ததைப் பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். இந்தப் பூர்ணசந்திரோதயத்தைப் போன்ற பெண்பிள்ளைகளை எல்லாம் ஈசுவரன் எதற்காகப் படைத்து மற்ற யோக்கியமான ஸ்திரீகளுக்கெல்லாம் ஒரு பெரிய களங்கத்தை உண்டாக்கு கிறானோ தெரியவில்லை. இப்படிப்பட்ட துன்மார்க்கர்கள் சேர்ந்து நடத்தும் விருந்துகளில் உங்கள் தமயனாரும் போய்க்கலந்து கொள்கிறார் என்ற விஷயமும் மற்றதைவிட அதிகமாய் மனசை வதைக்கிறது. இப்படிப்பட்ட பெரிய பட்டணங்களில், மனிதர்கள் சன்மார்க்கத்தில் நடக்க வேண்டும் என்பதைப்பற்றி கேள்வி முறையில்லையென்றே நினைக்கிறேன். குக்கிராமங்களில் இப்படிப்பட்ட அக்கிரமம் நடந்தால், ஜனங்கள் அவர்களை அந்த ஊரிலேயே வைக்க விட மாட்டார்கள்; அவர்கள் இரவோடு இரவாய் ஊரைவிட்டு ஓடி வந்துவிட வேண்டியிருக்கும். இந்த விவரங்களை எல்லாம் கேட்டபிறகு எனக்கு இந்த ஊரில் இருப்பதற்கே கொஞ்சமும் இஷ்டமில்லாமல் இருக்கின்றது. என்னுடைய அக்காள் இத்தனை காலமாக இந்த ஊரில் எப்படி இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாளோ தெரியவில்லையே'' என்றாள்.

லீலாவதி, ''நீ பேசுவது நிரம்பவும் வேடிக்கையாக இருக்கிறது. இந்த ஊரில் யாரோ சில அயோக்கியர்கள் துன் மார்க்கமாக நடந்துகொண்டால், அதற்காக வீட்டிற்குள் இருக்கும் குடும்ப ஸ்திரீகள் எல்லாரும் பயந்து கொண்டு ஊரைவிட்டு ஓடிப்போகிறதா? என் தமயனார் மகா சுத்தமான மனிதர். இளவரசர் செய்கிற காரியம் எதுவும் இவருடைய மனசுக்குப் பிடிக்கிறதே இல்லை. இருந்தாலும், அவர் ராஜ்ஜியத்தின் அரசராயிருப்பதால், அவர் விருந்துக்கு அழைப்பதை மறுத்து நேருக்கு நேர் கண்டித்து அவருடைய பகைமை சம்பாதித்துக் கொள்வது உசிதமல்ல என்று அங்கே போகிறார்கள். போனாலும், இவர் தூரத்திலிருந்தபடி காரியத்தை முடித்துக்கொண்டு வந்துவிடுவது வழக்கம். உன்னுடைய அக்காள் கமலம் இங்கே வந்தபின் வீட்டை விட்டு வெளியில் போனதே இல்லை. அரண்மனையில் நடக்கும் கெடுதல் எல்லாம் அவளுக்குத் தெரியவே தெரியாது. ஓர் ஊர் என்றிருந்தால், அதில் தாசிகளும் இருப்பார்கள்; வேசைகளும் இருப்பார்கள். அவர்கள் இருக்கும் இடத்தில்தான் பதிவிரதா ஸ்திரீகளும் இருந்து வாழவேண்டியிருக்கிறது. சிறிய கிராம மக்களில் மாத்திரம் எல்லோரும் பரம சுத்தர்களாக இருக்கறார்களா என்ன? அவ்விடத்திலும் கூட துன்மார்க்கர்கள் அவசியம் இருக்கத்தான் இருப்பார்கள். இது எவ்வளவோ பெரிய பட்டணம். இந்த ராஜ்ஜியத்திலுள்ள எத்தனையோ ஊர்களிலிருந்து பணமும் சாமான்களும் இங்கே வந்து குவிகின்றன. அவைகளையெல்லாம் ஆண்டு அனுபவித்துத் தின்று கொழுத்து, வேலை இல்லாமல் திரியும் பெரிய மனிதர்கள் துன்மார்க்கத்தில் தங்கள் மனதைச் செலுத்தாமல் வேறு என்னதான் செய்யப்போகிறார்கள். இதெல்லாம் சகஜமாக நடக்கக்கூடிய விஷயமே. நீயும் நானும் கூடிக் கொண்டு இந்தத் துஷ்ட உலகத்தைச் சீர்திருத்தி நல்ல வழிக்குத் திருப்புவது என்றால் அது சாத்தியமான காரியமா? அவைகளை யெல்லாம் நாம் கண்ணால் பார்த்தும் பார்க்காமல், காதால்

கேட்டும் கேட்காமல், நம்மை மாத்திரம் பத்திரமாகக் காப்பாற்றிக் கொண்டு போக வேண்டும். இந்த மாளிகை எவ்வளவோ அழகாக அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. விலை உயர்ந்த ஏராளமான விநோதப் பொருள்களே நிறைந்த இந்த மாளிகையிலும் இரண்டு இடுக்கு களில் தேள் முதலிய துஷ்ட ஜெந்துக்களும் இருந்து குடும்பம் நடத்திக்கொண்டுதான் இருக்கின்றன. நாம் எவ்வளவுதான் பிரயாசைபட்டாலும் அவைகளையெல்லாம் விலக்கவும் முடியாது. அவைகள் இல்லாத சுத்தமான இடத்தைக் காணவும் முடியாது'' என்றாள்.

அவ்வாறு அவள் பேசி முடித்த காலத்தில், ''அம்மா! அம்மா!'' என்று ஆவலோடு கூவி அழைத்துக் கொண்டு ஒரு வேலைக்காரி அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் வந்த மாதிரியைக் கண்ட லீலாவதியும், ஷண்முகவடிவும் திடுக்கிட்டுத் தங்களது சம்பாஷணையை அவ்வளவோடு நிறுத்திவிட்டு நிமிர்ந்து அவளை உற்று நோக்கினர்.

லீலாவதி அவளைப் பார்த்து, ''என்ன விசேஷம்?'' என்று ஆவலோடு கேட்க, அவள் ''கமலத்தம்மாள் வந்துவிட்டார்கள்'' என்று நிரம்பவும் துடியாக மறுமொழி கூறினாள். அதைக்கேட்ட ஷண்முகவடிவு கட்டுக்கடங்கா ஆவலும், ஆனந்தப் பெருக்கும் அடைந்தவளாய்த் துடிதுடித்துத் துள்ளி எழுந்தாள். தான்அடுத்த நிமிஷத்தில் தனது ஆருயிர்ச் சகோதரியைக் காண்போம் என்கிற எண்ணத்தினால் அந்த மடமங்கை மெய்மறந்து பரவசம் அடைந்து அது பூலோகமோ ஆகாசலோகமோ என்பது தெரியாத குழம்பிய நிலைமையை அடைந்து சுவர்க்கத்தின் வாசலிலிருந்து அதற்குள் நுழையப் போகிறவள் போல பிரமிப்பும், ஆவலுமே வடிவாக அப்படியே ஸ்தம்பித்து மந்திரசக்தியினால் கட்டுப்பட்டு நிற்கும் நாகம்போல நின்றாள். அவளைப் போலவே ஆவல்கொண்டு துள்ளியெழுந்த லீலாவதி வேலைக்காரியைப் பார்த்து, ''கமலத்தம்மாள் வந்து விட்டார்களா? நிரம்பவும் சந்தோஷம். அவர்கள் நேராக

இங்கேயே வருகிறார்களா? அல்லது எங்களைக் கீழே அழைத்து வரச் சொன்னார்களா?'' என்றாள்.

வேலைக்காரி, ''அவர்கள் கையில் அம்மனுடைய பிரஸாதம் கொஞ்சம் கொண்டுவந்திருக்கிறார்கள். தாம் நேராக அதைக் கொண்டுபோய் இரண்டாவது கட்டில் இருக்கும் சுவாமி அறையில் வைத்துவிட்டு அங்கேயிருக்கும் மெத்தைப் படிகளின் வழியாக ஏறி அவர்களுடைய அந்தப்புரத்துக்கு வருகிறார்களாம். நீங்கள் இந்த அம்மாளையும் அழைத்துக் கொண்டு இப்படியே பின்புறத்து வழியாக அவர்களுடைய அந்தப் புரத்துக்கு வந்து சேர்ந்து விடும்படி சொல்லச் சொன்னார்கள்'' என்று கூறினாள்.

உடனே லீலாவதி, ''அப்படியானால் சரி; ஷண்முகவடிவூ! வா; நாம் இப்படியே போவோம்,கமலத்தினுடைய அந்தப்புரம் இதோ பக்கத்திலே தான் இருக்கிறது'' என்று கூறியவண்ணம் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு பின்பக்கத்திலிருந்த வாசலை நோக்கி நடக்க, அவர்களது கபட நினைவைச் சிறிதும் உணராத நற்குணமணியான ஷண்முகவடிவென்னும் இளந்தோகை தனது அக்காளைக் காண வேண்டும் என்ற பேராவலில் தனது நினைவு முழுவதையும் லயிக்க விடுத்தவளாய் லீலாவதியைப் பின்பற்றிச் செல்லலானாள்.

கமலம் வந்துவிட்டதாக அவர்களுக்குச் செய்தி சொல்லவந்த வேலைக்காரி தான் வந்த வழியாகவே திரும்பி நடந்து முன் வாசலைக் கடந்து அவ்விடத்திலிருந்த படிகளின் வழியாகக் கீழே இறங்கிப் போய்விட்டாள். லீலாவதி ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு வெல்வெட்டு மாடத்தின் பின் புறத்திலிருந்த கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு அப்பால் சென்றாள். அவ்விடத்தில் ஜெமீந்தாரது பரமரகசியமான ரதிகேளிவிலாசம் ஆரம்பமாயிற்று. ஆனால், அப்போது அவ்விடத்தில் ஒரு விளக்காகிலும் கொளுத்தப்படவில்லை. ஆகையால், எங்கும் இருளே மயமாக நிறைந்திருந்தது

ஆதலால், அவ்விடத்திலிருந்த அறுபத்து நான்கு லீலைக் கட்டில்களும் அசங்கியமான படங்களும் மற்றும் காமாந்தகாரம் நிறைந்த காட்சிகளும் ஷண்முகவடிவின் திருஷ்டியில் படாமல் இருந்தன. முன்னால் சென்ற லீலாவதி விளக்கு இல்லாததைப் பற்றி நிரம்பவும் கோபம் கொண்டவள்போல நடித்து, ''என்ன அநியாயம் இது! வேலைக்காரர்கள் இந்த வழியில் விளக்கே கொளுத்தவில்லையா? அல்லது, கொளுத்திய விளக்கு அணைந்து போய்விட்டதா என்பது தெரியவில்லையே! இந்த இடம் விளக்கில்லாமல் ஒரு நாளும் இருந்ததில்லை. வேலைக்காரர்கள் அசிரத்தையினால் இன்றைய தினம் இப்படிச் செய்திருக்கிறார்கள். என் தமயனார் இங்கே வந்திருப்பாரானால் அவர் இந்நேரம் நிரம்பவும் கோபித்துக் கொண்டு இதைச் செய்ய வேண்டிய வேலைக்காரனை வேலையிலிருந்து விலக்கியிருப்பார். ஷண்முகவடிவூ! பக்கத்திலுள்ள பூச்செடிகளில் இடறி நீ கீழே விழுந்தாலும் விழுந்து விடுவாய். ஆகையால், நீ என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு மெதுவாக நடந்து வா; எங்கே? இப்படி வந்து என் கையைப் பிடித்துக்கொள்'' என்று நயமாகக் கூறியவண்ணம் சடக்கென்று நின்று திரும்பித் தனது கையை நீட்ட அவள் சொன்ன பொய் முகாந்திரத்தை உண்மையென்றே நினைத்துக் கொண்ட சுத்தஸ்வரூபிணியான ஷண்முகவடிவு தனது இடது கையை நீட்டினாள். லீலாவதி அதை மெதுவாகப் பிடித்து அவளை அழைத்துக்கொண்டு மெல்லமெல்ல நடந்து ரதிகேளி விலாசத்தின் மத்திவரையில் சென்றாள். சென்றவள் இருளில் திக்குத் திசை தெரியாமல் மோதிக் கொள்ளுகிறவள் போல, எதிரிலிருந்த மேஜையின்மீது முட்டிக்கொண்டு அதனால் உண்டான நோவைப்பொறுக்க மாட்டாமல் தவிப்பவள் போலத் துடித்து ஒருவாறு ஆத்திரமடைந்து, ''அடாடா! மணிக்கட்டில் மேஜை நன்றாகப் பட்டு விட்டது! முட்டாள் கழுதை விளக்கைக் கொளுத்த மறந்துபோய் விட்டான். அதனால் நமக்கு இப்போது நிரம்பவும் உபத்திரவமாக இருக்கிறது. இதுதான் கமலத்தினு

டைய அந்தப்புரம். அவள் இதோ பக்கத்திலிருக்கும் மெத்தைப் படிகளின் வழியாகக் கீழே இருந்து மேலே ஏறிவருவாள். வரும்போது இங்கே விளக்கில்லாமல் இருந்தால், அவளுக்கும் கஷ்டமாக இருக்கும். ஆகையால், நீ இந்த மேஜையின் பக்கத்திலிருக்கும் நாற்காலியின்மேல் உட்கார்ந்து கொள். இதோ ஒரு நிமிஷத்தில் நான் கீழே போய்வேலைக்காரனை அழைத்துக் கொண்டுவந்து விளக்கேற்றச் செய்கிறேன்'' என்றாள்.

அந்த வார்த்தையையும் உண்மை என்றே நம்பிய ஷண்முக வடிவு, ''இல்லை நான் இப்படி நின்றுகொண்டே இருக்கிறேன். நீங்கள் போய்விட்டுச் சீக்கிரமாக வந்துவிடுங்கள்'' என்றாள்.

உடனே லீலாவதி தேன்போல இனிமையாகவும் நயமாகவும் பேசத் தொடங்கி, ''ஏன் நீ அநாவசியமாக நிற்க வேண்டும்? இதோ அரை அடி தூரத்தில் சுகமான நாற்காலி நமக்காகப் போடப்பட்டிருக்கிறது; சௌக்கியமாக உட்கார்ந்து கொள்ளாமல், எதற்காக நிற்கிறது? உன்னுடைய அக்காளும் என்னோடு வரப்போகிறாள். அவள் வந்து நீ நின்று கொண்டிருப்பதைப் பார்த்தால் நான் உனக்குச் சரியானபடி உபசரணை செய்யவில்லை என்று என்மேல் வருத்தப்பட்டுக் கொள்வாள். அதற்கெல்லாம் நாமேன் இடங்கொடுக்க வேண்டும்'' என்று நிரம்பவும் கவலையோடும் கமலம் கோபித்துக் கொள்வாளோ என்று பயந்து பேசுகிறவள் போலவும் கூறி மெதுவாகவும் அன்பாகவும் உரிமையோடும் அவளை நகர்த்த, ஷண்முகவடிவினது தொடைப் பக்கம் அவ்விடத்திலிருந்த ஒரு நாற்காலியின் மேல் உராய்ந்தது. அந்த அற்ப விஷயத்தில் லீலாவதி மிதமிஞ்சி தனக்கு உபசாரம் செய்தது ஷண்முகவடிவினது மனதிற்குப் புதுமையாகத் தோன்றியது. ஆனாலும், அவள் கமலத்தின் வாய்க்குப் பயந்தே அவ்வாறு உபசரணை செய்கிறாள் என்று எண்ணி, ''சரி; நான் உட்கார்ந்து கொள்ளுகிறேன். உங்கள் மனசுக்குத்தான் ஏன்

வருத்தம் கொடுக்க வேண்டும். நீங்கள் போய் அக்காளையும் வேலைக்காரனையும் அழைத்துக்கொண்டே வந்து விடுங்கள். அவ்விடத்திலேயே இருந்து ஏதாவது விளக்கை எடுத்துக் கொண்டு வருவதும் உசிதமாகத் தோன்றுகிறது'' என்று கூறிய வண்ணம் மேஜையைப் பிடித்துக் கொண்டபடி மெதுவாக நடந்து அதன் பக்கத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியின் பக்கமாகப் போய் மேஜையைப் பார்த்தபடி, ''சரி; உங்கள் பிரியப்படி நான் நாற்காலியில் இதோ உட்கார்ந்து கொள்ளுகிறேன். நீங்கள் சீக்கிரமாகப் போங்கள்'' என்றாள்.

உடனே லீலாவதி, ''சரி; நான் போய் உன் அக்காளையும் அழைத்துக்கொண்டு விளக்கோடு வருகிறேன்'' என்று கூறிய வண்ணம் சிறிது தூரம் அப்பால் நடந்து ஓசையின்றி நின்றுவிட்டாள். அடுத்த நிமிஷம் ஷண்முகவடிவு குனிந்து நாற்காலியின்மேல் உட்கார்ந்து கொண்டாள். அந்தத் சதிகார நாற்காலியில் மறைந்து கிடந்த விசைகள் உடனே சடக்கென்று கிளம்பி, அவளது இடுப்பையும், கைகளையும், கால்களையும் பலமாக நாற்காலியோடு நாற்காலியாகச் சேர்த்து இறுகப் பிடித்து அழுத்திக் கொண்டன. திடீரென்று தனது சரீரத்தில் இடிகள் வீழ்ந்ததை உணர்ந்தவள் போலப் பெரிதும் கலவரமடைந்து தன்னை முற்றிலும் மறந்த இளந்தோகையான ஷண்முகவடிவு, ''ஐயோ! அம்மா! இது என்ன துன்பமோ தெரியவில்லையே! ஐயோ! அம்மா! இரும்பு வளையங்கள் இறுகப் பிடித்துக் கொண்டனவே! ஐயோ! மயக்கம் வருகிறதே! உயிர் போகிறதே!'' என்று ஓங்கி வீரிட்டுக் கூச்சலிட்டாள். அவளது மனதில் அபாரமான திகில் குடிகொண்டது. சிறிது தூரத்தில் இருளில் நின்றுகொண்டிருந்த லீலாவதி தான் நாற்காலியில் மாட்டிக் கொண்டவுடனே அவ்விடத்தைவிட்டு தடதடவென்று ஓட்டம் பிடித்துவந்த வழியாகவே திரும்பிப் போய்விட்டதையும் ஷண்முகவடிவு கண்டாள். அவள் ஒருகால் விளக்கை எடுத்துக்கொண்டு வருவதற்காகப் போயிருப்பாளோ

என்ற சந்தேகம் தோன்றினாலும், அப்படி இராதென்ற நிச்சயமும் உண்டாயிற்று. தான் அகப்பட்டுக்கொண்ட நாற்காலி ஏதோ விசை வைத்த நாற்காலி என்பது தனக்கே நன்றாகத் தெரிந்தது ஆகையால், அது லீலாவதிக்கும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும் என்றும், தெரிந்தே தன்னை அதில் மாட்ட வைத்திருக்கிறாள் என்றும் ஷண்முகவடிவு யூகித்தாள். அவள் ஏதோ வஞ்சக நினைவை வைத்துக்கொண்டு தான் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும்படி தன்னை உபசரித்தாள் என்பதும் அவளுக்குத் தெரிந்தது. அந்த விஷயத்தில் லீலாவதி களங்கமற்றவளாக இருந்தால், தனக்கு அபாயம் நேர்ந்தவுடனே அவள் இரக்கமும் விசனமும் கொண்டு பதறிப் போய்த் தன்னிடம் ஓடிவந்து என்ன நேர்ந்தது என்று கேட்டறிந்து கொண்டு தனக்கு அனுதாபமொழி கூறி, அந்த நாற்காலியின் விபரம் இன்னதென்று தனக்குத் தெரிவித்திருப்பதோடு, அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான மார்க்கத்தைச் சொல்லியோ செய்தோ இருப்பாள் என்ற நினைவு ஷண்முகவடிவினது மனதில் உதித்தது. அவ்வாறு அவள் செய்யாமல் கபடத்தனமாகவும் ஓசை செய்யாமலும் அவ்விடத்திலிருந்து ஓடியது முற்றிலும் சம்சயமான செய்கையாக இருந்தது. அதுவுமன்றி, அந்த இடம் கமலத்தின் அந்தப்புரமாக இருந்தால், அவ்விடத்தில் அப்படிப்பட்ட வஞ்சக நாற்காலி இருப்பதற்கு நியாயமே இல்லை என்றும், அல்லது, வேறு ஏதேனும் கருத்தோடு அந்த நாற்காலி போடப் பட்டிருந்தாலும், தான், அதன்மேல் உட்காராமல் லீலாவதி தடுக்கவேண்டியதே ஒழுங்காக இருக்க, அதைவிட்டுத் தன்னை உபசரித்து அதில் உட்காரவைத்தது அவளது சம்சயத்தை பலப்படுத்தியது. ஆகவே, லீலாவதி ஏதோ கபடமான கருத்தோடு தன்னை அழைத்து வந்து வேண்டுமென்றே அந்த நாற்காலியில் மாட்டிவிட்டாள் என்ற நிச்சயம் ஏற்பட்டது. உடனே அந்த மடந்தையின் மனதில் கோடானுகோடி எண்ணங்கள் உதித்தன. தன்னிடத்திலும் தனது அக்காளி

னிடத்திலும் நிரம்பவும் அன்பாகவும் பட்சமாகவும் இருப்பவர்களும், தங்களுடைய குடும்பத்திற்கே சவரக்ஷணை கர்த்தாவாக இருப்பவர்களுமான அவர்கள் தனக்கு அப்படிப் பட்ட தீங்கிழைக்க நினைப்பார்களோ என்ற வியப்பும் அபாரமாகப் பெருகியது. லீலாவதி தனது தமயனாருக்குத் தெரியாமல் அப்படிச் செய்திருப்பாளோ, அல்லது, அவரது அனுமதியின் மேலேயே அப்படிச் செய்திருப்பாளோ என்ற சந்தேகமும் தோன்றியது. அவர்கள் என்ன கருத்தோடு தன்னை அவ்விடத்தில் சிறைப்படுத்தி இருப்பார்கள் என்றும் அவளது மனம் சிந்தித்தது. அவர்கள் செய்த அந்தக் கொடிய சதியாலோசனைக்குத் தனது அக்காளான கமலமும் இணங்கி இருப்பாளோ என்ற சந்தேகமே பெரியதாக எழுந்து மனதைப் புண்படுத்தியது. தனது அக்காள் சற்றுநேரத்தில் அவ்விடத்துக்கு வருவாள் என்று லீலாவதி சொன்னபடி கமலம் தன்னிடம் வருவாளோ, அல்லது, தனது அக்காள் மாரியம்மன் கோவிலிலிருந்து திரும்பி வரவே இல்லையோ என்ற சந்தேகமும் தோன்றியது. அப்படித் தனது அக்காள் மாரியம்மன் கோவிலிலிருந்து வராதிருந்தால், லீலாவதியும் அவளது தமயனாரும் சேர்ந்து கமலத்திற்குத் தெரியாமல் அவ்வாறு சதி செய்திருப்பார்களோ என்ற எண்ணமும் உண்டாயிற்று. லீலாவதி அன்றைய பகலில் தன்னிடத்தில் சம்பாஷித்திருந்த காலத்தில் சந்தேகாஸ்பதமான சில வார்த்தைகளைச் சொன்னதும் அப்போது நினைவிற்கு வந்தது. தான் கலியாண சுந்தரத்தை அடியோடு மறந்து சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றும், கிழவர் தன்னைப் பார்த்த முதல் தன் மீது அளவற்ற பிரியமும், வாஞ்சையும் கொண்டுவிட்டதால், தன்னையும் இனி இவ்விடத்திலேயே வைத்துக் கொள்ள இச்சைப்படுவதாகவும் சொன்ன வார்த்தைகளின் உட்கருத்து இன்னதென்பது அப்போதே உள்ளபடி ஒருவாறு விளங்கியது. அந்தக் கிழவர் தன்மீது ஏதோ துன்மார்க்கமான எண்ணம் கொண்டு அதை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு லீலாவதியைத் தூண்டி

விட்டு தன் மனதைக் கலைக்கச் செய்து, அது பலியாமல் போனதைக் கண்டு அவ்வாறு தன்னை அந்த நாற்காலியில் மாட்டவைக்கும்படி அவளை ஏவி இருப்பாரோ என்ற நினைவு சிறுகச்சிறுக அவளது மனதில் தலைக்காட்டியது. ஆனாலும், அப்படிப்பட்ட கண்ணியமான பெரிய மனிதர் அத்தகைய அட்டூழியச் செய்கையில் இறங்கமாட்டார் என்றே அவளது மனதில் பட்டது. மறுபடியும் யோசித்துப் பார்த்ததில், அந்தப் பெரியவர் அதற்கு முன் தனது அக்காளையும் ஒருவேளை அப்படியே அந்த நாற்காலியில் மாட்டவைத்து, அவளைக் கெடுத்துத் தமது வசப்படுத்திக் கொண்டிருப்பாரோ என்றும், அதனாலே தான் தனது அக்காள் ஊருக்குத் திரும்பிவர வெட்கி அவ்விடத்திலேயே இருந்துவிட்டாளோ என்ற சந்தேகமும் தோன்றியது. அப்படி இருந்தாலும், தன்னையும் அதே கதிக்கு ஆளாக்கத் தனது அக்காள் இசைந்திருக்க மாட்டாள் என்றும், அவளுக்குத் தெரியாமல் அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம் என்றும் அவள் எண்ணினாள். அவ்வாறு அவளது மனதில் எண்ணிறந்த சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. ஆனாலும், அவள் எதையும் நிச்சயமாக நம்பக் கூடாதவளாக இருந்தாள். மற்ற விஷயங்களைப் பற்றி எல்லாம், அவள் பலவாறு சம்சயங் கொண்டாள். ஆனாலும், அவர்கள் இருவரும் ஆள் மாறாட்டம் செய்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் மாத்திரம் அவளது மனதில் தோன்றவில்லை. அந்தக் கிழவர்தான் சோமசுந்தரம்பிள்ளை என்றும், அந்தப் பெண் அவரது தங்கையான கண்ணம்மாள் என்றுமே அவள் அப்போதும் உறுதியாக நினைத்துக் கொண்டிருந்தாள். ஏனென்றால், கோலாப்பூரில் தனக்கு நிரம்பவும் உதவிசெய்து சேர்த்தவளான அம்மணிபாயி மோசக்காரி என்று அவள் கனவிலும் நினைத்தவள் அல்ல, ஆதலால், அவள் நல்ல உபகாரகுண முள்ள மனிஷி என்றே அவள் எப்போதும் உறுதியாக எண்ணி இருந்தாள். ஆகையால், அவளால் காட்டப்பட்ட மனிதரான அந்தக் கிழவர் சோமசுந்தரம்பிள்ளை அல்லவென்று சந்தேகம்

கொள்ள இடமில்லாது இருந்தது. அவர் சோமசுந்தரம் பிள்ளை என்றும், அந்தப் பெண் அவரது தங்கையான கண்ணம்மாள் என்றும் அவள் முதன்முதலில் எண்ணிய எண்ணம் அப்படியே இருந்தது. ஆகையால், ஆதிகாலந் தொட்டுத் தங்களது குடும்பத்தைக் காப்பாற்றிவரும் பரமதயாளுவான மனிதரும், தனக்குப் பாட்டனார் முறைமையில் இருக்கத் தகுந்தவரும், தனது அக்காளைப் அபிமான புத்திரியாக ஏற்றுக்கொண்டு தமது சகலமான சம்பத்தையும் கொடுக்க இணங்கியிருப்பவரும், தனது அக்காளால் கடிதங்களில் பலவாறு ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருந்தவருமான அந்தப் பெரிய மனிதர் தன் விஷயத்தில் துன்மார்க்கமான நினைவு கொள்வாரா; அல்லது, தன்னை அப்படிப்பட்ட கொடுமையான நாற்காலியில் மாட்டிவைக்க மனம்கொள்வாரா என்ற முக்கியமான கேள்வி எழுந்து தான் அவ்வாறு மாட்டிக் கொண்டிருப்பது கனவோ, அல்லது, நனவோ என்ற நினைவையே அப்போதும் உண்டாக்கியது.

அவ்வாறு அந்த அருங்குண மடமங்கை மட்டுக்கடங்கா மனக் குழப்பமும், அபாரமான திகிலும், அடக்கவொண்ணாத கொடிய சஞ்சலமும் கொண்டவளாய் இரும்புப் பொறியில் கழுத்தைக் கொடுத்து, அகப்பட்டுக் கொண்ட எலிபோலத் தத்தளித்து வீரிட்டுக் கதறிப் பெருங் கூக்குரலிட்டவளாய் இருக்க,அந்த நாற்காலியின் விசைகள் அவளது கைகள், கால்கள், இடுப்பு ஆகிய மூன்று இடங்களையும் அழுத்தி ஒன்றுக்குப் பாதியாக ஒடுக்கி இரத்த ஓட்டத்தை நிறுத்தி, அந்தந்த இடங்களை அப்படி அப்படியே துண்டித்து விடுமோ என்று அஞ்சும்படி செய்தமையால், அவள் சித்திரவதைப்பட்டு நரக பாதை அனுபவித்தவளாய் இருக்க, கால் நாழிகை சாவகாசம் கழிந்தது. லீலாவதியாவது வேறு எவராவது அவ்விடத்தில் வந்ததாகத் தோன்றவில்லை. அவளது அங்கங்களில் இரும்பு வளையங்கள் அழுத்திப் பிடித்திருந்த இடங்கள் கொப்பளித்து வீங்கி அப்படியே நொந்து வீழ்ந்துவிடும் போலாகிவிட்டன.

இரத்தம் அங்கங்கு தங்கிப் போகவே உடம்பு முழுதும் மரத்துப் போய்விட்டது. மயக்கமும் கிருகிருப்பும் தோன்றி அவளது சிரத்தை அசைக்கத் தொடங்கியது. மூளை கலங்கியது. அறிவு பிறழ்ந்து இருளடைய ஆரம்பித்தது. மூச்சு திணறிப் போய்விட்டது. 'ஐயோ! தெய்வமே! உயிர்போகிறதே! இந்த அக்கிரமத்தைக் கேட்பார் இல்லையா? ஈசுவரா! கண்கள் இருளுகிறதே! உயிர் துடிக்கிறதே! உடம்பெல்லாம் நெருப்பாய்ப் பற்றி எரிகிறதே! இது என்ன கொடுமையோ தெரியவில்லையே! ஒரு நாற்காலியில் இப்படிப்பட்ட விசைகளும் இருக்குமோ! என்ன கருத்தோடு இந்த மோசக் கருத்தான விசையைத் தயாரித்தார்களோ தெரியவில்லை! நான் யாருக்கு என்ன குற்றம் செய்தேன் என்பது எனக்கே தெரியவில்லை! என்னை இப்படிப்பட்ட மரண வேதனைக்கு ஏன் ஆளாக்குகிறார்களோ தெரிய வில்லையே! என் உயிர் போகுமுன் நான் என் அக்காளைப் பார்ப்பேனோ இல்லையோ தெரியவில்லையே! நான் இறந்து போனபிறகு, என் அத்தையை யார் காப்பாற்றப் போகிறார்கள்! நான் இறந்து போய் விட்டேன் என்பது என் அக்காளுக்குத் தெரிந்தாலாவது, அவள் அத்தையைக் காப்பாற்றுவாளே. அவளுக்கு என்னுடைய வரலாறெல்லாம் தெரியாமல் போய்விடுமோ என்னவோ தெரியவில்லையே! ஐயோ தெய்வமே! பரமதயாளுவும் நீதிவானுமான உன்னுடைய ராஜ்ஜிய பரிபாலனத்தில், ஏழை எளியவர்களை நிராதரவாகவா விட்டுவிட்டாய்! ஆகா! என்ன செய்வேன்?' என்று வாய்விட்டுப் பலவாறு பிரலாபித்துருகித் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்று தனது கைகளையும் கால்களையும் உடம்பையும் அசைத்து உலுக்கித் திமிரித் தத்தளித்து நெருப்பின் மேல் விழுந்து புரண்டு புரண்டு துவளும் புழுவைப்போலத் துடிதுடித்திருந்த தருணத்தில் யாரோ மனிதர் சந்தடி செய்யாமல் மெதுவாக நடந்து தான் இருந்த இடத்தண்டை நெருங்கி வருவதாக அவளுக்குத் தோன்றியது. உடனே அவள் திடுக்கிட்டுப் பெரிதும் கிலி கொண்டாள்.

அவளது உச்சி மயிர் அப்படியே விறைத்து எழுந்து நின்றது. ஒருவிதமான வேதனை உடம்பு முழுதும் பரவியது. அப்படி வருகிற மனிதர் தனக்கு எவ்விதமான தீங்கு விளைவிக்க எண்ணி வருகிறார்களோ என்ற பயம் அவளை நடுக்குவித்தது. அவளது வாய் குழறியது; இருந்தாலும் அவள் ஒருவாறு துணிவடைந்து, ''யார் அங்கே வருகிறது? கண்ணம்மாளா, அல்லது, வேறே மனிதரா? நீங்கள் யாராயிருந்தாலும் சரி; என்னை முதலில் இந்தக் கொடிய நாற்காலியை விட்டு விடுவியுங்கள். என் உயிர் போய்விடும்போல இருக்கிறது'' என்று கூறினாள்.

அவ்விடத்திற்கு வந்த மனிதர் தடதடத்த குரலோடு பேசத் தொடங்கி, ''பெண்ணே! இந்த இடம் இந்த மாளிகையின் நடுமத்தியில் இருக்கிறது. இதைச் சுற்றி நாற்புறங்களிலும் கனமான சுவர்களும் ஏராளமான விடுதிகளும் இருக்கின்றன. ஆகையால், நீ எவ்வளவு பலமாக ஓங்கிக் கூச்சலிட்டு உன் தொண்டையைக் கிழித்துக் கொண்டாலும், உன் குரல் இந்த இடத்துக்கு வெளியில் கேட்கவே கேட்காது. ஆகையால், உனக்கு வேறே யாராவது மனிதர் இங்கே வந்து உதவி செய்வார்கள் என்ற எண்ணத்தையே நீ விட்டுவிட வேண்டும். நீ இந்த நாற்காலியிலிருந்து தப்ப வேண்டுமானால், என்னால் தான் தப்பவேண்டுமே அன்றி, வேறல்ல. நான் உன்னைத் தப்ப வைக்க வேண்டுமானால், நீ என் பிரியப்படி நடந்து கொள்ள வேண்டும். என்ன சொல்லுகிறாய்?'' என்றார்.

அவர் பேச ஆரம்பித்தவுடனே ஷண்முகவடிவு அவர் அந்த வீட்டின் சொந்தக்காரரான கிழவர் என்பதைக் கண்டு கொண்டாள். அவர் பேசி முடித்தவுடனே அவரது சொற்களின் பயங்கரமான கருத்தை உள்ளபடி உணர்ந்துகொண்ட அந்த இளநங்கை அளவற்ற வியப்படைந்து பிரமித்து, அந்த மனிதர் பேசியதும், தான்அதைக் கேட்டதும் நிஜமாக இருக்குமோ என்று பெரிதும் சந்தேகித்து முற்றிலும் குழப்பம் அடைந்த வளாய், ''ஐயா! நான் தங்களால் காப்பாற்றப்பட்டு வரும் ஏழைக்

குடும்பத்தைச் சேர்ந்த அநாதைப் பெண்ணல்லவா? உங்கள் வயிற்றில் பிறந்த சொந்தப் பெண்ணுக்கும் எனக்கும் ஏதாவது பேதமுண்டா? அப்படி இருக்க, கொஞ்சமும் இரக்கமாவது தயாளமாவது இல்லாமல் என்னை இந்தக் கொடிய யந்திரத்தில் போட்டுச் சித்திரவதை செய்ய உங்களுடைய மனம் எப்படி இடம் கொடுத்ததோ தெரியவில்லையே! முதலில் நீங்கள் என்னை என்ன காரணத்தினால் இந்தக் கொடூரமான தண்டனைக்கு ஆளாக்கி னீர்களோ தெரியவில்லையே! உங்கள் விஷயத்தில் நான் மனசால் கூட அற்பமான அபசாரமும் செய்ததில்லை. நீங்கள் ஆதிகாலம் தொட்டு எங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறீர்கள். அதன்பிறகு, என் அக்காளை உங்களுடைய சொந்த மகள்போல பாவித்து உங்களுடைய சகலமான சம்பத்தையும் அவளுக்கே கொடுப்பதாகச் சொல்லி அவளை ஆதரித்து வருகிறீர்கள். எங்களுக்கு ஒரு தகப்பனார் முறையில் இருந்து இதுவரையில் காப்பாற்றி வரும் உங்களை நான் உயிர்த் தெய்வம் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன். நற்குண, நல்லொழுக்கத்தி லும், தயாளத்திலும், பிரபுத்துவத்திலும், செல்வத்திலும் செல்வாக்கி லும் உங்களைப் போன்றவர்கள் வேறு எவருமே இல்லை யென்று நான் உங்களைப் பற்றி நிரம்பவும் மதிப்பாகவும், பெருமையாகவும், நினைத்து அளவற்ற குதூகலமும் ஆனந்தமும் அடைந்திருக்கும் என்னை நீங்கள் இப்படிக் கொடுமையாகவும் இழிவாகவும் நடத்துவீர்கள் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவே இல்லை. ஐயா! இன்னமும் உங்க ளுடைய மனம் இளகவில்லையா? என் கைகளும் கால்களும் இடுப்பும் அப்படியே துண்டு துண்டாக அறுந்து விழுந்து விடும் போல் இருக்கின்றன. என் உயிர் துடிக்கிறது. என்னைத் தண்டித்தது போதும், தயை செய்து என்னை விட்டுவிடுங்கள்'' என்று முற்றிலும் உருக்கமாகவும் கல்லும் கரைந்து உருகும்படியும் நயந்து கெஞ்சி மன்றாடிக் கண்ணீர் விடுத்தாள்.

அவளது துக்ககரமான சொற்களைக் கேட்டு சிறிதும் இரக்கமடையாத மருங்காபுரி ஜெமீந்தார், "பெண்ணே! என்னைப் பற்றி நீ நிரம்பவும் புகழ்ச்சியாகப் பேசியதைக் கேட்பது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நான் உங்கள் குடும்பத்துக்கு ஏராளமான உதவிகளைச் செய்தவன் என்பதை நீ உணர்ந்து நன்றி விசுவாசம் பாராட்டுவதைக் கேட்பதும் என் மனசுக்குத் திருப்திகரமாக இருக்கிறது. நான் எப்போதும் உங்களுடைய க்ஷேமத்தையே நாடுகிறவன் என்பதை நீ நன்றாக அறிந்திருக்கிறாய் என்றே நான் நிச்சயமாக நம்புகிறேன். இனியும் நான் உங்களுடைய நன்மையையே நாடுகிறவன் என்பதை நான் உனக்குச் சொல்லவேண்டியதே இல்லை ஆகையால், நான் உன்னுடைய நன்மையை நாடி ஒரு விஷயம் உன்னிடம் தெரிவிக்கப் போகிறேன். நீ எவ்வித ஆட்சேபனை யும் செய்யாமல் அதன்படி நடந்துகொள்வதாக ஒப்புக் கொண்டால், இதே நிமிஷத்தில் நான் உன்னை இந்த நாற்காலியி லிருந்து வெளிப்படுத்தி விடுகிறேன். இந்த பயங்கரமான நாற்காலியிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்வது உன் கையிலேயே இருக்கிறது. என்ன சொல்லுகிறாய்?" என்று கூறியவண்ணம் அவளண்டை முன்னிலும், அதிகமாக நெருங்கி வந்தார்.

அவர் பேசிய வார்த்தைகளின் உட்கருத்தை ஒருவாறு யூகித்து உணர்ந்துகொண்ட ஷண்முகவடிவு முன்னிலும் பதினாயிரம் மடங்கு கவலையும் கலக்கமும் பிரமிப்பும் அடைந்தவளாய் நடுநடுங்கி, "ஐயா! என்ன இது! நீங்கள் சொல்லும் வார்த்தைகள் மகா விபரீதமான வார்த்தைகளாக இருக்கின்றனவே! என்னை இப்படி பலாத்காரம் செய்து ஏதோ ஓர் ஏற்பாட்டுக்கு நான் இணங்கும்படி செய்ய நீங்கள் முயற்சி செய்வதிலிருந்து, நீங்கள் பிரஸ்தாபிக்கப் போகும் விஷயம் நான் சுயேச்சையாக ஒப்புக்கொள்ளாத ஏதோ துர்மார்க்கமான விஷயம் எனத் தோன்றுகிறது. ஆகையால், அந்த விஷயம்

இன்னதென்று உங்களிடம் கேட்கக் கூட நான் பிரியப்பட வில்லை. ஒரு விஷயம் தவறென்று நான் நினைத்து அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுவேன் ஆனால், என்னை நீங்கள் பலாத்காரம் செய்தால் மாத்திரம் அதற்கு நான் இணங்கி விடுவேன் என்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்களா? அது ஒரு நாளும் பலியாது. நீங்கள் என்னிடம் பிரஸ்தாபிக்கப் போகும் விஷயம் ஒழுங்கானதாகவும் ஸ்திரீ தர்மத்துக்குப் பங்கமில்லாததாகவும் இருந்தால் நான் அதைச் சாதாரண மாகவே செய்திருப்பேன். அதற்காக என்னைப் பலாத்காரம் செய்யவேண்டும் என்பதே இல்லை. விஷயம் தகாததாக இருந்தால் நான் இந்த நாற்காலியிலிருந்தபடி என் உயிரையே விட்டாலும் விடுவேனே அன்றி என் மனசிலாவது, வாக்கினாலாவது, காரியத்தினாலாவது அதற்கு ஒருப்பட மாட்டேன்'' என்றாள்.

அதைக் கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார் புரளியாகவும் குறும்பாகவும் பேசத் தொடங்கி, ''என்ன ஷண்முகவடிவூ! இவ்வளவு முறுக்காகப் பேசுகிறாய்! பார்வைக்கு நீ பரமஸாதுவாக இருக்கிறாய். மனஉறுதியிலோ கற்பாறைபோல இருக்கிறாயே! நீ எவ்வளவுதான் மனவுறுதி உடையவளாக இருந்தாலும் அதெல்லாம் என்னிடம் பலியாது. நீ என்னுடைய பிரியப்படி நடந்துகொண்டுதான் தீரவேண்டும். முதலில் இந்த வீட்டுக்கு வந்த காலத்தில் உன் அக்காளும் இப்படித்தான் முறுக்காகப் பேசினாள். அவளுடைய இறுமாப்பையும் இந்த நாற்காலியின் மூலமாகத்தான் அடக்கி அவளை வழிக்குக் கொண்டு வந்தேன். அவள் அதன்பிறகு என்னை விட்டுப்போகாமல் இங்கேயே இருந்துவிட்டாள். இத்தனை பெரிய செல்வத்தையும் அனுபவிக்க அனுபவிக்க, நான் போகச் சொன்னால்கூட அவள் என்னைவிட்டுப் போகமாட்டாள் போலிருக்கிறது. என்னிடத்தில் அவள் அந்தரங்கத்தில் என்ன விதமான முறைமையோடு இருந்து வருகிறாள் என்பதை

அவள் உனக்கு இதுவரையில் தெரிவித்தே இருக்க மாட்டாள் என்று நினைக்கிறேன். அவள் அப்படி அடியோடு மாறிப் போயிருப்பதனாலேதான் மறுபடியும் திரும்பி உன்னிடம் வராமல் இங்கேயே இருந்துவிட்டாள். அதுபோல நீயும் இவ்விடத்திலேயே சௌக்கியமாக இருந்துவிடு. உன்னுடைய அத்தையையும் இங்கேயே வரவழைத்து விடுவோம். எனக்கு இருக்கும் அபரிமிதமான செல்வங்களுக்கும் இந்த அரண்மனைக்கு நீயும் உன் அக்காளுமே வாரிசுதாரிகளாக இருந்து சுயேச்சையாக அனுபவித்துக் கொண்டிருக்கலாம். என்ன சொல்லுகிறாய்! முடிவான வார்த்தையாகச் சொல்லி விடு; நீ அதிக நேரம் அந்த நாற்காலியில் இருப்பது எனக்கு ஸகிக்கவில்லை. உன் முடிவைத் தெரிந்து கொண்டு உடனே உன்னை வெளிப்படுத்துகிறேன்'' என்று நிரம்பவும் உருக்க மாகக் கூறினார்.

அதைக் கேட்ட ஷண்முகவடிவு, ''ஆகா! அப்படியா சங்கதி! என்னுடைய அக்காளையும் நீங்கள் இந்த நாற்காலியில் மாட்டி அவளைக் கெடுத்தீர்களா! அப்படியானால் நீங்கள் பரம யோக்கியர்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை! நீங்கள் அவளை நாற்காலியில் மாட்டியிருப்பீர்கள் என்பது உண்மை யாக இருக்கலாம். ஆனால், என் அக்காள் சாதாரணமான மனிஷியல்ல. அவள் தன்னுடைய உயிரை விட்டாலும் விடுவாளே அன்றி, உங்களுடைய பலாத்காரத்துக்கு அடங்கி தகாத காரியத்துக்கு ஒருநாளும் இணங்கக் கூடியவளே அல்ல என்பது நிச்சயமான விஷயம். நீங்கள் கண்ணியமான மனிதர்கள் என்று நினைத்தல்லவா நான் இந்த வீட்டில் வந்து தங்கி விட்டேன். நீங்கள் இவ்வளவு கேவல புத்தியுடைய கெட்டுப் போன மனிதர்களென்பது எனக்குக் கொஞ்சமும் தெரியாமல் அல்லவா போய்விட்டது. உங்களுடைய தங்கை இன்றைய தினம் பகலில் என்னிடம் பேசிய சில வார்த்தைகளிலிருந்தே என் மனசில் உங்களைப் பற்றி ஒருவித சந்தேகம்

உண்டாயிற்று. அது இப்போது நிஜமாகி விட்டது. இப்போது நடந்ததிலிருந்து நான் யோசிக்க யோசிக்க, நேற்று முதல் எனக்குச் சொல்லி வந்திருக்கும் முகாந்திரமெல்லாம் உண்மையாக இராதென்றே எண்ண வேண்டியிருக்கிறது. என் அக்காள் மாரியம்மன் கோவிலுக்குப் போயிருக்கிறாள் என்பதும், அவள் அவ்விடத்தில் மூன்று நாள் வரையில் தங்க நேர்ந்தது என்பதும், இன்று நீங்கள் அரண்மனையில் விருந்துண்டு மாரியம்மன் கோவில் போனதும், நீங்கள் ஓர் ஆளை முதலிலும், கமலத்தைப் பின்னாலும் அனுப்பிவிட்டு அவ்விடத்திலேயே இருந்து விட்டீர்கள் என்பதும், இங்கே கமலம் வந்து அம்மன் பிரஸாதத்தை உள்ளே வைத்துவிட்டு இந்த அந்தப்புரத்துக்கு வரப்போகிறாள் என்பதும், உங்களுடைய தங்கை விளக்கேற்ற போவதாய்ச் சொன்னதும் ஆகிய சகலமான விஷயங்களும் கட்டுப்பாடான விஷயம் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. கண்ணம்மாள், ஆரம்பத்திலிருந்து என்னிடம் நடந்து கொண்ட மாதிரியையும் கடைசியில் என்னை இந்தவிதமான மோசத்தில் மாட்டி விட்டதையும் பார்த்தால், அவளும் உங்களுடைய துர் நடத்தைகளுக்கு எல்லாம் உடந்தையாக இருப்பவள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் அந்தப் பெண் விதவையாம். உங்களுடைய நடத்தையைவிட அவளுடைய நடத்தைதான் என் மனசில் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. அவள் உங்களுடைய தங்கையென்று சொல்வதே தகாது. அவள் உங்களால் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் கேவலமான ஒரு தாசியென்று சொல்வதே பொருத்தம் உடையதாய் இருக்கும். கற்பு என்பது மருந்துக்காவது கொஞ்சம் அவளிடத்தில் இருக்குமானால் அவள் என் விஷயத்தில் இப்படிப்பட்ட மோசமும் சதியும் செய்தே இருக்கமாட்டாள். இப்படிப்பட்ட கடின மனசுடையவர்களான நீங்கள் என்னுடைய அக்காளைக் கொன்று இந்த வீட்டுக்குள் எங்கேயாவது புதைத்திருந்தாலும் இருப்பீர்கள்? போனது போகட்டும். இப்போதாவது எனக்கு

உண்மையைச் சொல்லுவீர்களானால், அதைக்கேட்டுக் கொண்டு நான் உடனே இந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு வெளியில் போய்விடுகிறேன். உண்மையில் இப்போது என்னுடைய அக்காள் எங்கே இருக்கிறாள்? நீங்கள் என்ன காரணத்தினால் எங்கள் குடும்பத்துக்குப் பண உதவி செய்து வந்தீர்கள்? என் அக்காள் திருவாரூரிலிருந்து இங்கே வந்தபின் நீங்கள் அவளை என்ன செய்தீர்கள்? அவளை இப்போது நான் அரை நாழிகை சாவகாசமாவது பார்த்து அவளுடன் பேச அனுமதி கொடுப்பீர்களா? இந்த விவரங்களை எல்லாம் உண்மையாகச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லுகிறது உண்மையென்றே வைத்துக் கொண்டாலும், நீங்கள் என் அக்காள் ஒருத்தியைக் கெடுத்தது ஒன்றே போதாதா? என்னையும் கெடுக்க வேண்டுமா? இன்னம் கால் நாழிகை சாவகாசம் கூட என் பிராணன் நில்லாது போலிருக்கிறது. ஆகையால், என்னை நீங்கள் உடனே விடுவிக்கா விட்டால், அக்கிரமமாக என்னைக் கொன்றபாவம் உங்களைத்தான் சாரும். ஆகையால், தயைசெய்து கேவலம் ஏழையிலும் பரம ஏழையான என் பேரில் நீங்கள் வர்மம் பாராட்டாமல் என்னை விடுவித்து உடனே என் அக்காளிடம் சேர்த்து வையுங்கள். உங்களுக்கு நிரம்பவும் புண்ணியமுண்டு. எனக்காவது என் அக்காளுக்காவது உங்களுடைய சொத்துக்களில் ஒரு துரும்பு கூடத் தேவையில்லை; நாங்கள் பிச்சை எடுத்தாவது மானமாக வயிறு வளர்க்கப் பிரியப் படுகிறவர்களே அன்றி, மானத்தையும் கற்பையும் விற்று குபேரசம்பத்தில் இருக்கவும் இஷ்டப்பட மாட்டோம் ஆகையால், நீங்கள் என்பேரில் கொண்ட துர் எண்ணத்தை இவ்வளவோடு விலக்கி விடுங்கள். உங்களுக்கு ஏராளமான ஐசுவரியம் இருக்கிறது. இந்த ஊரில் பூர்ணசந்திரோ தயத்தைப் போன்ற பொது ஸ்திரீகள் எத்தனையோ பேர் இருக்கலாம். அழகிலும் புருஷருடைய மனசை மயக்குவதிலும் வேறு சகலமான அம்சங்களிலும் அவர்கள்தான் பொருத்த மானவர்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் ஜீவனத்துக்கு

உங்களைப் போன்ற உல்லாஸ புருஷர்களையே நம்பியிருப்பார்கள் ஆகையால், நீங்கள் அப்படிப்பட்ட இடங்களை நாடிச் செல்வதே தகும். அன்றி எங்களைப்போன்ற குடும்ப ஸ்திரீகளை அநியாயமாகக் கெடுக்க முயன்று பெரும் பாவத்தை ஏன் சம்பாதித்துக்கொண்டு ரௌரவாதி நரகத்துக்குப் போக அருகராகிறீர்கள்? வேண்டாம்; இவ்வளவோடு என்னை விட்டு விடுங்கள். வேண்டுமானால் நீங்கள் விடுவித்த நிமிஷத்திலேயே நான் வெளியில் போய்விடுகிறேன்'' என்று கொஞ்சலாகவும், பயமுறுத்தலாகவும் விசைகளின் உபத்திரவத்தைச் சகிக்க மாட்டாமல் மரண வேதனைப் பட்டும் கூறினாள்.

அதைக்கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார் அவளது பிடிவாதத்தினால் தமது காமாந்தகார எண்ணம் நிறைவேறாமல் தாமதப் படுவதைக் கண்டு சிறிதும் பொறாதவராய் ஷண்முகவடிவின் பக்கத்தில் வந்து நின்று, ''நீ இந்நேரம் பேசியது எல்லாம் என் காதில் படவுமில்லை; இனி படப் போகிறதும் இல்லை ஆகையால், நீ இந்தப் பழைய கதையை எல்லாம் மூட்டையாகக் கட்டி தூரத்தில் வைத்துவிடு. உன்னைப்போல எத்தனையோ பெண்கள் இந்த நாற்காலியில் மாட்டிக்கொண்டு நீ பேசியதைவிட அதிக அழகாக வேதாந்தப் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். உன்னுடைய அக்காள் உனக்கு மேல் பத்து மடங்கு அதிக கோபமாகவும் ஆத்திரமாகவும் பேசினாள். முடிவில் எதுவும் பயன்படவில்லை. நீ யாருடைய சம்சாரமாகவாவது இருந்தால், நான் உன்னை உபத்திரவிக்கக் கூடாது. உன் கற்பை அழிக்கக் கூடாது. நீயோ கலியாணமாகாத கன்னிகாப் பெண், உன்மேல் பல புருஷருந்தான் ஆசைப் படுவார்கள்; உன்னைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள்; அப்படிச் செய்வது குற்றம் என்று யாரும் சொல்லமாட்டார்கள். கன்னிகாப் பெண்களுக்கும் தாசிப் பெண்களுக்கும் வித்தியாசமே இல்லை. ஆகையால், நீ அநாவசியமாகப் பேசி மனசை ஏன் அலட்டிக் கொள்ளுகிறாய்?

என் பிரியப்படி நடந்துகொள்ளுகிறேன் என்று ஒரு வார்த்தை சொல்; உடனே உன்னை இந்த உபத்திரவத்திலிருந்து விடுவிக்கிறேன். நீ அநாவசியமாகப் பேச்சை வளர்க்க வளர்க்க, உன்னுடைய விடுதலைதான் தாமதப்படுகிறது; நீ மாத்திரம் என்னுடனேயே இருந்து விடுவதாக ஒப்புக்கொண்டால், உன்னை நான் உன் ஆயிசுகாலபரியந்தம் கைவிடுகிறதில்லை; இவ்வளவு பெரிய மாளிகையையும் அபாரமான ஐசுவரியங் களையும் நீயே ஆண்டு அனுபவித்து இவைகளுக்கு எல்லாம் எஜமானியாக இருக்கலாம். சாஸ்திரப்படி உன்னை நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்றாலும், அதற்கு நான் சம்மதிக்கிறேன். கிழவனைக் கட்டிக்கொண்டால் பிறர் பரிகாசம் செய்வார்கள் என்று நீ ஒருவேளை வெட்கப்படுவாய். அப்படியானால், கலியாணச் சடங்கே இல்லாமல் மற்றப்படி நாம் புருஷனும் பெண் ஜாதியும் போலவே இருக்கலாம். உன் மனம் கோணாதபடி நான் நடந்துகொள்ளுகிறேன். என்ன சொல்லுகிறாய்? நன்றாக யோசித்து முடிவாகச் சொல்லிவிடு'' என்று நைந்து இளகி உருக்கமாக மொழிந்தார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு, ''ஐயா! நீங்கள் சொல்லுகிறது போல நடக்க எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆகையால், நீங்கள் என்னை அநாவசியமாக உபத்திரவிப்பதில் உபயோகமில்லை. தயை செய்து என்னை இந்த நாற்காலி யிலிருந்து விடுவித்து என் அக்காளிடம் கொண்டு போய் விட்டு விடுங்கள். உங்களுக்குப் பெருத்த புண்ணியம் உண்டாகும். நீங்கள் செய்த கொடுமையை எல்லாம் நான் மறந்து போகிறதும் அன்றி, உங்களைப்பற்றி அவதூறாக யாரிடத்திலும் பேசவும் மாட்டேன். இது உறுதியான வார்த்தை'' என்றாள்.

மருங்காபுரி ஜெமீந்தார், ''அதுதான் முடியாத காரியம். இவ்வளவு தூரம் நீ வந்து என் மனசை மயக்கி நான் பைத்தியம் கொள்ளும்படி செய்துவிட்டு, என்னை இதே நிலைமையில் விட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விடுவது என்றால், அது

சாத்தியமானதல்ல. நான் உன்னை இனி உன் ஆயுசுகால பரியந்தம் இந்த மாளிகையிலிருந்து வெளியில் போகவே விடப் போகிறதில்லை. எனக்கு நீ ஆசை நாயகி ஆகவே வேண்டும். இந்த விஷயத்தில் தானாகக் கனிந்து வருவதே நல்லதென்று நான் உன்னை இவ்வளவு தூரம் கெஞ்சி மன்றாடுகிறேன். ஆகையால், நீ வீணில் காலஹரணம் செய்யாமல் சம்மதம் என்று சொல்லிவிடு. இதுதான் கடைசியான வார்த்தை. நீ மேன் மேலும் உன்னுடைய போக்காகவே பேச ஆரம்பித்தால் நான் இதற்குமேல் வாயால் மறுமொழியே சொல்லப் போகிற தில்லை. நீ கட்டப்பட்டிருக்கும் இந்த நிலைமையிலேயே நான் உன்னை எப்படி வேண்டுமானாலும் மானபங்கப்படுத்தலாம்; நீ கொஞ்சமும் திமிரவும் முடியாது. அப்படி இப்படி நகரவும் முடியாது. ஆனாலும், அப்படிச் செய்ய எனக்கு இஷ்டமில்லை. அப்படிச் செய்வதிலும் கொஞ்சமாவது சுகமில்லை. ஆகையால் நான் உன்னை இந்த நாற்காலி யிலிருந்து விடுவித்து பலாத்காரம் செய்து நிமிஷத்தில் உன்னை அடக்கி விடுவேன். ஒருவேளை நீ முரட்டுத்தனம் செய்வாயானால், இந்த அறையைச் சுற்றிலும் முரட்டு வேலைக்காரிகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நொடியில் உள்ளே வந்து உன் கொழுப்பை அடக்கிவிடுவார்கள். ஆகையால், நீ முடிவாகச் சொல்லிவிடு. நீயாகப் பிரியப்பட்டு என் சொல்படி நடந்து கொள்ளுகிறாயா, அல்லது, நான் பலாத்காரமாகவே உன்னை அடக்கிக் கொள்ளட்டுமா? இப்போது நான் என்னுடைய பிரியத்தை நிறைவேற்றிக் கொள்ளாமல் உன்னை வெளியில் விடப்போகிறதும் இல்லை. உன் அக்காள் இருக்கும் இடத்தை நான் உனக்குக் காட்டப் போகிறதும் இல்லை. என்ன சொல்லுகிறாய்?'' என்று கூறிய வண்ணம் இரண்டோரடி தூரம் அப்பால் நகர்ந்து ஒரு விசையில் கையை வைத்தழுத்த, குபீரென்று விளக்குகள் பற்றிக்கொள்ள அந்த மாடம் முழுதும் பளிச்சென்ற பிரகாசம் நிரம்பியது. நாற்புறங்களிலும் நிறைந்திருந்த விநோதப் பஞ்சணைகளும், காமாதுரப் பதுமைகளும் படங்களும்,அற்புத அலங்காரங்

களும் ஷண்முகவடிவினது திருஷ்டியில் படவே, அவள் அப்படிப்பட்ட அசங்கியமான பொருட்களைப் பார்க்க வெட்கித் தனது கண்களை மூடிக்கொண்டாள். அபாரமான துக்கமும் அழுகையும் தோன்றி அவளது மனதை மீறி வெளிப்பட்டன. அவள் தனக்கு எதிரில் வந்து நின்ற கிழவரை நோக்கி மறுபடி நைவாகவும் பணிவாகவும் கெஞ்சத் தொடங்கி, ''ஐயா! நான் பரம அநாதை; திக்கற்றவள். என்மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு துராசை? நான் உங்களுடைய சொந்தப் பெண்ணுக்குச் சமமானவள். வேண்டாம்? இதோடு என்னை விட்டு விடுங்கள். உங்களுடைய எண்ணம் ஒருநாளும் பலிக்கப் போகிறதில்லை. நீங்கள் பலாத்காரத்தினால் என்னைக் கெடுத்துவிடலாம் என்று நினைக்கலாம். ஆனால், அதுவரை யில் நான் என் உயிரை வைத்துக் கொண்டிருக்கப் போகிற தில்லை. இப்போதே என்னுடைய உயிரில் முக்கால் பாகமும் போய்விட்டது. நீங்கள் என்னைப் பலாத்காரம் செய்ய ஆரம்பிக்கு முன் நான் வெகு சுலபமாக பிராணனை விட்டு விடுவேன்'' என்றாள்.

அதைக்கேட்ட கிழவர், ''நீயாகப் பார்த்துப் பிராணனை விட்டு விடுவது சுலபமென்று பார்த்தாயா? எங்கே பார்க்கலாம். நீ பிராணனை விடு. இதோ நான் உன்னை விடுவிக்கிறேன்'' என்று கூறியவண்ணம் நாற்காலியின் பின்புறமாகச் சென்று அவ்விடத்திலிருந்த ஒரு விசையை அழுத்த அவளைப் பிடித்துக் கொண்டிருந்த வளையங்கள் எல்லாம் சடக்கென்று விலகிக் கொண்டன. ஷண்முகவடிவின் உடம்பு மரத்துப் போயிருந்தது. ஆகையால், அவள் நாற்காலியைவிட்டு எழுந்திருக்க இயலவில்லை. கிழவர் தன்னை எவ்விதமான மானபங்கத்துக்கு ஆளாக்குவாரோ என்ற திகிலினால் அவளது ஸ்மரணை தவற ஆரம்பித்தது. மூளை குழம்பியது; சிரம் சுழன்றது. அவள் கண்களை மூடிக்கொண்டும் முன்னால் வளைந்து மேஜையின் மேல் சாய்ந்தாள். கிழவர் கரைகடந்த ஆசையோடும்

ஆவலோடும் பாய்ந்து அவளைக் கட்டிப்பிடித்துத் தூக்க முயல அந்தச் சமயத்தில் தடதடவென்று ஒரு விபரீதமான ஓசை கேட்டது. அங்கே போடப்பட்டிருந்த கட்டிலின் அடியிலிருந்து ஒரு மனிதன் குபீரென்று வெளிக் கிளம்பி வந்து, மருங்காபுரி ஜெமீந்தாரின் மீது பாய்ந்து, ஷண்முகவடிவை இழுத்து ஒரு பக்கமாகப் படுக்கவைத்துவிட்டு, கிழவரைக் குண்டுகட்டாகத் தூக்கி ஷண்முகவடிவு இருந்த நாற்காலியில் திடீரென்று விட்டெறிய, அதன் விசைகள் கலீரென்று கிளம்பி கிழவரை இறுகப் பிடித்துக் கொண்டன. மேற்சொன்ன விஷயமெல்லாம் மின்னல் மின்னி மறையும் நேரத்தில் நிகழ்ந்தது. ஆகையால், ஜெமீந்தார் பிரமித்து ஸ்தம்பித்து திகிலே வடிவாய் நிமிர்ந்து அப்படி வந்த மனிதன் யார் என்று பார்க்க, அந்த மனிதன் ஆஜானுபாகுவாய் கடோத்கஜன் போல பிரம்மாண்டமான ஸ்வரூபத்தோடு காணப்பட்டான். அவன் தனது முகத்தின் அடையாளம் தெரியாதபடி ஒரு குல்லாவை அணிந்து கொண்டிருந்தான் ஆகையால், அதில் விடப்பட்டிருந்த இரண்டு துளைகளின் வழியாக அவனது கண்கள் மாத்திரம் வெளியில் தெரிந்தனவே அன்றி, முகத்தின் மற்ற பாகம் குல்லாவில் மறைந்திருந்தது. அந்த விகார ரூபத்தைக் கண்ட கிழவர் மதிமயங்கிக் கதிகலங்கி பிரமித்து ஸ்தம்பித்து அசைவற்று ஆடுதிருடினகள்ளனைப் போல விழித்து நிரம்பவும் வெட்கி அப்படியே இடிந்து உட்கார்ந்து போனார்.

## 34- வது அதிகாரம்

# மர்மத்தின் மேல் மர்மம்

கோலாப்பூர் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த கலியாண சுந்தரத்தின் மனநிலைமையை உள்ளபடி விவரித்துச் சொல்வது நிரம்பவும் அரிதான காரியம் என்றே சொல்ல வேண்டும். இந்திராபாயி என்ற பொய்ப் பெயருடன் தனது அறைக்கு வந்து

பலவிதமான ஸாகஸங்கள் செய்து இரவு முழுதும் தன்னிடம் போராடிய ஸ்திரீ கடைசியில் அபிராமியாக மாறியதையும், அதே காலத்தில் போலீஸ் கமிஷனர், ஷண்முகவடிவு முதலியோர் அறையின் கதவைத் திறந்து கொண்டு வந்ததையும், தான் அபிராமியை நோக்கிக் கூறிய வார்த்தைகளுக்கு தான் கருதாத வேறு அர்த்தத்தைப் பாராக்காரன் உண்டுபண்ணியதையும், அவனும் அபிராமியும் ஒரேவிதமாகப் பேசி, சகலமான குற்றங்களையும் தன்மீது சுமத்தியதையும், அதைக்கேட்ட ஷண்முகவடிவு மயங்கிக் கீழே வீழ்ந்ததையும் கண்ட கலியாண சுந்தரம் அப்படியே பிரமித்து ஸ்தம்பித்து வாய் திறந்து பேச மாட்டாதவனாய் நிலைகலங்கி நின்று விட்டான். அவன் நிரம்பவும் கூர்மையான புத்தி வாய்ந்தவன் ஆதலால், உண்மை இன்னதுதான் என்பது உடனே அவனது மனதிற்குப் புலப்பட்டுவிட்டது. தன்னை அந்த ஊர்ச் சிறைச்சாலையில் அடைப்பதற்குக் காரண பூதர்களாக இருந்த தாதிப் பெண்கள் மூவரும் தன்னை அவ்வளவோடு விடாமல் மேன்மேலும் சதியாலோசனை செய்து, தன் மனதையும், தேக பரிசுத்தத்தையும் கெடுத்து, தனது கருத்து நிறைவேறாமல் செய்துவிட வேண்டும் என்ற உறுதியோடு, அந்த ஊர்ப் போலீஸ் கமிஷனரினது சிநேகத்தை எவ்வாறோ சம்பாதித்துக் கொண்டு அத்தகைய பல ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது எளிதில் விளங்கியது. மூத்தவர்களான அம்மாளு, தனம் ஆகிய இருவரும் அதற்குமுன் தன்னிடம் பலவாறு சாகசக்கியம் செய்து பார்த்துத் தோற்றுப் போனமையால், அவர்கள் அப்போது அபிராமியை அனுப்பியிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கியது. அவர்களது கருத்து இருவகைப்பட்டதென்பதும் எளிதில் தெரிந்தது. அவன் தனிமையாக அடைபட்டிருந்த இடத்தில் இருளில் தோன்றி, அதற்குமுன் பழகி அறியாத புது மனுஷிபோல நடித்து அவனது மனதை மயக்கி சாம, தான, பேத, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களையும் உபயோகப்படுத்தி எப்படியாவது அவனது ஏகபத்தினி விரதத்தைக் கெடுத்து

அவனை வசப்படுத்திக்கொண்டு அதன்பிறகு தான் இன்னாள் என்பதை வெளியிட்டு அவன் பூனாவுக்குப் போகாமலும், இளவரசரது பட்டமகிஷியின் விஷயத்தில் தலையிடாமலும் செய்து விடவேண்டும் என்பது அவர்களது முக்கியமான கருத்து என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அந்தக் கருத்து நிறைவேறாவிடில் தனது ஆருயிர்க் காதலியான ஷண்முக வடிவைக் கொணர்ந்து காட்டி, தான் செய்தது எல்லாம் தவறு என்று அவள் எண்ணிக் கொள்ளும்படி சூழ்ச்சி செய்து விட்டால், தான் பூனாவுக்குப் போகாமல் ஷண்முகவடிவின் தப்பான எண்ணத்தை மாற்றி அவளது பிரியத்தை மறுபடியும் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு ஊருக்குத் திரும்பிப் போய்விடலாம். அல்லது, ஷண்முகவடிவை மறுபடியும் தான் அடைவது சாத்தியமில்லை என்பதைக் கண்டு, தான் அபிராமியினது நட்பை நாடலாம் என்ற கருத்தோடு அவர்கள் ஷண்முகவடிவினிடத்தில் ஏதோ விபரீதமான விஷயங்களைத் தெரிவித்து அவளை அந்த அசந்தர்ப்ப வேளையில் அழைத்து வந்திருக்க வேண்டும் என்பதும் அவனுக்கு உடனே விளங்கிவிட்டது. அந்தத் தாதிப் பெண்கள் தனது சகலமான வரலாறுகளையும், ஷண்முகவடிவின் இருப்பிடம் முதலிய விஷயங்களையும் அறிந்து நிரம்பவும் தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் காரியங்களை நடத்தி இருக்கிறார்கள் என்ற எண்ணம் கலியாண சுந்தரத்தின் மனதில் உதித்தது. எல்லோரும் கோலாப்பூருக்கு வந்தபிறகு, தான் அம்மாளுவினிடத்தில் தனியாகப் பேசி, பட்டமகிஷியின் விஷயத்தில் அவர்கள் செய்துள்ள சதியாலோசனை நிறைவேறாமல் தடுப்பதற்காகவே தான் வந்திருப்பதாகக் கூறி, அவளது மனதை மாற்ற முயன்ற காலத்தில், அவள் மற்றவர்களுடன் கலந்து யோசித்துத் தங்களது முடிவைத் தெரிவிப்பதாக வாக்களித்துப் போனபிறகு அவளும் மற்றவர்களும் சேர்ந்து தஞ்சைக்குக் கடிதம் எழுதி, அவ்விடத்திலுள்ள மனிதரது முயற்சியால், கோலாப்பூர் போலீஸ் கமிஷனரினது நட்பையும்

உதவியையும் பெற்று, தன்னை அற்ப முகாந்திரத்தின் மேல் சிறைப்படுத்தி, தனது சொந்தக் கடிதங்களை அபகரித்து, அவற்றின் மூலமாகத் தனது வரலாறுகளை எல்லாம் உணர்ந்து ஷண்முகவடிவின் இருப்பிடத்தையும் அறிந்துகொண்டு, ஏதோ தந்திரம் செய்து, அவளை அழைத்து வந்திருக்கிறார்கள் என்றும் கலியாண சுந்தரம் யூகித்துக் கொண்டான். தான் சிறைப்படுத்தப் பட்ட பின் ஒரு மாதத்திற்கு அதிக காலம் கழிந்து விட்டது என்பது அவனுக்கு நன்றாக நினைவிருந்தது ஆகையால், அந்தத் தாதிப் பெண்கள் மூவரும் அதுவரையில் பூனாவுக்குப் போகாமல் கோலாப்பூரிலேயே இருந்திருப்பார்களா, அல்லது அபிராமியை மாத்திரம் அந்த ஊரில் நிறுத்திவிட்டு மற்றவர் பூனாவுக்குப் போய்த் தங்களது சதியாலோசனையை அந்நேரம் நிறைவேற்றி இருப்பார்களா என்ற சந்தேகமும் பெரும் கவலையும் ஒருபுறத்தில் எழுந்து வதைத்தன. அதைக் காட்டிலும் பதினாயிர மடங்கு அதிக பலமாக இன்னொரு கவலை எழுந்து அவனது மனதைக் கலவரப்படுத்தியது. அவ்விடம் வந்த நிஷ்கபடியான ஷண்முகவடிவு தானும், அபிராமியும் இருந்த சந்தேகாஸ்பதமான நிலைமையைக் கண்டும் பாராக்காரனும் அபிராமியும் சொன்ன கட்டுரைகளைக் கேட்டும் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்ததைக் காண, அவள் தன்னை உண்மையிலேயே குற்றவாளி என்று நிச்சயித்துக் கொண்டாள் என்பது கலியாண சுந்தரத்தின் மனதில் உடனே பட்டுவிட்டது. தனக்கு விரோதமாக அத்தனை சாட்சியங்கள் நிதரிசனமாக ஏற்பட்டிருக்க, அவைகளைப் பொய்யென்று ருஜுப் படுத்துவதும், தான் நிரபராதி என்று ஸ்தாபிப்பதும் அசாத்தியமான காரியங்கள் என்பது அவனுக்கு உடனே தெரிந்துவிட்டது ஆகையால், அந்த விஷயத்தில் அவனது மனதில் சகிக்க வொண்ணாத பெருத்த கவலையும் அச்சமும் ஏக்கமும் பொங்கி எழுந்தன. அவனது அங்கங்களெல்லாம் பதறிப் பறந்தன. தனக்கு நிகர் தானே என்று மதிக்கத் தக்க ஒப்பற்ற மாணிக்கமாகிய ஷண்முக வடிவைத் தான் இனி

முடிவாக இழந்து விட்டோம் என்றும், அவளுக்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் அன்றோடு தீர்ந்துபோய் விட்டது என்றும் அவன் எண்ணிவிட்டான். தான் துன்மார்க்க நினைவும், துஷ்டச் செய்கையும், மூர்க்க குணமும் நிறைந்த காமாதுரன் என்று ஷண்முகவடிவு நினைத்துக் கொள்வாள் என்றும், அன்றோடு தனது மானம் அடியோடு அழிந்து போய்விட்டது என்றும் அவன் நிச்சயமாக எண்ணிக் கொண்டான். அந்த மகா விபரீதமான நிலைமையில் தான் ஷண்முகவடிவோடு பேசுவதா, அல்லது, என்ன செய்வது என்பதை உணராதவனாய் அவன் இரண்டொரு நிமிஷ நேரம் நிலைகலங்கி உடல் குன்றி அறிவு மயங்கி நிற்க, அந்தச்சமயத்தில் அவ்விடத்தில் தோன்றிய ஒரு வேலைக்காரி ஷண்முக வடிவைத் தூக்கி எடுக்க முயன்றாள். தன்னுணர்வற்று மூர்ச்சித்து நிராதரவாகக் கிடந்த தனது ஆருயிர்க் காதலியை அன்னியர் தூக்கிக்கொண்டு போக முயன்றதைக் காண அவனுக்குச் சிறிதும் சகிக்கவில்லை ஆகையால், தான் போய் அவளைத் தூக்கி எடுத்து மயக்கம் தெளிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கலியாணசுந்தரம் தனது அறையைவிட்டு விரைவாக வெளியில் வர எத்தனிக்க, சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த அபிராமி என்ற தாதிப் பெண், சடேரென்று பின்னால் வந்து அவனைக் கட்டி இறுகப் பிடித்துக்கொண்டு, ''எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? இன்னொரு பெண்ணைப் பார்த்தவுடனே என்னுடைய ஞாபகமெல்லாம் மறந்து போய்விட்டதா? இவ்வளவு தூரம் என்னைக் கெடுத்துவிட்டு சுலபமாகத் தப்பித்துக் கொண்டு போய்விடப் பார்க்கிறீர்களா? எனக்கு வழி சொல்லிவிட்டுப் போங்கள். நான் உங்களை இலேசில் விட்டுவிடுவேன் என்று நினைத்துக் கொண்டீர்களா? இப்போது இங்கே வந்த பெண் உங்களுடைய பழைய சிநேகிதை போலிருக்கிறது. இப்போது என்னைக் கெடுத்தது போல நீங்கள் இன்னும் எத்தனைப் பேரைக் கெடுத்திருக்கி றீர்களோ தெரியவில்லையே! எப்படி இருந்தாலும் நான் உங்களை இனி விடவே போகிறதில்லை. எனக்கு நீங்கள்

ஏதாவது வழி செய்துதான் தீரவேண்டும். இங்கே நடந்த விஷயங்களையெல்லாம் பாராக்காரர் போலீஸ் கமிஷனர் முதலிய எல்லோரும் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். ஆகையால், நீர் பொய்யான முகாந்திரம் எதையாவது சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். நீங்கள் எந்த நியாயஸ்தலத்துக்குப் போனாலும் தப்ப முடியாது. எந்த இடத்திலும், நான் என்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லி இங்கே இருக்கும் மனிதர்களை சாட்சியாக வரித்தால், எல்லோருக்கும் உண்மை விளங்கிப்போம். ஆகையால், நீங்கள் இனி என்னை ஏமாற்றி விட்டுப் போக முடியாது. என்ன சொல்லுகிறீர்கள்? இவ்வளவு தூரம் நீங்கள் என்னைப் பலாத்காரம் செய்து என் கற்பை அழித்தபிறகு, என்னை அநாதையாக விட்டுப்போனால், நான் இனி எப்படி ஜீவனம் செய்வேன்? இனி எந்தப் புருஷர் என்னை ஏற்றுக்கொள்வார்? ஆகையால், நீங்கள் என்னைக் கலியாணமாவது செய்து கொள்ளுங்கள், அல்லது என்னுடைய ஆயிசுகால பரியந்தம் என்னை உங்களுடைய வைப்பாட்டியாகவாவது வைத்துக் கொள்ளுங்கள். இந்த இரண்டில் ஒன்றை நீங்கள் செய்யாத வரையில் நான் உங்களைவிடப் போகிறதில்லை. நீங்கள் என்னை இப்படியே கொன்று போட்டுவிட்டாலும், அதுவும் எனக்குச் சம்மதமே. என்னை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம். ஆனால், நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து மாத்திரம் போக நான் விடமாட்டேன்'' என்று கூறிய வண்ணம் கலியாண சுந்தரத்தைப் பலமாக அறைக்குள் இழுத்தாள்.

அதற்குள் போலீஸ் கமிஷனர், வேலைக்காரியினது உதவியால் ஷண்முகவடிவைத் தூக்கி அப்புறப்படுத்த எத்தனிக்க, அங்கிருந்த பாராக்காரன் கலியாணசுந்தரமும் அபிராமியும் இருந்த அறையின் வாசல்கதவை மூடி வெளியில் தாளிட்டு விட்டான். அதன்பிறகு போலீஸ் கமிஷனர் முதலியோர் ஷண்முகவடிவை என்ன செய்தார்கள் என்பதாவது,

எங்கே கொண்டு போனார்கள் என்பதாவது கலியாண சுந்தரத்திற்குத் தெரியாமல் போய்விட்டது. அபிராமி முதலியோர் தன்மீது அபாண்டமான பழி சுமத்தியதையும், முடிவில் அவள் தன்னைப் பிடித்துக்கொண்டு தனக்கு வழி சொல்லவேண்டும் என்று வற்புறுத்தியதையும் கண்ட கலியாண சுந்தரம் கட்டுக்கடங்கா வீராவேசமும், பதை பதைப்பும், வெட்கமும், துக்கமும் கொண்டவனாய் அந்த அரக்கியை அப்படியே குத்திக் கொன்று வீழ்த்தி விடவேண்டும் என்ற நினைவைக் கொண்டான். ஆனாலும், அவள் கேவலம் அபலையான ஒரு ஸ்திரீயென்ற எண்ணம் குறுக்கிட்டுப் போராட்டியது. ஆகையால், தான் அவளது தேகத்திற்கு எவ்விதமான தீங்கும் செய்வது ஆண்மைத்தனமல்ல என்ற நினைவினால், அவன் அரும்பாடுபட்டு தனது கடுஞ்சினத்தை அடக்கிக் கொண்டான். முற்றிலும் கட்டுக் கதையாகவும் அபாண்டமாகவும் பேசி மானம், லஜ்ஜை முதலிய சகலமான ஸ்திரீ தர்மங்களையும் துறந்து கேவலம் மிருகம் போல நடந்து கொள்ளும் அந்தப் பெண்ணிடம் தான் வாக்குவாதம் செய்வது கண்ணியக்குறைவென்று அவனது மனம் நினைத்தது. ஆகவே, அவளது பிடியிலிருந்து தன்னை எப்படி விடுவித்துக் கொள்வது என்பதை அறியாதவனாய்ப் பெரிதும் கலங்கிக் குழம்பிப் பதைபதைத்து அசைவற்று நின்றான். அந்த நிலைமையில் சிறைச்சாலையின் அதிகாரியும் பாராக்காரர்களும் தனக்கு உதவி செய்யாமல், அந்தப் பெண்ணுக்கு அனுகூலமான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்துப்போனது அவனுக்கு ஆச்சரியத்திலும் பரம ஆச்சரியமாகத் தோன்றியது. அவன் ஒன்றும் தோன்றா தவனாய்க் கலக்கமும் குழப்பமுமே வடிவாக அப்படியே அரைக்கால் நாழிகை நேரம் நின்றான். அந்த இரவில் நெடு நேரமாக அவளோடு போராடியதாலும் திடீரென்று ஷண்முக வடிவைக் கண்டதாலும், அதன்பின்னர் நிகழ்ந்த விபரீத சம்பவங்களாலும் ஆரம்பம் முதல் அந்தம் வரையில் அவனது

மனத்தில் பெருத்த சண்டமாருதம் போல் எழுந்து நெடுநேரமாக வதைத்த வீராவேசமும் பெருங்கோபமும், ஆச்சரியமும், அவமானமும் விசனமும் அவனது மனம் தாங்கக்கூடிய வரம்பை மீறி அபாரமாகப் பொங்கி எழுந்து கொண்டே இருந்தன. ஆகையால், அவனது மனம் தளர்ந்து சோர்வடைந்து இடிந்து முற்றிலும் உணர்வற்று உட்கார்ந்து போய்விட்டது. ஆகையால், திடீரென்று அவனது அறிவு பிறழ்ந்தது. கண்கள் இருளடைந்தன. மூளை கலங்கியது. சிரம் சுழன்றது. அதற்குமேல் அவ்விடத்தில் என்ன நிகழ்ந்தது என்பது அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது. அவனது உடம்பு நின்றபடி வேரற்ற மரம்போல அப்படியே சடேரென்று தரையில் சாய்ந்து பிணம்போலாகிவிட்டது.

★ ★ ★ ★

மறுபடி கலியாணசுந்தரம் தனது சுய உணர்வை அடைந்து கண்களை விழித்துப் பார்த்தகாலத்தில் அவன் இருந்த இடத்தில் அபிராமி காணப்படவில்லை. அந்த இடம் அவன் அதற்கு முன் அடைபட்டிருந்த அறையைப் போல் இல்லாமல், நிரம்பவும் வசதியானதாகவும், பெரிதாகவும் காணப்பட்டது. அவ்விடத்தில் தான் ஒரு சயனத்தின்மீது படுத்திருப்பதையும், தனக்கு அருகில் ஒரு வைத்தியரும், வேலைக்காரி ஒருத்தியும் ஆயத்தமாக இருந்து தனக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்ததையும், கலியாணசுந்தரம் உணர்ந்து அதிக வியப்போடு நாற்புறங்களிலும் தனது பார்வையைச் செலுத்தினான். பழைய நினைவுகள் எல்லாம் உடனே அவனது மனதில் ஆற்று வெள்ளமெனப் பொங்கி எழுந்தன. ஒரு நொடியில் மனதை மயக்கி வசீகரப்படுத்தத் தக்க அபூர்வ அழகு வாய்ந்தவளாகத் தோன்றிய அபிராமி பெரும் பேய் போலத் தன்னைப் பிடித்துக் கொண்டு தான் எந்த வழியிலும் போக இயலாமல் தத்தளித்துத் தடுமாறும்படி செய்து ஓர் இரவு முழுதும் தன்னைச் சித்திரவதை செய்து உயிரோடு கொன்றதை நினைக்க நினைக்க, அப்போதும்

அவனது உடம்பு கிடுகிடென்று ஆடியது. ஆனாலும், அவள் தன்னை எப்படி விட்டுப் போனாள், எங்கே போனாள், மறுபடியும் திரும்பி வந்து விடுவாளோ என்பது போன்ற பல ஐயங்கள் அவனது மனதில் எழுந்து அவனைச் சஞ்சலத்தில் ஆழ்த்தின. அவன் தனக்கு அருகில் உட்கார்ந்திருந்த வைத்தியரிடத்தில் மிருதுவாகப் பேசத் தொடங்கி, தான் பத்து தினங்களாய் ஸ்மரணைதப்பி கடுமையான ஜுரநோய் கொண்டு பிதற்றிப் புரண்டு கொண்டிருந்ததாகவும், வைத்தியர் வேளைக்கு வேளை மருந்து கொடுத்துத் தனது ஜுரத்தை நிவர்த்தித்துப் பிரக்ஞையைத் தெளிவித்ததாகவும், அப்போதே தான் கண்களைத் திறந்து கொண்டு விழித்துப் பார்த்ததாகவும் தெரிந்துகொண்டான். அவன் உடனே ஷண்முகவடிவு எங்கே இருக்கிறாள் என்றும் என்ன நிலைமையில் இருக்கிறாள் என்றும் அறிய ஆவல் கொண்டு அந்த விவரங்களைப்பற்றி வைத்தியரிடம் கேட்க, அவர் தமக்கு அந்த விவரம் எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார்.

அதைக்கேட்டவுடனே அவனது மனம் நிரம்பவும் தவித்து வேதனையில் ஆழ்ந்தது. தனது ஆருயிர்க் காதலியான ஷண்முகவடிவு தன்னிடம் அருவருப்பும் கோபமும் அடைந்து தன்னை விலக்கிக் கைவிட்டிருப்பாளோ, அல்லது அவள் அப்போதும் தன்னிடம் பட்சம் மறவாதிருக்கிறாளோ என்ற எண்ணம் தோன்றி அவனது மனதில் பெருத்த ஏக்கமும் கலக்கமும் குடிகொள்ளச் செய்தன. அவள் தன்னிடம் வைத்திருந்த பழைய மதிப்பையும் வாஞ்சையையும் மறவாதிருப்பாள் ஆனால், தான் பத்து தினங்களாக நோய்கொண்டு ஸ்மரணை தப்பி இருப்பதை உணர்ந்து சும்மா இருக்க மாட்டாளென்றும் தனது உயிர் போவதானாலும் அதை இலட்சியம் செய்யாமல் அவள் இரவு பகல் தனக்கு அருகிலேயே இருந்து தன்னைக் காப்பாற்ற முயன்றிருப்பாள் என்றும் அவன் நினைத்தான். தான் நோய் கொண்டிருப்பதை

அறிந்தும் அவள் தன்னைக் கைவிட்டு விட்டாளோ, அல்லது, அவளுக்குத் தனது உண்மையான நிலைமை இன்னதென்பது தெரிந்திருக்காதோ, அல்லது, அவள் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டுத் தனது சொந்த ஊருக்கே போய்விட்டாளோ என்று அவன் பலவாறு எண்ணமிட்டு ஏங்கினான். அவளது மனம் முற்றிலும் முறிந்து போவதற்குள் தான் அவளைக் கண்டு உண்மையான சங்கதிகளை எல்லாம் அவளிடம் தெரிவித்து அவளது மனதின் ஐயங்களை நிவர்த்திக்க வேண்டும் என்ற அவாவும் ஆவலும் அவனது மனதில் எழுந்து துடித்தன. ஆனாலும், அவளைப்பற்றிய விவரம் எதையும் தான் அறிந்துகொள்ள இயலாமல் இருந்ததும், தான் உடனே படுக்கையை விடுவித்து எழுந்து நடக்க இயலாமல் இருந்ததும் அவனை அளவற்ற துயரத்தில் ஆழ்த்தின. தான் நோய் கொண்டு படுத்திருந்த பத்து நாட்களில் என்றைக்காயினும் ஷண்முகவடிவு அவ்விடம் வந்து தன்னைப் பார்த்துவிட்டுப் போனாளோ என்று அவன் வைத்தியரிடம் கேட்க, அவர் அவ்விடத்தில் தம்மையும் தாதியையும் தவிர வேறு எவரும் வரவில்லை என்று சொல்லிவிட்டார். அதைக்கேட்ட நமது யௌவன வீரனது மனம் முன்னிலும் அதிகரித்த ஏக்கமும் கலக்கமும் கொண்டு ஆழ்ந்துபோனது. தானும் அபிராமியும் சிறைச்சாலைக்குள் தனியாக இருந்ததை ஷண்முகவடிவு கண்ட காலத்தில், அந்த விகாரக் காட்சியைக் காண மாட்டாமலும், தான் உண்மையில் துர்நடத்தையில் இறங்கிவிட்டதாக நினைத்தும் அந்த இள நங்கை கலங்கிக் குழம்பி ஸ்மரணைதப்பிக் கீழே வீழ்ந்தது அப்போதே கண்ணெதிரில் நிகழ்வதுபோல அவனது அகக் கண்ணில் புலனாகிக் கொண்டிருந்தது. அவள் ஒருகால் அப்படியே உயிர் துறந்திருப்பாளோ, அல்லது, அப்போதும் நோயாகப் படுத்திருப்பாளோ, அல்லது குணமடைந்து தனது ஊருக்கே போயிருப்பாளோ என்று அவன் பலவாறு சிந்தனை செய்தான். அந்தப் பத்து நாட்களில் அவளது மனம் எவ்வளவு தூரம் மாறிப் போயிருக்குமோ என்ற நினைவும் தோன்றி

வருத்தியது. தான் எப்படியாவது யாரிடத்திலாவது விசாரித்து ஷண்முக வடிவினது நிலைமை, அவள் இருக்குமிடம் முதலிய விவரங்களை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவளுக்கு ஒரு கடிதம் எழுதி கோலாப்பூருக்குத் தான் வந்த முதல் அதுவரையில் நிகழ்ந்த சகலமான விஷயங்களையும் அந்தக் கடிதத்தின் மூலமாக அவளுக்குத் தெரிவித்தால் அவள் எப்படியும் அவைகளை நம்பித் தன்மீது கொண்டுள்ள கெட்ட அபிப்பிராயத்தை மாற்றிவிடுவாள் என்று அவன் உறுதியாக எண்ணித் தனக்கு அருகிலிருந்த வைத்தியரை நோக்கி, ''ஐயா! நீங்கள் இந்தப் பத்து தினங்களாக இராப்பகல் ஓயாமல் கட்டிக் காத்து என் உயிரை மீட்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. இப்படி என் உயிர் மீண்டதைப் பற்றி நான் உண்மையிலேயே ஆனந்தமடைந்து, என் மனமார்ந்த நன்றி விசுவாசத்தைத் தங்களுக்குச் செலுத்துவதே இயற்கையாக நடக்கக்கூடிய காரியம். ஆனால், என்னுடைய நிலைமை அப்படி இருக்க வில்லை. என்றைய தினம் நான் என்னுடைய பிரக்ஞையை இழந்து எமனுலகை நாடிப்போக ஆரம்பித்தேனோ, அப்போது முதல் என் விஷயத்தில் நீங்கள் கொஞ்சமும் பிரயாசை எடுத்துக் கொள்ளாமல், என்னை அப்படியே போட்டிருந்தால், இந்நேரம் என் உயிர் அடுத்த உலகத்துக்குப் போயிருக்கும். இந்த உலகத்துக்குரிய இடுக்கண்களும், துயரமும், கவலைகளும் அடியோடு ஒழிந்து போயிருக்கும். என்னுடைய பிறவிப் பிணியெல்லாம் சுத்தமாகத் தீர்ந்துபோயிருக்கும். நான் எவ்வித ஆசாபாசமும் இல்லாத நிரதிசய ஆனந்தத்தில் இந்நேரம் ஆழ்ந்திருப்பேன். நீங்கள் செய்த பேருதவியைப்பற்றி நான் அடுத்த உலகத்திலிருந்த படியே உங்களுக்கு நன்றியறிதல் செலுத்தியிருப்பேன். ஆனால், அது உங்களுக்குத் தெரியப் போகிறதில்லை. இப்போது நீங்கள் என்னை உயிர்ப்பித்தது என்னை உயிரோடு ஒரு பெருத்த நரகத்தில் தள்ளிவிட்டது போல இருக்கிறதேயன்றி வேறல்ல. என் விஷயத்தில் நன்மை செய்வதாக நீங்கள் கருதி என்னை உயிர்ப்பித்தீர்கள். ஆனாலும்,

உங்களுக்குத் தெரியாமல், அது பெருத்த பொல்லாங்காகவே முடிந்தது. நான் நோயில் விழுந்த இந்தப் பத்து தினங்களுக்கு முன் ஒரு மாசகாலமாக நான் இவ்விடத்தில் சிறைச்சாலையில் இருந்ததும், என்னுடைய மற்ற வரலாறுகளும் உங்களுக்குத் தெரிந்திருக்காது என்றே நினைக்கிறேன். என்னுடைய உண்மையான வரலாறுகளையும் இங்கே இருப்பவர்கள் என் விஷயத்தில் எப்படிப்பட்ட அக்கிரமக் காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். அவைகளை எல்லாம் அறிந்திருந்தால், நீங்கள் இப்போதிருப்பதைப் போல் இல்லாமல் வேறு மாதிரியாக நடந்து கொள்ளுவீர்கள்'' என்றான்.

அதைக்கேட்ட வைத்தியர், ''ஐயா! நீங்கள் அதிகமாகப் பேசி உங்கள் உடம்பையும் மனதையும் அலட்டிக் கொள்ளக் கூடாது. இன்னமும் உங்களுடைய உடம்பு பலஹீனமாகவே இருக்கிறது. ஆகையால், நீங்கள் இன்னமும் சில தினங்கள் வரையில் வாயைத் திறந்து அதிகமாகப் பேசவே கூடாது ஆகையால், சும்மா படுத்திருங்கள். நான் இந்தச் சிறைச்சாலையின் வைத்தியன். இவ்விடத்திலுள்ள மனிதர்களுக்கு ஏதேனும் தேகபாதை ஏற்பட்டால், அதை நிவர்த்திப்பது மாத்திரம் என் கடமை. அதைத் தவிர நான் அவர்களிடம் வேறு எவ்விதமான சம்பாஷணையும் வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்களுக்குத் தேவையான வேறு எவ்வித அனுகூலத்தையும் செய்யக்கூடாது. இந்தச் சிறைச்சாலையின் சட்டப்படி மற்றவர்கள் நடந்து கொள்வது போல நானும் நடந்து கொள்ளக் கடமைப்பட்டவன். அதுவுமன்றி, இங்கே அடைபட்டுள்ள கைதிகளின் வரலாறுகளையெல்லாம் நான் தெரிந்து கொள்ள எனக்கு எவ்வித மார்க்கமும் இல்லை. தெரிந்துகொள்ள முயற்சிப்பதும் சட்ட விரோதமான காரியம். ஆகையால், எனக்கு உங்களுடைய வரலாறாவது, வேறு எந்தக் கைதியினுடைய வரலாறாவது தெரியவே தெரியாது. நீங்கள் எதைச்

சொன்னாலும், அதற்கு நான் செவி கொடுக்கக்கூடாது. நான் இந்தப் போலீஸ் கமிஷனருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவன். ஆகையால், அவர் உங்கள் விஷயத்தில் ஏதேனும் அக்கிரமம் செய்திருந்தால் கூட, அதை நான் காதில் போட்டுக் கொள்ளக்கூடாது. ஆகையால், உங்களுக்கு எந்தக் காரியம் ஆகவேண்டியிருந்தாலும், அதை அந்தக் கமிஷனர் மூலமாகத்தான் செய்து கொள்ள வேண்டுமே அன்றி, என்னைப் போன்ற அற்ப சிப்பந்திகளால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது'' என்றார்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கவலையும் கலக்கமும் அடைந்தவனாய்ச் சோர்ந்து மயங்கிக் கண் மூடித் தலையணையில் சாய்ந்துவிட்டான். ஆனாலும், கால் நாழிகை நேரத்தில் மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தான். ஷண்முகவடிவு அப்போது எங்கே இருக்கிறாள் என்பதையும் என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பதையும் தான் எப்படித் தெரிந்து கொள்வது என்ற கவலையே ஓயாக் கவலையாக அவனது மனத்திலிருந்து அவனை உலுப்பியது. தான் அந்த வரலாற்றை வைத்தியரிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்வது சாத்தியமற்ற விஷயம் என்பது நன்றாகத் தெரிந்தது. போலீஸ் கமிஷனரோ எப்படிப்பட்ட அட்டூழியத்தையும் செய்யப் பின்வாங்காத கொடிய பாதகன். ஆதலால், அவனிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்வதும் பலியாது எனத் தோன்றியது. அந்தப் பரம சங்கடமான நிலைமையில் தான் என்ன செய்வது என்பதை அறியாதவனாய் அவன் கலங்கித் தவித்தான். ஷண்முகவடிவின் நிலைமையைத் தான் தெரிந்து கொள்ள இயலாவிட்டாலும், பரம துஷ்டரான போலீஸ் கமிஷனரினால், அவளுக்கு எவ்வித இடரும் நேராமல் அவளைக் காப்பாற்றுவதே முதன்மையான காரியமாகத் தோன்றியது. ஆகையால், தான் எப்படியாவது முயற்சித்து, அங்கே நடந்த வரலாறுகளை எல்லாம் கண்டு ஒரு

கடிதம் எழுதி தஞ்சையிலுள்ள ஷண்முகவடிவின் அக்காளான கமலத்திற்கு அனுப்பிவைத்தால், அவள் உடனே திருவாரூருக்கு மனிதரை அனுப்பித் தனது தங்கை அவ்விடத்தில் இருக்கிறாளா என்பதையும், அல்லது தனது க்ஷேமத்தைப்பற்றி அவ்விடத்துக்கு ஏதேனும் கடிதம் எழுதியிருக்கிறாளா என்பதையும் தெரிந்துகொண்டு, அவசியமானால், உடனே புறப்பட்டுக் கோலாப்பூருக்கு வருவாள் என்றும் கலியாண சுந்தரம் ஒருவாறு முடிவு செய்து கொண்டவனாய்த் தனக்கருகில் உட்கார்ந்திருந்த வைத்தியரைப் பார்த்து நயமாகப் பேசத் தொடங்கி, "ஐயா! நீங்கள் இவ்விடத்திலுள்ள கைதிகளுக்கு ஏதாவது உதவிசெய்தால், அது சட்டவிரோதமான காரியம் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், அது தர்ம நியாயத்துக்கு ஒத்த காரியமல்ல என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்விடத்திலுள்ள கைதிகள் எல்லாம் நியாயமான வழியில் தண்டிக்கப்பட்டு இவ்விடம் வந்திருந்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு உதவி செய்வது சட்ட விரோதமாவதோடு தர்ம நியாயத்துக்கும் விரோதமாகும். அப்படியின்றி, ஒரு மனிதர் அநியாயமாகக் கொணர்ந்து அடைக்கப்பட்டிருந்தால், அவருக்கு உதவி செய்வது சட்ட விரோதமானாலும் நியாய விரோதமாகாது. என்னை இவர்கள் எவ்விதக் குற்றமும், விசாரணையுமின்றி அக்கிரமமாகக் கொணர்ந்து இங்கே அடைத்திருப்பதன்றி மேன்மேலும் தகாத காரியங்களை எல்லாம் செய்துகொண்டே இருக்கிறார்கள். அந்த விவரங்களை எல்லாம் நீங்கள் கேட்பீர்களானால், என் விஷயத்தில் நிரம்பவும் இரக்கம் கொள்வீர்கள் என்பது நிச்சயம். அவைகளை எல்லாம் சொல்லலாமானால் சொல்லுகிறேன். எனக்கு நீங்கள் அதிகமாக எந்த உதவியையும் செய்யும்படி நான் உங்களை உபத்திரவிக்க விரும்பவில்லை. தஞ்சாவூரிலுள்ள எனக்கு நிரம்பவும் அந்தரங்கமான ஒரு மனிதருக்கு நான் ஓர் அவசரக் கடிதம்

எழுதித் தருகிறேன். அதை மாத்திரம் நீங்கள் கொண்டுபோய்த் தபால் கச்சேரியில் சேர்த்து விடுவீர்க ளானால், அதுவே போதுமானது. அந்தப் பேருதவியை நான் என்றென்றைக்கும் மறக்கமாட்டேன். மாட்டேன் என்று சொல்லாமல் நீங்கள் எப்படியாவது எனக்கு இந்த உதவியை மாத்திரம் செய்தே தீரவேண்டும்'' என்று இறைஞ்சி வேண்டிக்கொண்டான்.

உடனே வைத்தியர் சிறிதும் இரக்கமின்றிப் பேசத் தொடங்கி, ''ஐயா! நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. இங்கேயுள்ள ஒவ்வொரு கைதியும், தான் அக்ரமமாக தண்டிக்கப்பட்டு அடைபட்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறானே ஒழிய, தான் செய்த குற்றத்துக்கு இந்தத் தண்டனை அனுபவிப்பது நியாயம் என்று நினைப்பதே இல்லை. நான் எந்தக் கைதியினிடத்தில் பேசினாலும் அவன் தான் அநியாயமாகத் தண்டனை அனுபவிப்பதாகவே சொல்லி விசனப்படுகிறான். ஆகையால், எது உண்மை, எது பொய் என்பதை நான் கண்டுபிடிக்கக் கூடாமலிருக்கிறது. அப்படி இருப்பதால், நான் இங்கேயுள்ள கைதிகளின் விஷயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனசை வருத்திக் கொள்ளும் வழக்கத்தையே விட்டுவிட்டேன். சட்டப்படி தண்டனை அடைந்து இங்கே இருப்பவர்கள் நியாயப்படியே தான் தண்டிக்கப்பட்டிருப்பார்கள் என்று எண்ணிக் கொள்வதே என் மனசுக்கு நிம்மதியாக இருக்கிறது. உங்கள் விஷயத்தி லும் நான் அப்படியே தான் நினைத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மனிதர் செய்யும் குற்றங்களை விசாரித்து அவரவருக்குரிய தண்டனையை ஏற்படுத்த சட்டப்படி நியாயாதிபதி ஒருவர் இருக்கிறார். சட்டமும் நியாயமும் ஒத்திருக்கின்றனவா என்று பார்க்கவேண்டிய கடமை நியாயாதிபதியைச் சேர்ந்ததே அன்றி என்னைச் சேர்ந்ததல்ல. உங்கள் விஷயத்தில் நியாய விரோதம் ஏதாவது ஏற்பட்டிருந்தால், அந்தப் பாவம் நியாயாதிபதியைத்தான்

சேருமேயன்றி என்னைப் போன்ற துணைக்கருவிகளைச் சேராது. ஆகையால் இனி நீங்கள் வைத்திய விஷயத்தைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் என் உதவியை நாடமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான் சொல்வதைக் கேளாமல் நீங்கள் சொல்வதையே திரும்பத் திரும்பச் சொல்லி வற்புறுத்துவீர்களானால், அதை நான் போலீஸ் கமிஷனரிடம் தெரிவிப்பதைத் தவிர வேறு எந்தப் பலனும் ஏற்படாது என்று நீர் நிச்சயமாக எண்ணிக்கொள்ளலாம்'' என்று கூறினார்.

அவர் அழுத்தமாகவும் நிதானமாகவும் பேசியதைக் கண்ட கலியாணசுந்தரம் அந்த மனிதரது மனதை மாற்றத் தன்னால் இயலாது என்றும், அவர் எதற்கும் இளகாத கடின மனது உடையவர் என்றும், தான் எவ்வளவு தூரம் முயற்சித்தாலும் அவரால் தனக்கு எவ்வித அனுகூலமும் ஏற்படாது என்றும் உணர்ந்து கொண்டான்; ஈசுவரன் இந்த உலகில் ஜீவ காருண்யமாவது பச்சாதாபமாவது இல்லாத, அப்படிப்பட்ட மனிதரையும் படைத்திருக்கிறானே என்ற வியப்பும் விசனமும் எழுந்து கலியாணசுந்தரத்தின் மனதைக் கப்பிக் கொண்டன. அவன் அவரைப் பார்த்து, ''சரி, பிறகு உங்கள் இஷ்டம். இதற்கு மேல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்று சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் அவருக்கு மறுமொழி சொல்லிவிட்டு ஓய்ந்து மௌனமாகப் படுத்துக் கொண்டான்.

அதன்பிறகு அவனுக்கும் அந்த வைத்தியருக்கும் எவ்வித சம்பாஷணையும் நடக்காமல் நின்றுபோய்விட்டது. அதுகாறும் அவனுக்கு அருகிலேயே சதாகாலமும் இருந்துவந்த வைத்தியர் அவன் அநேகமாய்க் குணமடைந்து போனதைக் கண்டு காலை மாலைகளில் மாத்திரம் வந்து மருந்துகள் கொடுத்துவிட்டுப் போகத் தொடங்கினார். அவர் வரும்போது அவருடன் கூட முன்னர் குறிக்கப்பட்ட ஒரு தாதியும் வந்து அவனுக்குரிய பணிவிடைகளைச் செய்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தாள். இடையிடையில் அந்தத் தாதி அவனிருந்த இடத்திற்கு வந்து

அவனுக்குத் தேவையான ஆகாரம் தண்ணீர் முதலியவற்றை உதவிவிட்டுப் போய்க் கொண்டிருந்தாள். அவ்வாறு சில தினங்கள் கழிந்தன. அவள் வைத்தியரோடும் தனியாகவும் வந்த காலங்களில் வாய் திறந்தே பேசாமல் இயந்திரத்தினால் அசையும் உயிரற்ற பதுமைபோல வருவதும், தான் செய்ய வேண்டிய அலுவல்களை ஒழுங்காக முடிப்பதும், காலப்படி வெளியில் போய்விடுவதுமாக இருந்தாள்.

அவளது செய்கைகளைக் கவனித்திருந்த கலியாணசுந்தரம் தான் அவள் மூலமாகத் தனக்கு ஏதேனும் அனுகூலங்களைச் செய்து கொள்ளலாம் என்று நம்பிக்கையை முற்றிலும் இழந்தவனாய், அவளிடம் வாய் திறந்து பேசவும் மனமற்றவனாக இருந்தான். தனக்குச் சிகிச்சைகள் செய்த வைத்தியரைவிட அந்தத் தாதி நிரம்பவும் கொடிய மனுஷி என்ற எண்ணம் அவனது மனதில் பட்டது. ஆகையால் அவன் அவளிடம் பேசவே மனமற்றவனாக இருந்தான். மேலும் பல நாட்கள் கழிந்தன. கலியாணசுந்தரம் படுக்கையைவிட்டு எழுந்து நடக்கவும் தனது தேக சம்பந்தமான காரியங்களைத் தானே செய்து கொள்ளவும் வல்லமை அடைந்தான். அதன்பிறகு வைத்தியர் அவனது விடுதிக்கு வருவதை நிறுத்தி விட்டார். ஆனாலும், அவனுக்கு இரத்தபுஷ்டி உண்டாவதற்கு வேண்டிய ஔஷதங்களை அவனிடத்திலேயே கொடுத்து வைத்தார். ஆனால், அவரோடு வந்து கொண்டிருந்த தாதிமாத்திரம் எப்போதும் போல வந்து, அவனுக்குரிய ஆகாராதிகளைக் கொடுத்துவிட்டு உயிரற்ற பதுமை போலவே போய்க் கொண்டிருந்தாள். நாட்கள் செல்லச் செல்ல கலியாண சுந்தரத்தின் மனநிலைமை சிறிதும் சகிக்கக் கூடாததாக ஆகி விட்டது. இரவு பகல் அவனது மனதில் ஷண்முகவடிவைப் பற்றிய நினைவே மாறாதிருந்து அவனை உருக்கி ஒடுக்கி வந்தது; அவள் எங்கே இருக்கிறாள் என்பதையும் என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பதையும் தான் அவளுக்குக்

கடிதம் எழுதலாமா எழுதக் கூடாதா என்பதையும், தான் அந்தச் சிறைச்சாலையில் இன்னம் எவ்வளவு காலத்திற்கு இருக்க வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவும் ஆவலும் எழுந்து தீப்பற்றி எரிவது போல அவனது மனதையும் தேகத்தையும் பற்றி எரித்தன. ஆனாலும், அந்த விவரங்களை யார் மூலமாக அறிகிறது என்பதை அறியாமல் அவன் ஏங்கிக் கலங்கி ஆராத்துயரில் ஆழ்ந்து துரும்புபோல மெலிந்து போனான். வைத்தியர் கொடுத்த மருந்திலாவது, ஆகாரத்திலாவது நித்திரையிலாவது அவனது மனம் செல்லவே இல்லை. பொழுதுவிடிந்தால், பொழுதுபோனால், அந்தத் தாதியின் உயிரற்ற முகத்தைத்தவிர வேறு எந்த முகத்தையும் தான் பார்க்க இயலாமல் போனதை நினைத்து நினைத்து அவன் மனமாழ்கிப் புண்பட்டு வருந்திக் கிடந்தான். இரண்டொரு சமயங்களில் அந்தத் தாதியின் முகம் கடுமையற்றதாகத் தோன்றினபோது தான் அவளிடம் சம்பாஷித்துப் பார்க்கலாமா என்ற ஒருவித விருப்பம் அவனது மனதில் எழுந்தது. ஆனாலும், தான் அப்படிச் செய்வதில் தனக்கு எவ்வித அனுகூலமும் ஏற்படாது என்ற ஓர் எண்ணம் தோன்றி அவனைப் பின்னிடும்படி செய்தது. ஆகவே, அவன் அவளிடத்தில் வார்த்தையே சொல்லாமல் மௌனமாகவே இருந்து வந்தான்.

அப்படியிருக்க ஒரு நாள் பகலில் அவன் மனவேதனையில் பட்டு அலுத்துக் கடுமையான நித்திரையில் ஆழ்ந்து விழித்து பிற்பகல் மூன்று மணிக்கு எழுந்து தனது படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டு விசிப்பலகையின் மீது உட்கார்ந்துகொண்டு எதையோ சிந்தித்த வண்ணம் இருந்தான். அவனுக்கு எதிரிலிருந்த ஜன்னலின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. அந்த ஜன்னலிற்கு அப்புறத்தில் ஒரு தாழ்வாரம் இருந்தது. கலியாணசுந்தரம் தனது முகத்தை அந்த ஜன்னலின் பக்கம் திருப்பியபடி தனது கவனத்தையும் திருஷ்டியையும் வேறிடத்தில் வைத்துக் கொண்டிருக்க, திடீரென்று தாழ்வாரத் தில் ஜன்னலுக்குப் பக்கத்தில் மறைந்திருந்தபடி யாரோ ஒரு மனிதர் தனது கையை

விரைவாக ஜன்னலுக்குள் நுழைத்து வெள்ளையாக இருந்த ஏதோ ஒரு பொருளை உட்புறத்தில் போட்டுவிட்டுக் கையை அப்பால் இழுத்துக் கொண்டது அவனது திருஷ்டியில் பட்டது. அது என்றைக்கும் நிகழாத புதிய சம்பவமாக இருந்தது ஆகையால், அவனது கவனம் உடனே அந்தப் பொருளின்மீது சென்றது. உட்புறத்தில் ஜன்னலின் பக்கத்தில் வீழ்ந்த வெள்ளை நிறமுள்ள பொருள் என்னவாக இருக்கலாம் என்று அவன் அதை உற்று நோக்கினான். ஆனால், அது இன்னதென்பது நன்றாக விளங்கவில்லை. ஆகவே அதை எடுத்துப் பார்க்க வேண்டும் என்ற விலக்க முடியாத ஒருவித எண்ணம் தோன்றி அவனைத் தூண்டியது. அவன் உடனே எழுந்து விரைவாக நடந்து ஜன்னலண்டை போய், தனது பார்வையை அப்புறம் செலுத்தி அவ்விடத்தில் யாராவது மனிதர் நிற்கிறார்களா என்று வெளிப்பக்கத்து தாழ்வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் எட்டிப் பார்த்தான். யாரும் காணப்படவில்லை. உடனே அவன் கீழே குனிந்து தரையில் கிடந்த வெள்ளைக்காகித உறையுள்ள ஒரு கடிதத்தை ஆவலோடு எடுத்துப் பார்க்க, அந்த உறையினது வாய் நன்றாக ஒட்டப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் ஏதோ மேல் விலாசம் எழுதப்பட்டிருந்தது. அவன் அந்த உறையைத் திருப்பிப் பார்க்க, அதன்மேல் தனது பெயரே எழுதப்பட்டிருக்கக் கண்டு பெரிதும் திடுக்கிட்டு சகிக்க வொண்ணாத ஆச்சரியம் அடைந்தான். அந்த ஊரில் தனக்குக் கடிதம் எழுதியனுப்பக் கூடியவர்கள் யாராக இருக்கலாம் என்று அவனது மனம் பலவாறு சந்தேகம் கொண்டது. மறுபடியும் அபிராமியே தனக்குக் கடிதம் எழுதித் தன்னை ஏதேனும் புதிய இடுக்கணில் புகுத்திவிட எண்ணுகிறாளோ என்ற சஞ்சலம் தோன்றியது. ஆகையால், அந்த ஒருவிநாடி நேரத்தில் அவனது மனம் எண்ணாததை எல்லாம் எண்ணிப் பரிதவித்தது. அதை உடைத்து அதற்குள் இருக்கும் செய்தி தனக்கு அனுகூலமானதோ பிரதி கூலமானதோ என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்று அவனது உள்ளம் துடிதுடித்தது. ஆனாலும், மறுபடி அது

இன்னொரு ஸ்திரீ சம்பந்தமான சதியாலோசனையாக இருக்குமோ என்ற சந்தேகமும் உண்டானது. ஆகையால், அந்த உறையைக் கிழிக்க அவனது கை பின் வாங்கியது. ஆகையால், அவன் அதைப் பிரித்துப் பார்க்கலாமா பார்க்கக் கூடாதா என்பதை நிச்சயிக்க மாட்டாதவனாய் இரண்டொரு நிமிஷநேரம் சிந்தித்திருந்த பின், அவ்விடத்தை விட்டுத் தனது விசிப்பலகை இருந்த இடத்தை அடைந்து அதன்மேல் உட்கார்ந்துகொண்டு, தான் அந்தக் கடிதத்தை என்ன செய்வது என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானான். அதை யார் அனுப்பி இருப்பார்கள் அல்லது, என்ன கருத்தோடு அதை அனுப்பியிருப்பார்கள் என்ற ஐயம் தீராமலேயே இருந்தமையால், அவன் எதையும் நிச்சயமாக அறிந்துகொள்ள மாட்டாமல், கடைசியில், நல்லதோ, கெட்டதோ அதைத் தான் உடைத்துப் பார்த்து அதன் விஷயத்தை அறிந்து கொள்வதே உசிதமானது என்று அவன் தீர்மானித்தான். ஏனெனில், அது என்னவாக இருக்கும் என்ற எண்ணம் எப்போதும் தன் மனதில் எழுந்தெழுந்து தன்னை வருத்தியபடி இருக்கும். ஆதலால், அப்படி அல்லல்படுவதைவிட, அதை அப்போதே அறிந்து கொள்வது உசிதமானது என்று அவன் முடிவு செய்து கொண்டவனாய், கடிதத்தின் உறையைக் கிழித்துவிட்டு அதற்குள் இருந்த காகிதத்தை வெளியில் இழுத்தான். எழுதப்பட்ட ஒரு துண்டுக் கடிதமும், எழுதப்படாத ஒரு துண்டுக் காகிதமும், ஒருசிறிய பென்சிலும் அந்த உறைக்குள் இருந்ததைக் கலியாணசுந்தரம் கண்டு ஆவலோடு அவற்றை வெளியில் எடுத்தான். அவனது கைகள் வெடவெடவென்று நடுங்கின. மனம் துடிதுடித்தது. அந்த ஒரு நிமிஷ நேரத்தில் கோடானு கோடி எண்ணங்களைக் கொண்டு தவித்தது. எழுதப்படாத துண்டுக் காகிதமும் பென்சிலும், தான் மறுமொழி எழுதுவதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன என்பது அவனுக்கு உடனே தெரிந்துவிட்டது. எழுதப்பட்டிருந்த துண்டுக் காகிதத்தை அவன் எடுத்துப் படிக்கத் தொடங்கினான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

*இந்த அக்கிரமச் சிறையிலிருந்து உம்மை விடுவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெளியில் நடந்து கொண்டிருக்கின்றன. விவரங்களுக்கு அடுத்த கடிதத்தை எதிர்பார்க்கவும். மறுமொழி எழுதுவதற்காக இத்துடன் ஒரு பென்சிலும் துண்டுக் காகிதமும் வருகிறது. இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தபின் கிழித்து விளக்கில் கொளுத்திக் கரியாக்கிவிடவும்.*

-என்று எழுதப்பட்டிருந்த துண்டுக் காகிதத்தைப் படித்தவுடனே கலியாணசுந்தரத்தின் மனதில் இன்பமும் துன்பமும் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் எழுந்து வதைக்கலாயின. தன்னை விடுவிக்க எத்தனிப்பவர்கள் யாராக இருக்கலாம் என்ற பெருத்த சந்தேகம் எழுந்தது. ஒருவேளை ஷண்முகவடிவு தான் குற்றமற்றவன் என்பதை அதன் பின்னால் எப்படியோ தெரிந்து கொண்டு தன்னை விடுவிப்பதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாளோ, அப்படி இருந்தாலும், தான் அடைபட்டிருக்கும் சிறைச்சாலையின் ஜன்னல் வழியாக அந்தக் கடிதத்தை உள்ளே போட அவளால் எப்படி முடிந்திருக்கும், ஒருவேளை அவள் அந்தச் சிறைச்சாலையிலுள்ள சிப்பந்திகளுள் யாரையாவது தனக்கு அனுகூலமாகச் சேர்த்துக் கொண்டு அவர் மூலமாக அந்தக் கடிதத்தை அனுப்பி இருப்பாளோ, அப்படி அனுப்பியிருந்தால், அந்த மனிதர் கடிதத்தை நேரில் கொணர்ந்து தன்னிடம் கொடுக்காவிட்டாலும், ஜன்னலிற்கு அப்பால் நின்றபடி தன்னிடம் ஏன் கொடுத்திருக்கக் கூடாது. அதுவுமன்றி, அந்த விஷயத்தில் அவள் சம்பந்தப்பட்டிருப்பதாக ஒரு குறிப்பாவது அந்தக் கடிதத்தில் ஏன் காட்டி இருக்கக் கூடாது என்று அவன் பலவாறு சிந்திக்க, அந்த ரகசிய ஏற்பாட்டில் ஷண்முகவடிவு சம்பந்தப்பட்டிருக்க மாட்டாள் என்ற எண்ணமே அவனது மனதில் மேலோங்கி நின்றது. ஆகவே, தன்னைச் சிறைப்படுத்தித் தன் மனவுறுதியைக் கலைக்க முயன்ற துஷ்டர்களான அம்மாளு, தனம், அபிராமி ஆகிய மூன்று தாதிப் பெண்களும் மறுபடி ஏதோ சூழ்ச்சி செய்து தங்களது மாயவலையை விரிக்கிறார்கள் என்றே அவன் எண்ணிக்

கொண்டதன்றி, தான் அதற்கு அனுசரணையாக நடந்து கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்றும் அவன் தீர்மானித்துக் கொண்டான். அதுவுமன்றி, இன்னொரு விவரமான கடிதம் தனக்கு வெகுசீக்கிரத்தில் வந்து சேரும் என்றும், அதை நன்றாக ஆராய்ந்து பார்த்தால், அதில் இன்னார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது ஒருவாறு விளங்கலாம் என்றும் அவன் முடிவு செய்து கொண்டான். அந்தக் கடிதத்தைத் தான் கிழித்தெறியாமல் இரண்டொரு நாள் மறைத்து வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமும் உண்டானது. ஆகையால், அவன் அந்தக் கடிதத்தையும் அதோடு சம்பந்தப் பட்ட உறை, பென்சல் முதலிய யாவற்றையும், தனது தலை யணையின் கீழ் மறைத்துவைத்துவிட்டு விசிப்பலகையின் மீது உட்கார, அப்போது அவன் இருந்த அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. போலீஸ் கமிஷனர் அவனுக்கு எதிரில் பிரசன்னமானார்.

அவரைக்கண்ட கலியாணசுந்தரம் திடுக்கிட்டு எழுந்து நின்றான். சிறிது நேரத்திற்குமுன், ஜன்னலின் வழியாகத் தனக்குக் கடிதம் அனுப்பப்பட்டது என்பதை அறிந்து, தன்னைக் கண்டித்து எச்சரிப்பதற்காகவும், தனக்கு வந்த கடிதத்தை வாங்கி அதன் எழுத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காகவும் அவர் வந்திருப்பாரோ என்ற சந்தேகமே முதன்மையாக அவனது மனதில் எழுந்தது. அதுவும் இல்லாதிருந்தால் போலீஸ் கமிஷனரே தனது கருத்தை உணரும்பொருட்டு யாரைக் கொண்டாகிலும் அந்தக் கடிதத்தை எழுதி உள்ளே போடச் செய்துவிட்டு, ஒன்றையும் அறியாதவர் போல உள்ளே வந்திருக்கலாம் என்ற யோசனையும் தோன்றியது. அவ்வாறு கலியாணசுந்தரம் பலவாறு எண்ணமிட்டு, எதையும் நிச்சயமாக நிர்ணயிக்க மாட்டாமல், அவர் தன்னிடம் எதற்காக வந்திருப்பாரோ என்ற கவலைகொண்டு மௌனமாக நிற்க, அவனிடம் நெருங்கி வந்த போலீஸ் கமிஷனர், "ஐயா! நான்

உம்மிடத்தில் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசி உம்முடைய விருப்பத்தை அறிய வேண்டும் என்று வந்தேன். நான் கேட்பதற்கு நீர் சரியான உத்தரம் சொல்லுவீர் என்று நினைக்கிறேன். ஆரம்பத்தில் உம்மை இந்த ராஜாங்கத்தார் என்ன கருத்தோடு இவ்விடத்தில் சிறைப்படுத்தினார்கள் என்பது உமக்குத் தெரிந்த விஷயம். நீர் உம்முடைய உண்மைப் பெயரை மாற்றிக்கொண்டு வெளிப்படையான யாதொரு முகாந்திரமும் இன்றி, இந்தத் தேசத்தில் பிரயாணம் செய்ததைக் கண்டு ரகசியப் போலீசார்கள் சந்தேகம் கொண்டு, உம்முடைய வரலாறுகளை எல்லாம் நன்றாக விசாரித்தறிந்து கொள்ளும் வரையில் உம்மை சிறையில் வைத்திருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தார்கள். ஆகையால், அதன்மேல், நீர் சிறைப்படுத்தப்பட்டீர். அதன்பிறகு இப்போது சுமார் ஒன்றரை மாச காலம் ஆகிறது. ரகசியப் போலீசார் தஞ்சாவூருக்குப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய விசாரணை இன்னம் முடிவடையவில்லை. அவர்கள் இதுவரையில் எங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கைகளைப் பார்த்தவரையில், உமக்கு அனுகூலம் ஏற்படும் என்றாவது, நீர் சீக்கிரம் இந்தச்சிறையிலிருந்து விடுபடுவீர் என்றாவது எண்ண இடமில்லாது இருக்கிறது. ஆகையால், நியாயமாகப் பார்க்குமிடத்தில் நீர் இன்னம் வெகுகாலம் வரையில் இவ்விடத்திலேயே இருக்க வேண்டியவராக இருக்கிறீர். ஆனால், சில தினங்களுக்கு முன் நீர் இவ்விடத்தில் சில துன்மார்க்கமான காரியங்களை நடத்தி, அதன் பலனாக பலமான நோயில் விழுந்து விட்டீர். நாம் உடனே ஒரு வைத்தியரை அமர்த்த அவர் இரவு பகல் உமது பக்கத்திலேயே இருந்து சிகிச்சை செய்து உம்மைக் காப்பாற்றி விட்டார். ஆனாலும், அவர் அதன்பிறகு உமக்கு எவ்வளவோ அருமையான மருந்துகளை எல்லாம் கொடுத்து வருகிறாராம். உம்முடைய உடம்பு இளைத்துக்கொண்டே வருகிறதாகத் தெரிகிறது. அன்றையதினம் நீர் உம்முடைய அறையின் சுவரைக் குடைந்து கொண்டு பக்கத்து அறைக்குப் போய் அங்கே இருந்த அபிராமி

என்னும் பெண்ணைப் பலாத்காரம் செய்து கெடுத்தீரல்லவா. அந்தப் பெண் நீர் நோய் கொண்டு படுத்திருந்த காலத்தில் அடிக்கடி இங்கே வந்து உம்மைப் பார்த்துவிட்டுப் போனதன்றி, அவள் விஷயத்தில் நீர் செய்த அக்கிரமங்களை எல்லாம் கண்டு நியாயாதிபதிக்கு ஒரு மனு அனுப்பிக் கொண்டாள். அவர் எங்களை எல்லாம் அழைத்து விசாரணை செய்து, அவள் எழுதியிருந்த பிராது உண்மைதான் என்று அறிந்து கொண்டார். நீர் படுக்கையை விட்டு எழுந்திருக்கமாட்டாத நிலைமையில் இருந்தபடியால் அவர் உம்மை விசாரிக்காமலேயே தீர்ப்புச் சொல்லிவிட்டார். அந்தப் பெண்ணை நீர் பலாத்காரம் செய்து கற்பழித்தது உண்மை எனத் தெரிவதாலும், அதற்காக உமக்கு எவ்விதத் தண்டனையும் செய்துவைக்க அந்தப் பெண் விரும்பவில்லை ஆகையாலும், அவளை நீர் ஆயிசு கால பரியந்தம் சம்சாரமாக வைத்து ரக்ஷிக்க வேண்டும் என்று அவர் தீர்ப்புச் சொல்லிவிட்டார். ஆனால், அவளை நீர் சாஸ்திரப்படி கலியாணம் செய்துகொண்டாலும் சரி, இல்லாவிட்டால் எவ்வித சடங்குமின்றி சம்சாரம்போல பாவித்துக் கொண்டாலும் சரி, அது உங்கள் இருவருடைய இஷ்டத்தைப் பொருத்த தென்றும் அவர் முடிவு செய்திருக்கிறார். ஆகையால், அந்தத் தீர்மானத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்தப் பெண் எனக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பிக் கொண்டிருக்கிறாள். அதன் சாராம்சம் என்னவென்றால், நீர் நோயில்பட்டு நிரம்பவும் கேவலமான நிலைமையில் இருப்பதாலும், முதல் தரமான தாதுபுஷ்டி மருந்துகள் எவ்வளவு கொடுத்தாலும் உம்முடைய உடம்பு தேறாமல் இருப்பதாலும் அவள் உம்முடைய தேகஸ்திதியைப் பற்றி நிரம்பவும் கவலையும் அச்சமும் கொள்கிறாளாம். உம்மை அவள் உடனே அழைத்துக்கொண்டு போய் இந்த ஊரில் அவள் புதிதாக வாங்கி இருக்கும் ஜாகையில் வைத்துக் கொண்டு மருந்துகள் கொடுத்து உம்முடைய உடம்பைத் தேற்ற உத்தேசிக்கிறாளாம். அவளை விட்டுப் பிரிந்திருக்கும் ஏக்கத்தினாலேயே உம்முடைய உடம்பு

தேறாமல் இளைத்துக் கொண்டே வருகிறதாம். நீர் அவளிடம் போய்ச் சேர்ந்தால் உம்முடைய உடம்பு பழையமாதிரி தளிர்த்துப் போய்விடுமாம். ஆகையால், உம்மை உடனே தன்வசம் ஒப்புவிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறாள். போலீஸார் எந்த வேளையில் வந்து பார்த்தாலும் உம்மை ஆஜர்ப்படுத்துவதாகவும் அவள் ஒப்புக் கொள்கிறாள். அவளுடைய வேண்டுகோளின்படி நான் உம்மை அவளுடைய வசத்தில் ஒப்புவிக்காவிட்டால், இன்னம் கொஞ்ச காலத்தில் உம்முடைய உயிருக்கே மோசம் வந்துவிடுவது நிச்சயம் என்றும், அப்படிப்பட்ட கெடுதல் ஏதாவது நேருமானால் அவள் எங்களைத் தான் சகலத்திற்கும் உத்தரவாதி ஆக்குவாள் என்றும் எழுதியிருக்கிறாள். அந்த விண்ணப்பத்தைப் பார்த்த பிறகு எங்களுக்கும் பெருத்த கவலை உண்டாகிறது. ஆகையால், அவளுடைய பிரியப்படி உம்மை நாங்கள் அவளுடைய வசத்தில் ஒப்புவித்துவிட எண்ணுகிறோம். அப்படி நாங்கள் உம்மை அனுப்புமுன் நீர் எங்களுக்கு ஓர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும். எங்களுடைய உத்தரவு இல்லாமல் நீர் இந்த ஊரைவிட்டு எங்கேயும் போவதில்லை என்றும் யாருக்கும் கடிதம் எழுதுவதில்லை என்றும் ஒப்பந்தம் எழுதி அதில் நீர் கையெழுத்துச் செய்து கொடுக்க வேண்டும். தினம் காலையிலும், மாலையிலும் போலீஸார் வந்து, உம்மை ஆஜர் பார்த்துக்கொண்டு போவார்கள். நீர் யாருக்கும் கடிதம் எழுதாதபடி தான் பார்த்துக் கொள்வதாக அந்தப் பெண் ஒப்புக் கொண்டிருக்கிறாள். இந்த ஆதாரங்களின்மேல் உம்மை அந்தப் பெண்ணின் வசத்தில் ஒப்புவித்து விடலாம் என்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம். அந்த ஏற்பாட்டிற்கு நீர் என்ன சொல்கிறீர்? உமது விஷயத்தில் சகலமான பாக்கியதைகளுக்கும் அந்தப்பெண்ணே உரியவள் என்றும் நியாயஸ்தலத்தார் தீர்மானித்திருப்பதால், அவளுடைய வேண்டுகோளை மறுக்க எங்களுக்கு அதிகாரமே இல்லை. ஆகையால் உம்மை நாங்கள் எப்படியும் அவளிடம் அனுப்பியே தீரவேண்டும். ஆனால்,

உம்மை ராஜாங்க சம்பந்தமான சம்சயத்தின்மேல் நாங்கள் சிறைப்படுத்தி இருக்கிறோம். ஆகையால், நாங்கள் குறித்தபடி நீர் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தால் அன்றி நாங்கள் உம்மை வெளியில் அனுப்ப முடியாது. ஆகையால் நீர் அவளிடம் போயிருக்க வேண்டியதும் அவசியமானது; ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கவேண்டியதும் அதற்குமேல் அதிக அவசியமானது. நாளையதினம் உம்மை நான் அந்தப் பெண்ணினிடம் அனுப்பத் தீர்மானித்திருக்கிறேன். அதற்குள் நீர் ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்ய வேண்டும். இந்த விவரங்களை உம்மிடம் தெரிவிக்கவே நான் இங்கே வந்தேன்'' என்று நிதானமாகவும் அழுத்தமாகவும் கூறினார்.

அவர் சொன்ன வார்த்தைகளை எல்லாம் நிரம்பவும் கவனமாகக் கேட்டு வந்த கலியாண சுந்தரம் முற்றிலும் பிரமித்துப்போய் அவருக்குத் தக்கபடி தான் என்ன மறுமொழி சொல்வது என்பதை உணராமல் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவனது மனதில் தாங்க வொண்ணாத பெருத்த வியப்பும் கொதிப்பும் தோன்றின ஆகையால், அவன் நிரம்பவும் பதறி நின்றான். அபிராமி என்னும் பெண் இரவில் சுவரைக் குடைந்து கொண்டு தான் இருந்த அறைக்குள் வந்திருக்க, அதை முற்றிலும் மாற்றி தான் சுவரைக் குடைந்து கொண்டு அவள் இருந்த அறைக்குள் போனதாக அவர்கள் ஒரே கட்டுப்பாடாகச் சொல்வதைக் காண, அவனது மனதில் ரௌத்திராகாரமான பெருஞ்சினம் பொங்கி எழுந்தது. ஆனாலும், அவனது மனதில் அப்போதும் ஒரு பெருத்த சந்தேகம் உதித்துக்கொண்டே இருந்தது. சுவரைக் குடைந்து கொண்டு அவள் வந்த விஷயத்தைப் பாராக்காரனும் அபிராமியும் மாற்றிச் சொல்லுகிறார்கள் என்பதை போலீஸ் கமிஷனர் அறிந்துகொண்டே மறைத்துப் பேசுகிறாரா, அல்லது, பாராக்காரனும், அபிராமியும் சொல்வதை உண்மை என்றே நம்பி அவ்வாறு பேசுகிறாரா என்ற ஒரு சந்தேகம் மாத்திரம்

தீராமல் அவனது மனத்திலிருந்து வந்தது. இருந்தாலும், ஆரம்பத்திலிருந்து தன்னை அக்கிரமமாக அடைத்து வைத்ததன்றி, சிறைச்சாலைக்குள் நடக்கத்தகாத பல சம்பவங்கள் நடக்கும்படி விட்டிருக்கும் அந்தப் போலீஸ் கமிஷனர் அவைகளில் கொஞ்சமும் சம்பந்தப்படாமல் இருக்க மாட்டார் என்ற நினைவும் தோன்றிக்கொண்டே இருந்தது. அதுவுமன்றி, நடு இரவில் அவர்கள் ஷண்முகவடிவை அழைத்து வந்ததும் அவரைப் பற்றிய சம்சயத்தை உறுதிப்படுத்தியது. அவைகள் யாவற்றிலும், தான் நோயாகப் படுத்திருந்த காலத்தில் அபிராமி நியாயாதிபதிக்கு மனுக் கொடுத்ததாகவும், தான் அவளைச் சம்சாரமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நியாயாதிபதி தீர்ப்புச் சொல்லியிருப்பதாகவும் கமிஷனர் சொன்னது அவனால் நம்பக்கூடாத பெரும் விந்தையாக இருந்தது. அவள் மனுக்கொடுத்த காலத்தில் தான் நோயாளியாக இருந்தாலும், தான் சௌக்கியம் அடையும் வரையில் அந்த நியாயாதிபதி பொறுத்திருந்து, தன்னையும் நேரில் வரவழைத்து விசாரித்து இரண்டு கட்சிகளின் வாதங்களையும் கேட்டறிந்தே அந்த வழக்கை முடிவு செய்வது நியாயமாக இருக்க, அதை விட்டு அவர் ஒரு தலைச்சார்பாக தீர்மானம் செய்திருப்பது எவ்விடத்திலும் நடக்காத அதிசயமாக இருந்தது. ஆனாலும், மகா அக்கிரமக்காரர்களான அந்தப் போலீசாருக்குத் தகுந்த படியே நியாயாதிபதியும் அமைந்திருக்கிறார் என்ற எண்ணமும் தோன்றியது. முக்கியமாக தன் விருப்பப்படி நடந்து கொள்ளச் சிறிதும் இடமில்லாமல், சகல விஷயங்களிலும் அவர்கள் தன்னை நிர்ப்பந்தித்து, அவர்கள் சொல்லுகிறபடி தான் நடப்பதைத் தவிர வேறு வழியில்லாத நிலைமைக்கு அவர்கள் தன்னைக் கொண்டு வந்திருந்ததும் அவனால் சகிக்க இயலாத பெருங் கொடுமையாக இருந்தது. ஆகையால், அந்தத் தரும சங்கடத்தில் தான் என்ன செய்வது என்பதை உணராமல் கலங்கிப் பதறிச் சிறிது நேரம் யோசித்தபின் கலியாணசுந்தரம்

இன்ஸ்பெக்டரை நோக்கி, ''ஐயா! இந்தத் தேசத்துப் போலீசாரும் நியாயாதிபதியும் நடந்து கொள்வதுபோல, இந்த உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் நடந்துகொள்ள மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். எவ்விடத்திலும் மனிதர் இதுவரையில் காதால் கேட்காத அக்கிரமங்களெல்லாம் இவ்விடத்தில் நடக்கின்றனவே! நான் என்னுடைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறேன் என்ற அற்ப முகாந்திரத்தை வைத்துக்கொண்டு என்னை நீங்கள் இவ்விடத்தில் இந்த ஒன்றரை மாசகாலமாகச் சிறைப்படுத்தி இல்லாத அட்டூழியங் களையும் கேவலம் இழிவான காரியங்களையும் செய்து வருகிறீர்கள்! நீங்கள் என்னைச் சிறைப்படுத்திய காரணம் எனக்கு ஆரம்பத்தில் அவ்வளவாக விளங்காவிட்டாலும், இப்போது நடக்கும் காரியங்களிலிருந்து நன்றாக விளங்கிவிட்டது. நீங்கள் யாருடைய தூண்டுதலின் மேல் இப்படிப்பட்ட தகாத காரியங்களை எல்லாம் செய்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பூனாவிலுள்ள தஞ்சை இளவரசருடைய பட்டமகிஷியின் விஷயத்தில் சதி ஆலோசனை செய்துவரும் தாதிப் பெண்களுடைய எண்ணம் நிறைவேறு வதற்கு நான் பெருத்த இடையூறாக இருக்கிறேன் என்பதைக் கண்டு யாரோ சில முக்கியமான மனிதர் உங்களுடைய பதவியை நாடியதால், காரியங்கள் இப்படி நடக்கின்றன என்பது எனக்கு நன்றாக விளங்கி விட்டது. அந்தத் தாதிப் பெண்களில் மூத்தவர்களான அம்மாளு, தனம் என்ற இரண்டு பெண்களும் இதற்குமுன் என்னிடத்தில் பலவிதமான தந்திரங்கள் செய்து என் மனதை மாற்ற முயன்று, கடைசியில் தோல்வியடைந்து போனார்கள். அதுவுமன்றி, நான் அவர்களுடைய சதியாலோசனைக்கு இடையூறாக இருக்கிறேன் என்பதையும் உணர்ந்து எப்படியோ உங்களுடைய தயவைச் சம்பாதித்துக் கொண்டு என்னைச் சிறைப்படுத்தச் செய்து மூன்றாவது தங்கையான அபிராமியை அனுப்பி என் மனதைக் கலைக்க முயற்சித்திருக்கிறார்கள். அவள்

உங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ பாராக்காரன் வேலைக்காரி முதலியோருடைய உதவியால் சுவரைக் குடைந்து கொண்டு என்னுடைய அறைக்குள் வந்து கடைசிவரையில் தான் இன்னாள் என்பதை வெளியிடாமல் பலவிதமான சாகசக்கியங்கள் செய்து முடிவில் சகலமான குற்றங்களையும் என்மேல் சுமத்திவிட்டாள். அதைத் தவிர இன்னொரு பெரிய அக்கிரமும் நடத்தப்பட்டிருக்கிறது. என்னிடமிருந்த சொந்தக் கடிதங்களையெல்லாம் நீங்கள் எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்து, என்னுடைய குடும்ப வரலாறுகளையெல்லாம் அறிந்து, நான் கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்திருந்த பெண்ணினிடத்தில் ஏதோதப்பான முகாந்திரங்களைச் சொல்லி அவளையும் அழைத்துவந்து அவள் என்மேல் தவறான அபிப்பிராயம் கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை உண்டாக்கி, அப்போது அவளை அழைத்துவந்து காட்டி அவளுடைய மனசை நீங்கள் அநியாயமாகப் புண்படுத்திவிட்டீர்கள். அந்தப் பெண்ணை நீங்கள் இப்போது உயிரோடு வைத்திருக்கிறீர்களா அல்லது கொன்றுவிட்டீர்களா என்ற விவரமும் தெரியவில்லை. இப்படிப்பட்ட பரம சண்டாளமான காரியங்களையெல்லாம் செய்து நான் சிறுகச்சிறுக இந்த சிறைச்சாலையிலேயே என்னுடைய பிராணனை விட்டுவிடும்படியான நிலைமையை உண்டுபண்ணியதோடு திருப்தியடையாமல் நீங்கள் இன்னமும் மேன்மேலும் ஏதேதோ சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நிரம்பவும் பொறுப்பு வாய்ந்த பெரிய உத்தியோகத்தை வகிப்பவர்கள். நீங்களே இப்படிப்பட்ட இழிவான சதியாலோசனைகளுக்கு எல்லாம் இடங் கொடுத்தால், இந்த நகரத்திலுள்ள ஜனங்களுக்கு என்னவிதமான பாதுகாப்பு இருக்கப் போகிறது. இது வேலியே பயிரை அழிப்பது என்றே நியாயத்தைப் போல இருக்கிறது. ஜனங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றி ரக்ஷிப்பதற்காகப் போலீசாரும் நியாயாதிபதிகளும் எவ்விடத்திலும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தேசத்தில் மாத்திரம்

அப்படி இல்லை போலிருக்கிறது. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்பதையும் சிபார்சையும் வேறு பலவிதமான காரணங்களையும் வைத்துக்கொண்டு நீங்கள் ஒரு தலைச் சார்பாக இருந்து ஜனங்களை வதைக்கத் தொடங்கினால், மனிதர் இப்படிப்பட்ட தேசத்தில் இருப்பதை விட கொடுமையான பாம்புகளும், கரடிகளும், புலிகளும் வசிக்கும் காடுகளில் போய் வாழ்வது கூட உசிதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அபிராமி என்ற அந்தத் தாதிப்பெண் அன்றைய தினம் இரவில் சுவரைக் குடைந்துகொண்டு நான் இருந்த அறைக்குள் வந்து என்னைத் துன்மார்க்கமான நடத்தையில் செலுத்த முயன்றாள். நான் அதை மறுத்துக் கடைசிவரையில் அவளது விருப்பத்துக்கு இணங்காமலேயே இருந்து வந்தேன். அவள் நடித்த நாடகமும், அடித்த ஆட்டமும், செய்த தந்திரங்களும் பயன்படாமல் போகவே, அவள் என்னிடம் பலாத்காரத்தை உபயோகித்து பல தடவைகளில் என்னைக் கட்டிப் பிடிக்க முயன்றாள். நான் முதலில் நயமாகவும் பயமாகவும் சொல்லிப் பார்த்தது எல்லாம் பயன்படாமல் போகவே, நான் அவளைத் தூரத்தில் தள்ளிவிட நேர்ந்தது. அவள் வேண்டுமென்றே கீழே விழுந்து தனது மண்டையை உடைத்துக் கொண்டாள். அந்தச் சமயத்தில் நீங்கள் வந்தீர்கள். பாராக்காரன் குற்றத்தையெல்லாம் என்மேல் சுமத்தினான். அவளும் அவனுக்கு அனுசரணையாகவே பேசினாள். அதைக்கேட்டுக் கொண்டு நீங்களும் போய் விட்டீர்கள். உண்மையில் இங்கே என்ன நடந்ததென்று என்னிடத்தில் கேட்க வேண்டுமென்ற நியாயம் உங்களுடைய மனசில் படவில்லை. இப்போது நீங்கள் நியாயாதிபதியினிடத்தில் நடந்த விசாரணையில் சாட்சி சொன்னதாகச் சொல்லுகிறீர்கள். அந்தப் பெண் சொன்னதே வேதவாக்கியம் என்று நீங்கள் எண்ணி அப்படியே சாட்சியம் சொன்னீர்கள் போலிருக்கிறது. இவைகளையெல்லாம் யோசிக்கையில், இந்தத் தாதிப் பெண் என் அறைக்கு வந்தது முதலிய காரியங்களெல்லாம் உங்களுக்குத் தெரிந்தே நடந்திருக்கின்றன

என்பது நிச்சயமாகத் தெரிகிறது. நீங்களும் அந்தப் பெண்ணும் பாராக்காரனும் சொன்னதை வேதவாக்கியமாக நம்பி நியாயாதிபதியும் தீர்ப்புச் செய்துவிட்டார் போலிருக்கிறது. பாழும் ஊருக்கு நரிராஜன் என்பதுபோல நீங்கள் வைத்ததே சட்டமாக இருக்கிறது. நீங்கள் பார்க்கும் உத்தியோகத்தின் பெருமை என்ன? கெளரதை என்ன? நீங்கள் செய்யத் தொடங்கிய காரியமென்ன? அந்தப் பெண் கேவலம் தாசிப் பெண். அவளுக்கு என்னைப் புருஷனாகச் சேர்த்து வைக்கும் இழிதொழிலை நீங்கள் ஏற்றுக்கொண்டு அதற்காக இத்தனை பாடுபட்டுச் செய்யத்தகாத காரியங்களைச் செய்திருக்கிறீர்களே! அதை நினைக்க நினைக்க என் மனமே கூசுகிறது. இதுவரையில் அந்தப் பெண்களினிடத்தில் நான் எப்படிப்பட்ட மன உறுதியோடு நடந்து கொண்டிருக்கிறேன் என்பதை அவர்கள் உங்களிடம் சொல்லியிருப்பார்கள் என்றே நினைக்கிறேன். அந்த உறுதியை மீறி நான் இனியும் நடப்பவனல்ல. அதனால் என் உயிர் போவதானாலும் போகட்டும். நான் அந்தப் பெண்ணோடு வாழ வேண்டும் என்று நியாயாதிபதி செய்திருப்பதாகச் சொல்லும் அநியாயத் தீர்ப்புக்கு நான் ஒரு நாளும் கட்டுப்படவும் மாட்டேன். நீங்கள் சொல்லும் ஒப்பந்தத்துக்கும் நான் இணங்க மாட்டேன். என்னை நீங்கள் சாதாரணமாக விட்டால் விடுங்கள். இல்லையானால் என்னை நீங்கள் வேறே எந்தக் கொடுமைக்கு ஆளாக்கினாலும் ஆளாக்கலாம். அதற்கெல்லாம் நான் பின் வாங்குகிறவனல்ல. நீங்கள் என் விஷயத்தில் செய்த மற்ற சகலமான அநியாயங்களையும் நான் பொறுத்துக்கொள்வேன். ஆனால், நீங்கள் எனக்குச் சம்சார மாகப் போகிற பெண்ணை ஏமாற்றி அவளை இந்த ஊருக்கு அழைத்து வந்த கொடுமையை மாத்திரம் நான் என்றைக்கும் மறக்கவே மாட்டேன். அந்தப் பெண்ணை நீங்கள் இப்போது எங்கே வைத்திருக்கிறீர்கள் என்பதையும் சொல்லி, அவளுக்கு நான் ஒரு கடிதம் எழுதவும் அனுமதி கொடுப்பீர்களானால், நீங்கள் இதுவரையில் செய்த தீங்குகளுக்கு எல்லாம் அது ஓர் ஆறுதலாக இருக்கும்'' என்றான்.

அவனது வார்த்தைகளைக் கேட்ட போலீஸ் கமிஷனர் தமது மனத்தில் எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, "ஐயா! என்னிடத்தில் வேறே யாராவது இப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகித்திருந்தால், இந்நேரம் நான் அவர்களுக்குத் தக்கபடி புத்தி கற்பித்திருப்பேன். நீர் இத்தனை நாட்கள் நோயாகப் படுத்திருந்து இன்னமும் பலஹீனமான நிலைமையிலேயே இருக்கிறீர் ஆகையால், உம்மிடம் நான் அதிகமாகக் கடுமைக் காட்ட விரும்பவில்லை. ஆகையால், நீர் இப்போது சொன்ன மட்டுக்கு மிஞ்சிய வார்த்தைகளை நான் பொருட்படுத்தாமல் உம்மை இந்தத் தடவை மன்னித்துவிடுகிறேன். இனி நீர் இப்படிப்பட்ட துடுக்கான வார்த்தைகளை என்னிடம் உபயோகிக்க மாட்டீர் என்று நினைக்கிறேன். நீர் குறும்புத் தனத்தினால் இப்படிப் பேசுகிறீரா, அல்லது மதியீனத்தினால் இப்படிப் பேசுகிறீரா என்பது தெரியவில்லை. அபிராமி என்ற பெண் அடைபட்டிருந்த அறையில் சுவரைக் குடைந்து கொண்டு நீர் அவள் இருந்த இடத்துக்குப் போயிருந்ததை நானும் மற்றவர்களும் கண்ணாரப் பார்த்ததை நீர் மறந்து விட்டீரா? அவளை நீர் பலாத்காரம் செய்து கீழே தள்ளி அவள் பிரக்ஞை இழந்து போகும்படி செய்து, பிறகு அவளைத் தெளிவிக்க நீர் முயன்றதை நாங்கள் பார்க்கவில்லையா? 'உன்னுடைய பிடிவாதமெல்லாம் என்னிடம் செல்லுமென்றா நினைத்தாய்?' நானோ ஏமாறுகிறவன்?' என்ற வார்த்தைகள் உம்முடைய வாயிலிருந்து வரவில்லையா? அந்த வார்த்தை களுக்கு வேறு என்ன அர்த்தம் இருக்கிறது? அவள் கடைசி வரையில் உம்முடைய விருப்பத்துக்கு இணங்க மறுத்துப் பிடிவாதமாக இருக்க, நீர் பலாத்காரமாக அவளை அடக்கி, உம்முடைய துர் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டீர் என்ற அர்த்தம் ஏற்படுகிறதல்லவா? நீர் செய்த காரியத்தை உம்முடைய வாயாலேயே ஒப்புக் கொண்டிருந்தும், இப்போது எல்லாவற்றையும் மறுத்து நாங்கள் ஏதோ சூழ்ச்சிகள் செய்தோம் என்று சொல்ல வருகிறீரே? உமக்கு ஏதேனும் பைத்தியம்

கொஞ்சம் உண்டா? ஏதோ பூனா தேசம் என்கிறீர், பட்டமகிஷி என்கிறீர், சதியாலோசனை என்கிறீர், தாதிப் பெண்கள் என்கிறீர்; உம்மை வசப்படுத்த முயன்றார்கள் என்கிறீர். அந்த விவரமெல்லாம் இன்னதென்பதே எனக்கு விளங்கவில்லை. இந்த அபிராமி என்ற பெண் ஏதோ திருட்டுச் சொத்தைச் சொற்ப விலைக்கு வாங்கின குற்றத்துக்காக என்னுடைய கீழ் அதிகாரிகளால் சிறைப்படுத்தப்பட்டவள் என்பது மாத்திரம் எனக்குத் தெரியுமே அன்றி வேறே எந்த விவரமும் எனக்குத் தெரியாது. அதுவுமின்றி, நிரம்பவும் இளமைப் பருவமும் நாணமும் வாய்ந்தவளான அந்தப் பெண் உம்மைப் பலாத்காரம் செய்தாள் என்று சொன்னால், அதைப் பைத்தியக்காரன் கூட ஏற்றுக்கொள்ள மாட்டான். எவ்விடத்திலும் எப்போதும் சாதாரணமாகப் புருஷர்கள்தான் பலாத்காரம் செய்வது இயற்கையே அன்றி, பெண்கள் செய்ததாக நான் இதுவரையில் கேள்வியுற்றதே இல்லை. உம்முடைய உடம்பில் அடிபட்ட குறிப்பாவது காயமாவது காணப்படவே இல்லை. அவளுடைய உடம்பில் பலவிடங்களில் வீக்கமும், காயமும் நிறைந்திருந்தனவே. அவற்றிலிருந்து யார் பலாத்காரம் செய்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லையா. முக்கியமாக நீர் அவளுடைய அறைக்குள் காணப்பட்டதான அந்த ஒரு சாட்சியமே நீர்தான் குற்றவாளி என்பதை மெய்ப்பிக்கப் போதுமானது. வேறு எந்த ருஜுவும் எங்களுக்குத் தேவையில்லை. உண்மையை மறைத்து நீர் சொல்லும் தப்பான வாக்குமூலத்தையும் நாங்கள் நம்பமாட்டோம். உம்மைக் கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்திருக்கும் பெண்ணான ஷண்முகவடிவு என்பவளுக்கு உம்முடைய அயோக்கியத்தன மெல்லாம் தெரிந்து போய்விட்டது என்று நினைத்து பயந்து நீர் இப்போது எல்லாவற்றையும் மாற்றி மகா பரிசுத்தமான மனிதர் போலப் பேசுகிறீரா? இந்தப் பாசாங்கைக் கண்டு நாங்களும், ஷண்முகவடிவும் ஏமாறிப் போவோம் என்று எண்ணிக் கொண்டீரா? நீர் தான் புத்திசாலியென்றும், மற்றவர்களுக்குப்

புத்தி இல்லையென்றும் நினைத்துக் கொண்டீரோ? ஷண்முக வடிவு என்னும் பெண் இப்போது எங்கே இருக்கிறாள் என்றும், என்ன நிலைமையில் இருக்கிறாள் என்றும் நீர் எதற்காகக் கேட்கிறீர்? அப்படி நீர் கேட்பதற்கு உமக்கு என்ன உரிமை இருக்கிறது? அவைகளுக்கெல்லாம் நான் உத்தரம் சொல்ல வேண்டுமென்பது என்ன கட்டாயமோ தெரிய வில்லை. நான் முடிவாக உம்மிடம் ஒரே வார்த்தையில் என் கருத்தைச் சொல்லிவிடுகிறேன். அதன்படி நீர் நடக்க வேண்டியதைத் தவிர, நீர் செய்யக்கூடியது வேறே ஒன்றுமில்லை. நீர் என்னிடத்தில் தாறுமாறான வார்த்தைகள் உபயோகித்தால், இனி நான் கொஞ்சமும் இரக்கமென்பதே காட்டப்போகிறதில்லை. நியாயாதிபதியின் தீர்மானத்தின்படி நான் உம்மை அபிராமியின் வசத்தில் ஒப்புவிக்கக் கடமைப் பட்டவனாய் இருக்கிறேன். நீர் ராஜாங்க சம்பந்தமான கைதி. ஆகையால், உம்மிடம் நான் ஒப்பந்தம் எழுதி வாங்கிக்கொண்டு தான் உன்மையில் அவளிடம் அனுப்ப வேண்டும் ஆகையால், நீர் அதற்கு இணங்கியே தீரவேண்டும். இதுதான் என்னுடைய முடிவான வார்த்தை; நீர் என்ன சொல்லுகிறீர்? ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்கிறீரா?'' என்றார்.

அவர் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட கலியாணசுந்தரம் நிரம்பவும் பிரமித்துப்போய்ச் சிறிதுநேரம் மௌனமாக நின்றுவிட்டான். அபிராமி செய்த சூழ்ச்சியின் உண்மை யெல்லாம் போலீஸ் கமிஷனருக்குத் தெரிந்திருக்குமா இருக்காதா என்ற சந்தேகம் மறுபடி எழுந்து அவனது மனதைக் குழப்பியது. ஆனாலும், அவரும் அதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்ற எண்ணமே மேலாடுகின்றது. தான் அபிராமி யைத் தனது சம்சாரமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தன்னை எந்த நியாயாதிபதியும் கட்டுப்படுத்த முடியாது என்றும் எண்ணம் அவனது மனதில் உறுதியாகவும் தெளிவாகவும் பட்டது. ஆகையால், தான் அந்த நியாயாதிபதியினது

தீர்மானத்தை நேரில் படித்துப் பார்க்க வேண்டும் என்று போலீஸ் கமிஷனரிடம் சொன்னால், அவ்வளவு தூரம் சதியாலோசனை செய்யத் துணிந்தவரான அந்த அயோக்கிய மனிதர் கற்பனையாக ஒரு தீர்மானம் தயாரித்துக் கொணர்ந்து காட்டப் பின்வாங்க மாட்டார் என்ற எண்ணம் உதித்தது. ஆகையால் தனக்கு அந்தத் தீர்மானத்தைக் காட்டும்படி அவரிடம் கேட்டுக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆகவே, அவன் போலீஸ் கமிஷனரை நோக்கி உறுதியாகவும் திடமாகவும் பேசத் தொடங்கி, ''ஐயா! உங்களிடத்தில் நான் என்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுவது வீண் பிரயத்தனம் என்றே நினைக்கிறேன். மனிதர் நடுநிலைமை தவறாதிருந்து, இரண்டு கட்சிக்காரர்களையும் விசாரித்து, உண்மை எது, பொய் எது என்பதை உள்ளபடி அறிந்து கொண்டு நீதி செலுத்த வேண்டும் என்ற மேன்மையான மனப்போக்குடையவராக இருந்தால், அவரிடம் நான் என்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லலாம். ஒரு கட்சியில் சேர்ந்துகொண்டு எதிர்க் கட்சிக்காரருக்கு வேண்டும் என்றே அக்கிரமம் செய்யத் தீர்மானித்துக் கொண்டிருக்கும் மனிதரிடத்தில் நான் ஆயிரம் எடுத்துச்சொன்னாலும், அது செவிடனுடைய காதில் சங்கை ஊதுகிறது போன்றதன்றி வேறல்ல. ஆகையால், நான் இனி உங்களிடம் அதிகமாய்ப் பேச இஷ்டமில்லை. நீங்கள் என்னை எப்படிப்பட்ட கொடுமை களுக்கும் அக்கிரமங்களுக்கும் ஆளாக்கலாம். நான் எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்துச் செய்யமாட்டேன். அபிராமி என்ற பெண்ணையும் நான் சம்சாரமாக ஏற்றுக்கொள்ள சாத்தியப்படாது. நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் பலாத்காரம் செய்து கொள்ளலாம்; நான் என் மனசார எதற்கும் இணங்க மாட்டேன்'' என்று அழுத்தமாகவும் முடிவாகவும் கூறினான்.

அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர் கோபநகை நகைத்து, ''ஓகோ! அப்படியா சங்கதி! நீர் எதற்கும் இணங்கிவர

மாட்டீரோ? ஒரு பெரிய நியாயாதிபதி செய்திருக்கும் தீர்மானத்தை நீர் ஒப்புக்கொள்ள முடியாது என்று சுலபமாகச் சொல்லிவிட்டால் உம்மை அவ்வளவோடு விட்டு விடுவார்கள் என்று நினைத்தீரா? இப்படியெல்லாம் நீர் ஒரே பிடிவாதமாகப் பேசினால், நாங்கள் உம்மைக் கட்டாயப்படுத்த முடியாது என்று நினைத்துக் கொண்டீரா? அந்த எண்ணத்தை விட்டுவிடும். நாங்கள் எங்களுடைய மருந்தைப் பிரயோகிக்கத் தொடங்கு வோமே யானால், அதன்பிறகு நீராகவே ஒரு நிமிஷத்தில் வழிக்கு வந்துவிடுவீர். இன்று முழுதும் நான் உமக்கு அவகாசம் கொடுக்கிறேன். நீர் நன்றாக யோசித்து நாளையதினம் காலையில் முடிவைத் தெரியும். இப்போது நான் உம்மை அதிகமாக வற்புறுத்தப் போகிறதில்லை, இவ்வளவோடு போகிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம், ''நான் யோசிப்பதற்கும் நாளையதினம் சொல்வதற்கும் ஒன்றும் பாக்கியில்லை. நான் சொல்லக் கூடியதையெல்லாம் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். நீங்கள் சொல்லும் ஒப்பந்தத்திற்கும் நான் இணங்கமுடியாது. அந்தப்பெண்ணையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் இப்போதே உங்களுடைய மருந்தை உபயோகிக்கத் தொடங்கலாம், உங்களுடைய மருந்து இன்ன தென்பதும் எனக்குத் தெரியும். என்னை நீங்கள் ஈவிரக்க மில்லாமல் அடித்து வற்புறுத்தப் போகிறீர்கள். நீங்கள் அப்படியே செய்யலாம். அதற்கெல்லாம் நான் பின்வாங்கு கிறவனே அல்ல. என்னை நீங்கள் அணுஅணுவாக வெட்டி சித்திரவதை செய்தாலும், நான் என் மனசாரத் தகாத காரியத்தைச் செய்யமாட்டேன்; செய்வதாக வாயாலும் ஒப்புக் கொள்ள மாட்டேன். இது நிச்சயமான வார்த்தை. இதைத்தவிர நான் நாளையதினம் எதையும் சொல்லப் போகிறதில்லை'' என்றான்.

அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர் நிரம்பவும் புரளியாகப் பேசத் தொடங்கி, ''ஓகோ! உம்மை அடித்து வற்புறுத்தப் போகிறோம் என்று நீர் நினைத்துக் கொண்டிருக்கிறீரா? நாங்கள் இரண்டோர் அடி கொடுத்தால், உமக்கு உடனே ஸ்மரணை தப்பிப்போகும். அதற்குமேல் நாங்கள் என்ன செய்கிறோம் என்பது உமக்குத் தெரியப் போகிறதில்லை. ஆகையால், உம்மை அடித்து உபத்திரவிப்பதனால், காரியம் பலிதமடையப் போகிறதில்லை என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், நாங்கள் உம்முடைய விஷயத்தில் இன்னொரு புதிய மருந்து உபயோகப்படுத்தப் போகிறோம். அது இன்னதென்று நீர் தெரிந்துக் கொள்ளப் பிரியப்பட்டால், அதையும் வெளியிடத் தடையில்லை'' என்றார். கலியாண சுந்தரம், ''இனி நான் உங்களிடம் எதையும் கேட்கப் பிரியப்பட வில்லை; நீங்கள் சொல்வதைச் சொல்லலாம்; செய்வதைச் செய்யலாம்'' என்று நிரம்பவும் அசட்டையாக மறுமொழி கூறினான்.

போலீஸ் கமிஷனர், ''ஐயா! நான் சொல்வதை நீர் நிரம்பவும் அற்பமாக மதித்து அலட்சியமாகப் பேசுகிறீர். நான் விவரம் முழுவதையும் தெரிவித்தால், நீர் இப்படி அசட்டையாகவும் தைரியமாகவும் பேசமாட்டீர் என்பது நிச்சயம். அதையும் நான் சொல்லிவிடுகிறேன். இந்த ஊரில் பார்ப்பதற்கு பயங்கரமாக இருக்கும் ஒரு இடத்தில் நிரம்பவும் பந்தோபஸ்தான ஒரு கட்டிடம் இருக்கிறது. அதற்குப் பைத்தியக்காரர் வைத்திய சாலை என்று பெயர். அதன் உட்புறம் இரண்டு பாகங்களாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பாகம் ஆண் பிள்ளைகளாலும் மற்ற பாகம் பெண் பிள்ளை களாலும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆண்பிள்ளைகளின் கட்டிடத்தில் சுமார் பதினைந்து பைத்தியக்காரர்கள்தான் இப்போது இருக்கிறார்கள். பெண்பிள்ளைகள் இருக்கும் பாகத்தில் சுமார் இருநூறு பைத்தியக்கார ஸ்திரீகள்

அடைபட்டிருக்கிறார்கள். சுமார் பதினைந்து வயசு முதல் ஐம்பது வயசு வரையில் அடைந்துள்ளவர்களான அந்த ஸ்திரீகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பைத்தியம் பிடித்திருக்கிறது. ஆண்பிள்ளைகளைப் பார்க்கும்போதே அவர்களுள் சிலருக்கு ரௌத்திராகாரமான கோபம் பிறந்து விடும்; அவர்கள் அந்த ஆண்பிள்ளைகளின் மேல் பாய்ந்து பலவகையில் அடித்து வதைத்துக் கடித்து உபத்திரவிப் பார்கள். வேறு சிலருக்கு ஆண்பிள்ளைகளின் மேல் ஏற்பட்ட மகா அமிதமான பிரேமையினாலும் மோகா வேசத்தினாலும் கட்டுக் கடங்காத கொடிய பைத்தியமும் மதமும் பிடித்திருக்கின்றன. அவர்கள் உம்மைப் போன்ற ஆண்பிள்ளைகளைக் கண்டு விட்டால், கரும்பைக் கசக்கிச் சாறுபிழியும் ஆலையைப் போல உம்மை உயிரோடு சித்திரவதை செய்து உம்முடைய மனசுக்கு விரோதமான காரியங்களை எல்லாம் செய்துவிடுவார்கள். இவ்விதமான பைத்தியங் கொண்டிருப்ப வர்கள் முக்கியமாக கிழவிகளாகவே இருக்கிறார்கள். இன்னும் பலர் எந்தப் புருஷனைக் கண்டாலும், தங்களுடைய பிள்ளையென்று பாவித்துக் கட்டிக்கொள்ள வருகிறார்கள்; சிலர் புருஷன் என்று கட்டிக் கொள்ள வருகிறார்கள். வேறுசிலர் பகைவன் என்று வதைக்க வருகிறார்கள். அப்படிப்பட்ட மகா பயங்கரமான பெரிய பைத்தியக்காரிகளின் கும்பலில் நாங்கள் உம்மைக் கொண்டுபோய் விட்டுவிடப் போகிறதன்றி, அவர்களால் உம்முடைய உயிருக்கு எவ்வித ஹானியும் நேராமல் பார்த்துக் கொள்ளும்படி, சுய உணர்வோடு இருக்கும் சில காவல்காரிகளை நியமிக்கப் போகிறோம். நீர் எப்போதும் உயிரோடும் சுய உணர்வோடும் இருந்து, இரவு பகல் சதா காலமும் அத்தனை பைத்தியக்காரிகளும் செய்யும் சேஷ்டை களை அனுபவித்துக் கொண்டு அவ்விடத்தில் என்றும் சிரஞ்சீவி யாக இருக்கலாம். ஏனென்றால், உமக்கும் ஸ்திரீகளைப் பலாத்காரம் செய்வதில் ஆசை அதிகம். ஆகவே உம்முடைய மனசுக்குப் பிடித்த இடமாகப் பார்த்து உமக்கு ஏற்படுத்தி

இருக்கிறோம்'' என்று நிரம்பவும் ஏளனமாகவும் மமதை யாகவும் கூறினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட கலியாணசுந்தரத்தின் உடம்பு தானாகவே கிடுகிடென்று நடுங்கியது. போலீஸ் கமிஷனர் குறித்த வைத்தியசாலையில் ஏராளமான பைத்தியக்காரப் பெண்பிள்ளைகளின் இடையில் அகப்பட்டுக்கொள்ளும் புருஷருக்கு நேரக்கூடிய கதியும் அவ்விடத்தில் நிகழக்கூடிய பயங்கரமான காட்சியும் கலியாணசுந்தரத்தின் மனதில் அப்போதே பிரத்தியட்சமாகத் தோன்றின. ஆகையால், அவன் கட்டுக்கடங்கா அருவருப்பும் திகிலும் கொண்டவன் ஆனான். அப்படிப்பட்ட கொடிய நரகத்திற்குள் நுழையுமுன் தான் தனது உயிரைவிட்டு விடுவதே உசிதமான காரியம் என்று அவன் அப்போதே தீர்மானித்துக் கொண்டவனாய் நிரம்பவும் அசட்டையாகவும் அருவருப்பாகவும் அவரை நோக்கிப் பேசத் தொடங்கி, ''சபாஷ்! இதுதான் ஆண்மைத்தனம்! உங்களுடைய பெரிய மனுஷத்தனம் எவ்வளவென்பது நன்றாக விளங்குகிறது! உங்களைப் போன்ற கண்ணியமான மனப்போக்குடைய மனிதர்கள் இந்தப் போலீஸ் இலாகாவில் இருப்பதனாலேதான் ஜனங்கள் போலீசாரைப் பற்றி நிரம்பவும் பெருமையாகவும் பூஷணையாகவும் பேசுகிறார்கள்! இந்த தேசத்து ராஜாங்கத்தார் இப்படிப்பட்ட பெரிய உத்தியோகத்திற்கு உங்களைத் தேடிப் பிடித்தார்களே! அபிராமி என்ற தாதிப் பெண் உண்மையிலேயே நியாயாதிபதியினிடம் பிராது செய்து, நீங்கள் சொல்லுகிற பிரகாரம் தீர்மானம் பெற்றிருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அதை நிறைவேற்ற, சட்டம் இப்படிப்பட்ட அநாகரிகமான பரிகாரத்தைத்தானா சொல்லுகிறது? நியாயாதிபதி தீர்மானம் செய்துவிட்டால், அது ஒரு கட்சிக் காரருக்கு அனுகூலமாகவும், இன்னொரு கட்சிக்காரருக்குப் பிரதிகூலமாகவும் இருப்பது இயற்கை யல்லவா? பிரதிகூல மடைந்த கட்சிக்காரர் அதைப்பற்றி மேல் நியாயஸ்தலங்களுக்கு

முறையிட்டுக் கொள்ள சட்டம் இடம் கொடுக்கிறது. அப்படி மேல் நியாயஸ்தலத்துக்கு முறையிட்டுக் கொண்டபின் அவர்களும் அவருக்குப் பிரதிகூலமாகத் தீர்மானம் சொல்லி விட்டால், அதன் பிறகே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தத் தீர்மானம் இப்படிப்பட்ட வழக்குகளில் எப்படியிருக்க வேண்டுமென்றால், நான் அந்தப் பெண்ணின் கற்பைப் பங்கப்படுத்தி விட்டதாகவே வைத்துக் கொண்டாலும், அவளை நான் சம்சாரமாக வைத்துக்கொண்டு ஆயிசுகால பரியந்தம் ரக்ஷிக்க வேண்டுமென்றும், தவறினால், அவளுக்கு ஜீவனாம்சமோ அல்லது வேறுவிதமான நஷ்ட ஈடோ செய்து கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்வது சட்டப்படி நியாயமாகுமே அன்றி, நான் அவளைச் சம்சாரமாகத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், வேறு வழியில்லை என்றும் கூறிக் கட்டாயப்படுத்துவது மூடத்தனமே ஒழிய வேறல்ல. நான் அவளைச் சம்சாரமாக அவசியம் ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டுமென்று நியாயாதிபதி தீர்மானித்ததால், அந்தத் தீர்மானம் சரியாக நிறைவேறுகிறதா என்று யார் பார்க்கிறது, எப்படிப் பார்க்கிறது? இப்படிப்பட்ட நகைப்புக்கு இடமான தீர்மானத்தை எந்த நியாயாதிபதியும் செய்திருக்க மாட்டார் என்றே நான் துணிந்து சொல்லுவேன். இந்த ஊர் நியாயாதிபதி ஒருவேளை அப்படிப்பட்ட தீர்மானத்தைச் செய்திருப்பதாக வைத்துக் கொண்டாலும், நான் அதன்படி நடந்துகொள்ளத் தவறினால், என்னைப் பைத்தியக்காரப் பெண்பிள்ளைகள் நிறைந்த இடத்தில் கொண்டுபோய், அவர்களுக்கு இரையாக்கி விடவேண்டும் என்று அவர் தம்முடைய தீர்மானத்தில் எழுதியிருப்பார் என்றாவது, அல்லது, அப்படிச் செய்ய வேண்டுமென்று இந்த தேசத்துச் சட்டங்கள் இடம் கொடுக்கின்றன என்றாவது நான் நினைக்க முடியாது. நீங்களும் அதை ருஜுப்படுத்த முடியாது. ஆகையால், இந்த அக்கிரமச் செய்கை நீங்களாகச் செய்கிறதே அன்றி வேறல்ல. கட்சிக்காரர் விஷயத்தில் மிதமிஞ்சிய சிரத்தை எடுத்துக்கொண்டு நீங்கள்

இப்படிப்பட்ட அட்டூழியங்களை நிறைவேற்ற வேண்டுமானால், இதற்கு ரகசியமான காரணம் ஏதாவது அவசியம் இருக்க வேண்டும். அதனாலேதான் நீங்கள் ஆரம்பத்திலிருந்தே என்னை யாதொரு குற்றமும் இன்றி சிறைப்படுத்தி யோக்கியமான மனிதர் செய்யத் தகாத மகா இழிவான காரியங்களிலெல்லாம் இறங்கியதன்றி, மேன் மேலும் கொடுமையான காரியங்களைச் செய்ய எத்தனிக்கி றீர்கள். நீங்கள் இதுவரையில் செய்துள்ள காரியங்களிலிருந்தும் இப்போது செய்யப் போவதாகச் சொல்லும் காரியங்களி லிருந்தும், நீங்கள் அந்தத் தாதிப் பெண்களுக்கு வேண்டிய மனிதர் என்பது நிச்சயமாக விளங்குகிறது. ஆகையால், உங்களிடம் நான் எவ்வித அனுகூலத்தையாவது நன்மையை யாவது எதிர்பார்ப்பது மூடத்தனம். உங்களிடம் நான் சட்ட வாதம் செய்வதிலாவது நியாயவாதம் செய்வதிலாவது எவ்வித பலனும் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் சொல்லுகிறபடி நான் அந்தப் பெண்ணைச் சம்சாரமாக ஏற்றுக் கொள்ளவாவது, இந்த ஊரிலேயே இருக்கவாவது இணங்கா விட்டால் நீங்கள் உங்களுடைய கொடிய சதியாலோசனையை நிறைவேற்றியே தீருவீர்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆகையால், நீங்கள் உங்களுடைய பிரியம் எதுவோ அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். அதைப்பற்றி மனிதர் பின் வாங்குவது ஆண்மைத் தனமாகாது. ஆகையால், நான் எதற்கும் அஞ்சப் போகிறதில்லை. தகாத மனிதர்களான உங்களிடம் நான் எவ்வித அனுகூலத்தையும் நாடிக் கெஞ்சப் போகிற தில்லை. வருவது வந்தே தீரும். ஆகையால், நீங்கள் செய்வதைச் செய்யலாம்'' என்று ஒரே முடிவாகக் கூறினான்.

அவன் அவ்வாறு நிரம்பவும் தூஷணையாகவும் இழிவாகவும் பேசியதைக்கண்ட போலீஸ் கமிஷனர் அவன் மீது அளவற்ற கோபமும் குரோதமும் கொண்டவராய் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார். சிறைச்சாலை

யின் கதவும் மூடி வெளிப்பக்கத்தில் தாளிடப்பட்டது. மறுபடியும் தனிமையில் விடப்பட்ட கலியாணசுந்தரத்தினது மனநிலைமை எப்படி இருந்திருக்கும் என்று வாசகர்கள் எளிதில் யூகித்துக் கொள்ளலாம். போலீஸ் கமிஷனர் வந்ததற்கு முன்னர் ஜன்னலின் வழியாகத் தனக்கு அநாமதேயக் கடிதம் எழுதியது யாராக இருக்கலாம் என்ற யோசனை ஒரு பக்கத்தில் அவனது மனதைக் கவர்ந்து கொண்டது, போலீஸ் கமிஷனர் தன்னிடம் வந்து அபிராமிக்கு அனுகூலமான பிரஸ்தாபங்களைச் செய்ததிலிருந்து, அவளால் அப்படிப்பட்ட சூழ்ச்சிகள் நடத்தப்படுவதாகத் தோன்றவில்லை. இருந்தாலும், முதலில் அவர்கள் தன்னை அந்தச் சூழ்ச்சி வலையில் புகுத்தி, முடிவில் குற்றம் முழுவதையும் தன் மீது சுமத்தித் தான் நெடுங்காலம் வரையில் அந்தச் சிறைச்சாலையில் இருக்கும்படி செய்ய எத்தனிக்கிறார்களோ என்ற யோசனை தோன்றி அவனது மனத்தை வதைத்தது. அது நிற்க, அபிராமியை அந்த ஊரில் விடுத்து அவளது சகோதரிமார்கள் பூனாவுக்குப் போய் அவ்விடத்திலுள்ள பட்டமகிஷிக்கு அந்நேரம் தீங்கிழைத்திருப் பார்களோ வென்றும், அப்படியானால், தான் அத்தனை பாடுகள் பட்டு அவ்வளவு தூரம் வந்தது வீணாகிவிடுமே என்றும், அவன் பலவாறு எண்ணமிட்டு ஏங்கி வருந்தினான். அந்தப் போலீஸ் கமிஷனரது வஞ்சகச் சிறையிலிருந்து முயன்று யார் மூலமாக வாகிலும் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துப் பூனாவிலுள்ள பட்டமகிஷிக்கு அனுப்பி அம்மாளு, தனம் ஆகிய தாதிப் பெண்களைப் பற்றி எச்சரித்துவிட்டால், அதுவாகிலும் போதுமானது என்று அவன் நினைத்தான். ஆனாலும், எல்லாரும் போலீஸ் கமிஷனருக்கே அடிமையாக இருக்கும் அந்தக் கொடிய சிறைச்சாலையில் தான் எழுதும் கடிதத்தை ரகசியமாக எடுத்துக்கொண்டு போய்க் கொடுக்கக்கூடிய உண்மையான மனிதர் தனக்கு எங்கிருந்து வாய்க்கப் போகிறார்கள் என்ற கவலையும் ஏக்கமும் தோன்றி மனதைப் புண்படுத்தின. தான் அபிராமியோடு அந்த ஊரிலேயே இருந்துவிட வேண்டும்

என்று போலீஸ் கமிஷனர் சொன்னதை நினைக்க நினைக்க, அவனது மனம் கொதித்துத் தேகம் பதைத்தது, தான் அப்படிச் செய்யாத பட்சத்தில், தன்னைப் பைத்தியக்காரிகள் நிறைந்த வைத்தியசாலைக்குள் அடைத்துவிடுவதாகப் போலீஸ் கமிஷனர் கூறியது அவனால் சிறிதும் சகிக்கக் கூடாத பரம அசங்கியமான பிரரேபணையாகத் தோன்றியது. அவ்வளவு பெரிய உத்தியோகத்திலுள்ள அந்த மனிதர் அப்படிப்பட்ட மகா இழிவான சதியாலோசனைகளைச் செய்ய எப்படி இணங்கினார் என்ற சந்தேகமும் ஆச்சரியமும் அளவிலடங்காதனவாய்ப் பெருகி அவனது உள்ளத்தை அலைத்து உலப்பிக் கொண்டிருந்தன. உண்மையிலேயே போலீஸ் கமிஷனர் தாம் சொன்னது போலச் செய்கையிலும் நடப்பாரானால், தான் பைத்தியக்காரிகளினிடையில் இருப்பதைவிட, எப்படியாவது உடனே தனது பிராணனை விட்டுவிட வேண்டியதே முடிவென்று அவன் எண்ணிக்கொண்டான். அத்தனை நினைவுகளுக்கும் இடையில் அவனது ஆருயிர்க் காதலியான ஷண்முகவடிவினது சுந்தரவடிவம் அவனது அகக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. ஆகையால், அப்போது அவள் எங்கே இருக்கிறாளோ, தன்னைப்பற்றி எவ்விதமான எண்ணம் கொண்டிருக்கிறாளோ, இனி அவள் தன் விஷயத்தில் ஆரம்பத்தில் வைத்திருந்த கரைகடந்த வாத்சல்யத்தையும் பிரேமையும் வைத்து முன்போல நிஷ்கல்மிஷமாக நடந்துகொள்வாளோ, அல்லது, தான் சிநேகத்துக்குப் பாத்திரனல்ல என்று நினைத்துத் தன் மீது அருவருப்பும் பகைமையும் பாராட்டுவாளோ என்று அவன் பலவாறு எண்ணமிட்டு சிந்தாக் கிராந்தனாய் இருந்தான். அவ்வாறு அன்றைய இரவு கழிந்தது.

மறுநாள் காலையில் அவன் தனது சயனத்தை விட்டு எழுந்த காலத்தில், அவனது தேகஸ்திதி முதல்நாளில் இருந்ததைவிடப் பன்மடங்கு கேவல நிலைமை அடைந்துவிட்டது. அவனது

மனம் சதாகாலமும் பலவகைப்பட்ட சிந்தனைகளில் ஆழ்ந்து புண்பட்டிருக்க அவனது கவலைகளும் சந்தேகங்களும் பெருகிக்கொண்டே போயின. அதற்குமுன் எழுந்து தனது காரியங்களைத் தானே கவனிக்கத் தகுந்த நிலைமையிலிருந்த அவனது உடம்பு படுக்கையை விட்டு விலகி அப்பால் போய் உட்காருவதே சாத்திய மற்றதாகி விட்டது. இருந்தாலும், அவன் அப்பால் போய்த் தனது காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு முற்றிலும் கலவரமடைந்த உளத்தினனாய்த் தனது விசிப்பலகையின் மீது உட்கார்ந்து ஓய்ந்து சுவரில் சாய்ந்து கொண்டான். அரைநாழிகை நேரம் சென்றது. அவன் அசைவற்று உயிரற்ற சித்திரப் பாவை போல ஒரே நிலையில் காணப்பட்டான். அவனது மூச்சு பெருமூச்சுகளாக வந்து கொண்டிருந்தது. கண்ணீர் இரண்டு கண்களினின்றும் பொங்கி அருவிபோல இரண்டு கன்னங்களின் வழியாகக் கீழே வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவன் அடிக்கடி தனது கவலைகளை எல்லாம் விடுத்துத் தனது கவனத்தைக் கடவுளின் மீது செலுத்தித்தான். எவ்விதமான தவறுகள் செய்திருந்தாலும், அவைகளை மன்னித்துத் தனது இடர்களைக் களைந்து, தன்னைக் காத்தருளவேண்டும் என்று மனதுருகி ஸ்தோத்திரம் செய்துகொண்டே இருந்தான்.

அதன்பிறகு சிறிது நேரத்தில் அவன் இருந்த விடுதியின் கதவு திறக்கப்பட்டது. அந்த ஓசையைக்கேட்ட கலியாண சுந்தரம் திடுக்கிட்டு, அங்கே வந்தது யார் என்று திரும்பிப் பார்த்தான். தான் நோயாகப்படுத்தது முதல் தனது பணி விடைகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த தாதி தனது வழக்கப்படி அன்றைய தினம் காலையிலும் அவனுக்குச் செய்ய வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதற்காக அங்கே வந்தாள். அவளைக் கண்டவுடனே கலியாணசுந்தரம் தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சாதாரணமாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவள் வழக்கப்படி அந்த விடுதியின்

கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து அவனுக்குரிய பணிவிடைகளை எல்லாம் செய்யத் தொடங்கினாள். அதற்கு முன் ஒவ்வொரு நாளும் அவள் அவனது படுக்கையைத் தட்டி, மடித்து வைத்து வந்தாள். ஆகையால், அன்றைய தினமும் அவள் அதுபோலவே தனது கடமையைச் செய்ய நினைத்து, அவனது படுக்கையண்டை சென்று தலையணையை எடுக்க, அதன் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடிதம் அவளது திருஷ்டியில் பட்டது. முதல்நாள் அவ்வாறு கடிதத்தை மறைத்து வைத்த காலியாணசுந்தரம் தனது கலவரத்திலும் துயரத்திலும் அதை அடியோடு மறந்துவிட்டான் ஆகையால், அந்தத் தாதி தலையணையை எடுத்தபோது, கீழே இருந்த கடிதம் அவளது திருஷ்டியில் பட்ட காலத்திலேதான் அதைப்பற்றிய ஞாபகம் அவனுக்கு உண்டாயிற்று. உடனே அவன் பெருத்த திகிலும் விசனமும் அடைந்தவனாய், அந்தத் தாதி தான் கடிதத்தைக் கண்ட விவரத்தை எப்படியும் போலீஸ் கமிஷனரிடம் சொல்லிவிடுவாள் என்று நிச்சயித்துக் கொண்டான். ஆனாலும், அவன் சடேரென்று எழுந்து படுக்கையண்டைப் போய், ''இரம்மா! படுக்கையில் ஒரு சாமான் இருக்கிறது. அதை நான் எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறித் தலையணையின் கீழே கிடந்த கடிதத்தைத் தனது கையில் எடுத்துக் கொண்டான்.

அவன் படுக்கையண்டை நெருங்கி வந்ததைக் கண்ட அந்தத் தாதி மரியாதையாகச் சிறிது அப்பால் நகர்ந்து நின்று கொண்டாள். அதுகாறும் அவனிடத்தில் வாயைத் திறந்து ஒரு வார்த்தை யாகிலும் அவள் பேசாமலிருந்தாள். ஆனாலும் அவளது முகம் எவ்வித மாறுபாட்டையும் தோற்றுவிக்காமல் ஒரே விதமாக இருந்து வந்தது. ஆனாலும், அந்தக் கடிதத்தைக் கண்டபிறகு அவளது தோற்றம் மாறுபட்டுத் தோன்றியது. முகத்தில் களை தோன்றியது. அவள் அவனது அந்தரங்க விஷயங்களை எல்லாம் அறிந்தவள் போலவும் அவனிடம் பேச

ஆவல்கொண்டிருப்பவள் போலவும் காணப்பட்டாள். அதுவரையில் உயிரே இல்லாதிருந்தவள் போலக் காணப் பட்ட அந்தத் தாதி திடீரென்று தனது முகமலர்ச்சியால் அவனிடத்தில் அன்பும் அனுதாபமும் நிரம்பவும் காட்டியதைக் கலியாணசுந்தரம் ஒரு விநாடி நேரத்தில் உணர்ந்து கொண்டான். ஆனாலும் அது கனவோ நினைவோ என்ற சந்தேகம் அவனது மனதில் உதித்தது. அவள் தனக்கு அனுகூலமாக இருப்பாளோ, அல்லது அந்தக்கடிதம் தலையணையின் கீழ் இருந்ததிலிருந்து தன்மீது பெருத்த சந்தேகங்கள் கொண்டு அதைக் கமிஷனரிடம் சொல்லாமல் மறைத்து வைப்பதை ஒரு பெருத்த கருணையாக நினைத்து அதற்குக் கைம்மாறாக அவள் தன்னிடம் ஏதாவது தகாத விஷயங்களைப் பிரஸ்தாபிப்பாளோ என்றும், வேறு பலவிதமாகவும் கலியாணசுந்தரம் எண்ணமிட்டு அந்தக் கடிதம் ஜன்னலின் வழியாக உள்ளே போடப்பட்ட விவரத்தை எல்லாம் தான் அவளிடம் முன்னாகச் சொல்லிவைப்பதே உசிதம் என நிச்சயித்துக்கொண்டு அவளிடம் நயமாகப் பேசத் தொடங்கி, "இத்தனை நாளும் இல்லாமல் நான் ஏதோ ரகசியமான ஒரு வஸ்துவை இங்கே ஒளித்து வைத்திருப்பதாக நீ நினைத்துக் கொண்டு விடாதே. இது அப்படி விசேஷமான வஸ்து ஒன்றுமில்லை. நேற்றுதினம் இந்தக் கடிதத்தை இதோ இருக்கும் ஜன்னலின் வழியாகத் திடீரென்று யாரோ உள்ளே போட்டுவிட்டு அப்பால் போய்விட்டார்கள். நான் பார்த்து ஆச்சரியம் அடைந்து இதற்குள் என்ன இருக்கிறதென்று பார்க்க வேண்டுமென்று நினைத்து இதை எடுத்துப் பார்த்தேன். என்னை இந்தச் சிறைச்சாலையிலிருந்து விடுவிப்பதற்கு யாரோ பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற சங்கதி இதில் எழுதப்பட்டிருக்கிறது. முன்னே ஒருதரம் இதுபோலவே எனக்கு ஒரு கடிதம் வந்தது; அதிலிருந்து பிரமாதமான அநர்த்தங்கள் எல்லாம் விளைந்தன. அதுபோலவே இதுவும் என்ன விதமான பெருத்த அபாயத்துக்கு முன்னறிகுறியோ தெரியவில்லை. இதை என்ன செய்வதென்பதை அறியாமல்

எடுத்து இங்கே வைத்தேன். அவ்வளவுதான் வரலாறு. இதைப் பார்த்து நீ ஏதாவது வித்தியாசமாக எண்ணிக்கொள்ளப் போகிறாய். நீ வேண்டுமானால் இதைப் பிரித்துப் படித்துப்பார். இது யார் எழுதியிருக்கலாம் என்பது ஒருவேளை உனக்குத் தெரியக்கூடும். ஆகையால், இந்தக் கடிதத்தை நீ பிரித்துப் படித்துப் பார்'' என்று நயமாக வற்புறுத்திக் கூறியவண்ணம் கடிதத்தை அவளுக்கு எதிரில் வைத்தான்.

அவள் அந்தக் கடிதத்ததை எடுக்கவும் படிக்கவும் அவ்வளவாக ஆவல்கொள்ளாதவள் போலக் காணப்பட்டு, உள்ளடக்கிய மகிழ்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்த முகத்தினளாய் அவனை நோக்கி, ''இந்த உறைக்குள் என்னென்ன பொருள்கள் இருக்கின்றனவென்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதற்குள் இருக்கும் துண்டுக் காகிதத்தில் எழுதப்பட்டிருக்கும் சங்கதியும் இன்னதென்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், நான் இதை எடுத்துப் பிரித்துப் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை'' என்றாள்.

அவளுக்கு அந்தக் கடிதத்தைப் பற்றிய வரலாறு எதுவும் தெரிந்திருக்காது என்று அவன் எண்ணியிருந்தவன் ஆகையால், அவள் சொன்ன மறுமொழி அவனால் சிறிதும் எதிர்பார்க்கப் படாததாக இருந்தது. அவன் அளவற்ற வியப்பும் திகைப்பும் அடைந்து, அவளுக்கு அந்த விஷயம் எப்படித் தெரிந்திருக்கலாம் என்று பெரிதும் சந்தேகம்கொண்டு, ''என்ன ஆச்சரியம்! இந்தக் கடிதத்தைப் பற்றிய சகலமான வரலாறும் உனக்குத் தெரிந்திருக்கிறதே! இது ரகசியமாக வந்திருப்பதால், உனக்கு இது தெரிந்திருக்காது என்றல்லவா நினைத்தேன்! உனக்கு எல்லா விவரமும் தெரிந்திருப்பதும் நல்லதாயிற்று. இதன் சங்கதி ஒன்றையும் தெரிந்துகொள்ள மாட்டாமல் நேற்று முதல் நான் நிரம்பவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகையால், நீ இதன் உண்மையை வெளியிடுவாயானால் அதைக் கேட்டு என்னுடைய மனம் நிம்மதியடையும்'' என்றான்.

அதைக்கேட்ட தாதி நிரம்பவும் அன்பாகவும் பணிவாகவும் பேசத்தொடங்கி, "ஐயா! இந்தக் கடிதத்தைப் பற்றி இனி நீங்கள் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டாம். இதை நேற்றைய தினம் உங்களிடம் கொடுக்கும் பொருட்டு நான்தான் எடுத்து வந்தேன். போலீஸ் கமிஷனர் கைதிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வருவதாக பாராக்காரன் சொன்னான். அதைக் கேட்டவுடனே எனக்கு நிரம்பவும் பயம் உண்டாகிவிட்டது. என் கையில் கடிதம் இருந்தால் அதை அவர் ஒருவேளை கண்டுபிடித்து விடுவாரோ என்ற எண்ணத்தினால் நான் இதை ஜன்னலின் வழியாக உள்ளே போட்டு விட்டு விசையாக அப்பால் போய்விட்டேன். ஆனால், என் மனசில் மாத்திரம் ஒருவிதமான கவலை இருந்து வந்தது. ஜன்னலின் வழியாக உள்ளே விழுந்த இந்தக் கடிதத்தை நீங்கள் ஒருவேளை கவனிக்காமல் இருந்துவிடப் போகிறீர்களே என்றும், போலீஸ் கமிஷனர் உள்ளே வந்து கடிதத்தை எடுத்துப் பார்த்துவிடப் போகிறாரே என்றும் நான் நிரம்பவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். போலீஸ் கமிஷனர் இங்கே வந்து உங்களிடத்தில் பேசிவிட்டு வெளியில் வருகிறவரையில் என் உயிர் என் உடம்பில் இருக்கவே இல்லை. அவர் வெளியில் வந்து பாராக்காரனிடம் கடிதத்தைப் பற்றிய பிரஸ்தாபமும் எதுவும் செய்யாமல் போனபிறகு தான் கடிதத்தை நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று நான் நிச்சயப்படுத்திக் கொண்டேன்" என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் முன்னிலும் அதிகரித்த வியப்பும் கலக்கமும் கொண்டு, "ஓ அப்படியா சங்கதி! இந்தக் கடிதத்தை கொண்டு வந்து நீயா உள்ளே போட்டாய்! சரி; இதை யார் எழுதி உன்னிடம் கொடுத்தது? அவர்களுக்கு என் விஷயத்தில் இவ்வளவு தூரம் கருணை பிறக்கக் காரணம் என்ன? என்னை அவர்கள் எப்படி விடுவிக்கப் போகிறார்கள்? இதற்கு முன் நான் அடைபட்டிருந்த அறைக்கு ஒரு பெண் பிள்ளை வந்து பெருக்கிவிட்டுப் போவது வழக்கம். அவளும்

இப்படித்தான் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்து என்னைப் பெருத்த மோசடியில் மாட்டிவிட்டாள். அதுபோலவே இதுவும் ஏதாவது மோசடியான சூழ்ச்சியா அல்லது உண்மையான விஷயமா?'' என்றான்.

அதைக்கேட்ட அந்தத் தாதி முன்னிலும் அதிகப் பணிவாக வும் மனப்பூர்வமாக உண்மையையே பேசுகிறவள் போலவும் காணப்பட்டு, ''ஐயா! இந்தச் சிறைச்சாலையில் இதற்கு முன் யாரோ உங்களை மோசடியில் மாட்டிவிட்டதாக இப்போதுதான் நீங்கள் சொல்ல நான் தெரிந்து கொள்ளுகிறேன். அதைப்பற்றிய விவரம் எனக்கு எதுவுமே தெரியாது என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். நான் இந்தச் சிறைச்சாலையைச் சேர்ந்த சிப்பந்தியல்ல. நான் வைத்திய இலாகாவைச் சேர்ந்தவள். இங்கேயுள்ள கைதிகளுக்கு ஏதேனும் தேக அசௌக்கியம் உண்டாகுமானால், அவர்களுக்கு வைத்தியம் செய்ய இந்த வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு உதவியாக இருந்து நோயாளிகள் முற்றிலும் குணமடையும் வரையில் அவர்களுக்குரிய பணிவிடைகளைச் செய்யும் பொருட்டு என்னை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் இருவரும் வைத்திய இலாகா அதிகாரியினால் நியமிக்கப்பட்டவர்கள். ஆகையால், நாங்கள் இந்தச் சிறைச்சாலைக்குள் வேறே எந்த விஷயத்தையும் காதில் போட்டுக்கொள்ளக்கூடாது. நோயாளிகள் சம்பந்தப்பட்ட வரையில் நாங்கள் கவனித்துக் கொண்டு அவ்வளவோடு போய்விடவேண்டும். ஆகையால், உங்களுடைய முந்திய வரலாறாவது, இதற்குமுன் உங்களுக்கு இவ்விடத்தில் என்ன இடைஞ்சல்கள் நேரிட்டன என்பதாவது எனக்குத் தெரியவே தெரியாது. நேற்றுப்பகல் வரையில் நான் உங்களைப் பற்றி எந்த விவரத்தையுமே தெரிந்து கொள்ள வில்லை. நேற்று காலையில் நான் என்னுடைய இவ்விடத்து அலுவல்களை முடித்துக்கொண்டு சாப்பாட்டுக்காக வீட்டுக்குப் போன காலத்தில், அவ்விடத்தில் இரண்டு புருஷர்கள் என்

வருகையை எதிர்பார்த்தவர்களாய்க் காத்திருந்தனர். நான் அவர்களுடன் பேச்சுக் கொடுத்து அவர்களுடைய வரலாற்றைக் கேட்டேன். தாங்கள் தஞ்சாவூரிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னதோடு, இந்தச் சிறைச்சாலையில் கலியாண சுந்தரமென்ற ஒருவர் யாதொரு குற்றமும் இன்றி அநியாயமாக அடைபட்டிருப்பதாகவும், அவருடன் தாங்கள் கடிதப் போக்குவரத்து செய்ய ஆசைப்படுவதாகவும் கூறி, நான் அதற்கு அனுகூலமாக இருக்க வேண்டுமென்று நிரம்பவும் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக் கொண்டதன்றி, ஒரு பெருத்த பணப்பையையும் வற்புறுத்தி எனக்குச் சன்மானமாக அளித்தனர். நான் அந்தப் பணத்துக்காகச் செய்யாவிட்டாலும் அவர்கள் என்னை ஒரு பொருட்டாக மதித்து அவ்வளவு தூரம் கேட்டுக் கொண்டதைக் கருதி நான் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினேன். முதலில் கலியாணசுந்தரம் என்பது யார் என்பதே எனக்குத் தெரியவில்லை. நான் வந்து விசாரித் ததில் அது உங்களுடைய பெயர் எனத் தெரிந்துகொண்டு, அவர்கள் கொடுத்த முதல் கடிதத்தைக் கொணர்ந்து ஜன்னலுக்குள் போட்டேன். அவ்வளவுதான் விவரம்'' என்றாள்.

அவள் சொன்ன விவரங்களைக் கேட்ட கலியாணசுந்தரம் நிரம்பவும் வியப்பும் சந்தேகமும் கொண்டு சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவள் சொன்னது உண்மையான விஷயமாக இருக்குமா, அல்லது, தனது பகைவரினது தூண்டுதலின்மேல் கட்டுப்பாடாகச் சொல்லப்பட்ட விஷயமாக இருக்குமா என்ற பெருத்த சந்தேகம் பிறந்தது. அவன் அந்தத் தாதியை நோக்கி, ''ஏனம்மா! உன்னிடம் கடிதம் கொடுத்து அனுப்பிய மனிதர்கள் தங்களுடைய வரலாறுகளையும் அவர்கள் என்னை விடுவிக்க முயற்சிக்க வேண்டிய காரணம் என்ன என்பதையும் உன்னிடம் வெளியிட்டார்களா'' என்றான்.

தாதி, ''அதையெல்லாம் நான் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் யாரென்றும் அவர்கள் உங்களை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டிய காரணமென்ன என்றும் நான் இரண்டு மூன்று தரம் கேட்டுக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் நிரம்பவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுவதாகத் தெரிகிறது. தாங்கள் சொல்லுகிறபடி செய்ய வேண்டுமென்று மாத்திரம் அவர்கள் கெஞ்சி மன்றாடி என்னிடம் கேட்டுக் கொள்ளுகிறார்களே அன்றி, தங்களுடைய வரலாறு எதையும் வெளியிட அவர்கள் தயங்குகிறார்கள். ஆகையால், நான் அவர்களை அந்த விஷயத்தில் அதிகமாக வற்புறுத்தவில்லை'' என்றாள்.

கலியாணசுந்தரம்:- அவர்கள் இருப்பது தஞ்சாவூர் என்றார்களா? அல்லது, அந்த ராஜ்ஜியத்திலுள்ள வேறே ஏதாவது ஊர் என்று சொன்னார்களா?

தாதி:- தஞ்சாவூரிலிருந்துதான் வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

கலியாண:- அவர்கள் தங்களுடைய பெயரைக் கூடச் சொல்லவில்லையா?

தாதி:- அவர்கள் சொல்லவும் இல்லை. நானும் அதைக் கேட்கவில்லை.

கலியாண:- பார்வைக்கு அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? எவ்வளவு வயசிருக்கும்?

தாதி:- இரண்டுபேருக்கும் சுமார் முப்பத்தைந்து அல்லது நாற்பது வயசிருக்கலாம். இருவரும் கருப்பாகவும் புஷ்டியாகவும் உயரமாகவும் இருக்கிறார்கள். முகத்தில் அடர்த்தியாகவும் நீளமாகவும் மீசைகளிருக்கின்றன. அவர்கள் நல்ல பலசாலிகளாகவும் சாமர்த்தியசாலிகளாகவும் காணப்படுகிறார்கள்.

கலியாண:- ஒகோ! அப்படியா சங்கதி! அவர்கள் யாரென்பது எனக்கு ஞாபகம் உண்டாகவில்லையே! நீ குறிப்பிடும்

அடையாளங்களைக்கொண்ட மனிதர்களை நான் பார்த்திருப்பதாகவே நினைவு உண்டாகவில்லையே! சரி; இருக்கட்டும். அவர்களிடம் நீ நேற்று இங்கே கடிதம் போட்டதைச் சொல்லி இருப்பாயே; இப்போது நீ புறப்பட்டு இங்கே வந்தபோது அவர்கள் ஏதாவது சங்கதி சொல்லி அனுப்பினார்களா?

தாதி:- நேற்றைய தினம் நான் ஜன்னலின் வழியாகக் கடிதத்தைப் போட்ட விவரத்தைக்கேட்டு அது முதல் அவர்கள் நிரம்பவும் கவலை கொண்டிருக்கிறார்கள். கடிதம் உங்களிடம் வந்து சேர்ந்திருக்குமோ, அல்லது, வேறே யாரிடத்திலாவது அகப்பட்டிருக்குமோ என்று அவர்கள் சந்தேகப்பட்டு, அந்தச் சந்தேகம் தீர்ந்தபிறகு தான் மறுபடியும் செய்தி சொல்லி அனுப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த விஷயத்தில் உண்மையாக நடந்து கொள்ளுகிறேனோ, அல்லது மோசம் செய்து விடப்போகிறேனோ என்றும் அவர்கள் சந்தேகிக்கிறதாகத் தெரிகிறது. ஆகையால் நேற்று அவர்கள் அனுப்பிய கடிதம் உங்களிடம் ஒழுங்காக வந்து சேர்ந்து விட்டது என்றும், என்னை நம்பலாம் என்றும் நீங்கள் இப்போது ஒரு கடிதம் எழுதியனுப்பினால், நான் அதைக் கொண்டு போய் அவர்களிடம் சேர்த்துவிடுகிறேன். அதன்பிறகு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டும் கடிதம் ஏதாவது கொடுத்தால் அதை வாங்கிக் கொண்டும் நான் மறுபடியும் சாயுங்காலம் வந்து சேருகிறேன்- என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் தான் என்ன செய்வது என்பதைப்பற்றி சிறிதுநேரம் யோசனை செய்தான். அந்தத் தாதி உண்மையான மனிஷியா, அல்லது அபிராமி முதலிய கூத்தாடிப்பெண்களின் தூண்டுதலினாலோ, அல்லது, போலீஸ் கமிஷனரின் சூழ்ச்சியினாலோ தன்னிடம் மோசக் கருத்தாக நடந்து கொள்ளுகிற கபட்டு மனுஷியா என்ற சந்தேகம் பெரிதாக எழுந்து வருத்தியது. ஆனாலும், தனது சந்தேகத்தை

தான் அவளுக்குமுன் வெளியிடுவதும் உசிதமாகத் தோன்ற வில்லை. அவள் சொன்ன வரலாறு நிஜம்போலவும் தோன்றியது; வஞ்சகம்போலவும் தோன்றியது. தனக்குக் கடிதம் அனுப்பியுள்ள மனிதர்கள் உண்மையிலே தனக்கு அனுகூலம் செய்யவந்த மனிதர்களாக இருப்பார்களா, அப்படியிருந்தால், அவர்களை யார் அனுப்பி இருப்பார்கள் என்ற சந்தேகமும் தோன்றியது. தனக்கு உதவி செய்யக் கூடியவர்கள் ஷண்முகவடிவைத் தவிர வேறு எவரும் இல்லை. ஆகையால், அவளே அவர்களை அனுப்பியிருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. கடைசியாகத் தானும் அபிராமியும் ஒன்றாயிருந்த காலத்தில் தன்னைக் கண்டு தான் துராகிர்தமான காரியம் செய்துவிட்டதாக நம்பி அந்த விசனத்தைச் சகிக்க மாட்டாமல் மயங்கிக் கீழே வீழ்ந்த அந்தப் பெண்மணி தன்னை வெறுத்து விலக்க வேண்டியதே ஒழுங்காயிருக்க அதை விட்டு மறுபடியும் தன்மீது இரக்கங்கொண்டு தன்னை விடுவிப்பதற்காக ஏற்பாடுகள் செய்ய மனிதரை அனுப்புவது அசம்பாவிதமாகத் தோன்றியது. ஒருவேளை, தன்மீது குற்றமில்லையென்றும், அபிராமி முதலியோர் தனது விஷயத்தில் வஞ்சகம்செய்து விட்டனர் என்றும், அவள் பின்னால் தெரிந்து கொண்டு தனது கெட்ட அபிப்பிராயம் மாறாமலேயே இருந்தும், தன்மீது கொண்ட அபாரமான அன்பினால் தூண்டப்பட்டவளாய்த் தனது தவறுகளை யெல்லாம் பாராட்டாமல் தன்னை விடுவிப்பதே முதன்மை யான கடமையென்று எண்ணி அந்த மனிதர்களை அனுப்பி இருப்பாளோ என்ற யோசனையும் தோன்றியது. எப்படி யிருந்தாலும், தான் கை மாட்டி எதையும் எழுதாமல் நிரம்பவும் ஜாக்கிரதையாக எழுத வேண்டும் என்ற நினைவோடு கலியாண சுந்தரம், தன்னிடமிருந்த எழுதப்படாத துண்டுக் கடிதத்தையும் பென்சிலையும் எடுத்து அதில் பின்வருமாறு எழுதலானான்:-

வெளியிலுள்ள நண்பர்களுக்கு,

நீங்கள் என்மேல் அன்புகூர்ந்து அனுப்பிய கடிதம் வரப்பெற்றேன். இந்தச் சிறைச்சாலையில் சதியாலோசனைகளும் மோசடிகளும் சகஜமான காரியங்களாக இருப்பதால், எதையும் மனிதர் உடனே நம்புவதற்கில்லை. ஆகையால், மேலே கண்ட கடிதமும் ஏதாவது வஞ்சகச் சூழ்ச்சியைச் சேர்ந்ததாக இருக்குமோ என்னவோ என்ற சந்தேகமே என் மனசிலிருந்து வருகிறது. என்னை விடுவிக்க எத்தனிப்போர் இன்னார் என்பதே எனக்குத் தெரியவில்லை. அது எனக்குத் தெரிந்தாலன்றி, உண்மை இன்னது என்பது எனக்கு நிச்சயப்படாது. நானும் துணிந்து என்னுடைய எண்ணத்தை வெளியிட முடியாது.

அதுநிற்க, இந்தத் தாதி இன்றைய தினந்தான் என்னிடம் வாய் திறந்து பேசினாள். இவளுக்கும் எனக்கும் கொஞ்சமும் பழக்கமே இல்லை. இவள் எப்படிப்பட்டவள் என்பதும் எனக்குத் தெரியாது. ஆகையால், எந்த விஷயத்திலும் நீங்கள் உங்களுடைய முன் யோசனையை நன்றாக உபயோகப்படுத்தி வேலை செய்யுங்கள்.

-என்று கலியாணசுந்தரம் துண்டுக்காகிதத்தில் எழுதி அதை மடித்துத் தனக்கு வந்த உறைக்குள் வைத்து அதன் வாயை சோற்றுப் பருக்கையால் ஒட்டி அவளிடம் கொடுக்க, அவள் அதை வாங்கிக்கொண்டு தனது வழக்கப்படி மாலையில் வருவதாகச் சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டாள். கதவும் மூடி வெளிப்புறத்தில் தாளிடப்பட்டது. கலியாணசுந்தரம் அளவற்ற கவலையும் ஆவலும் கொண்டவனாய் நிரம்பவும் வருந்தி அன்றைய பகல் பொழுதைக் கழித்தான். அந்தத் தாதி சொன்ன வரலாறு முழுதும் கட்டுப்பாடான மோசமாய் இருக்குமோ, அல்லது, உண்மையாக இருக்குமோ என்றும், உண்மையாக இருக்குமானால், தனக்கு உதவி செய்ய வந்திருப்பவர்கள் யாராக இருப்பார்கள் என்றும், அவன் பலவாறு சந்தேகமுற்று வதைபட்டவனாய் அவள் எப்போது

திரும்பி வருவாள் வருவாள் என்ற ஆவலினால் வெதும்பி நலிந்து அன்றைய பொழுதைப் போக்கினான். மாலை நேரம் வந்தது. திடீரென்று வாசற்கதவு திறக்கப்பட்டது. வழக்கப்படி தாதி வருகிறாள் என்று அவன் எண்ணி சடேரென்று எழுந்து உட்கார்ந்து மகிழ்ச்சியினாலும், ஆவலினாலும் மலர்ந்த முகத்தோடு கதவின் பக்கம் திரும்பி நோக்க ஒரு பாராக்காரன் தன்னை நோக்கி உள்ளே வந்தது தெரிந்தது. அவனைக் கண்ட உடனே கலியாணசுந்தரத்தினது முகம் சடக்கென்று மாறு பட்டது. சந்தோஷம் ஒரு நிமிஷத்தில் பறந்துபோயிற்று. மறுபடியும் அவனது முகம் கவலையும் வாட்டமும் கொண்டு சுருங்கியது. ஒவ்வொரு மாலையிலும் வழக்கமாக வந்து கொண்டிருந்த தாதி வராமல் போனதும், என்றைக்கும் இல்லாமல் பாராக்காரன் வந்ததும் ஏதோ விபரீதத்தைச் சுட்டின. ஆகையால், அந்தப் பாராக்காரன் அவனிடம் நெருங்கி வந்து கொண்டிருந்த அந்த அற்ப காலம் அவனுக்கு ஒரு கற்பகாலம் போலத்தோன்றி அவனது மனதைப் புண்படுத்தியது. அவன் எவ்விதமான செய்தி சொல்ல வருகிறானோ என்ற கவலையும் தான் தாதியினிடத்தில் கொடுத்த கடிதம் போலீஸ் கமிஷனரிடத்தில் போய்ச் சேர்ந்திருக்குமோ என்ற பெரும் பீதியும் எழுந்து அவனது மனதைக் கப்பிக் கொண்டன. ஆகவே, அவன் பிரமித்துக் கலங்கி மௌனமாக அப்படியே பாராக்காரனைப் பார்த்தபடி நின்றான்.

அடுத்த நிமிஷத்தில் அந்தப் பாராக்காரன் நமது கலியாண சுந்தரத்தினிடம் நெருங்கி வந்து நின்று ஒரு கடிதத்தை நீட்ட, கலியாணசுந்தரம் மட்டற்ற ஆவலும் ஆச்சரியமும் அடைந்த வனாய், அதை வாங்கிப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான். அவனது கைகளும் உடம்பும் வெடவெட வென்று நடுங்கின. இருதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. மனம் முற்றிலும் குழம்பித் தவித்தது. அந்தக் கடிதம் யாரால் எழுதப்பட்டிருந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்ற

ஆவலே முதலில் உண்டானது. ஆகையால், அவன் அதன் அடியிலிருந்த கையெழுத்தைப் பார்த்தான். அடியில் போலீஸ் கமிஷனரின் கையெழுத்து காணப்பட்டது. அதைக் கண்டவுடனே அவனது குழப்பம் முன்னிலும் பன் மடங்கு அதிகரித்தது. அந்தக் கடிதத்தை அவன் உடனே படிக்க ஆரம்பித்தான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது-

ஐயா! நான் நேற்று நேரில் வந்து உம்மிடம் பேசிவிட்டுப் போனது உமக்கு நன்றாக நினைவிருக்கலாம். அப்போது நான் செய்து விட்டுவந்த பிரஸ்தாபங்களைப் பற்றி நீர் நேற்று இரவெல்லாம் நன்றாக யோசனை செய்திருப்பீர் என்று நம்புகிறேன். நீர் இன்னமும் அதே முடிவோடு இருக்கிறீரா, அல்லது நான் சொன்னதற்கு இணங்கிவர உத்தேசித்திருக்கிறீரா என்பதை முடிவாக அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும். ஆதலால், நான் இந்தக் கடிதத்தை உமக்கு அனுப்பி இருக்கிறேன். நான் சொன்னதற்கு நீர் இணங்குவதாக இருந்தால், நான் தயாரித்து வைத்திருக்கும் ஒப்பந்தத்தை உடனே அனுப்புகிறேன். அதில் நீர் உம்முடைய கையெழுத்துச் செய்து திருப்பி அனுப்புவீரானால் இன்றிரவே உம்மை விடுதலை செய்து அந்தப் பெண் உமக்காகத் தயாரித்து வைத்திருக்கும் சௌகரியமான ஜாகையில் கொண்டுபோய் உம்மைச் சேர்த்து விடச் செய்கிறேன். அதன்பிறகு நீர் இந்த ஊரைவிட்டு எங்கேயும் போகாமல் இருக்க வேண்டும். நீர் யாருக்காவது கடிதம் எழுதினால் அதை எங்கள் மூலமாகவே அனுப்ப வேண்டும். அப்படிச் செய்தால், அதன்பிறகு நாங்கள் உமது ஜோலிக்கே வருவதில்லை. நீர் அந்தப் பெண்ணோடு சுயேச்சையாக இருக்கலாம். இந்தப் பிரரேபணைகளை ஒப்புக் கொள்ள உமக்கு இஷ்டமில்லா விட்டால் நான் சொன்ன ஏற்பாட்டை நிறைவேற்றியே தீருவேன் என்பது கண்டிப்பாக உம்முடைய மனசில் இருக்கட்டும். நீர் எங்களுடைய வழிக்கு வராதபட்சத்தில் நாளையதினம் இரவு சுமார் பதினோரு

மணிக்கு இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு பைத்தியக்காரி களின் வைத்தியசாலைக்குப் போக நீர் ஆயத்தமாக இருக்க வேண்டியதே முடிவானகாரியம். நாங்கள் பொய்யாக உம்மைப் பயமுறுத்துகிறோம் என்று நினைத்து நீர் இதை அசட்டை செய்ய மாட்டீர் என்று நினைக்கிறேன். உம்முடைய முடிவான எண்ணம் என்ன என்பதை நீர் இந்தக் கடிதத்தின் பின்பக்கத்தி லுள்ள காலி இடத்தில் எழுதி இதையே திருப்பி அனுப்பவும்.

போலீஸ் கமிஷனர்.

- என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைக் கலியாணசுந்தரம் இரண்டுதரம் படித்து முடித்தான். அவனது மனதில் உண்டாகி யிருந்த பலவிதக் கவலைகளில் பெரும் பாகமும் குறைந்தது. தாதி தனக்குக் கொணர்ந்த கடிதத்தின் விஷயமும், தான் எழுதி அவளிடம் கொடுத்த கடிதத்தின் விஷயமும் ஒருகால் போலீஸ் கமிஷனருக்குத் தெரிந்திருக்குமோ என்று தான் கொண்ட கவலை வீண் கவலையென்று அவன் உடனே நிச்சயித்துக் கொண்டவனாய், தனக்கு எதிரில் நின்ற பாராக்காரனைப் பார்த்து, ''நான் இந்தக் கடிதத்திலேயே பதில் எழுதி அனுப்ப வேண்டும் என்று கமிஷனர் எழுதி இருக்கிறார். ஆனால், பென்சில் முதலியது எதுவும் இல்லை. உன்னிடம் இருந்தால், கொடு; நான் உடனே எழுதித் தருகிறேன்'' என்றான். பாராக்காரன் தான் அதற்காகவே ஒரு பென்சில் கொண்டு வந்திருப்பதாகக் கூறித் தனது சட்டைப்பையிலிருந்து ஒரு பென்சிலை எடுத்துக் கொடுக்க, அதைக் கலியாணசுந்தரம் வாங்கி கடிதத்தின் பின்புறத்தில் அடியில் வருமாறு உத்தரம் எழுதத் தொடங்கினாள்-

ஐயா! உங்களுடைய இந்தக் கடிதத்தை நான் நன்றாகப் படித்துப் பார்த்தேன். நீங்கள் முன்னர் என்னிடம் நேரில் பிரஸ்தாபித்த விஷயங்களைத் தவிர புதிதான விஷயம் எதுவும் இதில் காணப்படவில்லை. ஆகையால், நான் முன்னே சொன்ன

மறுமொழியைத் தவிர வேறே அதிகமாகச் சொல்ல புதிய விஷயமும் எதுவுமில்லை.

கலியாண சுந்தரம்.

-என்று அவன் அதற்கு உத்தரம் எழுதி அந்தக் கடிதத்தையும் பென்சிலையும் பாராக்காரனிடம் நீட்ட, அவன் அவைகளை வாங்கிக் கொண்டு அதற்குமேல் எதைப்பற்றியும் பேசாமல் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டான்.

அவன் போனபிறகு கால்நாழிகை சாவகாசம் சென்றது. அவ்விடத்தைவிட்டுக் காலையில் சென்ற தாதி தனது வழக்கப்படி மறுபடியும் அவனண்டை வந்து சேர்ந்தாள். அவளைக்கண்டவுடனே கலியாணசுந்தரத்தின் மனதில் பலவித எண்ணங்கள் பொங்கி எழுந்தன. அவள் எவ்விதமான மறுமொழி கொணர்ந்திருப்பாளோ என்றும் அவள் மூலமாக நடக்கும் கடிதப் போக்குவரத்து விஷயம் போலீஸ் கமிஷனருக்குத் தெரிந்ததாக இருக்குமோ என்றும், போலீஸ் கமிஷனர் தன் விஷயத்தில் செய்ய எண்ணியிருக்கும் பயங்கரமான கொடிய செய்கை நிறைவேறு முன் வெளியிலுள்ள நண்பர்கள் தன்னை எப்படித் தப்பவைக்கப் போகிறார்கள் என்றும் அவன் பலவாறு சஞ்சலம் அடைந்தவனாய் ஆவலே வடிவாயிருக்க, அவனண்டை நெருங்கி வந்த தாதி தனது இடையில் சொருகப்பட்டிருந்த ஒரு சிறிய கடிதத்தை வெளியில் எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

அவன் விரைவாக அதை வாங்கிப் பிரித்துப் படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது-

ஐயா! நீங்கள் எழுதியனுப்பிய சுருக்கமான மறுமொழி அடங்கிய கடிதம் வந்து சேர்ந்தது. நாங்கள் யார் என்பதையும் எங்களை யார் அனுப்பியது என்பதையும் முதலில் நீங்கள் அறிந்துகொள்ள விரும்புவது இயற்கையே. அந்த விவரத்தை நாங்கள் வெளியிடாத வரையில் நீங்கள் எங்கள் வார்த்தையில்

நம்பிக்கை கொள்ளமாட்டீர்கள் என்பதும் சகஜமே. இந்த விஷயம் போலீஸ் கமிஷனருக்குத் தெரிந்து போகுமானால் அதனால் கெடுதல் உண்டாகும் என்று நீங்கள் எப்படி பயப்படுகிறீர்களோ அதுபோலவே எங்களுக்கும் அது பயமாக இருக்கிறது. தஞ்சாவூரிலிருந்து இந்தத்தேசம் நிரம்பவும் அதிக தூரத்தில் இருக்கிறது. ஆகையால், அங்கே இருந்து ஏராளமான மனிதரைப் பக்க பலமாக நாங்கள் அழைத்துவர முடியவில்லை. இந்த ஊருக்கும் நாங்கள் புதியவர்கள். ஆகையால், எந்த மனிதரை நம்பலாம் எவரை நம்பக் கூடாது என்ற அனுபவம் எங்களுக்கு இல்லாதிருப்பதால் நாங்கள் இவ்விடத்தில் யாரையும் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால், எங்களுடைய சொற்ப பலத்தை வைத்துக்கொண்டே, நாங்கள் இந்தப் பெரிய காரியத்தை நிறைவேற்ற உறுதி செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எங்களுடைய கருத்தை யாரும் அறிவதற்குள் காரியத்தை முடித்துவிட வேண்டும் என்பது எங்களுடைய எண்ணம். ஆகையால், எங்களுடைய வரலாறு எதையும் கடிதத்தின் மூலமாகவாவது வாய் மூலமாகவாவது தெரிவிக்காமல் நாங்கள் கொஞ்சம் எச்சரிப்பாக நடந்துகொள்ள விரும்புகிறோம். எங்களைப்பற்றி நீங்கள் இப்போது சந்தேகப் படுவதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நம்முடைய எண்ணம் நிறைவேறிப் போகுமானால், அதன்பிறகு உங்களுடைய சந்தேகம் தானாகவே நிவர்த்தியாகிவிடும். இந்தக் கடிதம் கொண்டு வரும் அம்மாளோடு நாங்கள் பழகிப் பார்த்த வரையில் இவர்கள் நற்குணமும் உறுதியும் உள்ளவர் களாகத்தான் தெரிகிறது. இருந்தாலும், நீங்கள் எண்ணுவது போல நாம் எல்லோரிடத்திலும் அதிக முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வதே உசிதமானது. எவ்விதமான தந்திரம்செய்து உங்களை விடுவிக்கலாம் என்பதைப் பற்றி நாங்கள் பலவாறு யோசித்து வருகிறோம். எங்களுடைய முடிவான ஏற்பாட்டை பின்னால் தெரிவிக்கிறோம். இருந்தாலும், நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு கடிதம் எழுதி இந்த அம்மாளின் மூலமாக

எங்களிடம் அனுப்பிக் கொண்டிருங்கள். அந்தக் கடிதத்தில், சிறைச்சாலைக்குள் உங்களிடத்தில் கமிஷனர் எப்படி நடந்து கொள்ளுகிறார் என்பது போன்ற சகலமான வரலாறுகளையும் எழுதித் தெரிவித்துக் கொண்டே இருங்கள்; அதுவே போதுமானது. மற்ற விஷயங்களை நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம்.

-என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைக் கலியாணசுந்தரம் படித்து முடித்தவுடன் அவனது மனதில் இருவிதமான எண்ணங்கள் உதித்தன. அந்த மனிதர்கள் எழுதியிருந்தது உண்மை போலவும் இருந்தது; பொய் போலவும் இருந்தது. ஆனால், ஒரு விஷயம் மாத்திரம் திருப்தியை உண்டு பண்ணியது. தான் அவ்விடத்தை விட்டுத் தப்பிப் போவதற்காகத் தந்திரமான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது என்ற விஷயம் பிறருக்குத் தெரியாதிருப்பதற்கு அனுகூலமாகத் தானாவது, அவர்களாவது அந்த விஷயத்தைக் கடிதங்களில் எழுதாமலிருக்க நேர்ந்தது நிரம்பவும் திருப்திகரமாக இருந்தது. சிறைச் சாலைக்குள் தன் விஷயத்தில் போலீஸ் கமிஷனர் என்ன விதமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார் என்பதைத் தான் அப்படியே எழுதியனுப்புவது யாருக்காகிலும் தெரிந்தாலும் அதனால் தனக்கு அதிகமான தீங்கு எதுவும் நேரிடாது என்று கலியாணசுந்தரம் எண்ணிக் கொண்டான். ஆனாலும், அந்தக் கடிதத்தைப் படித்த பிறகு முக்கியமாக அவனது மனதில் ஓர் எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது. மறுநாள் போலீஸ் கமிஷனர் தன்னை அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தி பைத்தியக்காரிகள் இருக்கும் வைத்தியசாலைக்குள் கொண்டு போய் அடைக்கப் போகிறார். ஆதலால், வெளியிலுள்ள தனது நண்பர்கள் அதற்குமேல் தனக்கு எவ்வித அனுகூலமும் செய்ய முடியாது என்ற நினைவும், அதனால் ஒருவித ஏக்கமும் உண்டாயின. அவன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பின் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து அடியில் வருமாறு கடிதம் எழுதலானான்:-

வெளியிலுள்ள எனது நண்பர்களுக்கு,

நீங்கள் அன்புகூர்ந்து எனக்கு அனுப்பிய கடிதம் வரப்பெற்று விஷயங்களை நான் அறிந்து கொண்டேன்.

நீங்கள் என் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு என்னை விடுவிக்க முயற்சிப்பதிலிருந்து என்னுடைய வரலாறுகளெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதுவுமன்றி, நான் இந்தச் சிறைச் சாலைக்குள் அடைக்கப்பட்ட காரணமும், இவ்விடத்தில் சில தினங்களுக்குமுன் அபிராமி என்ற கூத்தாடிப் பெண் செய்த ஸாகஸங்களும் மோசங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவளும் இவ்விடத்திலுள்ள கமிஷனர் முதலிய எல்லோரும் ஒன்றுகூடி நான் அபிராமியைக் கற்பழித்துவிட்டதாகக் கட்டுப்பாடாக என்மேல் குற்றம் சுமத்துவதும் ஷண்முக வடிவைக் கொணர்ந்து காட்டியதும்கூட உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதன்பிறகு நான் கடுமையான நோயில் விழுந்து தப்பிப் பிழைத்தேன் என்பது உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. அது மாத்திரம் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நேற்றையதினம் போலீஸ் கமிஷனர் என்னிடம் வந்து தமது முடிவைத் தெரிவித்தார். அபிராமி என்னும் கூத்தாடிப்பெண் என்பேரில் நியாயாதிபதியினிடம் பிராது கொடுத்ததாகவும், நான் அவளைக் கெடுத்து விட்டபடியால் அவளை நான் சம்சாரமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நியாயாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் நான் உடனே புறப்பட்டுப் போய் அந்தப் பெண்ணின் ஜாகையில் அவளோடு இருக்க வேண்டுமென்றும்; அப்படிப் புறப்பட்டுப் போகுமுன் நான் ஓர் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்றும், நான் இந்த ஊரைவிட்டு வெளியில் போகக் கூடாதென்றும் யாருக்காவது கடிதம் எழுதினால் போலீசார் மூலமாக அனுப்ப வேண்டுமென்றும் இந்த இரண்டு விஷயங்களையும் ஒப்பந்தத்தில் எழுதிக் கையெழுத்துச் செய்ய வேண்டுமென்றும் போலீஸ்

கமிஷனர் என்னிடம் பிரஸ்தாபித்தார். நான் அதற்கு இணங்கவில்லை. அவர் சொன்னபடி நான் செய்யாவிட்டால், என்னை இந்த ஊரிலுள்ள பைத்தியக்கார வைத்தியசாலைக்குள் கொண்டுபோய் அடைத்து விடுவதாக அவர் பயமுறுத்தி விட்டுப் போனார். இப்போது மறுபடியும் அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். நான் அவர்களுடைய பிரரே பணைகளுக்கு இணங்கி வராவிட்டால், நாளையதினம் இரவு பதினோரு மணிக்கு என்னை இவ்விடத்திலிருந்து பைத்தியக் கார வைத்தியசாலைக்குக் கொண்டுபோகத் தீர்மானித்தி ருப்பதாக அவர் கடிதத்தில் எழுதியிருக்கிறார். நானும் அதற்கு மறுமொழி எழுதி அனுப்பிவிட்டேன். அவர் சொல்லுகிறபடி நான் செய்ய முடியாதென்றும், அவர் என்னை எவ்விடத்திற்காவது அனுப்பலாம் என்றும் நான் எழுதித் தெரிவித்து விட்டேன். அநேகமாய் அவர் என்னை நாளைய தினம் இவ்விடத்தை விட்டு அனுப்பிவிடுவார் என்றே நினைக் கிறேன். ஆகையால், நீங்கள் இனி என் விஷயத்தில் பிரயாசை எடுத்துக் கொள்வதில், எவ்வித அனுகூலமும் ஏற்படும் எனத் தோன்றவில்லை. என் தலைவிதிப்படியே எந்தக் காரியமும் நடக்கும். ஆதலால், அதைப்பற்றி நீங்கள் வீண் பிரயாசை எடுத்துக் கொள்வதினாலாவது அநாவசியமாக விசனிப்பத னாலாவது அந்த விதி மாறப் போகிறதில்லை. ஆகையால், என்ன நடக்கிறதோ அது நடக்கட்டும்; அதைப்பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவும் இல்லை; அஞ்சவுமில்லை.

இங்ஙனம்,
**கலியாணசுந்தரம்.**

-என்று அவன் ஒரு கடிதம் எழுதி அதை மடித்து நன்றாக ஒட்டி அந்தத் தாதியினிடம் கொடுத்து அனுப்பிவிட்டான்.

ஆனால், அவள் கடிதத்தை எடுத்துக்கொண்டு போனபிறகு கலியாணசுந்தரத்தின் மனதில் இன்னொரு கவலை திடீரென்று

உண்டாயிற்று. சிறைச்சாலைக்குள் நடந்த முக்கியமான விஷயங்களை எல்லாம் தான் விரிவாக எழுதியிருக்கும் அந்தக் கடிதத்தை அந்தத் தாதி போலீஸ் கமிஷனரிடம் காட்டிவிட்டால், அதிலிருந்து தனக்கு முன்னிலும் அதிகமான கெடுதல் ஏதேனும் சம்பவிக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. அவள் தன்னிடமிருந்து எடுத்துப் போகும் கடிதங்களையும் வெளியிலிருந்து எடுத்து வரும் கடிதங்களையும் போலீஸ் கமிஷனர் பார்த்திருந்தும் அவ்விடத்தில் மேலும் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்ப்பதற்காக, ஒன்றையும் அறியாதவர்போல அவைகளை அனுப்பிக்கொண்டு வருகிறாரோ என்ற ஐயமும் தோன்றியது. தனக்கு அவர் தம்மால் இயன்ற அளவு எவ்வளவு அபாரமான கொடுமை செய்யக்கூடுமோ அதைச் செய்ய உத்தேசித்திருக்கிறார் என்பது நன்றாக விளங்கியது. ஆகையால், அவர் அந்தக் கடிதங்களைப் பார்ப்பதும் ஒன்றுதான், பார்க்காது இருப்பதும் ஒன்றுதான் என்ற எண்ணமும் உண்டாயிற்று. ஆகையால், அவன் தனது மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அன்றையதினம் இரவைக் கழித்தான்.

மறுநாள் காலையில் வழக்கப்படி தாதி அவ்விடத்திற்கு வந்து, இன்னொரு புதிய கடிதத்தை அவனிடம் கொடுத்தாள். அவள் எவ்விதமான மறுமொழி கொண்டு வருவாள் என்று அவளது வருகையை நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த கலியாணசுந்தரம் அவள் கொடுத்த கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்க அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது-

ஐயா, நீங்கள் அனுப்பிய கடிதம் வந்தது. அதில் எழுதப்பட்டிருக்கும் புதிய விவரங்களை எல்லாம் தெரிந்து கொண்டோம். நாங்கள் எவ்விதமான தந்திரம் செய்யப் போகிறோம் என்பதை இப்போது வெளியிடுவது உசிதமல்ல என்று நினைக்கிறோம். உங்களை எப்படியும் விடுவித்தே தீரவேண்டுமென்று நாங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆகையால், நாங்கள் அசட்டையாகவாவது,

அசிரத்தை யாகவாவது இருப்போம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். கமிஷனர் உங்களை இவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப் போவதாகச் சொன்ன ஏற்பாட்டில் ஏதாவது மாறுபாடு, அல்லது காலவேறுபாடு முதலியவை ஏதாவது ஏற்பட்டால் அன்றி, மற்றபடி நீங்கள் இனி எங்களுக்குக் கடிதம் எழுதவேண்டியதில்லை. நாங்களும் உங்களுக்கு இனி கடிதம் எழுதவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை என்றே நினைக்கிறோம். நமக்கு இது காறும் அனுகூலமாக இருந்து கடிதங்கள் எடுத்துவந்த இந்தத் தாதிக்கு நாங்கள் தக்கபடி சன்மானம் செய்துவிட்டோம்.

இங்ஙனம்,

**வெளியிலுள்ள நண்பர்கள்.**

-என்று எழுதப்பட்டிருந்த சுருக்கமும், பூடகமுமான கடிதத்தைக் கலியாணசுந்தரம் படித்தபின் தான் அன்றைய தினம் மறுபடி கடிதம் அனுப்ப விரும்பவில்லை என்று தாதியிடம் சொல்லி அவளை அனுப்பிவிட்டான்.

அதன்பிறகு அன்றைய தினம் பகல் முழுதிலும் இரவு நெடுநேரம் வரையில் கலியாணசுந்தரம் கட்டிலடங்கா ஆவலும் வேதனையும் அடைந்து சஞ்சலத்தில் ஆழ்ந்து மனமாழ்கிக் கிடந்தான். போலீஸ் கமிஷனர் தன்னை எப்படியும் பைத்தியக்காரிகளின் இடையில் கொண்டுபோய் விட்டுவிடு வார் என்ற அச்சமும் கவலையும் எழுந்து அவனை நரக வேதனைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தது. ஆகையால், நாழிகை ஏறஏற அவனது சஞ்சலமும் துன்பமும் விஷம் ஏறுவது போலப் பெருகிக்கொண்டே இருந்தன. இடையில், ஒருவித நம்பிக்கையும் பெருகிக் கொண்டே இருந்தது. வெளியிலிருந்து தனக்குக் கடிதம் எழுதிய நண்பர்கள் ஏதோ தந்திரம் செய்யப் போவதாகக் குறிப்பிட்டிருந்ததிலிருந்து அவர்கள் எப்படியும் தன்னை விடுவிக்க ஏதேனும் முயற்சி செய்வார்கள் என்ற

ஒரு துணிவும் ஏற்பட்டது. ஆகவே, அவன் மாறி மாறி நம்பிக்கையும் அவநம்பிக்கையும் இன்பமும் துன்பமும் அடைந்து கலவரத்தில் ஆழ்ந்திருந்தான். மாலை நேரம் கழிய இரவு வந்தது. பதினோராவது மணி எப்போது வரும் வருமென்று அவனது மனம் பெருத்த ஆவலினால் வதை பட்டது. சரியாகப் பத்தே முக்கால் மணி நேரமாயிற்று. அவனது விடுதியின் வாசற்கதவு சடேரென்று திறந்துகொண்டது. அடுத்த நிமிஷம் போலீஸ் கமிஷனர் கலியாணசுந்தரத்தினிடம் வந்து சேர்ந்தார்.

அவர் உண்மையில் தனது வீம்பை நிறைவேற்றுவாரோ என்று அதுகாறும் நினைத்திருந்த கலியாணசுந்தரத்தின் சந்தேகம் உடனே நிவர்த்தியாயிற்று. அவர் எப்படியும் தமது வீறாப்பு மொழியைக் காரியத்தில் செய்தே காட்டப் போகிறார் என்பது நிச்சயப்பட்டது. அவனும் தனது மனவுறுதியை இழக்காமல் உடனே எழுந்துநின்று, ''சரி; நானும் இதோ தயாராக இருக்கிறேன்; புறப்படலாம்'' என்றான்.

அந்த வீரமொழியைக்கேட்ட போலீஸ் கமிஷனர் நிரம்பவும் திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தார். ஆனாலும், அவனிடம் நயமாகப் பேசத்தொடங்கி, ''ஐயா! நான் சொன்னபடி சரியான காலத்தில் இங்கே வந்ததிலிருந்து, நான் இந்த விஷயத்தை அலட்சியமாக விட்டுவிடக்கூடாத பரமசங்கடமான நிலைமையில் இருக்கிறேன் என்பது உமக்குத் தெரியலாம். நியாயாதிபதி செய்த தீர்ப்பையும் போலீஸ் சட்டத்தையும் நான் நிறைவேற்றியே தீரவேண்டியவனாக இருக்கிறேன். ஆனாலும், உம்மை மகா பயங்கரமான அந்தப் பைத்தியக்கார வைத்திய சாலைக்கு அனுப்ப மாத்திரம் என் மனம் இடம் கொடுக்க வில்லை. ஆகையால், நான் கடைசிமுறையாக உம்மிடம் நேரில் பேசி உம்முடைய முடிவைத் தெரிந்து கொண்டு மேல் காரியத்தைத் தொடங்கப் போகிறேன். நீர் கடைசி முடிவாகச் சொல்லிவிடும். நான் சொன்னபடி ஒப்பந்தத்தில் கையெழுத்துச்

செய்துவிட்டு அந்தப் பெண்ணை ஏற்றுக்கொண்டு இந்த ஊரிலேயே இருக்க ஒப்புக் கொள்ளுகிறீரா இல்லையா? என்ன சொல்லுகிறீர்?'' என்றார்.

கலியாணசுந்தரம், ''நீங்கள் ஏற்கெனவே நேரில் கேட்ட போதும், கடிதம் எழுதியபோதும், நான் எவ்விதமான மறுமொழி சொன்னேனோ அதே மறுமொழியைத்தான் இப்போதும் சொல்லப்போகிறேன். நீங்கள் என்னை அந்தப் பைத்தியக்காரிகளிடையில் கொண்டுபோய் விட்டபிறகு மறுபடி இன்னொரு தரம் நீங்கள் வந்து கேட்டால்கூட அப்போதும் நான் அதே மறுமொழியைத்தான் சொல்லுவேன். ஆகையால், நீங்கள் என்னை மேன்மேலும் கேட்க வேண்டுமென்று வீண் பிரயாசை எடுத்துக்கொண்டு உங்களுடைய அருமையான பொழுதை அநாவசியமாகச் செலவு செய்யவே வேண்டிய தில்லை. ஆகையால், உங்களுடைய முடிவான தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றலாம்'' என்று அழுத்தமாகவும் முடிவாகவும் கூறினான்.

அதைக் கேட்ட போலீஸ் கமிஷனர் வெட்கித் தலைகுனிந்த வராய், அதற்குமேல் அவனிடம் எவ்வித வார்த்தையும் சொல்லாமல் அவ்விடத்தைவிட்டு வெளியில் போய்விட்டார்.

சரியாகப் பதினோருமணி ஆயிற்று. இரண்டு சிப்பாயிகள் அவனிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் நிரம்பவும் முறுக்கான உடைகள் அணிந்து பெருத்த துப்பாக்கி, உருவிய பட்டாகத்தி முதலிய ஆயுதங்களை ஏந்தியவர்களாய்ப் பயங்கரமாகத் தோன்றினர். அவர்கள் கலியாணசுந்தரத்தை நடத்திக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டு சிறைச்சாலையின் வாசலை அடைந்தனர். அவ்விடத்தில் இரண்டு பிரம்மாண்டமான குதிரைகள் பூட்டப் பெற்றதும், நன்றாக மூடப்பட்டதுமான ஒரு பெட்டிவண்டி ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருந்தது, காசாரிகள் வண்டியின்மேல் சித்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தனர். லாந்தர்களும் கொளுத்தப்பட்டி

ருந்தன. கலியாணசுந்தரம் ஏறி வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டவுடனே, கதவு மூடித் தாளிடப் பெற்றது. உடனே வண்டி புறப்பட்டு விரைவாகச் செல்லத் தொடங்கியது. வண்டிக்குள் கலியாணசுந்தரத்தோடுகூட வேறு இரண்டு மனிதரும் உட்கார்ந்துகொண்டிருந்தனர். உள்ளே இருந்த விளக்கின் வெளிச்சத்தில் அவர்களுடைய உருவம் கலியாண சுந்தரத்துக்கு நன்றாகத் தெரிந்தது. ஆகையால், அவர்களுள் ஒருவர் இன்னார் என்பதைக் கலியாணசுந்தரம் உடனே கண்டு கொண்டான். சுமார் ஒன்றரை மாத காலத்துக்கு முன், அந்த ஊர்ச் சத்திரத் தண்டையில் தன்னைச் சிறைப்படுத்திய போலீஸ் அதிகாரியான முரட்டு மனிதன் ஒருவன் என்பதை அவன் உடனே உணர்ந்தான். மற்றவர் இன்னார் என்பதை அவன் அறிந்து கொள்ளக்கூடவில்லை. அவர்கள் இருவரும் போலீஸ் உடைகள் அணியாமல், சாதாரண உடைகளையே அணிந்து கொண்டிருந்தனர். அவனைச் சத்திரத்தண்டை சிறைப்படுத்திய மனிதன் அவனைக் கண்டவுடனே அவனோடு மரியாதை யாகவும் நயமாகவும் பேசத்தொடங்கவே, நிரம்பவும் கொடிய அக்கிரமஸ்தர்களான அந்தப் போலீஸ் சிப்பந்திகளினிடத்தில் வாய்திறந்து பேசவும் மனமற்றவனாய், கலியாணசுந்தரம் அருவருப்போடு வாய் திறந்து அன்பற்ற இரண்டொரு வார்த்தைகளால் சுருக்கமாக மறுமொழி கூறினான்.

அவ்விடத்தை விட்டுப் புறப்பட்ட வண்டி அந்த ஊருக்கு அருகில் இருந்த பெரிய ஏரியின் கரை வழியாகச் சிறிது தூரம்சென்று, அவ்விடத்திலிருந்து பிரிந்து செல்லும் மரமடர்ந்த சாலையில் திரும்பி எதிரிலிருந்த கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது இரவு பதினோருமணி சமயமானாலும், ஏராளமான வண்டிகள் அங்குமிங்கும் தாறுமாறாகப் போய்க் கொண்டிருந்தன. ஆகையால், கலியாண சுந்தரத்தைக் கொண்டுபோன வண்டியைத் தொடர்ந்து வேறு வண்டியாவது மனிதராவது வந்ததாகத் தோன்றவில்லை.

ஆனால், அவன் இருந்த பெட்டி வண்டி ஊரைவிட்டு வெளியில் நெடுந்தூரம் போகப்போக அதற்குமேல் வேறே வண்டிகள் காணப்படவில்லை; அவன் இருந்த வண்டி ஒன்றே தனிமையில் போய்க் கொண்டிருந்தது. கலியாண சுந்தரம் பெட்டி வண்டிக் கதவிலும் ஜன்னல்களிலும் இருந்த இடைவெளியால் அடிக்கடி பின்பக்கம் பார்த்துக்கொண்டே இருந்தான். ஏனென்றால், அவனது மனதில் இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித நம்பிக்கையும் மனஎழுச்சியும் தோன்றி அவனை ஊக்கிக் கொண்டே இருந்தன. ஏதோ தந்திரம் செய்து தன்னை விடுவிப்பதாக எழுதியிருந்த வெளியிலிருந்த மனிதர்கள் ஒருவேளை அந்த வண்டிக்குப்பின்னால் வருவார்களோ என்று அவன் எதிர்பார்த்தே அவ்வாறு கவனித்தவனாய் நிரம்பவும் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தான். தஞ்சையிலிருந்து வந்திருப்ப தாகச் சொன்ன தனது நண்பர்கள் தன்னை அந்தச் சந்தர்ப்பத்தில் விடுவிக்காவிடில், அதன்பிறகு அவர்கள் தன்னை விடுவிப்பதும் சாத்தியமற்ற விஷயம் என்று அவன் எண்ணிக் கொண்டு பின்புறத்தில் வைத்த விழியையும் கவனத்தையும் மாற்றாமல், ததேவத் தியானமாக வீற்றிருந்தான். அந்த இரவு நிரம்பவும் ரமணீயமாகவும் பிரகாசமும் உடையதாகவும் இருந்தது. பனி மிதமாக நிறைந்து குளிர்ச்சியும் இன்பமும் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரே பசுமையாக விரிந்திருந்த ஆகாயப் பரப்பில் தேவாமிர்தமே ஒன்றாகத் திரண்டு நின்று பிரகாசிக்கிறதோ என்று சந்தேகிக்குமாறு சந்திரன் நிகரற்ற எழிலோடு இயங்கியதும், எண்ணிறந்த தாரகைகள் அதைச் சூழ்ந்து நின்றதும் மண்டலேசுவரியான ஒரு சக்கரவர்த்தினி கோடிக்கணக்கான சேடிமார்கள் புடைசூழக் கொலு வீற்றிருப்பது போல, நிரம்பவும் நேத்திராநந்தமான இன்பக் காட்சியாக இருந்தன. இரு பக்கங்களிலிருந்த மரங்களின் இலைகளை அசைக்காமல் மெதுவாக வீசிய மந்தமாருதம் மனிதர், விலங்குகள், பறவைகள், பூச்சி, புழுக்கள் முதலிய சகலமான ஜீவராசிகளையும் ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது.

வண்டிக்குள் உட்கார்ந்திருந்த போலீஸ் சிப்பந்திகள், கலியாண சுந்தரம் தங்களோடு சம்பாஷிக்க விரும்பவில்லை என்பதை உணர்ந்தவராய் மௌனத்தில் ஆழ்ந்து போயினர். ஆனாலும், அவர்கள் அசட்டையாகவும் துயிலில் ஆழ்ந்து போகாமல், நிரம்பவும் விழிப்பாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறார்கள் என்பதை அவர்களினது விழிப்பான முகத்தோற்றம் நன்றாகக் காட்டியது.

அவர்கள் சிறைச்சாலையை விட்டுப் புறப்பட்டபின் சுமார் ஒரு மணிநேரம் பிரயாணம் செய்திருப்பார்கள். அப்போது வண்டியின் பின் பக்கத்தில் வெகு தூரத்திற்கு அப்பால் ஏதோ ஓர் ஓசை உண்டாவதாகத் தோன்றியது. அந்த ஓசை நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்துத் தோன்றவே, வண்டிக்குள் இருந்த மூவரும் தங்களது கவனத்தையும் வழியையும் பின்புறத்தில் திருப்பி, அது என்னவென்பதை அறிந்து கொள்ள எத்தனித்தனர். இரண்டொரு நிமிஷநேரம் கழிந்தது. இறுகலான அந்தத் தரையில் குதிரையின் குளம்புகள் தடதடவென்று அடித்துக் கொள்ளும் விரைவான ஓசை அவர்களுக்குப் பின்புறத்தில் உண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் யாரோ ஒரு மனிதர் ஒரு குதிரையின் மேலேறிக் கொண்டு காற்றாய்ப் பறந்து வந்து பொறிதட்டும் நேரத்தில் அந்தப்பெட்டி வண்டியைக் கடந்து முன்னால் போனதை அவர்கள் கண்டனர். ஆனால், அந்தக் குதிரை வெள்ளையா சிவப்பா என்பதையாவது, அதன் மேலிருந்த மனிதர் யார் என்பதையாவது அவர்கள் அறிந்து கொள்ளும் முன், அந்தக் குதிரை மாயமாகப் பறந்து முன்னால் ஓடிப்போய் விட்டது.

அதைக்கண்ட போலீஸ்காரர்களுள் ஒருவன் வண்டியின் ஜன்னலைத் திறந்துகொண்டு முன்னால் பார்த்தவண்ணம், ''என்ன ஆச்சரியம்! குதிரை எவ்வளவு வேகமாகப் போகிறது! பார்ப்பதற்குள் கண்பொறி கலங்கிவிடும்போலிருக்கிறதே! இவ்வளவு விசையாகப் போகிறவர் யாராக இருப்பார்கள்!''

என்று கூறிய வண்ணம் வியப்போடு கவனிக்க, குபீரென்று உள்ளே நுழைந்த காற்று அவனது மார்பின் ஆடையை உயர்த்தி விட்டது. அந்த மனிதன் தனது இடுப்பில் பயங்கரமான பிஸ்டல்கள் என்னும் சிறிய கைத்துப்பாக்கியில் இரண்டு சொருகிக்கொண்டிருந்து கலியாணசுந்தரத்தின் திருஷ்டியில் பட்டது. சிறிது நேரத்தில் அந்தப் போலீஸ் சிப்பந்தி ஜன்னலை மூடிவிட்டுத் தனது இடத்தில் உட்கார்ந்துகொண்டான். அவ்வாறு திடீரென்று குதிரை தோன்றி அதிவிரைவாக முன்னால் போனதைப் பற்றி அவர்கள் மூவரும் பெரிதும் வியப்புற்றுச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த தருணத்தில் முன் உண்டானதுபோல இன்னொரு புதிய ஓசை பின்புறத்தில் உண்டாயிற்று. அதைக்கேட்டு அவர்கள் முன்னிலும் பன்மடங்கு அதிகம் திடுக்கிட்டு, இப்போது வருகிறது யார் என்பதை யாவது நன்றாகக் கவனித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு உற்றுக் கவனிக்கலாயினர். முன்னே ஜன்னலின் கதவைத் திறந்து பார்த்த போலீஸ் சிப்பந்தி மறுபடியும் எழுந்து ஜன்னலின் கதவைத் திறந்து வெளியில் பார்க்க முயல, அதற்குள் இன்னொரு குதிரை மகா வேகமாக வந்து வண்டியைக் கடந்து அப்பால் போய்விட்டது. அதன் மேலும் யாரோ ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தது மாத்திரம் தெரிந்தது.

வண்டிக்குள் இருந்த போலீஸ் சிப்பந்திகள் இருவரும் அந்தப் புதுமையான சம்பவத்தைப் பற்றித் தமக்குள் நிரம்பவும் வியப்பாகப் பேசிக்கொள்ளத் தொடங்கினர். ஒருவன் மற்றவனை நோக்கி, ''இவ்வளவு வேகமாகப் போகிறவர்கள் யாராக இருக்கலாம்? ஒருவேளை ராஜாங்கத்தாரால் அவசரமாக எவ்விடத்துக்காவது அனுப்பப்பட்ட சாரணர்களாக இருப்பார்களா?'' என்றான்.

மற்றவன், ''அப்படியிருந்தால், அவர்கள் தன்னுடைய உத்தியோக உடுப்புகளைப் போட்டுக் கொண்டிருப்பார்களே!

இவர்கள் சாதாரண மனிதர்கள்போல அல்லவா உடுப்புப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்?'' என்றான்.

முன்னவன், ''அவர்கள் என்ன விதமான உடுப்புப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கக்கூட முடியாமல் போய்விட்டதே. அவர்கள் சாரணர்களாகத்தான் இருக்க வேண்டும். இந்த அகாலத்தில் வேறே யாரும் இவ்வளவு அவசரமாய்ப் போகவேண்டிய அவசியமிராது?'' என்றான்.

பின்னவன், ''ஏன்? நான் நன்றாகப் பார்த்தேனே! அவர்கள் உத்தியோக உடுப்புப் போட்டுக் கொள்ளவே இல்லை; சொந்த உடைகள்தான் அணிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் சர்க்காரால் அனுப்பப்பட்ட சாரணர்களாக இருக்க மாட்டார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது'' என்றான்.

முன்னவன், ''உடுப்புகளிலிருந்து நாம் எதையும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. இப்போது இராக்காலமாயிருப்பதால், இவர்கள் சாதாரண உடுப்புகளைப் போட்டுக் கொண்டிருக்க லாம்; பொழுது விடிந்தவுடனே உத்தியோக உடுப்புகளைப் போட்டுக் கொள்ளலாம்'' என்றான்.

இப்படி அவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொண்டிருக்க, வண்டி மேன்மேலும் சென்று கொண்டே இருந்தது.

ஆனால், நமது கலியாணசுந்தரம் மாத்திரம் வேறு விதமாக எண்ணிக் கொண்டிருந்தான். கண்பொறி தெறிக்கத்தக்கபடி அவ்வளவு விசையோடு சென்ற குதிரைப்பிரயாணிகள் இருவரும், தாதியால் குறிக்கப்பட்ட இரண்டு மனிதர்களாகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனது மனதில் உதித்தது. அவர்கள் வண்டியைக் கடந்து விரைவாகச் சென்றனர். ஆனாலும், கலியாணசுந்தரத்தின் கூர்மையான விழிகள் அவர்களது வடிவத்தை நன்றாகப் பார்த்துவிட்டது. அதற்குமுன்

தாதி குறிப்பிட்ட அடையாளங்களெல்லாம் அவர்களிடம் இருந்ததாக அவன் உணர்ந்து, தன்னை விடுவிப்பதற்காக வந்திருக்கும் மனிதரே அவர்கள் என்று ஒருவாறு நிச்சயப் படுத்திக் கொண்டான். தாதி தனது விரோதியின் கட்சியைச் சேர்ந்தவளல்ல என்றும், அவள் சொன்னதெல்லாம் உண்மை யென்றும் அவன் ஒருவாறு தீர்மானித்துக் கொண்டான். ஆனால், அவர்கள் இருவரும் எவ்விதமான தந்திரம் செய்து தன்னை விடுவிக்கப் போகிறார்கள் என்ற விவரம் தெரியாமையால், அவனது மனம் பலவிதமான சந்தேகங்களையும் யூகங்களையும் செய்து கரைகடந்த ஆவலும் பதைப்பும் கொண்டு வதைபட்டது. அவனது இருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டே இருந்தது. உடம்பு பதறிப் பறந்தது.

அந்த நிலைமையில், பெட்டி வண்டி எதிரில் தோன்றிய சிறிய பேட்டையை அடைந்தது. அவ்விடத்தில் பெட்டி வண்டியின் குதிரைகள் மாற்றப்பட்டன. அவ்விடத்தில் அவர்கள் கால் நாழிகை சாவகாசத்திற்குமேல் அதிகம் தாமதிக்காமல் உடனே புறப்பட்டு விட்டனர். பெட்டிவண்டி நிரம்பவும் விசையாகச் சென்றது. மேலும் அரைமணி நேரம் கழிந்தது. குதிரைகள் மாற்றப்பட்ட பேட்டை வெகுதூரம் பின்னால் போய்விட்டது. அப்போது அவர்கள் சென்ற பாதையின் இருபுறங்களிலும் கண்கண்ட தூரம் வரையில் பொட்டல் வெளியே தோன்றியது. ஆகையால், எங்கு பார்த்தாலும் ஒரே வெளியாகத் தோன்றிய தன்றி பச்சைப் பசேலென்று தோன்றிய ஆகாய வட்டம் நாற்புறங்களிலும் குடை கவிந்தது போலப் பூமியைத் தொட்டுக் கொண்டிருந்தது. அப்போது ஆகாயத்தில் சந்திரன் மாசு மறுவற்று நிரம்பவும் கம்பீரமாக ஜ்வலித்துக் கொண்டிருந்தது. ஆகையால், அதன் தெளிவான நிலவு அந்த விகாரமான பொட்டல் வெளியில் படிந்து ஆங்காங்கு தோன்றிய மொட்டை மரங்கள், குட்டைப் புதர்கள், முட்செடிகள், முதலிய வற்றிலிருந்து சிறிய சிறிய நிழல் உண்டாகும்படி செய்து

கொண்டிருந்தது. ஆனால், எவ்விடத்திலும் மனிதரது வாசஸ்தலமாவது மனிதர் பழகும் குறிப்பாவது காணப்படவே இல்லை. அந்தப் பயங்கரமான பொட்டல் வெளியைக் கடந்து தாங்கள் அப்பால் போகுமுன் தனது நண்பர்கள் தன்னை விடுவிக்க ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்ற ஓர் எண்ணம் கலியாணசுந்தரத்தின் மனதில் உதித்துக் கொண்டே இருந்தது. அப்படி அவர்கள் வந்து ஏதேனும் முயற்சி செய்வார்களானால், தானும் அவர்களுக்கு அனுகூலமாக இருந்து உதவி செய்ய வேண்டும் என்ற யோசனை அவனது மனதில் தோன்றியது. ஆகையால், அவன் உட்புறத்திலிருந்த பிரகாசத்தின் உதவியால் கபடமாகப் பார்த்து போலீஸ் சிப்பந்திகளுள் முக்கியமானவன் வைத்திருந்த இரண்டு பிஸ்டல்களையும் கவனித்து அவன் அவைகளை எவ்வாறு சொருகி வைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை நன்றாக ஆராய்ச்சி செய்துகொண்டான்.

அவர்கள் இருந்த பெட்டிவண்டி அம்பு பாய்வதுபோல நிரம்பவும் விசையாகச் சென்று கொண்டிருந்தது. அந்த வண்டியின் நிழல் அதன் வலது பக்கத்தில் தரையில் படிந்து நன்றாகத் தெரிந்தது ஆகையால், அதைக் கவனித்த கலியாண சுந்தரம், வண்டியின் மேல் இரண்டே இரண்டு காசாரிகளைத் தவிர, வேறே சிப்பாயிகள் யாரும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். ஆகையால், தனது நண்பர்கள், வண்டிக்குள் இருக்கும் இரண்டு போலீஸ் சிப்பந்திகளை மாத்திரம் அடக்கி விடுவார்களானால், தான் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். போலீசார் அதிக பந்தோபஸ்தோடு வராமல் இருந்ததிலிருந்து, தனக்கு உதவி செய்த தாதி தங்களது ரகசியம் எதையும் போலீசாரிடம் வெளியிட வில்லை என்றும், தனது நண்பர்கள் தன்னை விடுவிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைப் போலீசார் சிறிதும் சந்தேகிக்கவில்லை என்றும், கலியாணசுந்தரம் யூகித்துக் கொண்டான்.

அவன் அத்தகைய இன்பகரமான சிந்தனையில் ஆழ்ந்திருக்க, அவ்விடத்தில் குறுக்கிட்ட ஒரு பனந்தோப்பிற்குள் வண்டி சென்ற காலத்தில் திடீரென்று நாற்புறங்களிலிருந்தும் மனிதர் குபீரென்று கிளம்பி வண்டியை வளைத்துக் கொண்டனர். குதிரைகளின் முகத்தில் படேரென்று இரண்டு அடிகள் விழ, குதிரைகள் கிலிகொண்டு திடுக்கிட்டு நின்றுவிட்டன. கருத்துப் பெருத்த பனமரங்கள் போல இருந்த ஐந்தாறு முரட்டு மனிதர்கள் குபீரென்று பாய்ந்து உலக்கைகளைப் போலிருந்த பெருத்த தடிகளால் காசாரிகளின் மண்டையை உடைத்துக் கீழே உருட்டி விட்டனர். அந்த விபரீதத்தைக் கண்ட போலீஸ் சிப்பந்திகள் திடுக்கிட்டுப் பெருத்த திகில் கொண்டு எழுந்து வண்டியின் கதவுகளைத் திறந்தனர். அவர்களுள் முக்கியஸ்தனாக இருந்த சிப்பந்தி தனது இடுப்பில் சொருகி இருந்த பிஸ்டல்களை எடுக்குமுன் கலியாணசுந்தரம் குபீரென்று பாய்ந்து பிஸ்டல்களைப் பிடுங்கி வெகு தூரத்துக்கப்பால் எறிந்து விட்டான். வெளியில் இருந்த முரட்டாள்கள் அதே காலத்தில் பாய்ந்து போலீஸ் சிப்பந்திகள் இருவரது கால்களையும் பிடித்து வெளியில் இழுக்க, அவர்கள் படேரென்று மல்லாந்து தரையில் விழுந்தனர். நின்ற நிலைமையில் இறுகலான தரையின் மேல் வீழ்ந்தமையால், அவர்களது தலையின் பின்புறம் பலமாக மொத்துண்டு சிதைந்து போயிற்று. அவர்கள் இருவரும் உடனே மூர்ச்சித்துப் போயினர்.

## 35 - வது அதிகாரம்

## மாயஜாலம்

பூர்ணசந்திரோதயமென்ற அதிசுந்தர ரூபவதி ஜெகன் மோகன விலாசத்தை விட்டுத் தஞ்சை அரண்மனையின் ஏழாவது உப்பரிகைக்குப் போய்ச் சேர்ந்தாள் என்ற விஷயம் முன்னரே கூறப்பட்டதல்லவா. அந்த மின்னற்கொடியாள்

வசிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தப்புரம் தேவேந்திரனது பட்டமகிஷியான இந்திராணி, ரதிதேவி முதலியோர் வசிப்பதற்குத் தகுந்ததும், மயன் முதலிய தெய்வத் தச்சர்களால் அமைக்கப்பட்டதுமான தேஜோன்மய நவமணிமாடமாக இருந்தது. அதுகாறும் அந்த அரண்மனையிலிருந்து காலஞ் சென்ற அதிவீரதீர பராக்கிரமசாலிகளான மகா மண்டலேசுவரர்கள் தங்களது உயிருக்குயிராக மதித்து, அளவற்ற வாஞ்சையும், பிரேமையும் பாசமும் கொண்டு தங்களது இருதய கமலங்களில் வைத்துத் தங்களது குலதெய்வங்கள் போல மதித்து ஒப்புயர்வற்ற சிறப்பான மகோன்னத பதவியில் வைத்து சகலமான இன்ப சுகங்களையும் மழைபோலப் பொழிந்து இமைகள் கண்மணியைக் காப்பதுபோலப் பாதுகாத்து வந்த மகாமகா சிரேஷ்டமான பட்டமகிஷியரும் தங்களது சொப்பனத்திலும் கண்டறியாத நிகரற்ற ஒரு பளிங்கு மாடத்தில் வெல்வெட்டு போர்த்த சொகுசான பஞ்சு மெத்தைகள் பரப்பப் பெற்ற தரையில் நமது பூர்ணசந்திரோதயம் தோகை விரித்த கலாப மயில் போல உலாவி வந்தாள்.

அவளது நிகரற்ற மேம்பாடுகளுக்குத் தக்கதாய் இருக்க வேண்டுமென்ற கருத்தோடு இளவரசர் அந்த அரண்மனையில் தமது முன்னோர்களால் அரும்பாடுபட்டுத் தேடப்பட்டிருந்த மகா சிரேஷ்டமான அபூர்வ வஸ்துக்களை எல்லாம் ஒன்று சேர்த்து, அவளது ஆனந்தத்தையும் சுகத்தையும் மனத்திருப்தியையும் கருதி அவ்விடத்தில் வைத்து அற்புதமாக அலங்கரித்திருந்தார். மருங்காபுரி ஜெமீந்தாரது வெல்வெட்டு மாடம், ரதிகேளி விலாசம், இளவரசரது கந்தருவ மண்டபம் முதலிய ஒப்பற்ற விடுதிகளெல்லாம், பூர்ணசந்திரோதயத்தின் பளிங்கு மாடத்துக்குமுன் ஈடுநிற்க மாட்டாது பின்னிட்டன. சுவர்களெல்லாம் தங்க முலாம் பூசப்பெற்று நவரத்னக் கற்களால் இழைக்கப்பட்டிருந்தன. சந்தன மரம், தந்தம், அகில் முதலியவற்றாலான கம்பங்கள், பலகணிகள், கதவுகள் முதலிய

யாவும் பச்சை, மரகதம், கோமேதகம் முதலியவற்றால் இழைக்கப்பட்டு மகா மகா விசித்திரமான எண்ணிறந்த பதுமை களைக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் பளிங்குகளும், வைர வைடூரியங்களும் நிறைந்து கோடானு கோடி காத தூரம் பரவியுள்ள ஆகாயவட்டத்தில் நிறைந்துள்ள நக்ஷத்திரங் களெல்லாம் ஒன்று கூடி வந்து அந்த அந்தப்புரத்திலுள்ள பூர்ணசந்திரனைச் சுற்றிலும் செறிந்து புடை சூழ்ந்திருக் கின்றனவோ என்று ஐயுறும்படி அந்த மாடம் முழுதும் குபேரனது ஆபரணப் பெட்டி போல நிரம்பவும் தேஜோ மயமாக விளங்கியது. அதுபோலவே, அவளது அழகிய வசீகர மேனியிலும் வைரங்களும், ஜரிகைகளும், தங்கமும், பட்டுமே மயமாகக் காணப்பட்டு அந்த அதியுன்னத மோகனாங்கி மண்ணுலகில் மானிடர் வயிற்றில் ஜனித்த எழில் நங்கையோ, அல்லது ஆகாயத்தில் தெய்வ விமானத்தில் அமர்ந்து பவனி வரும் வானுலகத்து அமரர் மங்கையோ என்ற ஐயத்தையும், பெருத்த பிரமிப்பையும் உண்டாக்கத் தக்கனவாக இருந்தன.

அவள் அதற்குமுன் வசித்த ஜெகன்மோகன விலாசத்தி லிருந்த அவளது ஆருயிர்த் தோழர்களான பஞ்சவர்ணக்கிளிகள் முதலிய ஆகாய வாசிகள் எல்லோரும் அவளோடு கூடவே வந்து சதாகாலமும் குதூகலம் நிறைந்தவராகவே இருந்தனர்.

அவள் இருந்த விநோத மணிமண்டபத்தில் எங்கு பார்த்தாலும் சம்பங்கிக் கொடிகளும், பவழக்கொடிகளும், மனோரஞ்சிதக் கொடிகளும் பந்தல்களிலும் சாமான்களிலும் ஏற்றிவிடப்பட்டு மனோக்கியமான புஷ்பங்கள் நிறைந்து குளிர்ச்சியையும் இன்பத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தன. பத்திபத்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த புஷ்பச் செடிகள் தளிர்த்து வளர்ந்து அடர்ந்து ரோஜா, மல்லிகை முதலிய மலர்களை மனோகரமாக ஏந்திச் சுமந்து நறுமணத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தன. அவ்விடத்திலிருந்த பஞ்சணைகளி னின்றும் ஆடைகளினின்றும் எழுந்த அத்தர், பன்னீர், கலவை

முதலிய பரிமள கந்தங்களின் அரிய மணம் கமகமவென்று கமழ்ந்து கொண்டிருந்தமையால், அவ்விடம் சதாகாலமும் பிரம்மாநந்த மயமாகவே இருந்தது.

மகா சிரேஷ்டமாக இருந்த அந்த உன்னத எழில் மாடத்தில் சகல வைபவங்களும் பரிபூரணமாகச் சூழ இனிதிருந்த நமது பூர்ணசந்திரோதயம் அவ்விடத்தில் உண்மையிலேயே ஒரு பெரிய சக்கரவர்த்தினிபோல நடத்தப்பட்டு வந்தாள். அவள் காலால் இடும் வேலையைத் தலையாலே ஏற்று உத்தர க்ஷணத்தில் நிறைவேற்றுவதற்கு எண்ணிறந்த தாதிமார் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்த தாதிகள் எல்லோரும் அதி அற்புதமான அழகும், யௌவனப் பருவமும், பணிவும், இதர நற்குணங்களும், விலை மதிப்பற்ற சிறந்த ஆடை ஆபரணங்களும் நிறைந்து தெய்வ ரம்பையர் போல மகா வசீகரமாகவும் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு ராஜஸ்திரீ போலவும் இருந்தனர். ஆதலால், அத்தனை சீமாட்டிகளால் அவ்வாறு வணங்கப்பட்டிருந்த நமது கட்டழகியான பூர்ணசந்திரோதயத்தின் மகிமை எப்படிப்பட்டது என்பது எளிதில் யூகித்துக் கொள்ளத் தக்கதன்றோ.

அந்தப் பெண்ணரசியின் உதடு அசையுமுன் அவளது மனம் இன்னதை நினைக்கிறது என்று யூகித்தறிந்து அவளது இச்சையைப் பூர்த்தி செய்யத் தகுந்த மகா விவேகிகளான அத்தனை தாதிமாரும் அவளை ஒரு தெய்வமென மதித்து வந்தனர். ஆனாலும், அவர்கள் தன்னோடு கூடவே எப்போதும் இருக்கவிடாமல், நமது பூர்ணசந்திரோதயம் அவர்களை எல்லாம் பக்கத்திலிருந்த ஒரு விடுதியில் இருக்கச் செய்திருந்ததால், பூர்ணசந்திரோதயம் இன்னதைச் செய்கிறாள், அல்லது இன்னதைப் பேசுகிறாள் என்பது மற்ற தாதிகளுக்குச் சிறிதும் தெரியாதிருந்தது. ஆனாலும், அவள் தனது சயனத்தி லிருந்த ஒரு விசையை அழுத்தினால், அது தாதிகள் இருந்த விடுதியிலுள்ள ஒரு சிறிய மணியை அசைப்பதிலிருந்து

தாதிகள் அவளது கருத்தை அறிந்த உடனே வந்து அவளது விருப்பத்தை நிறைவேற்றிப் போயினர்.

சயனத்திலிருந்து அடிக்கடி எழுந்து அங்குமிங்கும் உலாவி அருகிலிருந்த கிளிகள் முதலிய ஜீவ ஜெந்துக்களண்டை நெருங்கி அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொஞ்சுவதும் முத்தமிடுவதும் அன்பாகத் தடவிக் கொடுப்பதும் அவைகளுக்கு மழலை மொழிகள் கற்பிப்பதுமாகவே அந்த நளின சுந்தரி எப்போதும் காணப்பட்டாள். அவளைக் காணும்போதெல்லாம் அவ்விடத்திலிருந்த பஞ்சவர்ணக்கிளிகள் கூண்டைவிட்டு வெளிப்பட்டு அவளது கரத்திற்கு வந்துவிட வேண்டுமென்று கம்பிகளில் முட்டி மோதிக்கொண்டு மூர்த்தண்ணியமாகக் கடுமுயற்சி செய்தன. குயிலிணைகள் ஒரு புறத்தில் தங்களது தீங்குரல் அமுதைச் சொரிந்து கொண்டிருந்து, மோகனராகம் பாடி ஆனந்த நிருத்தனம் செய்துகொண்டிருந்தன. புஷ்பங்களி லிருந்து ஒழுகிய மதுவைப் பருகிச் செருக்கிய வண்டினங்கள் மேலே கூறப்பட்ட தெய்வகானத்திற்குச் சுருதி போட்டுக் கொண்டிருப்பதுபோல எப்போதும் மாதுரியமாக ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. ஜோடி ஜோடியாக ஆங்காங்கு காணப்பட்ட மணிப்புறாக்களுள் பெண் புறாக்கள் பிணங்கி ஒருபுறம் திரும்பி நிற்க, அதனதன் காதலரான ஆண் புறாக்கள் தத்தம் சிறகுகளை அழகாகவும் ஒய்யாரமாகவும் விரித்துத் தங்களது அழகைக் காட்டி குமுகுமு குமுகுமூ வென்று கும்காரம் செய்தபடி தத்தம் பெடைகளைச் சுற்றி வந்து நடனம் செய்து, கலவியின் ரகசியங்களையும் மகிமையையும் அவைகளுக்குப் போதித்து அவைகளைத் தமது வசப்படுத்த முயன்றுகொண்டிருந்தன.

இன்னொரு பக்கத்திலிருந்த பஞ்சவர்ணக் கிளிகள் மனிதர் பேசுவதுபோல அழகாகப் பேசிக் கொஞ்சிக் கொண்டிருந்தன. பாரசீகத்து வெள்ளைக் கிளிகள் அன்னப் பறவைகள்போல அழகாக நிமிர்ந்து ஆச்சரிய மொழிகள் கூறிக் கொண்டிருந்தன.

அன்றில் பறவைகள் உலகையும் தம்மையும் கவனியாமல் சதாகாலமும் ஒன்றை யொன்று நத்திக் கலவிக் கடலிலேயே மூழ்கிக் கிடந்தன. பூர்ணசந்திரோதயம் வருவதைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு சிரிக்கின்றனவோ என்று எண்ணுமாறு அவ்விடத்திலிருந்த மலர்களெல்லாம் எப்போதும் இரவு பகல் தளையவிழ்ந்து விரிந்து விகசித்துத் தங்களது நறுமணத்தை அந்தச் சக்கரவர்த்தினிக்கு அற்பணமாக ஏந்தி நின்றன. அந்த மங்கையர்க்கரசியின் சித்தத்திற்கு இணங்க அவளது தாதிகள் வீணை புல்லாங்குழல் பிட்டில் ஜலதரங்கம் முதலிய கருவிகளோடு தமது தீங்குரலைப் புணர்த்தித் தெய்வகீதம் பாடினர். வேறு பலர் அவளுக்குக் கால் பிடித்தனர். மற்றும் சிலர் அவளுக்குரிய மாதுரியமான கனிவர்க்கங்களையும் பக்ஷணங்களையும் இன்னம் இதர சுகங்களையும் காலமறிந்து அப்போதைக்கப்போது வழங்கி அவளை நிகரற்ற சுவர்க்க போகத்தில் ஆழ்த்தி வந்தனர்.

அத்தகைய மகோன்னத ஸ்தானத்தில் அவ்வூர் இளவரசர் பூர்ணசந்திரோயத்தை வைத்திருந்தார். ஆனாலும், அவள் அது காரணத்தினால், சிறிதும் செருக்கடையாமலும், வரம்பு கடந்த நடத்தைகளில் இறங்காமலும், மிதமிஞ்சிய மகிழ்ச்சி அடையாமலும் அதற்கு முன்னிருந்ததைவிடப் பன்மடங்கு அதிகரிக்க கண்ணியமான நடத்தையோடும் ஒழுகி வந்தாள். அவள் தார்வார் தேசத்து மகாராஜனுக்கு நெருங்கிய பந்து வென்றும், தஞ்சை மகாராஜனுக்கும் ஒருவகையில் உறவினள் ஆதலால், அவள் விருந்தாளியாக வந்திருக்கிறாள் என்றும், அவள் அபாரமான அழகும், கல்வி முதிர்ச்சியும், கூர்மையான புத்தியும், ஸரஸகுணமும், மனோதிடமும், வாக்கு சாமர்த்தியமும், நல்லொழுக்கமும் வாய்ந்தவளாக இருப்பதால், இளவரசர் அவளையும் மணந்துகொள்ள உத்தேசிக்கிறார் என்னும் ஒரு வதந்தியை சாமளராவ் நிரம்பவும் தந்திரமாகவும் ரகசியமாகவும் பரப்பிவிட்டான். ஆகையால், அரண்மனையி

லிருந்த சகலமான உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் அந்த வரலாற்றை உண்மையென்றே நினைத்து, பூர்ணசந்திரோதயத்தை நிரம்பவும் பூஜிதையாகவும் பெருமையாகவும் மதித்து வந்தனர். இளவரசரது அன்னையான பெரிய மகாராணி மாத்திரம் பூர்ணசந்திரோதயம் யாரோ அன்னிய மனிஷியென்றும், இளவரசர் தமது பட்டமகிஷியை வெறுத்து விலக்கி இருப்பதால், இவளை மணந்து மனையாட்டி ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் இவளைக் கொணர்ந்து அவ்வாறு பூஜிதையாக வைத்திருக்கிறார் என்றும் ஒருவாறு தனக்குள்ளாகவே எண்ணிக் கொண்டிருந்தாள். தனது புத்திரரான இளவரசர் வயது முதிர்ந்த மனிதர் ஆகையால், எந்த விஷயத்திலும் அவரைக் கண்டிப்பதற்காவது, அவருக்கு நற்புத்தி புகட்டுவதற்காவது பெரிய மகாராணி விரும்பவில்லை. ஆனாலும், அதனால் பூனாதேசத்திலுள்ள தனது மருமகளான பட்டமகிஷிக்கு ஏதேனும் பொல்லாங்கு நேருமோவென்ற கவலைகொண்டு சஞ்சலமுற்றவளாய் எதையும் வெளியிடாமல் மௌனமாக இருந்தே மனமாழ்கி வருந்தலானாள்.

பூர்ணசந்திரோதயமோ எக்காலத்திலும் முதல் தரமான ஆடை ஆபரணங்களை அணிந்து, மனமோகன சிங்கார ரூபிணியாக இருந்து தன்னைக் காண்போரது மனதும் புலன்களும் மயங்கி கலங்கி நெக்குவிட்டுருகி உருக்குலைந்து பாழ்த்துப் போமாறு செய்யத் தகுந்த அற்புத வசீகரம் வாய்ந்தவளாக இருந்தாள். ஆனாலும், அவள் யாரையும் தன்னிடம் நெருங்க விடாமலும், யாரிடத்திலும் பேசாமலும் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருந்து வந்தாள். தாதியர் தனக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தபிறகு அவர்களெல்லோரையும் அப்பால் அனுப்பிவிட்டு ஏகாந்தத்திலிருந்து ஏதோ புஸ்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டும் பிள்ளைகளோடும் கோகிலங்களோடும் இதர புள்களோடும் மலரினங்களோடும் உறவாடி மனமொன்று பட

லயித்திருக்கும் தனது பொழுதைப் போக்கி வந்தாள். அவளுக்கு இளவரசரால் எண்ணிறந்த தாதிமார் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனாலும், அவள் ஜெகன்மோகன விலாசத்தில் வைத்திருந்த தனது அந்தரங்கமான பணிப்பெண்கள் இருவரையும் அடிக்கடி அழைத்துத் தனது ரகசியமான உத்தரவுகளைப் பிறப்பித்து வந்தாள். சாமளராவ் அவளது அந்தரங்கக் காரியதரிசி உத்தியோகத்தைப் பார்த்து வருகிறான் என்று ஜனங்கள் எல்லோரும் நம்பி இருந்தார்கள் ஆதலால், அவன் மாத்திரம் அப்போதைக்கப்போது அவளது அந்தப்புரத்திற்குள் போய்த் தனியாக அவளிடம் பேசிவிட்டு வந்துகொண்டிருந்தான். அவனைத் தவிர வேறு ஆண்பிள்ளைகள் எவருமே அவளது மாடத்திற்கு அருகிலும் போகக் கூடாது என்று இளவரசர் கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருந்தார். ஆதலால் அவளது அந்தப்புரத்தில் ஆண்வாடையே வீசாமல் இருந்து வந்தது.

அந்த வசீகரப் பெண்பாவை ஜெகன்மோகன விலாசத்தை விட்டு அந்த உப்பரிகைக்கு வந்தபிறகு சரியாக இரண்டு மாத காலம் கழிந்தது. அடுத்த நாள் மாலை ஏழரை மணி நேரமாயிற்று. பௌர்ணமிச் சந்திரன் தனது முழுவடிவத்தையும் சம்பூர்ணமான அழகையும் தோற்றுவித்து மகா உன்னதமாக உயர எழுந்து பால் போன்ற ரமணீயமான நிலவைப் பரப்பித் தனது அமிர்த கிரணங்களை அள்ளி அள்ளி மெதுவாகத் தூவிக் கொண்டிருந்தான். தென்றல் காற்று அப்போது நெகிழ்ந்து நகைத்த மல்லிகை, முல்லை, ரோஜா, செண்பகம் முதலிய மலர்களினின்றும் வெளிப்பட்ட அதி மனோக்கியமான மணத்தையும் தண்மாமதியத்தின் அமிர்தரச ஊற்றையும் ஏற்று ஜிலுஜிலென்று எங்கும் சுகமாக வீசிக் கொண்டிருந்தது. குயிலினங்களும், இதர பறவையினங்களும் அன்றைய பகல் முழுதும் தின்று செருக்கிப்போய் மட்டற்ற களி கொண்டு துள்ளிக் குதித்து சங்கீத கோஷம் செய்தன. ஆதலால் அப்போதைய இயற்கைக் காட்சி ஐம்புலன்களையும்

அடக்கி உலகைத் துறந்து கடுந்தவம் புரியும் தபோதனர் களது மனதையும் வெகுசுலபத்தில் கலைத்துப் பேரின்ப நாட்டத்தை மறந்து சிற்றின்ப சுகத்தைத்தேடச் செய்யத்தக்க மகா அபாரமான வசீகரக் காட்சியாக இருந்தது.

அந்தத் தருணத்தில் மற்ற எல்லா ஸ்தலங்களைக் காட்டிலும் பூர்ணசந்திரோதயம் கொலுவிருந்த மணிமாடம் பதினாயிரம் மடங்கு அதிகரித்த வனப்பும் கவர்ச்சியும் உடையதாக விளங்கியது. அந்த மாடத்தில் பதிப்பிக்கப் பெற்றிருந்த கோடானு கோடி நவரத்ன மணிகளெல்லாம் திடீரென்று உயிர் பெற்றுக் கண்களை விழித்துக் கொண்டனவோ, அல்லது, அத்தனை மணிகளும் திடீரென்று அத்தனை நட்சத்திரச் சுடர்களாக மாறிப் போயினவோவென்று ஐயுறும்படி அவளது பளிங்கு மண்டபம் முழுதிலும் அமைக்கப் பெற்றிருந்த ஸர விளக்குகள் சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை, நீலம் முதலிய எண்ணிறந்த நிறங்களைக்கொண்ட அழகிய கண்ணாடிக் கூண்டுகளுக்குள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. பஞ்சவர்ணக் கிளிகள் ஓயாது கொஞ்சிக் கொண்டிருந்தன. அன்றில் பறவைகள் ஒன்றுக்கொன்று முத்தங்கொடுத்துக் கொண்டி ருந்தன. மணிப்புறாக்கள் மன்மத பாணங்களால் அல்லல்பட்டு உணர்வுகலங்கி என்றும் சலியாத கலவிப் பிரசங்க நாடகத்தில் தங்களது முழுக்கவனத்தையும் பொழுதையும் செலுத்திக் கொண்டிருந்தன. பூர்ணசந்திரோதயம் மற்ற நாட்களில் தன்னை அலங்கரித்துக் கொண்டதைவிடக் கோடி மடங்கு அதிக வசீகரமாகவும் விநோதமாகவும் அலங்கரித்துக்கொண்டு அப்போதே கந்தருவலோகத்திலிருந்து நேராக வந்திறங்கிய தெய்வீகசக்தி வாய்ந்த ஸுரமங்கை போலத் தேஜோமயமாக ஒரு வெல்வெட்டு ஸோபாவின் மீது உட்கார்ந்திருந்தாள். விண்ணுலகிலும் மண்ணுலகிலுமுள்ள அழகுகளெல்லாம் ஒன்று கூடி அவளது ரூபமாய் வந்ததோ என்னலாம்படி அந்த மனமோகன அணங்கு அழகுத் திரளாகவும் இன்பப்

பிழம்பாகவும் காண்பவரது கண்களும் மனதும் பிரமிக்கத்தக்க ஒப்புயர்வற்ற அபார சிருஷ்டியாகவும் வீற்றிருந்த காட்சி தேவர்களுக்கும் காணக் கிடைக்காத மகா அரிய காட்சியாக இருந்தது; அவள் தனது பணிப்பெண்களை எல்லாம் அனுப்பிவிட்டு ஏதோ கருத்தோடு ஏகாந்தத்தை நாடி இருப்பவள் போலத் தோன்றினாள். அவள் தனது மடியின்மீது ஒரு பெருத்த மகரயாழை வைத்து அதை மீட்டிப் பாட எண்ணுகிறவள்போல அதன் பிருடைகளைத் திருகிச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தாள். ஆனாலும், அவளது கண் விழிகள் ஒருவித சஞ்சலத்தையும் ஆவலையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. அவள் அடிக்கடி அந்த மாடத்தின் சிங்காரங்களையும் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்து முள்களின் போக்கையும் மாறிமாறிப் பார்த்த வண்ணம் இருந்தது. அதிலிருந்து அவள் ஒரு குறித்த காலத்தில் நடக்கப்போகும் ஏதோ ஒரு சம்பவத்தை நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்க்கிறாள் என்பதும், அப்போதுதான் தனது முழுத்திறமையையும் ஸாகசங்களையும் உபயோகித்து வெகு தந்திரமாக நடக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறாள் என்பதும் எளிதில் விளங்கின. அவளது பின் பக்கம், அந்த அந்தப்புரத்திற்குள் நுழையும் வாசலைப் பார்த்தபடி இருந்தது. அந்த வாசல் கண்ணாடிக் கதவினால் மூடப்பட்டிருந்தது. கருத்து அடர்ந்து நெளிந்து கணுக்கால் வரையில் நீண்டு கரும்பட்டுபோல மின்னிக் கொண்டிருந்த அவளது அற்புதமான தலைமயிர் வெகு சொகுசாகப் பின்னப் பட்டிருந்தது. ஆகையால், நிரம்பவும் விசாலமாக இருந்த அவளது ஜடை பின்பக்கத்தில் தொங்கித் தரையிலும் படிந்து வெகுதூரம் வரையில் சென்றிருந்தது. காரிருளில் தென்படும் மின்மினிக் குலம்போல அவளது பின்னலில் வைர ஜடை பில்லைகள் ஆங்காங்கு நின்று ஒளிக்கற்றையை வீசிக் கொண்டிருந்தன. ஜாதிமல்லியையும் ரோஜாப் புஷ்பமும் இணைக்கப்பட்ட கலப்பு ஸரம் அந்தப் பின்னலில் நேர்த்தியாகச் சுற்றப்பட்டிருந்தது. நுட்பமான வெண்மேகம்போல இருந்த

சல்லாய்ப் பட்டினாலான ஆடைகள் பத்தரைமாற்றுப் பசுந் தங்கம் போல இருந்த அவனது மேனியில் அணியப்பட்டிருந்த தோற்றம் தகத்தகாயமாக ஜ்வலிக்கும் அக்கினித் தணலின் மீது இலேசான வெள்ளைப்புகை சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றியது. ஆகையால், அந்தப் பட்டாடைகள் அவளது அங்கங்களின் அமைப்பையும், கரவு சரிவுகளையும், உருட்சி திரட்சிகளையும் மறைத்தனவோ, அல்லது, அப்படியப்படியே வெளியில் தோற்றுவித்தனவோ என்பது சந்தேககரமாய் இருந்தது. மணி சரியாக எட்டு அடித்த உடனே அவள் தனது சங்கீத கானத்தைத் தொடங்கி அன்னம்போன்ற தனது கழுத்தை ஒய்யாரமாக வளைத்து முன்னால் கவிழ்ந்து வீணையை ஏந்தித் தடவி மோகனராகத்தைப் பாட ஆரம்பித்துக் குயிலொலி போன்ற தனது குரலையும் வீணையின் நுண்ணிய ஒளியையும் ஒன்றுபடப் பொருத்தி தேனோ, பாகோ, தேவாமிர்த வருஷமோ வென மிகமிக உருக்கமாகப் பாடித் தானும் நெகிழ்ந்துருகி அந்த பளிங்கு மாடத்திலிருந்த சகலமான சராசர வஸ்துக்களும் நெக்கு விட்டிளகச் செய்து அந்த இடமே சங்கீதமாகிய சமுத்திரத்தில் மிதந்து ஆனந்தத் தாண்டவம் ஆடும்படி செய்யத் தொடங்கினாள். அவ்வாறு அவள் பாடிய காலத்தில் அவளது முன்னழகைக் காட்டிலும் பின்னழகே பதினாயிர மடங்கு சிரேஷ்டமாகக் காணப்பட்டுக் காண்போர் மனதைப் புண்படுத்தி வதைக்கத் தக்கதாக இருந்தது.

அவ்வாறு அரைநாழிகை நேரம் பாடி ஆனந்த பரவசமடைந்து தன்னையும் உலகையும் மறந்து பிரம்மானந்த சுகத்தில் முழுகிக் கிடந்தவள் போலத் தோன்றிய அதிரூப லாவண்ணிய அற்புத குணஅணங்கான பூர்ணசந்திரோதயம் அந்த மாளிகையின் கதவை மெதுவாகத் திறந்து கொண்டு ஒரு மனிதர் உள்ளேவந்து தனக்குப் பின்புறத்தில் கால் நாழிகை நேரமாக நின்று கொண்டிருந்ததை உணர்ந்தும் உணராதவள் போல நடித்து, அதிமாதுரியமாகக் கனிந்திருந்த சரியான பக்குவ காலத்தில்

மெதுவாகத் தனது முகத்தைப் பின்புறம் திருப்பி அவ்விடத்தில் ஒருவர் வந்து நின்றதை அப்போதே உணர்ந்து கொண்டவள்போலத் திடுக்கிட்டு, உடனே தனது பாட்டை நிறுத்திவிட்டு நன்றாகப் பின் பக்கம் திரும்பி நாலைந்து கஜ தூரத்தில் நின்றுகொண்டிருந்த மனிதரை உற்று நோக்கினாள். அங்குக் காணப்பட்ட மனிதர் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பனாரீஸ் பட்டங்கியால் தம்மை மறைத்துக் கொண்டிருந்தார். அந்த அங்கியில் கண்களுக்காக விடப்பட்டிருந்த இரண்டு துளைகளைத் தவிர வேறு எவ்விதத் திறப்பும் காணப்பட வில்லை. அந்த அங்கிக்குள் மறைந்திருந்தவர் நிரம்பவும் பொதியாகவும் உயரமாகவும் இருப்பதாய்க் காணப்பட்டார். பூர்ணசந்திரோதயம் தனது வீணாகானத்தை நிறுத்திப் பின்புறம் திரும்பிப் பார்க்கவே அங்கிக்குள் இருந்தவர் உடனே அந்த மடந்தையை நோக்கி வணக்கமாகக் குனிந்து, ''அம்மணீ! மன்னிக்கவேண்டும். நிரம்பவும் இன்பகரமாக நீங்கள் வீணை வாசித்துக்கொண்டிருந்த சமயத்தில் அதற்கு இடையூறாக நான் வந்ததைப் பற்றி என் மனம் மிகவும் சங்கடப்படுகிறது. நான் வாசற்படியண்டை வந்தபோது உங்களுடைய சங்கீதம் வெகுவெகு பிரம்மாநந்தமாக இருந்தது. நான் வருவதைக் கண்டால் நல்ல சமயத்தில் நீங்கள் பாட்டை நிறுத்திவிட்டு என்னோடு பேச ஆரம்பிப்பீர்கள் என்று நினைத்து, நான் சந்தடி செய்யாமல் மெதுவாகக் கதவைத் திறந்து பார்த்தேன். நீங்கள் அப்புறம் பார்த்தபடி இருந்தீர்கள். நான் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு உட்புறத்தில் எட்டிப் பார்த்தபடி நின்றால் வெளியிலுள்ள மனிதர்கள் ஏதாவது சந்தேகம் கொள்வார்கள் என்று நினைத்து அடிமேலடி வைத்து மெதுவாக நடந்து வந்து கொஞ்சநேரமாக இப்படியே நின்று கொண்டிருக்கிறேன். நான் பிறந்தது முதல் இப்படிப்பட்ட மகா சிரேஷ்டமான வீணாகானத்தைக் கேட்டதே இல்லை. ஆகையால், நான் பரவசமடைந்து மெய் மறந்து உங்களுடைய அனுமதி பெற்று உள்ளே நுழைய வேண்டும் என்பதையும் மறந்து இங்கே வந்து

விட்டேன். அதைப்பற்றி என் மேல் நீங்கள் கோபிக்கக்கூடாது'' என்று நயமாகக் கூறினார்.

அதைக்கேட்டு நிரம்பவும் கோபம் கொண்டவள்போலக் காணப்பட்ட அந்த ஏந்தெழில் மடந்தை, ''ஓகோ! நன்றாக இருக்கிறதே கதை! நான் வீணை வாசிக்கும்போது இந்த ஓசை வெகுதூரம் வரையில் நன்றாகக் கேட்குமே; அப்படியிருக்க, இந்த வாசல் கதவுக்கு அப்பால் இருந்துகொண்டே ஏன் கேட்கக் கூடாது? யாரும் உத்தரவில்லாமல் இங்கே வரக்கூடாதென்ற நியமம் உனக்குத் தெரிந்திருக்கிறது. அப்படியிருந்தும் யாதொரு காரணமும் இல்லாமல் நீ கதவைத் திறந்து ஏன் பார்க்க வேண்டும்? எதற்காக உள்ளே வந்து திருட்டுத்தனமாக வெகுநேரம் வரையில் நிற்க வேண்டும்? வீணையின் ஒலி வெளியிலேயே சுத்தமாகக் கேட்கையில், நீ அவ்விடத்தி லிருந்தே பாட்டைக் கேளாமல் உள்ளே வந்தது, மனிதரைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வந்ததாகத்தான் இருக்க வேண்டுமே அன்றி, சங்கீதத்தைக் கேட்க வந்ததாக நினைக்கவே ஏதுவில்லை. நீ சொல்லுவதை உண்மையாகவே வைத்துக் கொண்டாலும், நான் வீணை வாசிப்பது நன்றாக இருக்கிறதென்ற காரணத்தினால், நீ செய்யத்தகாத காரியத்தைச் செய்யலாமா? இப்படிப்பட்ட பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு மன்னிக்க வேண்டுமென்று சுலபமாகச் சொல்லி விட்டால், தப்பித்துக் கொள்ளலாமென்று நினைத்துக் கொண்டாயா? நீ இன்னாள் என்பதே எனக்கு இன்னமும் தெரியாமலிருக்கிறது? இது கோஷா ஸ்திரீ இருக்கும் தனிமையான இடம்; இவ்விடத்தில் நீ அங்கி போட்டு உன்னை மறைத்துக் கொண்டிருக்கவே காரணமில்லை. உன் அங்கியை முதலில் விலக்கு; நீ யார் என்பதை நான் தெரிந்து கொள்ளுகிறேன்'' என்று நிரம்பவும் எடுப்பாகவும் நிமிர்வாக வும் பேசியவண்ணம் தான் இருந்த ஸோபாவின் மேல் வீணையை வைத்து விட்டு எழுந்து நின்றாள். அங்கிக்குள்

மறைந்திருந்தவர், "அம்மணீ! நான் வேறே யாதொரு வேலையுமில்லாமல், இந்த வீணாகானத்தைக் கேட்பதற்கு மாத்திரம் இங்கே வந்திருந்தால், அது நீங்கள் சொல்லுகிறபடி பெருத்த குற்றந்தான். நான் உங்களிடம் ஓர் அலுவலாகவே வந்தேன். வந்த இடத்தில் எனக்கு இந்த எதிர்பாராத சங்கீத சுகமும் கிடைத்தது. இதைக் கேட்டு நான், என்ன கருத்தோடு வந்தேனோ அதை வெளியிடாமல் சும்மா நின்றேன். அவ்வளவுதான் நான் செய்த குற்றம். அலுவலில்லாமல் அநாவசியமாக நான் உள்ளே வரவில்லை" என்றார்.

பூர்ணசந்திரோதயம், "சரி; நீ இங்கே ஏதோ காரியார்த்தமாக வந்ததாகவே வைத்துக்கொள்வோம். அப்படியிருந்தாலும், நீ என்னுடைய தாதிகளின் மூலமாக செய்தி சொல்லியனுப்பி, என்னுடைய விருப்பத்தையும் சந்தர்ப்பத்தையும் தெரிந்து கொண்டல்லவா உள்ளே வரவேண்டும். உனக்கு என்னிடம் வேலையிருந்தால், நேராகவே தடதடவென்று உள்ளே நுழைந்து விடுகிறதுதான் ஒழுங்கா?" என்று முறுக்காகப் பேசிய வண்ணம் அவ்விடத்தை விட்டு நாலைந்தடி தூரம் நடந்து அப்பால் போய்த் தனது சப்பிர மஞ்சனத்தின் மீது கம்பீரமாக அமர்ந்து கொண்டாள்.

அங்கிக்குள் மறைந்திருந்த மனிதர் சிறிதும் அஞ்சாமல் அவளிருந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்தவண்ணம், "ஆம்; அம்மணீ! நீங்கள் சொல்லுகிறபடி செய்ய வேண்டியது தான் சாதாரணமான ஏற்பாடு. நான் வந்த காரியமோ அசாதரண மானது. என்னை இங்கே அனுப்பி வைத்த எஜமானர், நான் தாதிகளுக்குத் தெரியாமல் இங்கே வந்து உங்களிடம் சங்கதியைக் கேட்டுக்கொண்டு வரச் சொன்னார். ஆகையால், நான் அவருடைய உத்தரவின்படி நடந்துகொள்ள நேர்ந்தது. அவ்வளவுதான் வேறொன்றுமில்லை" என்றார்.

பூர்ணசந்திரோதயம், "ஓகோ! அப்படியா! உன்னுடைய எஜமானர் யார்? நீ யார்? நான் இருக்கும் இந்த அந்தப்புரத்தில்

அன்னியர் இன்னமாதிரிதான் நடந்துகொள்ள வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் உத்தரவை மாற்றக்கூடிய அதிகாரத்தை உன்னுடைய எஜமானர் எப்போது முதல் வகித்துக் கொண்டார்? என்னுடைய தாதிமார்களுக்குத் தெரியாத அப்படிப்பட்ட பரம ரகசியமான சங்கதி எனக்கும் உன் எஜமானருக்கும் என்ன இருக்கிறது? அந்த ரகசியத்தை வெளியிடு'' என்றாள்.

அங்கிக்குள் மறைந்திருந்தவர், ''நான் நம்முடைய இளவரசரால் அனுப்பப்பட்டு இங்கே வந்தேன். நீங்கள் ஜெகன்மோகன விலாசத்திலிருந்து இங்கே வருவதற்குமுன் இளவரசருக்கு ஒரு கடிதம் எழுதினீர்களாம். அதில் நீங்கள் ஒரு நிபந்தனை எழுதியிருந்தீர்களாம். அதாவது, நீங்கள் இந்த அந்தப்புரத்துக்கு வருவதானால், இளவரசர் சரியாக இரண்டு மாச காலம் வரையில் உங்களைப்பார்க்கக் கூடாதென்றும், இரண்ட மாத காலம் கழிந்த மறுநாள் இரவில் சரியாக ஒன்பது மணிக்கு வந்தால், அவர் உங்களோடு சந்தோஷமாய் இருக்க இடம் கொடுப்பீர்கள் என்றும் நீங்கள் எழுதி இருந்தீர்களாம். அதுபோல, நேற்றோடு இரண்டு மாச காலம் கழிந்துபோய் விட்டதாம். இன்றையதினம் ஒன்பது மணிக்கு அவர் இங்கே வந்து உங்களோடு பேச நிரம்பவும் ஆவலாக இருப்பதால் உங்களுடைய சமயத்தைத் தெரிந்துகொண்டு வர என்னை அனுப்பி வைத்தார். இது உங்களுடைய தாதிமாருக்குத் தெரியக்கூடாத விஷயம் என்பது இனி நான் உங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதில்லை. நீங்கள் சற்றுமுன் என் மேல் கொண்ட கோபம் இனியாவது தணிந்து போகும் என்று நினைக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் அப்போதே அந்த விஷயத்தின் நினைவைக் கொண்டவள் போல நடித்து, ''ஓகோ! அப்படியா! ஆம் ஆம்! நான் இளவரசருக்கு அந்த மாதிரி கடிதம் எழுதியது உண்மைதான். ஆனால், அதன்பிறகு என் மனம் வேறு விஷயங்களில் சென்று முற்றிலும் மாறிப்போய்

விட்டது. ஆகையால், நான் இரண்டு மாசத் தவணை ஏற்படுத்தியதையும் சுத்தமாக மறந்துபோய் விட்டேன். நான் இங்கே வந்து எத்தனை நாளாயிற்று என்ற கணக்கையும் நான் வைக்காமல் இருந்து விட்டேன். இருந்தாலும், இளவரசர் சரியாக அந்தக் குறிப்பிட்ட மணி நேரத்தில் ஆளை அனுப்பியது எனக்கு நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது! இன்று பகலிலாவது இதற்கு இரண்டொரு தினங்கள் முந்தியாவது இந்த விஷயத்தைச் சொல்லி நினைப்பூட்டி இருக்கக் கூடாதா? நான் அதற்குத் தகுந்தபடி ஆயத்தமாக இருக்கமாட்டேனா? இப்போது இதோ பக்கத்தில் ஏராளமான தாதிமார்கள் இருக்கிறார்கள். இளவரசர் இங்கே வரும்போதும் போகும் போது ஒருவேளை யாராவது தாதி அவரைப் பார்க்க நேர்ந்தாலும் நேரலாம். அப்படிப் பார்ப்பவள், அதை மற்றவர் களிடம் வெளியிடுவது நிச்சயம். பிறகு இங்குள்ளவர்கள் என்னைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயம் கொள்ள மாட்டார்கள்? இந்த விஷயமெல்லாம் மகாராஜாவுக்குத் தெரியாததல்ல. அவருக்கு நாம் இதையெல்லாம் எடுத்துச் சொல்வது மரியாதையாகாது'' என்றாள்.

அங்கிக்குள் மறைந்திருந்தவர், ''ஓகோ! இளவரசர் இங்கே வந்தால், ஒருவேளை தாதிகள் பார்த்துவிடப் போகிறார்கள் என்ற ஒரு விஷயத்தைப்பற்றித்தானே நீங்கள் கவலைப் படுகிறீர்கள்? அதைப்பற்றி நீங்கள் இனி கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. இரவு பகல் உங்கள் நினைவே நினைவாக இருந்து உங்கள் விஷயத்தில் இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருக்கும் இளவரசர் உங்களுடைய கண்ணியத்துக்குக் குறைவு ஏற்படக் கூடிய காரியத்தைச் செய்வாரா? நீங்கள் இம்மாதிரியாகக் கவலைப்படுவீர்கள் என்று நினைத்தே இளவரசர் இப்படித் தந்திரமாக நடந்து கொண்டார்'' என்று கூறியவண்ணம், தமது உடம்பை மூடிக்கொண்டிருந்த பனாரீஸ் பட்டங்கியை அடியிலிருந்து

தூக்கி குபீரென்று விலக்கி அப்பால் எறிந்தார். எறியவே, அந்த அங்கிக்குள்ளிருந்து இளவரசரது வடிவம் வெளிப்பட்டது. இளவரசர் ஏராளமான வைர ஆபரணங்களையும் ஜரிகைப் பட்டாடைகளையும் அணிந்து வந்திருந்தார். ஆகையால், அவ்விடத்தில் கோடிசூரியப் பிரகாசமாக ஜ்வலித்த ஸர விளக்குகளின் பிரகாசத்தில் இளவரசர் ஜெகஜ்ஜோதியாகப் பிரகாசித்தார். அவரது முகம் கரைகடந்த மகிழ்ச்சியினாலும் குதூகலத்தினாலும் மலர்ந்து புன்னகை செய்தது. அங்கிக்குள் மறைந்து வந்து அவ்வளவு நேரம் தன்னோடு பேசியது இளவரசர் தான் என்பதைப் பூர்ணசந்திரோதயம் ஆரம்பத்திலேயே எளிதில் யூகித்தறிந்து கொண்டாள். அதுவுமன்றி, அன்றையதினம் தனது கடித நிபந்தனைபடி அவர் தன்னை நாடி வருவார் என்று நிச்சயமாக எதிர்பார்த்தே அவள் தன்னை அப்போது அபாரமாக அலங்கரித்துக் கொண்டு, வீணாகானத்தின் உதவி யாலும் தனது மனமோகன அலங்காரத்தினாலும், அவள் தனது வசீகரத் தன்மையை முன்னிலும் பதினாயிர மடங்கு அதிகரித்துக் கொண்டவளாய் அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்து ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தாள். அவள் வீணாகானத்தில் லயித்து மெய்மறந்து போனவள் போலக் காணப்பட்டாள். ஆனாலும், இளவரசர் சிறிதும் ஓசை செய்யாது கதவைத் திறந்ததையும், உள்ளே வந்து நின்றதையும் உணர்ந்தவளாய், எதையும் கவனியாதவள்போல இருந்து, கடைசி வரையில் கபடமற்ற மனிஷிபோலக் கோபமாக நடந்தாள்.

அங்கி விலக்கப்பட்டபின், இளவரசர் பிரத்தியக்ஷமாக நேரில் வந்ததைக் காணவே அந்த அஞ்சுகவஞ்சி திடுக்கிட்டு நடுங்கிக் கட்டிலை விட்டுக் கீழே இறங்கி நிற்கிறாள்; தனது கைகளைப் பிசைந்து கொள்கிறாள்; அபாரமான நாணத்தினால் மேற்கொள்ளப்பட்டவள் போலத் தலைகுனிந்து தனது காலின் கட்டை விரலைப் பார்த்தபடி நின்று தத்தளிக்கிறாள். வாயைத் திறந்து பேசுவதற்கே வெட்கினவள் போல நடிக்கிறாள்.

கடைசியில் அந்த மின்னற்கொடி கோவைக் கனி போலக் கனிந்து தேன் ததும்பி இருந்த தனது அதரங்களை நிரம்பவும் வசீகரமாக மலர்த்தி அஞ்சுகம் கொஞ்சவதுபோலப் பேசத் தொடங்கி, ''மகாப் பிரபுவே! நான் எத்தனை பாவங்கள் செய்தோ, மானிட ஜென்மத்தில் இரண்டாம் பட்சமாகிய ஸ்திரீ ஜாதியாக வந்து பிறந்திருக்கிறேன். இந்த ஜென்மத்திலாவது நான் பாவம் என்பதையே மனசாலும் நினையாமல், ஸ்திரீ தர்மப்படி நடந்து புண்ணியம் சம்பாதித்து நற்கதி அடைய வேண்டாமா? மகாராஜாவின் விஷயத்தில் நான் நிரம்பவும் அவமரியாதையாக நடந்து இப்படிப்பட்ட பெருத்த அபராதி ஆகும்படி தாங்கள் செய்தது தர்மமாகுமா? கோடானுகோடி பிரஜைகளுடைய முடிகள் படியும் பெருமை வாய்ந்த தங்களுடைய பாதகமலம் நோகும்படி தாங்கள் நிற்கவும், ஏழையிலும் பரம ஏழையான நான் இறுமாப்பாக உட்கார்ந்திருக்கவும், தங்களை நான் ஒருமைப் பதங்களால் அழைக்கவும் நேர்ந்தது மன்னிக்கத் தக்க குற்றங்களா? ஆகா! நான் என்ன செய்வேன்? என் மனம் படும் பாட்டை என்னவென்று வெளியிடுவேன்! இந்தப் பரமபாதகத்தை நான் எவ்விடத்தில் போய்த் தொலைப்பேன்! இனியும் மகாராஜா நிற்காமல் தயைசெய்து அமர்ந்து கொள்ள வேண்டும்'' என்று நிரம்பவும் கனிவாகக் கூறினாள்.

அதைக்கேட்டு ஆனந்த பரசவமடைந்து பூரித்துப் போன இளவரசர் பக்கத்திலிருந்த அவளது சப்பிர மஞ்சத்தின் மீது அமர்ந்து, ''கண்ணே! பூர்ணசந்திரா! ஏன் இப்படி நீ அநாவசியமாகக் கலங்கி உன் மனசை வதைத்துக் கொள்ளுகிறாய்? நம்மிருவருடைய மனசும் ஒன்றுபட்டு ஒத்துப் போய்விட்ட பிறகு நீ எனக்கு மரியாதை செய்து உபசார வார்த்தைகள் சொல்லவும் வேண்டுமா? நான் தான் அங்கிக்குள் மறைந்து வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்திருந்தால் நீ இப்படி ஒருநாளும் நடந்து கொண்டிருக்க மாட்டாய் என்பது

எனக்கு நன்றாகத் தெரியும். என்னிடத்தில் நீ மனப் பூர்வமான வாஞ்சையும் பயபக்தி விசுவாசமும் வைத்திருக்கிறாய் என்பதை நான் அறிந்து கொள்ளவில்லை என்று நீ எண்ணிக் கொண்டாயா? அப்படி நினைக்காதே; உன்னுடைய உண்மை யான பெருமையும் யோக்கியதையும் எப்படிப் பட்டவை என்பதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். நீ இப்போது நடந்த மாதிரியை நான் குற்றமாகக் கொள்ள மாட்டேன். அப்படி நீ என் விஷயத்தில் யாதொரு தவறும் செய்ததாகத் தோன்ற வில்லை. ஆகையால், அந்த வார்த்தையை இவ்வளவோடு விட்டுவிடு. ஏன் நீ இன்னமும் அன்னிய ஸ்திரீபோல அவ்வளவு தூரத்தில் நிற்கிறாய்? இங்கே வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொள். நீ கேட்டுக்கொண்ட நிபந்தனையை நான் பூர்த்தியாக நிறைவேற்றி விட்டேன். இனி நீ உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதைத் தவிர வேறு எவ்வித முகாந்திரமும் சொல்வதற்கில்லை. முதலில் நீ இப்படி வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொள். நீ தத்தளித்து நிற்பதைப் பார்க்கப் பார்க்க என் மனம் பரிதவிக்கிறது. நானே வந்து ஒரு செல்லக் குழந்தையைத் தூக்குவதுபோல உன்னைத் தூக்கி எடுத்துக் கொண்டு வந்து என் பக்கத்தில் உட்காரவைத்துக் கொள்ள வேண்டும் என்ற பிரியம் என் மனசில் உண்டாகி என்னைத் தூண்டுகிறது. ஆனாலும், அது உன் மனசுக்கு எப்படி இருக்குமோ என்ற நினைவினால், நான் கொஞ்சம் மலைக்கிறேன். இந்த இரண்டுமாச காலத்தில் ஓர் இமைப் பொழுதும் நான் உன்னை மறந்திருப்பேன் என்று நினைக்கிறாயா? உன்னைப் போல ஒரு படம் எழுதச் செய்து நான் இரவு பகல் அதைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தேனன்றி, வேறே எப்படிப்பட்ட அவசர விஷயங்களிலும் கூட நான் என் கவனத்தைச் செலுத்தவில்லை. உன்னுடைய படத்துக்கு நான் ஒரு நாளைக்குள் எத்தனை ஆயிரம் முத்தங்கள் கொடுத்திருப்பேன் தெரியுமா? உன் படத்துக்கு உயிரிருப்பதாக எண்ணி நான் அதோடு எத்தனை தரம் கொஞ்சிக் குலாவி

இருப்பேன்! இந்த இரண்டுமாசகாலத்தில் நீ என் மனசைவிட்டு ஒருநொடி நேரம்கூட அகன்று இருந்ததே கிடையாது. இந்த இரண்டு மாசகாலமும் எப்போது தொலையும் தொலையும் என்று நான் எதிர்பார்த்துக் கட்டுக்கடங்கா ஆவல்கொண்டு தவித்தது கடவுளுக்கே தெரியவேண்டும். இப்போது நான் உன்னைத் தான் என்னுடைய உயிர் நிலையாக மதித்திருக்கிறேன். இனி என் ஆயுசு முடிவுகால பரியந்தம் அப்படியேதான் நான் உன்னை மதித்து நன்கு நடத்துவேன் என்பது சத்தியமான விஷயம். இந்த இரண்டு மாச காலத்தில் நான் உன்னை நடத்திய மாதிரியில் உன் மனம் அதிருப்தியாவது சந்தேகமாவது கொள்ளும்படியாக நான் நடந்து கொண்டிருப்பேன் என்று நினைக்கவில்லை. அன்றைய தினம் நான் உன்னுடைய ஜெகன்மோகன விலாசத்துக்கு வந்திருந்த காலத்தில் கடைசியாக நீ எனக்குச் செய்த வாக்குறுதியை நீ மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். இந்த இரண்டு மாசகாலத்தில் நீயும் என்னைப்பற்றி அடிக்கடி நினைத்துக்கொண்டு தான் இருந்திருப்பாய் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அன்றைய தினம் என்னிடம் அவ்வளவு தூரம் பேசி என் மனம்போல நடக்க இணங்கிய நீ அதன்பிறகு எனக்கு எழுதிய கடிதத்தில் இரண்டு மாதத் தவணை கொடுக்க வேண்டும் என்று எழுதியிருந்ததைப் படிக்க என் மனசில் அபாரமான பெருத்த இடி விழுந்தது போலவே இருந்ததன்றி வேறல்ல. ஆனாலும், நீ சொல்லியிருந்த நியாயத்தை ஒப்புக் கொள்ளவேண்டியது அவசியமாகத் தோன்றியது ஆகையாலும், உன் மனம் கோணாமல் நடந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துமே, மகா கொடுமை யானதாகத் தோன்றிய உன்னுடைய இந்த நிபந்தனையை நான் ஒப்புக் கொண்டேன். இந்த இரண்டு மாச காலமும் இரண்டு கற்பகாலம் அகோர தவம் புரிவதுபோல அல்லும் பகலும் அநவரதமும் உன்னை நினைத்து நினைத்து உருகி உயிரழிந்து மெலிந்து உழன்று கிடந்தேன். இன்றைய தினம் நான் கண் விழித்தெழுந்த பிறகு பட்ட கஷ்டம் இந்த

இரண்டு மாச காலத்தில் நான் அடைந்ததை எல்லாம் ஒன்று சேர்த்தாலும் இதற்கு ஈடு சொல்ல முடியாததாக இருந்தது. கடைசியில் இன்றைய பகலும் ஒழிந்தது. நானும் உன் வாயிதாப் படி உன்னிடம் வந்து சேர்ந்தேன். இனி என் மனக்கவலை ஒழிந்ததென்று சொல்லி எனக்கு அபயஸ்தம் கொடுத்து என்னைக் காப்பாற்றவேண்டியது உன்னைச் சேர்ந்த பொறுப்பு. நீ ஏதோ ருது நூல் என்ற சாஸ்திரத்தைப் படித்ததாகவும், நீயும் அப்படிப்பட்ட கெட்ட நட்சத்திரம் ஒன்றில் புஷ்பவதியாகி இருப்பதாலும், அதில் பத்து மாசகாலம் கழிந்து போனதால், இன்னமும் இரண்டு மாசகாலம் கழியவேண்டும் என்றும், நீ என்னையே பதியாக அடையத் தீர்மானித்து விட்டதாகவும், ஆனது பற்றி இந்த இரண்டு மாசகாலம் வரையில் நான் உன்னிடம் நெருங்கக் கூடாது என்றும் நீ எழுதி இருந்தது நியாயமான சங்கதியாக இருந்தது. ஆகையால், அதற்கு மாறாக நடக்க வேண்டுமென்று நான் பிரியப்படவில்லை. அதைக் கருதியே நான் எத்தனையோ பாடுகள் பட்டு இதுவரையில் இந்தப் பெருந்துன்பத்தைப் பொறுத்திருந்தேன். இனி ஒரு க்ஷண நேரமாவது நீயும் நானும் பிரிந்திருக்க முடியாது. நான் உன்னைப் பிரிந்திருப்பது என்னுடைய உயிரே என்னை வெற்றுடம்பாக விட்டுப் பிரிந்து போய் நிற்பதுபோல இருக்கிறது. கண்மணீ! வா இப்படி! இந்த மனநோயை ஒரு நிமிஷமும் என்னால் சகிக்க முடியவில்லை. என் மனம் தாமரை இலைத் தண்ணீர் போலத் தவிக்கிறது. தாமசம் செய்யாதே. இப்படி வந்து என் மடியின் மேல் உட்கார்ந்து கொள்'' என்று அனலிடு மெழுகு போல மிகமிக நைந்திளகிக் கெஞ்சிக் கொஞ்சி கூறினார்.

அவரது கனிவான சொற்களைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் அன்னியர்களான ஆண்பிள்ளைகளின் நடுவில் அகப்பட்டுக் கொண்ட பதிவிரதா சிரோன்மணியான ஒரு ஸ்திரீ எவ்வாறு ஸகிக்க வொண்ணா நாணமும், கிலேசமும், சஞ்சலமும் அடைந்தவளாய்த் தத்தளிப்பாளோ அதுபோல மெதுவாக

நடந்து இளவரசரண்டையில் நெருங்கி வந்து அவருக்கு இரண்டு முழ தூரத்தில் நின்றபடி நிரம்பவும் பணிவாகவும் கனிவாகவும் பேசத்தொடங்கி, ‘‘மகாப்பிரபுவே! இந்த ராஜ்யத்தில் தங்களுடைய திருவாக்குக்கு எதிர்வாக்கு சொல்லக் கூடிய துணிவுள்ளவரும் இருக்கிறார்களா! ஒருவருமில்லை. அப்படியிருக்க, கேவலம் அபலையும் அநாதையுமான நான் தங்களுடைய சித்தத்துக்கு மாறாக நடப்பது சொப்பனத்திலும் கூடுமா? ஒருநாளும் கூடவே கூடாது. அதுவுமன்றி, நிரம்பவும் ஏழையாக இருந்த என்மேல் மகாராஜா கிருபை பாலித்து என்னைக் கொணர்ந்து மகா மண்டலேசுவர்களான மன்னர் களுடைய பத்தினிமார்களுக்கும் கிடைக்காத மகோன்னத பதவியில் வைத்து அளவற்ற ஐசுவரியத்தில் என்னைப் புதைத்து எவருக்கும் கிடைக்காத சகல சுகபோகங்களையும் கணக்கின்றிச் சொரிந்து, பரமபதமென்று சொல்லத்தக்க ஒப்புயர்வற்ற பேரின்ப நிலையில் என்னை வைத்து, என்மேல் கரைகடந்த காதலும் பிரேமையும் கொண்டுள்ள பெரும் வள்ளலான தங்கள் விஷயத்தில் நான் என்னுடைய உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணம் செய்யக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன். ஆனால், நான் முதலில் தங்களிடம் ஒரு சிறிய மனுச் செய்து கொள்ளப் பிரியப்படுகிறேன். மகாராஜா அவர்கள் இந்த ஏழையின் விண்ணப்பத்துக்குச் செவி சாய்த்து என்னைக் காத்தருள வேண்டுமாய்ப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். நான் ஜெகன்மோகன விலாசத்தில் இருந்த காலத்திலேயே, நான் எந்தப் புருஷருடைய முகத்திலும் விழிக்காமலும், எவருடனும் பேசாமலும், நிரம்பவும் எச்சரிப்பாகவே இருந்து வந்தேன். தாங்களும் மற்றவர்களும் என் விஷயத்தில் ஏற்படுத்திய பந்தய சம்பந்தமாக தங்களுக்கு முன் சில மனிதர்கள் என்னிடம் வந்து பலவகையில் தந்திரம் செய்து என்னை அடைய முயற்சித்த காலத்திலும், நான் ஒரே உறுதியாக இருந்து அவர்களை வெறுத்து அவமானப்படுத்தி அனுப்பிவிட்டது எல்லாம் எஜமானருக்குத் தெரிந்த விஷயமே.

ஆனால், அதன் பிறகு மகாராஜா என்னை ஒரு பொருட்டாக மதித்து என்னுடைய குடிசையை நாடிவந்து நிரம்பவும் பூஜிதையான வார்த்தைகளை உபயோகித்து என்னை அபாரமாகப் பெருமைப்படுத்திப் பேசி, என் மனசை மயக்கி என் உயிரையும் பிரியத்தையும் கொள்ளை கொண்டு தங்கள் வசமாக்கிக் கொண்டீர்கள். ஆகையால், நான் நிலைகலங்கி புத்தி மாறாட்டம் அடைந்து, தேனில் வீழ்ந்த ஈ போலத் தங்களுடைய மோகனாஸ்திர வலையில் சிக்கி சுயேச்சையாக நடக்கும் திறமையும் சுய அறிவையும் இழந்து, எடுப்பார் கைக்குழந்தை போலத் தங்களுடைய வசத்தில் நான் நன்றாக அகப்பட்டுக் கொண்டேன். இந்த உலகத்தில் கடவுள் சர்வ வல்லமையுள்ளவராய் இருப்பது போலத் தாங்கள் இந்த ராஜ்ஜியத்தில் சர்வவல்லமையும் சர்வாதிகாரமும் உடையவராக இருப்பதால், அப்படிப்பட்ட மகா அபாரமான பெருமை வாய்ந்த தங்களுடைய கட்டளையை மீற எனக்குக் கொஞ்சமும் துணிவு உண்டாகவில்லை. அதவுமன்றி, மன்மதாகாரமான தங்களுடைய திரு உருவத்தைக் கண்டும், தங்களுடைய மதுரமொழியைக் கேட்டும் மனம் பேதுறாத பெண்ணும் இந்த உலகத்தில் இருப்பாளா என்பதே சந்தேகம். இந்த இரண்டு காரணங்களினால் நான் தங்களுக்கு வசப்பட்டுத் தாங்கள் சொன்னதுபோல நடந்து கொள்வதாக ஒப்புக் கொண்டேன். அதன்பிறகு, நான் தங்களுக்குக் கடிதம் எழுதியபோது, நான் ருது நூலில் படித்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. என்னை அடைந்தபிறகு தங்களுக்கு எவ்விதக் கெடுதலும் இல்லாம லிருக்க வேண்டுமே என்றும், தாங்கள் எப்போதும் போல மங்கள கரமாகவே இருந்துவாழ வேண்டுமென்றும் நான் எண்ணிக் கொண்டேன். அதுவுமன்றி, நான் தார்வார் தேசத்து மகாராஜனுடைய நெருங்கிய பந்துவென்றும், நான் விருந்தாளியாக வந்திருக்கிறேன் என்றும் சொல்லும்படியும் நான் கேட்டுக்கொண்டேன். என் கோரிக்கைகளை எல்லாம் தாங்கள் பூர்த்தியாக நிறைவேற்றி வைத்து விட்டீர்களென்பது

உண்மையே. இன்றைய தினம் இரவு ஒன்பது மணிக்கு இங்கே வந்தால், நான் தங்களுடைய பிரியப்படி நடந்து கொள்ளுகிறேன் என்று எழுதியதும் உண்மையே. என் விஷயத்தில் தாங்கள் அபாரமான எத்தனையோ நன்மைகளைச் சொரிந்து, என் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி இருக்கையில், நான் சொன்ன வாக்குறுதியை மீறி நடப்பது ஒழுங்கல்ல. அப்படி நான் தவறி நடந்தால் என்னை எப்படிப்பட்ட கொடிய தண்டனைக்கு ஆளாக்கவும் மகாராஜாவுக்கு உரிமையுண்டு. அப்படி என்னைத் தண்டிப்பது பாவமான செய்கை ஆகாது. ஆனால், நான் தங்களிடம் கெஞ்சி மன்றாடி இன்னொரு வேண்டுகோள் செய்து கொள்ளப் பிரியப்படுகிறேன். அதற்கும் செவிசாய்த்தருளி என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பெரிய பீடிகை போட்டுப் பேசத் தொடங்கினாள்.

இளவரசர் தனக்கருகில் வந்து நின்ற அந்த அற்புத தேஜோ மயமான மோகன ஸ்வரூபிணியின் ஒவ்வோர் அங்கத்தின் கட்டழகையும் கண்டு சகிக்க வொண்ணாத பிரமிப்பும், கலக்கமும் அடைந்து மதிமயங்கி மன நெகிழ்வு அடைந்தவராய் அவளை நோக்கிப் புன்முறுவல் செய்து, ''கண்ணே! பூர்ணசந்திரா! உனக்கு என்னால் என்ன காரியம் ஆக வேண்டுமானாலும், என்ன பொருள் தேவையானாலும், நீ வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்வாயானால், அதே க்ஷணத்தில் நான் அதை நிறைவேற்றி வைப்பேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம். என்றைக்கு உன்னை நான் கண்டு அபாரமான உன் அழகில் ஈடுபட்டு உன்னுடைய புத்தி தீக்ஷண்யத்தையும், பரிசுத்தமான நடத்தையையும் உணர்ந்து உன்னை நான் அடையவேண்டும் என்று உறுதி செய்து கொண்டேனோ, அன்றைக்கே நான் என் உடல் பொருள் ஆவி ஆகிய சகலத்தையும் உன் வசம் ஒப்புவித்து விட்டேன். ஆகையால், நீ கேட்டு நான் கொடுக்காத பொருளும் உண்டா? உனக்கு என்ன வேண்டுமோ அதைக் கூசாமல் கேட்டுப் பெற்றுக்

கொள்ளலாம். அதற்காக நாம் இருவரும் ஒன்று கூடுவதற்கு இடையூறாவது காலதாமசமாவது ஏற்படுவது என்றால் அது என்னால் கொஞ்சமும் பொறுக்கக் கூடாததாக இருக்கிறது'' என்று மிகமிக வாத்சல்யத்தோடு இறைஞ்சிக் கூறினார்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் சுவர்க்கலோகமே புன்முறுவல் செய்வதுபோலத் தனது இன்பங்களை எல்லாம் காட்டிப் புன்னகை செய்து கிள்ளைமொழிவது போல மழலை மொழியாகப் பேசத் தொடங்கி, ''மகாராஜாவுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கேட்க, என்னுடைய உள்ளம் பூரித்துப் பொங்குகிறது; என்னைப் போன்ற பாக்கியசாலிகள் இந்த உலகத்தில் வேறே யாரும் இருக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தையும் பெருமையையும் நான் அடையும்படி செய்கிறது. என்னுடைய வேண்டுகோள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், மகாராஜா அதற்கு இணங்குவீர்கள் என்று என் மனம் உறுதியாக நம்பினாலும், இப்போது நான் சொல்லப் போகும் விஷயத்துக்குத் தாங்கள் இசைவீர்களோ என்று என் மனம் சந்தேகம் கொள்ளுகிறது. ஆகையால், விஷயத்தை எப்படி வெளியிடுகிறது என்ற பயம் என் நாக்கைப் பின்னுக்கு இழுக்கிறது; ஆகையினாலேதான் நான் பேசமாட்டாமல் தவிக்கிறேன். துணிந்து சொல்ல மகாராஜா உத்தரவு கொடுத்தால், நான் உடனே என் மனசில் உள்ளதை வெளியிடு கிறேன்'' என்று தேன்போல மாதுரியமாக மொழிந்தாள்.

அவளது மோக வலையில் சிக்கி மதிமயங்கித் தமது சுய விவேகத்தை இழந்திருந்த இளவரசர், ''நான் இவ்வளவு தூரம் உனக்கு உறுதி செய்து கொடுத்தும், இன்னமும் நீ ஏன் சந்தேகப்படவேண்டும்? நீ கேட்பது எதுவாக இருந்தாலும் சரி, அதை நான் நிறைவேற்றி வைப்பது நிச்சயம். நீ கொஞ்சமும் யோசிக்காமல் சங்கதியை வெளியிடலாம்'' என்று அழுத்தமாக வும் உறுதியாகவும் கூறினார்.

பூர்ணசந்திரோதயம் பலவாறு அபிநயம் செய்து தனது அழகையும் வசீகரத்தன்மையையும் முன்னிலும் பன்மடங்கு பெருக்கிக் காட்டித் தனது முத்துப்போன்ற பல்வரிசைகள் வெளியில் தோன்ற அவரை நோக்கிக் கொஞ்சலாகப் பேசத் தொடங்கி, ''மகாராஜா என்னைக் கொணர்ந்து இங்கே வைத்தபிறகு நான் யாரையும் என்னிடம் நெருங்க விடாமல் தனியாகவே இருந்து வந்தேன். ஆகையால், பொழுது போவது எனக்கு நிரம்பவும் கடினமாகவும் வேதனையாகவும் இருந்தது. ஆகையால் நான் மகாராஜாவின் சரஸ்வதி மகாலிலுள்ள புஸ்தகங்களில் சிலவற்றை வரவழைத்துப் படிக்கத் தொடங்கி னேன். அந்தப் புஸ்தகங்களுள் கருட புராணமென்று ஒரு புராணம் இருந்தது. அதைப் படித்தபிறகு என் மனசில் உண்டான பெருத்த திகிலினால், எனக்கு உடனே குலை நடுக்கம் உண்டாகிவிட்டது. அடிவயிற்றில் குழப்பம் ஏற்பட்டு என்னால் சகிக்க முடியாத பெருத்த சங்கடத்தை உண்டுபண்ணிவிட்டது. அது முதல் எனக்கு இரவுகளில் தூக்கமே பிடிக்காமல் போய்விட்டது. அந்தப் புஸ்தகத்திலுள்ள பயங்கரமான விஷயங்களே ஓயாமல் என் மனசில் தோன்றிக் கொண்டிருக் கின்றன. இதற்குமுன் நான் எண்ணியிருந்த பல எண்ணங்களும், கொண்டிருந்த கொள்கைகளும், செய்திருந்த முடிவுகளும், அடியோடு மாறிப்போய்விட்டன. நான் இதுவரையில் செய்த தவறுகள் போக, இனியாவது ஓர் இம்மியளவும் தவறு செய்யாமல் ஒழுங்காக நடக்கவேண்டும் என்ற பிடிவாதமான ஒரு தீர்மானம் என் மனசில் உண்டாகி வேரூன்றி விட்டது'' என்றாள்.

இளவரசர் நிரம்பவும் பிரமித்துக் கலங்கி, ''பூர்ணசந்திரா! என்ன ஆச்சரியம் இது! ஏதோ ஒரு பைத்தியக்கார புஸ்தகத்தைப் பார்த்துவிட்டு நீ இப்படிக் கலங்குவதும் பயப்படுவதும் ஆச்சரியமாக இருக்கிறதே! உன்னுடைய ஆழ்ந்த விவேக மென்ன திடமான மனமென்ன! பகுத்தறிவென்ன! நீ இப்படி

மாறுபட்டுப் பேசுவது கொஞ்சமும் நம்பத் தகாத விஷயமாக இருக்கிறதே! அப்படித்தான் அந்தக் கருடபுராணத்தில் என்ன விசேஷம் சொல்லப்பட்டிருக்கிறது? எதைக் கண்டு நீ இவ்வளவு தூரம் பயப்படுகிறாய்?'' என்றார்.

பூர்ணசந்திரோதயம், ''ஆகா! அந்தப் புஸ்தகத்திலுள்ள விஷயங்களை நான் எப்படி எடுத்துச்சொல்வேன்! அதை நான் படிக்காமலிருந்தாலும், அது நல்லதாக இருக்கும். ஒருவேளை மகாராஜா அந்தப் புஸ்தகத்தைப் படித்ததுண்டோ இல்லையோ தெரியவில்லை. அதை இதுவரையில் படிக்காமலிருந்தால் இனியும் படிக்காமலிருந்து விடுவது நல்லது. மனிதர் இறந்த பிறகு அவர்களுடைய ஜீவன்கள் எமலோகத்துக்குக் கொண்டு போகப்படுவதும், அவ்விடத்தில் தண்டிக்கப்படுவதுமான விவரங்களை இப்போது நினைத்தால் கூட, பயம் உச்சிமயிரைப் பிடித்து உலுக்குகிறது. இன்னின்ன பாவங்கள் செய்தவர்கள் இன்னவிதமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதைப் படித்த வுடனே என் மனசில் ஒரு பெருத்த கிலி உண்டாகி விட்டது. அது முதல் என் மனமே அடியோடு மாறிவிட்டது'' என்று நடுநடுங்கிக் கூறினாள்.

இளவரசர், ''ஓகோ அப்படியா சங்கதி! அதைக் கண்டா நீ பயப்படுகிறாய்? எமனுலகில் ஜீவர்கள் அவரவர்கள் செய்த குற்றத்துக்குத் தக்கபடி தண்டிக்கபடுகிறார்கள் என்பது புதிய விஷயமல்லவே! எப்போதும் ஜனங்கள் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் விஷயந்தானே. அதைக் கண்டு நீ இப்போது இவ்வளவு பிரமாதமாகப் பயப்படவேண்டிய காரணம் என்ன? மடியில் கனமுள்ளவர்களுக்குத் தானே வழியில் பயம். உனக்கும் எனக்கும் என்ன பயம் இருக்கிறது? நாம் என்ன அப்படிப்பட்ட பெரிய குற்றத்தைச் செய்து விட்டோம். ஒன்றுமில்லையே! நாமென்ன திருடுகிறோமா? கொலை செய்கிறோமா? பிறரை வஞ்சிக்கிறோமா? ஒன்றும் செய்ய வில்லையே. நான் பார்த்தவரையில் நீ ஓர் எறும்புக்குக்

கூட இடர் செய்ய மனசாலும் எண்ணாத மகா பரமார்த்தியாக இருக்கிறாயே! நீ எமனைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? நீ இதுவரையில் அவஸ்தைப்பட்டது போதும். இனியாவது அநாவசியமான அந்தப் பயத்தை விட்டுவிடு. அந்தப் புஸ்தகத்தில் படித்த விஷயங்களை அடியோடு மறந்துவிடு. நானும் நீயும் கொஞ்சமும் துன்பமென்பதே கலவாத நிச்சலனமான ஆனந்த சாகரத்தில் மூழ்கி இருந்து பரமாநந்த சுகம் அனுபவிக்க வேண்டிய இந்தக் காலத்தில் நீ இப்படிப்பட்ட கற்பனையான விஷயங்களை உண்மையென்று நம்பி பயந்து நடுங்கி மனசைக் குன்றவைத்து நம்முடைய சந்தோஷத்தை ஏன் போக்கடித்துக் கொள்ள வேண்டும். போதும் வா! இப்படி தூர நிற்க வேண்டாம்'' என்று கூறி அவளைப் பிடித்துத் தமக்கு அருகில் இழுக்க முயன்றார்.

அவரது கை பட்டவுடனே பூர்ணசந்திரோதயத்தின் உடம்பு கிடுகிடென்று ஆடியது. அவளது சிரம், கைகள், கால்கள் முதலிய அங்கங்கள் நாணத்தினால் நெளிந்து கோணுவது முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தது. அந்த மனமோகன வடிவழகி அவரது இழுப்பிற்கு வராமல் உறுதியாக தூர நின்றபடி தனது பற்களை அழகாகத் திறந்து கெஞ்சத் தொடங்கி, ''மகாராஜர் கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும். நான் கேட்ட வரத்தைத் தாங்கள் கொடுத்திருந்தும் அதை மீறி இப்படி அவசரப்படுவது நியாயமாகுமா? நான் இப்போது தங்களிடம் ஒரு விஷயம் கேட்டுக்கொண்டேன். அப்படியே செய்வதாக தாங்கள் சொல்லி வாக்களித்ததன்றி விஷயம் என்னவென்று கேட்டீர்கள். அதை நான் விவரமாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இதற்குள் தாங்கள் என் புத்தி கலங்கிப் போகும் படியான காரியத்தில் இறங்கினால் நான் மிகுதி விஷயத்தை எப்படிச் சொல்லப் போகிறேன்? தயை செய்து கொஞ்சம் பொறுங்கள்'' என்று நிரம்பவும் நயமாக வணங்கி மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

இளவரசர், ''நீதான் எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டாயே; இன்னமும் என்ன பாக்கியிருக்கிறது? ஏதோ கருட புராணத்தைப் படித்தபிறகு உன் மனசில் ஒருவிதமான பயம் உண்டாகி உன்னை நிரம்பவும் கஷ்டப்படுத்தியதாகச் சொன்னாய். அவ்வளவுதானே? இன்னம்வேறே என்ன சங்கதி இருக்கிறது? அந்தப் பயம் இன்னமுமா தீராமல் இருக்கிறது? அதற்காக ஒருவேளை இந்தத் தவணையை இன்னும் கொஞ்சம் தள்ளி வைத்துக்கொள்ள எண்ணுகிறாயா? அப்படி நீ சொல்வா யானால் அது உன்னுடைய அபாரமான புத்திக்கும் விவேகத் துக்கும் ஓர் இழுக்காகுமேயன்றி வேறல்ல. ஏதோ புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு பொய் விஷயத்தை நினைத்து இப்படி யாராவது பயப்படுவார்களா? நீ சொல்லுவது எனக்கு நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறதே! இப்போது நீயும் நானும் ஒன்றுகூடி உலகத்தைப்பற்றிய வேறு சகல விதமான கவலைகளையும் நினைவுகளையும் அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு ரதியும் மன்மதனும் போல எப்போதும் குதூகலமாக இருந்து ஆனந்த வாரிதியில் ஆழ்ந்து கிடப்பதே முதன்மையான விஷயம். அதை நாம் உடனே கவனித்தால், உன் மனதில் ஏற்பட்ட பயமெல்லாம் கொஞ்ச நேரத்தில் போன இடம் தெரியாமல் மறைந்து போய்விடும்'' என்று ஆத்திரத்தையும் அவசரத்தையும் குறித்த மொழிகளைக் கூறினார்.

அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் முன்னிலும் நூறு மடங்கு அதிக வசீகரமாகவும் நயமாகவும் உருக்கமாகவும் பேசத் தொடங்கி, ''மகாராஜாவே! நான் அந்தக் கருடபுராணத்தில் படித்த சங்கதிகளும், என் மனசில் தைத்த முக்கியமான விஷயத்தை நான் இன்னும் சொல்லவில்லை. அதைச் சொல்லவே பயமாக இருக்கிறது. அதாவது, ஒரு ஸ்திரீ தான் தாலி கட்டினவனைத் தவிர வேறு புருஷனை அணைந்தால், அவளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனை என்ன தெரியுமா? ஆகாயத்தை அளாவிய அக்கினியின் மத்தியில் அந்தச் சோர நாயகனைப் போலுள்ள ஒரு வெண்கலச் சிலை பழுக்கக்

காய்ந்திருக்குமாம். அந்த ஸ்திரீயின் ஜீவன்போய் அதைக் கட்டிக்கொண்டபடி நெடுங்காலம் இருக்க வேண்டுமாம். நெருப்பு தகிக்கும் பரமவேதனையை மாத்திரம் அந்த ஸ்திரீயின் ஜீவன் உணர்ந்துகொண்டே இருக்குமாம். ஆனால், அந்த ஜீவன் தணலினால் அழிந்து போகாமல் எப்போதும் அந்தக் கொடுந் துன்பத்தை அனுபவித்துக்கொண்டே இருக்குமாம். அந்தத் தண்டனையை நினைக்கும்போதே என் உடம்பு முழுதும் கிடுகிடென்று ஆடுகிறது. மகாகோரமான ரூபத்தோடு கூடிய எம தூதர்கள் இப்போதே வந்து என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ப் பழுக்கக் காய்ந்துள்ள அந்தச் சிலையில் தள்ளி விடுவதுபோல ஒரு தோற்றம் என் மனசில் உண்டாயிற்று. ஆகையால், அப்படிப்பட்ட மகாகொடிய தண்டனைக்கு ஆளாகாமல் தப்பவேண்டும் என்றும், தாலி கட்டாத அன்னிய புருஷரை நான் மனசாலும் நினைக்கக் கூடாதென்று என் மனசில் ஒருவித உறுதி செய்து கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. அதை உத்தேசித்தே நான் நிரம்பவும் பயந்து நடுங்குகிறேன். ஆகையால், மகாராஜா இந்த ஏழையின் மேல் தயை கூர்ந்து, என்னை அப்படிப்பட்ட கொடூர தண்டனைக்கு ஆளாக்காமல் காப்பாற்ற வேண்டும்; இதுதான் கொஞ்ச நேரத்துக்கு முன் நான் கேட்டுக்கொண்ட வேண்டுகோள்'' என்று நிரம்பவும் பயந்தவள்போலக் கூறினாள். அவளது உடம்பு தீத்தணலில் கருகும் வாழைக் குருத்துபோல வாடித் துவண்டு தள்ளாடியது. கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி எழுந்து தாரைதாரையாக இரண்டு கன்னங்களின் வழியாகக் கீழே இறங்கியது. அவள் தரையில் உட்கார்ந்து மண்டியிட்டு இளவரசரது கால்களைப் பிடித்துக்கொண்டு பாகாய் உருகி அழத் தொடங்கினாள்.

அந்த வடிவழகி திடீரென்று குழந்தைபோல மாறிப்போய் கண்ணீர் விடுத்துக் கலங்கி அழுததைக் கண்டு கரைகடந்த கலக்கமும் சஞ்சலமும் அடைந்த இளவரசர் தமது கரங்களைக் கொடுத்து, அளவற்ற அன்போடு அவளைத் தூக்கி எடுத்தவராய், ''பூர்ணசந்திரா! என்ன இது? படத்திலுள்ள

ராக்ஷசனைப் பார்த்துக் குழந்தைகள் அலறி அழுவதைப் போலல்லவா இருக்கிறது நீ செய்வது? ஜெகன் மோகன விலாசத்திலிருந்த காலத்தில் நீ தோற்றுவித்த உலக ஞானமும் பகுத்தறிவும் இப்போது எங்கே போய் ஒளிந்து கொண்டன என்பது தெரியவில்லையே! புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் கற்பனையான ஒரு விஷயத்தைப் படித்துவிட்டு யாராவது இப்படி அல்லல் படுவதுண்டா? எமனுலகத்தில் இன்னதுதான் நடக்கிறது என்பதை யார் பார்த்துவிட்டு வந்தார்கள்? மனிதன் இறந்து போனால், அதன்பிறகு, அவனுடைய ஜீவன் எங்கே போகிறது என்பதும், எவ்விதமான சுக துக்கங்களை அனுபவிக்கிறதென்பதும் அந்த மனிதனுக்குத் தெரியாமல் போய்விடுகிறது. அப்படிப்போன ஜீவன் மறுபடி வந்து குழந்தையாகப் பிறக்கும்போது அதற்கு முந்திய விஷயங்களெல்லாம் அந்தக் குழந்தைக்குத் தெரிகிறதில்லை. இந்த உடம்பை விட்டுப் பிரிந்த பிறகு மனிதருடைய ஜீவன் எங்கே போகிறது என்பதையும், அதற்கு ஏற்படும் கதி இன்னது என்பதையும் அறிந்து பூலோகத்தில் வந்து நமக்கு ஒருவரும் சொன்னதில்லை. அப்படிச் சொல்வதும் முடியாத காரியமாக இருக்கிறது. அந்தப் புராணத்தில் சொல்லப்பட்டிருப்பது எல்லாம் வெறும் யூகமேயன்றி நிச்சயமான உண்மையல்ல. மனிதர் அப்படியாவது பயந்து நல்லவழியில் நடக்கட்டும் என்ற முக்கியமான கருத்தோடு அந்தப் புராணம் எழுதப் பட்டிருக்கிறதே ஒழிய வேறல்ல. ஆகையால், அதை நீ உண்மையென்று நினைத்துப் பயப்படுவதே அநாவசியம்; எழுந்திரு; அழாதே'' என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறி அவளது கண்களைத் துடைத்துவிட்டு மிகவும் அருமையாக அவளைத் தூக்கி எடுத்தார்.

அப்போதும் தணிவடையாமல் முன்னிலும் பன்மடங்கு அதிக விசனமும் கலக்கமும் அடைந்தவளாய்க் காணப்பட்ட பூர்ணசந்திரோதயம் அவரது பிடியைவிட்டு நழுவிச்சிறிதுதூரம் அப்பால் நகர்ந்து கொண்டு, ''மகாராஜா எவ்வளவுதான்

சொன்னாலும், என் மனம் துணிவுகொள்ள மாட்டேன் என்கிறது. என் பயமும் நீங்காது என்றே நினைக்கிறேன். நம்முடைய முன்னோர்கள் எழுதி வைத்துள்ள தெய்வீகமான புஸ்தகங்களை எல்லாம் பொய்யென்று எளிதில் விலக்கித் தள்ளுவது சரியாகுமா? நமக்காக எத்தனையோ பாடுகள் பட்டுத் தமது வாழ்நாட்கள் முழுதையும் ஒரே துறையில் செலுத்தி அரும்பெரும் விஷயங்களையும் ரகசியங்களையும் நம் முன்னோர் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார்கள். அவைகளை அபிவிருத்திச் செய்து மேன்மேலும் ரகசியங்களைக் கண்டுபிடித்துப் புதுமையான விஷயங்களை எழுதிவைக்க இக்காலத்து மனிதருக்குத் திறமையில்லா விட்டாலும், முன்னோர்கள் தேடிவைத்த அரிய பொருட்களின் உண்மைகளை யாவது அறிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா. அதைவிட்டு நம்முடைய புராணங்களை எல்லாம் நாம் பொய்யென்று சொல்வது சரியல்ல. இப்போதும் பூர்வஜென்ம ஞானத்தோடு ஆங்காங்கு சிற்சிலர் பிறப்பதாக நாம் கேள்வியுறுகிறோம். அதுவுமன்றி, முற்காலத்தில் அபாரமான ஞானமும் அதிதீக்ஷண்யமான புத்தியும் உள்ள மகான்கள் எத்தனையோ பேர் இருந்து இறந்திருக்கிறார்கள். அவர்கள் தமது அறிவையும் ஐம்புலன்களையும் அடக்கி, உள்புறம் திருப்பி யோகாப்பியாசம் செய்து தமது ஞான திருஷ்டியை வலுப்படுத்தி அதன் உதவியால் ஈசுவர சிருஷ்டியின் ரகசியங்களை எல்லாம் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. உதாரணமாக நாம் இப்போது நமது பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்வோம். அடுத்த வருஷத்தில் இன்னதினம் இன்னநாழிகை இன்னவிநாடியில் கிரகணம் பிடிக்கப் போகிறது என்றும், அதன் பரிமாணம் இவ்வளவு என்றும், அது இன்னகாலத்தில் விலகும் என்றும் இப்போதே கண்டு எழுதிவிடுகிறார்கள். அதுபோலவே காரியம் நடைபெறவில்லையா? இதுபோல இன்னமும் மிகமிக சூட்சுமமான கோடானுகோடி ரகசியங்களையும், நுட்பத்திலும் நுட்பமான விஷயங்களையும் நம்மவர்கள் கண்டு பிடித்திருக்க

வில்லையா? ஆகையால், நாம் இந்த கருட புராணத்தை மாத்திரம் பொய்யென்று நினைக்க என்ன ஏது இருக்கிறது? அப்படித்தான் நடக்கத்தகாத விஷயம் அதில் என்ன இருக்கிறது? இன்னின்ன குற்றங்கள் செய்தவர்கள் இன்னவிதம் தண்டிக்கப் படுகிறார்கள் என்று தானே அது சொல்லுகிறது. அதில் என்ன அசம்பாவிதம் இருக்கிறது. இந்தப் பிறப்பில் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை இல்லாமலா போய்விடும். அவர்கள் எமனுலகில் தண்டிக்கப்படுவதில்லை என்று வைத்துக் கொண்டாலும், அவர்கள் வேறே எவ்விடத்திலாவது தண்டனை அடைந்துதானே தீரவேண்டும். எமனுலகில் தண்டனை அடையாவிட்டால், இந்த ஜென்மத்தில் செய்த குற்றங்களுக்குத் தக்கபடி அடுத்த ஜென்மத்தில் கஷ்டங்களை அனுபவிக்கிறதாகவாவது வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா! உண்மை எப்படியாவது இருக்கட்டும். முக்கியமாக ஒருவன் ஒரு குற்றம் செய்தால், அதற்காக அவன் தண்டனை அடைய வேண்டும் என்பது மனிதருடைய நியாஸ்தலத்திலேயே இருக்கும்போது, சர்வக்ஞராகிய கடவுளின் நியாயஸ்தலத்தில் இல்லாமலா போய்விடும். ஆகையால், எந்தக் குற்றத்துக்கும் தக்கபடி தண்டனை கிடைக்கிறதென்பது நிச்சயம். அப்படி யிருக்க, நாம் இந்தக் கருடபுராணத்தைப் பொய்யென்று இலேசில் அசட்டை செய்துவிட முடியுமா? அந்தப் புராணம் உண்மையானது தான் என்று என் மனம் உறுதியாக நம்புகிறது. அது பொய்யென்று மகாராஜா சொல்வதும் சரியல்ல'' என்று நிரம்பவும் பரிதாபகரமாகவும் பணிவாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட இளவரசர் கிலேசமும் வெட்கமும் அடைந்த வராய், ''ஓகோ! ஏதேது! நீ பெருத்த புராணிகர் ஆய்விட்டாயே! நீ சொல்வது போலவே, அந்தப் புராணத்திலுள்ளது எல்லாம் உண்மையென்றே வைத்துக்கொள்வோம். அதற்குப் பயந்தே நீ நடந்து கொள். நீ என் விஷயத்தில் யாதொரு தவறும் செய்ய வேண்டுமென்றும் நான் உன்னை வற்புறுத்தவில்லை. உன்னை நான் சாஸ்திரப்படி கலியாணம் செய்துகொள்ளவும்

சம்மதிக்கிறேன் என்று நான் முன்னாலேயே சொல்லியிருப்பது உனக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன். அதன்படி நடக்க நான் இப்போதும் தயாராக இருக்கிறேன். இன்னம் இரண்டொரு தினங்களுக்குள் நல்லவேளையாகப் பார்த்து அப்போது நம்முடைய கலியாணத்தை நிறைவேற்றி விடுவோம். நமக்கென்ன சாமான்கள் சேகரிக்க வேண்டுமா? மனிதர்களுடைய வருகையை எதிர்பார்க்க வேண்டுமா? ஒன்றுமில்லை. இந்த அரண்மனையில் நித்திய கலியாண மாகவே நாம் நடத்தி வருகிறோம். தினம் ஆறுகாலம் மேளம் வாசிக்கிறார்கள். எப்போதும் புரோகிதர்கள் பஞ்சாங்கம் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். வேளைக்கு வேளை பதினாயிரம் மனிதருக்கு குறையாமல் சமாராதனை சாப்பிடு கிறார்கள். எங்கு பார்த்தாலும் வாழை மரங்களும், பச்சைத் தோரணமும், அலங்காரங்களுமே எப்போதும் காணப்படு கின்றன. மாங்கலிய தாரணம் ஒன்று தவிர, மற்றபடி இவ்விடத்தில் நித்திய கலியாணமே நடந்து வருகிறது. இத்தனை வைபவங்களினிடையில் நாம் தாலி கட்டுகிறது தானா ஒரு கடினமான வேலை. ஒரு நிமிஷத்தில் கட்டி விடலாம்; அதைப்பற்றி நீ கவலைப்படாதே. இனி நீ கருட புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதை நினைத்துப் பயப்படவும் தேவையில்லை. உன்னை நான் விபசார தோஷத்துக்கு ஆளாக்குவேன் என்ற திகிலும் இனி உனக்கு வேண்டாம். இனி நீ உன் மனசைத் திடப்படுத்திக் கொள்ளலாம்'' என்று கூறி அவளது முகத்தை உற்று நோக்கினார். அதற்குமேல் அவள் எவ்வித ஆட்சேபணையும் கூறமாட்டாள் என்றும் கூற இடமில்லை என்றும் அவர் நினைத்து, எப்படியும் அந்த வடிவழகியை அன்றையதினம் தாம் வசப்படுத்தி விடலாமென்று உறுதியாக எண்ணிக்கொண்டார். ஆனால், அவரது கடைசியாக சொல்லைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த விசனமும் கலக்கமும் அடைந்தவளாய்ச் சிறிது நேரம் தத்தளித்துத் தயங்கி, ''மகாராஜா

என் விஷயத்தில் இப்படிப்பட்ட கரைகடந்த வாத்சல்யமும் பாசமும் கொண்டு பரம ஏழையான என்னை எவருக்கும் கிட்டாத ராஜஸ்திரீயின் பதவியில் வைக்க இஷ்டப்படுவதைக் காண என் மனம் நிரம்பவும் உருகுகிறது. இந்த நிமிஷத்தில் நான் அடையும் பெருமைக்கும் பேரானந்தத்துக்கும் அளவு சொல்ல யாராலும் முடியவே முடியாது. ஆனாலும், என் மனசில் இன்னொரு புதிய கவலை உண்டாகி என் மனசை வதைக்கிறது. ஒரு ஸ்திரீக்குத் தாலி கட்டுவதைத் தங்கள் குழந்தைகள் பொம்மைக் கலியாணம் செய்து விளையாடுவதைப் போல நிரம்பவும் எளிதாக நினைத்துப் பேசுகிறீர்கள் போலிருக்கிறதே. அக்கினி சாட்சியாகவும் ஆகாயவாணி பூமாதேவி சாட்சி யாகவும், இன்னும் விஜயம் செய்துள்ள ஜனங்கள் சாட்சி யாகவும் தாலி கட்டும்போது ஸ்திரீ பதிவிரதா தருமப்படி நடந்து கொள்வதாகவும், புருஷர் ஏகபத்தினி விரதர்களாய் இருப்ப தாகவும் பிரமாணம் செய்து ஒருவரை யொருவர் உயிர்த் துணையாகவும் ஜீவாதாரமாகவும் ஏற்றுக்கொள்ளுகிறார்களே. அப்படிப்பட்ட மகா முக்கியமான சடங்கு நிறைவேறிய பின் நான் தான் பிற புருஷரை மனசாலும் நினைக்கலாமா, அல்லது, தாங்கள் தான்வேறு ஸ்திரீயை நாடலாமா? அப்படி நடந்து கொள்ளாமல் துரோகம் செய்பவர்களுக்கு அந்தக் கருட புராணத்தில் சொல்லியிருக்கும் தண்டனையும் மகா பயங்கர மானதாக இருக்கிறது. நான் ஆரம்பத்தில் இங்கே வந்த காலத்தில் தங்களுக்கு வேறே மனைவி யாரும் இல்லையென்றே எண்ணிக் கொண்டிருந்தேன். இங்கே வந்து விசாரித்தபிறகு உண்மை யெல்லாம் தெரியவந்தது. பூனாதேசத்து ராஜகுமாரியும், சகல அம்சங்களிலும் குண ஒழுக்கங்களிலும், தங்களுடைய பட்டமகிஷியாக இருக்கத் தகுந்தவர்களுமான பெண்ணரசி யைத் தாங்கள் சாஸ்திரப்படி கலியாணம் செய்து கொண்டி ருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட சர்வ சிலாக்கியமான மாதரசி தங்களுக்குப் பட்டமகிஷியாக இருக்கையில், சகல விதத்திலும் கேவலம் தாழ்ந்தவளான என்னைத் தாங்கள்

கலியாணம் செய்துகொள்ள நினைப்பது மகா உத்தமியான அந்தப் புண்ணியவதியின் விஷயத்தில் பெருத்த துரோகம் செய்ததாகுமே அன்றி வேறல்ல. நியாயப்படி பார்த்தால் தங்களோடு இருந்து சந்தோஷம் அனுபவிக்க உரிமை உடையவர்களான அந்த மகாராணியாரைப் புறக்கணித்து அவர்கள் வயிறெரிய நாம் சந்தோஷமாக இருந்தால் அதைவிடக் கொடிய பாவம் வேறே இருக்குமா? உடனே என்னுடைய தலையில் பெருத்த இடியல்லவா விழுந்துவிடும். பதிவிரதா ஸ்திரீகளின் வயிறெரிய அக்கிரமமாக நடத்துகிறவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, ஒரு நாளும் விடிய மாட்டார்கள்; வெகு சீக்கிரத்தில் நாசமடைந்து விடுவார்கள். ஆகையால், தாங்கள் பிரஸ்தாபிக்கும் விஷயம் கொஞ்சமும் நியாய சம்மதமானதல்ல. சகலமான தர்மங்களையும் சிதைந்து போக விடாமல் காப்பாற்றி நிலைநிற்கச் செய்வது தங்களைப்போன்ற செங்கோல் வேந்தர்களுடைய கடமையாயிருக்க, வேலியே பயிரை அழிப்பதைப் போலத் தாங்களே அவைகளை உல்லங்கனம் செய்தால், மற்ற ஜனங்கள் நிரையில் நிற்பார்களா? ஜனங்கள் முறை தவறி நடந்தால், அந்தத் தேசம் க்ஷேமம் அடையாமல் பாழடைந்து போய்விடாதா? அவ்வாறு தேசமும் குடிகளும் சீர்குலைந்து போகுமானால் மகாராஜாவுக்கு அதைக் காட்டிலும் வேறு பெரிய நஷ்டமாவது துக்கரமான சம்பவமாவது நடக்கக் கூடுமா? மகாராஜாவுக்கு அப்படிப்பட்ட பெருத்த துன்பம் நேருமானால், அது என்னால் ஏற்பட்டதென்ற பழிப்புக்கும் பாவத்துக்கும் நான் ஆளாக வேண்டியதோடு மகா உத்தமியான தங்கள் பட்டமகிஷியின் வயிறெரியச் செய்த பெருந் தோஷத்துக்குரிய எமதண்டனையையும் நான் பெற நேரும். தங்களுக்கும் தங்கள் பத்தினியாருக்கும் எனக்கும் நேரக்கூடிய இத்தனை துன்பங்களுக்கும் காரணபூதமாயிருக்கும் என் உறவையும் என் நினைவும் தாங்கள் விட்டுவிடுவதே சர்வதோஷ நிவாரண மருந்தென்று நான் எண்ணுகிறேன். நான் எப்போதும்

பயந்த குணமுடையவள். அக்கிரமத்தில் இறங்குவதென்றால், அதற்கு என் மனம் கொஞ்சமும் இடம் கொடுக்காது. இதுவரையில் நான் என் மனதார ஒரு கொசுவுக்குக் கூடத்துன்பம் செய்யாதவள். இனியும் அப்படியே நடந்து இந்த ஜென்மத்தைக் கடத்தி விடவேண்டும் என்பது என்னுடைய உறுதியான கொள்கை. ஒருவன் அக்கிரம வழியில் குபேர சம்பத்தை அடைந்து ஆயிரங்காலம் வாழ்வதைவிட, நியாயமான வழியில் முயற்சித்துக் கூழ்குடித்து எள்ளளவேனும் சௌக்கிய வாழ்வு என்பதையே அறியாமல் இருந்து இறப்பது சர்வ சிலாக்கிய மானது. அது இம்மையில் கஷ்டமாக இருந்தாலும் மறுமையில் பன்மடங்கு பலன் தருவது நிச்சயம். மனிதன் இந்த உலக விஷயங்களைப்பற்றி நடந்து கொள்வதை விட அடுத்த உலக விஷயங்களைப் பற்றி நிரம்பவும் அதிகக் கவனிப்பாகவும் எச்சரிப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய மனப்பூர்வமான நம்பிக்கை. இந்த உலகத்திலுள்ள மனிதர்களால் நடத்தப்படும் நியாயஸ்தலங்களில் செலுத்தப்படும் நீதி முற்றிலும் சரியாக இருக்குமென்று நான் எண்ணுவதற்கில்லை. எல்லாவற்றையும் அறிந்தவனான ஈசுவரனால் அடுத்த உலகில் செலுத்தப்படும் நியாயமோ தவறற்றது, பட்சபாதமற்றது, தப்ப முடியாதது, நிரம்பவும் கொடுமையானது. ஆகையால், நாம் அடுத்த உலகத்தில் பூஜிதையாக நடத்தப்பட வேண்டுமானால், இந்த உலகத்தில் நாம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். அக்கிரம வழியில் எதிர்ப்படும் சுகங்களையும் வருவாய்களையும் நாம் கேவலம் துரும்பாக மதித்து உல்லங்கனம் செய்ய வேண்டும். அவைகளை விஷமென மதித்து அறவே விலக்க வேண்டும். அவைகள் இல்லாவிட்டால், நமக்கு எத்துணை கஷ்ட நஷ்டங்கள் பசி பட்டினிகள் ஏற்படுவதாக இருந்தாலும், நாம் பின்வாங்கக்கூடாது. நியாய வழியில் ஏற்படுவது அற்பசுகமாக இருந்தாலும், அற்ப ஊதியமாக இருந்தாலும், அதை ஏற்று வாழ்வது ஒன்றே பரம சுகமானது. அது அடுத்த உலகத்திலும்,

இனி வரும் ஜென்மங்களிலும் நாம் அடையும் பெருமைக்கும் நன்மைகளுக்கும் விதைபோடுவது போன்றது. இந்த விஷய மெல்லாம் மகாராஜாவுக்குத் தெரியாததல்ல. நான் மகா அறிவாளிபோல இதையெல்லாம் எடுத்து விஸ்தாரமாகச் சொல்வதும் அதிகப் பிரசங்கமாகுமே ஒழிய வேறல்ல. ஆகையால், மகாராஜா அவர்கள் என்னை இவ்வளவோடு விலக்கி இவ்விடத்தை விட்டுப்போய்விட அனுமதி கொடுக்க வேண்டுமாய் நான் நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் தங்களுடைய பொற்பாத கமலங்களில் ஆயிரம் தரம் தெண்டனிட்டு வேண்டிக் கொள்ளுகிறேன். ஏதோ மதிமயங்கி நான் என்னுடைய இடத்தைவிட்டு இங்கே வந்து இவ்வளவு காலம் இருந்து மகாராஜாவின் மனசில் ஒருவித நம்பிக்கையை உண்டாக்கி மனோ வேதனைக்கு ஆளாக்கி விட்டேன். தெரியாத்தனத்தினால் நான் செய்த தவறுகளை எல்லாம் மகாராஜா க்ஷமித்துக் கொள்ள வேண்டும். இங்கே வந்தவுடனே அந்தக் கருடபுராணத்தை நான் வாசித்திருந்தால், உடனே இவ்விடத்தை விட்டுப்போகத் தீர்மானித்து எஜமானரிடம் அனுமதி கேட்டிருப்பேன். இவ்வளவு காலம் இருந்து விட்டு இப்போது என் மன மாறுபாட்டை எப்படி வெளியிடுவதென்று நினைத்து அஞ்சி நான் இந்த இரண்டு மூன்று நாட்களாய் எப்படி இதைத் தங்களிடம் வெளியிடுவது என்பதை அறியாமல் சிந்தித்திருந்தேன். இப்போது தாங்களே வந்து மேல் நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறபடியால் நான் துணிந்து விஷயத்தை வெளியிடுவது கட்டாயமாயிற்று. ஆகையால், மகாப் பிரபுவாகிய எஜமானர் எப்படியாவது இந்த ஏழையின் உறுதியான கொள்கை நிறைவேறும்படி செய்ய வேண்டுமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் கனிவாகவும் மாதுரியமாகவும் உருக்கமாகவும் பலவித வசீகர அபிநயங்களோடும் கூறினாள்.

அவ்வளவோடு இளவரசர் தன்னை மறந்து விலக்க வேண்டுமென்று அவள் கேட்டுக்கொண்டதும், அதற்காக அவள் செய்த சாகஸங்களும் வெகுவெகு நேர்த்தியாகவும், மனதை உருக்கி வாட்டக் கூடியவையாகவும் இருந்தமையால், அவைகளால், இளவரசர் அவள்மீது கொண்ட மோகமும் பாசமும் அவளை எப்படியாவது அடைய வேண்டுமென்ற மன உறுதியும் முன்னிலும் பன் மடங்கு அதிகரித்தனவே அன்றி, அவளை மறக்கவோ விலக்கவோ வேண்டுமென்ற விருப்பம் ஓர் எள்ளளவும் உண்டாகவில்லை. அவள் சொன்ன வார்த்தைகளும் நீதிகளும் அவர் சிறிதும் எதிர்பார்க்காதன. ஆகையால், அவர் அபாரமான ஆச்சரியமும் கவலையும் ஏக்கமும் கொண்டவராய் அவளை நோக்கி, "பெண்ணே! இப்போது நீ பேசுவதும், நான் கேட்பதும் சொப்பனத்தில் நடப்பதா, அல்லது உண்மையில் நடப்பதா என்ற சந்தேகம் என் மனசில் உண்டாகிறது. நீ பேசுவது பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, உலகநீதி முதலிய நல்லொழுக்க நூல்களைப் படித்து அர்த்தம் சொல்வதுபோல இருக்கிறதேயன்றி, உலகத்தில் பழகி அதன் அனுபவங்களைத் தெரிந்து கொண்ட வயதான மனிதர் பேசும் பேச்சாகவே காணப்படவில்லையே. நீ இந்த வார்த்தைகளை மனசார உண்மையில் பேசுகிறாயா, அல்லது, என் மனசைச் சோதிப்பதற்காக இப்படி நடக்கிறாயா என்பதே எனக்கு முதலில் சந்தேகமாக இருக்கிறது. நீ உண்மையாகவே இந்தக் கொள்கையின்படி நெறிமுறை தவறாமல் நடக்கிறவளோ அல்லவோ என்பதை நிச்சயிக்க நான் எத்தனிப்பது அநாவசியமான காரியமென நினைக்கிறேன். நீ சொல்வதெல்லாம் உண்மையென்றும், அதன்படி நீ நடக்க மனப்பூர்வமாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறாய் என்றும், நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நான் எப்போதும் உன்னைக் கண்டு உன்னுடைய அருமை பெருமைகளை உணர்ந்து உன்மேல் பிரியப்பட்டு உன்னை எப்போதும் சாசுவதமாக அடைய வேண்டுமென்று நான் தீர்மானித்துக் கொண்டு,

உன்னைக் கொணர்ந்து இங்கே வைத்து இத்தனை ஏற்பாடுகளையும் செய்து இவ்வளவு நீண்டகாலம் உன்னை நினைத்து நினைத்து மனநொந்து தவித்திருந்தேனே; இனி நான் என்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றாமல் பின்னிடேன். நான் அடைய எண்ணிய பெண்ணை இன்னொரு புருஷன் அடைய நான் பார்த்து ஒருநாளும் சகித்திருக்க மாட்டேன். ஆனாலும், நான் உன் மனசுக்கு விரோதமாகவும், உன் மனம் துன்பப்படும் படியாகவும் உன்னை வற்புறுத்தி என் தீர்மானத்தை நிறைவேற்ற மாட்டேன். நான் இன்னொரு நியாயம் உன்னிடம் சொல்லுகிறேன். அதற்கு நீ சரியான உத்தரம் சொல்ல வேண்டும். அதன்மேல் நான் என்னுடைய முடிவைத் தெரிவிக்கிறேன். இப்போது நீ எடுத்துச் சொன்ன நீதிபோதனையில், ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயைக் கலியாணம் செய்துகொண்டால், இருவரும் ஒருவரிடத்தொருவர் உண்மையாகவும் உறுதியாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் புருஷனாவது, பெண் ஜாதியாவது அன்னியர்மேல் ஆசைப்படுவது கூடாதென்றும், அது பெருத்த பாவமென்றும் நீ சொன்னாயல்லவா? உதாரணமாக, ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷனுக்கு துரோகம்செய்து, பிற புருஷனை நாடித் தனது கற்பை இழந்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அதை அவளுடைய சொந்தப் புருஷன் அறிந்து கொள்கிறான். அப்படிக்கண்ட பிறகும் அந்தப் புருஷன் அவள் விஷயத்தில் ஒழுங்காகவும் ஏகபத்னி விரதத்தை அனுஷ்டிப்பவனாகவும் இருக்க வேண்டுமா? அல்லது, அப்படி இருப்பதுதான் சாத்தியமா? அந்த நிலைமையில் அவன் அவளை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வது ஒழுங்கா, அல்லது வேண்டா வெறுப்பாக நடிப்பவளும் களங்கப்பட்டுப் போனவளுமான தன் பெண் ஜாதியையே தொடர்ந்து ஊரார் பழிக்க நடந்து கொள்கிறது ஒழுங்கா? அவன் என்ன செய்வது நியாயம் என்பதைச் சொல் பார்க்கலாம்'' என்றார்.

பூர்ணசந்திரோதயம், "அந்தச் சந்தர்ப்பத்தில் புருஷன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது அவனுக்குக் கிடைத்திருக்கும் சாட்சியத்தைப் பொருத்ததாக இருக்கிறது. தன் மனைவி உண்மையிலேயே தன் கற்பை இழந்ததை அவன் சந்தேகமற நேரிலேயே பார்ப்பானாகில், அவன் வேறு சில தக்க பெரிய மனிதர்களும் அந்த விஷயத்தை மனசாரத் தெரிந்து கொள்ளச் செய்து, அதன்பிறகு அவளை விலக்கிவிட்டு வேறொருத்தியைக் கலியாணம் செய்துகொள்ளலாம். அது சாஸ்திர சம்பந்தமானது. தானே நேரில் பார்க்காமல் அனுமானத்தின் மேலும், பிறர் சொல்வதைக் கேட்டும், அமிதமான பொறாமைக் குணத்தினாலும், சம்சயத்தினாலும், ஒருவன் தன் சம்சாரத்தின்மேல் சந்தேகங்கொண்டு வெறுத்து அவளை விலக்க எண்ணுவதும் வேறொருத்தியை மணக்க நினைப்பதும் நியாயமல்ல. அல்லது, தான் வேறொருத்தியை அடையவேண்டுமென்று துர்மோகங் கொண்டு வேண்டாத பெண்டாட்டியின் கால் பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம் என்ற நியாயப்படி, அவள்மேல் இல்லாத பொல்லாத அபாண்டமான தவறுகளையும் சுமத்தி அவளை விலக்க நினைப்பது கொடிதினும் கொடிதான பரம பாதகமாகும். முக்கியமாக இந்த விஷயத்தில் ஏற்படும் வழக்கு நடுநிலை தவறாத அன்னிய மனிதருடைய தீர்மானத்துக்கு விடப்பட வேண்டியதேயன்றி புருஷனே தனக்கு அதிகாரம் இருக்கிறது என்று நினைத்து தன்னிச்சைப்படி நடந்துகொள்வது பெரும்பாலும் தவறாகவே முடியும். இப்போது தாங்களும் அடியாளும் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்துக்கும், இப்போது தாங்கள் கேட்ட விபசார தோஷ விஷயத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இருப்பதாகத் தோன்றவில்லையே! தங்களுடைய பட்ட மகிஷியான மகாராணியார் மகா உத்தம ஜாதி ஸ்திரீ. பரிசுத்த ஸ்வரூபிணி என்றாலும் அவர்களுக்கே தகும். அப்படிப்பட்ட அருந்ததி தேவியின் விஷயத்தில் தாங்கள் ஏதாவது தோஷம் கற்பிக்க எத்தனிக்கின்றீர்களா? தாங்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்று சொப்பனத்திலும் எண்ண

மாட்டீர்களென்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட இளவரசர் ஆச்சரியத்தோடு புன்னகை செய்து, ''ஏதேது; நீ பேசுவதைப் பார்த்தால் மகா விவேகி போலக் காணப்படுகிறாய். அப்படி இருந்தும், கட்டுக்கதைகளான புராணங்களில் மூடநம்பிக்கை வைத்திருப்பதும், அவைகளில் சொல்லப்பட்டிருக்கிறபடி தான் நாம் நடந்து கொள்ள வேண்டுமென்று நீ ஒரே பிடிவாதமாகச் சொல்வதும் நிரம்பவும் விநோதமாக இருக்கின்றன. ஆனாலும், இப்போது நான் கடைசியாகக் கேட்ட கேள்வியின் உள்கருத்தை நீ நிரம்பவும் கூர்மையாகக் கிரகித்துக்கொண்டு, அதற்குத் தகுந்தபடி யுக்தியாக பதில் சொன்னது நிரம்பவும் மெச்சத் தகுந்ததாக இருக்கிறது. நீ அபாரமான சாமர்த்தியமும் புத்திக் கூர்மையும் உடையவளாக இருக்கிறாய் என்பதை உன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் தெளிவாக விளக்கிக் காட்டுகிறதன்றி, நான் உன்னை எப்படியும் அடையவேண்டுமென்ற என்னுடைய மன உறுதியை அதிகமாகப் பலப்படுத்துகிறது. நீ இதுவரையில் சொன்ன சொற்களின் பெரும்பாகமும் ஒப்புக்கொள்ளக் கூடியவையாக இருந்தன. ஆனாலும், நீ என்னுடைய பட்டமகிஷியைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசிய வார்த்தைக ளெல்லாம் முற்றிலும் தப்பானவை. நீ இந்த அரண்மனைக்கு வந்து சரியாக இரண்டு மாச காலம்தான் ஆகிறது. அவள் இந்த ஊரை விட்டுப் பூனாதேசத்திற்குப் போய் பல மாதங்கள் ஆகின்றன. அவள் இந்த ஊரைவிட்டுப் போன காலத்தில் நீ இந்த ஊரிலேயே இருந்திருக்க மாட்டாயென்று நினைக்கிறேன். ஒருவேளை நீ இந்த ஊரில் இருந்திருந்தாலும், அவளை நேரில் பார்த்தும் இருக்க மாட்டாய்; நீ அவளுடைய உண்மையான குணத்தையும் நடத்தையையும் அனுபவ பூர்வமாகக் கண்டிருக்கவும் மாட்டாய். ஆகையால், அவளைப் பற்றி நீ தெரிந்து கொண்டிருப்பதெல்லாம் பிறர் சொல்லக் கேட்டுத்

தெரிந்துகொண்டதேயன்றி வேறல்ல. அப்படித் தெரிந்து கொண்ட விஷயம் உண்மையானதுதான் என்பதை யாரும் நிச்சயமாக நம்பமாட்டார்கள். அதை நம்புவதும் ஒழுங்கல்ல. ஒரு மனிதரிடம் சிலர் நன்மை பெறுகிறார்கள்; சிலர் தீமை பெறுகிறார்கள். நன்மைப் பெறுகிறவர்கள் கொடுத்தவரை அபாரமாகப் புகழுவார்கள். தீமை பெறுகிறவர்கள் அது போலவே அவரை இகழ்ந்து தூஷணையாகப் பேசுவார்கள். ஆகையால், ஒருவரைப் பற்றிப் பிறர் சொல்லும் அபிப்பிராயத்தை நாம் உடனே அப்படியே நம்பிவிடக் கூடாது; அதை நிரம்பவும் ஜாக்கிரதையாகவே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க, நீ என் பட்டமகிஷியைப் பற்றி வாய் கொண்டமட்டும் புகழ்ந்து பேசியது சரியல்ல. இதோ நேற்றைய தினம் தபாலில் பூனாவிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதில் எழுதப்பட்டுள்ள சங்கதிகளை வாயில் வைத்துப் பேசவும் கூசுகிறது. ஆகையால், இந்தக் கடிதத்தை நீயே படித்துப் பார்'' என்று கூறியவண்ணம் தமது சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்துக்கோபமாக அவள் மீது எறிந்தார். அதைக் கண்டு திடுக்கிட்டுத் திகைப்பவள் போல நடித்த பூர்ணசந்திரோதயம், தான் அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்கலாமோ படிக்கக் கூடாதோ வென்று யோசிக்கிறவள் போலச் சிறிது நேரம் தயங்கியபின் மெதுவாக அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

பூனா நகரம்,

வருஷம்- மாசம் -தேதி.

பரமரகசியமான விஷயம்.

ராஜாதிராஜ அதிராஜ தீரரான தஞ்சைமா நகரத்தில் குமாரராஜா அவர்களது சன்னிதானங்களில் ஆயிரங்கோடி தண்டனிட்டுத் தாளும் தடக்கையும் கூப்பி நிரம்பவும்

வணக்கமாகச் செய்துகொள்ளும் விண்ணப்பம். நான் பூனா தேசத்தில் தங்கள் மாமனாருடைய அரண்மனையில் உள்ள ஓர் உத்தியோகஸ்தன். நான் இந்த அரண்மனையாரின் ஆதரவிலும் போஷணையிலும் இருந்து வளர்ந்து வயிறு வளர்த்து வருகிறவன் ஆதலால், நான் இந்த ஊர் மகாராஜாவிடத்திலும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த மனிதர்களிடத்திலும், நன்றி விசுவாசமும் பற்றும் உடையவனாக இருக்கக் கடமைப்பட்டவன்; அவர்களுடைய குற்றம் குறைபாடுகளை எல்லாம் வெளியிடாமல் மறைத்து, அவர்களைப் பற்றி அபாரமாகப் புகழ்ந்தும் ஸ்தோத்திரம் செய்தும் பேசவேண்டிய வன். அப்படியிருக்க, நான் அதற்கு நேர் விரோதமாக நடந்து கொள்வதைக் கண்டு தாங்கள் நிரம்பவும் ஆச்சரியமடைவீர்கள் என்பது நிச்சயமான விஷயம். அதுவுமன்றி, நான் ஏதோ பகைமையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யான விஷயங்களை மெய்போல எழுதியிருக்கிறேன் என்ற சந்தேகமும் தங்களுடைய மனதில் தோன்றுவது இயற்கையே. அப்படி இருந்தாலும், தங்களுடைய சந்தேகம் கொஞ்ச காலம் வரையில்தான் இருக்கும். நான் சொல்லப்போவது உண்மையான விஷயந்தான் என்பதைத் தாங்கள் கண்கூடாகவும் தக்க சாட்சியங்களின் மூலமாகவும் திருப்திகரமாக உணரும் போது தங்களுடைய சந்தேகம் தானாகவே விலகிப்போகும் என்பது நிச்சயம். அதுவரையில் நான் எவ்வளவு உறுதியாகச் சொன்னாலும், பிரமாண பூர்வமாகச் சொன்னாலும், தங்களுடைய மனதில் நம்பிக்கை உண்டாவது சாத்தியமான காரியமல்ல. ஆகையால், அதைவிட்டு, நான் விஷயத்தைச் சொல்லுகிறேன்.

2. எங்கள் மகாராஜாவின் குமாரத்தியும், தங்களுடைய தர்ம பத்தினியும் பட்டமகிஷியுமான ஸ்ரீமதி லலிதகுமாரி தேவி தங்களை மணந்து தங்கள் ஊருக்கு வருவதற்கு முன் இந்த ஊரில் இருந்த காலத்தில் நான் அவர்களோடு பழகிப்

பார்த்தவரையில் அவர்கள் நிரம்பவும் நல்ல குணமும் சுத்தமான நடத்தையும் உள்ளவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் இவ்வளவு சொற்ப காலத்திற்குள் இப்படி அடியோடு புது மனிஷியாக மாறிப்போவார்கள் என்று யாரும் எதிர்பார்த்தே இருக்கமாட்டார்கள். இப்போது தங்களுடைய மாமனார் நோய் கொண்டு படுத்திருப்பதைக் கருதி அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற காரணத்தை முன்னிட்டு அவர்கள் தஞ்சையிலிருந்து இங்கே வந்தபிறகு, அவர்களுடைய உண்மையான குணமும் மனப் போக்கும் உள்ளபடி தெரிந்தன. அவர்கள் தஞ்சையில் தங்களோடு இருந்த சுமார் நாலைந்து வருஷ காலத்தில் அவர்கள் பலவிதமான துன்மார்க்கங்களில் தம்முடைய மனதைச் செலுத்தி இருந்ததன்றி, தங்களுடைய அதிருப்தியைப் பூர்த்தியாகச் சம்பாதித்துக் கொண்டிருப்ப தாகவும் தெரிகிறது. அதுவுமல்லாமல், சென்ற இரண்டு வருஷ காலமாக அவர்களுக்கும் தங்களுக்கும் எவ்விதமான தேக சம்பந்தமும் நேரிடவில்லையென்று நான் கேள்வியுற்று அவர்கள் விஷயத்தில் தாங்கள்தான் முற்றிலும் கொடுமையாக நடந்து கொள்ளுகிறீர்கள் என்று இதுவரையில் நான் தங்கள் விஷயத்தில் தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். ஆனால், அவர்கள் இங்கே வந்தபிறகு நான் சில மாத காலமாக அவர்களோடு பழகி அவர்களுடைய அந்தரங்கமான விஷயங்களை எல்லாம் அறிந்துகெண்ட பிறகு நான் என்னுடைய பழைய அபிப்பிராயத்தை எல்லாம் அறவே மாற்றிக் கொண்டேன்.

3. தங்களுடைய மாமனார் மகா கொடுமையான நோயில் பட்டு, படுத்தபடுக்கையாக இருக்கும் இந்தத் தருணத்தில் அவர் விஷயத்தில் இரக்கமும் அனுதாபமும் காட்டி அவர் பிழைப்பதற்கு வேண்டிய சிகிச்சைகளையும் உபசரணை களையும் மற்ற எல்லோரும் செய்து இரவு பகல் பாராமல் அரும்பாடு பட்டிருக்க, நோயாளியின் ஏகபுத்திரியான லலித

குமாரி தேவியார் மாத்திரம் அவரைக் கண்ணாலும் பாராமல் தமது ஏகாந்த ரதிகேளிவிலாசத்திலிருந்து இரவு பகல் தனது ஆசை நாயகரோடு ஸரஸ ஸல்லாபம் செய்து குதூகலமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆசை நாயகர் இன்னார் என்பதை ஒருவேளை இதற்கு முன்னாகவே தாங்கள் அவ்விடத்திலேயே தெரிந்து கொண்டிருக்கலாம்; அல்லது தெரிந்து கொள்ளாமலே இருக்கலாம். தங்கள் பட்டமகிஷியின் அந்தப்புரத்துக் காரியங்களை நடத்தி வரவு செலவுக் கணக்குகள் வைக்கும் மணியக்கார உத்தியோகத்தை வகித்திருப்பவரான மோகனராவ் என்பவரைத் தாங்கள் இதற்குமுன் பார்த்திருப்பீர்களோ என்னவோ தெரியவில்லை. அவருக்குச் சுமார் முப்பது வயதிருக்கலாம். பார்வைக்கு அவர் நல்ல அழகும் வசீகரமான முகத்தோற்றமும் உடையவராக இருக்கிறார். தாங்கள் அப்பேர்ப்பட்ட யௌவனப் பருவப் புருஷரை அந்த உத்தியோகத்தில் வைத்ததே அடிப்படையான தவறு என்று நினைக்கிறேன். அங்கே இருக்கும்போது அவர்கள் இருவருக்கும் கள்ள நட்பு ஏற்பட்டுப் போயிருக்க வேண்டு மென்பது சந்தேகமறத் தெரிகிறது. லலிதகுமாரிதேவி இப்போது ஒன்பது மாதக் கர்ப்பிணியாக இருக்கிறாள். பிரசவம் இன்றைக்கோ நாளைக்கோ என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் கர்ப்பிணி யாக இருப்பதை இந்த ஊரிலுள்ள தாதிகள் அறிந்து கொள்ளக் கூடாதென்று யோசனைசெய்து, தஞ்சைக்கு எழுதி நான்கு புதிய தாதிகளை வரவழைத்துத் தங்கள் பட்டமகிஷி தமக்கருகிலேயே வைத்துக்கொண்டு மற்றவர்களை அருகில் நெருங்க விடாமல் தூரத்திலேயே வைத்திருப்பதாகவும் தெரிகிறது. தஞ்சையிலிருந்து வந்துள்ள தாதிப் பெண்களுக்கு லலிதகுமாரி தேவியின் ரகசியங்களெல்லாம் நன்றாகத் தெரியும். மற்றபடி எங்கள் மகாராஜா முதற்கொண்டு வேறு யாருக்கும் இந்த மர்மம் எதுவுமே தெரியாது. எந்தச் சமயத்தில் பிரசவம் நேருமோவென்று நினைத்து இவர்கள் பலவகையான

தந்திரங்கள் செய்ய உத்தேசித் திருப்பதோடு அதற்கு அனுசரணையாக இந்த ஊர் அரண்மனை வைத்தியரான மன்னாஜிராவ் என்பவரையும், மருத்துவச்சி யான ஸோனம்மாபாயி என்பவளையும் வசப்படுத்தித் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். லலிதகுமாரிதேவி இரண்டு வருஷகாலமாகத் தங்களுடைய முகத்தையே பார்க்காதிருந்தாள் என்பது உண்மையாக இருக்குமானால், இப்போது அவர்களுடைய கர்ப்பத்திலிருப்பது அன்னிய புருஷ சம்பந்தத்தினால் ஏற்பட்ட குழந்தை என்பது எல்லோருக்கும் எளிதில் தெரியக் கூடிய விஷயம். இந்த மர்மத்தின் உண்மை இன்னதென்பது எங்களைக் காட்டிலும் தங்களுக்கே சந்தேகமறத் தெரியும். ஆதலால், இதைக் கொண்டு தங்கள் பட்டமகிஷியின் தேக பரிசுத்தம் எவ்வளவு என்பதைத் தாங்களே கண்டு கொள்ளலாம்.

4. அவர்கள் கர்ப்பமாக இருக்கும் விஷயம் ஒருபுறமிருக்க, அவர்கள் தஞ்சையை விட்டு இந்த ஊருக்கு வந்த பிறகு எப்போதும் அந்தப் புருஷரோடு கூடவே சுயேச்சையாகவும் குதூகலமாகவும் இருந்து பிறருக்கு அஞ்சாமல் வெட்கத்தை விட்டு நடந்து வருகிறது பட்டப்பகல் போல எல்லோருக்கும் தெரிந்துபோய் விட்டது. அவர்கள் நோய் கொண்டிருக்கும் தமது தகப்பனாரைப் பார்த்து அவர்க்குரிய காரியங்களைச் செய்ய வந்தவராகவே தோன்றவில்லை. தாமும் தமது ஆசை நாயகரும் எவ்வித ஆதங்கமும் இன்றி சுயேச்சையாக இருப்பதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று நினைத்து அந்தக் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளவே இந்த ஊருக்கு வந்தார்கள் என்றே எண்ணவேண்டி இருக்கிறது. அதோடு தஞ்சையிலிருந்தால் தாம் கர்ப்பிணியாக இருப்பது தங்களுக்கும் மற்றவருக்கும் வெளியாகி விடுமென்ற பயத்தினால், ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு இங்கே ஓடிவந்து விட்டார்கள் என்றும் நாம் யூகித்துக் கொள்ள வேண்டியி

ருக்கிறது. இவ்வளவு விரிவாக நான் சொல்வதிலிருந்து, எல்லாம் உண்மையான சங்கதியென்று தங்கள் மனசில் பட்டிருக்கும். ஆனால், இந்தக் கடிதத்தையே நம்பித் தாங்கள் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தக் கடிதம் கண்ட தக்ஷணமே தாங்கள் புறப்பட்டு இந்த ஊருக்கு வரவேண்டும்; வந்து மறைவாக இருந்துகொண்டு பட்டமகிஷி யின் நடவடிக்கைகளையும், அவர்களோடு இருக்கும் புதிய தாதிகளின் நடவடிக்கைகளையும், அரண்மனை வைத்தியர் மருத்துவச்சி முதலியோரின் நடவடிக்கைகளையும் ரகசியத்தில் கவனித்துக் கொண்டிருந்தால், உண்மையெல்லாம் தானாகவே விளங்கிப் போம். ஆனால், தாங்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறீர்கள் என்பது இங்குள்ள எவருக்கும் தெரியவே கூடாது. தஞ்சையிலிருந்து வந்துள்ள புதிய தாதிகளும், இந்த ஊர் அரண்மனை வைத்தியர், மருத்துவச்சி முதலிய எல்லோரும் லலிதகுமாரி தேவியிடமிருந்து ஏராளமாக லஞ்சம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்களிடம் தாங்கள் விசாரித்து உண்மையை அறிவது அரிதினும் அரிது. ஆனால்,தாங்கள் அவர்களிடம் நயமாகவும் தந்திரமாகவும் நடந்து பெரும் பொருள் கொடுத்து முயற்சித்தால் உண்மையை ஒருவாறு கிரகிக்கலாம். ஆகையால், தாங்கள் நிரம்பவும் அவசரமாகப் புறப்பட்டு இங்கே வந்து எச்சரிப்பாகவும் தந்திரமாகவும் நடந்து கொள்ளுங்கள்.

5. நான் க்ஷத்திரிய குலத்தில் உதித்தவன்; பிராணனை விட மானமே பெரிதாக மதிக்கிறவன். மனிதர் செய்யும் மற்ற எந்தக் குற்றத்தைக் கண்டும் என் மனம் கொஞ்சம் பொறுத்தாலும் பொறுக்கும். ஆனால், ஸ்திரீகள் தங்களுடைய சொந்தப் புருஷரை வஞ்சித்து அன்னிய புருஷரை அணையும் குற்றத்தைக் கண்டு நான் பொறுப்பது அசாத்தியமான விஷயம். இந்த லலிதகுமாரிதேவி செய்வதுபோல,என்னுடைய சொந்த மனைவி செய்திருப்பாளானால், நான் இந்நேரம் அவளுடைய

உடம்பை அணுவணுவாக வெட்டிக் காக்கைக்கும் கழுவுக்கும் விருந்து நடத்தியிருப்பேன். இந்த லலிதகுமாரிதேவி செய்யும் அக்கிரமங்களைக் காணும்போதெல்லாம் என்னுடைய இரத்தம் கொதிக்கிறது. மனம் பதறுகிறது. உடம்பு ஆவேசம் கொண்டு துடிக்கிறது. என்ன செய்கிறது? நான் அவர்களுடைய அந்தப் புரத்திற்குள் நுழையக் கூடாமலிருப்பதால், நான் என்னை அடக்கிக் கொள்ள நேருகிறது. ஆகையால், இந்த லலிதகுமாரி தேவி செய்யும் அட்டூழியத்துக்குத் தக்கபடி தண்டிக்க உரிமை உள்ளவர்களான தங்களுக்கு நான் இந்தக் கடிதத்தின் மூலமாக எல்லா விஷயங்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். எது தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறதோ அதைச் செய்யவும்.

இங்ஙனம், மகாராஜாவிடம் பணிவுள்ள,

**ஓர் ஆண் மகன்**

என்று எழுதப்பட்டிருந்த விரிவான கடிதத்தை வாய்விட்டுப் படித்த பூர்ணசந்திரோதயம் திடீரென்று ஒரு பெரிய இடி காலடியில் வீழ்ந்ததைக் கண்டு பிரமித்து ஸ்தம்பித்து திகிலே வடிவாக அசைவற்று ஒய்ந்து நிற்பதுபோல, அப்படியே சித்திரப் பாவைபோல மாறிப் போனாள். அவளது வசீகரமான முகம் அளப்பரிய வியப்பை அடைந்து மருண்டு தோன்றியது. அவ்வாறு அவள் மறுமொழி எதுவும் சொல்லமாட்டாதவள் போலக் கால்நாழிகை நேரம் மௌனமாகவே இருந்து தத்தளிக்க, அதைக் கண்ட இளவரசர் ஒருவிதக் கிலேசத்தோடு பேசத் தொடங்கி, "என்ன பூர்ணசந்திரோதயம்! கடிதத்தைப் படித்தாயல்லவா? வேடிக்கை எப்படி இருக்கிறது பார்த்தாயா? என்னுடைய பட்டமகிஷியான அந்த லலிதகுமாரிதேவி இந்த அரண்மனை சரஸ்வதி மகாலிலுள்ள புஸ்தகங்களுள் படிக்காத புஸ்தகம் ஒன்றுகூட மிச்சமில்லை. கருடபுராணம் முதலிய சகலமான புராணங்களையும் அவள் நன்றாகப் படித்திருக்கிறாள். அவள் எம தண்டனைக்கு எவ்வளவு தூரம்

பயப்படுகிறாள் என்பது இந்தக் கடிதத்திலிருந்து நமக்கு நன்றாகத் தெரிகிறதல்லவா? அவளைப்போல சமயோசிதமாக நடந்து கொள்ளுகிறவர்களே காரியவாதிகளன்றி என்னைப் போல இருப்பவர்க ளெல்லாம் எதற்கு உபயோகம்? நீ இந்தக் கருடபுராணம் ஒன்றை மாத்திரந்தான் படித்துப் பார்த்தாய் போலிருக்கிறது. இன்னும் முக்கியமான சில புராணங்கள் இருக்கின்றன. அவைகளை நீ படித்திருந்தால், இந்தக் கருட புராணத்தை அவ்வளவாக பொருட்படுத்த மாட்டாய். அந்த லலிதகுமாரி தேவி எல்லாப் புராணங்களையும் படித்திருந் தாலும், முக்கியமாக அவளுடைய மனதிற்குப் பிடித்த புராணம் கொக்கோகப் புராணம் ஒன்றே. ஆகையினாலே தான் அவள் தன்னுடைய தகப்பனார் இறக்கும் சமயத்தில் இருக்கிறார் என்பதையும் இலட்சியம் செய்யாமல் அந்தப் புண்ணிய புராணத்தின் கொள்கைகளைக் கை நழுவவிடாமல் கடைபிடித்துக் கொண்டிருக்கிறாள். மற்ற எந்தப் புராணத்தை மறந்தாலும் அந்தப் புராணத்தை மாத்திரம் மறப்பதும் அசட்டை செய்வதும் பதிவிரதா தர்மமாகாது அல்லவா! அதனாலேதான், அவள் புருஷனை விட்டுப் போன இடத்திலும் பதிவிரதா தர்மத்துக்குப் பழுது ஏற்படாமல் நடந்து கொள்ளுகிறாள். நீயும் பதிவிரதையாக இருக்க நிரம்பவும் ஆசைப்படுகிறாயே. அவள் படித்துள்ள அந்த முக்கியமான புராணத்தை நீயும் படிக்க வேண்டாமா?'' என்று புரளியாகவும் குறும்பாகவும் கூறினார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் எதையும் பேச அறியாத பேதைபோல நடித்து, ''ஆகா! என்ன ஆச்சரியம் இது! மகா ராஜாவின் மனம் பெண்பாலரிடத்தில் கொஞ்சமும் இரங்காத ஈவிரக்கமற்ற கல் என்பது நன்றாகத் தெரிகிறது. இந்தக் கடிதத்தைப் படித்தபிறகு என் மனம் புண்பட்டு நொந்து தவிக்கிறது. இந்த நிலைமையில் தாங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியைப் புண்ணில் சொருகுவதுபோல இருக்கிறதேயன்றி வேறல்ல. இப்படிப்பட்ட அவதூறு அந்த

உத்தமியைக் குறித்துச் சொல்லப்பட்டால் என்ன? என்னைக் குறித்துச் சொல்லப்பட்டால் என்ன? இரண்டும் ஒன்றுதான். இந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயம் பொய்யாக இருக்க வேண்டுமே அன்றி ஒருநாளும் நிஜமாக இராது. நான் துணிந்து உறுதியாகச் சொல்லுவேன். இது முதலில் பூனாவிலிருந்து வந்ததா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. தங்களுக்கும் தங்களுடைய பட்ட மகிஷிக்கும் ஏதோ அற்பமான மனஸ்தாபமிருந்து வருவதாக நான் கேள்வி யுற்றிருக்கிறேன். ஆகையால், அந்த வர்மத்தைப் பாராட்டி தாங்கள் இதுதான் சமயமென்று அந்த மகாராணியை விலக்கி விட்டு என்னை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு இப்படிச் செய்கிறீர்களென்றே நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. எனக்குக் காட்டி, என் மனசை மாற்றுவதற்காகவே தாங்கள் இந்தக் கடிதத்தைத் தயாரித்திருப்பீர்கள் என்ற எண்ணமே என் மனசில் உதிக்கிற தன்றி தங்கள் பட்டமகிஷி தவறாக நடந்திருப்பார்கள் என்ற எண்ணத்தையே என் மனம் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்கிறது. மகா உத்தமியான தங்கள் பட்டமகிஷியின்பேரில் இப்போது எப்படி அவதூறு ஏற்படுகிறதோ அதுபோல நாளைக்கு என்மேலும் ஏதாவது அபாண்டமான அவதூறு ஏற்படுமோ என்ற திகில் இப்போதே என் மனசில் எழுகிறது. இப்படி என் மனம் பரிதவிக்கிற சமயத்தில் நாங்கள் கொக்கோகம் முதலிய புராணங்களைக் குறித்துப் பேசிப் பரிகசிப்பது புண்ணில் கோலிடுவதுபோலிருக்கிறதே அன்றி வேறல்ல. அப்படித்தான் கொக்கோக சாஸ்திரத்தைப் பதிவிரதா ஸ்திரீகள் படிக்கக்கூடாதா? படித்தால் அவர்கள் கெட்டுப்போய் விடுவார்கள் என்பது கட்டாயமா? அவர்கள் அதிலுள்ள முறைகளைக் கையாடித் தமது புருஷர்களுக்கு முன்னிலும் பன்மடங்கு அதிகமான சுகமும் சந்தோஷமும் பிறப்பிப்பார்கள் என்று நினைப்பதே ஒழுங்கன்றி அவர்கள் நெறிதவறி நடப்பார்கள் என்று நினைப்பது சரியல்ல'' என்றாள்.

அதைக்கேட்ட இளவரசர், "நீ பேசுவது நிரம்பவும் வேடிக்கையாக இருக்கிறது. நானே வேண்டுமென்று இந்தக் கடிதத்தை அபாண்டமாக சிருஷ்டித்துக் கொண்டு வந்திருப்பேன் என்று நீ சந்தேகப்படுவது மிகமிக விநோதமாக இருக்கிறது. நீ இன்றையதினம் கட்டாயம் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் கடிதம் எழுதியிருக்கிறாய். அதுபோலவே நீ நடப்பாய் என்று நான் இதுவரையில் முழுதும் நம்பி இருந்து அந்தக் காலம் தவறாமல் இப்போது இங்கே வந்திருக்கிறேன். அப்படியிருக்க, நீ என்னுடைய பிரியப்படி நடக்க மாட்டாய் என்று நான் சந்தேகப்படவே காரணமில்லையே. நீ கருடபுராணம் வாசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியுமா? அதனால் உன்னுடைய தீர்மானம் மாறப்போகிறது என்பது எனக்கு எப்படித் தெரியும்? நீ இப்படி மாறுபட்டிருப்பாயென்று நான் இதுவரையில் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. அப்படியிருக்க, நான் இந்தக்கடிதம் நிர்மாணம் செய்யவேண்டிய அவசியமே இல்லை. அதுவுமன்றி, இந்தக் கடிதத்தில் பூனா நகரம் என்ற பெயரும் தேதியும் உள்ள தபால் முத்திரை குத்தப்பட்டிருப்பதை நீ கவனித்துப் பார்த்தால், இது உண்மையிலேயே அவ்விடத்திலிருந்து வந்தது என்பது தெளிவாக விளங்கும். நான் அபாண்டமாக இப்படிப்பட்ட அவதூறைச் சொல்லக்கூடியவன் என்றாவது, கல்மனம் உடையவன் என்றாவது, உன் விஷயத்திலும் நான் இப்படி நடந்து கொள்வேன் என்றாவது நீ நினைப்பது சரியல்ல. காலக்கிரமத்தில் நீ என்னோடு பழகப்பழக என்னுடைய உண்மையான குணம் எப்படிப் பட்டது என்பது உனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்துபோகும். என்னுடைய மனப்போக்கும் அவளுடைய மனப்போக்கும் ஒத்துவராமல் இருந்த காரணத்தினால், நான் இந்த இரண்டு வருஷ காலமாக அவளுடைய அந்தப்புரத்துக்குப் போவதையும் அவளோடு பேசுவதையும் விட்டுவிட்டேன். அதனால், மற்றபடி அவளுடைய மதிப்புக்காவது மேம்பாட்டுக்காவது

அவளுக்குரிய சுக செளக்கியங்களுக்காவது ஒரு குறைவும் நான் வைக்கவே இல்லை. சிற்சில சமயங்களில் தன்னுடைய அந்தப்புரத்துக்கு வரும்படி அவள் எனக்குச் செய்தி சொல்லி அனுப்பியதுண்டு; என்னோடு பேசி, என் மனஸ்தாபத்தைத் தீர்க்க முயற்சித்ததும் உண்டு. நான் கொஞ்சமும் இடம் கொடாமல் பிடிவாதமாக இருந்துவிட்டேன். அவ்வளவுதான் எங்களுக்குள் நடந்த சச்சரவு. இதையே ஒரு முகாந்திரமாகக் கொண்டு அவள் எப்படிப்பட்ட விபரீதமான காரியம் செய்து விட்டாள் பார்த்தாயா? நான் அவள் விஷயத்தில் தப்பாக நடந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும், அவள் இப்படிப்பட்ட இழிவான காரியம் செய்து விட்டாளே. அவளை இனி நான் என் பட்டமகிஷி என்றாவது, சம்சாரம் என்றாவது சொல்லிக் கொள்ள என் மனம் இடங்கொடுக்குமா? இனி அவளோடு நான் சம்சர்க்கம் வைத்துக் கொண்டால், என்னைவிட இழிவான மனிதப் பதர் வேறே யாராவது இருப்பானா? ஆகையால், எனக்கும் அவளுக்கும் உள்ள உறவு இதோடு ஒழிந்து போய் விட்டது என்றே கருதவேண்டும். அவளை இனி நான் என் ஆயுசுகால பரியந்தம் கண்ணால் பார்க்கப் போகிறதுமில்லை. அவள் என் சம்சாரமாக இருந்தவள் என்பதை நான் மனசால் நினைக்கக் கூடப் போகிறதில்லை. இனி அவள் இந்த ஊருக்குத் திரும்பி வரக் கூடாதென்று நான் அவளுடைய தாய் தகப்பன் மாருக்குக் கடிதம் எழுதி அனுப்பத் தீர்மானித்து விட்டேன். இந்தக் கடிதத்தை நான் இன்னம் வேறே யாருக்கும் காட்டவே இல்லை. முதன்முதலாக உனக்குத்தான் காட்டினேன்; நாளைய தினம் காலையில் நான் இதை என் தாயாருக்குக் காட்டி அவர்களுடைய சம்மதியைப் பெற்று நான் முன்னே சொன்னபடி பூனாவுக்குக் கடிதம் எழுதி அனுப்பிவிடப் போகிறேன்'' என்றார். அதைக்கேட்ட பூர்ணசந்திரோதயம் நிரம்பவும் இனிமையாகவும் நயமாகவும் பணிவாகவும் அந்த விஷயத்தில் பெரிதும் கவலை கொண்டு மனப்பூர்வமாகவும் பேசுகிறவள் போலக் காணப்பட்டு, ''நான் கொஞ்சம் அவசரமாகப்

பேசிவிட்டதைப் பற்றி மகாராஜா என் மேல் கோபித்துக் கொள்ளக்கூடாது. தங்களுடைய பட்டமகிஷியார் கொஞ்சமும் மாசுமறுவற்ற பரிசுத்தமான நடத்தையுள்ள பதிவிரத சிரோன்மணியென்று சிலர் சொல்லக் கேட்டு, அதை உண்மையென்று நம்பியே நான் இந்தக்கடிதம் அபாண்டமாக சிருஷ்டிக்கப்பட்ட பொய்க் கடிதம் என்றும் வேறு விதமாகவும் மகாராஜாவின் மனம் வருந்தும் படியான வார்த்தைகளைச் சொல்லி விட்டேன். இந்தக் கடிதத்திலுள்ள தபால் முத்திரையைக் கொண்டும், இன்னும் மகாராஜா எடுத்துக் காட்டிய மற்றொரு காரணத்தைக் கொண்டும், இந்தக்கடிதம் பூனாவிலுள்ள யாரோ ஒருவரால் எழுதி அனுப்பப்பட்டுள்ள கடிதம் என்றே நினைக்கிறேன். ஆனால், இன்னொரு முக்கியமான விஷயத்தையும் மகாராஜா கவனிக்க வேண்டும். மனிதர் எந்தக் குற்றம் செய்தாலும் இரு திறத்தாருடைய வாக்குமூலங்களையும் அவர்களுடைய சாட்சிகளின் வாக்கு மூலங்களையும் கேட்டே நியாயாதிபதிகள் அவருக்குத் தண்டனை கொடுக்கிறார்கள். கண்ணுக்கெதிரில் கொலை செய்கிறவர்கள் கூட விசாரணை யில்லாமல் தண்டிக்கப்படு வதில்லை. அப்போது தான், குற்றம்செய்யாத நிரபராதிகள் அநியாயமாகத் தண்டிக்கப்படுதலான நீதித் தவறு ஏற்படாது. ஆனால், இந்த விஷயத்தில் தாங்களும் தங்களுடைய பட்டமகிஷியாரும் வாதிப் பிரதிவாதியாக நியாய ஸ்தலத்தில் போய் நிற்பது நிரம்பவும் விகாரமான விஷயம். ஆதலால், அப்படிச் செய்யாமல், தாங்களே சரியானபடி ஒருவித முடிவுக்கு வரவேண்டியது நியாயமான காரியந்தான். ஆனாலும், தாங்கள் இந்தக் கடிதத்தையே வேதவாக்கியமாக எடுத்துக் கொண்டு உண்மையென்று நம்பி உடனே அவர்களைத் தண்டிப்பது நியாயமாகாது. இந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் உண்மைதானா என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டு அதன்பிறகே எந்தத் தீர்மானத்தையும் செய்வது தருமத்துக் கடுத்ததாக இருக்கும். ஒருவேளை இந்தக் கடிதத்தை

எழுதிய மனிதனுக்கும் தங்கள் பட்டமகிஷிக்கும் ஏதேனும் காரணத்தினால் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் கர்ப்பிணியாக இருக்கிறார்கள் என்று நம்பத்தகுந்த பெரிய சங்கதியாக எழுதிஅனுப்பிவிட்டால், எவ்வித சந்தேகமும் கொள்ளாமல் உடனே நம்பி விடுவார்களென்று நினைத்து அந்த மனிதன் இப்படிப்பட்ட தந்திரம் செய்திருக்கலாம். அவன் எதிர்பார்த்தது போலவே தாங்கள் செய்துவிடக்கூடாது. தாங்கள் உடனே புறப்பட்டு அந்த ஊருக்குப் போய் நேராகத் தங்களுடைய சம்சாரத்தினிடம் போய், அவர்கள் சந்தேகப்படாத படி கவனித்துப் பார்த்தால் உண்மை எப்படியும் விளங்கிப் போகும். அவர்கள் கர்ப்பிணியாக இருந்தாலும், அல்லது, சமீபகாலத்தில் பிரசவித்திருந்தாலும், அவர்களுடைய தேக மெலிவிலிருந்தும், முக வெளிறிலிருந்தும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். பிறகு வேறு சாட்சியே தேவையில்லை. தங்களுடைய பிரியப்படியே நடந்து கொள்ளலாம். அதுவு மன்றி, இந்த ஊரிலிருந்து யாரோ சில தாதிகள் அனுப்பப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அவர்கள் தங்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்களாக இருக்கலாம். அவர்களைக் கண்டு தந்திரமாக விசாரித்தும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்'' என்றாள்.

உடனே இளவரசர், ''அப்படியானால் இவ்விடத்திலுள்ள முக்கியமான ராஜாங்க விஷயங்களையெல்லாம் இப்படியே நிறுத்திவிட்டு இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப் பூனா தேசத்துக்கு நான் போய் வேஷம் போட்டுக்கொண்டி ருந்து அவளுடைய நடவடிக்கைகளை எல்லாம் கண்ணால் பார்க்க வேண்டுமென்று நீ சொல்லுகிறாயா? இந்த வெட்கக்கேடான விஷயத்தை நான் இந்தக் கடிதத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ளும் இழிவும் அவமானமும் போதா வென்று நினைக்கிறாயா?'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் நிரம்பவும் பயபக்தி விநயத்தோடு பேசத்தொடங்கி, ''இந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது

உண்மையில் நடந்த விஷயம் என்பது நமக்கு நிச்சயப்படுகிற வரையில், இதை நாம் இழிவாகவும் அவமானமாகவும் கருதலாமா? மகோன்னத பதவியிலுள்ள ஒருவருடைய கண்ணியத்துக்கும் வாழ்நாள் முடிய அனுபவிக்கும் குடும்ப சுகங்களுக்கும் அபாயம் நேரக்கூடிய மகா பெரிய விஷயம். ஆகையால், இதையும் மகாராஜா முக்கியமான ராஜாங்க விஷயங்களுள் ஒன்றாகவே பாவித்து எப்படியாவது பிரயத்தனப்பட்டு இதன் உண்மையைக் கண்டுபிடிப்பது அத்தியாவசியமான காரியம். இந்தப் பிரயாசை மகாராஜாவுக்கு ஒரு பொருட்டல்ல. ஒருவார காலத்துக்குள் பூனாவுக்குப் போய் உண்மையைத் தெரிந்துகொண்டு திரும்பி வந்துவிடலாம். இந்த எட்டு தினங்கள் வரையில் இவ்விடத்துக் காரியங்களைத் தங்களுடைய மந்திரிமார்கள் பார்த்துக் கொள்ளமாட்டார்களா? அப்படித் தாங்களே கட்டளை பிறப்பிக்க வேண்டிய பெரிய விஷயம் ஏதாவது இருந்தால் இங்குள்ளவர்கள் அஞ்சல் தபால் மூலமாகப் பூனாவுக்கு அனுப்பி தங்கள் உத்தரவைப் பெற முடியாதா? தாங்கள் மனசு வைத்தால், இதை எப்படியாவது நிறைவேற்றலாம். இந்தக் கடிதத்திலுள்ள விஷயம் அற்ப சொற்பமான சாதாரண விஷயமல்ல. இதன் பொருட்டு வேறே மனிதரை அனுப்புவதும் தகுதியானதல்ல. ஆகையால், மகாராஜாவே எப்படியாவது பிரயாசைப்பட்டு நேரில் பூனாவுக்குப் போய் விஷயங்களை நிச்சயித்துக் கொண்டு வருவதே சர்வ சிலாக்கியமானது. மகாராஜாவுக்குத் தெரியாததற்கு நான் அதிகமாக என்ன சொல்லப் போகிறேன்'' என்று நிரம்பவும் மாதுரியமாகவும் இளவரசர் ஆயாசமடையாத படியும் கூறினாள்.

இளவரசர், ''இந்த விஷயத்தில் அவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டு பூனாவுக்குப் போகவும், அவ்விடத்தில் ஒளிந்து பிடிக்கும் கண்ணியக்குறைவும் இழிவுமான காரியத்தைச் செய்யவும் எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை. ஆனாலும் உன்பொருட்டு நான் அதைச் செய்ய ஒப்புக்

கொள்ளுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனையின்மேல் நான் அதைச் செய்யப் போகிறேன். நான் நாளைய தினமே புறப்பட்டுப் பூனாவுக்குப் போய் உண்மையைத் தெரிந்து கொண்டு ஒருவார காலத்தில் திரும்பி வந்துவிடுகிறேன். இந்தக் கடிதத்திலுள்ள சங்கதி உண்மையாக இருக்கும் பட்சத்தில், அதற்கு மேலும் நீ ஏதாவது ஆட்சேபணை சொல்லுவாயோ என்னவோ? ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு தூரம் வாததர்க்கம்செய்யும் நீ, நான் பொய்யாகச் சொல்லுகிறேனோ என்று எண்ணினாலும் எண்ணுவாய். ஆகையால், நீயும் என்னோடு கூடவே பூனா தேசத்துக்கு வருவதே நல்லது. அவ்விடத்தில் நாம் இருவரும் ரகசியமாக ஓரிடத்திலிருந்து உண்மையைத் தெரிந்துகொண்டு திரும்பி வந்துவிடுவோம். நேற்றைய தினம் இந்தக் கடிதம் என்னிடம் வந்த உடனே நான் சிலரைத் தருவித்து, பூனாவுக்கு நான்கு தாதிகள் அனுப்பப்பட்டதுண்டா என்றும், அவர்கள் யாரென்றும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். இந்த ஊருக்கு வடக்கில் அம்மன் பேட்டையென்று ஓர் ஊர் இருக்கிறது. அவ்விடத்தில் அன்னமென்று ஒரு கூத்தாடிச்சி இருக்கிறாள். அவள், பெரிய குடும்ப ஸ்திரீ; அந்த ஊருக்கே பிரபலமான பெரிய மனிஷி. அவள் எனக்கு நிரம்பவும் பழக்கம் உடையவள். அவளுக்கு நான்கு பெண்கள் இருந்தார்கள். அவர்கள்தான் பூனாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களாம். அந்தப் பெண்களும் என்னிடம் உண்மையான பயபக்தி விசுவாசம் உள்ளவர்கள். நான் பூனாவுக்குப் போய் அவர்களை அழைத்துத் தந்திரமாக விஷயங்களை விசாரித்தால் அவர்கள் எதையும் மறைக்காமல் உண்மையை எல்லாம் உள்ளபடி சொல்லிவிடுவார்கள். அவர்கள் சொல்வதொன்றே நமக்குப் போதுமான ருஜுவாக இருக்கும். அதற்குமேல் நாம் எந்தக் காரியத்திலும் இறங்காமல் உடனே புறப்பட்டு இங்கே வந்துவிடலாம். அவர்கள் என்னிடம் ஒருநாளும் பொய் சொல்லக் கூடியவர்களன்று. அவர்கள் நிரம்பவும்

யோக்கியமான பெண்கள்; என்னிடம் பொய்யையே பேச மாட்டார்கள். ஆகையால், அவர்கள் சொல்வதையே நாம் வேதவாக்கியமாக நம்பி அவ்வளவோடு திரும்பி வந்துவிடலாம்'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் மகிழ்ச்சியாகப் புன்னகை செய்தவளாய், ''சரி; அங்கிருந்து வந்தபிறகு நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?'' என்று வேடிக்கையாக வினவ, இளவரசரும் உடனே சந்தோஷ நகை நகைத்து, ''இங்கே வந்தவுடன் நீ செய்ய வேண்டியது ஒன்றுமே இல்ல. உடனே பட்டமகிஷியின் சிம்மாசனத்தில் நீ உட்கார வேண்டும். அதை நீ ஒரு பெரிய பிரயாசையாக நினைக்க மாட்டாய் என்று நம்புகிறேன்'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் மகிழ்ச்சியாக நகைத்து, ''நியாயமான வழியில் ஒரு பொருளைச் சம்பாதிப்பதற்கு மனிதர் எவ்வளவு பிரயாசை ஆனாலும் பின் வாங்காமல் ஏற்றுக்கொள்ளலாம். அநியாய வழியில் ஒரு வஸ்துவை அடைவதென்றால், அது எவ்விதப் பிரயாசையும் இன்றி எளிதில் கிடைப்பதாக இருந்தாலும் அதை நாம் பெறக்கூடாது. ஆகையால், இந்தக் கடிதத்திலுள்ள விஷயம் நிஜமென்று ருஜுவாகுமானால், அதன்பிறகு நான் உடனே தங்களுக்கு மனைவியாகத் தடையில்லை. மனைவியான பிறகு என்னைத் தாங்கள் பட்ட மகிஷி ஸ்தானத்தில் வைத்தாலும், அடிமை ஸ்தானத்தில் வைத்தாலும், பூஜிதையாக நடத்தினாலும், வேறு எவ்விதமாக நடத்தினாலும், அதை நான் சிரசாக வகித்துத் தங்கள் சித்தப்படி நடந்து கொள்வேன் என்பதைத் தாங்கள் நிச்சயமாக எண்ணிக் கொள்ளலாம். நான் இந்த வாக்குறுதியை மீறி நடக்கவே மாட்டேன். இதைத் தாங்கள் பிரமாணமாக மதிக்கலாம். ஆனால், நானும் தங்களோடு பூனாவுக்கு வருவது அவசியம் என்று நான் நினைக்கவில்லை. தாங்கள் நேரிலேயே அங்கே போய் அந்தத் தாதிப் பெண்களிடம் உண்மையைத் திருப்திகரமாகத்

தெரிந்துகொண்டு வந்துவிட்டால் அதுவே போதுமானது. இப்படிப்பட்ட பெரிய விஷயத்தில் தாங்கள் உண்மையை மறைத்து ஒருநாளும் பேசமாட்டீர்கள். ஆகையால், தாங்கள் மாத்திரம் போய்விட்டு வருவதே போதுமானது'' என்றாள்.

இளவரசர் வேடிக்கையாகப் பேசத்தொடங்கி, ''சரி! நீ அவ்வளவு தூரமாவது என் வார்த்தையில் நம்பிக்கை வைப்பதாக ஒப்புக் கொண்டாயே. இனிமேல் எனக்கு நல்ல காலந்தான், தூரதேசமாகிய பூனாவுக்குப் போவதும் வருவதும் அதிகப் பிரயாசையான காரியம். ஆகையால், அப்படிப்பட்ட துன்பத்தை உனக்குக் கொடுக்க எனக்கும் இஷ்டமில்லை. ஆகையால், நீ இவ்விடத்திலேயே வழக்கம்போல இருந்து கொண்டிரு! இங்குள்ளவர்கள் உனக்கு எள்ளளவும் குறை வில்லாமல் பார்த்துக் கொள்ளச் செய்துவிட்டுப் போகிறேன். நான் மாத்திரம் போவது போதாது. என்னுடைய அந்தரங்க நண்பனும், உன்னுடைய காரியதரிசியுமான சாமளராவையும் நான் என்னோடுகூட அழைத்துக்கொண்டு போக உத்தேசிக்கி றேன். அதைப்பற்றி உனக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் ''மகாப்பிரபுவாகிய தாங்கள் தனிமையில் போகவேண்டும் என்று யாராவது சொல்லுவார் களா? அந்தரங்கமான ஒரு மனிதர் கூடவே வருவது அத்யா வசியமான காரியமாயிற்றே. அதற்கு யாராவது ஆட்சேபணை சொல்ல முடியுமா? மகாராஜாவின் சித்தம் எப்படியோ அப்படியே எதையும் செய்யத் தடையென்ன?'' என்று நிரம்ப வும் பணிவாகவும் இனிமையாகவும் மறுமொழி கூறினாள்.

அதன்பிறகு இளவரசர் மேலும் அரை நாழிகை நேரம் அவ்விடத்திலிருந்து பூர்ணசந்திரோதயத்தோட சந்தோஷமாக சம்பாஷித்திருந்து பனாரீஸ் அங்கியால் தம்மை மறைத்துக் கொண்டு சந்தடி செய்யாமல் அவ்விடத்தை விட்டு வெளியில் போய்விட்டார்.

## 36 - வது அதிகாரம்

## எதிர்பாராச் சிக்கல்

இதற்குமுன் 32-வது அதிகாரத்தில் கட்டாரித் தேவன் மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்கு வந்து லீலாவதியோடு பேசிக்கொண்டிருந்ததும், அப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கே வந்து அவளோடு பேச விரும்புவதாகச் செய்தி சொல்லி அனுப்பியதும், லீலாவதி கட்டாரித்தேவனை அனுப்பிவிட்டுக் கூடத்துக்கு வந்து இன்ஸ்பெக்டரைக் கண்டு பேசியதும், இன்ஸ்பெக்டர் போனபிறகு அவள் நிரம்பவும் கலக்கம் அடைந்து பின்புறத் தோட்டம் வரையில் போய்க் கட்டாரித்தேவனைத் தேடிக்காணாமல் திரும்பி வந்ததும் விரிவாகக் கூறப்பட்டன அல்லவா. அப்போது கட்டாரித் தேவன் என்ன செய்தான் என்பதையும் கவனிப்போம்.

லீலாவதி இன்ஸ்பெக்டரைப் பார்க்கப் போனபிறகு, தனியாக விடப்பட்ட கட்டாரித்தேவன், தான் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி உடனே சிந்தனை செய்யத் தொடங்கினான். இன்ஸ்பெக்டர் தன்னைப் பிடிப்பதற்காக அங்கே வந்திருப்பாரா, அல்லது, வேறே அலுவலாக வந்திருப்பாரா என்ற சந்தேகமே பெரிதாக எழுந்து அவனை வருத்த ஆரம்பித்தது. தான் அந்த மாளிகைக்குள் வந்ததைக் கண்டு, தனது அடையாளத்தை அறிந்த மனிதர் யாராகிலும் உடனே போய் இன்ஸ்பெக்டரிடம் சொல்ல, அவர் தன்னைப் பிடிப்பதற்காக உடனே புறப்பட்டு வந்திருப்பாரோ என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும், அவ்வாறு வந்த இன்ஸ்பெக்டர் ஜெமீந்தாரைக் கண்டு விஷயத்தைச் சொல்லியோ, அல்லது அவர் இல்லாவிடில் மற்ற வேலைக்காரர் களிடம் சொல்லியோ, அனுமதி பெற்று அதன்பிறகு அந்த மாளிகைக்குள் நுழைந்து தன்னைத் தேடிப் பார்ப்பதே சகஜமாக

நடக்கக்கூடிய காரியமன்றி, இளம்பிராயப் பெண்பிள்ளையான லீலாவதியோடு அவர் அது விஷயமாகப் பேசவேண்டிய பிரமேயமே இல்லையென்பதைக் கட்டாரித்தேவன் எளிதில் கண்டு கொண்டான். ஆகவே, அவர் லீலாவதியினிடத்திலே தான் ஏதோ அலுவலாக வந்திருக்கிறார் என்று அவன் ஒருவாறு நிச்சயப்படுத்திக் கொண்டதன்றி, தான் அவசரமாக வெளியில் போக வேண்டியதில்லை என்றும் முடிவு செய்து கொண்டான். இன்ஸ்பெக்டர் உண்மையில் தன்னைப் பிடிக்கவே அந்த மாளிகைக்கு வந்திருப்பாரானால், அவர் நிரம்பவும் முன்னெச்சரிக்கையுள்ள மனிதர் ஆகையால், அந்த மாளிகை யின் நாற்புறங்களிலும் ஜெவான்களைப் பந்தோபஸ்தாக முதலில் வைத்துவிட்டே பிறகு தன்னைப் பிடிக்க உள்ளே வந்திருப்பாரென்ற நினைவுண்டானது. ஆகையால், தான் அப்போது அந்த மாளிகையைவிட்டு வெளிப்பட்டுப் போக முயற்சிப்பதைவிட உட்புறத்தில் எங்கேயாவது மறைந்து கொண்டிருப்பதே உசிதமானதென்று கட்டாரித்தேவன் முடிவு செய்துகொண்டான். தான் அந்த மாளிகைக்குள் எங்கே போனாலும் அதனால் தனக்கு ஒருவிதத் தீங்கும் நேரிடாதென்று துணிவும் உண்டாயிற்று. வேலைக்காரர் யாராகிலும் தன்னைக் கண்டு பிடித்து ஜெமீந்தாரிடத்தில் கொண்டுபோய் விட்டால் தான் லீலாவதியினிடம் வந்ததாகச் சொன்னால், அவள் முற்றிலும் தனது வசத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதால், அவள் தன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்ற தைரியம் அவனது மனதில் திடமாக இருந்தது. அதுவுமன்றி, மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையில் குபேரசம்பத்துக்கு ஒப்பிடத்தக்க பெருந் திரவியம் இருப்பதாக அவன் பலதடவைகளில் கேள்வியுற்று, என்றைக்காகிலும் ஒரு நாள் சமயம் பார்த்துத் தான் அந்த மாளிகைக்குள் நுழைந்து சகலமான பொருள்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டால் அதன்பிறகு தனது தரித்திரமே ஒழிந்து போகும் என்றும் அதன்பிறகு தாங்கள் தங்களது பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் திருட்டுத்

தொழிலிலேயே இறங்க வேண்டாம் என்றும் நினைத்து அது விஷயத்தில் அளவற்ற ஆவல் கொண்டு துடித்திருந்தான். ஆதலால், அந்தச் சமயத்தை வீணாக்காது பயன்படுத்தித் தன்னால் இயன்ற அளவு திரவியங்களை அள்ளிக் கொண்டு போவதோடு, எந்தெந்த இடத்தில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்பதையும், மாளிகையின் உட்புற அமைப்பையும் பார்த்து அறிந்து கொண்டு போய் மறுபடி ஏராளமான தனது ஆள்களோடு வந்து அடியோடு துடைத்துக்கொண்டு போக வேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொண்டு சிறிதும் பயமின்றி அவ்விடத்தை விட்டுப் பக்கத்திலிருந்த ஒரு விடுதிக்குள் நுழைந்து அதற்கப்பால் ஒன்றன்பின் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்த அறைகளைக் கடந்துகொண்டு அப்பால் போனான். அவ்விடத்தில் ஒரு வேலைக்காரனாவது வேலைக்காரியாவது காணப்படாமையால் அவன் முன்னிலும் பன்மடங்கு துணிவடைந்து சுயேச்சையாக நடந்து ஒவ்வோர் அறையாக நுழைந்து ஆங்காங்கு நிரப்பப் பட்டிருந்த விலை மதிப்பற்ற பொருட்களைப் பார்த்துக் கொண்டே சென்றான். அவைகளைப் பார்க்கப் பார்க்க அவனது ஆவலும் வேட்கையும் அபாரமாகப் பெருகின. அந்த நிலைமையில் அவன் ஒரு ஜன்னலண்டை வர அதற்கப்பால் மனிதர் சம்பாஷித்த குரலோசை உண்டானது அவனது செவியில் வந்து தாக்கியது. அவன் உடனே திடுக்கிட்டு சடக்கென்று அவ்விடத்திலேயே நின்று யார் யார் பேசுகிறது என்பதையும், என்ன பேசப்படுகிறது என்பதையும் உற்றுக் கவனிக்கத் தொடங்கினான். முதலில் லீலாவதி பேசிய குரலோசையும் அதன்பிறகு இன்ஸ்பெக்டர் பேசியதும் தெரியவே, கட்டாரித்தேவன் தான் தற்செயலாக அந்த இடத்துக்கு வந்து சேர்ந்ததைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சியும், குதூகலமும் அடைந்து, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தான் அறிந்து கொள்வது தனக்கு உபயோகமாக இருக்குமென்று நினைத்து அவர்கள் ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக் கொண்டதை

நன்றாகக் கவனிக்கலானான். முதலில் லீலாவதி போலீசாரைப் பற்றி இழிவாகப் பேசியதையும், தனது புருஷன் ஏழு வருஷ தண்டனை அடைந்ததைக் குறித்து விசனகரமாகப் பேசினதையும், அதன்பிறகு இன்ஸ்பெக்டர் தாம் வந்த காரணத்தை விவரித்துச் சொன்னதையும் ஒரு சொல்விடாமல் கட்டாரித்தேவன் கேட்டுக் கொண்டே இருந்தான். இறந்துபோன பவானியம்பாள் புரம் ஜெமீந்தாரினது குமாரர் நீலமேகம் பிள்ளை ரகசியமாய் மறைந்து போன தமது தகப்பனாரைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதாகவும், அவர் தமது தகப்பனாரினது பெட்டியிலிருந்து காதற் கடிதங்கள் சிலவற்றைக் கண்டெடுத்த தாகவும், அவைகள் குடும்ப ஸ்திரீயான யாரோ ஒரு பெண்ணினால் திருட்டுத்தனமாக எழுதப்பட்டவை எனவும் இன்ஸ்பெக்டர் சொன்னதையும் கட்டாரித்தேவன் உணர்ந்து கொண்டான். அதுவரையில் அவன் கேட்ட விஷயங்க ளெல்லாம் அவனுக்குப் புதுமையாகவாவது ஆச்சரியமாக வாவது இருக்கவில்லை. ஆனால், அதன் பிறகு அவன் கேள்வியுற்ற விஷயம் அவனது மனதில் அளவற்ற வியப்பையும் பிரமிப்பையும் உண்டாக்கியது. மாசிலாமணிப் பிள்ளைக்கு விரோதமாக யாரோ ஒருபெண் நியாயாதிபதிக்கு அநாமதேயக் கடிதம் எழுதி அனுப்பினதாகவும், அதன்மேலே தான் அவர் கைதியாக்கப் பட்டார் எனவும், அந்தக் கடிதத்தின் எழுத்தும், பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரினது கைப்பெட்டியிலிருந்து அகப்பட்ட காதல் கடிதங்களின் எழுத்தும் ஒருத்தியின் கையெழுத்து போலவே இருப்பதாகவும் இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்ட கட்டாரித்தேவன் பெரிதும் ஆச்சரியம் அடைந்து அவற்றின் ரகசியங்களை உடனே யூகித்தறிந்து கொண்டான். பவானியம்பாள்புரம் ஜெமீந்தாருக்குக் காதல் கடிதங்கள் எழுதியவள் லீலாவதியாகத்தான் இருக்க வேண்டுமென்பது கட்டாரித்தேவனுக்குச் சந்தேகமறத் தெரிந்தது. ஆகையால், அதே கையெழுத்துள்ள அநாமதேயக் கடிதத்தை எழுதி நியாயாதிபதிக்கு அனுப்பி மாசிலாமணிப்

பிள்ளையைக் கைதியாக்கினவளும் லீலாவதியாகத்தான் இருக்க வேண்டுமென்று கட்டாரித்தேவன் நிச்சயமாக எண்ணிக் கொண்டான். அதுகாறும், அவன் லீலாவதி தனது கணவனிடத்தில் அத்யந்த அபிமானமும் பிரியமும் உடையவள் என்றும், அவள் கடைசிவரையில் உதவி செய்து, தனது கணவன் மரணதண்டனை அடையாமல் காப்பாற்றினாள் என்றும் நினைத்திருந்தான். அந்த விஷயத்தில் அநாமதேயக் கடிதம் ஒன்று எழுதப்பட்டதென்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. ஆகையால், அவன் அப்போது கேள்வியுற்ற விஷயங்கள் அவனுக்கு முற்றிலும் புதுமையாகவும் தான் எதிர்பார்க்காத தாகவும் இருந்தன. லீலாவதி வெளிப்பார்வைக்குத் தனது புருஷனிடம் வாஞ்சையும் பற்றும் உள்ளவள் போலக் கடைசி வரையில் நடித்தாளே அன்றி உண்மையில் அவள் அவரிடம் உள்ளூறப் பகைமை பாராட்டி, வேண்டுமென்றே அவரை அதிகாரிகளிடம் காட்டிக்கொடுத்து அவருக்குத் தண்டனை நடத்தி வைத்தாள் என்பது கட்டாரித்தேவனுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அதுவுமன்றி, அவ்வளவு தூரம் புலன் கண்டுபிடித்த இன்ஸ்பெக்டர் அவள்தான் அந்தக் கடிதங்களை எல்லாம் எழுதினவள் என்று சுலபமாகக் கண்டு கொள்ளாமல் அவ்வளவோடு அவளைவிட்டுப் போனதும் கட்டாரித் தேவனுக்கு அதிசயமாகத் தோன்றியது. லீலாவதியைப் பற்றிய அந்த முக்கியமான புதிய ரகசியம் தனக்குத் தெரிந்து போனதைப் பற்றி அவன் மிகுந்த திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்ததன்றி அதை வைத்துக்கொண்டு அவளை மறுபடியும் மிரட்டி இளவரசர் மூலமாயாவது ஜெமீந்தார் மூலமாயாவது தனது போலீஸ் உபத்திரவத்தை நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அவள் அதற்கு இணங்காவிட்டால் தான் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஓர் ஆளை அனுப்பி, அவர் தனக்கு மன்னிப்பு வாங்கிக் கொடுத்தால், தான் பவானியம்பாள்புரம் ஜெமீன்தார் காணாமல் போனதன் சம்பந்தமான ரகசியம் முழுதையும் வெளியிட்டு அவரைக் கொலை செய்த

மனிதரையும் காட்டிக் கொடுப்பதாகக் கூறச் செய்து, லீலாவதியைக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று கட்டாரித்தேவன் முடிவு செய்து கொண்டான். எல்லாவற்றிற்கும் தான் மறுபடியும் ஒருமுறை லீலாவதியைப் பார்த்துத் தந்திரமாகப் பேசி இன்ஸ்பெக்டர் வந்து சம்பாஷித்த விஷயத்தைப் பற்றி அவள் என்ன சொல்லுகிறாள் என்பதைத் தெரிந்துகொண்டு சமயோசிதமாக நடந்து அவளைப் பயமுறுத்தித் தனது வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும்படி வற்புறுத்த வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டான். ஆனால், தன்னை அவள் கண்டுகொள்ளாதபடி அன்றையதினம் முழுதும் அந்த மாளிகைக்குள் மறைந்திருந்து அவருடைய பொக்கிஷப் பெட்டி முதலியவை இருக்கும் இடங்களைத் தெரிந்துகொண்டு அன்றையதினம் இரவில் தனது கையில் அகப்படும் பொருள்களைச் சுருட்டிக்கொண்டு போய்விட்டு மறுநாள் காலையில் மறுபடியும் திரும்பிவந்து அவளைக் கண்டு பேசவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு அந்த மாளிகைக்குள் மேன்மேலும் நுழைந்து ஆராய்ச்சி செய்து கொண்டே போனான். யாராவது மனிதர் வந்த காலடி யோசையோ பேசிய குரலோசையோ கேட்டால், அவன் பக்கத்தி லுள்ள மறைவான இடங்களிலோ இருண்ட இடங்களிலோ மறைந்து கொண்டிருப்பான். அவர்கள் அப்பால் போனபிறகு அவன் தனது ஆராய்ச்சியில் புகுவான். அவ்வாறு அவன் அன்றையதினம் பகற்பொழுது முழுதையும் போக்கினான். இரவும் வந்தது. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டதானாலும் ஆங்காங்கு ஏராளமான தீபங்கள் பொருத்தப் பெற்றிருந்தன. ஆனால், பகற்பொழுதில் ஒளிந்து கொள்வதைவிட இரவில் ஒளிந்துகொள்வது சுலபமாதலால், அவன் முன்னிலும் அதிக சுயேச்சையோடு ஆராயத் தொடங்கினான்! பகற்பொழுதுக்குள் அவன் கீழ் அந்தஸ்திலுள்ள கட்டிடம் முழுதையும் ஆராய்ச்சி செய்து முடித்து விட்டான் . ஆதலால், இரவு வந்தபிறகு, மேன்மாடத்தில் ஏறி அது முழுதையும் ஆராய்ந்துவிட

வேண்டுமென்று முடிவுசெய்துகொண்டு மெதுவாக மேலே ஏறி வெல்வெட்டு மாடத்திற்குள் புகுந்து அங்கு ஏராளமாக நிறைந்திருந்த ஸோபாக்களினிடையிலும், பூத்தொட்டிகளின் மறைவுகளிலும் மறைந்திருந்தான். அவ்விடத்தில் எப்போதும் காணப்பட்ட ஷண்முகவடிவை உற்றுநோக்கி, அவள் ஒருகால் லீலாவதியின் தங்கையாக இருப்பாளோ, அல்லது ஜெமீந்தாருடைய நெருங்கிய உறவினளாக இருப்பாளோ என்று பலவாறு ஐயமுற்றவனாக இருந்தான். அதற்குமுன் அதுவரை யில் தான் எங்கும் பார்த்திராத மகா விநோதமான இடமாக இருந்ததைக் கண்டு அவன் கட்டிலடங்காத அபாரமான பிரமிப்பும் ஆச்சரியமும் அடைந்து அன்றைய தினம் தனக்குப் பெருத்த வேட்டை அகப்படப் போகிறது என்றும், அதன் பிறகு அதிசீக்கிரமான ஓர் இரவில் தான் நூற்றுக்கணக்கான ஆள்களையும் ஏராளமான வண்டிகளையும் கொணர்ந்து வைத்துக்கொண்டு தீவட்டிக் கொள்ளையடித்து, அந்த மாளிகை யிலுள்ள ஐசுவரியம் முழுதையும் அபகரித்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று நினைத்து மனப்பால் குடித்து ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தான்.

அதன்பிறகு லீலாவதி அவ்விடத்துக்கு வந்து ஷண்முக வடிவோடு பேசிக்கொண்டிருந்த காலத்தில், அவன் அவர்களுக்கு நிரம்பவும் அருகில் மறைந்திருந்து அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தான். பிறகு சிறிது நேரத்திற்கப்பால் அவர்கள் இருவரும் கீழே இறங்கிப் போய்த் தமது போஜனத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்ததையும் அவன் கவனித்துக் கொண்டே இருந்தான். பிறகு கொஞ்ச நேரத்தில் ஒரு தாதி வந்து கூப்பிட லீலாவதி கீழேபோய்த் திரும்பி வந்து ஜெமீந்தார் மாரியம்மன் கோவிலுக்குப் போன விவரத்தையும், கமலம் பின்னால் வந்து கொண்டிருக்கிறாள் என்று ஆள் சொன்னதாகச் சொன்ன வரலாற்றையும், கட்டாரித் தேவன் நன்றாகத் தெரிந்துகொண்டே ஸோபாவின் கீழ் படுத்திருந்தான். அந்த ஜெமீந்தாருக்கு

மனைவியில்லை என்றும் லீலாவதி அவருடைய தம்பியின் மகளென்றும் அவன் தெரிந்துகொண்டிருந்தவன் ஆகையால், லீலாவதி கிழவரை அண்ணனென்று குறித்ததையும், அவர் அண்ணியைக் கண்டதாகச் சொன்னதையும் கேட்க, அவனுக்குப் பெருத்த குழப்பமும் சந்தேகமும் உண்டாயின.

யாரோ ஒரு பெண்ணைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு அவர்கள் ஏதோ மோசம் செய்ய எண்ணுகிறார்கள் என்ற ஓர் எண்ணம் அவனது மனதில் தலைகாட்டத் தொடங்கியது. அவள் யாராக இருக்கலாமென்று அவன் பலவாறு யூகித்துக் கொண்டே இருந்தான். அவள் தனது தமக்கையான கமலம் என்ற ஒரு பெண்ணின் வருகையை நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்து இருந்ததையும் கட்டாரித்தேவன் சூட்சுமத்தில் கிரகித்துக் கொண்டு அவ்விடத்தில் என்ன நேருகிறதென்று பார்க்க வேண்டுமென்று பெரிதும் ஆவல் கொண்டு எதிர்பார்த்தி ருந்தான். ஜெமீந்தார் அன்றைய தினம் இரவில் மாரியம்மன் கோவிலில் இருந்துவிட்டு வரப்போகிறார் என்று லீலாவதி ஷண்முகவடிவினிடம் சொன்னதைக் கேட்க, அவன் நிரம்பவும் மகிழ்ச்சியடைந்து அவர் அன்றைய தினம் இல்லாதிருந்தால், தனது காரியம் சுலபத்தில் பலிதமடையும்என்று அவன் நினைத்துக்கொண்டே படுத்திருந்தான்.

அதன்பிறகு லீலாவதியும் ஷண்முகவடிவும் பூர்ணசந்தி ரோதயத்தைப் பற்றியும் இளவரசர் விருந்து நடத்துவது முதலியவற்றைப் பற்றியும் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக் கொண்டிருந்ததை எல்லாம் கட்டாரித்தேவனும் நன்றாகக் கேட்டுக்கொண்டே இருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு வேலைக்காரி ஓடிவந்து கமலம் வந்துவிட்டதாகச் சொல்லி விட்டுப் போக உடனே லீலாவதி ஷண்முகவடிவை அழைத்துக் கொண்டு வெல்வெட்டு மாடத்தின் பின்பக்கத்திலிருந்த கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு அப்பாலிருந்த ரதிகேளி விலாசத்திற்குள் போனதைக் கண்ட கட்டாரித்தேவன், அந்த

மாடத்தின் பின்பக்கம் எப்படி இருக்கிறதென்பதைப் பார்க்க அதுவே நல்ல சந்தர்ப்பமென்று நினைத்துத் தான் மறைந்திருந்த ஸோபாவைவிட்டு விரைவாக வெளிப்பட்டு, சந்தடி செய்யாமல் கண்ணாடிக் கதவண்டை போய்ச் சேர்ந்தான். லீலாவதி, ஷண்முகவடிவை விசைவைத்த நாற்காலியில் உட்காரவைத்துவிட்டுத் திரும்பி ஓடிவந்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்தக் கண்ணாடிக் கதவைத் திறந்து வைத்துவிட்டுப் போனாள். ஆகையால், அவளைத் தொடர்ந்து வந்த கட்டாரித்தேவன் மெதுவாக அந்தக் கதவைத் திறந்துகொண்டு ரதிகேளி விலாசத்திற்குள் நுழைந்து கீழே உட்கார்ந்தபடி தரையைத் தடவிக்கொண்டே சென்று, முன்னால் நடந்துபோன இருவரையும் நெருங்கினான். அப்போது வேண்டுமென்றே ரதிகேளி விலாசத்தில் விளக்குகள் கொளுத்தப் படாமல் இருந்ததனால், அங்கு இருள் சூழ்ந்திருந்தது கட்டாரித்தேவனுக்கு நிரம்பவும் அனுகூலமாக இருந்தது. முன்னால் சென்ற லீலாவதி வேலைக்காரர்கள் விளக்குகள் பொருத்தத் தவறிப்போனதைப் பற்றிக் கடிந்து கொண்டதையும், நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும்படி ஷண்முகவடிவை வேண்டிக் கொண்டதையும் தான் கீழே போய்க் கமலத்தையும் அழைத்துக்கொண்டு விளக்கோடு வருவதாகச் சொன்னதையும் கேட்ட கட்டாரித்தேவன், தான் உடனே எங்கேயாவது மறைந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு நாற்புறங் களிலும் நகர்ந்து போய்த் தடவிப் பார்த்தான். எங்கு பார்த்தாலும் கட்டில்களும் ஸோபாக்களுமே மயமாக நிறைந்திருந்ததைக் கண்ட கட்டாரித்தேவன், வசதியாகக் காணப்பட்ட ஒரு கட்டிலின் அடியில் புகுந்து அப்பால் சென்று மறைந்து கொண்டான். அதன் பிறகு சிறிது நேரத்தில் ஷண்முகவடிவு நாற்காலியின்மேல் உட்காருவதாகச் சொல்ல, லீலாவதி வெளியில் போவதாகப் பாசாங்கு செய்ததையும், நாற்காலியில் உட்கார்ந்தவள், ''ஐயோ! அம்மா!'' என்று அலறிக் கூக்குரலிட்டு அழுததையும் கண்ட கட்டாரித்தேவன் பெரிதும் கலக்கமும்

குழப்பமும் அடைந்து, அந்தப் பெண் என்ன காரணத்தினால் அப்படிக் கதறி அழுகிறாள் என்பதையும் அப்போது தான் என்ன செய்கிறது என்பதையும் அறியாதவனாய்த் தடுமாறி அவ்விடத்திலேயே தரையோடு தரையாக ஒன்றிக் கொண்டிருந்தான். மேன்மேலும் ஷண்முக வடிவு கூச்சலிட்டுப் பிரலாபித்து அழத் தொடங்கி, தான் உட்கார்ந்த நாற்காலியி லிருந்த விசைகள் தன்னை இறுகப் பிடித்துக் கொண்டதாகக் கூறியதைக் கேட்டு, லீலாவதி எவ்வித மறுமொழியும் கூறாமல் திருட்டுத் தனமாக ஓடியதைக் கண்ட கட்டாரித்தேவன் அவர்களது மோசக் கருத்தை அப்போதே ஒருவாறு உணர்ந்து கொண்டான். அவர்கள் யாரோ ஒரு பெண்ணைக் கொணர்ந்து ஏதோ கபடமான எண்ணத்தோடு ரகசியமான அந்த இடத்திற்கு அழைத்துவந்து, ஏதோ யந்திரத்தில் மாட்டி வைத்த தாகவும், அதன்பிறகு முக்கியமான மனிதர் வந்து தமது சதியாலோசனையை நிறைவேற்றப் போகிறார் என்றும், அவன் நினைத்து, அதற்குமேல் என்ன நடக்கப் போகிறதோ என்று நினைத்து நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். அவன் சிறிதும் ஈவிரக்கமற்ற மதயானை போன்ற முரட்டு மனிதனானாலும்கல்லும் கரைந்துருகத்தக்க உருக்கமான குரலில் ஷண்முகவடிவு கதறியழுது துடிதுடித்ததைக் காண, அந்த மனிதனது மனம் கூட ஒரு வித இரக்கத்தையும், அனுதாபத்தையும் அடைந்து பதறியது. அவன் வெல்வெட்டு மாடத்தில் ஸோபாவின்கீழ் ஒளிந்திருந்த காலத்தில் ஷண்முகவடிவின் தேஜோமயமான திரு உருவத்தையும் அழகு வழிந்த முகத்தையும் நன்றாகப் பார்த்து, அவள் தெய்வீகமான சக்திவாய்ந்த உத்தமஜாதிப் பெண்ணென்று நினைத்திருந்தான். அவளது விஷயத்தில் அபாரமான மதிப்பும், விலக்க முடியாத ஒருவிதப் பிரியமும் அவனது மனதில் தோன்றிக்கொண்டே இருந்து வந்தன. ஆதலால், அவள் திடீரென்று பெருத்த தீயில் வீழ்ந்து விட்டவள்போலத் துடிதுடித்துப் புலம்பி அழுததைக் காண, அவனது மனம் சகியாமல், தான் உடனே எழுந்துபோய்

அவளை விடுவிக்க வேண்டுமென்ற விருப்பம் கொண்டதனாலும், அந்த விசையைத் தன்னால் விலக்க இயலுமோ இயலாதோ என்ற நினைவினாலும் அப்போது யார்வந்து என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நினைவினாலும், அவன் நிரம்பவும் பாடுபட்டுத் தன்னை அடக்கிக் கொண்டு அந்த இடத்திலேயே சந்தடியின்றிப் படுத்திருந்தான்.

சிறது நேரத்தில் யாரோ ஒருவர் அந்த அறைக்குள் வந்த காலடி ஓசையைக்கேட்ட கட்டாரித்தேவன் அதை நன்றாகக் கவனித்தபடியே இருந்தான். அப்படி வந்த மனிதர் ஷண்முக வடிவு இருந்த இடத்திற்கு அருகில் போனதையும், அவள் உடனே அவரோடு பேசித் தன்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டதையும் அவன் உணர்ந்தான். உடனே ஜெமீந்தார் தாம் இன்னார் என்பதையும் தமது கருத்து இன்னதென்பதையும் வெளியிட்டதையும் அதைக்கேட்ட அந்தப் பெண் அளவற்ற திகிலும் வியப்பும் அடைந்து, பலவகையான நியாயங்களை எடுத்துச் சொல்லி தான் அவரது கருத்துக்கு இணங்க இயலாதென்று கூறி மறுத்ததையும், ஜெமீந்தார் மேன்மேலும் அவளை எப்படியும் அடைய உறுதி செய்துகொண்டிருப்பதாகக் கூறிக் காமாதுர மொழிகளைச் சொன்னதையும் கேட்ட கட்டாரித்தேவனது மனதில் பலவகைப்பட்ட உணர்ச்சிகளும் எண்ணங்களும் பொங்கி எழுந்து மூர்க்கமாக வதைக்கத் தொடங்கின. இளம்பிராயப் பெண்ணான அவளிடத்தில் ஜெமீந்தார் மோகாவேசமான சொற்களைக் கூறக்கூற, அவைகள் நிரம்பவும் முரடனான கட்டாரித்தேவனது மனதில் பலவித விகாரங்களையும் துன்மார்க்கமான நினைவுகளையும் கிளப்பி விட்டனவாதலால், அவனது நிலைமை மதங்கொண்ட யானையினது நிலைமை போலக் கட்டுக்கடங்காத அசாத்தியமான தாயிற்று. அந்த மோக விகார உணர்ச்சியோடு கூட, அநாதரவாக அகப்பட்டுக்கொண்ட மகா நற்குணவதியான

ஒருபெண்ணை அவர்கள் அக்கிரமமாகக் கொணர்ந்து வைத்துக் கொண்டு பலாத்காரம் செய்து சித்திரவதை செய்கிறார்களே என்ற நினைவினால் ஜெமீந்தாரினது விஷயத்தில் பெருத்த கோபமும் வீராவேசமும் தோன்றின. அங்குள்ளவர்களான ஜெமீந்தாரையும், லீலாவதியையும் மற்றவர்களையும் அடித்துத் தவிடு பொடியாக்கிவிட்டு அங்குள்ள சகலமான பொருட் களையும் அள்ளிக்கொண்டு ஷண்முகவடிவையும் தான் அபகரித்துக் கொண்டுபோய்விட வேண்டுமென்ற எண்ணம் தோன்றி அவனைத் தூண்டிக்கொண்டே இருந்தது. ஆகையால், அவன் எப்போதும் தனது மடியில் ஆயத்தமாக வைத்திருக்கும் முகமூடியை எடுத்து முகத்தில் போட்டுக்கொண்டு வெளியில் வரத் தயாராக இருந்தான். ஜெமீன்தார் ஒருவேளை விளக்கைக் கொளுத்தினால் தனது அடையாளம் தெரிந்து போய்விடுமென்ற நினைவினால் அவன் அவ்வாறு முகமூடி தரித்து வெளியில் வரத் தயாராக இருந்தான். அவன் எதிர்பார்த்தபடி ஜெமீந்தார் முடிவில் விளக்குகளைப் பொருத்திவிட்டு, நாற்காலியிலிருந்த விசையை அழுத்தி அவளை விடுவித்து பலாத்காரம் செய்யப் போன சமயத்தில் கட்டுக்கடங்காத பரம விகார நிலைமையை அடைந்திருந்த கட்டாரித்தேவன் குபீரென்று பாய்ந்து கட்டிலை விட்டு அப்பால் வந்து ஷண்முகவடிவைத் தூக்கி ஒரு பக்கமாகப் படுக்க வைத்துவிட்டு ஜெமீந்தார் மீது பாய்ந்து அவரைத் தூக்கி நாற்காலியில் எறிந்து விசையில் மாட்டி விட்டான் என்ற விஷயம் முன்னரே விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறதல்லவா!

அவ்வாறு சரியான சமயத்தில் அங்கே வந்து தோன்றித் தமது துர் எண்ணத்தில் மண்ணைப் போட்ட மனிதன் யாராக இருப்பான் என்ற பெருத்த திகிலும் கலக்கமும் கொண்ட ஜெமீந்தார் அப்படியே பிரமித்துத் திகைத்து அந்த மனிதனை உற்று நோக்கினார். அவன் ஒரு ராக்ஷசன்போல பிரம்மாண்டமான வடிவம் உடையவனாக இருக்கக்கண்ட ஜெமீந்தார் குலை நடுக்கங் கொண்டார். அவன் தனது முகம் வெளியில் தெரியாதபடி கருப்பு நிறக்குல்லா அணிந்திருந்தது,

அவரது கிலியை ஆயிரம் மடங்கு பெருக்கியது. அவரது வாய் குழறியது. உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் ஒவ்வோர் அணுவும் பம்பரம்போல விர்றென்று சுழன்று அவரை மரண வேதனைக்கு ஆளாக்கியது. அவரது மனதில் பலவிதமான எண்ணங்களும் திகிலும் தோன்றின. ஆனாலும், அவ்வாறு திடீரென்று வந்த மனிதனுக்கும் ஷண்முகவடிவுக்கும் ஒருவித சம்பந்தமும் இராது என்ற எண்ணம் மாத்திரம் அவரது மனதில் உடனே தெளிவாக உண்டாகிவிட்டது. அவன் தமது மாளிகையில் கொள்ளையடிக்க வந்த திருடனாகத்தான் இருக்க வேண்டும் என்றும், அவன் தற்செயலாக அங்கே ஒளிந்திருந்து, தமக்கும் ஷண்முகவடிவுக்கும் நடந்த சச்சரவைக் கேட்டுக் கொண்டிருந்து, அந்தத் தருணத்தில் வெளிப்பட்டிருக்க வேண்டுமென்றும் அவர் முடிவு செய்துகொண்டார். அவன் ஒருவனாக அங்கே வந்திருந்தாலும் அவனைச் சேர்ந்த ஆட்கள் பலரும் வந்து பக்கங்களில் இருக்க வேண்டுமென்றும் அவர் எண்ணிக் கொண்டவராய், அவனிடம் தாம் நன்மையாகவே பேசி அவனை அனுப்பிவிட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு மெதுவாக அவனை நோக்கி நயமாகப் பேசத் தொடங்கி, "அடேய்! யாரப்பா அது? நான் சொல்வதைக் கேள். அவசரப்பட்டு எனக்கு நீ யாதொரு தொந்தரவும் செய்துவிடாதே. நீ இந்த அகால வேளையில் இங்கே வந்திருப்பதிலிருந்தும், முகமூடி போட்டுக் கொண்டிருப்பதிலிருந்தும், நீ இங்குள்ள பொருளை அபகரித்துக் கொண்டுபோக வந்த திருடன் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. உனக்குத் தகுந்தபடி நானே சன்மானம் செய்து அனுப்புகிறேன். நீ எங்களை எல்லாம் வற்புறுத்த வேண்டிய அவசியமும் இல்லை. எங்கே பணமிருக்கிறது என்று தேடவேண்டிய பிரயாசையும் உனக்குத் தேவையில்லை. ஆகையால், நீ என்னை இந்த நாற்காலியிலிருந்து விடுவிப்பாயானால், என்னுடைய சட்டைப் பையிலுள்ள நோட்டுகளை எல்லாம் அப்படியே உன்னிடம் எடுத்துக் கொடுத்து விடுகிறேன். சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான

முள்ள நோட்டுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அப்படியே எடுத்துக் கொண்டு நீ போய்விடு. இதோ இந்த நாற்காலியின் பின் புறத்தில் ஒரு விசை இருக்கிறது. அதை அழுத்தினால், இந்த வளையங்கள் நகர்ந்துகொள்ளும். நான் எழுந்து விடுவேன்'' என்று மிக்க அன்பாகவும் மரியாதை யாகவும் பேசினார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன் உடனே அவரண்டை நெருங்கி வந்து அவரது சட்டைப் பையில் தனது கையை நுழைத்து அதற்குள்ளிருந்த நோட்டுக் கற்றையை வெளியில் இழுத்து பக்கத்திலிருந்த மேஜையின் மீது வைத்தவனாய் அவரை நோக்கி, ''ஜெமீந்தார் ஐயா! இவ்வளவு பெரிய மனிதரான ஜெமீந்தாருடைய வீட்டுக்கு நான் விருந்தாளியாக வந்து இந்த அற்பத் தொகையைச் சம்பாவனையாக வாங்கிக் கொண்டு போனால் ஊரார் சிரிக்கமாட்டார்களா! ஆகையால், எனக்கு இது போதாது? நான் இவ்வளவோடு போகக் கூடியவனல்ல. நீங்கள் ஓர் இரும்புப்பெட்டி வைத்திருப்ப தாகவும் அதற்குள் குபேர சம்பத்தே அடங்கியிருப்பதாகவும் நான் நெடுநாளாகக் கேள்வியுற்றிருக்கிறேன். அந்தப்பெட்டி இதோ பக்கத்திலுள்ள மாடத்தில் இருக்க நான் கொஞ்ச நேரத்திற்கு முன் கண்டேன். அதன் திறவுகோலை நீங்கள் இப்போது என்னிடம் கொடுக்க வேண்டும். நான் போய்ப் பெட்டியைத் திறந்து அங்குள்ள சகலமான ஆஸ்திகளையும் எடுத்துக்கொண்டு போகத் தீர்மானித்து விட்டேன். எடுங்கள் திறவுகோலை'' என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் திடுக்கிட்டுப் பெரிதும் திகில் கொண்டார். எத்தனையோ லக்ஷக்கணக்கில் பெறக்கூடிய நோட்டுகளும் ஆபரணங்களும் நிறைந்துள்ள தமது இரும்புப் பெட்டியின் திறவுகோலை அவனிடம் கொடுத்தால், அவன் அதிலுள்ள சகலமான பொருட்களையும் அபகரித்துக்கொண்டு போய்விடும் பட்சத்தில் தாம் பரம ஏழை ஆகிவிட நேருமே

என்ற அச்சமும் ஏக்கமும் உண்டாகிவிட்டன. அவர் முன்னிலும் நயமாகவும், கெஞ்சலாகவும் பேசத்தொடங்கி, ''அப்பா! என்னிடத்திலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நீ இப்போது எடுத்துக் கொண்டு போய்விட்டால் அதன்பிறகு நான் ஏழையாகி விட மாட்டேனா! அப்படி ஏழையாகி விடும் காலத்தில் நீ மறுபடியும் வந்தால், நான் உனக்கு எதைக் கொடுக்கிறது? அடியோடு மரத்தை வெட்டுவதைவிட ஒவ்வொரு பருவத்திலும் அதில் பழுக்கும் பழங்களைப் பறித்துக்கொண்டு போவதே புத்திசாலித் தனமல்லவா? ஆகையால், நீ இப்போது நான் கொடுப்பதை எடுத்துக்கொண்டுபோ. இது போதா விட்டால், அடுத்த அறையிலுள்ள மேஜைக்குள் இன்னொரு மூவாயிரம் ரூபாய் வைத்திருக்கிறேன். அதையும் தருகிறேன். வாங்கிக்கொண்டு அவ்வளவோடு போய்விடு. மறுபடி வந்து இன்னும் கொண்டு போகலாம்'' என்றார்.

கட்டாரித்தேவன், ''அதெல்லாம் பலியாது ஐயாவே! எடும் திறவுகோலை. இப்போது எல்லாவற்றையும் ஒரு முட்டாகக் கொண்டு போனால், நான் அடிக்கடி வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டியதில்லை அல்லவா'' என்றான்.

ஜெமீந்தார், ''சரி! நீ சொல்லுகிறபடியே திறவுகோலிருக்கும் இடத்தைக் காட்டுகிறேன். என்னை இந்த நாற்காலியிலிருந்து விடுவி'' என்றார்.

கட்டாரித்தேவன், ''ஓகோ! நான் விடுவித்த பிறகு திறவு கோலைத் தேடுவதுபோலப் பாசாங்கு செய்து வேலைக்காரர் களை அழைக்கும் மணியை அசைத்து ஆள்களை வருவிப்பதற்காக இப்படிச் சொல்லுகிறீரா? அதெல்லாம் என்னிடம் பலியாது. திறவுகோலிருக்கும் இடத்தைச் சொல்லும். நானே போய் எடுத்துக்கொள்ளுகிறேன். அதைச் சொல்லாவிட்டால், இந்த நாற்காலியிலேயே உம்மை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டுவிடுவேன்'' என்று கூறித் தனது மடிக்குள் தொங்கவிட்டுக் கொண்டிருந்த பீச்சாங் கத்தியை

வெளியில் இழுத்து உயர்த்திப் பிடித்தான். திடீரென்று மின்னல் தோன்றுவதுபோல, அந்தக் கத்தி பளிச்சென்று மின்னியது. கிழவர் கலங்கிக் கலகலத்துப் போனவராய், "அப்பா! நீ என்னை வெட்ட வேண்டாம். இதோ என் சட்டையின் உள் பக்கத்துப் பையில் திறவுகோல் இருக்கிறது. இதை எடுத்துக்கொண்டு போய் உனக்கு வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டுபோ. போகும்போது பக்கத்து அறையில் கதவு ஓரமாக ஒளிந்து கொண்டிருக்கும் என் தம்பி மகளான லீலாவதியை இங்கே அனுப்பிவிட்டுப் போ" என்றார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன், "சரி; அதுதான் விவேகிக்கு அழகு. அப்படியே செய்கிறேன். ஆனால், நான் போகும்போது இந்தப் பெண்ணையும் தூக்கிக்கொண்டு போகவேண்டும். அதற்காக மாத்திரம் நான் திரும்பி வருவேன்" என்று கூறியவண்ணம் அவரது சட்டைக்குள்ளிருந்த திறவுகோலை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அப்பால் நடந்து வெல்வெட்டு மாடத்தை அடைந்தான்.

அதுவரையில் மயங்கிக்கிடந்த ஷண்முகவடிவு மெதுவாகத் தனது சிரத்தைத் தூக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அதைக் கண்ட ஜெமீந்தார் அவசரமாகவும் தணிவான குரலிலும் பேசத் தொடங்கி, "பெண்ணே! ஷண்முகவடிவூ! சீக்கிரமாக எழுந்திரு. இங்கே வந்திருக்கிறவன் பெருத்த கொள்ளைக்காரன் போலிருக்கிறது. அவன் என் இரும்புப் பெட்டியிலுள்ள பொருளை எல்லாம் எடுத்துக்கொண்டு வரப் போயிருக்கிறான். வந்து உன்னையும் எடுத்துக்கொண்டு போவதாகச் சொல்லிப் போயிருக்கிறான். நீ என் விஷயத்தில் பிடிவாதமாக நடந்து கொண்டாயானாலும் உன்னை இந்த முரட்டுத் திருடனிடம் காட்டிக் கொடுக்க எனக்கு மனமில்லை. ஆகையால், நீ ஒரு காரியம் செய். அதோ வலது கைப் பக்கத்தில் ரோஜாப் பூவைப் போல இருக்கிறதல்லவா, அதன் மேல் கையை வை. உடனே ஒரு கதவு திறந்துகொள்ளும். அதற்கப்பால் படிகள் கீழே

இறங்குகின்றன. அப்படியே நீ கீழே போய்க் கூக்குரலிட்டுத் திருடன் மேலே வந்திருப்பதாகச் சொன்னால் வேலைக்காரர்கள் விழித்துக்கொள்வார்கள்; நீ அவர்களை மேலே அனுப்பிவிட்டு எங்கேயாவது மறைந்துகொள். எழுந்து சீக்கிரமாகப் போ. இப்போது ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு கோடி பெறும். நீ போகத்தவறினால், உனக்குத்தான் பெருத்த பொல்லாங்கும் மானபங்கமும் நேரும்'' என்றார்.

கடைசியாக கட்டாரித்தேவன் பேசிவிட்டுப் போனதையும் ஷண்முகவடிவு ஒருவாறு கேட்டுக்கொண்டிருந்தாள். ஆகையால், கிழவர் அப்போது பேசியது கபடமாகப் பேசியதல்லவென்று உணர்ந்து கொண்டவளாய் விரைவாக எழுந்தாள். தாம் கிழவரிடத்திலிருந்து தப்பித் திருடனிடம் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தால், அது சட்டியிலிருந்து தப்ப நினைத்து அடுப்புக்குள் விழுவது போல முடியும் என்று நினைத்தவளாய் அந்த மடமாது அவ்விடத்தை விட்டுக் கிழவர் காட்டிய அடையாளம்படி போய் அவ்விடத்தில் காணப்பட்ட ரோஜாப் பூவில் கையை வைத்தாள். அவ்விடத்தில் ஒரு கதவு திறந்து கொண்டது. ஜெமீந்தார் சொன்னபடி அதற்கப்பால் படிகள் இறங்கின. ஷண்முகவடிவு அப்பால் போய் கதவை இழுத்து மூடிக்கொண்டு படிகளில் இறங்கிப் போய்விட்டாள்.

அதன்பிறகு கால் நாழிகை நேரம் கழிந்தது. கட்டாரித்தேவன் ஜெமீந்தார் இருந்த இடத்திற்கு மறுபடி வந்து ஷண்முகவடிவு படுத்திருந்த இடத்தைப் பார்த்தான். அவள் காணப்படவில்லை. அவனது மனதில் ரௌத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்தது. அவனது கண்ணில் தீப்பொறி பறந்தன. மீசைகள் துடித்தன. அவன் ஜெமீந்தாரை நோக்கி, ''ஐயா ஜெமீந்தாரே! நீர் செய்த தந்திரம் எனக்குத் தெரிந்துபோய்விட்டது. இங்கே இருந்த பெண்ணை நீர் கூப்பிட்டு வேறே வழியாகக் கீழே அனுப்பி இருக்கிறீர் என்பது தெரிகிறது, அவள் வேலைக்காரர்களை எழுப்பப் போயிருக்கிறாள் போலிருக்கிறது. சரி, அவர்கள் வந்து

என்னைப் பிடித்துக் கொள்ளட்டும். நான் உம்முடைய இரும்புப் பெட்டியிலுள்ள சகலமான சொத்துக்களையும் எடுத்து மூட்டை யாகக் கட்டி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். குறைந்தது ஒரு கோடி ரூபாய் பெறுமான திரவியம் அதில் இருக்கலாம். அவ்வளவு சொத்துக்களையும் நான் மாத்திரம் அனுபவிப்பதில் சுகமில்லை. இங்கே இருந்த பெண்ணை நீர் அனுப்பிவிட்டீர் ஆகையால், நான் நேராகப் போய் உம்முடைய தம்பி மகளான லீலாவதியைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய் விடுகிறேன். அவளும் நல்ல ராஜாத்தி போலவே இருக்கிறாள். இவ்வளவு அபாரமான சொத்தையும் வைத்து அனுபவிக்க அவளும் தகுதியானவளே'' என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டுப்போய் வெல்வெட்டு மாடத்தை அடைந்து, அவ்விடத்தில் ஜெமீந்தார் குறித்த இடத்தில் மறைந்து கொண்டிருந்த லீலாவதியைப் பிடித்துக் கைககால்களை எல்லாம் கட்டி வாயில் துணியை அடைத்து, அவளைத் தூக்கித் தனது மார்பில் சாத்திக்கொண்டு, நோட்டுகளும் ஆபரணங் களும் அடங்கிய பெருத்த மூட்டையை அலட்சியமாக இன்னொரு கையால் தூக்கிக் கொண்டு வெளியில் சென்று, இரும்புப் பெட்டியைப் பூட்டியிருந்த கெட்டியான பூட்டால் வெல்வெட்டு மாடத்தின் வெளிக்கதவைப் பூட்டித் திறவு கோலை எடுத்துக்கொண்டு கீழே போய், வெளிவாசலில் தூங்கி விழுந்தபடி இருந்த பாராக்காரனைச் சுலபத்தில் கடந்து அப்பால் போய்விட்டான்.

## 37-வது அதிகாரம்

# போகுமிடமெல்லாம் பொல்லா விதி

மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகையில் ரதிகேளி விலாசத்திலிருந்து தெய்வச் செயலாகத் தப்பிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கிய நமது ஷண்முகவடிவு அளவற்ற உற்சாகமும் மனோதிடமும் கொண்டவளாய்ப் பல அறைகளையும் கூடங்களையும் கடந்து சந்தடி செய்யாமல் நடந்து அந்த மாளிகை யின் வாசல் இன்ன திக்கிலேதான் இருக்க வேண்டும் என்று தனக்குள் ஒருவிதமாக யூகித்துக்கொண்டு அந்தத் திக்கில் செல்லலானாள். அப்போது இரவு பதினொரு மணி சமயத்திற்கு அதிகம் இருக்கும் ஆதலால், அந்த மாளிகையைச்சார்ந்த வேலைக்காரர்கள் எல்லோரும் அலுத்துத் துயின்று கொண்டி ருந்தனர். ஆதலால், அவர்கள் விடுத்த குறட்டையின் ஓசை ஆங்காங்கு சப்தித்து அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அவர்களில் எவனாவது விழித்தெழுந்து தன்னைப் பிடித்துக் கொண்டால், மறுபடி தனக்கு எவ்விதமான பொல்லாங்கு நேருமோ என்று பெரிதும் அஞ்சினவளாய் அந்த மடமங்கை தனது விரல்களைப் பூமியில் ஊன்றியபடி நடந்து சென்றாள். அந்த மாளிகையின் எஜமானரான கிழவரிடத்திலிருந்து தன்னைத் தப்புவிக்க, நல்ல தருணத்தில் ஒரு முரட்டு மனிதன் தோன்றியதும், அதன்பிறகு அந்த முரட்டு மனிதனிடத்திலிருந்து, அதே கிழவர் தன்னைத் தப்ப வைத்தனுப்பியதும், நிரம்பவும் விநோதமான தெய்வீக சம்பவமாகத் தோன்றின. ஆதலால், அவளது மனம் உடனே கடவுளை நினைத்து, பக்திப் பெருக்கினால் உருகியது. தனக்கு அடிக்கடி பயங்கரமான பெருத்த அபாயங்கள் நேர்ந்து கொண்டே இருந்தாலும், தான் இனி தப்பமுடியாது என்று நினைக்கத் தகுந்த மகா சங்கடமான நிலைமையில் ஈசுவரன்

எதிர்பார்த்தபடி ஏதோ ஒரு தந்திரம் செய்து யாராகிலும் ஒருவரைக் கொணர்ந்துவிட்டுத் தன்னை அந்த அபாயத்திலிருந்து காப்பாற்றுவதை நினைக்க நினைக்க, அவளது மனம் கடவுளின் கருணாகடாக்ஷத்தையே சிந்திக்கத் தொடங்கியதன்றி, ''சுவாமி! ஆண்டவனே! என்னை முடிவு வரையில் காப்பாற்றி, நான் சௌக்கியமாகவும் பத்திரமாகவும் ஊர்போய்ச் சேர்ந்துவிடும்படி செய்ய வேண்டுமப்பனே; இந்த துஷ்ட ஊரில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் என் அக்காளையும் எப்படியாவது திருப்பிக் கொண்டுவந்து எங்களிடம் சேர்த்துவிட வேண்டும் கிருபாநிதியே! அநாதைகளான எங்களுக்கு உன் பாதுகாப்பன்றி வேறு கதியில்லை என் ஐயனே! எங்களைப் பெற்ற தகப்பன் தாய் முதலிய எல்லோரும் நீ தானப்பா என் கருணை வள்ளலே!'' என்று தன் மனதாரக் கடவுளைப் பிரார்த்தித்தவளாய்ச் சென்றாள்.

மேன்மாடத்தில் கிழவரை நாற்காலியில் மாட்டிவிட்ட திருடன், மறுபடியும் வந்து தன்னையும் அபகரித்துக் கொண்டு போக எண்ணுவதாகச் சொல்லிவிட்டுப் போனதை, அவள் ஒருவாறு உணர்ந்தாள் ஆகையால், அவன் மேன்மாடத்தில் தன்னைத் தேடிக் காணாது விரைவாகக் கீழே இறங்கிவந்து தன்னைப்பிடித்துக் கொண்டு போய் விடுவானோ என்ற திகில் அவளது மனதில் அளவற்ற ஊக்கத்தையும், கால்களுக்கு மிகுந்த சுறுசுறுப்பையும் உண்டாக்கியது. ஆகையால், இரண்டு இறகுகள் முளைக்கப் பெற்றவள் போல, அவள் பறக்கலானாள். மருங்காபுரி ஜெமீந்தார் அவளது விஷயத்தில் முற்றிலும் மோசக் கருத்தாக நடந்துகொண்டார் ஆனாலும், அவர் கொடிய இரும்பு நாற்காலியில் மாட்டப்பட்டிருப்பதும் திருடன் கையில் அகப்பட்டிருப்பதும் அவளது தயாள மனதை இளக்கி சஞ்சலப் படுத்தின. வேலைக்காரரை எழுப்பி, கிழவரைக் காப்பாற்றும் படி மேலே அனுப்பலாமா என்ற எண்ணம் அடிக்கடி அவளது மனதில் உதித்து அவளை வதைத்துக்

கொண்டே இருந்தது. ஆனால், தான் அப்படி செய்தால் அதனால், தனக்கு ஏதேனும் துன்பம் நேருமோ என்ற நினைவினால் அவள் தனது ஜீவகாருண்யச் சிந்தையை ஒருவாறு அடக்கிக்கொண்டு வெளியில் நடந்தாள். அந்த நடு இரவில் நிர்மாநுஷ்யமாக இருக்கும் அந்தப் பட்டணத்திற்குள் தான் தனிமையில் எந்த இடத்திற்குப் போகிறது என்ற சிந்தனையே அவளது மனதில் அப்போது உண்டாகவில்லை. பொழுது விடிகிற வரையில் அந்த மாளிகைக்குள் எங்கேயாவது ஒளிந்திருந்து பகற்பொழுதில் வெளியில் போவது நல்லது எனத்தோன்றியது அன்றி, அப்போது பக்கங்களில் விசாரித்து அந்த மாளிகை யாருடையது என்பதையும் கிழவருடைய வரலாறுகளையும் உள்ளபடி உணர்ந்து கொள்ளலாம் என்ற எண்ணம் உண்டானது. ஆனாலும் பரமசண்டாளர்கள் வசிக்கும் இடமான அந்த மாளிகையில் தான் ஒரு க்ஷணம் கூட இருப்பது தவறு என்றும், தான் அந்த அகால வேளையில் வெளியில் போவதனால் தனக்கு எப்படிப்பட்ட பெருந்துன்பம் நேருவதானாலும் அதைத் தான் அனுபவிக்கலாம் என்றும், அவளது மனதில் உறுதியான ஒருவிதத் தீர்மானம் ஏற்பட்டது. ஆதலால் அவள் மிதமிஞ்சிய துணிவும் சுறுசுறுப்பும் கொண்டவளாய் நடந்து முன் பக்கத்து வாசலை அடைந்தாள்.

அவ்விடத்தில் கதவு மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. ஒரு மூலையிலிருந்த மேடைமீது உட்கார்ந்திருந்த பாராக்காரன் அப்படியே சாய்ந்து கடுமையான துயிலில் ஆழ்ந்திருந்தான். ஆதலால் நமது இளந்தோகையான ஷண்முகவடிவு ஓசை செய்யாமல் நடந்து கதவண்டை சென்று தாழ்ப்பாளை மெதுவாக விலக்கி கதவைச் சிறிதளவு திறந்து கொண்டு வெளியில் போய் வீதியை அடைந்தாள். உள்ளே இருந்த திருடன் தனது உத்தேசத்தை நிறைவேற்றிக் கொண்டு மாளிகையை விட்டு வெளியில் வந்தாலும் வரலாம் என்ற எண்ணமும், தான் வந்ததைக்கண்ட பாராக்காரர் யாராகிலும் விழித்துத் தன்னைத்

துரத்திக் கொண்டு வந்தாலும் வரலாம் என்ற எண்ணமும், மேன்மாடத்தில் வந்த திருடனுக்குத் துணையாக வேறு பல திருடர்கள் வந்து வீதியில் ஒளிந்திருந்தாலும் இருக்கலாம் என்ற எண்ணமும் தோன்றின. ஆகையால், அந்தப் பேடன்னம் பின்னாலும் பக்கங்களிலும் மருண்டு மருண்டு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஓட்டமும் நடையுமாகச் செல்லத் தொடங்கினாள்; அது அந்த நகரத்தின் வடக்கு ராஜவீதி யாதலால், அவள் கிழக்குத் திக்கை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

ஊர் முற்றிலும் ஒடுங்கி, ஓசையும் ஒடுங்கிப் போயிருந்தன. ஆனாலும் பக்கத்திலிருந்த சந்துகளில் நாய்கள் வெள்வெள் என்று பலமாகவும் பயங்கரமாகவும் குலைத்துக் கொண்டிருந்தன. ஆதலால், அவளது மனதில் பெருந்திகில் குடிகொண்டு அவளது உடம்பைத் திடுக்கு திடுக்கென்று தூக்கிபோட்டது. உடம்பின் உரோமமெல்லாம் அடிக்கடி சிலிர்த்துச் சிலிர்த்துத் தணிந்து கொண்டிருந்தது. பயம் அவளைப் பின்னுக்கு இழுத்தது. ஆனாலும் மனோவேகம் அவளது உடம்பை முன்னுக்குத் தள்ளிக்கொண்டே இருந்தது. தனக்கு முற்றிலும் புதுமையான அந்த ஊரில் அப்போது தான் எங்கே போகிறது, அந்த இரவை எப்படிக் கழிக்கிறது என்ற நினைவையே கொள்ளாமல், கிழவருடைய மாளிகைக்கு வெகுதூரத்திற்கு அப்பால் தான் அதி சீக்கிரம் போய்விட வேண்டுமென்ற ஓர் எண்ணத்தையே கொண்டவளாய், அந்த மெல்லிய நங்கை சென்று கொண்டிருந்தாள். அந்த வீதியில் வெகு தூரத்திற்கு ஓரிடத்தில் லாந்தர்க் கம்பங்கள் நிறுத்தப்பட்டிருந்தன ஆதலால், அவற்றிலிருந்த வெளிச்சம் அற்ப பிரகாசம் உடையனவாக இருந்தது. ஆகையாலும், அந்த விளக்குகள் எண்ணெய்க்குச் சேதமாக இருந்தனவேயன்றி, எவருக்கும் உதவியாக இருக்க வில்லை. ஆகாயத்தில் நிறைந்திருந்த கோடானு கோடி நட்சத்திரங்களின் ஒளியினால், இருளின் கடுமை குறைந்திருந்த

மையால், மங்கலான வெளிச்சம் எங்கும் வியாபித்திருந்தது. அந்த இளநங்கை வடக்கு ராஜவீதியின் கிழக்குக் கோடியை அடைந்து அதன் முடக்கில் திரும்பி கிழக்கு ராஜவீதிக்குள் புகுந்தாள். புகவே அவளுக்கு முன்னால் சுமார் நூறுகஜ தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு சந்திற்குள் "பாரா உஷார், சௌகீபாரா உஷார்" என்று போலீஸ்காரர்கள் உரத்த குரலில் கத்திய ஓசை உண்டாயிற்று. அதைக்கேட்ட உடனே அந்த மின்னாளினது தேகம் கிடுகிடென்று நடுங்கியது. அவர்கள் தன்னைப் பிடித்துக்கொண்டு, தன் வரலாற்றைக்கேட்டால், அந்த அர்த்த ராத்திரியில் தான் வெளிப்பட்டு ஓடி வருவதைப் பற்றி என்ன முகாந்திரம் சொல்லுவதென்ற கவலையினால் அவளது தேகம் குன்றியது. கிழவரது மாளிகையில் தான் போய் மாட்டிக் கொண்டதையும், அவ்விடத்தில் தனக்கு நேரிட்ட துன்பங்களையும் வாயில் வைத்துச் சொல்ல, அவளுக்கு முற்றிலும் அசங்கியமாக இருந்தது. அதுவுமன்றித் தான் தனது வரலாற்றைப் போலீசாரிடம் சொன்னால் அவர்கள் உடனே தன்னை அழைத்துக் கொண்டு திரும்பவும் அந்த மாளிகைக்குப் போக நேர்ந்தாலும் நேரலாம் என்றும், அதன் சம்பந்தமாகத் தான் ஒருவேளை மறுநாள் கச்சேரிக்குப் போக நேர்ந்தாலும் நேரலாம் என்றும் நினைத்தாள். ஆகையால், தனது வரலாறு எதையும் அவர்களிடம் வெளியிடுவது உசிதமல்லவென்றும், தான் எப்படியாவது அவர்களது கண்ணில் படாமல் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டுமென்றும் அவள் தீர்மானித்துக் கொண்டாள். இன்னோர் எண்ணமும் அவளது மனத்தில் எழுந்து வதைத்தது. போலீசாரும் பரமதுஷ்டர்கள் ஆதலால், யௌவனப் பருவத்தினளான தான் அகாலத்தில் தனிமையில் வந்திருப்பதைக் கண்டு தான் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கக் கூடிய ஸ்திரீயென்று நினைத்துத் தன்மீது துராசைகொண்டு தன்னை வருத்தினாலும் வருத்தலாமென்றும், அப்படி நேர்ந்தால், தனது நிலைமை விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக் கொண்டவரது நிலைமை போலாகும் என்று அவள் நினைத்தவளாய்,

வேடனைக் கண்ட மான்போல மருண்டு நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். மனிதர் யாரும் தென்படவில்லை. ஏதாவது ஒரு வீட்டின் திண்ணையில் ஏறி ஒளிந்து கொள்ளலாம் என்ற நினைவோடு அவள் பக்கத்திலிருந்த வீட்டுத் திண்ணைகளையெல்லாம் பார்த்து ஆராய்ச்சி செய்தாள். எந்தத் திண்ணையிலும் மறைவான இடமே காணப்படவில்லை. தனக்கு அருகில் ஏதாவது சந்து இருந்தால், அதற்குள் புகுந்து ஒளிந்து கொள்ளலாமென்ற நினைவோடு அவள் தனது திருஷ்டியை அங்குமிங்கும் திருப்பி, சுமார் ஐம்பது கஜ தூரத்திற்கு அப்பால் முன்பக்கத்தில் ஒரு சந்து இருந்ததைக் கண்டு, அதை நோக்கி விரைவாக நடக்கலானாள். நடந்தவள் இரண்டொரு நிமிஷ நேரத்தில் சந்தின் முடக்கை அடைந்தாள். அந்த சந்து ஐந்து அல்லது ஆறடி விசாலமுடையதாய் நிரம்பவும் நெருக்கமானதாக இருந்தது, இரண்டு பக்கங்களிலும் வீடுகள் வரிசையாக இருந்தன. அவற்றின் முன்புறங்களிலும் நான்கு அல்லது ஐந்தடி அகலமுள்ள திண்ணைகள் இருந்தன. சந்தின் இருபுறங்களிலும் வீடுகள் ஆகாயத்தில் வெகுதூரம் வரையில் உயர்ந்திருந்தன. ஆதலால், சந்து முழுதும் இருளில் அடங்கிக் கிடந்தது. அத்தகைய இருளடர்ந்த சந்தின் தொடக்கத்தை அடைந்த நமது ஷண்முகவடிவு அதற்குள் நுழையுமுன், போலீசார் எவ்விடத்தில் இருக்கிறார்கள் என்பதை நிச்சயித்துக் கொள்ளவேண்டும் என்று நினைவைக் கொண்டவளாய், அவர்களது குரல் எவ்விடத்தில் இருந்து உண்டாகிறதென்று உற்றுக் கவனித்தாள். அவளிருந்த சந்திற்குச் சுமார் 20-கஜ தூரத்திற்கு முன்னாலிருந்த ஒரு சந்தில் அவர்களது குரல் கேட்டது. அவர்கள் ஒவ்வொரு சந்தாக நுழைந்து ஜனங்களை எச்சரித்துவிட்டு வருகிறார்களென்று நினைத்த ஷண்முகவடிவு, அவர்கள் தானிருந்த சந்திற்கு வந்தாலும் வருவார்கள் என்று நினைத்தவளாய், அவர்கள் வருவதற்குள் தான் அந்தச் சந்திற்குள் நுழைந்து அதன் கடைசியை அடைந்து அப்பால் போய்விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவளாய், சந்திற்குள் இரண்டோரடி எடுத்து வைத்தாள்.

அதே க்ஷணத்தில் ராஜவீதியில் ஒரு பெருத்த கூக்குரலுண்டாயிற்று. ''விடாதே; பிடி பிடி; இதோ ஓடுகிறாள். அதோ ஓடுகிறாள்'' என்று போலீசார் கத்திக்கொண்டு ஓடி வந்ததாகத் தெரிந்தது. அந்த ஆரவாரத்தைக் கேட்ட ஷண்முகவடிவினது தேகம் கிடுகிடென்று ஆடியது. உரோமம் சிலிர்த்தது. இன்னதென்று அறிய முடியாத ஒருவித திகிலும் அபாரமான கலக்கமும் எழுந்து அவளது மனதில் கப்பிக்கொண்டன. கால்கள் பூமியில் நிலைக்காமல் தள்ளாடித் துவள்கின்றன. தான் ஓடுவதா நிற்பதா என்பதை நிச்சயிக்கமாட்டாமல் அவள் சிறிது நேரம் சிந்தித்துத் தயங்கியிருக்க, அடுத்த நொடியில் போலீசார், அவளிருந்த திக்கில் ராஜபாட்டையோடு யாரையோ துரத்திக் கொண்டு ஓடிவருவதாகத் தோன்றியது. அப்போது தான் அவ்விடத்தில் இருப்பது தவறென்றும், சந்திற்குள் நுழைந்து முதல்வீட்டுத் திண்ணையில் ஏறி ஒளிந்து கொண்டிருந்தால் போலீசார் போய்விடுவார்கள் என்றும் அதன்பிறகு தான் சாவதானமாகப் போய்ச் சேரலாமென்றும் நினைத்தவளாய் நமது இளநங்கை விரைவாக அந்தச் சந்திற்குள் புகுந்து ஆரம்பத்திலிருந்த ஒரு வீட்டின் திண்ணையிலேறி அதன் கோடிக்குப்போய் சுவரோடு சுவராக மூலையில் ஒன்றி உட்கார்ந்து கொண்டு போலீசார் ராஜபாட்டையோடு அந்தச் சந்திற்கு அப்பால் போகிறார்களா என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அடுத்த க்ஷணத்தில் ராஜபாட்டையிலிருந்து அந்தச் சந்திற்குள் யாரோ ஒரு பெண்பிள்ளை தடதடவென்று தலைவிரிகோலமாக ஓடி வந்ததை ஷண்முகவடிவு கண்டாள். அப்படி ஓடிவந்தவள் அம்பு பாய்வதுபோல ஒரே வேகமாக ஓடி நாலைந்து வீடுகளுக்கு அப்பாலிருந்த ஏதோ ஒரு வீட்டிற்குள் நுழைந்து கொண்டதாகத் தெரிந்தது. அவளுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்த கதவும் ஓசையின்றி மூடி உட்புறம் தாளிடப்பட்டதையும் அவள் உணர்ந்தாள். ஆனால், அந்தப் பெண்பிள்ளை நுழைந்தது இன்ன வீடுதான் என்பதை அவள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளக் கூடாமல் போய் விட்டது.

அவள் யாரோ என்றும், எதற்காக அவ்வாறு ஓடி ஒளிந்து கொள்ளுகிறாளோ என்றும், போலீசார் அவளைத்தான் துரத்திக் கொண்டு ஓடி வருகிறார்களோ என்றும் ஷண்முகவடிவு பலவாறு எண்ணமிட்டவளாய்க் கலக்கமும் திகிலுமே வடிவாகக் குன்றிப்போய் சுவரோடு சுவராக ஒளிந்திருக்க, அடுத்த க்ஷணத்தில் போலீசாரினது கூக்குரல் நிரம்பவும் சமீபத்தில் நெருங்கியது. அவர்களுள் ஒருவன், ''அடேய்! அவள் நேராய்ப் போகவில்லையடா; இந்தச் சந்திற்குள்தாண்டா நுழைந்தாள்; ஓடுங்கடா, துரத்துங்கடா'' என்றான். மற்றவர்கள் ''பிடி பிடி விடாதே விடாதே'' என்று ஆர்ப்பரித்துப் பெரு முழக்கம் செய்துகொண்டு அந்தச் சந்திற்குள் நுழைந்தனர். அவர்கள் எல்லோரும் தத்தம் கையில் ஒவ்வொரு லாந்தரும் ஒவ்வொரு பெருத்த குண்டாந்தடியும் வைத்திருந்தனர். ஒரு ஜெவான் மாத்திரம் தனது கையில் ஒருசிறிய துணி மூட்டையை வைத்திருந்தான்.

அவ்வாறு கலவரமடைந்து ஆரவாரம் செய்தவர்களாய் அந்தச் சந்திற்குள் புகுந்த போலீசார் தங்களது பார்வையை நெடுந்தூரம் வரையில் செலுத்திப் பார்த்தனர். சற்றுமுன் சந்திற்குள் புகுந்த பெண்பிள்ளை அதன் கோடிவரையில் காணப்படவில்லை. ஆதலால், அவ்வளவு சீக்கிரத்தில் அவள் எங்கே போய் மறைந்து கொண்டிருப்பாள் என்று அதிசயித்தவர்களாய், குபீரென்று தங்களது விளக்குகளை இரண்டு பக்கங்களிலும் திருப்பித் திண்ணைகளைப் பார்க்கத் தொடங்கினர். உடனே ஒருவன், ''அடேய்! ஆசாமி அதோ ஒளிந்து கொண்டிருக்கிறாள். பாருங்கடோய்! திருட்டுநாரி! பச்சை உடம்போட என்ன ஓட்டம் ஓடி இதுக்குள்ளே இங்கே வந்து பதுங்கிக் கொண்டிருக்கிறாள் பாருங்கடா'' என்றான். உடனே எல்லோரும் தங்களது திருஷ்டியையும் விளக்கையும் ஷண்முகவடிவென்னும் உத்தமி ஒளிந்துகொண்டிருந்த இடத்தில் திருப்பினர். உடனே ஒருவன் ''அடி! கொலைபாதகி! கீழே இறங்கி வாடீ! இந்த வீட்டுத்

திண்ணையில் வந்து ஒளிந்துகொண்டால், உன்னைவிட்டு விடுவோம் என்று எண்ணிக் கொண்டாயா? இறங்கடி கீழே'' என்று முரட்டுத்தனமாகவும் அதிகாரமாகவும் கூறி அவளை அதட்டினான்.

அப்போது ஷண்முகவடிவினது மெல்லிய தேகம் காற்றில் அசையும் மாந்தளிர்போல நடுநடுங்கிக் கொண்டிருந்தது. அவளது மனம் இன்னது செய்வதென்பதை அறியாமல் தத்தளித்தது. அறிவு தள்ளாடியது. ''ஆகா! தெய்வமே! கொஞ்ச நேரத்துக்கு முன் தானே இரண்டு பெரிய கண்டங்களிலிருந்து என்னைக் காத்து ரக்ஷித்தாய்! இப்போது மறுபடியும் என்னை எவ்விதமான புதிய துன்பத்தில் மாட்டிவிட எண்ணுகிறாயோ! தெரியவில்லையே! ஹா! நான் என்ன செய்வேன்! கொஞ்ச நேரத்துக்குமுன் இங்கே யாரோ ஒரு பெண்பிள்ளை ஓடினாளே! அவளையல்லவா இந்தப் போலீசார் துரத்திக் கொண்டு வந்தார்கள். இவர்கள் நான்தான் அந்தப் பெண்பிள்ளையென்று தவறாக எண்ணிக் கொண்டல்லவா என்னை வைது பயமுறுத்தி அழைக்கிறார்கள். அந்தப் பெண்பிள்ளை என்ன குற்றம் செய்து விட்டு ஓடிவந்தாளோ தெரியவில்லையே! நான் வேறு மனிஷியென்று சொன்னால் என் வார்த்தையை இவர்கள் எப்படி நம்புவார்கள்! ஈசுவரா! அழிப்பதும் உன் செயல், ஆக்குவதும் உன் செயல், துன்பத்தில் விடுப்பவனும் நீ! அதைத் தடுப்பவனும் நீ; ஏழையாகிய என்னால் ஆவது ஒன்றுமில்லை. நான் திருவுள்ளமாகிய சண்டமாருதத்தில் அகப்பட்டு சுழன்று தடுமாறித் தத்தளிக்கும் ஒரு சருகுக்குச் சமமானவள். உன் திருவருள் என்னை எந்த வழியில் விடுத்தாலும், விடட்டும்'' என்று தனக்குள் சிந்தித்துக் கரை கடந்து கலங்கி நாணிக் கிலேசமுற்றுப் பின்புறம் திரும்பிப் பார்க்கவும் வெட்கித் தலை குனிந்து கொண்டவளாய் வதைபட்டிருக்க, அதற்குள்ளே போலீசார் திண்ணையின்மீது ஏறி அவளண்டை நெருங்கி வந்து விட்டனர். அவர்களுள் ஒருவன், ''அடீ பெண்பிள்ளை!

மரியாதையாக எழுந்து இப்படி வந்துவிடு! இல்லாவிட்டால் நாங்கள் கிட்டவந்து உன்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போக நேரும்'' என்று அதட்டிக் கூறினான். உடனே இன்னொருவன் இரக்கமாகவும் பரிதாபகரமாகவும் பேசுகிறவன் போல நடித்து, ''அடேய்! கிட்டப்போய் அவளைத் தொடாதேயடா! தீட்டுடா! இவள் பிள்ளைபெற்று இன்னம் அரை நாழிகை நேரங்கூட ஆகி இருக்காதுடா! பச்சை உடம்படா பாவம்! தொட்டுப் பலவந்தமாக இழுக்காதீர்களடா'' என்றான்.

மூட்டையைக் கையில் வைத்திருந்த மனிதன், ''ஐயோ பாவம் குழந்தை எம்பிட்டு அழகாயிருக்கிறதடா! இந்தக் குழந்தையினுடைய கழுத்தைத் திருகிக் கொல்ல இந்தச் சண்டாளிக்கு எப்படித்தான் மனம் துணிந்ததோ தெரிய வில்லையே! குழந்தை கந்தருவக் குழந்தைக் கணக்கா யிருக்கிறதடா! எவ்வளவு சீக்கிரத்தில் குழந்தையைக் கொன்று கந்தைத்துணியில் மூட்டைக்கட்டி அடுத்த சந்து முனையில் வைத்துவிட்டு ஓடிவந்திருக்கிறாள். இந்தப் பச்சை உடம்போடு இவ்வளவு தூரம் குதிரை ஓட்டமாக ஓடி வந்திருக்கிறாளே! இவளை ராக்ஷசி யென்றுதான் சொல்லவேண்டும்'' என்றான். அதற்குள் விளக்கைக் கொண்டுபோய் அவளது முகத்துக்கு அருகில் பிடித்த ஒருவன், ''ஆ! குட்டி வெகுஸொகுசாக இருக்கிறாளடா! தேவிடியாள் வகுப்பைச் சேர்ந்தவள் போலிருக்கிறது'' என்றான்.

அவர்கள் கூறிய வார்த்தைகளெல்லாம் ஷண்முகவடிவிற்கு முற்றிலும் கன்னகடூரமாக இருந்தன. ''சிவசிவா! இப்படிப் பட்ட அசங்கியமான சொற்களை என் காதால் கேட்கவும் தலைவிதியா! ஐயோ தெய்வமே! என்னென்ன புதுமை புதுமையான சங்கடங்களுக்கெல்லாம் என்னை ஆளாக்கு கிறாய்!'' என்று அந்த மின்னற்கொடியாள் தனக்குத்தானே எண்ணிக் கலங்கி மனமுடைந்தவளாய் மெல்ல எழுந்து

நின்றாள். போலீசார் சொன்ன வார்த்தைகளின் உள் கருத்து இன்னதென்பதை அவள் உடனே உணர்ந்து கொண்டாள். யாரோ ஒரு ஸ்திரீ திருட்டுத்தனமாகக் குழந்தை பெற்று அதன் கழுத்தைத் திருகிக் கொன்று, அதைத் துணியில் வைத்துக் கட்டிக் கொண்டு போய் பக்கத்து சந்தில் போட்டுவிட்டு வந்ததைக் கண்டு அவர்கள் அவளைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தவர்களென்றும், அப்படி ஓடி வந்தவளே, தான் என்று நினைத்துத் தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவள் எளிதில் யூகித்துக் கொண்டாள். முற்றிலும் சம்சயிக்கத் தக்க நிலைமையில் தான் இருந்து பிடிபட்டிருப்பதால், தான் நிரபராதியென்று எவ்வளவுதான் சொன்னாலும் அவர்கள் அதை நம்பமாட்டார்கள் என்ற உறுதி அவளது மனதிலேயே உண்டாகி விட்டது. இருந்தாலும், தான் அதற்கு மேல் நாணுவதிலும் லஜ்ஜைப்படுவதிலும் தனக்குக் கெடுதலேயன்றி நன்மை ஏற்படாத வகையால் தான் துணிந்து அவர்களோடு பேசியே தீரவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவளாய்த் தலை குனிந்து மிருதுவாகப் பேசத் தொடங்கினாள். அதற்குமுன் போலீசார் செய்த கூக்குரலை கேட்டு அண்டை அயல் வீடுகளிலிருந்த ஜனங்களெல்லோரும் கையில் விளக்குகளோடு கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து போலீசார் இருந்த இடத்தில் ஏராளமாகக் கூடி, "என்ன நடந்தது? என்ன விசேஷம்?" என்று கேட்கத் தொடங்கியதன்றி, நாணிக் கோணித் திண்ணையின் மூலையில் நடுநடுங்கி மானிளம் பேடுபோல நின்ற ஷண்முகவடிவை உற்று நோக்கி அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்தவர்களாய், "இந்தப் பெண் யார்? இவள் என்ன குற்றம் செய்துவிட்டாள்?" என்பது போன்ற பற்பல கேள்விகளைக் கேட்கலாயினர்.

உடனே போலீசார் தங்களிடமிருந்த துணி மூட்டையைக் கீழே வைத்துப் பிரித்துக் காட்ட, அப்போதே பிறந்த ஒரு சிறிய சிசுவின் பிணம் அதற்குள் இருந்ததை ஜனங்கள் கண்டு கட்டுக்

கடங்கா ஆத்திரமும் அருவருப்பும் அடைந்தனர். அந்தக் குழந்தையின் கழுத்து திருகப்பட்டிருந்தது ஆகையால், முகம் முதுகுப் பக்கம் திருகப்பட்டிருந்தது. குழந்தை குண்டாகவும் பருமனாகவும் நிரம்பவும் அழகுடையதாகவும் இருந்தமையால், ஜனங்கள் அதன்கோரமான நிலைமையைக் கண்டு கரைகடந்த இரக்கமும் அனுதாபமும் துயரமும் மனக்கொதிப்பும் அடைந்து, அங்கே இருந்த யௌவன ஸ்திரீயான நமது ஷண்முகவடிவுதான் அதைப் பெற்று கொன்று போட்டிருக்கிறாள் என்று எளிதில் யூகித்துக் கொண்டு அவளைத் தாறுமாறாகத் தூஷிக்கத் தொடங்கினர். உடனே போலீசாருள் ஒருவன் ஜனங்களை நோக்கி, "ஊர்கெட்ட கேட்டைப் பாருங்களையா! நாங்கள் ரோந்து சுற்றிக்கொண்டு பக்கத்து சந்தின் வழியாக ராஜபாட்டைக்கு வந்து கொண்டிருந்தோம். யாரோ ஒரு பெண்பிள்ளை எங்களைக் கண்டு தன் கையிலிருந்த இந்த மூட்டையைக் கீழே போட்டுவிட்டு ஓடினாள். நாங்கள் சந்தேகப்பட்டு உடனே ஓடிவந்து மூட்டையைப் பிரித்தால், கொல்லப்பட்ட குழந்தை உள்ளே இருந்தது. உடனே அதை எடுத்துக்கொண்டு அவளைத் துரத்தினோம். அவள் ஓடிவந்து இந்தச் சந்தில் புகுந்தாள். நாங்கள் பின்னால் துரத்திக்கொண்டே வந்து பார்க்கிறோம். அவள் இந்தத் திண்ணை மூலையில் ஒளிந்துகொண்டு மகா யோக்கியமான மனுஷிபோல நாணிக்கோணி நிற்கிறாள், பாருங்கள் ஐயா! என்ன அக்கிரமம் இது! இப்படிப்பட்ட அட்டூழியம் நடக்குமானால், ஊரில் எப்படி ஐயா மழை பெய்யும்?" என்றான்.

அதைக்கேட்ட ஜனங்களெல்லோரும் அந்த வரலாற்றை உண்மையென்றே நம்பி ஷண்முகவடிவுதான் அவ்வாறு கொலை செய்தாள் என்று நிச்சயித்துக்கொண்டு அவளைத் தாறுமாறாகத் தூஷிக்கலாயினர். ஒருவன், "அடடா! குழந்தை மகாராஜா வீட்டுக் குழந்தைபோல் அல்லவா தங்கப் பதுமை போல இருக்கிறது! இதைக்கொல்ல இந்தக் கெட்ட முண்டைக்கு

எப்படித்தான் மனம் துணிந்ததோ!'' என்றான். இன்னொருவன், ''ஆஹா! எத்தனையோ ஜனங்கள் குழந்தைகளுக்காக ஏங்கி, காசி ராமேசுவரம் போகிறார்கள்! அரசமரத்தை எல்லாம் வேறோடு பிடுங்குகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு குழந்தை பிறக்க மாட்டேன் என்கிறது. குழந்தையின் அருமை தெரியாத இப்படிப்பட்ட ராக்ஷசிகளின் வயிற்றில்தானா குழந்தைகள் வந்து பிறக்க வேண்டும்! சாமிக்குக் கண்ணில்லை ஐயா! கண்ணிருந்தால் இந்த மாதிரி நடக்கப் பார்த்துக் கொண்டிருக்குமா?'' என்றான். மற்றொருவன் ஷண்முக வடிவை முகம் முதல் நகம் வரையில் ஏற இறங்க இரண்டொரு தரம் கூர்ந்து நோக்கிக் கோபப் புன்னகை செய்து பல்லை நறநறவென்று கடித்தவனாய், ''ஆசாமி வாட்டசாட்டமாக எப்படி இருக்கிறாள் பாருங்கள் ஐயா! தூ! வெட்கம் கெட்ட முண்டை! உனக்கு அழகென்ன வேண்டியிருக்கிறது? ஊரார் குடியைக் கெடுக்கிற இப்படிப்பட்ட பேய்களையெல்லாம் உயிரோடு கழுவில் ஏற்றி விட்டால்கூட பாபமில்லை ஐயா!'' என்றான். இன்னொருவன் அவளிடம் இரக்கம் கொண்டவன் போல நடந்து, ''சேச்சே! அப்படி இருக்காதப்பா! இந்தப் பெண்பிள்ளையைப் பார்த்தால், நல்ல ஒழுங்கான நடத்தை யுள்ளவள்போல இருக்கிறதே!'' என்றான்.

இவ்வாறு ஜனங்கள் எல்லோரும் தத்தம் வாயில் வந்த விதம் அபிப்பிராயம் கொடுக்க மூலைக்கொன்றாக வந்து தன்மீது பாய்ந்த அவர்களது கொடிய சொல்லம்புகள் சுருக்கென்று நமது யௌவனப் பெண்மணியின் செவியில் பாய்ந்து அவளது உயிரைப் பருகத் தொடங்கின. அவளது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது. அவள் மிதமிஞ்சிய வெட்கமும், துக்கமும், அவமானமும் கோபமும் அடைந்தவளாய்க் கீழே குனிந்த சிரத்தினளாய் நின்ற படி போலீசாரை விளித்து, ''ஐயா! ஆத்திரப் படாதீர்கள்! நீங்கள் யாரைத் துரத்திக்கொண்டு வந்தீர்களோ அவள் கொஞ்ச நேரத்துக்கு முன் இந்தச் சந்தின்

வழியாக ஓடினாள். நான் வீதியோடு வந்தேன். அவ்விடத்தில் கூச்சல் உண்டானதைக் கண்டு பயந்து இங்கே வந்து ஒளிந்து கொண்டேன், இந்தக் குழந்தைக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நான் ஒரு பாவத்தையும் அறியேன். என்னை நீங்களெல்லோரும் தூற்றுவது கொஞ்சமும் அடாது'' என்றாள்.

அதைக்கேட்ட ஜனங்கள் ஒருவாறு திகைப்படைந்து அதற்கு மேல் அவளைத் தூற்றாமல் மௌனமாக நின்றனர். போலீசார் அவள் முற்றிலும் பொய் பேசுகிறாள் என்று நினைத்து அவள் மீது மிகுந்த கோபம் கொண்டனர். போலீசார் தலைவன் ஆத்திரமாகவும் புரளியாகவும் அவளை நோக்கி மறுமொழி கூறத் தொடங்கி, ''ஓகோ! அப்படியா சங்கதி! கையும் களவுமாக நாங்கள் உன்னைப் பிடித்திருக்கையிலேயே, நீ எங்களுடைய கண்ணிலெல்லாம் மண்ணைத் தூவப் பார்க்கிறாயே! உன்னுடைய சாமர்த்தியமும் நெஞ்சழுத்தமும் யாருக்கு வரும்!அதிருக்கட்டும். நீ இவ்வளவு தூரம் பேசுகிறாயே! உன்னுடைய வீடு எங்கே இருக்கிறது? இந்த அர்த்தராத்திரி வேளையில் வீட்டைவிட்டு நீ தனியாக இங்கே வரவேண்டிய காரணம் என்ன? சொல் பார்க்கலாம்'' என்றான்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு, ''ஐயா! எனக்கு இந்த ஊரில் வீடுமில்லை வாசலுமில்லை. நான் இருப்பது திருவாரூர். என்னுடைய அக்காள், இந்த ஊரிலுள்ள எங்கள் மனுஷ்யாள் வீட்டுக்கு வந்து ஏழெட்டு மாச காலம் ஆகிறது. அவளைப் பார்க்க வேணுமென்று நான் இந்த ஊருக்கு வந்தேன். வந்த இடத்தில் சில மோசக்காரர்கள் என்னைக்கொண்டுபோய் வைத்துக் கொண்டு துராகிருதம் செய்ய எத்தனித்தார்கள். தெய்வச் செயலாக நான் அவ்விடத்திலிருந்து தப்பித்து வீதி வழியாக ஓடி வந்து கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் கூச்சலிட்டதைக் கேட்டுப் பயந்து இங்கே வந்து ஒளிந்து கொண்டேன். நீங்கள் துரத்திக்கொண்டு வந்த பெண்பிள்ளை

கொஞ்ச நேரத்துக்கு முன் இந்தச் சந்தின் வழியாக ஓடினதை நான் பார்த்தேன். அவளை விட்டு நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டீர்கள். நான் ஒரு பாவத்தையும் அறியேன்'' என்று நிரம்பவும் தழுதழுத்த இளக்கமான குரலில் மிகமிகப் பரிதாபகரமாகக் கூறினாள். அவளது கண்களில் கண்ணீர் பொங்கித் தாரைதாரையாகக் கன்னங்களில் வழிந்தது. அவளது உடம்பு வெடவெடவென்று ஆடியது. அவள் சிறிதும் கல்மஷ மற்ற மகாபரிசுத்தமான உத்தமியென்று அவளது முகத் தோற்றத்திலும் அவள் சொன்ன வார்த்தைகளிலும் பரிஷ்காரமாக விளங்கியது. அதைக் கேட்ட ஜனங்களில் பெரும்பாலோர் அந்தவரலாறு உண்மையானதாய் இருக்கலாம் என்ற நம்பிக்கையும், அவளது விஷயத்தில் ஒருவித இரக்கமும் கொண்டனர். ஆனால் போலீசார் அவள் யாரோ வேசை யென்றும், அவ்வளவு பெருத்த கொலைக் குற்றத்தைச் செய்யக் கூடியவள் அதை மறைப்பதற்கு ஏதோ ஒரு சமாதானம் சொல்லத் தெரிந்து கொள்ளாமலா இருப்பாளென்றும் நினைத்து அவளது சொல்லை நம்பாமல் அவளை வருத்தத் தொடங்கினர். போலீசார் தலைவன் அவளை நோக்கி, ''உன்னைப் போல நாங்கள் இதுவரையில் எத்தனையோ குற்றவாளிகளைக் கையும் மெய்யுமாகப் பிடித்திருக்கிறோம். அவர்கள் எல்லோரும் இப்படித்தான் சொல்லிக் கொண்டார்களன்றி குற்றத்தை ஒப்புக் கொண்டதே கிடையாது. அதுபோல நீயும் செய்கிறாய். உன் பேச்சின் மேல்உன்னை நாங்கள் விட்டுவிட முடியாது. நீ இந்தக் குழந்தை மூட்டையைப் போட்டுவிட்டு நேராக ஓடிவந்து இங்கே மறைந்து கொண்டதை நாங்கள் கண்ணாரக் கண்டு உன்னை இத்தனை ஜனங்களுக்கு எதிரில் இந்த மூலையி லிருந்து பிடித்திருக்கிறோம். நாங்கள் நியாயாதிபதியிடம் உன்னைக் கொண்டுபோய் ஆஜர்செய்து, நாங்கள் கண்டதைச் சொல்லுகிறோம். நீ உன்னுடைய நியாயத்தை அவ்விடத்தில் எடுத்துச்சொல்லி, குற்றமற்றவள் என்று மெய்ப்பித்துத் தப்பித்துக் கொண்டு போவதைப்பற்றி எங்களுக்கு யாதொரு

ஆட்சேபனையும் இல்லை. அதுவரையில் நாங்கள் சட்டப்படி நடத்த வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் செய்து தான் தீர வேண்டும்; இப்போது நீ எங்களோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். அவ்விடத்தில் மருத்துவச்சிகளைக் கொண்டு உன் உடம்பைப் பரீட்சிக்கச் செய்ய வேண்டும். அப்போது உண்மை எளிதில் விளங்கிவிடும். அதுவுமன்றி, உன்னுடைய அக்காள் யார் வீட்டிலேயோ இருப்பதாக நீ சொல்லுகிறாயல்லவா; அதையும் நாங்கள் ஒரு நிமிஷத்தில் விசாரித்து உன்னுடைய உண்மையான வரலாற்றை வெகு சுலபத்தில் கண்டுபிடித்து விடுகிறோம். நீ இனி அநாவசியமாக எங்களோடு பேசிக் காலதாமதம் செய்வதில் உபயோகமே இல்லை. வா, இப்படி; நட எங்களோடு'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூற, அதன் கருத்திற்கிணங்க, சில ஜவான்கள் அவளண்டை நெருங்கி, ''போ, போ; ஏன் நிற்கிறாய்? நாங்கள் உன்னைத் தொடும்படியாக வைத்துக் கொள்ளாதே'' என்று நயமாகவும் உறுதியாகவும் கூறி அவளை மூன்று பக்கங்களில் வளைத்துக்கொண்டு கிட்ட நெருங்கி வர, அந்த மடமங்கை என்ன செய்வாள் பாவம்; தனது வாயைத் திறந்து பேசவும் லஜ்ஜையடைந்தவளாய்க் கீழே குனிந்தபடி நடந்து திண்ணையைவிட்டுக் கீழே இறங்கி நடக்கலானாள். போலீசார் அவளைச் சூழ்ந்து நடந்தவர்களாய் அவளைப் போலீஸ் ஸ்டேஷன் இருந்த திக்கில் நடத்திச் சென்றனர். அவ்விடத்தில் கூடியிருந்த ஜனங்கள் அந்த வழக்கின் உண்மை இன்னதுதான் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தனர். பலர் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்; சிலர் போலீசாரைத் தொடர்ந்து ஸ்டேஷன் வரையில் போய், அவர்களால் துரத்தப்பட்டுத் திரும்பினர்.

போலீசார் உத்தமோத்தமியான நமது ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு குழந்தையின் பிரேத மூட்டையோடு போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தனர். நிரபராதியான ஷண்முகவடிவு வெட்கமும் துக்கமும் கரைகடந்து ததும்ப

முற்றிலும் குழம்பிய மனத்தினளாய் உயிரற்ற ஓவியம்போல முகக்களை இழந்து தளர்நடை நடந்து ஸ்டேஷனுக்குள் நுழைந்தாள். உடனே, போலீசார் அவளை அவ்விடத்திலிருந்த சிறைச்சாலை அறைக்குள் விடுத்துப் பூட்டிவிட்டு அந்தச் செய்தியைப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குச் சொல்லி அனுப்பியதன்றி, இரண்டு மருத்துவச்சிகளை அழைத்து வருவதற்கும் ஒரு ஜெவானை அனுப்பினார்கள்.

அதன்பிறகு கால்நாழிகை சாவகாசத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, ஜவான்களின் தலைவன் சொன்ன வரலாறுகளை எல்லாம் பொறுமையாகக் கேட்டதன்றி, அங்கிருந்த குழந்தையின் சவத்தையும் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்தார். அவர் அதன்பிறகு சிறைச் சாலைக்குள் நுழைந்து அவ்விடத்திலிருந்த ஷண்முகவடிவை உற்று நோக்கினார். யௌவனமும் அழகும் வடிவெடுத்ததோ என்று சொல்லும்படி உத்தம லக்ஷணங்கள் முகத்திலேயே ஜ்வலிக்க, நாணமும் கிலேசமும் நிறைந்தவளாய்த் துயரக் கடலில் ஆழ்ந்துகிடந்த அருங்குணமணியான ஷண்முக வடிவைக் கண்டவுடனே இன்ஸ்பெக்டரது மனம் அவளது விஷயத்தில் பெரிதும் இரக்கமும் அனுதாபமும் கொண்டதன்றி, அப்படிப்பட்ட கொடிய குற்றத்தை அவள் செய்திருப்பாளா என்ற ஒருவித ஐயமும் அவரது மனதில் தோன்றியது. அவளது முகத்தெளிவையும் உடம்பின் சுறுசுறுப்பையும் அவர் நன்றாக உற்று நோக்கினார். சிறிதுநேரத்திற்கு முன் பிரசவித்த ஸ்திரீயின் உடம்பில் காணப்படும் குறிகள் எதுவும் அவளிடம் காணப்பட வில்லை. முகத்தில் வெளிறு இல்லை. உடம்பில் சோர்வும் களைப்பும் தோன்றவில்லை. அவர் உடனே அவளிடம் வார்த்தையாடத் தொடங்கி, அவளது வாக்குமூலத்தைக் கேட்டறிந்துகொண்டு, அவளை அவ்விடத்தில் விட்டு அப்பால் சென்றார். அப்போது அவ்விடத்திற்கு இரண்டு மருத்துவச்சிகள் வந்து சேர்ந்தனர். அவர்கள் இருவரையும் போலீசார், சிறைச்

சாலைக்குள் அனுப்பி, ஷண்முகவடிவை நன்றாகப் பரீட்சிக்கச் செய்ய அவர்கள் இருவரும் அரைநாழிகை சாவகாசம் ஷண்முக வடிவோடு தனியாக இருந்தபின் வெளியில் வந்து அந்தப் பெண்ணினிடத்தில் பிரசவ குறிகள் எதுவும் காணப்படவில்லை என்றும் அவள் கன்னி கழியாத பரிசுத்தமான பெண்ணென்றும் அபிப்பிராயம் கொடுத்தனர்.

அதைக்கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் உடனே ஷண்முக வடிவைச் சிறை நீக்கி வெளியில் அழைத்து வரும்படி உத்தரவு பிறப்பித்தார். உடனே ஜவான் ஒருவன் ஓடிப்போய் மரியாதை யாக ஷண்முகவடிவை வெளியில் அழைத்துவர, அவள் இன்ஸ்பெக்டருக்கு முன்னால் வந்து சிறிது தூரத்திற்கு அப்பால் நாணிக் குனிந்து நின்றாள். அவளைக் கண்ட இன்ஸ்பெக்டர் நிரம்பவும் அன்பாகவும் உண்மையான விசனத்தோடும் பேசத் தொடங்கி, "அம்மா! இந்தக் குழந்தைக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்பது சந்தேகமறத் தெரிகிறது. நீ குற்றமற்றவள் என்றே நான் நினைக்கிறேன். எங்களுடைய ஜவான்கள் அவளைத் துரத்திக்கொண்டு ஓடி வந்த சமயத்தில் நீ இடைநடுவில் அகப்பட்டுக் கொண்டாய். ஆதலால், நீ ஒளிந்து கொண்டிருந்ததைக் கொண்டு நீ தான் குற்றவாளி என்று சந்தேகித்து உன்னை அழைத்து வந்து உனக்கு அநாவசியமான துன்பம் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் மேலும் நாம் கோபித்துக்கொள்ள நியாயமில்லை. ஆனாலும், உன் மேல் ஏற்பட்ட இந்த அபாண்டப் பழியைப்பற்றி நான் நிரம்பவும் விசனமடைகிறேன். உன்னை இனி நாங்கள் இவ்விடத்தில் வைத்திருக்க வேண்டிய பிரமேயமே இல்லை. இனி உன்னிஷ்டப்படி நீ எங்கே போகப் பிரியப்படுகிறாயோ அங்கே போகலாம். ஆனால் ஒரு விஷயம். நீயோ அறியாத பெண். இப்போதோ நடு இரவு. நீ இவ்விடத்தைவிட்டுத் தனியாக எங்கேயும் போவது உசிதமாகத் தோன்றவில்லை. இந்த இரவு முழுதும் நீ இவ்விடத்திலேயே பத்திரமாக இரு; உனக்குத்

தனியான ஓர் இடம் கொடுக்கிறோம். அவ்விடத்தில் சுகமாகப் படுத்துத் தூங்கு. பொழுது விடிந்தவுடன் நீ போக வேண்டிய இடத்துக்குப் போகலாம். அல்லது உன்னை யாரோ சிலர் எங்கேயோ ஒரு பெருத்த மாளிகையில் கொண்டு போய் வைத்துக்கொண்டு உன்னைக் கெடுக்க எத்தனித்ததாகச் சொல்லுகிறாயே. அந்த இடத்தை எங்களுக்கு நீ காட்டினால், நாங்கள் அந்த மனிதர்களைப் பிடித்து விசாரணை செய்து தண்டனைக்குக் கொண்டுவருகிறோம்'' என்றார்.

அவர் கூறின அன்பான வார்த்தைகளைக் கேட்ட ஷண்முக வடிவு அளவற்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தாள். அந்த வழக்கிலிருந்து தான் தப்புவது கடினமென்றும், போலீசார் தன்னை இலேசில் விடமாட்டார்களென்றும் தான் எண்ணி இருந்ததற்கு மாறாக அவர்கள் தன்னை அவ்வளவு சுலபத்தில் விட்டு விட்டதையும், அந்த இன்ஸ்பெக்டர் தயாளகுணம் பொருந்தியவராக இருப்பதையும் காண அவளது மனம் அளவற்ற ஆச்சரியத்தை அடைந்தது. அவள் தனது காதுகளையே நம்பாமல் சிறிதுநேரம் நின்றாள். அவளது மனம் ஈசுவரனது திருவருளையே சிந்தித்து நின்றது. அவள் தனது இரு கரங்களையும் எடுத்துக் குவித்து இன்ஸ்பெக்டரை நோக்கி வணங்கி, ''ஐயா! தங்களைப் பார்க்கும்போது இந்தத் தெய்வத்தையே பார்ப்பதுபோல இருக்கிறது. என் மனம் நிரம்பவும் தைரியமும் நம்பிக்கையும் சந்தோஷமும் அடைகிறது. அநாதையான என் விஷயத்தில் நீங்கள் அனுதாப மும் ஜீவகாருண்யமும் காட்டும் விஷயத்தில் உங்களுக்கு ஈசுவர கடாக்ஷம் பூர்த்தியாக ஏற்படும் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். என்னை வஞ்சித்தவர்கள் இன்னார் என்பதைக் கண்டு அவர்களைத் தண்டனைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நினைவு எனக்குக் கொஞ்சமும் இல்லவே இல்லை. துஷ்டர்களைத் தண்டிக்க ஈசுவரன் இருக்கிறான். அந்தக் கவலை நமக்கு எதற்காக? என் தமக்கை என்னை விட்டுப்

பிரிந்து வந்து நெடுங்காலமாகிறது. என்னை அழைத்து வந்த மனுஷிக்கும் என்னைக் கடைசியாக பலவந்தப்படுத்திய மனிதர்களுக்கும் எங்களுடைய குடும்ப வரலாறுகளும் என் அக்காளைப் பற்றிய விவரங்களும் நன்றாகத் தெரிந்திருக் கின்றன. ஆனால் என் அக்காள் எங்கே இருக்கிறாள் என்பதை நான் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. அவர்கள் அவளை என்ன செய்திருக்கிறார்களோ தெரியவில்லை. சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டில் தான் இருப்பதாக அவள் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். என்னை இப்போதும் நீங்கள் அந்த இலக்கமுள்ள வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டால், என் அக்காளைப் பற்றிய உண்மையான வரலாற்றை நான் அறிந்து கொள்ளுகிறேன். எனக்குத் துணையாக யாரையாவது ஒருவரை நீங்கள் என்னோடு அனுப்பினால், அது நிரம்பவும் உதவியாக இருக்கும்'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''சரி, அப்படியானால் உன்னிஷ்டப்படியே செய். உனக்குத் துணையாக நானே உன்னோடுகூட வருகிறேன். நாம் இருவரும் நேராக சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்க முள்ள வீட்டுக்குப் போய் அந்த வீட்டிலுள்ள மனிதரைக் கூப்பிட்டு உன் அக்காளைப் பற்றி விசாரிப்போம்; வா; போகலாம்'' என்றார்.

அவரிடத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்த ஷண்முகவடிவு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அவரைப் பின்தொடர்ந்து நடக்கலானாள்.

இருவரும் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்டு வீதியோடு வெகுதூரம் சென்றனர். இன்ஸ்பெக்டர் அவளிடம் பற்பல கேள்விகளைக் கேட்டு அவளது குடும்ப வரலாறு களையும், அவளது அக்காளான கமலம் சோமசுந்தரம் பிள்ளையைக் காண்பதற்குத் தஞ்சைக்கு வந்ததையும், பிறகு அவளிடமிருந்து வந்த கடிதங்களின் வரலாறுகளையும், பண்டாரத்தினால் தனக்கு நேர்ந்த அவகேட்டையும், அதனால்

தனக்கும் கலியாணசுந்தரத்திற்கும் நேர்ந்த நட்பையும், கலியாண ஏற்பாட்டையும் பிறகு கலியாணசுந்தரம் கோலாப் பூருக்குப் போக நேர்ந்ததையும், தானும் அவ்விடத்திற்குப் போனதையும், அங்கே நிகழ்ந்த விஷயங்களையும், பிறகு தன்னை அம்மணி பாயி தஞ்சைக்கு அழைத்துவந்த விவரத்தையும், அவள் தன்னை மருங்காபுரி ஜெமீந்தார் வீட்டில் கொண்டுபோய் விட்டதையும், அவர்கள் செய்த வஞ்சகத்தையும், பிறகு கட்டாரித்தேவன் தெய்வச் செயலாக வந்ததையும், அந்தச் சமயத்தில் தான் தப்பி வந்ததையும், அப்படி வந்தபோது போலீசாரால் பிடிபட்டதையும் ஷண்முக வடிவு இன்ஸ்பெக்டரிடம் சுருக்கமாக எடுத்துக் கூற, அதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் அளவற்ற பிரமிப்பும் வியப்பும் அடைந்தவராய், அந்த மடமங்கையினது விஷயத்தில் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த அனுதாபமும் இரக்கமும் பட்சமும் கொண்டவ ரானார். ஆனால், அவள் அம்மணிபாயி, மருங்காபுரி ஜெமீந்தார், கட்டாரித்தேவன் முதலிய பெயர்களை அறியாதவள் ஆதலால், அவர்களை யாரோ மனிதர்களென்று பொதுப்படையாகக் கூறினாள். ஆகவே, இன்ஸ்பெக்டர் அவ்வளவுதூரம் வஞ்சக மான காரியங்களைச் செய்த மனிதர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் கமலத்தின் கதி எப்படி ஆயிற்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் உறுதி செய்துகொண்டவராய், அவளை அழைத்துக் கொண்டு பற்பல வீதிகளையும் தெருக்களையும் கடந்து அரை நாழிகை சாவகாசத்தில் சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டின் வாசலை அடைந்தார்.

அப்படி அவர்கள் நடந்த காலத்தில் ஷண்முகவடிவு, தான் அதிசீக்கிரத்தில் தனது அக்காளைக் காணலாம் என்ற எண்ணத்தினாலும் அவாவினாலும் வருத்தப்பட்டவளாய் நடந்தாள். தன்னை விசை வைத்த நாற்காலியில் மாட்டிவிட்ட மனிதரது மாளிகைதான் சக்கா நாயக்கர் வீதியிலுள்ள 13வது

இலக்கமுள்ள வீடென்று தன்னைக் கோலாப்பூரிலிருந்து அழைத்துவந்த ஸ்திரீ சொன்னாள். ஆதலால், தான் மறுபடியும் அவ்விடத்துக்கே போக நேருமோ வென்ற சந்தேகமும் அவளது மனதில் தோன்றியது. தன்னை நாற்காலியில் மாட்டிவிட்டுத் தன்னிடம் துராகிருதமான காரியம் செய்ய முயற்சித்த மனிதர்தான் சோமசுந்தரம்பிள்ளையா, அல்லது அவர் வேறே அன்னியரா என்ற சந்தேகமும் அவளது மனதை வதைத்தது. தான் அவர்களோடு பழகிய காலத்தில் கண்ணம்மாள் என்ற பெண் சோமசுந்தரம்பிள்ளை என்பவரின் தங்கையென்று அவர்கள் குறித்ததும், அதன்பிறகு திருடனிடத்தில் அதே கிழவர், அந்தப் பெண் தனது தம்பியின் மகளான லீலாவதியென்று சொன்னதும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டன. ஆதலால், அவர் உண்மையில் சோமசுந்தரம் பிள்ளையாக இருக்க மாட்டார் என்ற எண்ணமே உண்டாயிற்று. அப்படியானால், தன்னைக் கோலாப்பூரிலிருந்து அழைத்து வந்த ஸ்திரீயும் மோசக்காரியாக இருக்க வேண்டும். அவள் கோலாப்பூரில் செய்த காரிய மெல்லாம் இதுபோலவே வஞ்சகச் செயல்களாக இருக்க வேண்டுமென்றும், தனது ஆருயிர்க் காதலனான கலியாண சுந்தரம் ஏதோ மோசத்திற்குள்ளாகி இருக்க வேண்டும் என்றும், அவள் பற்பலவிதமாக யூகித்துக் கொண்டாள். ஆனால், அவளுக்கு முக்கியமாக ஒரு விஷயம் மாத்திரம் மிகுந்த வியப்பையும் சந்தேகத்தையும் உண்டாக்கியது. அந்த வஞ்சக மனிதர்களெல்லோரும் கமலத்தின் வரலாறுகளையும் தனது குடும்பத்தின் வரலாறுகளையும் எப்படி அறிந்து கொண்டிருப் பார்கள் என்ற விஷயமே அவளுக்குச் சிறிதும் விளங்காமல் இருந்தது. எப்படியும் அந்த இன்ஸ்பெக்டர் நன்றாக விசாரித்துத் தனது அக்காளைப் பற்றிய மர்மங்களையெல்லாம் வெகு சீக்கிரத்தில் அறிந்துவிடுவார் என்ற நம்பிக்கையும் தைரியமும் அவளது மனதில் வேரூன்றி நின்றன. ஆதலால், அத்தகைய மனநிலைமையோடு அவள் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து, மேலே குறிக்கப்பட்டபடி சக்கா நாயக்கர் தெரு 13வது

இலக்கமுள்ள வீட்டை அடைந்தாள்; அடைந்தவள், "இதுதானா சக்கா நாயக்கர் தெரு?" என்றாள்.

இன்ஸ்பெக்டர், "ஆம் இதுதான்" என்று கூறியவண்ணம் பக்கத்திலிருந்த வீட்டுக் கதவண்டை போய் நின்று, தமது கையிலிருந்த லாந்தரைக் கதவிலக்கத்தின் பக்கம் திருப்பி, அதைப் பார்த்தார். 13 என்ற இலக்கம் காணப்பட்டது. "சரி; இதுதான் அந்த வீடு" என்றார் இன்ஸ்பெக்டர்.

அப்போது ஷண்முகவடிவினது நெஞ்சு தடதடவென்று அடித்துக்கொண்டது. மனம் பலவித எண்ணங்களாலும் சந்தேகங்களாலும் குழம்பித் தவித்தது. அவள் உடனே தனது பார்வையை நாற்புறங்களிலும் திருப்பி, அந்த வீதியின் அமைப்பையும், அந்த வீட்டின் தோற்றத்தையும் கூர்ந்து கவனித்தவளாய், "என்னை நாற்காலியில் மாட்டிய மனிதருடைய மாளிகை இதுவல்ல. அந்த மாளிகை இருந்த வீதியும் பெரிய ராஜவீதியாக இருந்தது. என்னை உங்களுடைய ஜெவான்கள் பிடித்தது கிழக்கு ராஜவீதி என்றல்லவா அவர்கள் சொல்லிக் கொண்டார்கள். அதிலிருந்து பார்த்தால், அந்த மாளிகை இருந்த வீதி வடக்கு ராஜவீதியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் இந்த வீதியையும், இந்த வீட்டையும் நான் இதற்கு முன் பார்த்திருப்பதாகவே எனக்கு நினைவுண்டாகிறது. ஆம், ஆம். என்னைக் கோலாப்பூரிலிருந்து அழைத்துவந்த ஸ்திரீ இந்த வீட்டில்தான் வந்திறங்கினாள். இதுதான் அவளுடைய வீடென்று அவள் சொன்னாள்" என்று மிகுந்த ஆச்சரியத்தோடு கூறினாள்.

அதைக் கேட்ட இன்ஸ்பெக்டரும் ஆச்சரியமடைந்தவராய், "ஓகோ! அப்படியா! கோலாப்பூரிலிருந்து உன்னை இந்த இடத்திற்கு அழைத்து வந்தவள் உன்னை சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டிலுள்ள சோமசுந்தரம் பிள்ளையிடம் அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லியா வடக்கு ராஜவீதியிலுள்ள பெரிய மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போனாள்?

இந்த வீட்டை நீ நன்றாகப் பார்த்துச் சொல். உன்னை நாற்காலியில் அடைத்தவர்களுடைய வீடு இது அல்லவா?'' என்றார்.

ஷண்முகவடிவு, ''ஆம் அப்படிச் சொல்லித்தான் என்னை அழைத்துக்கொண்டு போனாள். நான் முதலில் வந்து இறங்கிய வீடு இதுதான். நிச்சயம்; சந்தேகமே இல்லை. அந்தப் பெண்பிள்ளை என்னைக் கொண்டுபோய் விட்ட மாளிகை இதுவல்ல'' என்று உறுதியாகக் கூறினாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் பலவிதமான யூகங்களும் யோசனைகளும் செய்தவராய், ''சரி; இருக்கட்டும். நாம் ஒரு காரியம் செய்வோம். உன்னை அந்தப் பெண்பிள்ளை யாருடைய மாளிகையில் கொண்டுபோய்விட்டார்கள் என்பதை நான் முதலில் தெரிந்துகொண்டு அதன்பிறகு இந்த வீட்டாரிடம் பேசுவதே நல்லதென நினைக்கிறேன். வடக்கு ராஜவீதியில் அல்லவா அந்த மாளிகை இருந்ததாக நீ சொன்னாய். அந்த வீதியின் வழியாக நான் உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன். நீ இரண்டு பக்கங்களிலும் கவனமாகப் பார்த்துக் கொண்டே வந்து அந்த மாளிகையின் அடையாளத்தைக் கண்டுபிடி. அது யாருடைய மாளிகை என்பதை நான் உடனே அறிந்து கொள்கிறேன். பிறகு நாம் இங்கே வந்து இவ்விடத்திலுள்ள மனிதரைக் கண்டு விஷயங்களை விசாரிக்கலாம்'' என்றார்.

ஷண்முகவடிவு அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள, அவர் அவளை அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் பல வீதிகளையும் கடந்து வடக்கு ராஜவீதியை அடைந்து அதன் கிழக்குக் கோடியிலிருந்து மேற்கு முகமாக வரத் தொடங்கினார். அந்த வீதியின் வடக்குச்சாரியிலேதான் அந்த மாளிகை இருந்தது என்பது அந்த மடந்தைக்கு நன்றாக நினைவிருந்தது. ஆகையால், அவள் அந்தச் சாரியிலேயே தனது பார்வையைச் செலுத்தியவளாய் நடந்தாள். அவ்வாறு அவர்கள் சுமார் நூறு வீடுகளைக் கடந்து செல்ல அவ்விடத்தில் மருங்காபுரி ஜெமீந்தாரினது

மாளிகை தென்பட்டது. அதைக் கண்டவுடனே ஷண்முகவடிவு அதை நன்றாக உற்றுநோக்கி, ''இதுதான் அந்த மாளிகை'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் மிகுந்த வியப்பும் ஒருவித மகிழ்ச்சியும் அடைந்தவராய், ''இதுதானா? நன்றாகக் கவனித்துப் பார்த்துச் சொல்'' என்றார்.

ஷண்முகவடிவு மறுபடியும் அதைக் கூர்ந்து ஆராய்ச்சி செய்தபின், ''ஆம், இதுதான். நிச்சயம், சந்தேகமில்லை'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''சரி; அப்படியானால், நாம் இனி சக்கா நாயக்கர் தெருவுக்குப் போகலாம். இந்த மாளிகை இன்னாருடையது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்; அதைப்பற்றி நாம் யாரையும் விசாரிக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த மாளிகை மருங்காபுரி ஜெமீன்தாருக்குச் சொந்தமானது. அவர் நிரம்பவும் வயசான கிழவர். அவருக்குத்தான் இப்படிப்பட்ட துர் விஷயங்களில் அதிகப் பிரியம். இந்த மாளிகையில் ரதிகேளி விலாசமென்று ஒரு சயனக்கிரகம் இருப்பதாகவும், அவ்விடத்தில் விசைவைத்த நாற்காலிகளும், விகாரமான படங்களும், மற்றும் பற்பல ஆட்சேபகரமான பொருட்களும் இருப்பதாக நான் பல தடவைகளில் கேள்வியுற்றிருக்கிறேன். உன் விஷயத்தில் அவர் செய்ததாக நீ சொன்னதெல்லாம் நிஜமாக இருக்கும். அதைப்பற்றி இனி நான் சந்தேகப்படவே மாட்டேன். இந்த மனிதர் எப்படிப்பட்ட அக்கிரமமானாலும் செய்யக்கூடிய கொடிய பாவி! நீ சொன்ன வரலாறுகளையும் பார்த்தால், அவர் இன்னமும் நாற்காலியில் மாட்டிக்கொண்டேதான் இருப்பாரென்று நினைக்கிறேன். அநேகமாய் அந்தத் திருடன் கூட இன்னமும் இந்த மாளிகைக்குள்ளே தான் இருப்பான் என்றும் நினைக்கிறேன். நான் இப்போது உள்ளே போய் இந்தத் துஷ்டக்கிழவனுக்கு உதவிசெய்ய எனக்கு இஷ்டமில்லை. தான் செய்த கொடுமைகளுக்கு அவன் தெய்வ சங்கல்பமாக

தண்டனை அடைகையில் அதை நான் தடுப்பது தவறு. ஆகையால், நான் இப்போது உள்ளே போவது சரியல்ல. வா நாம் மறுபடியும் சக்கா நாயக்கர் தெருவுக்குப் போவோம்'' என்று கூறியவண்ணம் அந்த அழகிய மங்கையை அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுச் செல்லலானார். கால் நாழிகை நேரத்தில் அவர்கள் இருவரும் சக்கா நாயக்கர் தெரு, 13வது இலக்கமுள்ள வீட்டை அடைந்தனர். இன்ஸ்பெக்டர் கதவண்டை போய் நின்று கொண்டு, ''ஐயா! ஐயா!'' என்று கதவை இரண்டு மூன்று தடவை தட்டினார். அப்போது அகால வேளையாதலால், எல்லோரும் கடுந்துயிலில் ஆழ்ந்திருந்தனர். ஆகவே, எவ்வித மறுமொழியும் கிடைக்கவில்லை. இன்ஸ்பெக்டர் முன்னிலும் அதிக பலமாகக் கதவைத்தட்டி ஓங்கிய குரலில் கூப்பிட, ''யார் அது? யார் கதவைத் தட்டுகிறது?'' என்று வினவிக் கொண்டு ஒரு மனிதர் வந்ததாகத் தெரிந்தது. அடுத்த க்ஷணத்தில் கதவு திறக்கப்பட்டது. உட்புறத்தில் கையில் விளக்கோடு ஒரு யௌவன புருஷர் நின்று கொண்டிருந்தார். அவர், அந்த அர்த்த ராத்திரி வேளையில் யார் வந்து கதவை இடிக்கப் போகிறார்கள் என்று சந்தேகித்தவராய் வந்து வெளியில் நின்றவர்களை உற்று நோக்கினார்.

தமது உத்தியோக உடைகளை அணிந்து நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரும், அவருக்குப் பின்னால் நின்ற யௌவன சுந்தரியான ஷண்முகவடிவும் அவரது திருஷ்டியில் படவே, அவர் அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்தவராய்க் கலங்கி நின்றார். அவர் ஒருவித அச்சம் கொண்டார் என்பதை அவரது முகத்தோற்றம் நன்றாகக் காண்பித்தது. ஆனாலும், அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், இன்ஸ்பெக்டரோடு மரியாதையாக சம்பாஷிக்கத் தொடங்கி, ''தாங்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர் போலிருக்கிறது. இங்கே யாரைத் தேடுகிறீர்களோ?'' என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர், ''ஐயா! மன்னிக்க வேண்டும்.

நீங்கள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும் இந்த அசந்தர்ப்ப வேளையில் நான் வந்து எழுப்ப நேர்ந்ததைப்பற்றி நிரம்பவும் விசனிக்கிறேன். இதோ நிற்கும் இந்தப் பெண் தன்னுடைய தமக்கை இந்தத் தெருவில் 13வது இலக்கமுள்ள வீட்டில் இருப்ப தாகவும், தன்னை அழைத்துக்கொண்டு வந்து இங்கே விட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அதற்காக இங்கே வந்தேன். வேறொன்றும் விசேஷமில்லை. இதுதானே 13வது இலக்கமுள்ள வீடு?'' என்றார்.

வீட்டுக்காரர், ''இதுதான் 13வது இலக்கமுள்ள வீடு. இந்தப் பெண்ணின் தமக்கையின் பெயரென்ன? எங்களைத் தவிர இங்கே வேறு யாரும் இல்லையே!'' என்றார்.

இன்:- இந்தப் பெண்ணின் தமக்கையின் பெயர் கமலமாம். இவர்களுடைய ஊர் திருவாரூராம். கமலம் இந்த ஊருக்கு வந்து சுமார் ஏழெட்டுமாத காலமாகிறதாம். இந்த வீட்டில் இருப்பதாக கமலம் இந்தப் பெண்ணுக்குக் கடிதம் எழுதி இருக்கிறாளாம்.

வீட்டுக்காரர்:- (வியப்படைந்தவர் போலத் தோன்றி) கமலம் என்ற பெயருடைய பெண் இங்கே யாருமில்லையே! இது எங்களுடைய சொந்த வீடு. இவ்விடத்தில் வேறே யாரும் குடியிருப்பது கூட இல்லை. அதுவுமன்றி எங்களுக்குத் திருவாரூரில் யாரும் சொந்தக்காரரே இல்லை. இந்தப் பெண்ணும் எனக்குத் தெரியாது. ஒருவேளை இந்தப் பெண் தெருப் பெயரையோ, அல்லது கதவிலக்கத்தையோ ஞாபகப் பிசகாகச் சொல்லியிருக்கலாம் - என்றார்.

உடனே ஷண்முகவடிவு முன்னால் வந்து, ''இல்லை; இல்லை நான் ஞாபகப் பிசகாகச் சொல்லவில்லை. என் அக்காள் எழுதிய கடிதங்களெல்லாம் இதோ என் மடியிலேதான் இருக்கின்றன. இவைகளில் இந்த விலாசம் தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. எங்களுடைய மனிதர் ஒருவரும் இதற்குமுன் வந்து இந்த வீட்டில் என் அக்காளோடு பேசிவிட்டு

வந்திருக்கிறார். இதோ இந்தக் கடிதங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் விலாசத்தைப் பாருங்கள்'' என்று கூறியவண்ணம் தனது மடியிலிருந்த சில கடிதங்களை எடுத்து ஒன்றைப் பிரித்து அதற்குள் எழுதப்பட்டிருந்த விலாசத்தைக் காட்ட இன்ஸ்பெக்டர் அதை வாங்கி, கதவைத் திறந்த மனிதரிடம் காட்டினார். அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு நிரம்பவும் குழம்பிய மனதும் மாறுபட்ட முகமும் உடையவராய் இன்ஸ்பெக்டரை நோக்கி, ''ஆம். கடிதத்தில் இந்த விலாசம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அந்தப் பெயருடைய பெண் இங்கே வந்ததுமில்லை; இப்போதும் அவள் இங்கே இல்லை. நீங்கள் வேண்டுமானால் உள்ளே வந்து சோதனைபோட்டுப் பார்க்கலாம்'' என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர், ''இந்த வீட்டில் சோமசுந்தரம் பிள்ளை என்று யாராவது இருக்கிறார்களா?'' என்றார்.

வீட்டுக்காரர், ''யார்? யார்? சோமசுந்தரம்பிள்ளையா! அந்தப் பெயருடைய யாரும் இங்கே இல்லையே. இந்த வீடு தலைமுறை தலைமுறையாக எங்களுக்குச் சொந்தமானது. நாங்கள் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவர்கள். பிள்ளை வகுப்பைச் சேர்ந்த மனிதர்கள் எப்போதும் இந்த வீட்டில் இருந்ததே இல்லை'' என்றார்.

**இன்:-** உங்களுடைய பெயர் என்ன?

**வீட்டுக்காரர்:-** என் பெயர் சாமளராவ்.

**இன்:-** ஓகோ! அப்படியா! சரிதான். நீங்களும் இன்னும் யார் யாரும் இந்த வீட்டில் இருப்பது?

**வீட்டுக்காரர்:-** நானும் என்னுடைய அத்தையும்தான் இந்த வீட்டிலிருக்கிறோம். சுமார் ஐந்தாறு வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் இருக்கிறார்கள். அவ்வளவுதான் வேறே யாருமில்லை.

*இன்:-* ஒருவேளை உங்கள் வேலைக்காரிகளுள் யாருக்காவது இந்தக் கமலம் தெரிந்தவளாக இருக்கலாமோ?

*வீட்டுக்காரர்:-* அப்படி இருக்காது. ஏனென்றால், எங்களுடைய வேலைக்காரிகள் சாப்பாடு படுக்கை எல்லாவற்றையும் இவ்விடத்திலேயே வைத்துக்கொண்டு எப்போதும் இங்கேயே இருப்பவர்கள். ஆகையால், அவர்கள் வேறு எவரிடத்திலும் சிநேகம் வைத்துக்கொள்ள சந்தர்ப்பமே கிடைக்காது.

*இன்:-* உங்களுடைய அத்தையின் பெயர் என்னவென்பதைத் தெரிவிக்கலாமோ?

*வீட்டுக்காரர்:-* அம்மணிபாயி.

*இன்:-* ஒருவேளை அந்த அம்மாளுக்கு இந்தத் தகவல் ஏதாவது தெரிந்திருக்கலாம். தயை செய்து அவர்களைக் கொஞ்சம் இப்படிக் கூப்பிடுகிறீர்களா?

*சாமளராவ்:-* நாங்கள் இரண்டு பேரும் எப்போதும் இந்த வீட்டில் இருக்கிறவர்கள். ஆகையால் எனக்குத் தெரியாத புதிய விஷயம் அந்த அம்மாளுக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது? அநேகமாய் அவர்களுக்கும் இந்த விஷயத்தில் ஒரு சங்கதியும் தெரிந்திருக்காது என்றே நினைக்கிறேன். இருந்தாலும், அவசியம் அவர்களிடம் தாங்கள் இந்த விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், நான் அவர்களை அழைக்கிறேன்.

*இன்:-*(கிலேசத்தோடு) என்னவோ பாவம்! அறியாதவளான இந்தப் பெண் திக்குத்திசை தெரியாமல் தவிக்கிறது. அவர்களிடத்திலும் கேட்டுத்தான் பார்ப்போமே. ஒருவேளை தெய்வச் செயலாக அவர்களுக்கு இந்த விஷயத்தில் ஏதாவது தகவல் தெரியக்கூடாதா. எல்லாவற்றிற்கும் அவர்களைக் கூப்பிடுங்களேன். கேட்டுப் பார்க்கலாம்-'' என்றார்.

உடனே சாமளராவ் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு விளக்கைச்சுவரிலிருந்த ஆணியில் மாட்டிவிட்டு உள்ளே போக அதன்பிறகு அரைக்கால் நாழிகை சாவகாசம் சென்றது. அம்மணிபாயி, ''யார் அது என்னைக் கூப்பிடுகிறது?'' என்று மிருதுவாக கேட்டுக்கொண்டே கதவண்டை வந்து நின்றாள்.

அப்படி வந்த நின்றவளைக் கண்ட ஷண்முகவடிவு உடனே திடுக்கிட்டுப் பிரமித்து, ''ஐயா! இந்த அம்மாள் தான் என்னை கோலாப்பூரிலிருந்து அழைத்துவந்தது. நான் முதலில் இவர்கள் வீட்டிலேதான் வந்திறங்கினேன். சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமிட்ட வீட்டிலுள்ள சோமசுந்தரம் பிள்ளையிடம் என்னை அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லி இந்த அம்மாள் என்னை வண்டியில் வைத்து அழைத்துக்கொண்டு வடக்கு ராஜவீதியில் நான் காட்டிய மாளிகைக்குப் போய், அங்கேயிருந்த ஒரு கிழவரிடம் விட்டு அவர்தான் சோமசுந்தரம் பிள்ளையென்று சொன்னார்கள்'' என்று ஆவேசத்தோடு கூறினாள்.

இன்ஸ்பெக்டர் உடனே அம்மணிபாயின் முகத்தை உற்று பார்த்தார். அம்மணிபாயி ஒன்றையும் அறியாமல் ஆச்சரிய மடைந்தவள் போலவும், தனது பொறுமையை இழக்காமல் நிதானமாகவும் பேசத் தொடங்கி, ''இந்தப் பெண் யார்? இவளை நான் இதற்குமுன் பார்த்ததாகவே நினைப்பில்லையே! கோலாப்பூரிலிருந்து நானாவது இந்தப் பெண்ணை அழைத்து வருகிறதாவது? வடக்கு ராஜவீதியிலுள்ள ஒருவருடைய மாளிகையில் கொண்டுபோய் விடுகிறதாவது? இந்தப் பெண் சொல்வது எதுவும் எனக்கு நன்றாக விளங்க வில்லையே. இந்தப் பெண் என்னை வேறே யாரென்றோ தவறாக நினைத்துக் கொண்டு பேசுகிறாள் போலிருக்கிறது'' என்றாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டரும் ஷண்முகவடிவும் மித மிஞ்சிய வியப்பும் பிரமிப்பும் அடைந்தனர். ஷண்முகவடிவு

வாயைத் திறந்து பேசமாட்டாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

இன்:- அம்மா! கோலாப்பூரில் உங்களுடைய நெருங்கிய உறவினர் யாராவது போலீஸ் கமிஷனராக இருக்கிறாரா?

அம்மணிபாயி:- இப்போது இங்கே வந்துவிட்டுப் போனவர் என்னுடைய தமையனாருடைய பிள்ளை. இவரைத் தவிர, எனக்கு இந்த ஊரிலாவது வேறு எந்த ஊரிலாவது சொந்தக் காரரே இல்லை. கோலாப்பூர் எங்கேயிருக்கிறது! நான் எங்கே இருக்கிறேன்! அவ்வளவு தூரதேசத்தில் எனக்கு உறவினர் இருக்க முகாந்திரமே இல்லையே!

இன்:- (வியப்போடு) அப்படியானால் நீங்கள் அந்த ஊருக்குப் போயிருந்து சில தினங்களுக்கு முன் இந்த ஊருக்குத் திரும்பி வந்தீர்களென்பது நிஜமல்லவா?

அம்மணி:- அந்த ஊரில் எனக்கு என்ன வேலை இருக்கிறது? நானும் என் அண்ணன் மகனும் அரண்மனையில் இளவரசரிடம் வேலை செய்கிறவர்கள். என் அண்ணன் மகன் இளவரசரிடம் அந்தரங்கக் காரியதரிசியாக இருப்பவன். நாங்கள் இருவரும் இந்த அரண்மனையைவிட்டு ஒரு நாழிகை சாவகாசம்கூட வெளியில் வர அனுமதி கிடைக்கிறதில்லையே. அப்படியிருக்க நான் கோலாப்பூருக்கு எப்படிப் போக முடியும்? நாங்கள் இந்த ஊரைவிட்டு எங்கேயும் போனதே இல்லையென்று இளவரசருடைய கைப்பட ஒரு கடிதம் வேண்டுமானால் வாங்கிக் கொடுக்கிறோம்- என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் ஒருவாறு பயந்து போனார். அவர்கள் இளவரசரிடம் உத்தியோகம் வகிக்கும் கண்ணியமான மனிதர்கள் என்ற எண்ணமும், ஒருவேளை ஷண்முகவடிவு ஆள் மாறாட்டாகப் பேசுகிறாளோ என்ற சந்தேகமும் அவரது மனதில் தோன்றின. ஆனால், ஷண்முகவடிவு காட்டிய

கடிதங்களில் குறிக்கப்பட்டிருந்த விலாசமும் அந்த வீட்டின் விலாசமும் பொருந்தியிருந்ததைக் கொண்டு ஷண்முகவடிவு நிஜம் பேசுகிறாள் என்பது ஒருவாறு உறுதிப்பட்டது. ஆனாலும், அம்மணிபாயி அவ்வளவு உறுதியாகப் பேசுகையில் தாம் அதை மறுத்துக் கூறத் தம்மிடம் போதுமான வேறு ஆதாரம் எதுவுமில்லை என்பதை உணர்ந்த இன்ஸ்பெக்டர் மறுபடியும் அம்மணிபாயியைப் பார்த்து, "அப்படியானால், இந்தப் பெண் சொல்வதில் ஏதோ தவறு இருக்கிறதென்று எண்ணுகிறீர்கள்? கமலம் என்ற பெண் இந்த வீட்டில் ஒருநாளும் இருந்ததே இல்லையா? அந்தப் பெயருடைய பெண்ணைப்பற்றிய விவரம் எதுவும் உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாதா?" என்றார்.

அம்மணிபாயி, "தெரியவே தெரியாது. கமலம் என்ற பெயருடைய பெண் எங்கள் வீட்டில் ஒருநாளும் இருந்ததே யில்லை. கமலம் என்ற பெண் தான் இருக்கும் உண்மையான இடம் தன்னுடைய மனுஷ்யாளுக்குத் தெரியக் கூடாதென்று ஏதாவது ஒரு பொய்யான விலாசமும் கொடுத்திருக்கலாம். தற்செயலாக அதுவும் எங்கள் வீட்டு விலாசமும் ஒத்துப் போயிருக்கலாம். அப்படியிருக்க வேண்டுமே தவிர, கமலம் என்பவள் யாரும் இங்கே இருந்ததில்லை" என்றாள்.

இன்ஸ்பெக்டர், "ஆம் அப்படியும் இருக்கலாம். ஆனால் அதில் இன்னொரு விஷயம் இருக்கிறதே. இந்தப்பெண் இந்தக் கடிதத்திலுள்ள விலாசத்துக்குப் பல கடிதங்கள் எழுதியிருக் கிறாள். அவைகளுக்கெல்லாம் மறுமொழிக் கடிதங்கள் வந்திருக்கின்றனவே! அது எப்படி நடந்திருக்கும்?" என்றார்.

அம்மணிபாயி, "இவ்வளவு தூரம் யோசனை செய்து தப்பான விலாசம் கொடுத்திருப்பவள், அதற்குத் தகுந்த யோசனை செய்திருக்க மாட்டாளா? தபால் இலாகாவுக்கு எழுதியோ, அல்லது தபால்காரனிடம் ரகசியமான ஏற்பாடு செய்து கொண்டோ இருந்தால் சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமிட்ட வீட்டிலுள்ள கமலத்துக்கு என்று வரும்

கடிதங்களை அவள் இருக்குமிடத்தில் கொடுத்து விடுகிறார்கள். இதுதானா ஒரு சிரமமான காரியம்?'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''அப்படியும் செய்திருக்கலாம். ஆனால் இன்னொரு விஷயமல்லவா: இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப் போகும் ஒரு யௌவன புருஷர் இந்த ஊருக்கு வந்திருந்தாராம். அவர் இந்தக் கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ள விலாசத்துக்கு வந்து அவளைப் பார்த்ததாகக் கடிதம் எழுதி இருக்கிறார். அந்தக் கடிதமும் இதோ இருக்கிறது. அதற்கு எப்படி சமாதானம் சொல்லுகிறது?'' என்றார்.

அம்மணிபாயி, ''அந்த மனிதரும் இப்போது இங்கே வந்திருக்கிறாரா? அவர் இதே வீட்டில் வந்து கமலத்தைப் பார்த்ததாகவா சொல்லுகிறார்? அவர் இருந்தால், என்னிடம் அழைத்துக்கொண்டு வாருங்கள். நான் அவரிடம் கேட்டுப் பார்க்கிறேன். அவர் ஒரு நாளும் என் வீட்டுக்குள் வந்திருக்க மாட்டார் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அப்படி அவர் இந்த விலாசத்தில் கமலத்தைப் பார்த்ததாக எழுதியிருந்தால், அதைப் பற்றி அவரையும் நேரில் வைத்துக் கொண்டு கேட்டாலன்றி உண்மை எப்படி விளங்கும்? யார் யாரோ செய்த காரியங்களுக்கெல்லாம் நான் எப்படி சமாதானம் சொல்லமுடியும்? அந்த மனிதரும் அன்னிய ஊர் மனிதர். திருவாரூரிலிருந்து வரும் வண்டிகள் தங்கும் வண்டிப் பேட்டைக்குப் பக்கத்தில் தபால் கச்சேரி இருக்கிறதல்லவா. அவர் ஊரிலிருந்து வந்து வண்டிப்பேட்டையில் இறங்கிய வுடனே, பக்கத்திலுள்ள தபால் கச்சேரிக்குப் போய் விசாரித்து இந்த விலாசம் எங்கே இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள எண்ணி அங்கே போயிருக்கலாம்; போய் விசாரித்து, இந்தப் பக்கங்களுக்குக் கடிதம் பட்டுவாடா செய்யும் தபால்காரனைக் கண்டு பேசியிருக்கலாம். அவன் இந்த விலாசத்தில் யாரைத் தேடுகிறீர்கள் என்று அவரிடம் கேட்டிருக்கலாம். அவர் கமலம் என்ற பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி

யிருக்கலாம். உடனே அவன் அவள் இருக்கும் உண்மையான இடத்தைச் சொல்லி இருக்கலாம்; அல்லது வேறு எப்படி யாவது இருக்கலாம். எல்லாவற்றிற்கும் அவரையும் வைத்துக் கொண்டுதான் விசாரிக்க வேண்டும்'' என்றாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''சரி; அப்படியானால் நாங்கள் போய்த் தபால்காரனிடம் விசாரித்துப் பார்த்தால், உண்மை உடனே விளங்கிப் போகும் என்பது உங்களுடைய கருத்தல்லவா? சரி; அப்படியே செய்கிறோம். இந்த விலாசம் போட்டு கமலம் என்று வந்த கடிதங்களை அவன் இங்கே கொடுத்தானா, அல்லது வேறே எங்கே கொடுத்தான் என்று அவனிடம் கேட்டால், அவன் உடனே உண்மையைச் சொல்லிவிடுவான். அதற்குமேல் மற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறேன்'' என்றார்.

அம்மணிபாயி நிதானமாகவும் அலட்சியமாகவும் பேசத் தொடங்கி, ''அப்படியே செய்யுங்கள். அதுதான் நல்ல யோசனை. ஆனால் ஒரு சந்தேகம். இவ்வளவு தூரம் ஏற்பாடு செய்து தபால்காரனை அவன் கையில் போட்டுக் கொள்வதென்றால், அவனுக்கு ஏதாவது லஞ்சம் கொடுத்தி ருப்பாள் அல்லவா? அப்படியிருக்க, போலீசாராகிய நீங்கள் போய் விசாரித்தால், அவன் உடனே சந்தேகப்பட்டு உண்மையை மறைத்து விடலாம் அல்லவா. ''எத்தனையோ கடிதங்கள் வருகின்றன. யார் யாருக்கு வருகின்றன என்பதையும் எங்கெங்கே கொடுக்கிறேன் என்பதையும் நான் எப்படி நினைவில் வைத்துக்கொள்ள முடியும்'' என்று அவன் சொன்னால், அதற்குமேல் நீங்கள் அவனை வற்புறுத்த முடியுமா?'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''அதுவும் வாஸ்தவந்தான். அவன் அநேகமாய் அப்படித்தான் சொல்லலாம். இருக்கட்டும். நாங்கள் தந்திரமாக விசாரித்துப் பார்க்கிறோம். அவன் சரியானபடி உத்தரம் சொல்லாவிட்டால், இந்த விஷயத்தைச்

சில நாள்களுக்குப் பேசாமல் வீட்டிலிருந்து அசரப்போட்டு, ஒரு கடிதத்தில் இந்த மேல் விலாசம் எழுதி ரகசியமாக அதைத் தபாலில் போட்டுவிட்டு, மறுநாள் தபால்காரனோடு தொடர்ந்து தந்திரமாக வரும்படி யாரையாவது அனுப்பினால், அவன் அதை இந்த வீட்டில் கொடுக்கிறானா இல்லையா என்பது தெரிந்து போகுமல்லவா. அதற்குமேல் வேறு தந்திரம் செய்து உண்மையைக் கிரகிக்கிறோம்'' என்றார்.

அம்மணிபாயி, ''சரி; அப்படியே செய்யுங்கள். அதுதான் நல்லது. ஆனால் அவன் அந்தக் கடிதத்தை இங்கே கொடுத்தால், அதை நீங்கள் பார்த்துக்கொள்ள முடியும். அவன் அதை வேறே எங்கேயாவது கொடுத்துவிட்டால், அது உங்களுக்கு எப்படித் தெரியும். நீங்கள் தூரத்திலிருந்துதானே பார்க்க முடியும். அதே தினத்தில் எங்கள் வீட்டுக்கு என் பேருக்கு வேறே ஏதாவதொரு கடிதம் தற்செயலாக வரலாம். அதை அவன் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகலாம். இதையெல்லாம் எப்படி நிச்சயமாக நாம் அறிய முடியும்? என்னவோ நீங்கள் பிரயத்தனம் செய்து பாருங்கள். நீங்கள்செய்யப்போகும் தந்திரங்களை எல்லாம் எங்களிடம் எதற்காகச் சொல்லுகிறீர்கள்? எங்களுக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இது விஷயமாக எங்களுக்கு யாதொரு தகவலும் தெரியவே தெரியாது'' என்றாள்.

இன்ஸ்பெக்டர், ''சரி; அவ்வளவுதூரம் நீங்கள் உறுதியாகச் சொல்லும்போது, நாங்கள் அதற்குமேல் சந்தேகப் படுவது ஒழுங்கல்ல; இந்தப் பெண் உங்களோடு நன்றாகப் பழகியிருப்பதாக ஒரே பிடிவாதமாய்ச் சொல்லுகிறபடியால் தான், நான் உங்களிடம் மேன்மேலும் சந்தேகமாகக் கேட்க நேர்ந்தது. அப்படியானால் நாங்கள் போகலாமல்லவா? இந்தப் பெண்ணை நீங்கள் இதற்குமுன் எப்போதும் பார்த்ததே இல்லையல்லவா? இவள் சொல்லுவது தவறுதானே?'' என்றார்.

அம்மணிபாயி, ''ஆம். தவறுதான். நான் இவளை ஒருநாளும் பார்த்ததே இல்லை; இவளோடு பேசியதுமில்லை. இவள் ஏதோ

அடையாளப் பிசகாக என்னைக் காட்டுகிறாள் என்றே நினைக்கிறேன்'' என்று அழுத்தமாகக் கூறினாள்.

இன்ஸ்பெக்டர் உடனே ஷண்முகவடிவைப் பார்த்து, ''ஏனம்மா! சங்கதிகளைக் கேட்டுக்கொண்டாயா? இனி நாம் என்ன செய்கிறது? இந்த அர்த்த ராத்திரியில் நாம் யாரையும் எழுப்பித் தொந்தரவு செய்வது நியாயமல்ல. ஆகையால், நாம் போவோம்; பொழுது விடிந்தபிறகு இந்த விஷயத்தைத் தீர விசாரித்து உண்மையை அறியலாம். உன்னுடைய அக்காளான கமலம் இருக்கும் இடத்தை நான் நாளையதினம் சாயுங்காலத்துக்குள் எப்படியும் கண்டுபிடித்து உன்னை அவரிடம் சேர்க்கிறேன்; நீ கவலைப்படாதே. வா போகலாம்'' என்றார்.

உடனே அம்மணிபாயி, ''நான் உள்ளே போகலாமல்லவா? உங்களுக்கு இன்னமும் ஏதாவது சங்கதி தெரியவேண்டுமோ?'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் மரியாதையாக, ''இல்லையம்மா! நீங்கள் கதவை மூடிக்கொண்டு உள்ளே போங்கள். நாங்களும் போகிறோம்'' என்றார்.

உடனே அம்மணிபாயி கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டர், ''சரி; வா அம்மா! போகலாம்'' என்று கூறிய வண்ணம் அவ்விடத்தைவிட்டு நடக்க, ஷண்முகவடிவு அவரைத் தொடர்ந்து செல்லலானாள்.

இருவரும் மௌனமாகவே நடந்து அந்தத் தெருவைக் கடந்து அப்பால் சென்றனர். இன்ஸ்பெக்டர் ஆழ்ந்து சிந்தனை செய்து தமது கவனத்தை ஏதோ விஷயத்தில் செலுத்தியவராய் நடக்க, ஷண்முகவடிவு வியப்பும், பிரமிப்புமே வடிவெடுத்தவள் போலவும் சொப்பனத்தில் நடப்பவள் போலவும் அவருக்குப்

பின்னால் போய்க்கொண்டிருந்தாள். அம்மாணிபாயின் அடையாளமும், அவள் இருந்த வீட்டின் அடையாளமும், அவளுக்கு நன்றாக நினைவிருந்தன. ஆகையால், அம்மணிபாயி சொன்னது முழுப்புரட்சி என்பது ஷண்முகவடிவிற்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல நிச்சயமாகத் தெரிந்தது. அவள் தனக்கு ஒன்றும் தெரியாதென்று முழுப் பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைப்பது போல அடியோடு எல்லாவற்றையும் மறைத்துப்பேசி, தன்னை முற்றிலும் பொய்யளாக்கி விட்டதை நினைத்துநினைத்து நமது இளமாது கட்டுக் கடங்கா ஆச்சரியமும் கலக்கமும் அடைந்தாள். தனது அக்காளை அவர்கள் என்ன கதிக்கு ஆளாக்கி இருப்பார்களோ என்ற கவலையும் அச்சமும் தோன்றி அவளது மனதில் குடி கொண்டன. இன்ஸ்பெக்டர் தன் விஷயத்தில் என்னவிதமான அபிப்பிராயம் கொண்டிருப்பாரோ என்ற கவலையும் பெரிதாக எழுந்து வதைத்தது. அங்ஙனம் அவள் பலவாறு சஞ்சல மடைந்தவளாய் நடக்க, அடுத்த வீதி வந்து சேர்ந்தது. இன்ஸ்பெக்டர் உடனே பின்னால் திரும்பிப் பார்த்து யாரும் வரவில்லையென்பதை நிச்சயித்துக்கொண்டு அன்பான குரலில் பேசத்தொடங்கி, ''அம்மா! ஷண்முகவடிவூ! நீ சொல்வது நிச்சயந்தானா? இந்தப்பெண்பிள்ளை தான் உன்னை வஞ்சித்தவள் என்பது உனக்கு நன்றாகத் தெரிகிறதா? நீ கோலாப்பூரிலிருந்து வந்து இந்த வீட்டிலேதான் இறங்கினாயா? நன்றாக எண்ணிப் பார்த்துச்சொல்'' என்றார்.

ஷண்முகவடிவு விசனகரமான குரலில், ''நான் என்னவென்று சொல்லுவேன். இதே பெண்பிள்ளை என்னைக் கோலாப்பூரி லிருந்து அழைத்துக்கொண்டு இந்தவீட்டுக்கு வந்தாள். இங்கே இருந்து வடக்கு வீதியிலுள்ள மாளிகையில் கொண்டுபோய் விட்டாள்; இப்போது தனக்கு ஒன்றும் தெரியாதென்று அடியோடு மறுக்கிறாள். வாயடி அடிக்கிறவர்களுக்குத்தான் இது காலமாக இருக்கிறது; என்ன செய்கிறது?'' என்றாள்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''நீ கவலைப்படாதே; யார் சொல்வது உண்மையென்பது எனக்கு நன்றாகத் தெரிந்து போய்விட்டது. நான் சொன்ன ஒவ்வொரு விஷயத்துக்கும் அவள் கொஞ்சமும் யோசிக்காமல் உடனுக்குடனே ஆட்சேபணை சமாதானங்கள் சொல்லி வந்ததைப் பார்த்தபோது, இவள் இந்த விஷயங்களை எல்லாம் ஏற்கெனவே எதிர்பார்த்து, அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறாள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இருக்கட்டும். இவள் எங்கே தப்பினாள். பொழுது விடியட்டும். நான் பலவகையில் முயற்சிசெய்து உண்மையைத் தெரிந்து கொண்டு கமலம் என்ன ஆனாள் என்பதைக் கண்டுபிடிக்கிறேன். நான் இவர்களை இலேசில் விட்டு விடுவேன் என்று நினைக்காதே'' என்றார்.

ஷண்முகவடிவு, ''என்னவோ எல்லாம் உங்களுடைய தயவு. நீங்கள் எப்படியாவது பிரயாசைப்பட்டு, என் தமக்கை உயிரோடு இருக்கிறாளா என்பதையும், எங்கே இருக்கிறாள் என்பதையும் கண்டுபிடித்து, என்னை அவள் இருக்கும் இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட வேண்டும். இந்தப் பேருதவியை நான் என்றைக்கும் மறக்கவே மாட்டேன்'' என்று நிரம்பவும் பணிவாகவும் பரிதாபகரமாகவும் கூறினாள்.

இன்ஸ்பெக்டர், ''சரி; அப்படியே ஆகட்டும். நான் உன்னுடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்கிறேன்'' என்று கூறினார்.

அவ்வாறு சம்பாஷித்த வண்ணம் அவர்கள் இருவரும் பற்பல தெருக்களையும் சந்துகளையும் கடந்து கீழ்க்கோட்டை வாசலுக்கு அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர். அப்போது இன்ஸ்பெக்டர் அவளை நோக்கி, ''பெண்ணே! இப்போது இரவு இரண்டுமணி சமயம் இருக்குமென்று நினைக்கிறேன். எனக்குத் தூக்கம் வருகிறது. நீயும் களைத்துப் போயிருக்கிறாய். ஆதலால், பொழுது விடிகிற

வரையில் நீயும் எங்கேயாவது படுத்துத் தூங்குவது முக்கியமான காரியம். என்னுடைய வீட்டுக்கு உன்னை அழைத்துக் கொண்டு போய்ப் படுக்கவைக்கலாம் என்று பார்த்தால், ஓர் இடைஞ்சல் இருக்கிறது. என் சம்சாரம் தன் தாய் வீட்டுக்குப் போயிருப்பதால், வீட்டில் வேறே பெண்பிள்ளைகள் யாரும் இல்லை. நான் மாத்திரம் வீட்டில் தனியாக இருந்து வருகிறேன். ஆகையால், உன்னை நான் அங்கே அழைத்துக்கொண்டு போவது ஒழுங்கல்ல. ஆகையால், உன்னை நான் மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்கே அழைத்துக்கொண்டு போகிறேன். அவ்விடத்தில் நீ தனியான ஓர்அறையில் சௌக்கியமாகப் படுத்திருக்கலாம். பொழுது விடிந்த பிறகும் நீ அங்கேயே மறைவான ஓரிடத்தில் இருக்க அனுகூலமாக இருக்கும்'' என்றார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு அவரது பெருந் தன்மையையும் நல்லொழுக்கத்தையும் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்து, அவரது பிரியப்படியே செய்யலாம் என்று மறுமொழி கூறினாள்.

அவ்வாறு பேசியபடி அவர்கள் நடக்க, அப்போது அவர்கள் சென்றுகொண்டிருந்த தெருவின் கடைசியில் ஒரு பெருத்த கூக்குரலும் ஆரவாரமும் உண்டாயின. அதை உணர்ந்துகொண்ட இன்ஸ்பெக்டர் கலகம் நடந்த திக்கில் உற்று நோக்கி உண்மையை உணர்ந்து கொண்டார். ஷண்முகவடிவோ அந்த அர்த்த ராத்திரியில் மகா பயங்கரமாகத் தோன்றிய அந்தக் கூக்குரலைக்கேட்டுப் பெரிதும் திகில் கொண்டு மான்போல மருண்டு அது என்னவாக இருக்குமென்று உற்று நோக்கினாள். ''போலீஸ்கார நாய்களை வெட்டு குத்து, கொல்லு, உதை, அடி, துகை, கழுத்தை முறி'' என்றும், ''ஐயோ அப்பா! நாங்கள் ஓடிப் போய் விடுகிறோம். எங்களை விட்டுவிடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் எப்படியாவது அடித்துக் கொள்ளுங்கள்'' என்றும் பலவாறான சொற்கள் வந்து அவர்களது காதில் பட்டன.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டரது தேகம் பதறியது. உண்மை இன்னதென்பது அவருக்கு உடனே பட்டுவிட்டது. அவர் பதறிப் போனவராய் ஷண்முகவடிவை நோக்கி, "அம்மா! ஷண்முக வடிவு, அதோ பார்த்தாயா? அவ்விடத்தில் ஒரு பெரிய கலகம் நடக்கிறது. அங்கே இருந்து ஓர் ஊர்கோலம் வருகிறது. கலியாணத்துக்காகப் பெண்ணை அழைத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு விரோதிகள் வழிமறித்து அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டுபோய் வேறொரு பிள்ளைக்குக் கட்ட உத்தேசித்திருக்கிறார்கள். இந்த விஷயமாக எங்களுக்கு ஒரு மனு வந்தது. அதற்காக நான் போலீஸ் ஜவான்களை அனுப்பியிருந்தேன். பெண்ணை பலாத்காரமாக எடுத்துப்போக வந்திருக்கும் கட்சிக்காரர்கள் போலீஸ்காரர்கள்மேல் கோபம் கொண்டு அவர்களை அடிக்கிறார்கள் போலிருக்கிறது. நான் சும்மா இருக்கக் கூடாது. நான் அவசரமாகப் போய் இன்னும் அதிக ஜவான்களை அழைத்துக்கொண்டு வந்து என்னுடைய ஆட்களைத் தப்ப வைக்க வேண்டும். நான் அவசரமாக ஓட வேண்டும். நீ என்னோடு ஓடிவர முடியாது. இதோ பக்கத்தில் இருக்கும் வீடுகளில் எதிலாகிலும் போய்க் கதவைத் தட்டி என் பெயரையும் நான் இருக்கச் சொன்னதாகவும் சொல்லிப் பொழுது விடிகிறவரையில் இருந்து காலையில் ஸ்டேஷனுக்கு வந்து சேர். உன் விஷயங்களை நாம் அதன்பிறகு கவனிக்கலாம்" என்று கூறிவிட்டு அவளது மறுமொழிக்காகக் காத்திருக்காமல் அவ்விடத்தைவிட்டு ஒரே ஓட்டமாகத் தலைதெறிக்க ஓடி ஒரு க்ஷணநேரத்தில் மறைந்து போய் விட்டார்.

அவரது சொற்களைக் கேட்ட ஷண்முகவடிவு அபாரமான அச்சமும் கவலையும் கொண்டு நடுநடுங்கலானாள். அந்த அர்த்த ராத்திரியில் நிர்மானுஷ்யமான ஒரு தெருவில் தான் விடப்பட்டதையும், தனக்கெதிரில் முரட்டு மனிதர்களான இருநூறு முந்நூறு மனிதர்கள் கைகலந்து சண்டையிட்டு மடிவதையும் காணவே, அவளுக்குக் குலைநடுக்கம் எடுத்தது.

நல்ல சமயத்தில் தனக்கு அருந்துணையாக வந்து வாய்த்த உத்தம புருஷரான அந்த இன்ஸ்பெக்டரும் பலவந்தமாகத் தன்னை விட்டுப் பிரிக்கப்பட்டுப் போனதைக் கண்ட அந்தப் பெண்மணியின் மனம் இடிந்து உட்கார்ந்துபோயிற்று. தான் அந்த அகாலவேளையில் எந்த வீட்டிற்குப் போவது, தன்னை யாரென்று சொல்வது என்பதை உணராதவளாய்க் கலங்கினாள். சிறிது தூரத்திற்கப்பால் சண்டையிட்ட மனிதர் கும்பலிலிருந்து பல மனிதர்கள் பயந்துகொண்டோ, அல்லது தத்தம் இல்லங்களுக்குப் போய் இன்னம் அதிக மனிதரை அழைத்து வரவோ, நாற்புறங்களிலும் சிதறியோடினர். மிகுதியிருந்த கும்பல் சண்டையிட்டபடி அவள் இருந்த திசையில் நகர்ந்து வருவதாகத் தோன்றவே, தான் அதற்கு மேல் அவ்விடத்தில் தனியாக நிற்பது முற்றிலும் அபாயகரமான காரியம் என்று ஷண்முகவடிவு நினைத்து, சரேலென்று நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். சுமார் இருபது கஜதூரத்திற்கு அப்பால் ஒரு சந்து போய்க்கொண்டிருந்தது. அந்தச் சந்தின் இரண்டு பக்கங்களிலும் வீடுகள் வரிசையாக அடர்ந்திருந்தன. அந்தச் சந்தில் சில வீடுகளுக்குள்ளிருந்த மனிதர்கள் சிறிது தூரத்தில் உண்டான ஆரவாரத்தைக்கேட்டு திடுக்கிட்டு விழித்தெழுந்து வேடிக்கை பார்ப்பதற்காக கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து வாசற்படியில் நின்றபடி தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை ஷண்முகவடிவு கவனித்தாள். ஆதலால், தான் அந்தச் சந்திற்குப் போய் ஏதாவது ஒரு வீட்டில் இருந்து அந்த இரவைப் போக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவளாய், அவ்விடத்தை விட்டு நடந்து அந்தச் சந்தை நோக்கிச் சென்று அதற்குள் நுழைந்தாள். அங்கிருந்த வீட்டு வாசல்களில் நின்ற மனிதர்கள் ஷண்முகவடிவை நோக்கி, ''என்ன அம்மா! அங்கே கூச்சல்? பெருத்த அமர்க்களமாக இருக்கிறதே!'' என்றனர்.

உடனே ஷண்முகவடிவு, ''கலியாணத்துக்காக யாரோ பெண்ணை அழைத்துக்கொண்டு போகிறார்களாம். எதிர்க்

கட்சிக் காரர்கள் அந்தப் பெண்ணை எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்று வந்து கலகம் பண்ணுகிறார்களாம். அப்படி வந்தவர்களுக்கும் போலீசாருக்கும் அடியும் சண்டையுமாக இருக்கின்றன. அவர்கள் சண்டை போட்டுக்கொண்டு இந்தப் பக்கந்தான் வருகிறார்கள் போலத் தோன்றுகிறது. அதற்காகப் பயந்துதான் நான் இப்படி ஓடி வருகிறேன்'' என்றாள்.

உடனே அங்கிருந்த ஜனங்களில் ஆண்பிள்ளைகளான சிலர் நன்றாக வேடிக்கை பார்ப்பதற்காக சந்துக்கு வெளியில் போகப் புறப்பட்டனர். பெண்பாலார் எல்லோரும் சரேலென்று வீட்டிற்குள் நுழைந்து கதவுகளை மூடித் தாளிட்டுக் கொள்ளத் தொடங்கினர். ஷண்முகவடிவு தானும் யார் வீட்டிலாயினும் நுழைந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தவளாய், திறக்கப்பட்டிருந்த வீடுகளையெல்லாம் உற்றுப் பார்த்தாள். பெரிய சத்திரம்போலத் தோன்றிய ஒரு வீட்டின் வாசலில் கையில் ஒரு சிறிய விளக்கை வைத்துக்கொண்டு ஒரு கிழவி நின்று கொண்டிருந்ததை ஷண்முகவடிவு கவனித்து அவள்தான் சரியான மனிஷியென்று நிச்சயித்துக்கொண்டு அவளிடம் நெருங்கி, ''அம்மா! வீதியில் பெரிய சண்டை நடக்கிறது. இருநூறு முந்நூறு மனிதர்கள் தடிகள் வைத்து சண்டை போட்டுக்கொண்டு இந்தப் பக்கம் வருகிறார்கள். நீங்கள் இங்கே தனியாக நிற்பது சரியல்ல. நானும் அவர்களைக் கண்டுதான் பயந்து ஓடி வருகிறேன். என்னையும் நீங்கள் உள்ளே அழைத்துக் கொண்டுபோய்க் காப்பாற்ற வேண்டும்'' என்றாள்.

அந்தக்கிழவி ஷண்முகவடிவை ஏற இறங்கப் பார்த்து, ''நீதான் கலியாணப் பெண்போலிருக்கிறது. அவர்கள் செய்யும் குழப்பத்தில் நீ மெதுவாக இப்படி ஓடிவந்து விட்டாய் போலிருக்கிறது'' என்றாள்.

ஷண்முகவடிவு நிரம்பவும் கிலேசமும் நாணமும் அடைந்தவளாய், ''இல்லையம்மா! நான் வழியோடு வந்தேன்.

வந்த இடத்தில் எதிரில் அவர்கள் வந்துகொண்டிருப்பதைக் கண்டு பயந்து இப்படி வந்தேன்'' என்றாள்.

உடனே கிழவி, ''சரி; எப்படியாவது இருக்கட்டும் வா; உள்ளே போகலாம்'' என்று அன்பாகக் கூறி வரவேற்றவளாய் விளக்கோடு உள்ளே செல்ல, ஷண்முகவடிவும் அவளைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தாள். முன் பக்கத்துக் கதவு உடனே மூடித் தாளிடப் பெற்றது.

கிழவி கையில் விளக்கோடு ஷண்முகவடிவை அழைத்துக் கொண்டு நடை, தாழ்வாரம், கூடம் முதலிய இடங்களைக் கடந்து இரண்டாங் கட்டிற்குச் சென்றாள். அங்கே இருந்த கூடம், முற்றம் முதலிய ஒவ்வோரிடமும் நிரம்பவும் விசாலமானதாக இருந்தன. ஆகையால், அது ஒரு சத்திரமென்பது எளிதில் தெரிந்தது. முன்கட்டில் மனிதரே காணப்படவில்லை. ஷண்முகவடிவு கிழவியை நோக்கி, ''ஏனம்மா! இவ்வளவு பெரிய இடத்தில் நீங்கள் மாத்திரம் தனியாகவே இருக்கிறீர்கள்? இது சத்திரம்போல பிரம்மாண்டமான கட்டிடமாக இருக்கிறதே!'' என்றாள்.

உடனே கிழவி, ''இது குடியிருக்கும் வீடல்ல. இது ஒரு மடம். இவ்விடத்தில் பொது ஜனங்களுக்கு சாப்பாடு முதலியவை நடப்பதில்லை. முன்கட்டில் பஜனைக்கூடம் ஒன்றிருக்கிறது. அவ்விடத்தில் விக்கிரகங்களும் படங்களும் இருக்கின்றன. என் தம்பி இந்தப் பஜனை மடத்தில் சாமிக்குப் பூஜை செய்கிறவர். அவர் காஷாயம் வாங்கிக்கொண்ட சந்நியாசி. அவரும் நானும் பின்கட்டில் குடியிருந்து வருகிறோம். இந்த மடம் முழுதும் எங்களுடைய நிர்வாகத்தில் தான் இருக்கிறது. இங்கே வேறே மனிதர் யாரும் வரவே மாட்டார்கள்'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''ஓகோ! அப்படியா! இப்போது உங்கள் தம்பியார் எங்கே இருக்கிறார்கள்?'' என்றாள்.

கிழவி, ''அவர் இப்போது இரண்டாங் கட்டில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்'' என்றாள்.

ஷண்முகவடிவு, "நீங்களும் இப்போது அங்கே போய்ப் படுத்துக்கொள்ளப்போகிறீர்களா?" என்றாள்.

கிழவி, "ஆம்; இரண்டாங்கட்டும் இதைப்போலவே நிரம்பவும் பிரம்மாண்டமானதாக இருக்கிறது. அவ்விடத்தில் ஏராளமான அறைகளும் விடுதிகளும் இருக்கின்றன. நான் படுத்துக்கொள்ளுமிடம் அங்கேதான் இருக்கிறது. நீ என்ன செய்யப்போகிறாய்? கொஞ்சநேரம் இங்கே இருந்துவிட்டுப் புறப்பட்டுப் போகப் போகிறாயா? அல்லது, பொழுது விடிகிறவரையில் இங்கேயே படுத்துத் தூங்கிவிட்டு விடிந்தபிறகு போக உத்தேசித்திருக்கிறாயா?" என்றாள்.

ஷண்முகவடிவு, "இப்போது இரவு சுமார் மூன்றுமணி சமயமிருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்தச் சண்டையைப் பார்த்தபிறகு எனக்கு வெளியில் போக பயமாக இருக்கிறது. இந்த முன்கட்டிலேயே நான் படுத்திருக்க நீங்கள் அனுமதி கொடுத்தால் படுத்திருந்துவிட்டு, பொழுது விடிந்தவுடன் நான் போகவேண்டிய இடத்துக்குப் போய்விடுகிறேன். நீங்கள் என் பொருட்டு இன்றைய தினம் மாத்திரம் எனக்குத் துணையாக இந்த முதற்கட்டிலேயே தயை செய்து படுத்துக்கொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

கிழவி:- உன் பெயரென்ன?

ஷண்முக:- என் பெயர் ஷண்முகவடிவு.

கிழவி:- உன்னுடைய வீடு எங்கே இருக்கிறது? நீ இந்த அர்த்த ராத்திரியில் தனியாகப் புறப்பட்டு இந்த வீதியில் வரவேண்டிய பிரமேயமென்ன?

ஷண்முக:- அம்மா! எனக்கு இந்த ஊரில் வீடு இல்லை. என்னுடைய சொந்த ஊர் திருவாரூர். இந்த ஊரில் எங்களுடைய மனுஷ்யாள் சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு என் அக்காள் இந்த ஊருக்கு வந்து சுமார் ஏழெட்டு மாசமாகிறது. அவள் எங்களுடைய ஊருக்குத்

திரும்பி வரவே இல்லை. அவளைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று நான் இந்த ஊருக்கு வந்தேன்.

கிழவி:- ஆம்; உன்னைப் பார்த்தால் யௌவனப் பருவ ஸ்திரீயாக இருக்கிறாய். நீ தனியாகப் புறப்பட்டு வரவேண்டிய காரணமென்ன? வீட்டில் பெரிய மனிதர்கள் இல்லையா?

ஷண்முக:- எங்களுக்குத தாயுமில்லை. தகப்பனுமில்லை. நானும் என் தமக்கையும்தான் எங்கள் குடும்பத்து மனிதர்கள். பெரிய மனிதர்களும் நாங்கள்தான். சின்ன மனிதர்களும் நாங்கள் தான். என் அக்காள் இந்த ஊருக்கு வந்தவள் வெகு காலமாகத் திரும்பி ஊருக்கே வரவில்லை. ஆகையால், அவளைப் பார்த்து ஊருக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்ற எண்ணத்தோடு நான் இந்த ஊருக்கு வந்தேன். என் தமக்கை ஒரு விலாசம் கொடுத்திருந்தாள். நான் சில மோசக்காரர்களிடம் அகப்பட்டுக்கொண்டேன். அவர்கள் அந்த விலாசத்தைக் காட்டுவதாகச் சொல்லி என்னைக் கொண்டுபோய் வேறு சில மனிதரிடம் விட்டுவிட்டார்கள். அவர்கள் என்னிடம் துராகிருதமான காரியம் செய்ய எத்தனித்தார்கள். நான் தெய்வச் செயலாகத் தப்பி அவ்விடத்தை விட்டு வந்தேன். வந்து கடைசியில் ரோந்துக்காரர்களிடம் அகப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தேன். அதன்பிறகு இன்ஸ்பெக்டர் என் தமக்கை குறித்த விலாசத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போனார். அவ்விடத்தில் அவள் இல்லை. பிறகு நானும் அவரும் திரும்பி வந்துகொண்டிருக்கையில் இங்கே கலகம் நடந்தது. போலீசார் அடிக்கப்படுவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் இங்கே ஏதாவது ஒரு வீட்டில் படுத்திருந்து பொழுது விடிந்தவுடன் ஸ்டேஷனுக்கு வரும்படி சொல்லிவிட்டு அவர் அவசரமாகப் போய்விட்டார். நான் உடனே இங்கே வந்தேன்.

கிழவி: - (இரக்கமாகவும் அனுதாபமாகவும்) ஓகோ! அப்படியா சங்கதி! சரி; நானும் உனக்குத் துணையாக இந்தக் கட்டிடத்திலேயே படுத்துக் கொள்ளுகிறேன். பொழுது

விடிந்தபின் நீ ஸ்டேஷனுக்குப் போகலாம். நான் இரண்டாங் கட்டுக்குப் போய் உனக்கும் எனக்கும் பாய் தலையணைகளெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறேன். அதுவரையில் நீ இப்படியே இரு. இங்கே இருளாக இருக்கிறது. இந்த விளக்கையும் நான் இவ்விடத்திலேயே வைத்து விட்டுப் போகிறேன்; அதிருக்கட்டும். உன் அக்காளுடைய பெயர் என்ன?

ஷண்முக: - என் அக்காளுடைய பெயர் கமலம்.

கிழவி:- சரி. நான் போய் இதோ ஒரு க்ஷணத்தில் திரும்பி வந்து விடுகிறேன். நீ இங்கேயே இருக்கிறாயா? என்னோடு கூடவே வருகிறாயா?

ஷண்முக:- நான் இங்கேயே இருக்கிறேன். விளக்கை மாத்திரம் இப்படியே வைத்துவிட்டுப் போங்கள். ஆனால் உங்களுக்கு இரண்டாங்கட்டில் வெளிச்சம்வேண்டாமா?

கிழவி:- எனக்கு அங்கே விளக்கு வேண்டியதில்லை. பாய்கள் இருக்குமிடம் எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், விளக்கில்லாமலேயே நான் போய்ப் பாய்களை எடுத்து வருகிறேன் - என்று கூறியவண்ணம் ஷண்முகவடிவை அவ்விடத்திலேயே உட்கார வைத்துவிட்டு இரண்டாங்கட்டிற்கு நுழைந்தவள், இரண்டு கட்டுகளுக்கும் நடுவிலிருந்த கதவை மூடிக்கொண்டு அப்பால் சென்றாள். அவள் அந்தக் கதவைத் திறந்து மூடியகாலத்தில் அதற்கப்பால் இருள் நிரம்பி இருந்ததையும் ஷண்முகவடிவு கவனித்தாள்.

கமலம் திருவாரூரில் தனியாக விட்டு வந்தபிறகு ஷண்முகவடிவிற்கு அந்த ஊரிலும், கோலாப்பூரிலும், தஞ்சாவூரிலும் பற்பல அபாயங்களும் இடர்களும் நேர்ந்தன. ஆதலால், அவளது மனம் எதைக் கண்டாலும் சந்தேகமே கொண்டது. நல்ல மனிதர் கெட்ட மனிதர் என்ற வேறுபாட்டை அவள் அறிந்துகொள்ள மாட்டாமல், எல்லோரிடத்திலும்

சம்சயமே கொள்ளும்படி அவளது மனம் தூண்டியது. ஆகையால், அந்தக் கிழவி நல்லவளோ அல்லது கெட்டவளோ, அந்த இரவு யாதொரு இடரும் இல்லாமல் கழியுமோ கழியாதோ என்று பலவாறு சந்தேகித்தவளாய் இருக்க, கிழவி நடுக்கதவைத் திறந்து வைத்துவிட்டுப் போய் வராமல் கதவை மூடிக்கொண்டு போனது அவளது மனதில் ஒருவித சஞ்சலத்தை உண்டு பண்ணியது. ஆனால், அவள் அத்தகைய சந்தேகத்திற்கு அதிகமாக இடங்கொடுக்காமல் அடக்கிக்கொண்டு கிழவியின் வருகையை எதிர்பார்த்தவளாய்த் தனது திருஷ்டியை நாற்புறங்களிலும் செலுத்தி அந்த இடத்தின் அமைப்பு எப்படி இருக்கிறதென்று கவனித்துக்கொண்டிருந்தாள். சுமார் கால்நாழிகை சாவகாசம் கழிந்தது, அப்போதும் கிழவி வரவில்லை. நேராகப் போய்ப் பாய்களை எடுத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவள் அவ்வளவு காலதாமதம் செய்யவேண்டிய காரணமென்ன என்று ஷண்முகவடிவு சிந்திக்கலானாள். அவள் ஒருவேளை தனது தம்பியாகிய சாமியாரை எழுப்பித் தனது வருகையையும் விருத்தாந்தங்களையும் சொல்லிக் கொண்டிப்பாளோ என்ற சந்தேகம் எழுந்தது. இரண்டாங்கட்டில் யாரோ இருவர் நிரம்பவும் தணிவான குரலில் பேசிக்கொண்டதுபோல ஒருவித ஓசை உண்டாயிற்று. "சரி, கிழவி தன்னுடைய தம்பியை எழுப்பி அவரிடம் என் விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது. ஒருவேளை அவரே விழித்துக்கொண்டு விசேஷம் என்னவென்று கேட்டிருக்கலாம். என் வரலாற்றைச் சொல்லிவிட்டுத்தான் வரட்டுமே" என்று ஷண்முகவடிவு தனக்குள் ஒருவித முடிவு செய்து கொண்டவளாய்க் கீழே உட்கார்ந்திருந்தாள். அவளது பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த விளக்கு காற்றில் அடிக்கடி அசைந்து அணைந்து போகும் போலிருந்தது. ஷண்முகவடிவு அதைத் தனது கையில் அணைத்துக் கொண்டு நாற்புறங்களிலும் பார்க்க, பக்கத்தி லிருந்த மாடத்தில் ஒரு நெருப்புப்பெட்டி இருக்கக் கண்டு அதை

எடுத்துத்தனது கையில் வைத்துக் கொண்டவளாயிருக்க, சிறிது நேரத்தில் கிழவி தனது கையில் இரண்டு பாய்களையும் இரண்டு தலையணைகளையும் எடுத்துக்கொண்டு அவளிடம் வந்து சேர்ந்தாள்.

வந்தவள் ஷண்முகவடிவைக் கூர்ந்து நோக்கி, ''அந்தச் சண்டையின் கூக்குரலினால் என் தம்பி விழித்துக்கொண்டார் போலிருக்கிறது. நான் போனதைக்கண்டு என்ன விசேஷமென்று கேட்டார். கதியையும் அவரிடம் சொல்லிவிட்டு வந்தேன். அதனால்தான் கொஞ்சம் காலதாமதமானது. வா போய்ப் படுத்துக்கொள்வோம். இவ்விடத்தில் கொசுக்கடி அதிகமாக இருக்கும். ஆகையால், அதோ எதிரிலிருக்கும் அறைக்குள் போயப் படுத்துக்கொள்வோம். அங்கே அவ்வளவாகக் கொசுக்கடி இருக்காது. அது ஒருபக்கமான இடமாகவும் இருக்கும்'' என்றாள்.

உடனே ஷண்முகவடிவு, ''சரி; அதுவே நல்ல இடம், அவ்விடத்திலேயே படுத்துக்கொள்ளலாம்'' என்று கூறிய வண்ணம் விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்து கிழவிக்கு வழிகாட்டிச் சென்றாள். இருவரும் எதிரிலிருந்த அறைக்குள் நுழைந்தனர். அந்த அறையின் உட்புறத்தில் எவ்வித வஸ்துவும் காணப்படவில்லை. அதி நன்றாகப் பெருக்கி மெழுகப்பட்டு வழுவழுப்பாகவும் செத்தைகுப்பை இல்லாமல் சுத்தமாகவும் இருந்தது.

கிழவி தனது கையிலிருந்த இரண்டு பாய்களையும் விரித்துத் தலையணைகளை வைத்துவிட்டுக் கதவண்டை இருந்தபாயில் தான் படுத்துக் கொள்வதாகக் கூறி ஷண்முகவடிவை நோக்கி இன்னொரு பாயில் படுத்துக்கொள்ளும்படி கூறினாள். அதன்படியே அந்த யௌவன மாது தனக்காகப் பிரிக்கப்பெற்ற பாயில் உட்கார்ந்து மெதுவாகப் படுத்துக்கொண்டாள். கிழவி வாசற்படியண்டை போய்க் கதவைச் சாத்திவிட்டு வந்து, ''விளக்கை அணைத்து விட்டால்தான் கொசு வராது.

இல்லாவிட்டால் கொசுவின் உபத்திரவம் அதிகமாக இருக்கும்'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''சரி; அப்படியானால் விளக்கை நிறுத்திவிடுகிறேன்'' என்று கூறியவண்ணம், தனது பாயின் பக்கத்திலிருந்த விளக்கை அணைத்துவிட்டாள். உடனே அந்த அறைமுழுதும் இருள் சூழ்ந்துகொண்டது. அதே க்ஷணத்தில் கிழவியும் பாயின்மேல் படுத்துக்கொண்டாள்.

அவ்வாறு படுத்துக்கொண்ட இருவரும் அதிகமாக சம்பாஷிக்காமல் அப்போதைக்கு அப்போது ஏதோ இரண்டொரு வார்த்தைகளே பேசினர். அப்படி சுமார் கால்நாழிகை நேரம் கழிவதற்குள் கிழவி மௌனம் சாதித்துக் குறட்டைவிடத் தொடங்கினாள். கிழவி தூங்கிவிட்டாள். ஆதலால் தான் அவளிடம் அதற்குமேல் பேச்சுக் கொடுத்து, அவளது தூக்கத்தைக் கெடுக்கக் கூடாதென்று நினைத்த நமது யௌவன மடமாது அதன்பிறகு வாய்திறந்து பேசாமல் படுத்திருந்தாள். அன்றைய இரவு முழுதும் பலவகைப்பட்ட பயங்கரமான சம்பவங்களில் சம்பந்தப்பட்டதாலும், வெகு தூரம் நடந்ததாலும் அவளது உடம்பு முற்றிலும் தளர்ந்து ஓய்ந்துபோயிருந்தது. ஆனாலும், அவளது மனம் நிம்மதி அடையாமல் அப்போதும் பெருங்கிளர்ச்சி அடைந்து தவித்துக் கொண்டிருந்தது. அவளது சஞ்சலம் அடங்காமலேயே இருந்தது. ஆகையால், தூக்கம் பிடிக்காமலிருந்தது. அவளுக்கு நேர்ந்த பற்பல சம்பவங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அவளது அகக் கண்ணில் மறுபடி தோன்றிக் கொண்டிருந்தன. ஆகையால், அவள் அவைகளை விலக்கமாட்டாதவளாய் அயர்ந்து படுத்தபடி விழித்துக்கொண்டே கண்களை மூடிப் படுத்தி ருந்தாள். அரை நாழிகை கழிந்தது; ஒரு நாழிகையும் கழிந்தது. அதற்குமேலும் கழிந்தது. ஷண்முகவடிவின் அங்கங்க ளெல்லாம் தளர்ந்து ஓய்ந்து தத்தம் தொழிலைச் செய்யாமல் உணர்வற்று ஒடுங்கும் சமயத்திலிருந்தன. கண்ணிமைகள்

ஈயக்குண்டுகள்போல கனத்துத் திறக்க மாட்டாமல் மூடிக் கொண்டிருந்தன. மனம் மாத்திரம் விழிப்பிற்கும் நித்திரைக்கும் நடுமத்தியமான மயக்க நிலைமையில் இருந்தது.

அதுவரையில் ஆழ்ந்து நித்திரைசெய்து குறட்டை விடுகிறவள் போலத் தோன்றிய கிழவி திடீரென்று விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து தணிவான குரலில் தனக்குத்தானே பேசத் தொடங்கி, "ஷண்முகவடிவு அலுத்துத் தூங்குகிறாள் போலிருக்கிறது. தூங்கட்டும். எனக்கு ஒன்றுக்கு வருகிறது. நான் மெதுவாக எழுந்து போய்விட்டு வந்து படுத்துக் கொள்ளுகிறேன்" என்று கூறியவண்ணம் எழுந்து மெதுவாகக் கதவண்டை போய் ஒரு பக்கத்துக் கதவைச் சிறிதளவு திறந்து கொண்டு போய்விட்டாள். அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்ட வார்த்தைகள் ஷண்முகவடிவின் உணர்வில் பட்டனவானாலும், அது அவளுக்குச் சொப்பனம் போல இருந்தது. கிழவி எழுந்து ஒன்றுக்குப் போயிருக்கிறாள் என்பது மாத்திரம் தெரிந்ததே அன்றி அவளது வாய் பேசமாட்டாமலும் உடம்பு அசைக்க இயலாமலும் இருந்தன.

அவ்வாறு கால்நாழிகை சாவகாசம் கழிந்தது. திறக்கப்பட்டிருந்த கதவில் மனிதர் உராயும் சப்தம் கேட்டது. அடுத்த நிமிஷத்தில் யாரோ ஒருவர் அறைக்குள் வந்து கதவை உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு வந்து பாயில் படுத்ததாக ஷண்முகவடிவு ஒருவாறு உணர்ந்தாள். அதன்பிறகு கால் நாழிகை சாவகாசம் கழிந்தது. நமது இளந்தோகையான ஷண்முகவடிவு தூக்கத்தில் ஆழும் சமயத்தில் இருக்க, பக்கத்தில் படுத்திருந்தவரது வலது கால் தன் மீது போடப் பட்டதை அவள் உணர்ந்தாள். அப்போதும் அவளது மயக்கம் தெளியவில்லை. அடுத்த நிமிஷத்தில், ஒரு கை வந்து அவளைப் பலமாக அணைத்துக்கொண்டதை உணரவே, ஷண்முகவடிவு ஏதோ விபரீத சம்பவம் நடக்கிறதென்று நினைத்து சடக்கென்று தனது கண்களை விழித்துக்கொண்டு, தன் மீது போட்டு அணைக்கப்

பட்டிருந்த காலையும் கையையும் உதறி அப்பால் தள்ளினாள். அது கிழவியின் கால் கைகள் போல இல்லாமல் யாரோ ஒரு புருஷருடையவைபோல இருந்தன. அவள் சடேரென்று எழுந்து உட்கார்ந்து, ''பாட்டீ!பாட்டீ! யார் இங்கே படுத்திருக்கிறது?'' என்று வினாவிய வண்ணம், தான் எடுத்து வைத்திருந்த நெருப்புப்பெட்டியைத் திறந்து ஒரு குச்சி எடுத்துக் கிழித்துப் பக்கத்திலிருந்த விளக்கைப் பொருத்த அதன் பிரகாசம் அந்த அறை முழுதும் குபீரென்று பரவியது. பக்கத்திலிருந்த பாயில் பாட்டி காணப்படவில்லை. காஷாய வஸ்திரம் தரித்த ஒரு சாமியார் படுத்திருந்தார். விளக்கைக் கண்டவுடனே அவரும் எழுந்து உட்கார்ந்துகொண்டு, ''ஷண்முகவடிவு! அன்றைய தினம் என்னை நீ ஏமாற்றி விட்டு ஓடினவளல்லவா! இன்றைய தினம் வசமாக நீயே இங்கே வந்து மாட்டிக் கொண்டாய். உன்னை நான் இனி விடுவேனென்று நினைக்காதே'' என்றார். அப்போது அந்த அறைக்கதவு வெளிப்புறத்தில் தாளிடப்பட்ட ஓசை கேட்டது. தன்னை அதற்குமுன் கலியாணசுந்தரம் எந்தச் சாமியாரிடத்திலிருந்து விடுவித்தானோ அதே சாமியார் அவ்விடத்திலும் இருக்கக் கண்ட நமது ஷண்முகவடிவு பிரமித்துக் கலங்கி அப்படியே நின்றுவிட்டாள்.

## 38 - வது அதிகாரம்

## வஞ்சகர் கூத்து

மகாராஷ்டிர மன்னர்களின் ஆதி உற்பத்திஸ்தானமும், பேஷ்வாக்கள் என்ற கீர்த்திபெற்ற ராஜப் பிரதிநிதிகளினது தலைமை நகரமுமான பூனாநகரம் நிரம்பவும் நேர்த்தியான பட்டணம். நமது கதை நிகழ்ந்த காலத்தில் அந்த நகரம் மகா அற்புதமான வனப்பு வாய்ந்து தேவேந்திர பட்டணம் போல விளங்கியது. தேவாலயங்கள், பிரம்மாலயங்கள், அரண்மனை, வீடுகள், உத்யானவனங்கள், தடாகங்கள், மாளிகைகள்,

விளையாட்டு இடங்கள், யானைச்சாலைகள், குதிரைச் சாலைகள், ஆயுதச் சாலைகள் முதலிய ஒவ்வோரங்கமும் எவ்விடத்தில் எப்படி அதியுன்னதமாக அமைந்திருக்க வேண்டும் என்பதை உலகத்தோர் பார்க்க விரும்பினால், அதை அவர்கள் பூனா நகரத்திலன்றி வேறு எவ்விடத்திலும் காண இயலாது. அவ்வாறு அது உலகத்திலுள்ள பட்டணங்களுக் கெல்லாம் ஒரு சட்டகம் போல ஒப்புயர்வற்ற தெய்வீகப் பட்டணமாக அமைந்திருந்தது. அந்தப் பட்டணத்தின் பொதுச் சத்திரம் ஒன்றில் ஓர் அறைக்குள் சன்னியாசிபோல உடை தரித்திருந்த ஒரு புருஷர் காணப்பட்டார். கழுத்து முதல் கணைக்கால் வரையில் தொங்க விடப்பட்டிருந்த பிரம்மாண்ட மான அங்கியால் அவரது உடம்பு முழுதும் மறைக்கப் பட்டிருந்தது. அவர் தமது தலையில் ஒரு காஷாய வஸ்திரத்தால் தலைப்பாகை கட்டி, அதன் நுனியை முதுகின்பக்கம் ஒரு சாணளவு தொங்கவிட்டிருந்தார். நெற்றியில் விபூதி, சந்தனம் ஆகிய இரண்டும் காணப்பட்டன. அவரது தோற்றம் படங்களில் காணப்படும் விவேகாநந்த சுவாமிகளின் தோற்றம்போல இருந்தது. ஆனால், அவரது உடம்பு தந்தத்தினால் ஆனதுபோல வெளுப்பாகவும், மினுமினுப்பாக வும் இருந்தது. முகத்தில் அழகான மீசைகள் காணப்பட்டன. உடம்பு ஆஜானுபாகுவாகப் பெருத்திருந்தது அன்றி, அவரது வயது சுமார் நாற்பது, அல்லது நாற்பத்தைந்திருக்கலாம் என்று தெரிவித்தது. அவரது மூக்கு, முழிகள், புருவங்கள், உதடுகள், கன்னங்கள் முதலிய ஒவ்வோரங்கமும் மிதமிஞ்சிய செழிப்பும், வனப்பும், வசீகரமும் வாய்ந்தவையாக இருந்தன. அவரது காஷாய வஸ்திரங்கள், அவர் உலகைத் துறந்த சன்னியாசி என்று வெளிப்படுத்தின. ஆனாலும், அவரிருந்த அறையில் சகலமான சுக போகங்களும் ஏராளமாக நிறைந்திருந்தன. எங்கும் வெள்ளிப் பாத்திரங்களும், தங்க சாமான்களுமே மயமாகக் காணப்பட்டன. ஆகையால், அவர் அபாரமான சம்பத்து வாய்ந்த பண்டார சன்னிதிகள், மடாதிபதிகள் முதலியோர் இடுப்பில்

மாத்திரம் காஷாய வஸ்திரம் அணிந்து இரதகஜ துரகபதாதிகள் புடைசூழ தங்கப் பல்லக்கில் எப்படி பவனி வருகிறார்களோ, அப்படியே அந்த சன்னியாசியும் பணக்காரத் துறவியாகக் காணப்பட்டார்.

ஆனால், அந்த அறையில் அவரைத்தவிர வேறே மனிதர் யாரும் காணப்படவில்லை. அவர் மான்தோல் ஆசனத்தின்மீது உட்கார்ந்து, காஷாய வஸ்திரம் போர்த்த ஒரு திண்டின்மேல் சாய்ந்தவராய் உட்கார்ந்து, யாரோ ஒருவரது வருகையை எதிர்பாத்திருப்பவர் போலத் தமது விழியை வாசல் பக்கத்தில் வைத்தவராய் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அரை நாழிகை சாவகாசம் கழிந்தது. ஒரு யௌவன புருஷர் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். அவருக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம். அவரும் நல்ல அழகான தேகமுடையவராகக் காணப்பட்டதன்றி, அந்தச் சன்னியாசியிடம் அதிக பயபக்தி விநயமுடையவராய் அவரது தவசிப்பிள்ளை போலக் காணப்பட்டார். அவர் பட்டணத்திற்குப் போய் மாதுரியமான பற்பல கனிவர்க்கங்களை வாங்கி ஒரு பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் மூட்டையை அவிழ்த்துப் பழங்களையெல்லாம் ஒரு வெள்ளித் தட்டில் எடுத்துவைத்துவிட்டு, அவைகளில் சிலவற்றை எடுத்துத் தண்ணீர் விட்டு அலம்பி நறுக்கி இன்னொரு சிறிய தட்டில் வைத்து சன்னியாசிக்கு எதிரில் கொணர்ந்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு துண்டாக எடுத்து சன்னியாசியிடம் கொடுக்க, அவர் அதை வாயில் போட்டு மென்று தின்றவராய் மிகுந்த சந்தோஷத்தோடு ரகசியமாகப் பேசத் தொடங்கினார்.

சன்னியாசி:- என்ன சாமளராவ்! சன்னியாசி வேஷம் எனக்கு எப்படிப் பலித்திருக்கிறது. பார்த்தாயா?

சாமளராவ்:- ஓ! நிரம்பவும் நன்றாகப் பலித்திருக்கிறது. தத்ரூபம் அர்ச்சுன சன்னியாசி போலவே யிருக்கிறது.

*சன்னியாசி:- (சிரித்துக்கொண்டு)* ஓகோ! என்னைப் பார்த்தால் அர்ச்சுன சன்னியாசி போலவா இருக்கிறது! என்னுடைய வேஷம் அப்படி இருக்கலாம். என்னுடைய கருத்துக்கும் அர்ச்சுனனுடைய கருத்துக்கும் நேர் விரோதமாக அல்லவா இருக்கிறது. அவன் ஒரு பெண்ணைப் பிடிக்கிற தற்காக சன்னியாசி வேஷம் போட்டான். நான் ஒரு ஸ்திரீயின் திருட்டைக் கண்டுபிடித்து அவளை விலக்குவதற்காக இந்த வேஷம் போட்டிருக்கிறேன்.

*சாமளராவ்:- (நிரம்பவும் பணிவாகவும் சந்தோஷமாகவும்)* ஆம், வாஸ்தவந்தான். நான் வெளிவேஷத்திற்கு மாத்திரந்தான் உவமையாகச் சொன்னேனே அன்றிக் கருத்தைப் பற்றிப் பேசவில்லை. இருந்தாலும் பூர்ணசந்திரோதயத்தைப் பிடிப்பதற் காகத்தானே நீங்கள் அதற்குப் பூர்வ பீடிகையாக இப்படி வேஷம்போட்டு இந்தக் காரியத்தை முடிக்க வந்திருக்கிறீர்கள்.

*இளவரசர்:- (சிரித்துக்கொண்டு)* ஆம், நீ சொல்லுவது ஒரு விதத்தில் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

*சாமளராவ்:-* என்னவோ என் மனசில் மாத்திரம் சந்தேகம் இருந்து கொண்டேதான் இருக்கிறது. எவனோ ஒரு பைத்தியக்காரன் எழுதிய அநாமதேயக் கடிதத்தை நம்பி நாம் அநாவசியமாக இவ்வளவு தூரம் வந்தோமே என்ற எண்ணம் உண்டாகிக்கொண்டே இருக்கிறது. அநேகமாய்க் கடிதம் பொய்க் கடிதமாகத்தான் இருக்க வேண்டும். பட்டமகிஷியின் குணம் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் இப்படிப்பட்ட கேவலமான நடத்தைக்கு ஒருப்படக் கூடியவர்களே அல்ல. என்னவோ பார்க்கலாம். நீங்கள் ஒரே பிடிவாதமாக இங்கே வந்து இதன் உண்மையைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று சொன்னீர்கள். எப்படியாவது அந்தக்கடிதம் பொய்க் கடிதம் என்றே ருஜுவாகி விடவேண்டுமென்று நான் ஈசுவரனைப் பிரார்த்திக்கொண்டே இருக்கிறேன். ஆம் அதிருக்கட்டும். நாம் இங்கே வந்திருக்கிறோமே. இனிமேல் என்ன செய்ய

உத்தேசிக்கிறீர்கள்? நமக்கு அநாமதேயக் கடிதம் எழுதிய மனிதனுக்கு, நாம் வந்திருக்கும் சங்கதி எப்படி தெரியும்? அவன் இனி நமக்கு எப்படி யோசனை சொல்லப் போகிறான்?

இளவரசர்:- நான் பூர்ணசந்திரோதயத்துக்குப் படித்துக் காட்டிய கடிதத்துக்குப் பிறகு அதே மனிதன் எனக்கு இன்னொரு கடிதம் அனுப்பினான். அதன் சாராம்சத்தை நான் உனக்குச் சொல்ல மறந்து போய்விட்டேன். அந்தக் கடிதத்தில் அவன் ஒரு சங்கதி எழுதியிருக்கிறான். அதாவது, நாம் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தவுடனே, ஒரு கடிதத்தில் நாம் இங்கே வந்திருப்பதாகவும் இன்ன இடத்தில் இறங்கியிருப்பதாகவும் எழுதி, அந்தக் கடிதத்தை மடித்து, இந்த நகரத்தின் கீழராஜ வீதியில் 530வது இலக்கமுள்ள வீட்டின் ஜன்னலுக்குள் போட்டுவிட்டுப் போனால், அந்தக் கடிதம் தனக்கு வந்து சேர்ந்து விடுமென்றும், தான் உடனே கடிதம் எழுதி அப்போதைக்கு அப்போது நடக்கும் சங்கதிகளைத் தெரிவிப்பதாகவும், நாம் அதன்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் எழுதியிருக்கிறான். ஆகையால், நீ ஒரு காரியம் செய். அவனுடைய கடிதத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களின் உண்மையை அறிந்துகொள்ள தஞ்சையிலிருந்து இருவர் புறப்பட்டு வந்து இந்தச் சத்திரத்தில் இந்த அறையில் இறங்கியிருப்பதாக எழுதி இப்போதே எடுத்துக் கொண்டுபோய் அவன் குறித்துள்ள வீட்டின் ஜன்னலுக்குள் போட்டுவிட்டு வந்து சேர். வரும்போது அந்த வீடு யாருடையதென்றும், அங்கே யார் இருக்கிறார்கள் என்றும் விசாரித்துத் தெரிந்து கொண்டுவா - என்றார்.

அதைக்கேட்ட சாமளராவ் உடனே ஒரு காகிதம் எடுத்து இளவரசரது சொற்படி அதில் சங்கதி எழுதி, அதை அவருக்குப் படித்துக் காட்டியபிறகு மடித்து எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் போய்விட்டான். போனவன் அரைநாழிகை சாவகாசத்தில் மறுபடி திரும்பி வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட இளவரசர் ஆவலோடு அவனது

முகத்தைப் பார்த்து, "என்னப்பா சங்கதி? கடிதத்தைப் போட்டாயா? வீட்டின் விவரத்தை அறிந்துகொண்டாயா?" என்றார்.

சாமளராவ், "நான்போய் அந்த இலக்கமுள்ள வீட்டைக் கண்டுபிடித்தேன். அதன் வாசற் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. இருந்தபடி இருக்கட்டுமென்று நான் கடிதத்தை ஜன்னலின் வழியாக உள்ளே போட்டுவிட்டு வந்து பக்கத்து வீடுகளிலுள்ள மனிதர்களிடம் பேச்சுக்கொடுத்து அந்த வீடு யாருடையதென்று விசாரித்தேன். அந்த வீடு அரண்மனையைச் சேர்ந்த வீடென்றும், அரண்மனையிலிருந்து யாரோ சிலர் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பதாகவும் சொன்னார்களே அன்றி அதற்குமேல், அதிக விவரமான செய்தி எதையும் சொல்லவில்லை" என்றான்.

இளவரசர், "சரி; அவன் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. நம்முடைய கடிதத்தை அவன் பார்த்து, சரியான மறுமொழி எழுதியனுப்பினால் அதுவே போதுமானது" என்றார்.

சாமளராவ், "வீட்டின் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. அவன் இன்றையதினம் வந்து திறந்து பார்க்கிறானோ, அல்லது இன்னம் எத்தனை நாள்கள் கழித்துப் பார்க்கிறானோ. இதனால் நமக்கு அதிக காலதாமதம் ஆகுமோ என்னவோ!" என்றான்.

இளவரசர், "வந்தது வந்துவிட்டோம். இனி எவ்வளவுதான் காலஹரணமானாலும், நாம் கவலைப்பட முடியுமா? வந்த காரியத்தை ஒருவிதமாக நிச்சயித்துக்கொண்டுதான் போக வேண்டும்" என்றார்.

அதன்பிறகு அவர்கள் இருவரும் வேறு பலவாறாக சம்பாஷித்தவர்களாய் அவ்விடத்திலேயே இருந்தனர். சாமளராவ் அடிக்கடி வெளியில் போய்த் தங்களுக்குத் தேவையான ஆகாரங்களுக்கும் தின்பண்டங்களுக்கும் பெருத்த பெருத்த பணத்தொகைகள் செலவு செய்து மாதுரியமான

பதார்த்தங்களை வாங்கிக் கொணர, இருவருமாக உண்டுகளித்து உல்லாசமாக உரையாடிய வண்ணம் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர்.

அன்றையதினம் பகற்பொழுது கழிந்தது. மாலை வேளை வந்தது. இருவரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு ஊருக்கு வெளியில் போய் வேடிக்கையாக உலாவிவிட்டுத் திரும்பி வர வேண்டுமென்று உத்தேசித்திருந்த காலையில், அவர்களிருந்த அறைக்குள் ஒரு சிறுவன் திடீரென்று நுழைந்தான். அவனுக்குச் சுமார் பத்து வயதிருக்கலாம். அவன் உள்ளே வந்தவுடனே சாமளராவை பார்த்து, "நீங்கள் எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறீர்கள்?" என்றான். சாமளராவ், "தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறோம்" என்றான்.

உடனே பையன் தனது மடியிலிருந்த ஒரு கடிதத்தைச் சரேலென்று வெளியில் இழுத்து அவர்களுக்கு எதிரில் போட்டுவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியில் போய் ஒரே ஓட்டமாக ஓடிப்போய்விட்டான். அவனோடுகூட யாராகிலும் வந்து சத்திரத்து வாசலில் மறைந்திருக்கிறார்களோ என்பதைப் பார்க்க வேண்டும் என்ற கருத்தோடு சாமளராவ் உடனே எழுந்து அவ்விடத்தை விட்டு வெளியில் போய்ப்பார்க்க, கடிதம் கொடுத்த பையன் காணப்படவே இல்லை. அவன் ஓட்டமாக ஓடி எங்கேயோ போய் மறைந்து கொண்டான் என்று நினைத்துக் கொண்டே சாமளராவ் மறுபடியும் திரும்பி இளவரசரிடம் வந்து சேர்ந்து, "பையன் ஓடியே போய் விட்டான்; கண்ணில் படவே இல்லை" என்றான்.

இளவரசர் புன்னகையோடு, "சரி அவன் போனால் போகிறான். நீ இந்தக் கடிதத்தைப் பிரித்துப் படி. என்ன எழுதியிருக்கிறான் என்பதைப் பார்க்கலாம்" என்றார்.

உடனே சாமளராவ் அவ்விடத்தில் போடப்பட்ட கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

ரகசியம்

ஜன்னலுக்குள் போடப்பட்ட கடிதம் வந்து சேர்ந்தது. நான் தஞ்சைக்கு எழுதிய கடிதங்களை மதித்து நீங்கள் இவ்வளவு தூரம் வந்ததைப் பற்றி நான் நிரம்பவும் சந்தோஷமடைகிறேன். நான் எழுதியுள்ள விஷயம் உண்மையானதா பொய்யானதா என்பதை அறிந்துகொள்ள நீங்கள் அதிக ஆவல் கொண்டிருக்கலாம். அதற்காக உங்களை நான் நீண்டகாலம் தாமதப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. இன்றைய தினமே நீங்கள் உண்மையை நேரில் அறிந்து கொள்ளலாம். நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். இந்த ஊர் அரண்மனையில் இராஜபத்தினிமார் வசிக்கும் அந்தப்புரங்களை அடுத்தாற்போல ஒரு பெருத்த பூங்காவனம் இருக்கிறது. நீங்கள் இன்றைய தினம் இரவு சுமார் 7.30 மணிக்கு அந்தப் பூங்காவனத்துக்குள் வந்து சேரவேண்டும். அந்தத்தோட்டத்தின் வடமேற்குத் திக்கில் மதிலில் ஒரு சிறிய கதவு இருக்கிறது. அதன் உட்புறத்துத் தாழ்ப்பாளை நான் திறந்து வைத்திருக்கிறேன். நீங்கள் யாருக்கும் தெரியாமல் அந்தக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து நேரில் தென்மேற்குத் திக்கில் போனால், அந்தப்புரத்தண்டை போய்ச் சேருவீர்கள். அவ்விடத்தில் ராஜஸ்திரீகள் பூங்காவனத்துக்குள் வருவதற்காக அமைக்கப்பட்ட வாசல் ஒன்று இருக்கிறது. அதற்கு எதிரில் ஓர் ஆலமரமும், அதன் கீழ் ஒரு சலவைக் கல் மேடையும், அதைச் சுற்றிலும் அடர்த்தியான பூச்செடிகளும் இருக்கின்றன. நீங்கள் நேராக அந்தச் சலவைக்கல் மேடையண்டை போய் அதன் கீழுள்ள குடைவில் மறைந்து ஒளிந்துகொண்டிருந்து கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அங்கே என்ன நடக்கிறதென்று கவனித்துப் பாருங்கள். ஆனால், நான் ருஜுப்படுத்தக் கூடிய முக்கியமான பெரிய விஷயம் இன்னொன்று இருக்கிறது. அதை நான் இன்னம் சில தினங்களில் காட்டப் போகிறேன். அதுவரையில் நீங்கள் உங்களுடைய ஆத்திரத்தை வெளியில் காட்டக் கூடாது, இன்றையதினம்

சலவைக்கல் மேடையினடியில் நீங்கள் இருக்கையில் உங்களுக்கு ஆத்திரம் உண்டாக்கக்கூடிய காரியம் ஏதாவது நடக்குமானாலும் நீங்கள் பொறுமையோடு அங்கேயே மறைந்திருந்து விஷயங்களை மாத்திரம் தெரிந்து கொண்டு வந்து சேருங்கள். இன்னம் இரண்டொரு தினத்தில் நான் மறுபடி உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பலாமென்று நம்புகிறேன்-

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை சாமளராவ் படித்து முடித்தான்.

உடனே இளவரசர், "சரி; நாம் அதிக காலம் இங்கே தாமதிக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லாம் சீக்கிரம் தெரிந்து போகும்" என்றார்.

சாமளராவ் சந்தேகமாகவே பேசத்தொடங்கி, "என்னவோ என் மனசுக்கு இது உண்மையாக இருக்கும் எனத் தோன்றவே இல்லை. பட்டமகிஷிக்கு விரோதமான மனிதர் யாராவது இப்படி ஏதோ தந்திரம் செய்கிறார்களென்றுதான் என் மனம் எண்ணுகிறது" என்றான்.

இளவரசர், "நீ கடைசிவரையில் சந்தேகப்பட்டுக்கொண்டே இரு; எப்படியிருந்தாலும், இன்று ராத்திரி எல்லா விஷயமும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துபோகப் போகிறது. அதன்பிறகு நீ என்ன சொல்வாயோ பார்க்கலாம்" என்றார்.

அப்போது அநேகமாய் மாலை வேளை ஆகிவிட்டதென்றே சொல்லவேண்டும். சூரியன் மேற்றிசையில் மறைந்தபின் அரை நாழிகை சாவகாசம் கழிந்துபோய்விட்டது. ஆங்காங்கு விளக்குகள் கொளுத்தப்பட்டுப் போயின. அவர்கள் இருவரும் சத்திரத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில்போய் அந்தப் பட்டணத்தைக் கடந்து சிறிதுதூரம் அப்பால் சென்று உல்லாசமாக உலாவிவிட்டு திரும்பி வந்து அரண்மனைப் பூங்காவனத்தை அடைந்து அந்தக் கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்த சிறிய மதில் கதவண்டை போய்நின்று, நாற்புறங்களிலும்

திரும்பிப் பார்த்தனர். மனிதர் யாரும் காணப்படவில்லை. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தமையால், அவர்களை வேறு எவரும் பார்க்க இயலாமலும் இருந்தது. சாமளராவ் தனது கையை வைத்துக் கதவை மெதுவாகத் தள்ள அது திறந்து கொண்டது. சாமளராவ் தனது சிரசை உட்புறத்தில் நீட்டி அவ்விடத்தில் யாராகிலும் மனிதர் நிற்கிறார்களோ என்று பார்த்தான். யாரும் காணப்படவில்லை. ''சரி உள்ளே போகலாம் வாருங்கள்'' என்று அவன் இளவரசரிடம் கூறியவண்ணம், முதலில் உள்ளே நுழைந்தான். அதன்பிறகு இளவரசரும் தமது பிரம்மாண்டமான தேகத்தை நிரம்பவும் பாடுபட்டு ஒடுக்கிக் கொண்டு அதற்குள் நுழைந்து அப்பால் சென்று கதவை மறுபடியும் மூடினார்.

பிறகு இருவரும் அந்தப் பூங்காவனத்திற்குள், கடிதத்தில் குறிக்கப்பட்ட திக்கில் செல்லலாயினர். அவர்கள் சென்ற திசையில் எதிர்பக்கத்தில் ராஜஸ்திரீகள் அந்தப்புரம் ஆகாயத்தை அளாவி நின்றது. அந்தப் பெரிய மாடத்தில் ஏராளமான விளக்குகள் கொளுத்தப்பட்டிருந்தன வென்பது நன்றாகத் தெரிந்தது. அவர்களிருந்த பூங்காவனத்திலும் ஆங்காங்கு கம்பங்களில் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், மனிதர் யாரும் தென்படவில்லை. அவர்களிருவரும் மரத்து இருளில் மறைந்து மறைந்து ஆலவிருக்ஷத்தையும் சலவைக்கல் மேடையையும் அடைந்தனர். அவ்விடம் இருண்டிருந்தது. அவர்கள் நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தனர். பூங்கா வனத்தில் மனிதர் யாரும் காணப்படவில்லை. ராஜஸ்திரீகள் அந்தப்புரத்திலிருந்து பூஞ்சோலைக்கு வரும் வாசலிருந்த திக்கில் அவர்கள் தங்களது பார்வையைத் திருப்பிப் பார்த்தனர். அவ்விடத்தில் ஒரு லாந்தர்க் கம்பத்திலிருந்த தீபத்தினால், வாசலில் சிறிது வெளிச்சம் உண்டாகிக் கொண்டிருந்தது. இளவரசரும் சாமளராவும் சலவைக்கல் மேடையண்டை இருந்தபடி அந்தப்புரத்து வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கால் நாழிகை நேரம் கழிந்தது. அந்தப்புரத்துக்குள்ளிருந்து யாரோ மூன்று ஸ்திரீகள் வெளியில் வந்ததைக் கண்ட இளவரசரும் சாமளராவும் கவனமாக அவர்களது முகத்தை உற்று நோக்கினர். ஒரு ஸ்திரீ ஜரிகைப் புட்டாக்கள் நிறைந்த பனாரீஸ் பட்டினால் ஆன ஓர் அங்கியால் தனது தலை முதல் கால்வரையில் தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள். கண்களுக்குத் துளைகள் விடப்பட்டிருந்த இடங்களிலும், ஓரங்களிலும் முத்துகளும், பவழங்களும், இன்னும் பலவகையான மணிகளும் வைத்து இழைக்கப் பட்டிருந்தன. அந்த அற்புதமான விலையுயர்ந்த அங்கி தகத் தகாயமாக மின்னியது அந்த அங்கிக்குள் இருந்தது ஒரு ராஜஸ்திரீ யென்பதை அது எளிதில் காட்டியது. அவளோடுகூட வந்த இன்னம் இரண்டு ஸ்திரீகளும் தங்களை அங்கியால் மறைத்துக் கொள்ளாமல் விலையுயர்ந்த ஆடை ஆபரணங் களும், அற்புத தேஜசும் நன்றாக ஜ்வலிக்க வெளிப்படையாகத் தோன்றினர். அவர்களும் அபாரமான எழிலும், யௌவனமும் நிறைந்த அற்புத வசீகர மெல்லியளாராக விளங்கினர். அவர்களை உற்று நோக்கிய சாமளராவ், ''அங்கிக்குள் வருகிறவர் இன்னாரென்பது தெரியாவிட்டாலும் பக்கத்தில் வரும் தாதிகளிருவரும் நம்முடைய அம்மன் பேட்டை தனம், அபிராமி என்பது நன்றாகத் தெரிகிறது'' என்றான்.

இளவரசரும் உடனே நன்றாகக் கூர்ந்து பார்த்து, ''ஆம்; ஆம் தனமும், அபிராமியுந்தான் கூட வருகிறார்கள். அங்கிக்குள் வருவதுவேறே யாராக இருக்கப் போகிறாள். அந்த துஷ்டை தான் வருகிறாள் போலிருக்கிறது. இந்தப் பெண்பிள்ளை களின் துரோக சிந்தையைப் பார்த்தாயா? கூத்தாடி அன்னத்தம்மாளுடைய பெண்கள் எல்லோரும் என்னிடம் எவ்வளவோ பிரியமாக இருந்து வேடிக்கையாக விளையாடிய வர்கள். அவர்கள் இப்போது எவ்வளவு தூரம் மாறிப்போய், என் சம்சாரம் துன்மார்க்கத்தில் இறங்குவதற்கு எவ்வளவு தூரம்

அனுகூலமாக நடந்து கொள்கிறார்கள், பார்த்தாயா? ஸ்திரீகள் வெளிப்பார்வைக்கு மகா நல்லவர்கள் போலவும், நம்மிடம் வாஞ்சையுள்ளவர்கள் போல இருந்தாலும், அவர்கள் எப்போதும் அப்படியே இருப்பார்களென்று நாம் நம்பவே கூடாது. அவர்கள் அற்பசித்தம் உடையவர்கள். இன்றைய தினம் அவர்கள் ஒருவனைக் கண்ணுக்குக் கண்ணாக மதிப்பார்கள்; நாளையதினம் அவனை விட்டு வேறொரு வனைப் பிடித்துக் கொள்வார்கள், உறுதி என்பதற்கும் அவர்களுக்கும் வெகுதூரம்'' என்று நிரம்பவும் விரக்தியாகவும் அருவருப்பாகவும் கூறினார்.

அதைக்கேட்ட சாமளராவ், ''சரி; நாம் இனிப் பேசிக்கொண்டு வெளியில் இருப்பது கெடுதலாக முடியும். ஆகையால், நாம் மேடையின் அடியில் போய் ஒளிந்து கொள்வோம்'' என்று தணிவான குரலில் கூறினான். உடனே இளவரசரும் சாமளராவும், சலவைக்கல் மேடையின் அடியில் வளைவாகக் குடைந்து விடப்பட்டிருந்த இடைவெளிக்குள் நுழைந்து கை கால்களை முடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். அந்த மேடை சுமார் ஆறடி அகலமிருந்தது. ஆகையால், அவர்களிருவரும், அந்தக் குடைவிற்குள் சிறிது தூரம் உள்ளேபோய் மறைந்து கொண்டு ஓசை செய்யாமலும், மூச்சை அடக்கி விடுத்தும், யாராவது வருகிறார்களா என்று கவனித்துக் கொண்டிருந்தனர்.

கால் நாழிகை நேரம் சென்றது. யாரோ இருவர் வந்து அந்த மேடையின்மேல் உட்கார்ந்து கொண்டதாகத் தோன்றியது. உடனே மல்லிகை ரோஜா முதலிய மலர்களின் பரிமளகந்தமும், அத்தர், புனுகு, ஜவ்வாது, சந்தனம் முதலியவற்றின் வாசனையும் ஒன்றுகூடி மனமோகன வசீகரமான நறுமணம் கமகமவென்று வீசத்தொடங்கி இளவரசரும் சாமளராவும் இருந்த இடத்திலும் வந்து இன்பகரமாக மோதியது. ஸ்திரீயின் காலில் அணியப்பட்டுள்ள பாதரசம் சிலம்பு முதலியவற்றின் கலீர் கலீர் என்ற ஓசையும், கையிலிருந்த வளையல்களின் கலகலவென்ற

ஓசையும் கேட்டன. அவைகளை உணர்ந்த இளவரசரது மனதில் பலவகையான உணர்ச்சிகளும், விகாரங்களும் பொங்கி எழுந்து அவரது மூர்க்கக்குணத்தைக் கிளப்பிவிட்டன. அந்தச் சமயத்தில் தான் பதறக் கூடாது என்ற நினைவினால் அவர் தமது மனதை அடக்கியவராய் நிரம்பவும் பொறுமையோடு மேடையின் கீழ்ப்பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது ஒருவரது பேச்சுக்குரல் கேட்டது. அது தணிவாகவும் காதிற்கு இனிமையாகவும் இருந்தது. ஆனாலும், ஆண் பிள்ளையின் குரல்போல இருந்தது. அவ்வாறு பேசிய மனிதன் காதற் பெருக்கினாலும், வாஞ்சையின் மேலீட்டி னாலும் இளகி உறுகி நிரம்பவும் உருக்கமாகப் பேசத் தொடங்கி, "கண்ணே! லலிதகுமாரி! உன்மேல் இருக்கும் அங்கியை இதோ நானே கழற்றுகிறேன். நீ பிரயாசைப் பட வேண்டாம். உன்னுடைய பலஹீனமான நிலைமையில், நீ என்னை நாடி இவ்வளவு தூரம் வந்தது உனக்கு அதிக அலுப்பாக இருக்கும்" என்று கூறிய வண்ணம், அவளது அங்கியை விலக்கி வைத்ததாகத் தெரிந்தது.

உடனே அந்த ஸ்திரீ தேன்போலக் கனிந்த தனது இனிய குரலால் பேசத்தொடங்கி, "மோகனராவ்! ஆகா! நீ என்மேல் வைத்திருக்கும் நிகரில்லாத இந்தப் பிரியத்திற்கு உனக்கு நான் எதைத்தான் கொடுத்தாலும், ஈடாகாதென்றே நினைக்கிறேன். ஒரு நாளில் ஒரு க்ஷணநேரமாவது, உன்னுடைய முகத்தைப் பார்த்து ஆனந்தமடையாவிட்டால், எனக்கு என் அந்தப்புரத்தி லேயே இருப்புக் கொள்ள மாட்டேன் என்கிறது. உடம்பு பறக்கிறது. கண்கள் ஏங்குகின்றன. சாப்பாடு, தூக்கம் முதலிய எதிலும் மனம்செல்ல மாட்டேன் என்கிறது. ஏதோ பித்துப் பிடித்ததுபோல ஆகிவிடுகிறது. எதைப் பார்த்தாலும் இன்பகரமாகத் தோன்றுகிறதில்லை. எல்லாம் பாழாகக் காணப்படுகிறது. என் உடம்பு எவ்வளவு கேவலமான ஸ்திதியிலிருந்தாலும், உன்னைப் பார்க்க வருவதென்றால்,

எங்கிருந்தோ என் உடம்புக்கு ஒருவித பலமும், மனதுக்கு ஒரு விதக் குதூகலமும் உண்டாகிவிடுகின்றன. நான் வேறே எந்தக் காரியம் செய்தாலும், உடனே அலுப்பு உண்டாகிவிடுகிறது. தினம் ஒரு தரம் இங்கே வந்து உன் முகத்தைப் பார்த்துவிட்டுப் போனலன்றி என் அலுப்பும் தாகவிடாயும் தணிகிறதே இல்லை'' என்று கிள்ளை மொழிவதுபோலக் கொஞ்சலாகவும் இளக்கமாகவும் மொழிந்தாள்.

*மோகனராவ்:-* ஆகா! உன் வார்த்தை அழகுக்குத் தகுந்தபடி உன் முகத்தழகும், இந்த கர்ப்பம் முற்ற முற்ற எவ்வளவு சொகுசாக மாறிக்கொண்டு வந்திருக்கிறது தெரியுமா? உன் முகத்தில் இப்போது உண்டாகியிருக்கும் களையையும் வசீகரத்தையும் போல இதற்குமுன் எப்போதும் இருந்ததே யில்லை. பார்ப்பதற்குப் பதினாயிரம் கண் வேண்டும் போல இருக்கிறது. அதைப்பற்றி நான் அதிகமாகப் புகழ்ந்தால் என்னுடைய கண் திருஷ்டி தோஷமே பட்டுவிடுமென்று பயப்படுகிறேன்.

*லலிதகுமாரி:-* (ஒருவித சலிப்போடு) ஆம் என்ன முகம் வேண்டியிருக்கிறது. என் துரதிர்ஷ்டத்திற்கு முகம் ஒரு கேடா!

*மோகனராவ்:-* (நிரம்பவும் கவலையாகவும் வாஞ்சை யாகவும், ஏன் தங்கமே! அப்படி விரக்தியாகப் பேசுகிறாய்? இந்த உலகில் உனக்கென்ன குறையிருக்கிறது? மகாராஜாவின் வயிற்றில் பிறந்து சலக சுக போகங்களையும் செல்வங்களையும் அனுபவிக்கும் நீ ஏன் இப்படி விசனிக்கிறாய்? நான் இருக்கையில் உனக்கு இப்படிப்பட்ட துயரம் ஏன் உண்டாக வேண்டும்? நீ எப்போதும் சந்தோஷமாகவும் ஆனந்தமாகவும் இருக்க வேண்டும். அதைப் பார்த்துக்கொண்டிருப்பதே எனக்குச் சொர்க்கம்போல இருக்குமென்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேனே. நீ இப்படி பேசுவது தர்மமா?

*லலிதகுமாரி:-* (ஆழ்ந்த பிரேமையோடு) மோகனராவ்! இப்போது என் மனம் படும்பாட்டை என்னவென்று

வெளியிடப் போகிறேன்! உன் பக்கத்தில் வந்தால்தான் என் மனம் உண்மையில் ஆனந்தமடைகிறது என்ற விஷயம் ஒருபுறம் இருக்க, இந்த கர்ப்பம் முதிரமுதிர, என் மனசில் பெருகிக் கொண்டிருக்கும் விசனம் உன்னைப் பார்க்கும்போதெல்லாம் அப்படியே பொங்கிப் போகிறது. நான் மகாராஜாவின் வயிற்றில் பிறந்ததை நீ ஒரு பெருத்த பாக்கியமாக மதித்துப் பேசுகிறாய். ஆனால் நானோ அப்படி நினைக்கவேயில்லை. பூர்வ ஜென்மத்தில் நான் செய்த பாவமே என்னை இந்த மகாராஜாவின் வயிற்றில் கொண்டுவந்து போட்டதென்று நினைக்கிறேன்.

*மோகனராவ்:-* (முற்றிலும் நெகிழ்வாக) ஏன் கண்ணே அப்படி நினைக்கிறாய்?

*லலிதகுமாரி:-* நான் இந்த மகாராஜாவின் வயிற்றில் பிறந்த பாவத்திற்காகத்தானே, இவர்கள் தங்களுக்கு சமமான ராஜன் எங்கேயிருக்கிறான் என்று தேடிப்பிடித்து அவனுடைய பிள்ளையின் காலில் கொண்டுபோய் கட்டி என்னை மடித்தார்கள். இல்லையானால், நான் உன்னைப் போன்ற சாதாரண மனிதரைக் கலியாணம் செய்துகொண்டு மனமொத்து எப்போதும் சந்தோஷமாக வாழலாமல்லவா? நான் எங்கே பிறந்தேன்? எவ்வளவு தூரத்துக்கு அப்பால் போய் வாழ்க்கைப் பட நேர்ந்தது பார்த்தாயல்லவா! தஞ்சாவூர் மகாராஜாவின் குமாரனை ஒரு காட்டு மிருகமென்றுதான் சொல்ல வேண்டும். வெளிப்பார்வைக்கு மாத்திரம், உடம்பழகும், வார்த்தைகளின் சாமர்த்தியமும் இருக்கின்றன. அவனிடம் நிர்ணயமில்லை; பெருந்தன்மையில்லை; நீதியில்லை. அக்கிரமத்துக்கே இருப்பிடம். பூனா தேசத்திலுள்ள ஒரு பெண்ணை மகா காரியமாகக் கலியாணம் செய்துகொண்டு போய்க் கிளிகளைத் தங்கப் பஞ்சரங்களில் அடைப்பதுபோல, அந்தப்புரத்தில் அடைத்துவிட்டு, தாசிகளையும் வேசைகளையும் கட்டிக் கொண்டு அலைகிறான். அமிதமான செல்வமும், செல்வாக்கும் யாரிடத்தில் இருக்கின்றனவோ, அவ்விடத்தில் மனநிர்ணயம்

இருப்பது கடினமான விஷயம். ஆகையால், அந்த மனிதன் நினைப்பதெல்லாம் உடனே கிடைப்பதால், அவனது மனம் பழைய வஸ்துக்களை விட்டு எப்போதும் புதுப்புது வஸ்துவாக நாடிக்கொண்டே போகிறது. நான் மகாராஜாவின் மகளாகப் பிறக்காதிருந்தால், அப்படிப்பட்ட மனிதனைக் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்கலாம் அல்லவா? - என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட இளவரசரது தேகம் பறந்தது. கை கால்கள் பதறின. மீசைகள் துடித்தன. அவ்விடத்தை விட்டுத் தாம் எழுந்துபோய் ஒரே அடியில் அவளை வீழ்த்திவிட வேண்டுமென்ற எண்ணம் அவரது மனதில் தோன்றியது. அந்தச் சமயத்தில் சாமளராவ் அவரது கையைப்பிடித்து உள்ளே இழுத்து பொறுமையோடு இருக்கும்படி சைகை செய்தான். ஆதலால், அவர் ஸ்தம்பித்து அப்படியே உட்கார்ந்திருந்தார்.

மோகனராவ்: லலிதகுமாரி! தஞ்சாவூர் இளவரசர் துன்மார்க்கமான வழிகளில் பிரவேசிக்கிறதைப் பற்றி நீ எவ்வளவுதான் விசனமடைந்தாலும், அதைப்பற்றி நான் முற்றிலும் சந்தோஷமே அடைவதன்றி, அதை ஒரு பெருத்த பாக்கியமாக நினைக்கிறேன். ஏனென்றால், அவர் அப்படி இருப்பதனால்தானே நீ விரக்தியடைந்து உன் ஆசையை எல்லாம் என்மேல் திருப்பினாய். இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் இப்படிப்பட்ட அந்தரங்கமான பிரியமும் சிநேகமும் ஏற்படாதல்லவா? எனக்கும் உனக்கும் இப்படிப்பட்ட அன்னியோன்னியமான சிநேகம் ஏற்பட்டதைப் பற்றி நீ விசனப்பட மாட்டாயென்று நினைக்கிறேன்.

லலிதகுமாரி:- ஐயோ! உன்னுடைய சிநேகம் ஏற்பட்டதைப் பற்றி நான் எதற்காக விசனப்படுகிறேன். அந்த இளவரசன் என் வயிறெரிய நடந்துகொண்டதற்கு இதுதானே எனக்கு ஒரு பெரிய ஆறுதலாக ஏற்பட்டது. இல்லாவிட்டால், நான் இந்நேரம் அதே விசனத்தில் ஆழ்ந்து எப்படியாவது தற்கொலை செய்துகொண்டு இறந்துபோயிருப்பேனே! இப்போது உன்னுடைய சிநேகம்

ஒன்றுதான் இந்த உலகத்தில் எனக்கு இன்பகரமாகவும் பற்றுக் கோடாகவும் இருந்து வருகிறது. இப்போது நான் படும் விசனமெல்லாம் எதைப்பற்றி என்றால், அதையும் நான் வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறேன். நீயும் நானும் சுமார் ஒரு வருஷகாலமாகப் பழகி எவ்வளவோ சந்தோஷமாக இருந்து வந்தோம். மகா துர்ப்பாக்கியவதியான எனக்கு அந்த சந்தோஷமும் நிலைத்து நிற்கக் கூடாதென்று இந்தப் பாழும் சிசுவொன்று வந்து குறுக்கிட்டிருக்கிறது. மாசம் ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. பிரசவம் இன்றைக்கோ நாளைக்கோ என்று நினைக்கும்படியாக இருக்கிறது. நான் சாதாரணமாகக் கெர்ப்பவதி ஆகியிருந்தால், எனக்கு எத்தனையோ வைபவங்கள் நடக்கும். எத்தனையோ வைத்திய ஏற்பாடுகளும் மருந்துகளும் தயாராகும். இப்போது நானோ, இதை அடியோடு மறைத்து எல்லா விஷயங்களையும் திருட்டுத்தனமாக நடத்த வேண்டியிருக்கிறது. இதற்காக நான் தஞ்சாவூரிலிருந்து வரவழைத்திருக்கும் தாதிகள் இல்லாவிட்டால் இந்நேரம் என்னுடைய மானமும் போயிருக்கும், பிராணனும் போயிருக்கும். நான் போன இடத்தில் புல்லும் முளைத்துப் போயிருக்கும். அவர்கள் என் விஷயத்தில் உண்மையான பட்சமும், வாஞ்சையும் உடையவர்களாக இருப்பதால், இதற்காக அவர்களே சகலமான ஏற்பாடுகளையும் ரகசியமாகச் செய்து வருகிறார்கள். இப்போது என் மனசில் முக்கியமாக உண்டாகும் கவலை என்னவென்றால், என் வயிற்றிலிருந்து பிறக்கும் குழந்தையை நான் வைத்து வளர்த்து அதைப் பார்த்து ஆனந்தமடையாமல், அது பிறந்தமுதலே அதை அன்னியரிடம் விட்டு நான் வந்து விட வேண்டுமே என்ற விசனமும், அதன் பிறகு அதை நான் பார்க்கமுடியுமோ முடியாதோ என்ற விசனமுமே என்னை இராப்பகலாய் வதைத்துக் கொண்டிருக்கின்றன. இப்போது உன்னைப் பார்த்த உடனே அதே விசனந்தான் உண்டாகி என் மனதைக் கலக்குகிறது. என்ன செய்கிறதென்பது தெரியவில்லை.

மோகனராவ்:- (உண்மையான அனுதாபமும் இரக்கமும், தோன்ற) ஆம். அந்த விஷயம் நிரம்பவும் சங்கடமான விஷயந்தான். அதைப்பற்றி நானும் நினைத்து சஞ்சலப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். இந்தக் குழந்தை பிறந்த பிறகு இதை நான் ஒரு நாளாவது பார்க்கக் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஏக்கமும் என் மனசில் இப்போதே தோன்றிவிட்டது. ஆனால், ஒரு சந்தேகம். இந்தத் தாதிப் பெண்கள் இருக்கிறார்களே! இவர்கள் நீயும் நானும் சிநேகமாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார்களா? அவர்கள் குழந்தையை ஒரு தடவையாவது எனக்குக் காட்டுவார்களா?

லலிதகுமாரி:- ஆகா! உன்னுடைய குழந்தையை உனக்குக் காட்டாமலா இருக்கப் போகிறார்கள்! நானும் வெகுநாள் வரையில் இந்த கர்ப்பத்தை மறைத்து மறைத்துப் பார்த்தேன். இந்த ஊரிலுள்ள தாதிகளுக்குத் தெரிந்தால் இவர்கள் சங்கதியைத் தங்களுடைய மனிதருக்கு எப்படியும் வெளியிட்டு விடுவார்க ளென்றும், அது எப்படியும் வெளிப்பட்டுப் போகுமென்றும் நினைத்தே தஞ்சாவூரிலிருந்து இவர்களை வரவழைத்து, எனக்குப் பக்கத்தில் இவர்கள் மாத்திரமே இருக்க வேண்டுமென்று நான் ஏற்பாடு செய்தேன். இவர்கள் மகா யூகஸ்தர்கள். ஆகையால், என்னுடைய ரகசியத்தை வெகு சுலபத்தில் கண்டுகொண்டு சூட்சுமமான சில கேள்விகளைக் கேட்கத் தலைப்பட்டனர். அதன்மேல், நான் விஷயங்களை இவர்களிடம் வெளியிட நேர்ந்தது. எப்படியாவது நான் சில மனிதரிடத்தில் இதை வெளியிட்டாலன்றி, இது சம்பந்தமான ஏற்பாடுகளையெல்லாம் யார் செய்வார்கள்? ஆகையால், நான் சொல்லுமுன் அவர்களே இதைக் கண்டுபிடித்துக் கொண்டதால், நான் சொல்லும்படியான அவமானமும் எனக்கு மிச்சமாயிற்று. இந்தத் தாதிகள் முதலில் இந்த கர்ப்ப விஷயத்தைத் தெரிந்து கொண்டு, மற்ற விவரங்களைக் கேட்க பயந்து பேசாம

லிருந்தனர். அதன்பிறகு நான் உனக்கு ரகசியமான செய்திகள் சொல்லியனுப்பியதில் இருந்து நீதான் என்னுடைய சிநேகிதன் என்பதை யூகித்துக் கொண்டு அதைப் பற்றி என்னைக் கேட்டனர். நானும் அதை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. விஷயங்களையெல்லாம் அவர்கள் தெரிந்துகொண்டும் தெரிந்து கொள்ளாதவர்கள் போலவே இருந்து வருகிறார்கள். அவர்களை நம்பி நீ எந்த விஷயத்தையும் அவர்களிடம் சொல்லியனுப்ப லாம். குழந்தை பிறந்தவுடனே அவர்கள் உன்னிடம் வந்து அந்த சங்கதியைத் தெரிவிப்பார்கள். அதைப் பார்க்க வேண்டுமென்று நீ ஆசைப்பட்டால், அவர்களிடம் ஒரு வார்த்தை சொல். உடனே அவர்கள் உன்னை அழைத்துப்போய்க் காட்டுவார்கள்.

*மோகனராவ்:-* அப்படியே செய்கிறேன். அது இருக்கட்டும். இந்த விஷயம் உன் தகப்பனார் தாயார் முதலியவர்களுக்குக் கொஞ்சமும் தெரியவே தெரியாதா?

*லலிதகுமாரி:-* என் தகப்பனார் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவரிடம் இருந்து அவருக்குச் செய்ய வேண்டிய விஷயங்களை எல்லாம் என் தாய் கவனித்துக் கொண்டிருக் கிறாள். நான் எப்போதாவது ஒருதரம் போய் என் தகப்பனாரைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். என்னுடைய கர்ப்பத்தை என் தாயார் கவனித்திருக்க மாட்டாளென்று நினைக்கிறேன். அப்படி கவனித்திருந்தாலும், அவள் அதைப்பற்றி என் மேல் கோபங் கொள்ள மாட்டாளென்றே நினைக்கிறேன். தஞ்சாவூர் இளவரசன் என்னை இந்த இரண்டு வருஷகாலமாகப் புறக்கணித்து வைத்திருந்ததெல்லாம் அவளுக்குத் தெரியும். ஆகையால், நான் திருட்டுத்தனமாகவாவது சுகப்பட்டுப் போகட்டுமென்று நினைத்து, அதை அவ்வளவாகப் பாராட்டாமல் விட்டுவிடக் கூடியவள்தான். இருந்தாலும், விஷயத்தை அவர்களிடமெல்லாம் சொல்ல எனக்கு நிரம்பவும் வெட்கமாக இருக்கிறது.

மோகனராவ்:- உன் தகப்பனார் தேக அசௌக்கியப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு இந்த கர்ப்ப விஷயம் தெரிந்தால், அது நிரம்பவும் கெடுதலாக முடியும். ஆகையால், இது தெரியாமல் இருப்பதே நல்லது. ஏனென்றால் உனக்குச் செய்ய வேண்டிய சீமந்தம் முதலிய சடங்குகளைச் செய்யாமல் இதை மறைக்க வேண்டியிருப்பதைப் பற்றி அவர்கள் அதிகமாக விசனப்படுவார்கள். அதனால், உன் தகப்பனாருடைய வியாதியும் அதிகரிக்கும்.

லலிதகுமாரி:- நானும் அப்படி எண்ணித்தான் அவர்களிடம் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்துகொண்டு வந்திருக்கிறேன். அநேகமாய் அவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது என்றே நாம் நிச்சயமாக நம்பலாம். இந்தப் பிரசவம் வெளியில் தெரியாதபடி நிறைவேறிப் போய்விடும் என்றே எண்ணுகிறேன்; ஆனால், இனி மேல் இந்தக் குழந்தையை நாம் வைத்துக் காப்பாற்றுவதில் தான் கஷ்டமெல்லாம் இருக்கிறது. நான் இந்த ஊரில் இருக்கும் வரையில் குழந்தையையும் யாராவது வைத்து வளர்ப்பார்கள்; நான் எப்படியும் தஞ்சாவூருக்குப் போக நேரும். அப்போது அதை இங்கே விட்டுப்போகவும் மனம் வராது. அதை அழைத்துக்கொண்டு போகிறதாக வைத்துக்கொண்டால், அங்கே கடைசிவரையில் நம்பக்கூடிய உறுதியான மனிதர்களை நாம் எங்கே தேடிப் பிடிக்கிறது? என்றைக்காவது ஒருநாள் விஷயம் எப்படியும் வெளியாகிவிடும். என்னைத் தொலைப்பதற்கு ஏதாவது காரணம் அகப்படாதாவென்று எதிர்பார்த்திருக்கும் இளவரசனுக்கு இந்த விஷயம் தெரிந்து போகுமானால், அவன் நிர்த்தாக்ஷண்யமாக இதை பகிரங்கப்படுத்தி, என் மானம் அழிந்துபோகும்படி செய்து, என்னை விலக்கி இந்த ஊருக்கு அனுப்பிவிடுவான். அப்படி ஊர் சிரிக்கும்படி அவமானம் அடைந்தபின் நான் இந்த உயிரை வைத்திருக்கவே போகிறதில்லை. என் அவமானத்தை என் தாய் தகப்பனார் அறிவார்கள். ஆனால், அவர்களும் உடனே விஷம் தின்று

இறந்துபோவது நிச்சயம். என்றென்றைக்கும் அழியாத பழிப்பும் மானஹானியும் எங்கள் வம்சத்துக்கே ஏற்பட்டுப்போகும். எல்லாம் எதனால், மகா பாவியாகிய என் வயிற்றில் இந்தக் குழந்தை வந்து தோன்றியதனால் அல்லவா? இப்படி நான் துன்மார்க்கத்தில் இறங்குவதற்கு என் புருஷனென்று பெயர் வைத்துக்கொண்டு ஊரில் திரியும் அந்த இளவரசனுடைய துன்மார்க்கமும், அசட்டையுமே காரணமல்லவா? என் மனசில் இப்போது உண்டாகும் ஆத்திரத்தில் அந்த துஷ்ட மனிதன் இங்கேயிருப்பானானால், அவனுக்கு விஷமிட்டுக் கொன்று விடவும் நான் பின்வாங்க மாட்டேன்.

*மோகனராவ்:-* குழந்தையை நாம் தஞ்சாவூரில் எங்கே வைக்கிறதென்பதைப் பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை. அதை நானே என் வீட்டில் வைத்து வளர்த்து வருகிறேன். என் தாயாரிடம் கொடுத்து ஏதாவது ஒரு முகாந்திரம் சொல்லிவைத்தால், அவள் சரிதான் என்று ஒப்புக்கொண்டு, குழந்தையின் ரகசியத்தை வெளியில் விடாமல் வளர்த்து வருவாள். நீ அதைப் பார்க்க ஆசைப்பட்டால், ராத்திரி காலத்தில் அதைக் கொண்டுவந்து காட்டும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்.

*லலிதகுமாரி:-* நாம் அப்படியே செய்கிறதாக வைத்துக் கொள்வோம். இந்தக் குழந்தை சம்பந்தப்படும் வரையில் நமக்கு யாதொரு துன்பமும் இல்லாமல் போகிறதென்றே வைத்துக் கொள்வோம். இனி நான் தஞ்சாவூருக்கு வந்தபிறகும், என் புருஷன் என்னைக் கவனியாமல் அலட்சியமாக விட்டிருக்கத் தான் போகிறான். நாம் இருவரும் இனி நம்முடைய ஆயுசு கால பரியந்தம் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்திருக்க முடியாது என்பது என்னுடைய உறுதியான எண்ணம். ஸ்திரீகளுக்கு ஒரு குழந்தை பிறந்துவிடுமானால், அதற்கு மேல் அடிக்கடி குழந்தைகள் பிறந்துகொண்டே இருக்குமென்று தாதிகள் சொல்ல நான் கேள்வியுற்றிருக்கிறேன். அதற்கிணங்க,

நான் மறுபடியும் கர்ப்பிணி ஆகிவிட்டால், தஞ்சாவூரில் நான் அதை எப்படி மறைக்கிறது? இந்த ஊர் என்னுடைய சொந்த ஊர். இங்கே ஏராளமான வசதிகள் இருக்கின்றன. அதுவுமன்றி, இவ்விடம் தஞ்சாவூருக்கு வெகுதூரத்தில் இருப்பதால், இந்த விஷயம் வேறே யாருக்காவது தெரிந்தாலும், அது இந்த ஊரோடு அற்றுப்போகுமே அன்றி தஞ்சாவூர் வரையில் எட்ட முகாந்திரமில்லை. தஞ்சாவூரிலோ அந்த அனுகூலம் இருக்காது. ரகசியம் யாராவது ஒருவருக்குத் தெரிந்தால், அது உடனே சகலமான ஜனங்களுக்கும் பரவிப்போம். அடுத்த க்ஷணத்தில் விஷயம் இளவரசருக்கும் பெரிய ராணிக்கும் எட்டிவிடும். உடனே என் கதி அதோகதிதான். ஆகையால், நான் பயப்படுவது முக்கியமாக இந்த ஒரு குழந்தையைப் பற்றியதல்ல; இனி ஆயுசுகால பரியந்தம் நம்முடைய நீடித்த சிநேகத்தால் ஏற்படக்கூடிய அபாயங்களையும் இடர்களையும் பற்றியே நான் நிரம்பவும் பயப்படுகிறேன்.

மோகனராவ்:- ஏன்? இப்போது இங்கே உன்னோடுகூட இருக்கும் தாதிப்பெண்களான அம்மாளு, தனம், அபிராமி முதலியோர் நீ தஞ்சாவூருக்குப் போகும்போது உன்னோடு கூடத்தானே வரப் போகிறார்கள்? அவர்களையே நீ எப்போதும் உன்னிடம் தாதிகளாக வைத்துக்கொண்டிருந்தால், அவர்கள் இப்போது இருப்பதுபோல உன்னிடம் அந்தரங்க அபிமானம் உள்ளவர்களாக இருக்கமாட்டார்களா? இப்போது செய்வதுபோல இந்த விஷயங்களில் உனக்கு எப்போதும் உதவி செய்ய மாட்டார்களா?

லலிதகுமாரி:- இந்தத் தாதிகள் இப்போது நிரம்பவும் உறுதியான மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள்; இருந்தாலும் அங்கே போனபிறகு எப்படியிருப்பார்களோ? மனித சுபாவம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி சிறுகச் சிறுக மாறுதலடையக் கூடியது. இந்தத் தாதிப்பெண்களுக்கும் அந்த இளவரசனுக்கும் அந்தரங்கமான சிநேகம் உண்டென்று நான் ஏற்கெனவே பல

தடவைகளில் கேள்வியுற்றிருக்கிறேன். இவர்கள் மறுபடியும் திரும்பி அந்த ஊருக்குப் போனால், இளவரசன் இவர்களை எப்படியும் சந்தித்து பழையபடி சிநேகம் பாராட்ட நேரும். இவர்களோ அற்ப வேலைக்காரர்கள். இவர்களுடைய புத்தியும் அற்ப புத்தியாகத்தான் இருக்கும். இந்த ரகசியத்தை இளவரசனிடம் சொன்னால், அவன் தங்களுக்குப் பெருத்த சன்மானமாகக் கொடுப்பானென்று நினைத்து இவர்கள் எல்லாவற்றையும் அவனிடம் சொன்னாலும் சொல்லக்கூடும். அல்லது, இவர்கள் அவனிடம் இதை வெளியிடவில்லை என்றே வைத்துக் கொண்டாலும், இவர்கள் யௌவனப் பருவப் பெண்கள். இவர்கள் எப்படியும் வெகு சீக்கிரம் ஒரு புருஷனை அடையக் கூடியவர்கள். அப்படிஅடையும்போது, ஒருவருக் கொருவர் புது மோகத்தில் தங்கள் மனசிலுள்ள ரகசியங்களை எல்லாம் எப்படியும் வெளியிட்டுக் கொள்வார்கள். ஒருவேளை இந்த ரகசியத்தையும் தாதிப்பெண்கள் தத்தம் புருஷரிடம் சொல்லக் கூடும். அந்தப் புருஷர் இன்னும் அவர்களிடம் அந்தரங்க நட்பாயிருக்கும் வேறு பிற புருஷரிடத்திலோ ஸ்திரீகளிடத்திலோ ரகசியமாக வெளியிடுவார்கள். இதேமாதிரி சங்கதி ஒரு க்ஷணத்தில் ஊர் முழுதும் பரவிப்போகும். எந்த விஷயமும் ஒருவருக்குத் தெரிந்தால் அந்தரங்கம் என்றும், இருவருக்குத் தெரிந்தால் பகிரங்கம் என்றும் சொல்வது உண்டு அல்லவா? ஆகையால், நாம் இந்தத் தாதிப் பெண்களை எப்போதும் நம்பியிருப்பது முடியாத காரியம் என்றே நினைக்கிறேன்.

மோகனராவ்:- அப்படியானால், நாம் வேறே என்ன செய்யலாமென்று நினைக்கிறாய்? உனக்கு இத்தனை துன்பங் களும் மனவேதனையும் உண்டானதற்கு முக்கியமாக நானே காரணமானவன். உன் இடர்களை எல்லாம் போக்குவதற்கு ஏதாவது வழியிருந்து, அதை என்னிடம் வெளியிடுவாயானால், நான் அப்படியே செய்யத்தடை இல்லை. உன் பொருட்டு நான் என் உயிரையும் கொடுத்துவிடத் தடையில்லை.

லலிதகுமாரி:- நீ என்ன செய்வாய்? உன்பேரில் நான் குறை கூற என்ன நியாயமிருக்கிறது? நான் பிரியப்பட்டு உன்னைத் தேடிப் பிடித்தேன். இனி எப்போதும் உன்னை நான் கைவிடப் போகிறதே இல்லை. இப்போது நான் யோசிக்கிறதெல்லாம் கூடி, இனி நாம் தஞ்சாவூருக்குப் போய் ஒளிந்திருந்தபடி ஒருவரை ஒருவர் சந்தித்து, கண்ணுக்குக் கண்ணான நம்முடைய குழந்தைகளை ஒளித்து அன்னியர்களிடம் அநாதைகளாக விடுத்து வைத்து அவைகளோடு நாம் கொஞ்சிக்குலாவி சீராட்டும் ஆனந்தத்தை இழந்து பலவகையில் துன்பங்களையும் இடையூறுகளையும் அனுபவிப்பதைவிட, பட்டமகிஷி என்ற இந்த வெறும் பெருமையையும் ஆடம்பரத்தையும் அறவே ஒழித்துவிட்டு நீயும் நானும் கண்காணாத ஓர் ஊருக்குப் போய் ரகசியமாக இருந்து ஆயிசுகால பரியந்தம் சந்தோஷமாக வாழலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. நான் இவ்விடத்தி லிருந்து புறப்பட்டு வரும்போது ஏராளமான திரவியத்தையும் ஆபாரணங்களையும் எடுத்துக்கொண்டு வந்து விடுகிறேன். நாம் எங்கேயாவது தூரதேசம் ஒன்றுக்குப் போய், நமக்குத் தெரிந்த மனிதர் எவர் கண்ணிலும் படாமல் சௌக்கியமாக இருப்போம். அதற்கு நீ சம்மதிக்கிறாயா?

மோகனராவ்:- ஆகா! இந்த விஷயத்திலும் சரி; வேறு எந்த விஷயத்திலும் சரி; நீ என்னுடைய சம்மதத்தைக்கூடக் கேட்க வேண்டுமா? நீ உன்னுடைய சம்மதப்படி எனக்கு எவ்விதமான கட்டளை வேண்டுமானாலும் பிறப்பிக்கலாம். அதை நான் சிரசாகவகித்து அதன்படி நடக்கக் காத்திருக்கிறேன். நீ பிரஸ்தாபிக்கும் விஷயத்தில் நான் ஆட்சேபிப்பதற்கு என்ன இருக்கிறது? கரும்பு தின்ன யாராவது கூலி கேட்பார்களா? நீயும் நானும் சகல சம்பத்துகளோடும் எப்போதும் ஒன்றாக இருப்பதைவிடப் பெரிய பாக்கியம் இந்த உலகத்திலேயே வேறே இருக்கப் போகிறதா! இல்லவே இல்லை. ஆகையால், உன் பிரியப்படியே நாம் தனியாகப் போய்விடலாம். அதற்குத்

தகுந்த ஏற்பாடுகளையெல்லாம் நீ உடனே செய்து விடலாம். என்னைப்பற்றி நீ கொஞ்சமும் யோசிக்க வேண்டியதில்லை. இந்த நிமிஷம் நீ புறப்பட்டு வருவதானாலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

லலிதகுமாரி:- இந்த ஏற்பாட்டுக்கு நீ ஒருவேளை சம்மதிப்பாயோ மாட்டாயோ என்ற கவலைதான் என் மனசிலிருந்து வந்தது. ஏனென்றால், உனக்குத் தாயார் சம்சாரம் முதலியோர்கள் இருந்தால், நீ அவர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து வந்துவிட சம்மதிக்க மாட்டாய் என்று நினைத்துக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். நல்லவேளையாக என்னுடைய முக்கியமான கவலை ஒழிந்தது. இனி எனக்கு யாரைப்பற்றியும் கவலையில்லை. சண்டாளப் பாவியான என் புருஷன் முகத்தில் இனி முழிக்காமல் இருக்கும்படியான பெருத்த பாக்கியம் எனக்கு வாய்த்ததைப் பற்றியும் நாம் நம்முடைய குழந்தைகளை ஒளித்து வைக்கவேண்டிய துன்பம் இல்லாமல் போவதைப் பற்றியும் நான் இப்போது முதலே பெருத்த சந்தோஷம் அடைகிறேன். ஆனாலும், இந்தப் பிரசவத்துக்குத் தேவையான ஏற்பாடுகளெல்லாம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால், இது இவ்விடத்திலேயே சுலபமாக நிறைவேறிப் போகட்டும். அதன்பிறகு நான் இவ்விடத்திலேயே இரண்டு மூன்று மாதகாலம் இருந்து என் உடம்பைத் தேற்றிக் கொள்ளுகிறேன். அதற்குள் என் தகப்பனாருடைய உடம்பும் குணப்பட்டுவிடும். அவர் குணமடைவதற்குள், நான் காணாமல் போய்விட்டால், அந்த விசனத்தைப் பொறுக்க முடியாமல் என் தகப்பனார் இந்த வியாதியிலிருந்து மீளாமல் இன்னமும் அதிக கேவலமான நிலைமைக்கு வந்துவிடுவார். குழந்தையும் அதற்குள் கொஞ்சம் பெருத்துப் போகும். இவைகளை எல்லாம் உத்தேசித்து நாம் இந்த ஊரில் எப்படியும் இன்னமும் இரண்டு மூன்று மாசகாலம் அவசியம் இருக்க வேண்டியிருக்கிறது.

மோகனராவ்:- சரி; உன்னிஷ்டம்போலவே செய்யலாம். அதைப்பற்றி நீ இனிச் சிந்திக்க வேண்டியதில்லை. ஆனால், இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது. நாம் ஊரைவிட்டுப் போனபிறகு அந்தச் சங்கதி எப்படியும் தஞ்சாவூருக்கு எட்டும். எட்டினால், இளவரசர் ஆள்களை விட்டு நம்மைத் தேடினாலும் தேடுவார். அவர்களுடைய கண்ணிலெல்லாம் படாமல் எங்கேயாவது பத்திரமான இடத்தில் இருக்கவேண்டும்.

லலிதகுமாரி:- அந்த அயோக்கியன் ஆளை அனுப்பி நம்மைத் தேடுவான் என்று நினைக்கிறாயா? அவன் ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டான். நான் அவனுடைய அரண்மனையில் அவனுக்கு ஓரடி தூரத்தில் இருக்கையில் என்னைத் தேடாத மனிதனா,நான் அவனை விட்டு ஓடிப்போன பிறகு என்னைக் கவனிக்கப் போகிறான். நான் போனதைப் பற்றி அவன் சந்தோஷப்படுவானே அன்றி கொஞ்சமும் விசனப்படவும் மாட்டான். நம்மைத் தேடவும் மாட்டான். ஆகையால், நமக்கு அந்த யோசனையே வேண்டியதில்லை. என் தாய் தகப்பனார் என்னைத் தேட ஆள்களை அனுப்புவது நிச்சயம். எல்லா வற்றிற்கும் நாம் புறப்பட்டுப் போகும்போது இவர்களுக்கு ஒரு கடிதமும், தஞ்சாவூரானுக்கு ஒரு கடிதமும் எழுதியனுப்பி விட்டுப் போய்விடவேண்டும். என்னுடைய புருஷன் என்னைக் கைவிட்டு விட்டதைக் கருதி நான் வேறொரு புருஷனை அழைத்துக்கொண்டு ஊரைவிட்டுத் தூரதேசத்துக்குப் போய் விட்டேன். ஆகையால், என்னைத்தேட வேண்டாமென்று கடிதம் எழுதி இவர்களுக்கு வைத்துவிட்டு, அவனுக்கும் அனுப்பி விட்டுப் போய்விடலாம். அதைப் பார்த்து இவர்களும் பேசாமல் இருந்து விடுவார்கள். அவனும் பேசாமல் இருந்து விடுவான்.

மோகனராவ்:- அதுவும் நல்ல யோசனைதான். நீ எல்லா விஷயங்களையும் ஏற்கெனவே முடிவுகட்டி அதற்குத் தகுந்த திட்டங்கள் எல்லாம் போட்டு வைத்திருக்கிறாய்! உன்னுடைய

புத்திசாலித்தனத்தை நான் என்னவென்று சொல்லப்போகிறேன்-என்றான்.

அப்போது அரண்மனையின் ஹாஜார வாசலிலிருந்த வேலைக்காரன் மணி ஒன்பது அடித்தான்.

அதைக்கேட்ட லலிதகுமாரி சரேலென்று மேடையை விட்டுக் கீழே இறங்கினவளாய், ''மோகனராவ்! நேரமாகிறது; மணி ஒன்பதாகிவிட்டது. நான் இப்போதுதான் வந்தேன் போலிருக்கிறது; எவ்வளவு சீக்கிரத்தில் பொழுது போய் விட்டது. உன்னிடம் வந்தால் என் மனம் எல்லாவற்றையும் மறந்து பரவசமடைந்து விடுகிறது. உன்னிடம் ஒருவிதமான மோகன சக்தி இருக்கிறது. உன் பெயர் சரியான பெயர்தான். நான் போய் வரலாமா? எங்கே எனக்கு உத்தரவு கொடு. என்னை ஒருதரம் அணைத்துக்கொள். ஆசையாகிய தாகத்தினால் என் உடம்பு பறந்து போய்விடும்போல இருக்கிறது'' என்று நிரம்பவும் நைவாக இளகி வாஞ்சையோடு கூறினாள்.

உடனே மோகனராவும் கீழே இறங்கி, ''கண்ணே! உன்னை விட்டு நான் பிரியும் நேரம் வந்துவிட்டதே! இந்தத் தொந்தரவு இல்லாமலே சதாகாலமும் நான் உன்னோடு இருக்கும் காலம் எப்போது வரப்போகிறதோ தெரியவில்லையே. உன் உடம்பு ஸ்திதியில் நாளைக்கு நீ வரமுடியுமோ முடியாதோ. எல்லா வற்றிற்கும் நீ அடிக்கடி உன் தேக நிலைமையை எனக்குத் தெரிவித்துக் கொண்டிரு'' என்று மிகமிகக் கனிவாகக் கூறிய வண்ணம் அவளை மிருதுவாகப் பிடித்தணைத்து, பலமான ஓசையோடு நாலைந்து முத்தங்கள் கொடுத்தான். அந்த ஓசை இளவரசரது காதில் நன்றாகப் பட்டது. அவரது இரத்தம் கொதித்துக் கொந்தளித்து எழுந்தது. தாம் உடனே வெளியில் வந்து அவர்கள் இருவரையும் கொன்று போட்டுவிடலாமா என்று எண்ணினார்.

உடனே சாமளராவ் அவரைப் பிடித்துக்கொண்டான். அடுத்த க்ஷணத்தில் கள்ளக்காதலர் இருவரும் அவ்விடத்தை விட்டுப் போய் விட்டனர் என்பது தெரிந்தது. அரை நாழிகை சாவகாசம் கழிந்தது. சலவைக்கல் மேடைக்குள்ளிருந்த மனிதர் இருவரும் சந்தடி செய்யாமல் நகர்ந்து மெதுவாக வெளியில் வந்து தலையை நீட்டிப் பார்த்தனர். யாரும் அவ்விடத்தில் காணப்படவில்லை. இருவரும் உடனே வெளியில் வந்து, நாற்புறங்களிலும் திரும்பிப் பார்க்க, அந்தப்புர வாசலண்டை யிலிருந்த லாந்தர்க் கம்பத்தடியில், தாதிகள் இருவரும், லலிதகுமாரி தேவியின் மேல் பனாரீஸ் அங்கியைப் போர்த்துக் கொண்டிருந்தனர். லலிதகுமாரி தேவியின் முதுகுப் பக்கமே இளவரசருக்குத் தெரிந்தது. ஆனாலும், அவளது சிரத்தில் ராணிமுடி இருந்ததையும், உடம்பு முழுதும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததையும், முன் பக்கத்தில் வயிறு புடைத்து நீண்டிருந்ததையும் இளவரசர் சந்தேகமறக் கண்டு வியப்பே வடிவாக மாறி ஸ்தம்பித்து நின்று, ''என்ன சாமளராவ்! இன்னமும் நமக்கு வேறே சாட்சி கூட வேண்டுமா? போதுமல்லவா எனக்குக் கிடைத்த மரியாதை! நாம் இன்னமும் சில தினங்கள் இருந்தால், மேலும் அநேக ரகசியத்தை வெளிப்படுத்துவதாக நம்முடைய கடிதத்தில் எழுதி யிருக்கிறான். நமக்கு இதுவே போதுமானது. இனி நாம் பார்க்கவேண்டிய விஷயம் ஒன்றும் பாக்கியில்லை. பொழுது விடிவதற்குள் நாம் இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடுவதுதான் நல்லது'' என்றார்.

உடனே சாமளராவ், ''நாம் இவ்வளவோடு போனால் பூரண சந்திரோதயம் நம்முடைய பேச்சை நம்புவாளா? இன்னம் கொஞ்ச காலமிருந்து அவளுக்குத் திருப்திகரமாக ஏதாவது சாட்சியம் சம்பாதித்துக்கொண்டு போவோம்'' என்றான்.

39-வது அதிகாரம்

## லீலாவதியும் நீலமேகம் பிள்ளையும்

லீலாவதியின் கை கால்களை எல்லாம் கட்டி மார்பின் மீது சார்த்திக்கொண்டு, திரவிய மூட்டையைக் கையில் பிடித்துக் கொண்டு மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையைவிட்டு வெளிப்பட்ட கட்டாரித்தேவன் அதிக விரைவாக நடந்து செல்லத் தொடங்கினான். முக்கியமான பெரிய ராஜ வீதியின் வழியாகத் தான் செல்வது நிரம்பவும் அபாயகரமானதென்று நினைத்த கட்டாரித்தேவன் இருண்டிருந்த சிறிய சந்துக்களில் நுழைந்து வாயுவேக மனோவேகமாகப் பாய்ந்து போய்க் கொண்டிருந்தான். அப்போது லீலாவதியின் மனநிலைமை எப்படி இருந்தது என்பதை நாம் சிறிது கவனிப்போம். அவள் தனது பெரிய தந்தையின் சொல்லை மீறமாட்டாதவளாய்த் தன் மனதிற்கு விரோதமாக, ஷண்முகவடிவை வஞ்சித்து, இருளில் ரதிகேளி விலாசத்திற்குள் அழைத்துக்கொண்டுபோய் விசை வைத்த நாற்காலியில் மாட்டிவிட்டு வந்தாள். ஆனாலும், அவளது மனதில் ஒருவித இரக்கமும், திகிலும், அனுதாபமும் எழுந்து பெருகிக்கொண்டே இருந்தன. யாதொரு குற்றமுமற்ற மகா சுத்தமான மனுஷியான அந்த யௌவன ஸ்திரீயின் விஷயத்தில் தான் அப்படிப்பட்ட அட்டூழியமான வஞ்சகம் புரிந்துவிட்டதைப் பற்றி அவள் எண்ணிஎண்ணித் தன்னைத் தானே இகழ்ந்து கண்டித்துக் கொண்டிருந்தாள். அப்போது, அவ்விடத்திலிருந்த மருங்காபுரி ஜெமீந்தார் பக்கத்திலிருந்த கதவண்டை இருக்கும்படியும், அவசியம் நேருமானால், உள்ளே வந்து தமக்கு உதவி செய்யும்படியும் அவளிடம் சொல்லி அவளை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். அதன்பிறகு உட்புறத்தில் ஜெமீந்தாருக்கும், ஷண்முகவடி விற்கும் நடந்த சச்சரவையும் சம்பாஷணையையும் லீலாவதி

கேட்டுக்கொண்டே கதவின் பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருந்தாள். கடைசியில் நல்ல தருணத்தில் கட்டாரித்தேவன் வெளிப்பட்டு ஷண்முகவடிவை விடுத்து, மருங்காபுரி ஜெமீந்தாரை நாற்காலியில் மாட்டியதைக் கண்டவுடனே, லீலாவதி முற்றிலும் பிரமிப்பும் திகிலும் குலை நடுக்கமும் கலக்கமும் மயக்கமும் அடைந்து, அப்போது ஒருவேளை ஏராளமான கொள்ளைக்காரர்கள் வந்து தமது மாளிகைக்குள் நுழைந்துகொண்டிருப்பார்கள் என்றும், தான் அவ்விடத்தைவிட்டுக் கீழே சென்றால் அவர்கள் குறுக்கிட்டுத் தன்னைப் பிடித்துக்கொள்வார்களோ என்றும் நினைத்து அவ்விடத்திலேயே சுவரோடு சுவராக ஒன்றி மறைந்து கொண்டிருந்தாள். கட்டாரித்தேவனை அவள் அண்ணாசாமி நாயக்கன் என்ற பெயரினால் அறிவாளே அன்றி கட்டாரித் தேவன் என்ற பெயரால் அறிந்தவளன்று. அதுவுமன்றி, கட்டாரித்தேவன் அன்றையதினம் காலையில் தமது மாளிகைக்குள் வந்து தன்னோடு பேசிவிட்டுத் தானும் இன்ஸ்பெக்டரும் பேசியதை மறைந்து கேட்டான் என்பதையும், அதன்பிறகு அந்த மாளிகைக்குள்ளேயே ஒளிந்து கொண்டி ருக்கிறான் என்பதையும் அவள் அறியாதவள். ஆதலால், அப்போது திடீரென்று தோன்றி ஜெமீந்தாரை நாற்காலியில் மாட்டி வைத்தவன் கட்டாரித்தேவனாகத்தான் இருக்க வேண்டுமென்று அவள் சிறிதும் சந்தேகிக்கவே இல்லை. அவன் தற்செயலாக வந்த யாரோ ஒரு திருடன் என்று நினைத்து நிரம்பவும் கிலி கொண்டு ஸ்தம்பித்து மௌனமாக நின்றுவிட்டாள். தான் இறங்கிப் போய்க் கூச்சலிட்டு வேலைக்காரர்களை எழுப்ப வேண்டுமென்ற எண்ணம் அவளது மனதில் தோன்றியது. ஆனாலும், எவ் வித்தில் எந்தத் திருடன் மறைந்திருந்து தன்னைப் பிடித்துக் கொள்வானோ என்ற அச்சம் அவளது காலை நிரம்பவும் கெட்டியாகத் தரையோடு தரையாக அழுத்திப் பிடித்துக் கொண்டே இருந்தது. சிறிது நேரத்தில் கட்டாரித் தேவன்

இரும்புப் பெட்டியண்டை வந்தபோது அவளது உயிர் அநேகமாய்ப் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும். தான் இருப்பது அவனுக்குத் தெரிந்தால், அவன் ஒருகால் தன்னையும் பிடித்து விசை வைத்த நாற்காலியில் மாட்டி விடுவானோ என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டவளாய் அவள் பேச்சுமூச்சற்று, பக்கத்திலிருந்த பதுமைகளோடு தானும் ஒரு பதுமைபோல அசையாது கண்ணிமையாது நின்று கொண்டிருந்தாள். அந்தத் திருடன் பொருளை அபகரித்துக்கொண்டு சிறிது நேரத்தில் அவ்விடத்தைவிட்டு ஒரே முடிவாகப் போய்விடுவான் என்று அவள் கட்டிலடங்கா ஆவலோடு எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக, அவன் உள்ளே போய்த் திரும்பி நேராகத் தான் இருந்த இடத்திற்கு வந்து தன்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தனது வாயில் துணியை அடைத்துக் கைகால்களைக் கட்டித் தூக்கிக் கொண்டு போனது அவளுக்கு முதலில் கனவின் காட்சி போலவும், சிறிதும் நம்பக் கூடாததாகவும் இருந்தது. ஆஜானுபாகுவாகப் பெருத்திருந்த ஓர் அரக்கன் தன்னை ஒரு குழந்தை போல அலட்சியமாகத் தூக்கி மார்பில் சார்த்திக் கொண்டு போனதைக் காண, அவளது மனம் முற்றிலும் தளர்ந்து சோர்வடைந்து மயங்கி விழுந்து போயிற்று. அவள் தனது உடம்பை அப்புறம் இப்புறம் அசைக்கவும் அஞ்சினவளாய் உயிரற்ற பிணம்போல அப்படியே சோர்ந்து கிடந்தாள். திருடனான அந்த அரக்கன் தன்னை எவ்விடத்திற்குக் கொண்டு போவானோ, கொண்டு போய் எவ்விதமான தீங்கிழைப்பானோ என்ற ஒரே எண்ணமும் திகிலும் அவளது மனதில் குடி கொண்டிருந்தன. அவன் பற்பல சந்துகளையும் கடந்து தன்னை எந்தத் திக்கில்கொண்டு போகிறான் என்பதை அவள் நன்றாக கவனித்துக்கொண்டே இருந்தாள். தெய்வச் செயலாக யாராவது மனிதர் குறுக்கிட்டுத் தன்னை விடுவிக்க மாட்டார்களா என்றும் அவளது மனம் எதிர்பார்த்தது. மகா புனிதவதியான ஷண்முக வடிவைத் தான் நம்பவைத்துப் படுமோசத்தில் வீழ்த்தியதைக் கண்டு பொறாமல் தெய்வமே தன்னையும் தனது பெரிய

தந்தையையும் அவ்வாறு நிரம்பவும் பயங்கரமான தண்டனைக்கு ஆளாக்கி இருக்கிறது என்ற நினைவு அடிக்கடி அவளது மனதில் தோன்றி உறுத்திக்கொண்டே இருந்தது. ஆகையால், அந்தப் பயங்கரமான பெருத்த அபாயத்தி லிருந்து தன்னைக் காப்பாற்றும்படி, கடவுளை நினைத்துப் பிரார்த்திக்கவும் அவளது மனம் கூசியது. அத்தகைய விவரிக்க வொண்ணாத பரமசங்கடமான கொடிய பயங்கர நிலைமையில் லீலாவதி கட்டாரித்தேவனது மார்பின்மீது சாய்ந்திருக்க, கால்நாழிகை நேரத்தில் அவன் தஞ்சைப் பட்டணத்தைக் கடந்து சுமார் ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் ஆட்டுமந்தை தெரு என்ற இடத்தை அடைந்தான்.

அந்த இடத்தில் வீடுகள் தாறுமாறாகவும் மூலைக்கொன்று மாகவும் அமைந்திருந்தன. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. அங்கிருந்த வீடுகளில், பெரும்பாலும் கள்ளர்கள் என்ற வகுப்பாரே வசித்து வந்தனர். அவ்விடத்தை அடைந்த கட்டாரித்தேவன் அதிக நெருக்கமாகவும் இருளாக வும் இருந்த ஒரு சந்திற்குள் நுழைந்து, அவ்விடத்தில் காணப்பட்ட ஒரு பெரிய ஓட்டுவீட்டு வாசலையடைந்து, தனது கையிலிருந்த மூட்டையைக் கீழே வைத்துவிட்டு அவசரமாக இரண்டு மூன்று தரம் கதவை லொட்டு லொட்டென்று தட்டினான். சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. உட் புறத்திலும் இருள் அடர்ந்திருந்தது ஆகையால், கதவைத் திறந்தது யாரென்பதை லீலாவதி தெரிந்துகொள்ளக் கூட வில்லை. எங்கும் நிசப்தமும் காரிருளுமே மயமாக நிறைந்திருந்தமையால், லீலாவதியின் திகில் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்து அவளது உடம்பை நடுக்குவித்தது. ‘ஐயோ! தெய்வமே! இந்த முரட்டுத் திருடன் என்னை எப்படி இம்சிக்கப் போகிறானோ தெரியவில்லையே! என்ன செய்யப் போகிறேன். ஈசுவரா! என்னை இந்தச் சமயத்தில் நீதானப்பா காப்பாற்ற வேண்டும்’ என்று லீலாவதி பலவாறு எண்ணமிட்டு

சஞ்சலத்தில் ஆழ்ந்தவளாயிருக்க, கட்டாரித்தேவன் அவளைத் தூக்கிக் கொண்டு அந்த வீட்டிற்குள் நுழைந்தான்; உடனே வெளிக்கதவு மூடி உட்புறம் தாளிடப் பெற்ற ஓசை சடேரென்று கேட்டது. அந்த ஓசை லீலாவதியின் புண்பட்ட இதயத்தில் போய் ஈட்டியால் குத்துவதுபோலத் தாக்கியது. அவளது உயிர் ஊசலாடத் தொடங்கியது. அன்றோடு தனது உயிர் போவது நிச்சயம் என்ற உறுதி அவளது மனதில் தோன்றத் தோன்ற, அவளது மனோதிடமும் நம்பிக்கையும் அடியோடு கைவிட்டுப் போயின. அவளது வாயில் திணிக்கப்பட்டிருந்த துணி அவள் மூச்சு ஒழுங்காக விடமாட்டாமல் தடுத்துக் கொண்டிருந்தது. ஆகையால், மூச்சு திணறித் திக்குமுக்கலாடிக் கொண்டிருந்தது. கை கால்கள் எல்லாம் இறுகக் கட்டப்பட்டிருந்தன ஆதலால், அங்கங்கே, இரத்தம் தேங்கி மரத்துப் போய் விண்விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்தது. அவ்வாறு லீலாவதி மரணவேதனை அனுபவித்தவளாய் இருந்த சமயத்தில், கட்டாரித்தேவன் அவளை இரண்டாங் கட்டிற்குள் கொண்டுபோய் அவ்விடத்தி லிருந்த கூடத்தில் இறக்கிவிட்டு, ''பாட்டி! விளக்கைப் பொருத்து'' என்று கூறினான். உடனே ஒரு சிறிய விளக்கு பிரகாசித்தது. இருளே மயமாக இருந்த இந்த இடமும் அங்கிருந்த பொருட்களும் உடனே ஸ்பஷ்டமாகத் தெரிந்தன. அந்த இடம் நிரம்பவும் விஸ்தாரமானதாகக் காணப்பட்டது. ஆனாலும், ஏராளமான தட்டுமுட்டு சாமான்களும், கட்டை முட்டைகளும், தொம்பைக் கூண்டுகளும், ஆடுகளும், விசிப் பலகையும் சட்டிப் பானைகளும், மொந்தைகள் நிறைந்த உறிகளும், கயிற்று வடங்களும், இன்னம் விவரிக்க இயலாத எண்ணிறந்த சாமான்களும் நிறைந்து மூச்சுவிடவும் இடமில்லாதபடி அடைத்துக் கொண்டிருந்தன. லீலாவதி நாற் புறங்களிலும் சுற்றிப் பார்த்துப் பிரமிப்படைந்தாள். ஏனென்றால், தன்னைத் தூக்கிக்கொண்டு வந்த மனிதன் அப்போது அவ்விடத்தில் காணப்படவில்லை. அவளுக்கருகில் சிறிது தூரத்தில் ஒரு கிழவி மாத்திரம் நின்று கொண்டிருந்தாள்.

அந்தக் கிழவிக்கு சுமார் ஐம்பது வயது முடிந்திருக்கலாம். ஆனாலும், அவளது உடம்பு குள்ளமாகவும், அம்புபோலப் பாயக்கூடிய சுறுசுறுப்பும், தேகக்கட்டும், கருவேப்பிலைக் குச்சுபோன்ற தோற்றமும் உடையதாகவும் காணப்பட்டது. உடம்பின்தோல் பேரீச்சம்பழத்தின் தோல்போலச் சுருங்கிப் போயிருந்தது. வாயில் பற்களே காணப்படவில்லை. தலையில் இடும்பாவனம் காடுபோலக் காணப்பட்ட செம்பட்டை மயிர் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. கருகமணி, சிவப்புப் பனையோலை, கொப்பு, நாகவடம், தண்டட்டிகை, மூக்குத்தி, பித்தளை மோதிரங்கள், நெளிகள் முதலிய ஆபரணங்கள் அவளது உடம்பை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அவள் தோற்றத்திலிருந்தே கள்ள ஜாதியைச் சேர்ந்த ஸ்திரீயென்பது எளிதில் தெரிந்தது. அந்தக் கிழவி உடனே நெருங்கி வந்து கீழே விடப்பட்ட லீலாவதியின் வாயிலிருந்த துணிப்பந்தை விலக்கி விட்டுக் கைகால்களிலிருந்த கட்டுகளை அவிழ்த்து விட்டவளாய், "ஏம்மா! தாவத்துக்கு கொஞ்சூண்டு தண்ணி குடிக்கிறியா?" என்று அன்போடு வினவினாள்.

கட்டுகள் விலக்கப்பட்டதொன்றே லீலாவதிக்குப் பரமசுகமாக இருந்தது. அவள் தனது கைகளையும் கால்களையும் மெதுவாக உதறி உதறி சரிப்படுத்திக் கொண்டாள். அவளது நெஞ்சு முற்றிலும் காய்ந்துபோயிருந்தது. ஆனாலும், முற்றிலும் அநாகரிகமாகக் காணப்பட்ட அந்தக் கிழவியிடத்தில் தண்ணீர் வாங்கிக் குடிக்க, அவளுக்கு அருவருப்பாக இருந்தமையால், அவள் தனக்குத் தாகமில்லையென்று மறுமொழி கூறினாள். அதைக்கேட்ட கிழவி, "சரி, அப்படியானா நீ இந்த விசிப்பலகை மேலே ஏறிப் படுத்துக்க. நான் போறேன்" என்று கூறிவிட்டு அப்பால் போய்விட்டாள். விளக்குமாத்திரம் அவ்விடத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. லீலாவதி தட்டுத்தடுமாறி மெதுவாக எழுந்து விசிப்பலகையின் மேல் உட்கார்ந்து சுவரில் சாய்ந்துகொண்டாள். அவளது உடம்பின்

அப்போதைய நிலைமை பரமாநந்த சுகமே மயமாக நிறைந்ததாய் இருந்ததனால், அவளது மனநிலைமை சொற்களால் விவரிக்க இயலாததாக இருந்தது. கிழவி தன்னிடம் அன்பாகப் பேசித் தனக்குத் தண்ணீர் உபசாரம் செய்ததிலிருந்து அவர்கள் தனது உயிருக்கு எவ்வித ஹானியும் கருதவில்லை யென்பது ஒருவாறு விளங்கியது. ஆனாலும், தன்னிடம் ஏதோ துன்மார்க்கமான எண்ணம் கொண்டே அந்த முரட்டுத் திருடன் தன்னை அவ்வளவு தூரம் தூக்கிச் சுமந்து அவ்விடத்திற்குக் கொணர்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது. தான் நற்குலத்தில் பிறந்து உயர்ந்த இடத்தில் வளர்ந்து, கடைசியில் புருஷன் விஷயத்தில் துர்ப்பாக்கியவதியாக இருந்ததுபோல இறுதியில் தான் திருடனுக்கும் பெண்டாட்டியாகத் தனது தலையில் பிரம்மன் எழுதி இருப்பானோ என்ற சிந்தனையும், கலக்கமும், கவலையும் அவளது மனதைக் கவர்ந்து அவளை வதைத்துக் கொண்டிருந்தன. புலி பதுங்குவது பாய்வதற்கு அடையாளம் என்பது போல அவர்கள் இருவரும் தன்னைத் தனிமையில் விடுத்து அப்பால் போயிருந்தது அவர்கள் தனது விஷயத்தில் ஏதோ சதியாலோசனை செய்கிறார்கள் என்பதைக் காட்டியதாக அவள் நிச்சயித்துக் கொண்டாள். தொடக்கத்திலிருந்து அதுவரையில் அவள் அந்தத் திருடனது முகத்தை வெளிச்சத்தில் பார்க்க வில்லை. ஆதலால் அவனது முகம் எவ்வளவு பயங்கரமாக இருக்குமோவென்றும், அவன் தன்னை என்ன செய்வானோ என்றும் நினைத்து திகில் கொண்டவளாய் உட்கார்ந்திருந்தாள்.

கால் நாழிகை நேரம் கழிந்தது. கட்டாரித்தேவன் திடீரென்று அவளுக்குமுன் வந்து நின்றான். அவனைப் பார்த்து அவனது அடையாளத்தை ஒரு க்ஷணத்தில் கண்டுபிடித்துக்கொண்ட லீலாவதி முற்றிலும் திகைப்பும் பிரமிப்பும் ஆச்சரியமும் அடைந்தாள். ஆனாலும் அவளது மனதில் ஒருவித துணிவும்

உண்டாயிற்று. தான் அநாதரவாக ஒரு கொடிய கொள்ளைக் காரனிடம் அகப்பட்டுக்கொண்டிருப்பதாக அதுவரையில் அவள் எண்ணித் தளர்வடைந்திருக்க, அப்போது வந்தவன் தனது புருஷனுக்கு அனுகூலமாக இருந்தவனும், அன்றையதினம் காலையில் தன்னிடம் வந்து ஓர் உதவி வேண்டியவனும், தன்னிடம் எப்போதும் மரியாதையாகவும் வணக்கமாகவும் நடந்து கொள்பவனுமான அண்ணாசாமி நாயக்கன் என்ற எண்ணம் உண்டாகவே, அவனைத் தான் எப்படியும் தனது வசப்படுத்தி தனது விஷயத்தில் அவன் எவ்வித அக்கிரமமும் செய்யாமல் தடுத்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையும் தைரியமும் அவளது மனதில் எழுந்தன.

அவள் நிரம்பவும் உற்சாகமும் ஊக்கமும் அடைந்தவளாய் நிமிர்ந்து உட்கார்ந்து, ''ஐயா! என்ன ஆச்சரியம் இது? நீரா என்னை இங்கே தூக்கிக்கொண்டு வந்தது? நீரா என் பெரிய தகப்பனாரை நாற்காலியில் மாட்டியது? நீரா எங்களுடைய மாளிகையில் இரும்புப் பெட்டியிலிருந்த பொருள்களை எல்லாம் அபசரித்துக் கொண்டு வந்தது? இப்படி எல்லாம் செய்தது வேறு யாரோ திருடன் என்றல்லவா நினைத்தேன்'' என்றாள். கட்டாரித்தேவன் புன்னகை செய்து, ''ஆம்; எல்லாக் காரியங்களையும் நான் தான் செய்தேன். ஏன்? இந்தக் காரியங்களை நான் செய்தது உனக்குச் சம்மதியாக இல்லையா? உனக்கு வேறே அன்னியனான திருடனிடம் இருக்கும் பிரியம் என்னிடம் இல்லாமல் போனதென்ன?'' என்றான்.

உடனே லீலாவதி, ''ஐயா! நான் கேட்டதை நீர் இப்படித் தானா விபரீதமாக அர்த்தம் செய்கிறது? எங்கள் விஷயத்தில் எத்தனையோ அனுகூலங்கள் செய்தவரும், இன்று காலையில் என்னிடம் வந்து ஒரு உதவியை நாடியவருமான நீ இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய எப்படித் துணிந்தீர் என்ற கருத்தோடு நான் கேட்டேனேயன்றி, வேறே திருடன் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான்

ஆசைப்பட்டதாகச் சொல்வது குதர்க்கமாக இருக்கிறதேயன்றி வேறல்ல. நீர் எமக்கு வேண்டிய மனிதராக இருந்தும், என்னுடைய புருஷர் இல்லையென்று நினைத்து நீர் இப்படிப்பட்ட காரியத்தில் இறங்கலாமா? இது உமக்கு அடுக்குமா? இன்றையதினம் காலையில் எங்கள் மாளிகைக்கு வந்து விட்டுப் போனவர் மறுபடி எப்போது திரும்பி வந்தீர்? உம்முடைய விஷயத்தில் யாதொரு தீங்கும் நினையாத என் பெரிய தகப்பனார் விஷயத்திலும், என் விஷயத்திலும் நீர் இப்படிப்பட்ட கெடுதல்களைச் செய்தது நியாயமாகுமா?'' என்றாள். அதைக்கேட்ட கட்டாரித்தேவன் சந்தோஷமாகப் புன்னகை செய்து, ''ஏன் நியாயமாகாது? உங்கள் விஷயத்தில் யாதொரு தீங்கும் நினையாதவளும், மகா நற்குணவதியுமான ஷண்முகவடிவென்ற பெண்ணை நீயும் உன் பெரிய தகப்பனாரும் சேர்ந்து விசை வைத்த நாற்காலியில் மாட்டி, அவளது கற்பை அழிக்க முயன்றீர்களே! அது நியாயமென்று நினைத்துத்தானே நீங்கள் அப்படிச் செய்தீர்கள்? அந்தப் பெண்ணின் மேல் உன் பெரிய தகப்பனார் மோகங் கொண்டார். அதனால் நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாவது அவளை அடைய முயற்சித்தீர்கள் அல்லவா? அதுபோல, நானும் உன்னுடைய அபாரமான அழகைக் கண்டு உன்மேல் மையல் கொண்டேன்; அதனால் உன்னை, பலவந்தமாக எடுத்து வந்தேன். அந்தப் பெண்ணாவது நல்ல பதிவிரதை; இதுவரையில் துன்மார்க்கத்திலேயே இறங்காதவள் என்பது தெரிகிறது. நீயோ இந்த விஷயங்களில் நன்றாக அடிபட்டுத் தேறியவள். சொந்த புருஷர் இருக்கையில் பல கள்ளப் புருஷர்களை வைத்திருந்தவள். மகாராஜா முதலியோரையும் வசப்படுத்தினவள். கடைசியில் மொட்டைக் கடிதம் எழுதிப் புருஷனையும் சிறைச்சாலைக்கு அனுப்பினவள். இப்படிப் பட்ட அனுபவசாலியான உன்னை நான் எடுத்துக்கொண்டு வருவது ஒரு பெரிய குற்றமாகுமா?'' என்றான்.

அதுகாறும் அவள் கேட்டறியாத புதுமையான அவனது வார்த்தைகளைக் கேட்டு அவள் திடுக்கிட்டு நடுங்கினாள். "ஐயா! என்ன ஆச்சரியம் இது? இன்று காலையில் நீர் வந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது எவ்வளவு மரியாதை யாகவும் பணிவாகவும் பேசினீர்! இப்போது முற்றிலும் அவ மரியாதையாகவும் பேசுகிறீர்! அதுவுமன்றி, நான் ஏதோ ஒரு மொட்டைக் கடிதம் எழுதி என் புருஷரைக் காட்டிக் கொடுத்ததாகச் சொல்லுகிறீர்? அப்படி நான் செய்தேன் என்பதை நீர் ருஜுப்படுத்த முடியுமா? அப்படியே இருந்தாலும், புருஷனுக்கும் பெண்சாதிக்கும் ஆயிரம் சண்டையிருக்கும்; ஒருவருக்கொருவர் எத்தனையோ கெடுதல்கள் செய்து கொள்வார்கள்; உடனே ஒன்றாகச் சேர்ந்துகொள்ளுவார்கள். அதையெல்லாம் ஒரு முகாந்திரமாக வைத்துக்கொண்டு நீர் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தில் இறங்கலாமா? போனது போகட்டும். இதுவரையில் நீர் செய்தவைகளை நான் மனசில் வைத்துப் பாராட்டமாட்டேன். என்னுடைய பெரிய தகப்பனார் விஷயத்தில் நீர் செய்ததைப் பற்றியும், எங்கள் வீட்டு ஐசுவரியத்தை எல்லாம் எடுத்து வந்ததைப் பற்றியும் நான் கொஞ்சமும் வருந்தமாட்டேன். நீர் தயை செய்து என்னை மாத்திரம் என்னுடைய ஜாகையில் கொண்டுபோய்ச் சேர்த்து விடும். உம்மைப்பற்றி நான் ஒரு வார்த்தைகூட என் பெரிய தகப்பனாரிடம் சொல்லுகிறதே இல்லை என்று நான் உமக்குப் பிரமாணம் செய்துகொடுக்கிறேன். அதுவுமன்றி, நீர் இன்று காலையில் என்னிடம் கேட்டுக்கொண்ட விஷயத்திலும் என்னாலான உதவியை நான் உமக்குச் செய்கிறேன். ஆகையால் என்னை நீர் உடனே கொண்டுபோய் என்னுடைய ஜாகையில் சேர்த்துவிடும்" என்று நிரம்பவும் நயமாகவும், தாழ்மையாகவும் கேட்டுக்கொண்டாள்.

கட்டாரித்தேவன் விகாரமே வடிவாக அமைந்த கொடிய அரக்கனாக இருந்தான். ஆதலால், அவனது மன விகாரங்களும்,

உணர்ச்சிகளும் கட்டுக்கடங்காத பெரும் பேய்களாக இருந்தன. அற்புதமான அழகும், யௌவனப் பருவமும், மனமோகன வசீகரச் சாயலும் வாய்ந்த லீலாவதியை அருகில் நெருங்கிப் பார்க்கப் பார்க்க, அந்த விலங்கினது மூர்க்கமும், பேராசையும் நூறு மடங்கு அபாரமாகப் பெருகின. அதற்குமுன் அவன் மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையில் ரதிகேளி விலாசத்திலிருந்த காமாந்தகாரப் படங்களையும் பொருட்களையும் பார்த்து, ஜெமீந்தார் ஷண்முகவடிவினிடம் கூறிய வார்த்தைகளைக் கேட்டதனால், அவன் மகா விபரீதமான நிலைமையில் இருந்தவன் ஆதலால், அவள் தன்னிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற உணர்வினால் தூண்டப்பட்டவனாய், அவன் அன்றையதினம் எப்படியும் லீலாவதியைத் தனது வசப்படுத்தியே தீரவேண்டும் என்ற உறுதியோடு வந்தவன் ஆதலால், அவள் தன்னை விட்டுவிடுமாறு கேட்டுக்கொண்ட வார்த்தைகள், அவனது மனதில் சிறிதும் உறைக்கவில்லை; அவளது விஷயத்தில் சிறிதும் இரக்கம் தோன்றவில்லை. அவன் அவளிடம் அளவற்ற காதலும் மகிழ்ச்சியும் கொண்டவனாய் ஏளனமாகப் புன்னகை செய்து, ''ஓகோ! உன்னை நான் உடனே உங்களுடைய மாளிகையில் கொண்டுபோய் விடுவதற்காகத்தான் இவ்வளவு தூரம் சுமந்து வந்தேன் என்று பார்த்துக் கொண்டாயா? நல்ல காரியம் செய்தாய்! உங்களுடைய மாளிகையில் இனி என்ன இருக்கிறது? அங்கே இருந்த பணங்கள் நகைகள் ஆகிய முக்கியமானவைகள் எல்லாம் நான் இங்கேயே கொண்டுவந்துவிட்டேனே! நீ அங்கே போய் என்ன செய்ய எண்ணுகிறாயோ அதை இங்கேயே செய்கிறதுதானே. இந்தத் திரவியத்தை எல்லாம் நான் உன்னுடைய வசத்திலேயே ஒப்புவித்து விடுகிறேன். உங்கள் வீட்டில் நீ எவ்விதமான சுகங்களை அனுபவிப்பாயோ அவைகளைவிடப் பன்மடங்கு அதிகமாகவே இவ்விடத்தில் நீ அனுபவித்துக்கொண்டு சந்தோஷமாக இரு. அங்கே நீ உன் பெரிய தகப்பனாருக்கு அடங்கி, அவருடைய தயவை

எதிர்பார்த்து வாழ வேண்டும். இங்கே நீயே எல்லாவற்றிற்கும் எஜமானியாக இருந்து சுயேச்சையாக நடந்து கொள்ளலாம். அதுவுமன்றி, இங்கே இருப்பதில் உனக்கு இன்னொரு அதிகமான சுகமும் உண்டு. அங்கே உன்னுடைய புருஷன் சிறைச்சாலையில் இருக்கிறார். அவரிடத்திலும் உனக்கும் கொஞ்சமும் பிரியமில்லை; ஆகையால், நீ அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டுத் தனியாக இருந்து வருகிறாய். இவ்விடத்தில் நான் எப்போதும் உன்னோடு கூடவே இருந்து உன் தனிமையைத் தீர்த்து, நீ எவ்விதமான சுகத்தையும் சந்தோஷத்தையும் நாடுகிறாயோ, அவைகளைச் சதாகாலமும் உனக்கு உண்டாக்கிக் கொண்டு நான் உன்னுடைய அடிமையாக இருந்து வருவேன். நீ காலாலிடும் வேலையை நான் தலையால் செய்துவருவேன் என்பதை நீ உறுதியாக நம்பலாம். இது முக்கியமான முதலாவது அனுகூலம். இன்னொன்று என்னவென்றால், நீ உன் வீட்டில் இருந்தால், இப்போது இல்லாவிட்டாலும் இன்னம் சில தினங்களிலாவது போலீசார் உன்னை எப்படியும் பிடித்துக்கொண்டு போய்ச் சிறைப்படுத்தி, கொலைக்குற்றம் சுமத்துவார்கள். நீ என்னோடுகூட இருந்தால், உன்னை ஈசுவரன் கூடக் கண்டுபிடிக்க முடியாது. எப்படிப்பட்ட தந்திரசாலியான போலீஸ்காரனும் நீ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியாது. இது இரண்டாவது அனுகூலம். ஆகையால், நீ உன்னுடைய இருப்பிடத்துக்குப் போவதைவிட இங்கே இருப்பது பல விதத்தில் உனக்கு நன்மையானது. இப்படிப்பட்ட அரிய நன்மைகளை உனக்குச் செய்ய முன் வந்திருப்பவனாகிய என்னிடத்தில் நீ நன்றி விசுவாசமும் பிரியமும் வைத்து என்னோடு எப்போதும் சந்தோஷமாகவும் அந்தரங்க வாஞ்சையோடும் நடந்து கொள்வதே நியாயமன்றி, புலி கரடிகளைக் கண்டு பயந்து மிரளுவதைப் போல நீ என்னைக் கண்டு அஞ்சி நடுங்குவதற்கு யாதொரு முகாந்தரமும் இல்லை. இப்போது நிரம்பவும் அகால வேளையாக இருக்கிறது. நீ மெத்தவும் அலுத்துப் போயிருக்கிறாய். இவ்விடத்திலேயே நீ

சுகமாகப் படுத்துத் தூங்கு. இங்கே இருக்கும் பாட்டி என்னுடைய சொந்தக்காரி. இவள் உன்னை நிரம்பவும் சுகமாக வைத்திருப்பாள். நாளையதினம் ராத்திரி நான் ஒரு பெட்டி வண்டி கொண்டுவந்து அதில் உன்னை வைத்து அழைத்துக் கொண்டு போய் என்னுடைய சொந்த வீட்டில் சேர்க்கிறேன். அது மகாராஜனுடைய அரண்மனை போல இருக்கும். நீ அங்கே ராஜாத்தி போல இருக்கலாம்'' என்று நயமாகக் கூறிய வண்ணம், அவள் உட்கார்ந்து கொண்டிருந்த விசிப்பலகையின் கடைசியில் வந்து மெதுவாக உட்கார்ந்து கொண்டு, அவளது சுந்தர வடிவத்தை உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் பன்முறை ஏற இறங்கப் பார்த்தான். அவனது பார்வை முற்றிலும் இளக்கமாகவும், கபடமாகவும் இருந்ததன்றி, அவள் விஷயத்தில் அவனது மனதில் கட்டுக்கடங்காத மோக வேட்கையும் தாகவிடாயும் பொங்கி எழுந்து அவனது உயிரைக் கருக்கிக் கொண்டிருந்தன என்பதை எளிதில் காட்டியது. அன்றையதினம் இரவிற்குள் அவளை எப்படியும் தான் அடைந்து விடலாம் என்ற ஓர் உறுதியை அவன் கொண்டிருந்தான் என்பதும், அவனது நிதானமான வார்த்தைகளிலிருந்து எளிதில் தெரிந்தது. இன்பக் களஞ்சியமாக விளங்கிய அவளது ஒப்புயர்வற்ற ஒவ்வோர் அங்கத்தையும் அவன் பார்க்கும்போதே அவனது வாயில் ஆனந்த நீர் பெருகியது.

அவனது மன உறுதியையும் அவன் சொன்ன வார்த்தைகளின் கருத்தையும் முடிவையும் கவனித்த லீலாவதி தான் அன்றைய தினம் அந்தக் கள்வனிடத்திலிருந்து நேரான வழியில் தப்பிப்போக முடியாதென்பதை உடனே உணர்ந்து கொண்டாள். அதுவுமன்றி, அவன் அன்றைய தினம் காலையில் தங்களுடைய மாளிகைக்கு வந்து தன்னோடு பேசிக்கொண்டிருந்த பிறகு உட்புறத்திலேயே ஒளிந்திருந்து தனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் நடந்த சம்பாஷணை முழுதையும் கேட்டுக்கொண்டிருந்திருக்க

வேண்டும் என்றும், அன்றைய இரவு வரையில் உட்புறத்தில் எங்கேயோ மறைந்திருந்து கடைசியில் ரதிகேளி விலாசத்திற்குள் வந்து அங்கே நடந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமென்றும் அவள் சுலபத்திலேயே நிச்சயித்துக் கொண்டாள். ரதிகேளி விலாசத்தில் தனது பெரிய தந்தைக்கும் ஷண்முகவடிவிற்கும் நடந்த தர்க்கங்களைக் கேட்டமுதல் அவனது மனதில் காம விகாரம் தோன்றியிருப்பதோடு தனது விஷயத்திலும் ஒருவிதமான மதிப்புக் குறைவும் இளக்காரமும் உண்டாகி இருக்கவேண்டுமென்றும் அவள் எண்ணிக் கொண்டாள். ஆகவே, தான் அவனிடம் ஓங்கிப் பேசி அவனை வெல்ல முடியாதென்றும், அவனிடம் அடங்கி நடந்து கொண்டே ஏதேனும் தந்திரம் செய்து தப்பித்துப் போக வேண்டுமென்றும் அவள் எண்ணிக்கொண்டவளாய் அவனைப் பார்த்து, ''நாய்க்கரே! எல்லாவற்றையும் அறிந்தவரான உமக்கு நான் அதிகமாகச் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை. நீர் இப்போது சொன்ன வார்த்தைகளெல்லாம் வாஸ்தவமான வார்த்தைகளாகவே இருக்கின்றன. அவைகளில் எதைப் பற்றியும் நான் எவ்வித ஆட்சேபமும் சொல்ல இடமில்லை. நீர் சொல்வது போல, நான் என்னுடைய ஜாகையிலிருப்பதைவிட இங்கே இருப்பதே பலவகையில் எனக்கு நன்மையானதாகவும் இருக்கிறது. ஆனால் ஒரு விஷயமிருக்கிறது. அதை மாத்திரம் நீர் கொஞ்சம் தயவாகக் கேட்டு என்மேல் இரக்கம் கொள்ள வேண்டும். நீர் இதுவரையில் என் புருஷரோடு சிநேகமாயிருந்து எங்களுக்கு எத்தனையோ விஷயங்களில் அருமையான உதவிகள் செய்திருக்கிறீர். இதுவரையில் நான் உம்மை என்னுடைய சொந்தத் தமையனார்போலவே மதித்து வந்திருக்கிறேன். உம்முடைய விஷயத்தில் நான் இதுவரையில் எவ்விதமானதுர் நினைவும் கொண்டதே இல்லை. ஆகையால், நீர் பிரஸ்தாபிக்கும் புதிய விஷயத்தை நான் இதுவரையில் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. நான் இனி எப்போதும் உம்மோடு கூடவே இருக்கவேண்டுமென்று நீர் ஆசைப்படுகிறீர்

என்பது எனக்கு இப்போதே தெரிகிறது. ஆகையால், நான் திடீரென்று இந்த விஷயத்தில் என் மனதை மாற்றிக் கொள்வது கொஞ்சம் பிரயாசையாக இருக்கிறது. நான் இப்போது என்னுடைய ஜாகைக்குப் போக அவசரப்படவில்லை. நீர் சொல்வதுபோல நான் இன்று ராத்திரி, இவ்விடத்திலேயே படுத்துக்கொள்ளுகிறேன். நாளையதினம் சாயுங்காலத்துக்குள் நான் இந்த விஷயத்தைப்பற்றி நன்றாக யோசித்து என் மனதை ஒருவிதமாகச் சமாதானப்படுத்திக் கொள்ளுகிறேன். அதன் பிறகும் உமக்கு என்மேல் ஆசை இருக்குமானாலும், உம்முடைய பிரியப்படி என்னை இவ்விடத்திலிருந்து அழைத்துக்கொண்டு போய் உம்முடைய ஜாகையில் வைத்துக் கொள்ளலாம். நான் என்னுடைய ஆயிசுகாலம் வரையில் உம்மிடத்திலேயே இருப்பதோடு, உம்முடைய விஷயத்தில் உண்மையான பிரியத்தோடும், அந்தரங்கமான உறுதியோடும் நடந்துகொள்ள ஆட்சேபணை இல்லை. நீர் பிரஸ்தாபிக்கும் விஷயம் இப்போதே என் மனசுக்குச் சம்மதியானதாக இருக்கிறது. ஆனாலும், என் மனதைப் பலமாகப் பிடித்து அழுத்திக் கொண்டிருக்கும் ஒருவித வெட்கமும் கூச்சமும் விலகுவதற்கு நீர் எனக்கு இந்த ஓர் இரவு தவணை கொடுக்க வேண்டும். அதுவுமன்றி, இன்றைய தினம் நடந்த பல விஷயங்களினால், என் மனம் நிரம்பவும் கலவரமடைந்து தவித்துக் கொண்டிருக்கிறது. உடம்பு அலுத்துப் போயிருக்கிறது. ஆகையால், இப்போது நான் உம்மோடு சந்தோஷமாக இருக்க முயன்றாலும், அது கொஞ்சமும் சாத்தியப்படாதுபோல இருக்கிறது. எல்லாவற்றையும் யோசித்து நீர் என்னை நாளை சாயுங்காலம் வரையில் நிம்மதியாக இருக்கவிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். நாளைய தினம் இரவில் நீர் வண்டியோடு வரலாம். நான் உடனே அதில் ஏறிக்கொண்டு உம்மோடு வந்துவிடுகிறேன். அங்கே போனபிறகு உம்முடைய பிரியம் எப்படியோ அப்படியே என்னை நீர் நடத்திக் கொள்ளலாம். நானும் உம்முடைய பிரியத்திற்கு இணங்க

மனப் பூர்வமான சந்தோஷத்தோடு நடந்துகொள்ளுகிறேன்.'' என்று உண்மைபோலவும் உருக்கமாகவும் அவனது மனது இரங்கும் விதமாகவும் கூறினாள்.

அவள் அவ்வளவு சுலபத்தில் தனது விருப்பத்திற்கு இணங்கி வருவாள் என்று கட்டாரித்தேவன் எதிர்பார்க்கவே இல்லை. அவள் நிரம்பவும் பதிவிரதைத்தனம் பாராட்டித் தன்னை இழிவாகத் தூஷிப்பாளென்றும், தான் அவளிடம் பலாத்காரமாக நடந்துகொள்ள வேண்டியிருக்குமென்றும் அவன் எதிர்பார்த்தான். ஆதலால், அவள் அவ்வளவு சுலபத்தில் மாறுபட்டுப் போனது அவனுக்கு முற்றிலும் வியப்பாகவும், நம்பக்கூடாததாகவும் இருந்தது. அவள் ஒருவேளை ஏதாகிலும் தந்திரம் செய்து தன்னை ஏமாற்றி விடலாமென்று நினைத்து அவ்வாறு கபடமாகப் பேசுகிறாளோ என்ற யோசனையும் அவனது மனதில் தோன்றியது.

அவள் தன்னிடத்திலிருந்து எப்படியும் தப்பிப்போக முடியாது ஆகையால் அவள் கபடமாகப் பேசினாலும், உண்மையைப் பேசினாலும் அதைப்பற்றித் தான் சிறிதும் கவலைப்படாமல் மறுநாள் வரையில் அவளுடைய விருப்பத்தின்படி பொறுத்திருப்பதே உசிதமானதாகத் தோன்றியது. அதுவுமன்றி, அவள் அளவற்ற மிருதுத் தன்மையும், அபாரமான மேம்பாடும், பெருந்தன்மையும், விலை மதிப்பற்ற உயர்வும், இன்ப நிறைவுமாய் அற்புத தேஜசோடு தெய்வீகத்தன்மை வாய்ந்து தோன்றினாள். ஆகையால், அவளது மனம் வருந்தும்படி அவளைக் கசக்கி மோருவதற்கும் அவனது மனம் கூசிப் பின்வாங்கியது. ஆகையால், அவன் அவளது இச்சைப்படி நடந்து கொள்ளத் தீர்மானித்துக் கொண்டவனாய், நிரம்பவும் அன்போடும் மரியாதையோடும் பேசத்தொடங்கி, ''பெண்ணே! நீ நல்ல யூகமும் விஷய ஞானமும் உடையவளாயிருப்பதைக் காண எனக்கு நிரம்பவும் சந்தோஷம் உண்டாகிறது. நான் சொன்ன

வுடனே, உண்மையைக் கிரகித்துக்கொண்டு ஒழுங்கான வழியில் நடக்கிறதாக நீ ஒப்புக் கொண்டதைப் பற்றியும் நான் அதிக சந்தோஷமடைகிறேன். இனி எப்போதும் நீயும் நானும் ஒன்றாகவே இருந்து சந்தோஷமாகக் காலங் கழிக்க வேண்டியவர்கள். ஆகையால், உன் மனம் வருந்தும்படியாக, நான் உன்னை இப்போதே கட்டாயப்படுத்தப் பிரியப்பட வில்லை. நீ சொல்லுகிறதுபோல நான் உனக்கு நாளைய தினம் ராத்திரி வரையில் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் நீ உன் மனசை ஒரு மாதிரியாகச் சமாதானப்படுத்திக் கொள். நான் பார்வைக்கு முரடன்போல இருந்தாலும், உன் விஷயத்தில் அப்படி நடந்துகொள்வேன் என்று நீ அஞ்சவே வேண்டாம். உன்னை நான் என் வீட்டுக் குலதெய்வம் போலவே வைத்து நான் உன் தாசானுதாசனாய் நடந்துகொள்ளக் கூடியவன் என்பதை நீ இனி மேல் நடத்தையில் பார்த்துக் கொள்ளலாம். அதைப்பற்றி உனக்குக் கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம். நீ நாளையதினம் ராத்திரி வரையில் இவ்விடத்திலேயே சௌக்கியமாக இரு. இங்கே இருக்கும் பாட்டி உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு உனக்குத்தேவையான சகலமான சௌகரியங்களையும் செய்து கொடுப்பாள். நானும் நாளையதினம் சாயுங்காலம் வரையில் இதே வீட்டில் முன் கட்டிலேதான் இருக்கப் போகிறேன். அப்படியிருந்தாலும் நீ ஏற்படுத்திய தவணையின் காலம் முடிகிறவரையில் நான் உன்னிடம் வரமாட்டேன். அதுவரையில் நீ எதேச்சையாக இரு'' என்று கூற, லீலாவதி அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டாள்.

உடனே கட்டாரித்தேவன் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு அப்பால் போய், கிழவியினிடம் ரகசியமாக ஏதோ சில வார்த்தைகள் சொல்லியபின் அவ்விடத்தை விட்டு லீலாவதி இருந்த இடத்திற்கு வந்து இன்னொருமுறை அவளிடம் செலவு பெற்றுக்கொண்டு முன் கட்டை நோக்கிச் சென்றான்.

அடுத்த க்ஷணத்தில் பாட்டிக் கிழவி தனது கையில் ஒரு புதிய பாயையும் தலையணையையும் எடுத்துக்கொண்டு லீலாவதி இருந்த இடத்திற்கு வந்து, ''ஏம்மா! நேரமாவலியா? ஏன் சும்மாக் குந்திகிட்டு இருக்கிறே. இதோ இந்தப் பாயெ விரிச்சு அப்பிடியே படு. நாய்க்கரு மொதக்கட்டுலே இருப்பாரு. இங்கிட்டு வரமாட்டாரு! நீ பயப்படாமெப் படுத்துத் தூங்கு'' என்றாள்.

லீலாவதி அப்போது அவளிடம் பேச்சு வளர்க்கப் பிரியப் படாதவளாய்,அவளால் கொடுக்கப்பட்ட பாயை வாங்கி ஒரு பக்கமாகப் பிரித்துத் தலையணையை வைத்துக்கொண்டு படுத்தவளாய், ''அம்மா! இருளாக இருந்தால் எனக்குப் பயத்தினால் தூக்கம் வராது; விளக்கு எரிந்து கொண்டே இருக்கட்டும்'' என்றாள்.

கிழவி, ''சரி; அப்படியே ஆகட்டும்'' என்று கூறிய வண்ணம் விளக்கை அணைக்காமல் வைத்துவிட்டு முன் கட்டிற்குப் போய்ச் சிறிது நேரம் இருந்தபின் மறுபடியும் திரும்பிவந்து, ''சரி; நீ தனியாகப் படுத்திருக்க பயப்படுவே; ஒனக்குத் தொணையா நானும் இங்கிட்டே படுத்துக்கறேன்'' என்று கூறிய வண்ணம் இன்னொரு பாய் தலையணை முதலியவைகளைச் சிறிது தூரத்திற்கப்பால் போட்டுப் படுத்துக் கொண்டாள். அங்கிருந்த விளக்கு நிரம்பவும் அற்பமான திரியுள்ளதும், விளக்கெண்ணெய் விடப் பெற்றதுமான சிறிய மண் விளக்காதலால் அது மங்கலாக முணுக் முணுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. லீலாவதியின் மனம் முற்றிலும் கலவர மடைந்து குழம்பி சஞ்சலமுற்றிருந்தது. ஆகையால், அந்த முரட்டுத் திருடன் தன்னுடைய நிபந்தனையை ஒப்புக் கொண்டதுபோலப் பாசாங்கு செய்து தன்னை நம்பவைத்துத் தான் தூங்கிய பிறகு விளக்கை அணைத்துவிட்டுத் தன்னிடம் வந்து ஒருகால் பலாத்காரத்தில் இறங்குவானோ என்ற சந்தேகம் அவளது மனத்தில் எழுந்து அவளை எச்சரித்துக் கொண்டி

ருந்தது. ஆகையாலும், அவளுக்குத் தூக்கமென்பதே பிடிக்காம லிருந்தது. தனக்கு ஒருகால் தூக்கம் வருவதாக இருந்தால்கூட, தான் அந்த இரவு முழுதும் தூங்காமல் விழிப்பாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டுமென்று, அவள் தன் மனதைத் திடப்படுத்தித் தனது உடம்பைத் தளரவிடாமல் மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் தோற்றுவித்த வளாய் இருந்தாள். ஆனாலும், அவள் தூங்குகிறவள் போலக் கண்களை மூடிக்கொண்டு தான் எவ்வாறு தந்திரம் செய்து அவ் விடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு வெளியில் போகிற தென்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தவளாய்ப் படுத்திருந்தாள். அதுபோலவே, அந்தக் கிழவியும் தூங்குகிறவள் போலக் கண்களை மூடிக் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தாள். ஆனாலும், உண்மையில் விழிப்பாகவும் எச்சரிப்பாகவும் இருந்தாள். ஏனென்றால், தான் அயர்ந்து தூங்கிப் போய் விட்டால், லீலாவதி அவ்விடத்திலிருந்து தப்பித்துப் போக நினைத்துத் தனக்கு ஏதேனும் தீங்கு செய்வாளோவென்று அஞ்சியவளாய் அந்தக் கிழவி தூங்காமலேயே இருந்தாள்.

அவ்வாறு அந்த இரவு முழுதும் கழிய, பொழுதும் விடிந்தது. கிழவி இரவில் கண்விழித்து விழித்துப் பழகினவளாதலால், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அலட்சியமாக எழுந்து தனது அலுவல்களைப் பார்க்கத் தொடங்கினாள்.

லீலாவதியோ முற்றிலும் அலுத்துத் தளர்ந்து போனாள். அவளது கண்களில் எரிச்சலும், மனதில் மயக்கமும், குழப்பமும், உடம்பில் கடுமையான வலியும், கடுப்பும், ஓய்வும் நிறைந்திருந்தன. ஆதலால், அவள் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமற்றவளாய் அப்புறம் இப்புறம் புரண்டபடி படுத்திருந்தாள். சூரியன் நன்றாக உயர உயர வெயில் பளிச்சென்று வீசத்தொடங்கியது. அதற்கு மேல் பாயில் படுத்திருப்பது அவளுக்கு நிரம்பவும் துன்பகரமாக இருந்தது. ஆகவே, அவள் மெதுவாக எழுந்து பாயின்மீது உட்கார்ந்து

கொண்டாள். அதுவரையில் அங்குமிங்கும் சுறுசுறுப்பாகப் போய்வந்து ஏதோ வேலை செய்து கொண்டிருந்த கிழவி அவளிடம் வந்து, "ஏம்மா! எழுந்துவா; கொல்லெப்பக்கம் போயிக் கைகாலெல்லாம் கழுவிக்கோ; சமையலாயிப் போச்சு; சாப்பிடலாம்" என்று அன்பாகக் கூறினாள்.

அதைக் கேட்ட லீலாவதி, "பாட்டீ! இதற்குள் சமையலாய் விட்டதா? அடாடா? எனக்காக நீங்கள் நிரம்பவும் பிரயாசை எடுத்துக்கொண்டு இதற்குள் சமையல் செய்திருக்கிறாப் போலிருக்கிறதே! நீங்கள் இப்படி செய்கிறீர்களென்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் அப்போதே வேண்டாமென்று சொல்லியிருப்பேனே" என்றாள்.

கிழவி, "அப்பிடியானா, நீ இண்ணெக்கி இங்கிட்டு சாப்பிடவே போறதில்லையா? ராத்திரி ஊருக்குப்போற மட்டும் சாப்பிடாம சொம்மா பட்டினி கெடக்கப் போறியா?" என்றாள்.

லீலாவதி நயமாகவும் அன்பாகவும் பேசத் தொடங்கி, "இல்லை பாட்டீ! எனக்கு உடம்பு சரியாக இல்லை. வயிற்றில் பசியே காணோம். அஜீரணமாக இருக்கிறது. மனசும் கலக்கமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் இன்று பகல் முழுதும் பட்டினியாக இருந்தால் சாயுங்காலத்துக்குள் உடம்பு சரிப்பட்டு விடுமென்று நினைக்கிறேன்" என்றாள்.

கிழவி:- இல்லேடியம்மா! அப்பிடிச் செய்யப்படாது. ஒரு கவளமாச்சும் நீ சாப்பிடாம இருந்தா உடம்பு சுத்தமாகக் கெட்டுப் போவும்; அண்ணாசாமி நாயக்கன் பொல்லாத கோவக்கார மனிசன். இந்த சங்கதியைக் கேட்டான்னா, என்னை ஒடனே கொண்ணு போட்டுடுவான். நீ எப்படியாச்சும் எந்திரிச்சி வந்து கொஞ்சூண்டு சாப்பிட்டுப் பேரு பண்ணிக்கோ- என்று வருந்திக் கூறினாள்.

லீலாவதி:- (ஒரே உறுதியாக) இல்லை பாட்டீ! சாதம் என்ற பேச்சை எடுக்கையிலேயே எனக்கு வாந்தி வரும்போல

இருக்கிறது. வயிறு அவ்வளவு மந்தமாகவும் தொந்தரவாக வும் இருக்கிறது; மத்தியானத்துக்குமேலே வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம்.

கிழவி:- அப்பிடியானா, ஏதாச்சும் பலவாரம் வாங்கியாரட்டுமா?

லீலாவதி:- வேண்டாம் பாட்டீ! சாதமாவது கெடுதலில்லாதது. பலகாரம் உடம்பை இன்னம் அதிகமாகக் கெடுத்துவிடும். நீங்கள் ஒரு காரியம் வேண்டுமானால் செய்யுங்கள். உங்களுக்குக் கஷ்டமில்லாமல், கொஞ்சம் பசுவின் பாலும் இரண்டு வாழைப்பழமும் வரவழைக்க முடியுமானால், அவைகளை வேண்டுமானால் சாப்பிட்டுப் பார்க்கிறேன். வேறொன்றும் வேண்டாம்.

கிழவி:- சரி; அப்படியே ஆகட்டும்; பாலும் பளமும் வரவளெச்சுத் தாறேன். கெணத்தாங்கரைக்கி வந்து மொவமாச்சுங் களுவிக்கப் போறியா? அதுவும் வாணாமா? - என்று ஒருவாறு குத்தலாகப் பேசினாள்.

லீலாவதி:- (அதைக் கவனித்தும் கவனிக்காதவள் போலவும் சந்தோஷமாகப் பேசுகிறவள் போலவும் நடித்து) உடம்பு சுத்தம் ஆகவேண்டுமென்றுதானே நான் ஆகாரத்தைக் கூடத் தள்ளுகிறேன். அப்படியிருக்க, கிணற்றண்டை போய் உடம்பை சுத்தம் செய்து கொள்வதை நான் வேண்டாமென்று சொல்வேனா? வாருங்கள், போகலாம். கிணறு எங்கே இருக்கிறது? காட்டுங்கள்- என்றாள்.

கிழவி உடனே லீலாவதியை அழைத்துக்கொண்டு பின்பக்கத்திலிருந்த கொல்லைப்பக்கத்திற்குப் போனாள்.

அந்தக் கொல்லை சுமார் பத்தடி அகலம் அறுபதடி நீளமுள்ள காலி நிலமாகக் காணப்பட்டது. அதைச் சுற்றி நாற்புறங்களிலும் சுவர் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சுவர் இரண்டாள் உயர முடையதாய், உச்சியில் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்

பெற்றதாயிருந்தது. இரண்டாவது கட்டை அடுத்தாற்போல ஒரு கிணறும், நாலைந்து வாழை மரங்களும் இருந்தன. மதில் சுவர்களுக்கப்பால் மூன்று பக்கங்களிலும் அண்டை வீடுகளின் சுவர்களும் மேற்கூரைகளும் வந்து நெருங்கி இருந்தன. லீலாவதி தனது கடைக்கண் பார்வையை நாற்புறங்களிலும் சுழற்றி அந்த இடத்தின் அமைப்பை நன்றாகக் கவனித்து ஆராய்ச்சி செய்து தான் சுவரில் ஏறுவதற்கே மார்க்கமில்லை என்பதை சுலபத்தில் அறிந்துகொண்டாள். தான் அவ்விடத்திலிருந்து ஓங்கிக் கூச்சலிட்டு அக்கம் பக்கத்திலுள்ள மனிதரினது கவனத்தைக் கவர்ந்து தன்னை அந்த வீட்டார் அக்கிரமாகவும் பலவந்த மாகவும் கொண்டு வந்து அடைத்து வைத்திருப்பதாகக் கூறிப் போலீசாரை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளலாமா என்ற எண்ணம் அவளது மனதில் அடிக்கடி எழுந்து அவளைத் தூண்டியது. அவ்வாறு கூச்சலிடமாட்டாமல், ஒருவித வெட்கமும், லஜ்ஜையும் எழுந்து அவளது தொண்டையை இறுகப் பிடித்துக்கொண்டன. ஆனாலும், தனது மானமும், பிராணனும் போகத்தக்க அத்தகைய அபாய சமயத்தில் தான் நாணிப் பின்வாங்குவது உசிதமல்லவென்ற எண்ணம் அவளை அடிக்கடி இடித்திடித்து ஊக்கிக்கொண்டே இருந்தது. ஆனாலும், அவள் அவ்வாறு செய்யாமல் மௌனமாகவே இருந்தாள். தான் அந்த வீட்டின் மற்ற பாகங்களையும் நன்றாக ஆராய்ச்சி செய்து, வேறு வழியாக சுலபத்தில் தப்பித்துக்கொள்ள இயலுமானால், அப்படிச் செய்வதே யுக்தமானதென்றும், அன்றையதினம் மாலைக்குள் தான் எவ்வளவோ அரிய காரியங்களைச் செய்துவிடலாமென்றும் எண்ணிக் கொண்டாள். தன்னைத் தூக்கிக் கொண்டு வந்த முரட்டு மனிதன் முதல் கட்டில் இருப்பதாகச் சொன்னது பொய் என்றும், அவன் அப்போது அந்த வீட்டில் இல்லையென்றும் அவள் எளிதில் உணர்ந்து கொண்டாள். எவ்வாறெனில், அவனிருந்தால், பொழுது விடிந்து அவ்வளவு நேரமாயிருந்தும், அவன் முகம் சுத்தி செய்து

கொள்ளவும், ஆகாரம் சாப்பிடவும் வராமல் முதல் கட்டிலேயே இருக்கமாட்டானென்றும் அவள் தீர்மானித்துக் கொண்டாள்; ஆகவே, அந்த வீட்டில் அப்போது அந்தக் கிழவி மாத்திரம் இருப்பதாக அவள் முடிவுசெய்து கொண்டாள். ஆனாலும், அவளுக்குச் சொந்தமான ஆண்பிள்ளைகள் யாராவது ஒருவேளை எங்கேயாவது போயிருந்து அன்றைய பகலில் அங்கே வந்தாலும் வரலாமென்ற ஒரு சந்தேகம் மாத்திரம் அவளது மனதில் உதித்துக்கொண்டே இருந்தது. கிழவி மாத்திரம் தனியாக இருப்பாளானால், தான் அவளைப் பலவந்தமாக விலக்கிக்கொண்டு வெளியில் போய்விடலா மென்ற இன்னொரு யோசனையும் அவளது மனதில் தோன்றியது. ஆனாலும், கிழவி முரட்டு மனுஷியாதலால் அவளது பிடியிலிருந்து தான் தன்னை விடுவித்துக்கொண்டு போவது கடினமாக இருக்குமென்றும் அவள் அஞ்சினாள். அதுவுமன்றி, அவள் கூச்சலிட்டு பக்கத்திலுள்ள மனிதர்களை அழைத்தால், அப்படி வருகிறவர்கள் அவளுக்கு அனுகூலமான மனிதர்களாக இருந்தாலும் இருக்கலா மென்ற நினைவும் உண்டாயிற்று. அவ்வாறு லீலாவதி தனக்குள்ளாகவே பலவித ஆட்சேபணை சமாதானங்களை எண்ணிக்கொண்டவளாய், வெளிப்பார்வைக்குக் கபடமற்ற வளாகத் தோன்றி அவ்விடத்தில் தனது காலைக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டவளாய்க் கிழவியோடு உட்புறம் வந்தாள். வந்தவள் மெதுவாக அவளோடு சம்பாஷிக்கத் தொடங்கினாள்.

லீலாவதி:- ஏன் பாட்டி! நேற்று உன்னை அழைத்து வந்தாரே அவருக்கும் உங்களுக்கும் என்ன உறவு முறைமை?

கிழவி:- அவந்தான் என்னோடே பேராண்டி. எம்மவன் எறந்து போயி சானாவருசமாச்சு. அவன் வவுத்திலே பொறந்த வன் இவன் ஒருத்தன்தான். அந்த மாரியாத்தா கிருபெயினாலே சொகமா இருக்கிறான்.

*லீலாவதி:-* அவர் வேறே ஏதோ ஓர் ஊருக்கு என்னை இன்றையதினம் ராத்திரி அழைத்துக்கொண்டு போகப் போறதாகச் சொன்னாரே! அது எந்த ஊர்? அங்கே யார் இருக்கிறது? இவர் அங்கே இருக்கிறதா, அல்லது, இங்கே இருக்கிறதா?

*கிழவி:-* எங்களோட சொந்த ஊரு காசாநாடு. அது இந்த ஊருக்குப் பத்துப் பதினைஞ்சு கல்லுக்கு அப்பாலே இருக்குது. அங்கிட்டு எங்களுக்கு பெரிய ஊடு கீடெல்லாம் இருக்குது; எம் பேராண்டிக்கி இன்னம் மூணு பொஞ்சாதி மாருங்க அங்கிட்டு இருக்கிறாளுவ. இந்த ஊருலெ எம்பேராண்டி அப்பப்ப ஏதாச்சும் அலுவலா வந்தா, தங்கறதுக்காவ, இந்த வூட்டே வாங்கி, இதுலெ என்னெக் கொண்டாந்து வச்சிருக்கிறான். அவன் எப்ப பாத்தாலும் இஞ்கேதான் இருப்பான். இனிமேலே ஒன்னே அங்கிட்டுக் கொண்டே வச்சா. இஞ்கே அவன் வருவானோ வரமாட்டானோ இன்னமே சந்தேகந்தான்.

*லீலாவதி:-* ஓகோ! சரிதான். அப்படியானால் அவர் இப்போது அந்த சொத்து மூட்டையை எடுத்துக்கொண்டு அந்த ஊருக்குத் தான் போயிருக்கிறார் போலிருக்கிறது?

*கிழவி:-* அவன் ராத்திரியே அந்த மூட்டையைக்கொண்டு போயி ஊருலெ பத்திரப்படுத்திபுட்டு இருட்டோடெய வந்துட்டானே. வந்தவன் அலுத்துப்போயி மொதக்கட்டுலே படுத்துத் தூங்கறான்.

*லீலாவதி:-* அவர் இன்னமும் தூங்கினால் எப்போது சாப்பிடுகிறது? இப்போது நடுப்பகல் ஆயிருக்கும் போலிருக்கிறதே!

*கிழவி:-* அவன் இம்பிட்டுக் காலையிலேயே சோறு தின்னுட்டானா, அடியாத்தேங்கறேன். அவஞ் சோறுதிங்க, உருமவேளை களிஞ்சு சரியா அஞ்சுநாளிப் பொழுது ஆக வாணாமா- என்றாள்.

லீலாவதி அதற்குமேலும் தான் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேபோனால், அவள் ஒருவேளை தன்னைப்பற்றிச் சந்தேகம் கொள்வாளென்று நினைத்தவளாய் அவ்வளவோடு தனது வாயை அடக்கிக்கொண்டாள்.

இருவரும் மறுபடி இரண்டாங்கட்டை அடைந்தனர். ஆனால், கிழவி இரண்டாங்கட்டின் கதவைச்சாத்தி உட்புறத்தில் அதைப் பூட்டித் திறவுகோலைத் தனது இடுப்பில் சொருகிப் பத்திரப்படுத்திக் கொண்டு வந்து சேர்ந்தாள். அதைக் கண்ட லீலாவதி, கிழவி வெளிப்பார்வைக்கு அஜாக்கிரதையாக இருப்பவள்போலக் காணப்பட்டாலும், உள்ளூறக் கபடமும் எச்சரிப்பும் நிறைந்தவளென்று நிச்சயித்துக் கொண்டவளாய், அவள் செய்த காரியத்தைக் கவனிக்காதவள் போல உள்ளே போய் விசிப்பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டாள்.

கிழவி அரை நாழிகை நேரம் வரையில் வேறு ஏதோ அலுவல்களைச் செய்வதில் தனது கவனத்தைச் செலுத்தி இருந்தவளாய், அதன்பிறகு தனது கையில் ஒரு வெண்கல லோட்டாவை எடுத்துக்கொண்டு லீலாவதிக்கு அருகில் வந்து நின்று, ''அம்மா! நான் போயி ஒனக்குப் பாலும் பழமும் வாங்கியாறேன். இதோ ஒரு எட்டுலேதான் கடை இருக்குது, அங்கிட்டு பளம் விக்குது, பக்கத்து ஊடு எடையர் ஊடு; பாலு அங்ஙனே அம்பிடும். வாங்கிக்கிட்டு இதோ ஒரு சண நேரத்திலே ஓடியாரேன். எம்பேராண்டி ஒன்னெச் சாக்கிருதயாப் பாத்துக்கச் சொல்லிபுட்டுத் தூங்கறான். நான் கொல்லெக் கதவெப் பூட்டி வச்சிருக்கறேன். இப்ப இந்த ரெண்டாங்கட்டுக் கதவெயும் அப்பாலே பூட்டிகிட்டுப் போறேன். நீ பயப்படாமே இங்கிட்டுக் குந்தியிரு. இதோ ஓடியாந்துட்றேன்'' என்று கூற லீலாவதி தனியாக இருப்பதைப்பற்றி அஞ்சுகிறவள் போல நடித்து, ''ஏன் பாட்டி! அவர்தான் முன் கட்டில் இருக்கிறாரே! இந்தக் கதவை ஏன் பூட்டவேண்டும்? நீங்கள் வெளியில் போய் வாசல் கதவைப் பூட்டிக்கொண்டு போகிறதுதானே'' என்றாள்.

அதைக்கேட்ட கிழவி, ''இல்லேடியம்மா! எம் பேராண்டி ரொம்ப பொல்லாதவன். அவன் சொன்னபடி நான் நடந்துக்காமப் போனா, எங்கொடலெப் புடுங்கிடுவான். அவன் சொன்னது நல்லதோ, கெட்டதோ சரியோ தப்போ அப்படியே நாம்ப சேஞ்சடனும். சேஞ்சுட்டா அவன் அப்புறம் நம்பகிட்ட குலாம்தான். நீ பயப்படாம இரு. பாக்கடிக்கிற நேரத்துலே வந்துட்றேன்'' என்று கூறினாள்.

அதைக் கேட்ட லீலாவதி அரைமனதோடு அதற்கு இணங்குகிறவள்போல நடித்து அதிருப்தியோடு மௌனம் சாதித்தாள். கிழவி உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு முதல் கட்டுக்கும் இரண்டாங் கட்டுக்கும் இடையிலிருந்த கதவை மூடி, அப்புறத்தில் பூட்டிக்கொண்டு மறைந்து போனாள். அதுவரையில் ஒன்றையும் அறியாத பேதை போலச் சோர்ந்து தளர்வுற்றுச் சாய்ந்திருந்த லீலாவதி மின்சார சக்தியினால் புத்துயிர் பெற்று எழுந்தவள் போலச் சடக்கென்று எழுந்தாள். அவளது உடம்பு பரபரப்பும் சுறுசுறுப்புமே மயமாக மாறியது. எழுந்தவள் தனது கால்விரல்களைக் கீழே ஊன்றிய படி ஓசை செய்யாமல் கிழவி பூட்டிக்கொண்டு போன கதவண்டை போனாள். கிழவி ஒருகால் கதவைப் பூட்டிய பிறகு அப்புறத்தில் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாளோ என்ற சந்தேகமே லீலாவதியின் மனதில் உதித்தது. ஆகையால், தான் முதலில் அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற நினைவோடு அவள் சந்தடி செய்யாது கதவண்டை போனாள். கதவு இரண்டு பலகைகளின் சேர்க்கை யினால் செய்யப்பட்டிருந்தது. ஆகையால், அதன்மேல் நீளமான நெருங்கிய இடைவெளி இருந்தது. ஒருகால் கிழவி அப்புறத்தில் நின்று அதன் வழியாகப் பார்க்கிறாளோ என்ற சந்தேகம் தோன்றியது. ஆகையால், லீலாவதி கீழே தரையோடு தரையாகப் படுத்தபடி தனது தலையை மாத்திரம் கதவின் அடியில் நீட்டிவிட்டு இடுக்கின் கீழ்பாகத்தில் மெதுவாகத் தனது

கண்ணைக் கொண்டு போய் வைத்துக்கொண்டு அப்புறம் பார்த்தாள். வெளிச்சம் பளிச்சென்று அடித்ததனால் சிறிது நேரம் வரையில் கண்பார்வை மழுங்கிப் போயிருந்தது. பிறகு அப்பாலிருந்த வஸ்துக்கள் நன்றாகத் தெரிந்தன. கிழவி கதவிற்கு அப்பால் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு அப்போதே புறப்பட்டுப் போனது தெரிந்தது. தான் ஓசை செய்தால், கிழவி அதை உணர்ந்து சந்தேகப்பட்டு மறுபடியும் திரும்பி வருவாளோ என்று நினைத்து அஞ்சியவளாய் லீலாவதி தனது மூச்சைக்கூட பலமாய் விடாமல் ஒடுக்கி இருந்தபடி அப்பால் பார்த்துக்கொண்டிருந்தாள். கிழவி இரண்டாங்கட்டின் நடையைக் கடந்து முதல் கட்டின் முற்றத்தில் இறங்கி அதைக் கடந்து முதல் கட்டின் நடையை அடைந்ததை லீலாவதி கண்டாள். மேலும் இரண்டொரு விநாடிநேரம் கழிந்தது. கிழவி முன் வாசலைத் திறந்துகொண்டு வெளியில் போய்க் கதவை மறுபடி மூடியதையும் லீலாவதி கண்டாள்.

அதுவே தனது கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சரியான சமயமென்று கண்ட லீலாவதி, உடனே அவ்விடத்தை விட்டெழுந்து மான்குட்டி துள்ளி ஓடுவதைப் போல ஒரே பாய்ச்சலில் இரண்டாங்கட்டின் முற்றத்திற்கு ஓடினாள். அவ்விடத்தில் ஒரு மூலையில் சொருகி வைக்கப்பட்டிருந்த ஏணியை விரைவாகவும் ஓசை செய்யாமலும் வெளியில் இழுத்து கொல்லைப் பக்கமாகக் கூரையில் சாற்றினாள்; கிழவி திரும்பி வந்தவுடனே ஏணி கொல்லைப்பக்கத்தில் இருப்பதைக் கண்டு தான் கொல்லைப் பக்கமாகத் தப்பிப் போயிருக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு அந்தப் பக்கம் போய்த் தேடட்டுமென்ற எண்ணத்தோடு அவள் ஏணியைக் கொல்லைப் பக்கமாகச் சார்த்திவிட்டு, இன்னொரு மூலையில் இருந்த ஒரு பெருத்த கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு சரசரவென்று ஏணியின் வழியாக மேலே ஏறிக் கூரைக்குப் போய்ச் சேர்ந்தாள். அங்கே போனவுடனே அவளது மனதில்

இன்னொரு புதிய யோசனை தோன்றியது. அவள் உடனே அந்த ஏணியை மேலே இழுத்து வாங்கி அதை ஓட்டின்மேல் நீளமாகப் படுக்க வைத்துவிட்டு ஓட்டின் வழியாக விசையாக நடந்து முன் கட்டை நோக்கிச் சென்றாள். அவள் அவ்வாறு ஏணியை மேலே இழுத்துவைத்தது ஏன் என்றால், கிழவி உள்ளே வந்தவுடன் ஏணி இருப்பதைக் கண்டு உடனே உண்மையை யூகித்துக்கொண்டு மேலே ஏறிப் பார்ப்பாளென்றும், அப்படிப் பார்த்தால், தான் இருப்பது தெரிந்துபோகுமென்றும் நினைத்தே அவள் அவ்வாறு முன்னெச்சரிப்பாக நடந்து கொண்டாள். தான் ஓட்டின்மேல் நிமிர்ந்து நின்றபடி நடந்து சென்றால் பக்கத்து வீடுகளிலுள்ளோர் தன்னைக் கவனிப்பார்களென்ற நினைவைக் கொண்டவளாய் லீலாவதி குனிந்தவண்ணம் மெதுவாக ஓட்டின்மேல் கால்களை வைத்து இரண்டாம் கட்டின் தாழ்வாரத்திற்கு மேலாகவே நடந்து முன் கட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். தன்னை அபகரித்து வந்த முரட்டு மனிதன் முன் கட்டில் தூங்கிக்கொண்டிருக்கிறான் என்று கிழவி சொன்னது உண்மை போலவும் பொய் போலவும் சந்தேகமாகவே இருந்தது. ஆனாலும் தான் எச்சரிப்பாகவே செல்லவேண்டுமென்று நினைத்த லீலாவதி அந்த முரட்டு மனிதன் விழித்துக் கொள்ளாதபடி சிறிதும் ஓசை செய்யாமல் மெதுவாகத் தனது அடிகளைப் பெயர்த்து வைத்துத் தாழ்வாரத்தில் மேல் பக்கமாகவே குனிந்து நடந்து முன்னால் போனாள். தான் நடுத் தாழ்வாரத்தில் போய்க் கொண்டிருக்கும்போது கிழவி திரும்பி வந்துவிடப் போகிறாளே என்ற கவலையும் திகிலும் அவளை அபாரமாக நடுக்கின. ஆனாலும், அவள் நிரம்பவும் ஜாக்கிரதையாகவும், ஓசை செய்யாமலும் விசையாகவும் நடந்து முன் கட்டுத் தாழ்வாரத்தின் மேல் பக்கமாகவே நடந்து வாசல் வழிப்பக்கம் திரும்பிப் போய் முன் பக்கத்து நடைக்குமேலிருந்த கூரையின் உள் வாயை அடைந்து அவ்விடத்தில் அப்படியே உட்கார்ந்து கொண்டாள். உட்கார்ந்தவள் தான் எடுத்துவந்திருந்த கூடையை முன்னால் வைத்து அதன் மறைவில் ஒளிந்திருந்தபடி கூரையோடு

கூரையாகப் படுத்துக்கொண்டாள். அவ்வாறு அரைக்கால் நாழிகை நேரம் கழிந்தது. அந்த அற்பகாலமும் அவளுக்கு ஒரு மலைபோலப் பெருத்துத் தோன்றியது. கிழவி சொன்னதுபோல ஒருகால் அந்த முரட்டுத் திருடன் முதல் கட்டில் தூங்கிக் கொண்டிருந்து தற்செயலாகவோ, தான் நடந்த ஓசையைக் கேட்டோ விழித்துக்கொண்டு வந்து தான் இருந்ததைக் கண்டு கொண்டால், அதோடு தான் தப்பிப்போக வேண்டுமென்ற கருத்து முற்றிலும் கெட்டுப் போவதோடு, அதற்குமேல், தான் தப்ப முடியாதபடி அவர்கள் தன்னை நிரம்பவும் ஜாக்கிரதையாகச் சிறை வைத்துவிடுவார்கள் என்ற பயம் தோன்றி அவளை வதைத்துக்கொண்டே இருந்தது. தான் கூரைமேலிருப்பதை அந்தக் கிழவி பார்த்து விடுவாளோ என்ற பயமும் கவலையும் இன்னொரு பக்கத்தில் வருத்திக் கொண்டிருந்தன.

அந்த நிலைமையில் வாசல் கதவு திறக்கப்பட்ட ஓசை கேட்டது. கிழவி தனக்காகப் பால் பழங்களை வாங்கிக்கொண்டு திரும்பிவந்து விட்டாள் என்று லீலாவதி உடனே உணர்ந்து கொண்டாள். தான் கூரையின்மேல் இருப்பதைக் கவனிக்காமல் அவள் முற்றத்தின் வழியாகச் சென்று இரண்டாங் கட்டிற்குள் போய்விட வேண்டுமே என்ற மலைப்பும் திகிலும் நடுக்கமும் தோன்றி லீலாவதியைப் பிடித்துக்கொண்டன. அவள் தனது சர்வாங்கத்தையும் மூச்சையும் ஒடுக்கிக்கொண்டு ஓசை செய்யாமல் கூடையின் மறைவில் ஒடுங்கிக் கிடந்தாள். கதவு மறுபடியும் சாத்தி உட்புறத்தில் தாளிடப்பெற்ற ஓசையும் கேட்டது. இரண்டொரு விநாடியில் கிழவி நடையைக் கடந்து முற்றத்திற்கு வந்து இரண்டாங் கட்டிலின் வாசலை நோக்கி நடந்தாள். அந்தச் சமயந்தான் லீலாவதிக்கு நிரம்பவும் அபாயகரமான தருணமாக இருந்தது. கிழவி தற்செயலாகப் பின்புறம் திரும்புவாள். ஆனால், ஓட்டின்மேல் கூடை இருப்பது எப்படியும் அவளது திருஷ்டியில் படும். அவள் உடனே

சந்தேகம் கொண்டு அப்புறம் இப்புறம் நகர்ந்து பார்ப்பாள். லீலாவதியின் உடம்பு அவளது திருஷ்டியில் அவசியம் பட்டிருக்கும். ஆகையால், கிழவி திரும்பிப் பார்க்காமல் போக வேண்டுமென்று அந்த மடந்தை சகலமான தெய்வங்களையும் நினைத்துப் பிரார்த்தனை செய்தவளாய்ப் படுத்திருந்தாள். அவளது இருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டது. தலை முதல் கால் வரையில் மயிர் சிலிர்த்து நிற்கிறது. வியர்வை வெள்ளமாக ஒழுகுகிறது. கை கால்களெல்லாம் வெட வெடவென்று நடுங்குகின்றன.

அந்த நிலைமையில் லீலாவதி ஓட்டின்மேல் இருக்க, அவள் அவ்வாறு தப்பிப்போக வழி தேடிக்கொண்டிருக்கிறாள் என்பதைப் பற்றி சிறிதும் சந்தேகியாத கிழவி பின்புறம் திரும்பிப் பார்க்காமல் முற்றத்தின் வழியாகச் சென்று இரண்டாங் கட்டின் நடைக்குள் போய் விட்டாள். அவ்வாறு அவள் மறைந்துபோனதை உணர்ந்த லீலாவதியின் மனம் பலவகைப்பட்ட உணர்ச்சிகளினால் பொங்கி எழுந்தது. அடுத்த க்ஷணத்தில் கிழவி பூட்டை விலக்கிக் கதவைத் திறந்து கொண்டு அப்பால் நடந்தது தெரிந்தது. அதற்குமேல் தான் ஓர் இமைப் பொழுதுகூட அவ்விடத்தில் தாமதித்திருந்தால், பிறகு தான் தப்பிப் போவது சாத்தியமில்லாமல் போய்விடுமென்று நினைத்த லீலாவதி உடனே குபீரென்று அவ்விடத்தை விட்டெழுந்து, கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு இரண்டொரு பாய்ச்சலில் கூரையின் உச்சி மேட்டிற்குப் போய் அவ்விடத்திலிருந்து முன் பக்கத்துச் சரிவின் வழியாகக் கீழே இறங்கிக் கூரையின் அடி ஓரத்துக்கு வந்து சேர்ந்தாள். பூமியிலிருந்து அவளிருந்த இடம் ஒன்றரை ஆள் உயரத்திற்கு மேலே இருந்தது. ஆகையால், கீழே குனிந்து பார்க்கும் போதே, அவளுக்குக் குலைநடுக்கம் எடுத்தது. ஆனாலும், அவள் முற்றிலும் துணிந்து அதோடு தனது கைகால்கள் முறிந்து போனாலும் போகட்டும் என்ற மனோதிடத்தைக் கொண்ட

வளாய்த் தனது கையிலிருந்த கூடையைக் கவிழ்த்த படி தரையில் விட்டெறிந்தாள். கூடை போய்க் கவிழ்ந்தபடி தரையில் உட்கார்ந்து கொண்டது. உடனே லீலாவதி அந்தக் கூடைக் குறிப்புப் பார்த்துத் தனது இரண்டு கால்களையும் ஒரே காலத்தில் தூக்கிக்கொண்டு கீழே குதித்தாள். அவளது குறி தவறாமல் அவளது கால்களிரண்டும் கூடையின்மேல் போய்ப் பதிந்தன. ஆனாலும், உடம்பின் மேல்பாகம் வேகத்தினால் முன்னால் கவிழ்ந்து போனது. அவள் தனது இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு தரையில் குப்புற விழுந்தாள். ஆனாலும், அடியின் பெரும்பாகத்தையும் கூடை ஏற்றுக் கொண்டது. ஆகையால், அவளுக்கு அதிக துன்பமில்லாமல் போயிற்று. அவள் உடனே சரேலென்று எழுந்தாள்; கூடையை எடுத்து வீட்டின் திண்ணையில் எறிந்தாள்; அவ்விடத்தைவிட்டு சந்தின் வழியாக ஓட்டமும் நடையுமாகச் செல்லலானாள். அவள் சிறைவைக்கப்பட்டிருந்த வீட்டிற்கு எதிரில் மதில்களுள்ள ஒரு தோட்டமே இருந்தது. ஆகையால், அவள் கூரையிலிருந்து குதித்தது எவராலும் கவனிக்கப்படாமல் போயிற்று. அப்போது நடுப்பகல் வேளையாதலால், பக்கத்து வீட்டுக் கதவுகள் அநேகமாய் மூடப்பட்டிருந்தன. வெகு தூரத்திற்கு அப்பால் யாரோ மனிதர் நின்று தத்தம் அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தனர்..ஆகவே, லீலாவதி சிறிதும் அச்சமின்றி நிரம்பவும் துணிவடைந்து சந்தின் வழியாக விரைவில் நடந்து ஆட்டுமந்தைத் தெருவை அடைந்து சிறிது தூரம்செல்ல, அவ்விடத்தில் வாடகைக் குதிரை வண்டியொன்று நின்று கொண்டிருந்ததை அவள் கண்டு தனது கையைத் தட்டி அதற்குள்ளிருந்த வண்டிக்காரனை அழைக்க, அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு அவளிடம் நெருங்கி வந்தான். லீலாவதி அந்த வண்டியை வாடகைக்கு அமர்த்தி அதற்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு சீக்கிரமாக ஓட்டச்சொல்ல, வண்டி அதிசீக்கிரத்தில் ஓடி அந்தத் தெருவை விட்டு மறைந்துபோய்விட்டது. லீலாவதி பின்புறத்தில் பார்த்தபடியே சென்றாள். ஆதலால், கிழவியாவது

அவளது மனிதராவது தன்னைத் தொடர்ந்து வரவில்லை என்பது லீலாவதியின் மனதில் உறுதி ஆக ஆக அவளது கவலையும் கலக்கமும் குறைய ஆரம்பித்தன. அந்த மகா விபரீதமான கண்டத்திலிருந்து தான் தப்பிப் பிழைத்ததாக அவள் நிச்சயித்துக் கொண்டாள். அளவற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் அவளது மனதில் பொங்கியெழுந்தன. தன்னைப்பற்றிய அச்சமும் கவலையும் ஒருவாறு நீங்கவே, தனது பெரிய தகப்பனாரைப் பற்றிய நினைவும் கவலையும் உண்டாயின. முதல் நாளிரவில் விசை வைத்த நாற்காலியில் மாட்டிவிடப்பட்ட தனது பெரிய தந்தை அதிலிருந்து விடுபட்டாரோ! அல்லது விடுபடாமல் அதுவரையில் நாற்காலியிலேயே இருந்து இறந்து போயாவது, அல்லது மூர்ச்சித்தாவது இருப்பாரோ என்ற நினைவு தோன்றி அவளை வதைக்கத் தொடங்கியது. ஷண்முகவடிவு இன்னமும் தங்களது மாளிகையில் இருக்கிறாளோ அல்லது அதைவிட்டுப் போயிருப்பாளோ என்றும், தானும் பெரிய தந்தையும் அவளது விஷயத்தில் செய்த அக்கிரமச் செய்கைகளை எல்லாம் அவள் ஒருவேளை வெளியிட்டிருப்பாளோ என்றும் அவள் பலவாறு எண்ணமிடலானாள். ஷண்முகவடிவு இருந்தாலும் இல்லா விட்டாலும், வேலைக்காரர்கள் கிழவரையும், தன்னையும் முதல்நாளிரவில் தேடாவிட்டாலும், மறுநாள் அந்நேரம் வரையில் எப்படியும், தேடியே இருப்பார்கள். ஆதலால், அவர்கள் கிழவரை எப்படியும் நாற்காலியிலிருந்து விடுவித்திருப்பார்கள் என்ற நிச்சயம் அவளது மனதில் ஏற்பட்டது. ஆகையால், தான் அவ்வளவு அவசரமாகத் தங்களது மாளிகைக்குப் போகவேண்டுமென்ற அவசியமில்லை என்ற எண்ணம் உண்டாகவே, அவளது மனதில் இன்னொரு யோசனை தோன்றியது. தன்னைக் கொண்டுபோய்ச் சிறைவைத்திருந்த முரட்டுத்திருடன் தன்னை அதோடு விடமாட்டான் என்றும் அவன் மறுபடியும் வந்து தன்னை அபகரித்துப்போக முயற்சிப்பான் என்றும் அந்த முயற்சி பலியாதபடி தான் எப்போதும் ஆள்களை பந்தோபஸ்தாக

வைத்திருக்க வேண்டும் என்றும் அவள் தனக்குள் எண்ணிக் கொண்டாள். அவ்வாறு தான் பந்தோபஸ்தாக இருந்து இவனது துர்நினைவு நிறைவேறாமல் செய்துவிடும் பக்ஷத்தில் அவன் தன்மீது பகைமையும் துராங்காரமும் பாராட்டி தனக்கு ஏதேனும் துன்பம் செய்ய நினைத்து, பவானியம்பாள்புரம் ஜெமீந்தார் வெந்நீர் அண்டாவிற்குள் இறந்துபோய்ப் புதைக்கப்பட்ட விஷயத்தைப் போலீசாருக்கு அறிவித்துத் தன்னை அவமானத்துக்கும், இழிவுக்கும் கொலைக்குற்ற தண்டனைக்கும் ஆளாக்குவதோடு தான் மொட்டைக்கடிதம் எழுதித் தனது புருஷரைப் போலீசாரிடம் காட்டிக்கொடுத்த விஷயத்தையும் சிறைச்சாலையிலிருக்கும் தனது புருஷருக்கு எப்படியாவது தெரிவித்து விடுவான் என்ற எண்ணமும் தோன்றியது; ஆகையால், சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழுவதே உசிதமானது என, தான் அந்த முரட்டுத் திருடனது வசத்தில் அகப்பட்டுக் கொண்டு அதனால் அவமானத்துக்கும் பழிப்புக்கும் ஆளாவதைவிட தானே நேரில் சென்று, இறந்துபோன ஜெமீந்தாரது புத்திரரான நீலமேகம் பிள்ளையைக் கண்டு உண்மையை வெளியிட்டு அவர் தன் மீது வழக்குத் தொடராமல் செய்து, அவர் மூலமாகப் போலீசாரிட முள்ளதும், தன்னால் எழுதப்பட்டதுமான மொட்டைக் கடிதத்தையும் மற்ற கடிதங்களையும் வாங்கிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற யோசனை அவளது மனதில் உதித்தது. ஆகவே, தான் அப்போதே நேராக மேற்கு ராஜ வீதிக்குப் போய் அவ்விடத்தில் 20வது இலக்கமுள்ள மாளிகையி லிருக்கும் நீலமேகம் பிள்ளையைக் கண்டு பேசிவிட்டு அதன்பிறகு தனது மாளிகைக்குப் போக வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு வண்டியை அந்த விலாசத்திற்கு ஓட்டும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுத்தாள். அவ்வாறே அவன் வண்டியை விரைவாக மேற்கு ராஜவீதிக்கு ஓட்டிக்கொண்டு போய் பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரினது நான்கு உப்பரிகை வைத்த மாளிகையின் வாசலில் நிறுத்தினான்.

அந்த மாளிகையின் முன்பக்கம் ஒரு சிறிய பூங்காவைக் கொண்டதாகவும், நிரம்பவும் கம்பீரமான தோற்றமுடைய தாகவும் இருந்தது. வாசலில் டாலிடவாலிகள் முதலிய பெரிய மனித சின்னங்கள் அணிந்திருந்த ஒரு சேவகன் வாசலில் காவல் காத்து நின்றான்.

லீலாவதி குதிரை வண்டியை விட்டுக் கீழே இறங்கி, அவனிடம் நெருங்கி, ''ஏனப்பா! எஜமான் உள்ளே இருக்கி றார்களா?'' என்று நிரம்பவும் விநயமாக வினவினாள்.

அவளது தோற்றத்திலிருந்து அவள் யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணென்று நினைத்து நிரம்பவும் வணக்கமும் மரியாதையும் தோற்றுவித்தவனாய், ''அம்மணி! எஜமான் உள்ளேதான் இருக்கிறார்கள். ஏன், அவர்களைப் பார்க்க வேண்டுமா? அவர்கள் போஜனம் செய்துவிட்டு அரை நாழி கைக்கு முன்னேதான் படுத்துக்கொண்டார்கள்; அவர்கள் பகல் வேளையில் அவ்வளவு கடுமையாகத் தூங்குகிறதில்லை; கண்ணை மூடிக்கொண்டு கொஞ்ச நேரம் சும்மா படுத்து அலுப் பாறுவது வழக்கம். நான் போனால் விழித்துக் கொள்வார்கள். வாருங்கள் நான் உங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றான் சேவகன்.

லீலாவதி உடனே உள்ளே நுழைய சேவகன் அவளுக்கு வழி காட்டிக்கொண்டு முன்னால் நடந்து சென்றான். அவர்கள் பல வாசல்களையும் மண்டபங்களையும் கடந்து மேன்மாடப் படிகட்டின் வழியாக உப்பரிகையை அடைந்து, அவ்விடத்திலி ருந்த ஒரு கொலு மண்டபத்திற்குள் நுழைந்தனர். உடனே சேவகன், ''அம்மணி! நீங்கள் கொஞ்ச நேரம் இப்படியே இருங்கள். இதோ பக்கத்திலிருக்கும் அறையில் எஜமான் இருக்கிறார்கள். நான் போய் முதலில் சொல்லிவிட்டு அதன்பிறகு வந்து உங்களை அழைத்துக்கொண்டு போகிறேன். ஆனால் நீங்கள் யாரென்று அவர்கள் கேட்டால், நான் என்ன சொல்லுகிறது?'' என்றான். உடனே லீலாவதி, ''அப்பா! நீ போய்

எஜமானர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஒரு காரியமாய்ப் போய்க் கொண்டிருக்கிறாரே. அது விஷயமாகப் பேச வேண்டுமென்று ஓர் அம்மாள் வந்திருப்பதாகச் சொல். அதுவே போதுமானது'' என்றாள். அதைக் கேட்டுக்கொண்டு உடனே சேவகன் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான்.

தனியாக விடப்பட்ட லீலாவதி தனது பார்வையை அவ்விடத்திலிருந்த படங்களின் மீது செலுத்தினாள். எதிர்பக்கத்துச்சுவரில் ஓர் ஆள் உயரம் எழுதி மாட்டப்பட்டிருந்த ஒரு படம் உடனே அவளது கவனத்தைக் கவர்ந்து கொண்டது. அந்தப் படம் தனது காதலரும், வெந்நீர் அண்டாவிற்குள்ளிருந்து இறந்து போனவருமான ஜெமீந்தார் இராமலிங்கம் பிள்ளையின் உருவப்படம் என்பதை அவள் உடனே் உணர்ந்து கொண்டாள். அது அந்த மனிதர் உயிரோடு சிரித்துக்கொண்டு நிற்பதுபோல எழுதப்பட்டிருந்தது. ஆகையால், அதைப் பார்த்தவுடனே லீலாவதியின் மனதில் பழைய நினைவுகளெல்லாம் காட்டாற்று வெள்ளம்போலப் பொங்கி எழுந்தன. அவரை நேரில் கண்டதனால் உண்டான பெருத்த இன்பமும் அவர் அநியாயமாக இறந்துபோய் விட்டதைப் பற்றிய சகிக்க வொண்ணாத அபரிமிதமான துயரமும் மாறி மாறி எழுந்து அவளது மனத்தை உலுப்பிப் புண்படுத்தின. அவள் அவரிடம் கொண்டது கள்ள நட்பானாலும், அவள் அவரைத் தனது உயிரிலும் அதிக அருமையாகக் காதலித்து அவரிடம் அளப்பரிய வாஞ்சையும் பிரேமையும் கொண்டிருந்தவள். ஆதலால், அவரது தேஜோ மயமான வடிவத்தைக் காணவே, அவளது மனதும், தேகமும் பதறித் தவித்தன. கடைசியில் அவர் வெந்நீர் அண்டாவிற்குள் மறைந்துகொண்ட காலத்தில் அவருக்கு நேரிட்ட பயங்கரமான முடிவை நினைக்க நினைக்க, அவளது உடம்பு கிடுகிடென்று நடுங்கியது. அவர் நூலேணியின் வழியாக மேன்மாடத்தில் ஏறி வருவதுபோலவும் தன்னோடு ஸரஸ சல்லாபம் புரிவதுபோலவும், வேறு பலவாறாகவும்

அவளது அகக்கண்ணில் பழைய காட்சிகள் தோன்றவே, அவள் தன்னையும் உலகையும் மறந்து அந்த நினைவுகளில் ஆழ்ந்தவளாய் இருக்க அடுத்த க்ஷணத்தில் நீலமேகம் பிள்ளை அவளுக்கு முன் தோன்றவே அவள் திடுக்கிட்டுத் தனது சுய உணர்வை அடைந்தாள்.

நீலமேகம்பிள்ளை என்பவர் சுமார் இருபத்திரண்டு வயதடைந்த வசீகரமான அழகுடைய நற்குண புருஷரென்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். தோற்றத்தில் அவர் தமது தகப்பனாரைப் போலவே இருந்தார். ஆதலால், லீலாவதி சிறிது நேரம் வரையில் பிரமித்துப்போய் ஓய்ந்து நின்றுவிட்டாள். தனக்கெதிரில் உயிர் வடிவம் போலத் தோன்றிய படத்திலிருந்த மனிதரே திரும்பவும் யௌவன பருவமடைந்து அவ்வாறு வந்து நிற்கிறாரோ என்று அவள் ஒருவித மனப்பிராந்தி அடைந்த வளாய் நின்றாள்.

நீலமேகம்பிள்ளை அதற்குமுன் லீலாவதியைப் பார்த்தவரல்ல என்பது வாசகர்கள் அறிந்த விஷயம். தாம் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் போய்க் கொண்டிருக்கும் விஷயமாகப் பேச ஓர் அம்மாள் வந்திருப்பதாக வேலைக்காரன் சொன்னதைக் கேட்ட அந்த யௌவன புருஷர் பெருத்த வியப்பும் கலக்கமும் அடைந்து, அப்படி வந்திருப்பவள் யாராக இருக்கலாம் என்று நினைத்துப் பார்த்து, இன்னாள் என்பதை உணர மாட்டாமல் திகைப்பே வடிவாக அவ்விடம் வந்தவர். ஆதலால், யௌவன பருவமும், கட்டழகும், உயர் குலத் தோற்றமும் ஜ்வலிக்க அப்ஸர ஸ்திரீபோல வந்து நின்ற லீலாவதியைக் காணவே, அந்த வடிவழகர் மிகுந்த லஜ்ஜையும் பிரமிப்பும் அடைந்தவராய், அவள் யாராக இருப்பாள் என்ற சந்தேகம் நிறைந்தவராய்ச் சிறிது நேரம் வெட்கித் தயங்கி நின்றார். பரஸ்பரம் இருவரும் ஒருவரை ஒருவர் ஏறிட்டுப் பார்க்கவும் ஒருவரோடொருவர் வாய்விட்டுப் பேசவும் நாணிப் பின் வாங்கினர்.

யாரோ ஒரு பெரிய மனிதரது வீட்டுப்பெண்ணும், யௌவன பருவம் உடையவளுமான அந்த மடந்தை அவ்வாறு தம்மிடம் தனியாக வரவேண்டிய முகாந்திரம் என்னவாக இருக்கலா மென்றும் தானும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கூடி நடத்தும் விசாரணைக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தமிருக்குமென்றும் எண்ணமிட்ட நீலமேகம்பிள்ளை கடைசியில் மிருதுவாகவும் அன்பாகவும் பேசத் தொடங்கி, ''அம்மா! நீங்கள் யார் தெரியவில்லையே!'' என்று நயமாக வினவினார்.

லீலாவதி, ''நான் மருங்காபுரி ஜெமீந்தாருடைய தம்பி மகள். என்னை லீலாவதி என்று கூப்பிடுவார்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட நீலமேகம் பிள்ளை மிகுந்த வியப்படைந்து, ''ஓகோ அப்படியா! நேற்று காலையில் கூட நானும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் உங்களுடைய ஜாகைக்கு வந்திருந்தோமே. நான் வெளியில் வண்டிக்குள் உட்கார்ந்திருந்தேன். இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து உங்களிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு வந்ததாகச் சொன்னாரே! நீங்கள்தானா அது. அந்தக் கடிதங்களின் விஷயமாக நான் கூட உங்கள் பேரில் கொஞ்சம் சந்தேகம் கொண்டேன். இன்ஸ்பெக்டர் வந்து நீங்கள் சொன்னதை எல்லாம் தெரிவித்தார். நீங்கள் இப்போது மறுபடியும் அது விஷயமாகப் பேசவந்திருப்பதைப் பார்த்தால், என் தகப்பனார் காணாமல் போன சம்பந்தமாக ஏதாவது தகவல் உங்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?'' என்றார்.

லீலாவதி:- ஆம். அப்படித்தான்- என்றாள்.

நீலமேகம்பிள்ளை:- மற்ற விவரமெல்லாம் பிறகு சொல்ல லாம். முதலில் ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். என் தகப்பனார் இப்போது உயிரோடு இருக்கிறாரா அல்லது இறந்துபோய் விட்டாரா? என்றார்.

அதைக் கேட்டவுடனே லீலாவதியின் உடம்பு சோர்வும் துயரமும் அடைந்தது. அவளது கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி மளமளவென்று இரண்டு கன்னங்களிலும் வழிந்தது. எதிரிலிருந்த படத்தைப் பார்த்த முதல் அவளது மனதில் பொங்கி எழுந்து தேங்கிக் கிடந்த விசன வெள்ளம் அவளை மீறிக் கொண்டு வெளிப்பட்டது. அவள் கலங்கி விம்மி விம்மி அழத் தொடங்கி, "ஐயா! அந்த துக்ககரமான விஷயத்தை நான் எப்படி வெளியிடப் போகிறேன். அவர் உயிரோடிருந்தால், இத்தனை மாசகாலமாக இங்கே வராமல் ஒளிந்துகொண்டா இருப்பார். அவர் இறந்துதான் போய்விட்டார்" என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

நெடுங்காலமாகத் தமது தந்தையைக் காணாது விசனக்கடலில் ஆழ்ந்து துயரமே வடிவாக இருந்த நீலமேகம் பிள்ளை லீலாவதியின் அழுகையையும் கண்ணீரையும் கண்டு அவள் வெளியிட்ட செய்தியையும் கேட்கவே, அவர் அப்படியே உருகி உட்கார்ந்து போய்விட்டார். அவரது மனதும் கண்களும் கலங்கிப் போயின. கண்களிலிருந்து கண்ணீர் அருவி பெருக் கெடுத்தது. அவரது கைகால்களெல்லாம் வெடவெட வென்று நடுங்க ஆரம்பித்தன. அவர் கட்டுக்கடங்காத் துயரத்தோடு, "ஆகா! என் தகப்பனார் இறந்தா போய்விட்டார்! ஐயோ! இனி நான் என்ன செய்யப் போகிறேன்! இனி நான் மறுபடியும் அவரை உயிரோடு கண்டு அவரிடம் ஒரு வார்த்தை யாவது பேசப் போகிறேனா! ஆகா! தெய்வமே! உன்னுடைய திருவுள்ளம் இப்படியா இருந்தது! எவ்வளவோ அபாரமான செல்வத்தையும் செல்வாக்கையும் அளித்த நீ ஆயுசை மாத்திரம் அற்பு ஆயுசாகவா ஏற்படுத்தினாய்!" என்று கூறித் தமது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு பலவாறு பிரலாபித்து விசனித்துக் கலங்கிச் சிறிதுநேரம் கண்ணீர் விடுத்தபிறகு, மெதுவாக லீலாவதியை நோக்கி, "அம்மா! இந்தச் சங்கதி உங்களுக்கு யார் மூலமாக எப்போது தெரிந்தது? என் தகப்பனார்

தாமாக இறந்து போகக் கூடிய நிலைமையில் இல்லையே! அவருக்குப் பிறராலேதான் மரணம் சம்பவித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அவரை யார் கொன்றார்கள்? என்ன காரணத்தினால் எப்படிக் கொன்றார்கள்? இந்த விவரத்தையெல்லாம் நேற்றைய தினம் நீங்கள் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லையா?''என்று வினவினார். அதைக்கேட்ட லீலாவதி முன்னிலும் பன்மடங்கு அதிக பரிதாபகரமாகக் கலங்கியழுது, ''ஐயா! மகா கொடிய பாவியாகிய நான்தான் உங்கள் தகப்பனாருக்கு யமனாக வந்து வாய்த்தேன். என்னால் தான் அவர் உயிர் துறந்தார். இந்தச் சங்கதியை நேற்றைய தினம் நான் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் எப்படி வெளியிடுகிறது? நேற்று அவர் வந்து விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போனபிறகு என் மனம் முற்றிலும் மாறிப்போய்விட்டது. நீங்கள் இந்த விஷயத்தில் பலவகையான சந்தேகங்கள் கொண்டு துன்பங்களுக்கு ஆளாகி அல்லல் படுவதை விலக்க வேண்டுமென்று நினைத்து உண்மையான சங்கதிகளை எல்லாம் உங்களிடம் நானே நேரில் வந்து தெரிவிக்க வேண்டுமென்று நினைத்து இப்போது வந்தேன்'' என்றாள்.

அதைக்கேட்ட நீலமேகம் பிள்ளை முன்னிலும் பன்மடங்கு அதிக ஆச்சரியமும் திகைப்பும் அடைந்து, ''ஹா! அப்படியா! நான் முதலில் சந்தேகப்பட்டது ஒருவிதத்தில் உண்மையாகி விட்டதுபோலிருக்கிறதே! உங்களால்தான் என் தகப்பனார் இறந்து போனாரென்றால், அவரைக் கொன்றது நீங்கள் அல்ல வென்பது நன்றாகத் தெரிகிறது. ஒருவேளை உங்களுடைய புருஷர் அவரைக் கொன்றாரா?'' என்றார்.

**லீலாவதி:-** என் புருஷர் ஒரு பாவத்தையும் அறியமாட்டார். அவரும் கொல்லவில்லை; நானும் கொல்லவில்லை. என்னைப் பார்த்தால், நான் அவரைக் கொல்லக் கூடியவள் என்றா தெரிகிறது! ஐயோ! நான் அவரை என் உயிருக்குயிராகவும்

கண்ணுக்குக் கண்ணாகவும் அல்லவா பாவித்து வந்தேன். அவருடைய உடம்பில் ஒட்டிய ஒரு தூசிக்குக்கூடத் துன்பம் நேர நான் சகித்திருக்க மாட்டேனே. அவருக்காக என் பிராணனைக் கொடுக்கவும் நான் சம்மதிக்கக் கூடியவளாயிற்றே. அப்படியிருக்க, நான் அந்தக்கொடிய காரியத்தைச் செய்திருப்பேன் என்று யாராவது எண்ணமுடியுமா? அவரைப் போல இதோ இருக்கும் வடிவத்துக்கு எதிரிலும் எங்கும் நிறைந்துள்ள கடவுள் அறியவும் நான் பிரமாணமாகச் சொல்லுகிறேன். அவரை நான் கொல்லவே இல்லை. உங்கள் தகப்பனார் என்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காகத் தம்மைத்தாமே கொன்று கொண்டார்- என்றாள்.

நீலமேகம்பிள்ளை மிகுந்த கலக்கமும் கிலேசமும் அடைந்தவராய், ''அம்மா! நீங்கள் அவரைக் கொன்றிருப்பீர்கள் என்று நான் ஒருநாளும் சந்தேகப்பட்டதே இல்லை. என் தகப்பனாருக்கு வந்திருந்த சில கடிதங்களைப் படித்ததிலிருந்து அந்தக் கடிதங்களை எழுதிய ஸ்திரீ அவரை உயிருக்குயிராக மதித்திருந்ததாக நான் எளிதில் தெரிந்துகொண்டேன்.

ஆகவே, என் சந்தேகம் அந்த ஸ்திரீயின் மேல் ஏற்படவில்லை. அவளுடைய புருஷரால் ஒருவேளை என் தகப்பனாருக்கு மரணம் நேரிட்டிருக்குமோ என்பதே என் சந்தேகம். இப்போது நீங்கள் சொன்னதைக் கேட்டபிறகு அந்தச் சந்தேகமும் விலகிவிட்டது. அவர் தம்மைத்தாமே கொன்று கொண்டார் என்று நீங்கள் சொல்வதை நான் நம்புகிறேன். ஆனாலும், முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் என் மனதை வதைக்கிறது. அதைச் சொல்லும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்வதைப் பற்றி நீங்கள் என்மேல் ஆயாசப்படக்கூடாது'' என்றார்.

**லீலாவதி:-** அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காகத் தானே நான் இப்போது வந்திருக்கிறேன். அதைப்பற்றி நான்

ஆயாசப்படுவதேன்? - என்று கூறி அதற்குமேல் தனது வரலாறு முழுதையும் விரிவாக எடுத்துரைத்தாள். தனக்கும் அவரது தந்தைக்கும் ஏற்பட்ட காதலையும் ரகசியமான பழக்கத்தையும் கடைசியில் ஒருநாளிரவில் அவர் தான் இருந்த மேன்மாடத்திற்கு வந்திருந்ததையும் அப்போது தனது கணவன் வந்ததைக் கண்டு அவர் வெந்நீர் அண்டாவிற்குள் ஒளிந்து கொண்டதையும், அவ்விடத்திலிருந்தபடி அவர் உயிர் துறந்ததையும் அவள் விரிவாக எடுத்துக் கூறினாள்.

இதன் தொடர்ச்சி 5ம் பாகத்தில் தொடரும்....

# "தேசபக்தன்"
# எழுதி வெளியிட்டது:-

**பாலாமணி அல்லது பக்காத் திருடன்:-** இது ஸ்ரீமான் வடுவூர் – கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள், பி.ஏ., யால் வரையப்பெற்ற வினோதமான துப்பறியும் நாவல். இதில் தத்ரூபமாய்க் கண்ணெதிரில் நடப்பன போல விஷயங்களை வருணிக்கும் ஆற்றலும், விரிவான உலகானுபவ முதிர்ச்சியும், இதிற் பொதிந்துள்ள அருமை யான சம்பாஷணைகளின் நுட்ப விநயங்களும், இதில் தோன்றும் ஆண் பெண் பாலாரின் குணவொழுக் கங்களின் அற்புத அமைப்பும் பெரிதும் விரிவாய்ப் புகழற்குரியன. அற்புதமான குணவொழுக்கங்களைப் பெற்ற கேசவ முதலியார், நாகரத்தினம்மாள் முதலி யோரைக் கற்பனா சக்தியால் நிர்மாணம் செய்த அவ்வபார வல்லமையே பெரிதும் பாராட்டற்பாலது. கூளங்காளானது கொள்ளைக் கூட்டத்தார் புரிந்த கொள்ளை, கொலை முதலிய கொடிய செயல்களும், அவர்கள் பலவாறு உறுமாறிச் செல்லும் திறமையும், அவர்களைப் பிடிக்கும் பொருட்டு வந்த இன்ஸ்பெக்டர் ரஞ்சிட்சிங்கை அவர்கள் பன்முறை கொல்ல முயல்வதும், இறுதியாக அவர் பற்பல வேடந்தரித்துச் சென்று அவர்களைப்பற்றிச் சிறைப் படுத்துவதும் பெரிதும் அச்சத்தையும் வியப்பையும் ஈகின்றன. இக்கதை தொடக்கமுதல் இறுதிகாறும் படிப்போர் உள்ளத்தை மிகவெளிதிற் கவர்ந்து தேனொழுகச் செய்கின்றது.


ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்
திகம்பர சாமியார்
1. பூரண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா விநோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா விநோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா விநோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன் கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா
... ... ... இதற்கு மேலும் வருவார் !